# அபிவிருத்திப் பொருளியல்

## இதழ் - 5

# Development Economics

## Issue - 5

**Young Economist Association**
**Department of Economics**
**University of Jaffna.**
**Sri Lanka.**
**2014**

# அபிவிருத்திப் பொருளியல்

## இதழ் - 5

## 2014

**கல்வியாண்டு - 2011/2012**

**பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன்**
**அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக**
**வெளியிடப்படும்**
**சிறப்பு இதழ்**


**பிரதம இதழாசிரியர்**
செல்வி. த. சகிதா

**இணை இதழாசிரியர்கள்**
திரு. எஸ். இந்துசன்
திரு. எஸ். தர்மராஜ்



இளம் பொருளியலாளர் மன்றம்
பொருளியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | : | அபிவிருத்திப்பொருளியல் இதழ் - 05 |
| **பதிப்புரிமை** | : | இளம் பொருளியல் மன்றம்,<br>பொருளியல் துறை,<br>யாழ்ப்பாண பல்கலைக்கழகம். |
| **பிரதம இதழாசிரியர்** | : | செல்வி.த.சகிதா |
| **பிரதிகள்** | : | 500 |
| **தாளின் தன்மை** | : | 70g Bank |
| **பக்கம்** | : | XIII + 244 |
| **அச்சுப்பதிப்பு** | : | விவேகானந்த அச்சகம்,<br>10-14,ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| **ISSN No** | : | 2362-0862 |

| | | |
|---|---|---|
| Title | : | Development Economics Vol -05 |
| Copy Right | : | Young Economist Association,<br>Department of Economics,<br>University of Jaffna. |
| Chief Editor | : | Miss.T.Sakitha |
| Number of Copies | : | 500 |
| Paper Quality | : | 70g Bank |
| Number of Pages | : | XIV + 244 |
| Printers | : | Vivekananda Press,<br>10-14 Stanley Road,<br>Jaffna. |
| **ISSN No** | : | 2362-0862 |

# துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் துறையில் இயங்கும் இளம் பொருளியலாளர் மன்றத்தினரால் வெளிக்கொணரப்படுகின்ற அபிவிருத்திப் பொருளியல் இதழ் 5 என்ற சஞ்சிகை வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்கள் மத்தியில், கற்பிக்கப்படும் பாடங்களைக் கற்பதோடு மட்டும் நின்றுவிடாமல் பல வகையான தேடல்களையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு தேடியவற்றை வைத்து ஆழ யோசித்து ஆராய்ந்து சரியானவற்றை மதிப்பீடு செய்வதன் மூலம் ஆய்வுக்கட்டுரைகளை வரைவது அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் நாளாந்த வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்தவும் வருங்காலங்களில் ஒவ்வொரு தேவையையும் சிறந்த முறையில் ஆராய்ந்து செயற்படுத்தவும் உதவும்.

எனவே ஒரு சில மாணவர்கள் மட்டுமல்லாது அனைத்து மாணவர்களும் தமது கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றம் காண்பதற்கு இத்தகைய ஆக்கங்களை உருவாக்குவதில் ஈடுபடவேண்டும்.

பொருளியல் சார்ந்த அறிவு நாட்டின் வளர்ச்சிக்கு மிக அவசியமானது. அவ் வகையில் மாணவர்கள் தமது அறிவை வளர்த்து தம்மை வளப்படுத்திக் கொள்வது நாட்டுக்கும் அவர்களுக்கும் நன்மையானதாக அமையும்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் அவர்களிடம் கல்வி கற்ற மாணவர்களிடம் இன்று கல்வி கற்றுவருகின்ற மாணவர்களது முயற்சியினால் துறைசார்ந்த மாணவர்களதும் விரிவுரையாளர்களதும் ஆக்கங்களைத் தாங்கிய வண்ணம் வெளிவரும் இந்த சஞ்சிகையினை இளம்பொருளியலாளர் மன்றத்தினர், பொருளியல் பேராசான் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஸ்ணன் அவர்களது முதலாம் வருட நினைவு நாளில் வெளியிட்டு சமர்ப்பணம் செய்கின்ற நிகழ்வானது பாராட்டுதலுக்குரிய ஓர் செயற்பாடாகும்.

இத்தகைய மாணவர்களின் ஆக்கங்கள் எதிர்காலத்திலும் தொடர்ந்து வெளிவர வேண்டும் என வாழ்த்தி அபிவிருத்திப் பொருளியல் இதழ்- 5 இனை வெளிக் கொணரும் குழுவினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிரேஸ்ட பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம்,**
**துணைவேந்தர் ,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மிகவும் துடிப்பாக இயங்கும் மாணவர் மன்றங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் துறையில் இயங்கும் இளம் பொருளியலாளர் மன்றத்தினரால் வெளிக்கொணரப்படுகின்ற அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 என்ற சஞ்சிகையானது வெளிவரும் இந்த வேளையில், இந்த சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

இந்த சஞ்சிகையானது துறைசார்ந்த மாணவர்களது ஆக்கங்களையும் துறைசார் விரிவுரையாளர்களது ஆக்கங்களையும் தாங்கிய வண்ணம் வெளி வருவது மிகவும் சிறப்பானதாகும். அத்துடன் இந்த சஞ்சிகையினை இளம் பொருளியலாளர் மன்றத்தினர் பொருளியல் துறையின் முன்னோடியாகவும் 40 வருடங்களுக்கு மேல் கல்விப்பணி ஆற்றி 2013.06.14 அன்று அமரத்துவமடைந்த எமது பொருளியல் பேராசான் அமரர் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஸ்ணன் அவர்களது முதலாம் வருட நினைவு நாளில் சமர்ப்பணம் செய்வதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன். பேராசிரியர் பாலகிருஷ்ணன் அவர்களிடம் கல்வி கற்று இன்று விரிவுரையாளர்களாக பணியாற்றுகின்ற விரிவுரையாளர்களிடம் கல்வி கற்று வருகின்ற இந்த மாணவர்களால் வெளியிடப்படுகின்ற இந்த சஞ்சிகை வெளியீடும் சமர்பணம் செய்கின்ற நிகழ்வும் எமது பொருளியல் துறைக்கும் எமது பீடத்துக்கும் மட்டுமன்றி எமது பல்கலைக்கழகத்துக்கும் பெருமை தரும் ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

இந்த சஞ்சிகையை வெளியிடும் இளம் பொருளியலாளர் மன்றத்தினருக்கும் இந்த சஞ்சிகை வெளிவர மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்திய தற்போதைய பொருளியல் துறைத் தலைவரும் இந்த மன்றத்தின் காப்பாளருமாகிய திரு. எஸ். எஸ். உதயகுமார் மற்றும் மன்றத்தின் பெரும் பொருளாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான திருமதி விஜிதா ரவிசங்கர் ஆகியோரது ஆக்கபூர்வமான பங்களிப்புகளும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் இந்த சஞ்சிகை வெளிவருவதில் பல்வேறுவழிகளிலும் பங்கெடுத்த அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவிப்பதுடன் எதிர்காலத்திலும் தொடர்ந்து பல சஞ்சிகைகள் வெளிவர வேண்டும் என வாழ்த்துக்கின்றேன்.

**பேராசிரியர் வி. பி. சிவநாதன்,**
**கலைப் பீடாதிபதி,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# துறைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



மாணவர்களின் ஆளுமை, நிர்வாக மற்றும் முகாமைத் துவத் திறன் களை வளர்த் தெடுப் பதில் மாணவர் மன்றங்கள் அரும்பணியாற்றி வருகின்றன. இவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இயங்கிவரும் இளம் பொருளியலாளர் மன்றமும் மிகவும் துடிப்பாக இயங்குகின்ற மன்றங்களில் ஒன்றாகும். இந்த மன்றத்தினரால் வெளிக்கொணரப்படுகின்ற அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடை கின்றேன்.

இந்த சஞ்சிகையானது துறைசார்ந்த மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களது ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவது மிகவும் சிறப்பானதாகும். அத்துடன் நீண்டகால இடைவெளியின் பின் வெளிவரும் இந்த சஞ்சிகையினை இளம்பொருளியலாளர் மன்றத்தினர் பொருளியல் துறையில் முன்னோடியாகவும் 1960களிலிருந்து 50 வருடங்களுக்கும் மேலாக கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றி 2013.06.14 அன்று இறைபதமெய்திய எமது பொருளியல் பேராசான் அமரர் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்களது முதலாம் வருட நினைவாக பேராசானின் மாணாக்கர்களிடம் இன்று கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற பொருளியல்துறையைச் சேர்ந்த இளம்பொருளியலாளர் மன்றத்தினர் இந்த சஞ்சிகையை பேராசான் பாலகிருஷ்ணன் அவர்களது பாதாரவிந்தங்களில் சமர்ப்பணம் செய்வதையிட்டு பேராசானிடம் கல்வி கற்ற மாணவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் பேருவகையடைகின்றேன். இந்த சஞ்சிகை வெளியீடும் பேராசானுக்கு சமர்ப்பித்தல் என்பதும் எமது பொருளியல் துறைக்கும் எமது கலைப் பீடத்துக்கும் மட்டுமன்றி எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது. இந்நிகழ்வு தம்மை கற்பித்த ஆசான்களைக் கௌரவிக்கின்ற ஒரு வரலாற்று நிகழ்வாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நீண்டகால இடைவெளியின் பின் மன்றத்தின் மீள் செயற்பாட்டிக்கும் சஞ்சிகை வெளியீட்டிற்கும் அனுமதி தந்த துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம் அவர்களுக்கு முதற்கண் நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அபிவிருத்திப் பொருளியல் இதழ்- 5 சஞ்சிகையை வெளியீடு செய்வதில் ஓயாது உழைத்த இளம் பொருளியலாளர் மன்றத்தினருக்கும் இந்த சஞ்சிகை வெளியீடு தொடர்பாக மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்திய மன்றத்தின் பெரும் பொருளாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி விஜிதா ரவிசங்கர், முன்னாள் பொருளியல் துறைத் தலைவர் திரு.ந.பேரின்பநாதன் மற்றும் பொருளியல் பேராசிரியரும் கலைப்பீடாதிபதியுமான பேராசிரியர் வி. பி. சிவநாதன் ஆகியோருக்கும் மற்றும் துறைசார்ந்த அனைத்து விரிவுரையாளர்களுக்கும் கடந்த 2011 இலிருந்து இன்று வரை இந்த சஞ்சிகை வெளியீடு தொடர்பாக பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்த சுகந்தகுமார், நதீஸ்குமார் மற்றும் சரூபன் தலைமையிலான கடந்த 3 கல்வியாண்டுகளுக்கான நிர்வாகக் குழுவினருக்கும் ஏனைய மாணவர்களுக்கும் மன்றத்தின் காப்பாளர் என்ற வகையிலும் பொருளியல் துறையின் தலைவர் என்ற வகையிலும் பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்வதோடு எதிர்காலத்திலும் அபிவிருத்திப் பொருளியல் சஞ்சிகையின் இதழ்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. எஸ். எஸ். உதயகுமார்,**

**தலைவர்,**

**பொருளியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி,



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் துறையில் கல்வி பயிலும் மாணவர்களின் அயராத முயற்சியினால் உருவாகிய இளம் பொருளியலாளர் மன்றத்தின் வெளியீடான "அபிவிருத்திப் பொருளியல்" எனும் சஞ்சிகையின் ஐ ந் தா வ து இ த ழ் நீண்டகால இடைவெளியின் பின்பு வெளிவருவதையிட்டு மன உவகையடைகின்றேன். 2008/09 மற்றும் 2009/10 கல்வியாண்டில் அபிவிருத்திப் பொருளியல் இதழ் -5 இனை வெளியிடுவதற்கு மாணவர்களினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சில புறச் சூழ்நிலைகளின் காரணமாக இந்த இதழை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது. 2011/12 கல்வியாண்டில் இவ்விதழ் வெளிவருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அத்துடன் மறைந்த எமது பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் அவர்களின் முதலாம் வருட நினைவாக பேராசிரியருக்குரிய சமர்ப்பணமாக இவ்விதழ் வெளிவருவதும் இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

அபிவிருத்திப் பொருளியல் இதழ் 5 ஆனது பல்வேறு வகையான ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவருகின்றது. இச் சஞ்சிகையின் வழி மாணவர்கள் தமது சிந்தனைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் தமது ஆய்வுத் திறனையும் தமது துறைசார்ந்த அறிவையும் வளர்த்துக் கொள்வதற்கும் தலைமைத்துவத்தையும் நிர்வாகத்திறனையும் மேம் படுத்துவதற்கும் வாய்ப்பேற்படுத்த வருகின்றது.

பொருளியல் துறைசார்ந்த விரிவுரையாளர்களதும் மாணவர்களினதும் கூட்டு முயற்சியின் வெளிப்பாடாக வெளிவரும் இச்சஞ்சிகை எதிர்காலத்திலும் பல சஞ்சிகைகளைப் பிரசவிக்க வேண்டும் எனவும் சகல நிலைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமெனவும் மனதார வாழ்த்துகின்றேன். இவ்வாறு எதிர்காலத்தில் எவ்வித தடங்கலுமின்றி தொடர்ந்து வருடாவருடம் வெளிவந்து பொருளியல் சார்ந்த அறிவை எமது பிரதேசத்தில் வளர்ப்பதற்க்கு உதவ வேண்டுமென வாழ்த்துவதுடன் இச்சஞ்சிகை வெளிவரும் முயற்சியில் பங்கு கொண்ட அனைவரையும் பாராட்டு கின்றேன்.

இறுதியாக இந்த அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 இனை எமது மதிப்பிற் குரிய ஆசான் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு அவர் எம்மை விட்டு பிரிந்த முதலாம் வருட நினைவாக அவரது பாதார விந்தங்களில் மாணவர்களால் சமர்ப்பிக்கப்படுவதையிட்டு மனநிறைவு கொள்கின்றேன்.

நன்றி

**திருமதி விஜிதா ரவிசங்கர்,**
**பெரும்பொருளாளர் ,**
**இளம்பொருளியலாளர் மன்றம்,**
**பொருளியல் துறை,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

# தலைவரின் உள்ளத்திலிருந்து



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தினால் வெளியிடப்படும் அபிவிருத்திப் பொருளியல் இதழ்- 05 இல் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தற்கால மாற்றங்களுக்கு ஏற்ப பல்வேறு பொருளியல் கட்டுரைகள், வடக்கு, கிழக்கு, இலங்கை மற்றும் உலகளாவிய பார்வைகளும் இதில் அடங்கியுள்ளன.

இளம் பொருளியலாளர் மன்றத்தின் திறமையான செயற்பாட்டின் ஊடாக தனது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு கருத்தரங்குகளையும், பொது நிகழ்ச்சிகளையும், இந்நூல் வெளியீட்டையும் செயற்படுத்துகின்றது. ஆகவே இம்மன்றம் இவ் வருடம் தனது சேவையை சிறப்பாக செயலாற்றியதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். இம் மன்றத்தின் செயற்பாடுகள் சிறப்பாக அமைவதற்கு உறுதுணையாக நின்று பல வழிகளிலும் எம்மை வழிநடாத்தி எமது முயற்சி வெற்றியளிக்க உதவியவர்களை நன்றியுடன் நினைவு கூருவது எமது கடமையா கும். அவ்வகையில் பல்வேறு வழிகளில் மன்றத்தின் வளர்ச்சிக்கு ஆலோசனைகள் வழங்கிவருவதுடன் எம்மை நெறிப்படுத்தியும் வரும் எமது மன்றக் காப்பாளரும் துறைத்தலைவருமாகிய திரு. எஸ். எஸ். உதயகுமார் அவர்களுக்கும் மற்றும் பெரும் பொருளாளர் திருமதி. விஜிதா ரவிசங்கர் அவர்க ளுக்கும், ஏனைய துறைசார்ந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் மன்ற நிர்வாக உறுப்பினர்களுக்கும், மற்றும் மன்ற செயற்பாடுகளில் கைகொடுத்து உதவிய எமது சக நண்பர்களுக்கும், மேலும் இந்நூலை வெளியிடுவதற்கு உறுதுணையாக நின்ற இதழாசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எதிர்காலத்தில் மன்றத்தை பொறுப்பேற்கும் செயற்குழு சிறப்பாக செயலாற்றி அபிவிருத்தி பொருளியல் இதழை தொடர்ந்து சிறப்புற வெளிக்கொணர வேண்டுமென வாழ்த்துவதுடன் இந்த அபிவிருத்தி பொருளியல் இதழ்-05 இனை எமது ஆசான்களின் ஆசானான பேராசிரியர் பாலகிருஷ்ணன் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்த முதலாவது வருட நினைவாக அவருக்கு சமர்ப்பணம் செய்வதில் பெருமை கொள்கின்றேன்.

நன்றி.

**சி. சரூபன்,**
**தலைவர்,**
**இளம்பொருளியலாளர் மன்றம்,**
**பொருளியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# செயலாளரின் உள்ளத்திலிருந்து



யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறையின் "இளம் பொருளியலாளர் மன்றத்தினால்" வெளியிடப்படும் "அபிவிருத்தி பொருளியல் இதழ் - 5 " ஆனது நாட்டில் ஏற்பட்ட பல புறச்சூழ்நிலைகள் காரணமாக நீண்ட கால இடைவெளியின் பின் தற்போது வெளிவருவதை எண்ணி நாம் மட்டில்லா மகிழ்வடைகின்றோம். இந்த சஞ்சிகையானது அண்மைக் காலத்தில் எல்லோராலும் பேசப்பட்டுவருகின்ற பொருளியல் சம்பந்தமான நடைமுறை விடயங்களையும் அது சம்பந்தமான கருத்து விளக்கங்களையும் தன்னகத்தே தாங்கி உங்கள் கைகளில் வருகின்றது. மேலும் நீண்ட காலத்திற்கு பின்னர் வெளிவரும் இந்த சஞ்சிகையானது பொருளியற் துறை மாணவர்களது கல்வி செயற்பாடுகளிற்கும் அவர்களது ஆளுமை விருத்திக் கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுப்பதற்கும் பேருதவியாக அமைந்துள்ளது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

அவ்வகையில் அபிவிருத்தி பொருளியல் இதழ் - 5 இற்கு வாழ்த்து செய்தியை வழங்கிய எமது துணை வேந்தர் சிரேஸ்ட பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம் அவர்களுக்கும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி. பி. சிவநாதன் அவர்களுக்கும்,எமது மன்றத்தின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவும் பக்கபல மாகவும் இருந்து பலகோணங்களில் ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற எமது மன்றத்தின் காப்பாளரும் பொருளியற் துறையின் தலைவருமான திரு. எஸ். எஸ். உதயகுமார் அவர்களுக்கும், மன்ற செயற்பாடுகளுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி வரும் எமது மன்றத்தின் பெரும் பொருளாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான திருமதி.வி.ரவிசங்கர் அவர்களுக்கும், எமது மன்றத் தின் சார்பாக இனிதான நன்றியை தெரிவிப்பதுடன் இச் சஞ்சிகையை வெளியிடு வதற்கு பல வழிகளிலும் பேருதவி புரிந்த மாணவர்களுக்கும் மற்றும் இச் சஞ்சிகை களுக்கான ஆக்கங்களை வழங்கிய துறைசார்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வ துடன் இந்த இதழுக்கு சிறப்பாக அட்டைப்படம் வடிவமைத்தும் இந்த இதழை சிறப்பாகவும் விரைவாகவும் வெளியீடு செய்ய உதவிய விவேகானந்த அச்சகத்தினருக்கும் மற்றும் இதில் குறிப்பிடத்தவறிய அனைத்து உள்ளங்களுக் கும் எமது மன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அபிவிருத்தி பொருளியல் இதழ் - 5 இனை எமது ஆசான்களை கற்பித்து உருவாக்கிய அமரர் பேராசிரியர் பாலகிருஷ்ணன் அவர்களின் முதலாண்டு நினைவாக அவரது பாதங்களில் சமர்ப்பணம் செய்து வைப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

**என்..டனிஷா,**
**செயலாளர்,**
**இளம் பொருளியலாளர் மன்றம்,**
**பொருளியல் துறை,**
**யாழ் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

# இளம் பொருளாளரின் உள்ளத்திலிருந்து,



ஒரு நீண்ட இடைவெளியின் பின் மீண்டும் எமது இளம் பொருளியலாளர் மன்றத்தின் அபிவிருத்திப் பொருளியல் இதழ்- 5 மீண்டும் முளைவிடத் தொடங்கியுள்ளதை எண்ணி யாவரும் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் சிந்தனை ஊற்றுக்களையும், சமூக, பொருளாதார அரசியல் பண்பாட்டு மாற்றங்களையும் தாங்கிய வண்ணம் தனிப்பட்ட ஆளுமை, ஆய்வுத் திறன்களை விருத்தி செய்யும் பன்முக நோக்கில் நடாத்தப்படுகின்ற மன்றங்களில் எமது இளம் பொருளியலாளர் மன்றமும் தனக்கென ஓரிடத்தினைப் பிடித்துள்ளது.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக விளங்கும் பொருளாதாரம் பற்றிய கற்கை நெறியைக் கற்பதில் பெருமைப்படுகின்ற அதே வேளை பொருளியல் துறையை வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்காக இந்த அபிவிருத்திப் பொருளியல் இதழ் -5 வழி காட்டும் என்பதை உறுதியிட்டு கூறமுடிகின்றது. இந்த சஞ்சிகை துறை சார்ந்தவர்கள் மட்டுமன்றி ஏனையோராலும் வாசித்து இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடிய நடைமுறை அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது.

அந்த வகையில் அபிவிருத்திப் பொருளியல் இதழ்- 5 சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியை வழங்கிய துணை வேந்தர் சிரேஸ்ட பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம் அவர்களுக்கும், இந்த இதழ் வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் அவர்களுக்கும் இளம் பொருளியலாளர் மன்றத்தின் வளர்ச்சிக்காக பலவழிகளிலும் பேருதவி நல்கி வரும் மன்றக் காப்பாளரும் துறைத் தலைவருமாகிய திரு எஸ். எஸ். உதயகுமார் அவர்களுக்கும் மன்ற செயற்பாடுகளுக்கு பெரும் உறுதுணையாக விளங்குகின்ற மன்றத்தின் பெரும் பொருளாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமாகிய திருமதி விஜிதா ரவிசங்கர் அவர்களுக்கும் இந்த இதழின் மலர்ச்சிக்கு தமது ஆக்கங்களை நல்கிய மாணவர்களுக்கும் எனது மதிப்புக்குரிய ஆசான்களுக்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

மேலும் இளம் பொருளியலாளர் மன்றத்தின் அபிவிருத்திப் பொருளியல் சஞ்சிகையானது மென்மேலும் வளர்ச்சி பெற்று ஒரு தனி இடத்தை தனக்கென நிறுவ வேண்டும் என்றும் இதற்காக எதிர்வரும் காலங்களில் இளம் பொருளியலாளர் மன்ற செயற்குழு அர்ப்பணிப்புடனும் திறமையுடனும் செயற்படும் என்ற எதிர்பார்ப்புடன் உங்களிடமிருந்து விடைபெறும் இவ்வேளை இந்த அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 சிறப்பிதழை எமது ஆசான்களை மட்டுமன்றி இலங்கையிலேயே பல பொருளியலாளர்களை உருவாக்கிய அமரர் பேராசிரியர் பாலகிருஷ்ணன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக அவரது பாதங்களில் சமர்ப்பணம் செய்து வைப்பதில் மனநிறைவடைகின்றேன்.

நன்றி

**த. தனராஜ்,**
**இளம் பொருளாளர் ,**
**இளம் பொருளியலாளர் மன்றம்,**
**பொருளியல் துறை,**

# இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து.....



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையில் கல்வி கற்கின்ற இளம் பொருளிய லாளர் மன்றதினராகிய நாம் அபிவிருத்திப் பொருளியல் - இதழ் 5 என்ற சஞ்சிகையை உங்கள் கைகளில் தவழ விடுவதில் பெருமகிழ் வடைகின்றோம்.



இந்த சஞ்சிகையை எமது துறையின் முன்னாள் தலைவரும் முன்னாள் கலைப்பீட பீடாதிபதியும் முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக் கழக வவுனியாக வளாகத்தின் முதலாவது முதல்வரும் தற்போது எங்களுக்குக் கல்வி புகட்டுகின்ற விரிவுரையாளர்களதும் பேராசிரியர்களதும் ஆசானாகவும் விளங்கியவரும் எல்லோராலும் மதிக்கப்படுகின்றவரும் 40 வருடங்களுக்கு மேலாக பல்கலைக்கழகத்தில் சேவையாற்றி கடந்த வருடம் 14.6.2013 அன்று இறைவனடி சேர்ந்த பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்களது முதலாம் வருட நினைவாக இந்த சஞ்சிகையை அவரது ஞாபகார்த்தமாக அவரது பாதார விந்தங்களில் சமர்ப்பிப்பதில் மனநிறைவடைகின்றோம்.

இந்த அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 என்ற சஞ்சிகையானது மாணவர்களது ஆக்கங்களை மட்டுமன்றி துறைசாந்த விரிவுரையாளர்களது ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவதால் எமது மன்றம் பெருமையடைகின்றது.

அவ்வகையில் அபிவிருத்தி பொருளியல் இதழ் - 5 இற்கு வாழ்த்து செய்தியை வழங்கிய எமது துணை வேந்தர் சிரேஸ்ட பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம் அவர்களுக்கும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி. பி. சிவநாதன் அவர்களுக்கும் முதற்கண் நன்றி கூறுவதுடன் இந்த அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 இனை வெளியிடுவதற்கு பல்வேறு வழிகளில் ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மை நெறிப்படுத்திய எமது மன்றத்தின் காப்பாளரும் பொருளியல் துறைத்தலைவருமாகிய எஸ். எஸ். உதயகுமார் அவர்களுக்கும் பெரும் பொருளாளரும் எமது துறைசார்ந்த சிரேஸ்ட விரிவுரையாளருமாகிய திருமதி விஜிதா ரவிசங்கர் அவர்களுக்கும் எமது கட்டுரைகளை செவ்வை பார்த்துத் தந்துதவிய துறைசார்ந்த விரிவுரையள்கள் மற்றும் கட்டுரைகளை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

மேலும் இந்த சஞ்சிகையை நூலுருவில் வடிவமைத்து தந்த விவேகானந்த அச்சகத்தினருக்கும் துறைசார்ந்த மாணவர்கள் மற்றும் இந்த சஞ்சிகை வெளியீட்டில் பங்கெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

பொருளியல் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்களது முதலாவது வருட ஞாபகார்த்தமாக அவரது பாதாரவிந்தங்களில் இந்த அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 சஞ்சிகையினைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

நன்றி

**இதழாசிரியர் :- செல்வி. த. சகிதா**

**இணை இதழாசிரியர்கள் :- திரு. எஸ். இந்துசன்**
**திரு. எஸ். தர்மராஜ்**

**இளம் பொருளியலாளர் மன்றம்,**
**பொருளியல் துறை,**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# Young Economists Association
## UNIVERSITY OF JAFFNA
## OFFICE BEARES 2011/2012

| | | |
|---|---|---|
| Patron | : | Mr. S.S. Uthayakumar<br>(Head, Dept. of Economics) |
| Senior Treasurer | : | Mrs.V.Ravishankar<br>(Senior Lecturer,Dept.of Economics) |
| President | : | Mr.S.Saroopan |
| Vice President | : | Mr.M.Jepamajooran |
| Secretary | : | Miss.N.Danisha |
| Asst. Secretary | : | Mr.B.Ravichchandran |
| Treasurer | : | Mr.T.Thanaraj |
| Editor | : | Miss.T.Sakitha |
| Joint Editors | : | Mr.S.Tharmaraj<br>Mr.S.Inthujan |
| Committee Members | : | Mr. T.Piragalathan<br>Miss.Y.Sunega<br>Miss.S.Nilany<br>Miss.T.Tharsini<br>Mr.P.Achsuthan |

# Young Economists Association
## UNIVERSITY OF JAFFNA
## OFFICE BEARES 2009/2010

| | | |
|---|---|---|
| Patron | : | Prof. V. P. Sivanathan<br>(Head, Dept. of Economics) |
| Senior Treasurer | : | Mr. S.S. Uthayakumar<br>(Senior Lecturer,Dept.of Economics) |
| President | : | Mr. N. Natheeskumar |
| Vice President | : | Mr. P. Majuran |
| Secretary | : | Mr. S. Thenesh |
| Asst. Secretary | : | Miss S. Vinuja |
| Treasurer | : | Mr. T. Ramapiriyanthan |
| Editor | : | Miss S. Sumathy |
| Joint Editors | : | Mr. S. Sivarupan<br>Miss V. Valarmathy |
| Committee Members | : | Mr. R. Piranavan<br>Miss G. Keethaviny<br>Miss R. Jeevasri<br>Miss M. Suthesiny<br>Mr. S. Tharmarajah |

# Young Economists Association
## UNIVERSITY OF JAFFNA
## OFFICE BEARES 2008/2009

| | | |
|---|---|---|
| Patron | : | Prof. V. P. Sivanathan<br>(Head,Dept.of Economics) |
| Senior Treasurer | : | Mr. S.S. Uthayakurnar<br>(senior Lecturer Dept.of Economics) |
| President | : | Mr. M. Suganthakumar |
| Vice President: | : | Mr. N. Natheeskumar |
| Secretary | : | Miss T. Sivaruby |
| Asst. Secretary | : | Mr. R. Piranavan |
| Treasurer | : | Miss P. Saratha |
| Editor | : | Mr. M Kajan |
| Joint Editors | : | Miss K. Darsini<br>Mr. V. Ramanan |
| Committee Members | : | Miss M. Majoori<br>Mr. S. Pirathees<br>Mr. K. Sumarathan. |

# பொருளடக்கம்


துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி i

பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி ii

துறைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி iii

பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி iv

தலைவரின் உள்ளத்திலிருந்து v

செயலாளரின் உள்ளத்திலிருந்து vi

இளம் பொருளாளரின் உள்ளத்திலிருந்து vii

இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து viii


## கட்டுரைகள்


1) சர்வதேச வர்த்தகமும் தீர்வையற்ற வர்த்தகத் தடைகளும் 01

2) அடம்ஸ்மித்தின் பொருளாதார சிந்தனைகள் (1723-1790) 12

3) குறுங்கால பிலிப்ஸ் வளையியும் பேரினப் பொருளாதாரக் கொள்கைகளின் தெரிவுகளும் 23

4) அறிவுசார் பொருளாதாரத்தின் தூண்கள் 28

5) சுற்றுலாவும் அதன் முக்கியத்துவமும் 32

6) பருநிலைப்பொருளாதார இலக்கினை அடைந்து கொள்வதில் இலங்கை எதிர்நோக்கும் சவால்கள் 40

7) பிஃலிப்ஸ் வளைகோடு - ஒரு கோட்பாட்டு விளக்கம் 52

8) பொருளியலில் எதிர்பார்க்கை கோட்பாடுகள் 58

9) உள்ளீட்டு வெளியீட்டு ஆய்வு 65

10) நீர்வளம் - சிறப்பாக நீர் நுகர்வு நீர் விலையிடல் தொடர்பானது 72

11) உற்பத்திக் காரணிகளிற்கான விலை நிர்ணயிக்கப்படும் விதம் 81

12) வேறுபட்ட சந்தை நிலைமைகளின் கீழ் கூலி நிர்ணயம் 87

13) மொத்தக் கேள்வி மற்றும் மொத்த நிரம்பல் - ஒரு பொதுவான நோக்கு 95

14) பணவீக்கமும் அதன் விளைவுகளும் 103

15) சர்வதேச வர்த்தகம் 109

16) பொதுத் தீர்வைகள் மற்றும் வர்த்தகமும் சார்ந்த பொது உடன்படிக்கையும் (GATT) உலக வர்த்தக நிறுவனமும் (WTO) ஒரு நோக்கு 116

17) யூரோ நாணயம் 122

18) பொருளாதார உலகமயமாதல் 127

19) உணவுப் பொருளாதாரத்தில் உலகமயமாக்கல் ஏற்படுத்திய அச்சுறுத்தல்கள் 132

20) உலகளாவிய நிதி நெருக்கடியும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் 141

21) பொருளாதாரத்தில் வெளி அதிர்வுகளின் தாக்கம் 144

சீனாவின் பொருளாதார வளர்ச்சியில் அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களின் முக்கியத்துவம் 152

22) கிழக்கு ஆசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் வெற்றி பெற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் திறந்த சந்தைப் பொருளாதாரம் வெற்றி பெறாமைக்கான காரணம் 159

23) GSP + உம் இலங்கைப் பொருளாதாரமும் 169

24) அறிவுப் பொருளாதாரமும் இலங்கையும் 173

25) இலங்கையின் வேலைவாய்ப்பும் வேலையின்மையும் 183

26) இலங்கையின் சமாதான நடவடிக்கையும் போருக்குப் பின்னரான அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளும் பொருளாதார நன்மைகளும் 189

27) பொதுச் செலவினம் தொடர்பான பருநிலை மாதிரிகளும் இலங்கையின் பொதுச்செலவினப் போக்கும் 194

28) கிராமிய வறுமையின் உருவாக்கம் 202

29) கிராமியப் பொருளாதார முக்கியத்துவமும் கிராமியப் பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் 210

30) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகராக்கச் செயற்பாட்டில்

31) தள்ளுவிசையின் வகிபாகம் 218

32) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் கைத்தொழில்களின் பங்கு 223

33) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கிராமியப் பொருளாதாரமும் அடிப்படைப் பிரச்சினைகளும் 228

34) அதிகாரப் பரவலாக்கத்தை வேண்டி நிற்கும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி 236

# சர்வதேச வர்த்தகமும் தீர்வையற்ற வர்த்தகத் தடைகளும்

*Mr. S.S.Uthayakumar,*
*Head & Senior Lecturer,*
*Department of Economics,*
*University of Jaffna.*

## அறிமுகம்

இக்கட்டுரையானது இரண்டு பகுதிகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. அந்த வகையில் முதலாவது பகுதியில் சர்வதேச வர்த்தகம் பற்றிய சுருக்கமான அறிமுகமும் இரண்டாவது பகுதியில் சர்வதேச வர்த்தகம் தொடர்பாகக் காணப்படுகின்ற தடைகள் பற்றிய விடயமும், அதிலும் குறிப்பாக தீர்வைகளற்ற தடைகள் பற்றிய அடிப்படை விளக்கமும் அமைந்துள்ளது.

## பகுதி I

## சர்வதேச வர்த்தகம் பற்றிய அறிமுகம் -

சர்வதேச வர்த்தகம் (International Trade), என்பது சர்வதேச எல்லைகள் அல்லது பிரதேசங்களுக்கு அப்பால் பொருட்களையும் சேவைகளையும் பரிமாற்றம் செய்வதாகும். வரலாற்றின் அதிகளவான காலப்பகுதி முழுவதும் சர்வதேச வர்த்தகம் என்பது இருந்து வந்துள்ளது. இதன் அடிப்படையில் இந்த சர்வதேச வர்த்தகத்தினது பொருளாதார, சமூக மற்றும் அரசியல் முக்கியத்துவமானது, அண்மைக்கால நூற்றாண்டுகளில் மிக மிக அதிகரித்து வந்துள்ளது. கைத்தொழில்மயமாக்கத்தால் (Industrialisation), முன்னேற்றகரமான போக்குவரத்து (Transportation), உலகமயமாக்கல் (Globalisation), பல்தேசியக் கூட்டுத் தாபனங்கள் (Multi National Corporations), வெளிமூலங்கள் (Out Sourcing) போன்றவை யாவும் இந்த சர்வதேச வர்த்தகத்தில் பாரிய விளைவை ஏற்படுத்துகின்றன. உலகமயமாக்கலின் பிரதான அர்த்தம் அதிகரித்த சர்வதேச வர்த்தகம் என்பதாகும்.

சர்வதேச வர்த்தகம் (International Trade) என்பது, பொருளியலின் (Economics) ஒரு கிளையாக(branch) உள்ளதுடன் சர்வதேச நிதியுடன் (International Finance) சேர்ந்து பொருளியலின் ஒரு பாரிய கிளையாக, சர்வதேசப் பொருளியல் (International Economics) அமைகின்ற வகையில் இதனை நாம் பின்வருமாறு மிகவும் சுருக்கமாக நோக்குவது பயன்மிக்கதாகும்.

### ❖ சர்வதேச வர்த்தகக் கோட்பாடு (International Trade Theory)

இன்று உலகிலுள்ள எந்த ஒரு நாடும் தமது நாட்டு மக்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் தாமே உற்பத்தி செய்து விடுவதில்லை. அவ்வாறு செய்ய முடிவதுமில்லை. இதனால் ஒவ்வொரு நாடும் சில பொருட்களை உற்பத்தி செய்து அவற்றில் ஒரு பகுதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அதே நேரம் தமக்குத் தேவையான சில பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளன. இந்த நிலையில் என்ன பொருட்களை உள்நாட்டு நுகர்வுக்

காக உற்பத்தி செய்ய வேண்டும்? என்ன பொருட்களை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்ய வேண்டும்? என்ன பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும்? என்பன பற்றி அடம் ஸிமித் (Adam Simith) காலம் தொட்டு இன்று வரை பலராலும் பல கருத்துக்கள் தெரிவிக் கப்பட்டு வந்துள்ளன. {உதாரணமாக அடம் ஸிமித்தின் முழுநயக் கோட்பாட்டையும் டேவிட் றிக்காடோவின் (David Ricardo) ஒப்பீட்டு நயக் கோட்பாட்டையும் சேர்த்து சர்வதேச வர்த்தகம் பற்றிய பழம் பொருளிய லாளர் கோட்பாடென அழைப்பர்}. இவையே வர்த்தகக் கோட்பாடுகள் என அழைக்கப்படு கின்றன. இவ்வகையில் வர்த்தகக் கோலங் களை எதிர்வு கூறவும், தீர்வைகள் போன்ற வர்த்தகக் கொள்கைகளின் விளைவுக ளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் பல்வேறு பட்ட மாதிரிகள் உத்தேசிக் கப்பட்டு வந்துள் ளன அவற்றை மிகவும் சுருக்கமாக நோக்கு வோம்.

## ➢ றிக்காடோவின் மாதிரி (Ricardian Model)

றிக்காடோவின் மாதிரி ஒப்பீட்டு அனுகூலத் தின் மீது முக்கிய கவனம் செலுத்து கின்றது. சர்வதேச வர்த்தகக் கோட்பாட்டில் இது ஒரு வேளை மிகவும் முக்கிய எண்ணக் கருவாக இருக்கலாம். ஒரு றிக்காடியன் மாதிரியில் நாடுகள் தாம் சிறப்பாக உற்பத்தி செய்யும் பொருட்களை உற்பத்தி செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெறுகின்றன. ஏனைய மாதிரிகளைப் போலன்றி றிக்காடியன் சட்டமைப்பு (Ricardian Frame Work) பரந்தளவிலான பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக நாடுகள் முழுமை யான சிறப்புத் தேர்ச்சி பெறும் என எதிர்வு கூறுகின்றது. அத்துடன் றிக்காடியன் மாதிரி யானது ஊழியச்சார்பு அளவுகள் மற்றும் ஒரு நாட்டில் உள்ள முதல் போன்ற காரணி வழங்கல்களை நேரடியாகக் கருத்திற் கொள்வதில்லை.

## ➢ கெக்சர் ஒலின் மாதிரி {Heckscher- Ohlin Model (H.O Model)}

அடிப்படை ஒப்பீட்டு அனுகூலத்தின் றிக்காடி யன் மாதிரிக்கு ஒரு மாற்றீடாக உருவாக் கப்பட்டது. அதனது பெரும் சிக்கலான தன்மை இருந்த போதிலும் கூட அதனது எதிர்வு கூறல்களில் அது அதிகளவு துல்லி யமானதாகக் காணப்படவில்லை. எவ்வாறா யினும் கோட்பாட்டு நோக்கில் பார்க்கும் போது, சர்வதேச வர்த்தகக் கோட்பாட்டினுள் நவபழம்பொருளியல் விலைப் பொறி முறையை (Neo-Classical Price Mecha nism) இணைப்பதன் மூலம் ஒரு சிறந்த தீர்வினை அது வழங்கவே செய்கின்றது. காரணி வழங்கல்களில் உள்ள வேறுபாடு களால் சர்வதேச வர்த்தகத்தின் கோலம் தீர்மானிக்கப்படுவதாக இக்கோட்பாடு வாதிடு கின்றது. உள்ளூரில் மிகையாக உள்ள காரணிகளைத் தீவிரமாகப் பயன்படுத்திச் செய்யப்படுகின்ற பொருட்களை நாடுகள் ஏற்றுமதி செய்யும் எனவும் உள்ளூரில் தட் டுப்பாடாக உள்ள காரணிகளைச் செறிவாகப் பயன்படுத்தும் பொருட்களை அந்த நாடுகள் இறக்குமதி செய்யும் எனவும் இக்கோட்பாடு எதிர்வு கூறுகின்றது. H.O. மாதிரியுடன் கூடிய அனுபவத்தினை பிரச்சினைகளுடன், லியன்ரிவ் முரண்பாடு (Leontief Paradox) என அழைக்கப்படுகின்றது. இப்பிரச்சி னைகள் Wassily Leontief என்பவரால் மேற்கொள்ளப்பட்ட அனுபவ ரீதியான பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட் டுள்ளன. மிகையான முதலை அமெரிக்கா கொண்டிருந்த போதிலும் ஊழியச் செறிவான பொருட்களை ஏற்றுமதி செய்யும் தன்மை கொண்டதாக அமெரிக்கா இருப்பதை இவர் கண்டறிந்தார்.

## ➢ குறிப்பான காரணிகள் (Specific Factors)

இந்த மாதிரியில் கைத்தொழில்களுக்கு இடையே உள்ள ஊழிய நகர்வு சாத்திய மாக உள்ளது. இதே வேளை குறுங்காலத் தில் கைத்தொழில்களிடையே முதல் நகர்வற்றுள்ளது. பௌதீக முதல் போன்ற உற்பத்தியின் குறுங்கால குறிப்பான காரணி கள் கைத்தொழில்களிடையே சுலபமாகப் பரிமாற்றம் செய்ய முடியாது என்பதைக்

குறிப்பான காரணிகள் என்று பெயர் குறிப்பிடு கின்றது. ஒரு பொருளின் விலையில் அதிகரிப்பு இருக்குமானால் அப்பொருளுக் குரிய உற்பத்திக் காரணிகளின் உடமை யாளர்கள் உண்மை நியதிகளில் இலாபம் அடைவார்கள் என இக்கோட்பாடு தெரிவிக் கின்றது. இதற்கும் கூடுதலாக உற்பத்தியின் எதிரெதிரான குறிப்பான காரணிகளின் உடமையாளர்கள் (அதாவது ஊழியம் மற்றும் முதல்) ஊழியத்தின் குடிவரவின் மீதான கட்டுப்பாடுகளுக்கு ஆதரவு தேடுகை யில் எதிரெதிரான நிகழ்ச்சித் திட்டங்களை அல்லது நிகழ்வுகளைக் கொண்டிருக்கும் சாத்தியம் உள்ளவர்களாக இருக்கின்றனர். இதற்கு மாறாக முதல் வழங்கலில் ஓர் அதிகரிப்பில் இருந்து உண்மை நியதிகளில் இவ்விரு காரணி உடமையாளர்களும் (முதல் மற்றும் ஊழியம்) இலாபம் அடை கின்றார்கள். குறிப்பிட்ட கைத்தொழில்க ளுக்கு இம்மாதிரி மிகவும் பொருத்தமான தாகும். வருமான விநியோகத்தை விளங்கிக் கொள்வதற்கு இம்மாதிரி பொருத்தமானதாக இருந்த போதிலும் வர்த்தகத்தின் கோலத்தை விபரிப்பதற்கு இது பொருத்தமானதல்ல.

## ➢ ஈர்ப்பு அல்லது கவர்ச்சி மாதிரி (Gravity Model)

வர்த்தகத்தின் கவர்ச்சி மாதிரியானது மேலே விபரிக்கப்பட்ட அதிக கோட்பாட்டு ரீதியான மாதிரிகளிலும் பார்க்க வர்த்தகக் கோலங் களின் அதிக அனுபவ ரீதியான பகுப்பாய் வினை இது வழங்குகின்றது. கவர்ச்சி மாதிரியானது அதனது அடிப்படை வடிவில் நாடுகளுக்கிடையிலான தூரத்தை அடிப்படை யாகக் கொண்ட வர்த்தகத்தையும் நாடுக ளின் பொருளாதார அளவுகளின் செயற்பாடு களையும் எதிர்வு கூறுகின்றது. இந்த மாதிரி நியூட்டனின் ஈர்ப்பு விதியைப் (Nuwtonian Law of Gravity) பிரதி செய்வதாக உள்ளது. இந்த நியூட்டனின் விதியில் இரு பொருட்களுக்கு இடையேயான தூரமும் பௌதீக அளவும் கருத்திற் கொள்ளப்படு கின்றது. இந்த மாதிரியானது பொருளியல ளவைப் பகுப்பாய்வின் (Econometric analysis) மூலமாக அனுபவ ரீதியான வலிமை கொண்டதென நிருபிக்கப்பட்டுள் ளது. வருமான மட்டம் நாடுகளிடையே யான இராஜதந்திர தொடர்புகள் மற்றும் வர்த்தகக் கொள்கைகள் போன்ற ஏனைய கார ணிகளும் இந்த மாதிரியின் விரிவாக்கப்பட்ட வடிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## ❖ சர்வதேச வர்த்தகத்தின் ஒழுங்குபடுத்தல் (Regulation of International Trade)

வர்த்தகமானது பாரம்பரியமாக இருநாடு களுக்கிடையேயான இரு தரப்பு உடன் படிக்கைகள் (Bilateral treaties) மூலமாக ஒழுங்குபடுத்தப்படுகின்றன. வாணிபவா தத்தின் (Mercantilism) நம்பிக்கையின் கீழ் பல நூற்றாண்டுகளாக அனேகமான நாடுகள் உயர்வான தீர்வைகளையும் (Tariffs) சர்வ தேசவர்த்தகத்தின் மீதான பல கட்டுப்பாடு களையும் கொண்டிருந்தன. 19ஆம் நூற் றாண்டில் விசேடமாக பிரித்தானியாவில் (Britain) சுதந்திர வர்த்தகத்தில் (Free Trade) நம்பிக்கை அதிமுக்கியம் வாய்ந்த தாக அமைந்திருந்தது. அன்றிலிருந்து இக்கருத்து பெரும்பாலான காலப்பகுதியில் மேற்கு நாடுகளிடையே சிந்தனையில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது. இரண்டாம் உலக யுத்த வருடங்களில் இருந்து தீர்வை கள் மற்றும் வர்த்தகம் தொடர்பான பொது உடன்பாடு (General Agreement on Tarffs and Trade- GATT) மற்றும் அதன் பின் உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organization -WTO) போன்ற பல்தரப்பு உடன்படிக்கைகள் (Multilateral Treaties) உலகளாவிய ஒழுங்குபடுத்தப்பட்ட வர்த்தகக் கட்டமைப்பை உருவாக்க முயன்று வந்துள்ளன.

சுதந்திர வர்த்தகமானது உலகில் உள்ள பொருளாதார ரீதியில் மிகவும் சக்தி வாய்ந்த நாடுகளால் வழமையாக மிகவும் பலமாக ஆதரிக்கப்பட்டு வருகின்றது. இருந்த போதி லும் விவசாயம் மற்றும் புடவைகளுக்கு அமெரிக்காவிலும் (United States) ஐரோப் பாவிலும் (Europe) விதிக்கப்பட்ட பாதுகாப் புத் தீர்வைகள் போன்ற, உள்நாட்டில்

அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்களுக்கான தெரிவுப்பாதுகாப்பு வாதத்தில் (Selective Protectionism) அவை அடிக்கடி (இந்த நாடுகள்) ஈடுபடு கின்றன. Netherlands, மற்றும் United Kingdom ஆகிய நாடுகள் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் உள்ளவையாக இருந்த போதிலும் சுதந்திர வர்த்தகத்தைப் பலமாக ஆதரித்தன. இன்று United States, United Kingdom, Australia மற்றும் Japan ஆகிய நாடுகள் சுதந்திர வர்த்தகத்தை மிகவும் கூடுதலாக ஆதரிக்கும் நாடுகளாக உள்ளன. எவ்வாறாயினும் வேறுபல நாடுகள் (India, China, Russia ...போன்ற நாடுகள்) பொரு ளாதார ரீதியில் அவை அதிக சக்தி மிக்க நாடுகளாக உருவாகி வருகையில் சுதந்திர வர்த்தகத்தை அதிகரித்தளவில் ஆதரிக்க ஆரம்பித்து வருகின்றன. தீர்வைகளின் மட்டங்கள் வீழ்ச்சியடைகையில் வெளிநாட்டு நேரடி முதலீடு (Forejgn Direct Iinvestment -FDI) பெறுதல் Procurement மற்றும் வர்த்தக வசதியாக்கல் (Trade Facilitation) உள்ளடங்கலான தீர்வையற்ற நடவடிக்கை களைப் பேசித்தீர்ப்பதற்கு அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. வர்த்தக வசதியாக்கல் வர்த்தகம் மற்றும் சுங்க நடைமுறைகளை (Customs procedures) நிறைவு செய்வது டன் சம்மந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயத்தைக் கவனத்தில் கொள்கின்றது.

தயாரிப்புத் துறைகள் பெரும்பாலும் பாது காப்பு வாதத்தை ஆதரிக்கையில் பாரம்பரிய விவசாய நலன்கள் வழமையாக சுதந்திர வர்த்தகத்துக்கு ஆதரவாக உள்ளன. எவ்வா றாயினும் அண்மைக்காலங்களில் இதில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. உண்மையில் United States, Europe மற்றும் Japan போன்ற நாடுகளில் உள்ள விவசாயத்துக்கு ஆதரவான தன்மை சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகளில் உள்ள குறிப்பிட்ட விதிகள் அமைவதற்கு பிரதானமாகப் பொறுப்பாக உள்ளது. இந்த உடன்படிக் கைகள் வேறு அனேகமான பொருட்கள் மற்றும் சேவைகளை விட விவசாயத்தில் உள்ள அதிகளவு பாதுகாப்புவாத (Protec tionist) நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குகின்றன. மந்தகாலப் (Recessions Period) பகுதியின் போது உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காகத் தீர்வைகளை அதிகரிப்பதற்கு உள்நாட்டில் அதிகளவு அழுத்தம் ஏற்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. உலக வர்த்தகத்தின் உடை வுக்கு (Collapse) வழிவகுத்த பாரிய மந்த நிலையின் (Great Depression) போது இது உலகெங்கிலும் நிகழ்ந்தது. இதனால் மந்த நிலையை இது மிகவும் மோசமாக்கியது எனப் பலர் நம்புகின்றனர்.

சர்வதேச வர்த்தக ஒழுங்குபடுத்தலானது உலகளாவிய மட்டத்தில் WTO இனூடாக மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் தென் அமெரிக்காவில் **MERCOSUR** போன்ற வேறுபல பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. United States, Canada மற்றும் Mexico, மற்றும் European Union என்பவற்றிற்கு மிடையிலான 27 சுதந்திர அரசுகளிடையே **NAFTA** ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின் றது. 2005 இல் நடைபெற்ற அமெரிக்காவின் சுதந்திர வர்த்தகப் பகுதியில் Free Trade Area of the Americas (FTAA) திட்டமிடப் பட்ட நிறுவுதல் பற்றிய Buenos Aires பேச்சு வார்த்தை (talks) இலத்தீன் அமெரிக்க நாடுகளில் (Latin American Nations) மக்க ளிடம் இருந்த எதிர்ப்பினால் பெரும்பாலும் தோல்வியுற்றது. பல்தரப்பு முதலீட்டு உடன் படிக்கைகள் {Multilateral Agreement on Investment (MAI)} போன்ற வேறு உடன்படிக்கைகளும் கூட அண்மைக் காலங்களில் தோல்வியுற்றன.

## ❖ சர்வதேச வர்த்தகத்தில் உள்ள ஆபத்துக்கள் (Risk in International Trade)

சர்வதேச வர்த்தகத்தில் உள்ள ஆபத்துக் களை அவை உருவாகும் சூழ்நிலைகள் சந்தர்ப்பங்களைக் கவனத்தில் கொண்டு நோக்கும் போது அவற்றை நாம் பின்வரு மாறு:

➢ பொருளாதார ஆபத்துக்கள் (Economic Risks)
➢ அரசியல் ஆபத்துக்கள் (Political Risks) என இரு பாரிய பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இங்கு பொருளாதார ஆபத்துக்கள் மற்றும் அரசியல் ஆபத்துக்கள் என்பன உருவாகக் கூடிய சூழ்நிலைகள் அல்லது சந்தர்ப்பங்கள் என்ற வகையில் நோக்குவோமாயின், முதலில் :

- வாங்குபவர்களின் வங்குரோத்து நிலை
- கொடுப்பனவு செய்ய நீண்ட காலம் தாமதித்தல் அதாவது ஆறு மாதத்திற்குள் செலுத்தத் தவறுதல்
- ஏற்றுக்கொள்ளாமல் விடும் ஆபத்து
- பொருளாதார இறைமையை சரணாகதி அடையச் செய்தல் போன்றவற்றை பொருளாதார ஆபத்துக்கள் என அழைக்கப்படும்

அடுத்து:

- ஏற்றுமதி இறக்குமதி உரிமைகளை இரத்துச் செய்தல் அல்லது புதுப்பிக்க மறுத்தல்
- யுத்த ஆபத்துக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆபத்துக்கள்
- இறக்குமதியாளர்களின் கப்பல்களைப் பறிமுதல் செய்தல் அல்லது நாடு கடத்துதல்
- பொருட்களைக் கப்பலில் ஏற்றிய பின்னர் இறக்குமதி செய்வதற்குத் தடைவிதித்தல்
- மாற்றம் செய்வதில் உள்ள ஆபத்துக்கள் – அதாவது இறக்குமதி செய்யும் பொருட்கள் மீது செலாவணிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுதல் அல்லது அந்நிய நாணயத் தட்டுப்பாடுகள் நிலவுதல் மூலம் ஏற்படும் ஆபத்துக்கள் போன்றவற்றை அரசியல் ஆபத்துக்கள் என அழைக்கப்படும்

இவ்வாறாக சர்வதேச வர்த்தகம் தொடர்பாக சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள் பற்றி றிக்காடோவின் மாதிரி, கெக்சர் ஒலின் மாதிரி, குறிப்பான காரணிகள் மற்றும் ஈர்ப்பு அல்லது கவர்ச்சி மாதிரி பற்றியும் அடுத்து சர்வதேச வர்த்தகத்தின் ஒழுங்குபடுத்தல் பற்றியும் சர்வதேச வர்த்தகத்தில் உள்ள ஆபத்துக்கள் பற்றியும் மிகவும் சுருக்கமாக இப்பகுதியில் நோக்கப்பட்டுள்ளதுடன் அடுத்து வரும் பகுதியில் வர்த்தகம் தொடர்பாகக் காணப்படுகின்ற தடைகளில் தீர்வை தொடர்பான தடைகள் பற்றிய சிறு அறிமுகத்துடன் தீர்வையற்ற தடைகள் பற்றி சற்று விரிவாக நோக்கப்பட்டுள்ளது.

# பகுதி II

## சர்வதேச வர்த்தகத்தில் தீர்வையற்ற வர்த்தகத் தடைகள் பற்றிய அறிமுகம்

சுதந்திர வாத்தகம் (Free Trade) உலக வெளியீட்டை உச்சப்படுத்தி சகல நாடுகளுக்கும் நன்மை புரிவதாகக் குறிப்பிடுகின்றது. இருந்த போதிலும் நடைமுறையில் சகல நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தின் (International Trade) சுதந்திரமான பாய்ச்சலின் மீது சில தடைகளை விதிக்கின்றன. இத்தகைய கட்டுப்பாடுகளும் (Restrictions) ஒழுங்கு விதிகளும் (Regul ations) நாடுகளின் வர்த்தகம் மற்றும் வாணிபம் ஆகியவற்றைக் கையாளுகின்றமையால் அவை பொதுவாக வர்த்தக அல்லது வாணிபக் கொள்கைகள் (Trade or Commercial Policies) என அறியப்படுகின்றது. வர்த்தகத் தடைகள் தேசிய நலன் என்ற நியதிகளில் மாற்ற முடியாதவாறு நியாயப்படுத்தப்படுகையில் யதார்த்தத்தில் நாடுகளில் உள்ள, இவ்வாறான தடைகளில் இருந்து அனுகூலம் பெறுகின்ற விசேட குழுக்களினால் இவை வழமையாக ஆதரவளிக்கப்படுகின்றன. வர்த்தகத் தடை (Trade Barrier) யின் மிக முக்கியமான வகைஎன்ற வகையில் வரலாற்று ரீதியாக, தீர்வை (Tariff) என்பதே இருந்து வருகின்றது. தீர்வை என்பது வர்த்தகம் செய்யப்படும் பண்டம் தேசிய எல்லையைக் கடந்து செல்லும் போது அறவிடப்படுகின்ற ஒரு வரி (Duty) ஆகும். எனினும் சர்வதேச வர்த்தகச் சுற்றோட்

டத்தில் தடைகளை ஏற்படுத்துகின்ற காரணிகளை அவற்றின் தன்மையைக் கவனத்தில் கொண்டு, அதாவது, வர்த்தகம் தொடர்பான தடைகளைத் **தீர்வைகள் (Tariff)** ஏற்படுத்துமாயின் அவற்றைத் **'தீர்வைத் தடைகள் (Tariff Barriers)** எனவும் தீர்வையல்லாத காரணிகள் ஏற்படுத்துமாயின் அவற்றைத் **தீர்வையற்ற தடைகள் (Non Tariff Barriers)** எனவும் நாம் பிரதானமாக இரு பிரிவுகளாகப் பகுத்து நோக்கலாம்.

இப்பகுதியில் முதலில் தீர்வைகளைப் பற்றி சுருக்கமாக நோக்குவதுடன் அதன் பின்னர் வர்த்தகம் தொடர்பான தீர்வையற்ற தடைகள் (Non - Tariff Barriers) பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

வர்த்தகம் செய்யப்படும் பண்டம் தேசிய எல்லையைக் கடந்து செல்லும் போது அறவிடப்படுகின்ற ஒரு வரி (Duty) அல்லது கட்டணமே தீர்வை (Tariff) எனப்படும். இத்தீர்வையினை நாம் இறக்குமதித் தீர்வை (Import Tariff) மற்றும் ஏற்றுமதித் தீர்வை (Export Tariff) என இருவகைப்படுத்தலாம். இங்கு இறக்குமதித் தீர்வை என்பது இறக்குமதி செய்யப்படும் பண்டத்தின் மீதான ஒரு வரியாகவும் ஏற்றுமதித் தீர்வை என்பது ஏற்றுமதி செய்யப்படும் பண்டத்தின் மீதான ஒரு வரியாகவும் விளங்குகின்றன. இவற்றில் ஏற்றுமதித் தீர்வைகளை விட இறக்குமதித் தீர்வைகள் மிக முக்கியமானவையாகும். ஏற்றுமதித் தீர்வைகள் அமெரிக்க அரசியல் அமைப்பினால் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் கூட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளால் {Developing Countries– (DCs)} அவற்றின் பாரம்பரிய ஏற்றுமதிகள் (Traditional Exports) மீது பெரும்பாலும் விதிக்கப்படுகின்றன. {கானா (Ghana) அதனது கொக்கோ மீதும், பிறேசில் (Brazil) அதனது கோப்பி மீதும் விதிக்கப்படுபவை போன்று} இந்த நாடுகள் சிறந்த விலைகளையும் கூடிய வருவாயையும் பெறுவதற்காக ஏற்றுமதித் தீர்வையை அறவிடுகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வருவாய்களை உயர்த்துவதற்கு ஏற்றுமதித் தீர்வைகளில் அதிகம் தங்கியுள்ளன. ஏனெனில் அவற்றின் சேகரிப்பு சுலபமாக உள்ளதனால் ஆகும். மறுபுறத்தில் கைத்தொழில் நாடுகள் மாற்றமுடியாதவாறு தீர்வைகளை விதிக்கின்றன. அல்லது சில {வழமையாக ஊழியச் செறிவுள்ள (Usually Intensive Labour)} கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக வேறு வர்த்தகத் தடைகளை விதிக்கின்றன. இதே வேளை வருவாயை உயர்த்துவதற்கு அவை பெரும்பாலும் வருமான வரியைப் பயன்படுத்துகின்றன.

இவ்வாறு வர்த்தகச் செயற்பாடுகளின் போது அறவிடப்படுகின்ற தீர்வையானது அறவிடப்படுகின்ற தன்மையின் அடிப்படையில், பெறுமதி அடிப்படையிலான தீர்வை (ad Valorem Tariff) அலகு அடிப்படையிலான குறிப்பான தீர்வை (Specific Tariff) மற்றும் கூட்டுச் சேர்ந்த அல்லது கலவைத் தீர்வை (Compound Tariff) என்ற வகையில் இருக்க முடியும். அதே போல இருப்பின் மூலமான விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு பெயரளவிலான தீர்வை (Nominal Tariff) பயனுறுதி வாய்ந்த அல்லது செயல்படு தீர்வை (Effective Tariff), தடைசெய்யக் கூடிய தீர்வை (Prohibitive Tariff) மற்றும் உத்தம தீர்வை (Optimum Tariff) என்ற வகையிலும் பல வகைகளில் நோக்க முடியும். இக்கட்டுரையில் தீர்வையற்ற தடைகள் பற்றியே சிறப்பாக நோக்க உள்ளதால் தீர்வைகள் பற்றி இங்கு விரிவாக நோக்காது தீர்வையற்ற தடைகள் பற்றியே அடுத்து சற்று விரிவாக நோக்கப்பட்டுள்ளது.

வர்த்தக செயற்பாடுகளின் போது தீர்வை வடிவில் அல்லாத ஏனைய வடிவங்களில் காணப்படும் தடைகளை நாம் தீர்வையற்ற தடைகள் (Non - Tariff Barriers) எனலாம். இந்த வகையில், தீர்வையற்ற தடைகளை நாம் அத்தடைகள் ஏற்படுகின்ற வழிகள், தடைகளின்- தன்மை மற்றும் தடைகளின் தாக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் தீர்வையற்ற தடைகளை பாகுபடுத்தி நோக்க முடியும். இந்த வகையில் தீர்வையற்ற தடைகள் என்ற வகையில்: **அனுமதிப்பங்கு அல்லது கோட்டா (Quotas), தன்னியல்பான** ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் (Voluntary Export Restraints), தொழில்நுட்ப,

நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் (Technical, Administrative and other Regulations), சர்வதேச கார்ட்டல் (International Cartels), குவித்தல் (Dumping) மற்றும் **பொருளாதார ஒருங்கிணைப்பு** (Economic Integration) என வகைப்படுத்த முடியும். இவற்றை விட **அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு, பல்நாணயமாற்று விகித அறிமுகம், அரச வர்த்தக தனியுரிமை, உள்நாட்டில் கொள்வனவு செய்யும் சட்டம்,** மற்றும் **நுகர்வோர் நலப் பாதுகாப்புத் திட்டம்** என்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறுவகையான செயற்பாடுகள் கூட தீர்வையற்ற வர்த்தகத்தடைகளாகவே விளங்குகின்றன. இந்த வகையில் மேற்படி தீர்வையற்ற வர்த்தகத் தடைகள் தொடர்பான ஒரு அடிப்படை விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் சற்று விரிவாக இத்தீர்வையற்ற தடைகள் பற்றி நோக்கப்பட்டுள்ளது.

## 01. அனுமதிப்பங்கு அல்லது கோட்டா (Quotas)

தீர்வையற்ற தடைகளில் அனுமதிப்பங்கு மிகவும் முக்கியமானது. இது நேரடியாக வர்த்தகத்தில் தொகை ரீதியான தடையை ஏற்படுத்துகிறது. அதாவது குறிப்பிட்டளவு பொருட்களை, ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் அனுமதிக்கின்றது. இதில் ஏற்றுமதி அனுமதிப் பங்கு என்பதனை விட இறக்குமதி அனுமதிப்பங்கு முக்கியமானதாகக் காணப்படுகிறது. இறக்குமதி அனுமதிப்பங்கு முறையானது ஓர் நாட்டினது கைத்தொழிலைப் பாதுகாக்கவோ, விவசாயத்தைப் பாதுகாக்கவோ, சென்மதி நிலுவையினைப் பாதுகாக்கவோ பயன்படுத்தப்படலாம். இரண்டாம் உலக யுத்தத்தின் பின் மேற்கத்தேய ஐரோப்பாவில் இறக்குமதி அனுமதிப்பங்கு பொதுவானதாக இருந்துள்ளது. இன்று கைத்தொழில் நாடுகள் தங்கள் விவசாயத்தினைப் பாதுகாக்கவும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் இறக்குமதிப் பதிலீட்டினை ஊக்குவிக்கவும் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இறக்குமதி அனுமதிப் பங்கினை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஓர் நாடானது குறிப்பிட்ட கேள்வி நிரம்பல் நிலைமைகளில் மிகைக் கேள்வி (Excess Demand) காணப்படும் போது அந்த மிகைக் கேள்வியினை இறக்குமதி செய்வதன் மூலம் நிவர்த்தி செய்யலாம். இந்த நிலையில் குறிப்பிட்ட நாடானது இறக்குமதி அனுமதிப் பங்கு முறையினைக் கையாண்டால் அது மிகைக் கேள்வி முழுவதனையும் இறக்குமதி செய்ய முடியாது. அத்துடன் இறக்குமதி அனுமதிப்பங்கினால் உள்ளூரில் குறிப்பிட்ட பொருளின் விலை உயர்வடையும். அதனைத் தொடர்ந்து உள்ளூர் உற்பத்தியும் ஓரளவு அதிகரிக்க வாய்ப்பு இருக்கும். ஆனால் மொத்த நுகர்வு மட்டம் ஓரளவு குறைவடைய வாய்ப்புண்டு. இந்த நிலையில் குறிப்பிட்ட நாடு இறக்குமதி அனுமதிப் பங்கினைக் கையாளும் போது ஏற்படும் தாக்கமானது எவ்வாறாக இருக்குமெனில் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கின்ற அதே வேளை நுகர்வின் அளவும் குறைவடைகின்றது. இதனால் குறிப்பிட்ட நாடானது உள்ளூர் உற்பத்தியினைப் பாது காப்பதுடன் இறக்குமதியின் அளவினைக் குறைப்பதனால் சென்மதி நிலுவைப் பிரச்சினையிலிருந்தும் விலக முடிகின்றது.

## 02. தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் (Voluntary Export Restraints):

ஓர் இறக்குமதி நாடு இன்னொரு நாட்டினது ஏற்றுமதிகளைத் தானாகவே முன் வந்து குறைத்துக்கொள்ளுமாறு கோருதலை **'தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்'** எனஅழைக்கப்படும். எங்கும் உயர்ந்தளவிலான வர்த்தகக் கட்டுப்பாடுகள் காணப்படும் போது முழு உள்நாட்டு உற்பத்தியும் பாதிப்படையக் கூடிய சூழ்நிலை இருக்குமாயின் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். 1950களிலிருந்து தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் ஐக்கிய

அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில், ஐரோப்பாவின் ஆடைத்தொழில் மீது முதன்முதலாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு பின்னர் உருக்கு, பாதணி, ஏனைய உற்பத்திகள் என்பவற்றுடன் உலகின் ஏனைய நாடுகளுக்கும் இச்செயற்பாடானது நீடிக்கப்பட்டது. சில வேளைகளில் இது சந்தைப்படுத்தல் கட்டளைகளை ஒழுங்காக்கல் செய்கின்ற ஒரு செயற்பாடு எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வாறான தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்காவையும் ஏனைய கைத்தொழில் நாடுகளையும் தொடர்ந்தும் சுதந்திர வர்த்தகத்தின் ஆதரவாளர் என்ற தோற்றப்பாட்டை உலகுக்கு உணர்த்தும் ஒரு கருவியாக அமைந்தன.

இவ்வாறான தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமையும்போது அது இதற்குச் சமனான இறக்குமதி அனுமதிப் பங்கினை எல்லா வழிகளிலும் ஒத்திருக்கும். இருப்பினும் வருமான விளைவு (Revenue Effect) தவிர்க்கப்பட்டிருக்கும். இந்த வருமான விளைவினை வெளிநாட்டு நிரம்பலாளர்கள் விலைகளை உயர்த்துவதனூடாகப் பெற முயற்சிப்பார்கள். தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் என்பது இறக்குமதிகளைக் குறைக்கும் செயற்பாட்டில் இறக்குமதி அனுமதிப் பங்கை விடக் குறைந்த செயற்றிறன் வாய்ந்ததாகும். ஏனெனில் தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஏற்றுமதி நாடுகளாலேயே மேற்கொள்ளப்படுவதுடன் இவை தமது ஏற்றுமதிகளை விருப்பமற்ற நிலையிலேயே குறைத்துக் கொள்கின்றனர். மேலும் இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கை பிரதான ஏற்றுமதி நாடுகளையே கருத்தில் கொள்வதால் இந்த நாடுகள் தமது ஏற்றுமதியில் குறைத்துக் கொள்ளும் அளவினை வேறு சிறிய ஏற்றுமதியாளர் நாடுகள் பூர்த்தி செய்ய முயலலாம். அதே சமயம் வேறு நாட்டின் ஊடாகவும் பிரதான ஏற்றுமதியாளர் நாடுகள் நிரம்பலை மேற்கொள்ள முயலலாம்.

## 3. தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் (Technical, Administrative and other Regulations) :

சர்வதேச வர்த்தகத்தில் தொழில்நுட்ப நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளும் தடையை ஏற்படுத்துகின்றன. இவற்றுள் மோட்டார்வண்டி, மின்சார உபகரணங்களுக்கான பாதுகாப்பு ஒழுங்கு விதிகளும் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் உற்பத்திகளுக்கும் (Hygienic Production) இறக்குமதி செய்யப்படும் உணவு உற்பத்தியின் பொதியிடலுக்குமான சுகாதார ஒழுங்கு விதிகளும் உற்பத்தி இடத்தினையும் உள்ளடக்கங்களையும் காட்டுவதற்கான முத்திரை பதிக்கும் தேவையும் (Labeling Requirements) உள்ளடங்கும். ஆனாலும் இந்த ஒழுங்குவிதிகளில் பல, சட்ட (Legal) சம்பந்தமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை சில, இறக்குமதிகளில் தடையை ஏற்படுத்துவதற்கு பயன்படுகிறன எனலாம்.

ஏனைய வர்த்தகத் தடைகள் அரசாங்க உள்நாட்டு நிரம்பலாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யும் போது தேவையேற்படும் சட்டங்களிற்கேற்ப தோற்றம் பெறுகின்றன. உதாரணமாக 1933இல் பிரகடனப்படுத்தப்பட்ட அமெரிக்கன் கொள்வனவு சட்டத்தின்படி (Buy American Act) ஐக்கிய அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதிகள் உள்ளூர் நிரம்பலாளர்களுக்கு 12% வரையிலான விலையுயர்வினை வழங்கினர். வர்த்தகத் தாராளமயமாக்கலின், டோக்கியோ சுற்றுப் (Tokyo Round) பேச்சின் ஒரு பகுதியில் ஐக்கிய அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் இந்த நடைமுறையினையும் ஒழுங்கு விதிகளையும் திறந்த ரீதியில் ஏற்று வெளிநாட்டு நிரம்பலாளர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்தனர்.

அண்மைக் காலங்களில் கடவை வரியில் (Border Taxes) கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இவை ஏற்றுமதியாளருக்கு உள்ளக மறைமுக வரிகளுக்காக, கழிவாக வழங்கப்படுவதுடன் இறக்குமதியாளர் மீது அறவிடப்படுகின்றது. உதாரணமாக

ஐக்கிய அமெரிக்காவில் மறைமுக வரிகளாக தீர்வையும் விற்பனை வரியும் உள்ளன. ஐரோப்பாவில் கூட்டப்பட்ட பெறுமதி வரியும் காணப்படுகின்றது.

## 04. சர்வதேச கார்ட்டல் (International Cartels) :

குறிப்பிட்ட ஒரு பொருளினை உற்பத்தி செய்யும் வேறுபட்ட நாடுகளின் இணைப்பினை 'சர்வதேச கார்ட்டல் (International Cartels)' எனலாம். இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் யாதெனில் வெளியீட்டிலும் ஏற்றுமதியிலும் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் குறிப்பிட்டளவு உச்ச இலாபத்தினைப் பெறுதாலாகும். ஆயினும் உள்ளூர் கார்ட்டல் (Domestic Cartels) ஐக்கிய அமெரிக்காவில் சட்டவிரோதமானது. ஐரோப்பாவில் தடைசெய்யப்பட்டுள்ளது. சர்வதேச கார்ட்டலின் சக்தியினை மதிப்பிடுவது கடினம். ஏனெனில் எந்தவொரு நாட்டினதும் சட்டத்தினால் சர்வதேச கார்ட்டலின் சக்தியை இழக்கச் செய்ய முடியாது.

இன்று எல்லோராலும் பேசப்பட்டு வருவதும் வெற்றிகரமாக செயற்படுவதுமான 'பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் நிறுவனம் (OPEC – Organization of Petroleum Exporting Countries)' சர்வதேச கார்ட்டலாக அமைகின்றது. இது 1973–74 இடைப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தியினையும் ஏற்றுமதியினையும் கட்டுப்படுத்தி மசகு எண்ணெயில் வெற்றிகரமாக நான்கு மடங்கு விலையுயர்வினைப் பெற்றது. சர்வதேச கார்ட்டல் அமைப்பிற்கான ஓர் உதாரணமாகச் சர்வதேச வான் போக்குவரத்துச் சங்கத்தினையும் (International Air Transport Association) குறிப்பிடலாம். சர்வதேச கார்ட்டல் அமைப்பு மிகவும் வெற்றிகரமானதாக அமைய வேண்டுமாயின் குறிப்பிட்ட பொருள் அத்தியாவசியமானதாகவும் குறைந்த சர்வதேச நிரம்பலாளரையும் கொண்டிருப்பதுடன் குறிப்பிட்ட பொருளுக்கு சிறந்த பதிலீடு இல்லாமலும் இருக்க வேண்டும். ஒபெக் அமைப்பு இவ்வாறான பண்புகளைக் கொண்டமைந்துள்ளது. குறிப்பிட்ட பொருளுக்குப் பதிலீடு காணப்படுமாயின் சர்வதேச காரட்டல் அமைப்பு உற்பத்தியினையும் ஏற்றுமதியினையும் கட்டுப்படுத்தி உயர்ந்த விலையினைப் பெற்றுக் கொள்ள முடியாது. வெற்றிகரமான சர்வதேச கார்ட்டல் அமைப்பானது ஒரு தனியுரிமை நிறுவனமாகவும் மொத்த இலாபத்தினை உச்சப்படுத்தக் கூடியதாகவும் அமையும்.

## 5. குவித்தல் (Dumping) :

குவித்தல் என்பதிலிருந்தும் வர்த்தகத் தடை ஏற்படுகின்றது. குவித்தல் என்றால் என்ன? என்பதற்குப் பின்வருமாறு விளக்கம் கூறலாம். குறிப்பிட்ட ஓர் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள் அந்த நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற விலையிலும் பார்க்கக் குறைந்த விலையில் மற்றைய நாட்டில் விற்பனை செய்யப்படுவதனைக் குறிக்கும். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் பொருள் இறக்குமதி செய்யப்படும் போது போக்குவரத்துச் செலவு, வரிகள் போன்றவை இருக்கும். அந்த நிலையிலும் கூட குறைந்த விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதனையே குவித்தல் என்பது குறிக்கின்றது. இத்தகைய குவித்தல் நடவடிக்கையானது மூன்று வகையாக அமைகின்றது. அவையாவன 1. தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் (Persistent dumping), 2. இடைக்கிடை ஏற்படும் குவித்தல் (Predatory dumping), 3. எப்போதாவது ஏற்படும் குவித்தல் (Sporadic dumping) என்பவையாகும்.

இங்கு தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் என்பது அதிகளவில் பாதக விளைவினை ஏற்படுத்துவதில்லை. தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் மூலம் குறித்த நாட்டில் உள்ள நுகர்வோர் குறைந்த விலையில் பொருட்களைத் தொடர்ந்து கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும். எப்போதாவது ஏற்படும் குவிப்பினாலும் அதிகளவில் பாதக விளைவு ஏற்படமாட்டாது. ஆனால் இடைக்கிடை ஏற்படும் குவிப்பே (Predatory dumping)

இங்கு முக்கியமானதாகும். ஏனெனில் இடைக்கிடை ஏற்படும் குவிப்பு குறித்த நாட்டில் குறிப்பிட்ட தொழிலினை வளர விடாமல் தடுப்பதாக அமைவதாலாகும். எனவே குறிப்பிட்ட நாட்டில் குறிப்பிட்ட தொழில் வளரக் கூடாது என்பதற்காகச் செய்யப்படும் குவிப்பினைத் தடுக்கும் நோக்குடன் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றது.

## 6. பொருளாதார ஒருங்கிணைப்பு (Economic Integration) :

சர்வதேச வர்த்தகத்தில் தடையை ஏற்படுத்தும் ஒரு காரணியாகப் பொருளாதார ஒருங்கிணைப்பு என்பது அமைகின்றது. நாடுகள் ஒன்று சேர்ந்து வர்த்தகத்தில் உள்ள தடைகளை முற்றாகவோ அல்லது பகுதியாகவோ நீக்கும் பொருட்டு பொதுவான வர்த்தகக் கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்வதனையே அல்லது கடைப்பிடிப்பதனையே 'பொருளாதார ஒருங்கிணைப்பு (Economic Integration)' எனலாம். பொருளாதார ஒருங்கிணைப்புக்கள் என்பவை:

- தெரிவுசெய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் (Preferential Trade Agreements)
- சுதந்திர வர்த்தக பிரதேசம் (Free Trade Area)
- சுங்கக்கூட்டுக்கள் ( Customs Unions)
- பொதுச் சந்தைகள் ( Common Markets)
- பொருளாதார கூட்டுக்கள் ( Economic Unions ) என்ற நிலைகளில் ஏற்படலாம்.

இங்கு **தெரிவுசெய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் (Preferential Trade Agreements)** என்பது, குறிப்பிட்ட பொருளாதார ஒருங்கிணைப்பிற்குள் அமையும் போது அங்கத்துவ நாடுகள், தமக்கிடையே அங்கத்துவமில்லாத நாடுகளின் மீது விதிக்கப்படும் வரியிலும் பார்க்கக் குறைந்த தடைகளை விதிப்பதனைக் குறிக்கின்றது. உதாரணமாக 1932இல் ஐக்கிய இராச்சியம் சில நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட பிரித்தானிய பொதுநலவாய தெரிவுத்திட்டத்தினைக் (British Common Wealth Preference Scheme) குறிப்பிடலாம்.

**சுதந்திர வர்த்தக பிரதேசம் (Free Trade Area)** என்பது பொருளாதார ஒருங்கிணைப்பிற்குள் அங்கம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையேயுள்ள தடைகள் யாவற்றையும் முற்றாக நீக்குவதனைக் குறிக்கின்றது. அதேவேளை அங்கத்துவமல்லாத நாடுகளுடன் தொடர்ந்தும் தடைகள் இருக்கும். உதாரணமாக 1960இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய சுதந்திர வர்த்தகச் சங்கத்தினை (European Free Trade Association) குறிப்பிடலாம்.

**சுங்கக்கூட்டுக்கள் (Customs Unions)** என்பதற்குள் உள்ளடங்கும் நாடுகளிடையே எந்தவிதத் தீர்வைகளும் இருக்கமாட்டாது. அதேவேளை அங்கத்துவ நாடுகள் அங்கத்துவமில்லாத நாடுகள் மீது ஒரு பொதுத் தீர்வையினை விதிக்கும். உதாரணமாக 1958இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC – European Economic Community) அல்லது ஐரோப்பிய பொதுச் சந்தையினைக் (European Common Market) குறிப்பிட லாம்.

**பொதுச் சந்தை ( A Common Market)** அமைப்பினுள் உள்ளடங்கும் நாடுகளிடையே மூலதனமும் உழைப்பும் எந்தவிதமான தடையுமின்றி அசையக் கூடிய நிலை காணப்படுகின்றது. 1970இல் ஐரோப்பிய சமூகம் (European Community ) ஆனது, பொதுச் சந்தை (Common Market) என்ற நிலையை அடைந்துள்ளது.

**பொருளாதார கூட்டு ( An Economic Union)** கள் என்ற அமைப்பினுள் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையே நாணய நிதி நடைமுறைக் கொள்கைகளில் ஒத்த தன்மையினைப் பேணுகின்றன. பொருளாதாரக் கூட்டு, பொருளாதார ஒருங்கிணைப்பின் மிகச் சிறந்த நிலையாகக் காணப்படுகின்றது. உதாரணமாக 1960இல் பெல்ஜியம், நெதர்லாண்ட் மற்றும் லக்ஸம்பேர்க் நாடுகளை உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்பட்ட **BENELUX** ஐக் குறிப்பிடலாம். இவ்வாறாக நாடுகள் இணைந்து

பொருளாதார ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்துவதால் சர்வதேச வர்த்தகப் பாய்ச்சலில் பெரியளவிலான தடைகளை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றை விட குறித்த நாடுகள் தத்தமது நாடுகளுக்குள் பிறநாட்டுப் பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்குப் பல வழிமுறைகளைக் கையாள்கின்றன. அந்த வகையில் **அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு, பல் நாணயமாற்று விகிதத்தினை அமுல் படுத்தல்** எடுத்துக்காட்டாக இலங்கையில் 1968 இல் FEECS பீக்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைக் குறிப்பிடலாம் **அரச வர்த்தக தனியுரிமை, உள்நாட்டில் கொள்வனவு செய்யும் சட்டம் அதாவது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை உள்நாட்டிலேயே கொள் வனவு செய்வதற்கான தூண்டுதலை சட்டரீதியாகக் கொண்டு வருதல்** எடுத்துக்காட்டாக இலங்கையில் 1970-77 காலப்பகுதியில் ஆடை நுகர்வு தொடர்பாக கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகள் சுட்டிக் காட்டப்படக் கூடியது. **நுகர்வோர் நலப் பாதுகாப்புத் திட்டம்** அதாவது நுகர்வோரின் நலனைக் கவனத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட சில இறக்குமதிகள் மீதான தடையினை விதித்தல் என்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் கூட ஒரு வகையான தீர்வையற்ற வர்த்தகத் தடைகள் எனலாம்.

## முடிவுரை

எனவே தொகுத்து நோக்கின் சர்வதேச வர்த்தகத்தில் ஒட்டு மொத்த உலக நலனை அதிகரிக்கும் நோக்குடன் பல வர்த்தகக் கொள்கைகள் மாற்றும் கோட்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற நிலை மட்டுமன்றி, உலக நலனைக் கவனிப்பதற்கென காலத்துக்குக் காலம் பல சர்வதேச அமைப்புகள் உருவாக்கம் பெற்று அவை செயற்பட்டு வந்தாலும் கூட, இன்றும் கூட உலகில் சர்வதேச வர்த்தகச் செயற்பாடுகளில் உலக நலன் பாரபட்சமின்றிப் பேணப்பட்டு வருகின்றதா? என்ற வினாவினை ஒருவர் எழுப்பு கின்ற போது அதற்கான விடையானது, **"இல்லை"** எனபதாகவே அமையும் இதனை யாரும் மறுக்க முடியாத யதார்த்த நிலையினையே இன்று காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து வர்த்தகம் மற்றும் தீர்வைகள் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளில் கவனஞ் செலுத்தி வந்த GATT அமைப்பினது செயற்பாடுகளும், பின்னர் உருகுவே சுற்றுப் பேச்சுக்களின் பலனாக உருவாக்கப்பட்ட WTO போன்ற அமைப்புக்களின் செயற் பாடுகள், அவற்றின் தலையீடுகள் காரணமாகவும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் தீர்வைகளின் பங்கு குறைவடைந்து சென்றாலும் நடைமுறையில் தீர்வையல்லாத வர்த்தகத் தடைகளின் (Nontariff Trade Barriers) பங்கு அதிகரித்து வருவதனையே காண முடிகின்றது. எனவே சர்வதேச வர்த்தகம் (International Trade) என்பது சுதந்திர வர்த்தகம் (Free Trade) நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது எனக் கூற முடிந்தாலும் நடைமுறையில் சுதந்திர வர்த்தகம் என்பது ஒரு கோட்பாட்டு ரீதியான கருத்தாகவே உள்ளது எனக் கூறின் அது மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்:**


- Dominick Salvatore 2004, International Economics Eighth edition, John Wiley & Sons, Inc.
- Robert J Carbaugh, 2004, International Economics IXth Edition, (Thomson South western).
- Giancarlo Gandolfo 2006, International Trade, (Spinger International Edition).
- Paul R. Krugman & Maurice Obstfeld 2004, International Economics theory and policy, 6th edition, Pearson education Asia Limited and Tsinnghua university press.

# அடம்ஸ்மித்தின்

# பொருளாதார சிந்தனைகள் (1723-1790)

*S. Vijayakumar,*
*Senior Lecturer,*
*Dept of Economics,*
*University of Jaffna,*
*Reaeaech scholar,*
*Tomas Bata University, Zlin*

பொருளியலின் தந்தை (Father of Economics) என அழைக்கப்படும் பேராசிரியர் அடம்ஸ்மித் ஓர் பழம் பொருளியலாளராவார்(Classical economist). இவரோடு டேவிட்றிக்காடோ மல்தஸ் (David Ricardo, Malthus) போன்றோரையும் பழம் பொருளியாலளர்கள் என அழைக்கப் படுகின்றனர். அடம்ஸ்மித் 1723ம்ஆண்டு ஸ்கொட்லாண்ட்லிலுள்ள(Scotland) Kirkaldy எனும் ஊரில் பிறந்தார். ஐக்கிய இராச்சியத்தின் ஸ்கொட்லாண்டில் தனது வாழ்க்கைக் காலத்தைக் கழித்த பேராசிரியர் அடம்ஸ்மித் கிளாஸ்கோ, (Glasgow) பல்கலைக்கழகத்திலும் அமெரிக்காவின் ஒக்ஸ்போட்(Oxford) பல்கலைக்கழகத்திலும் தனது கல்வியை மேற்கொண்டார். தனது பட்டப்படிப்பை முடித்த பின்னர் அதே கிளாஸ்கோ பல் கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் கடமையாற்றினார். இதேபோல உலகப்புகழ்பெற்ற தத்துவ மேதையான டேவிட் க்யூம் (David Hume) என்பவரின் நூல்கள் ஸ்மித்தை அதிகம் கவர்ந்தன. அவற்றை ஆழமாக படித்தார்.

1759ல் நெறிமுறை உணர்வுகளின் கோட்பாடு (Theory of Moral sentiment) எனும் நூலை வெளியிட்டார். இதுவே இவரது முதலாவது நூலாகும். இந்நூலே அடம்ஸ்மித்தின் அடுத்தநூலாகிய தேசங்களின் செல்வம் எனும் நூலிற்கு அடிப்படையாக அமைந்தது. 1764 -1766 இவர் பாரிஸிற்குச் சென்று இயற்கைவாதிகளுடன் (Physiocrats) தொடர்புகளை ஏற்படுத்தினார். 1776ம்ஆண்டு புகழ்பெற்ற நூலான தேசங்களின் செல்வ இயல்பையும் காரணங்களையும் பற்றிய விசாரணை (An Enquiry into the nature and causes of the wealth of nations) எனும் நூலை வெளியிட்டார். இந்நூல் நாடுகளின் செல்வம் என சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. இந்நூலை பல காலமாக எழுதி அதாவது 10-12 வருடங்களாக எழுதி 1776ல் தான் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல அடம்ஸ்மித் 1764 – 1766 இடைப்பட்ட காலப்பகுதியில் பிரான்ஸ் நாட்டுக்குச்சென்று, அங்கு அக்காலப்பகுதியில் செல்வாக்கு பெற்றிருந்த இயற்கை வாதிகளுடன் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டார். இயற்கைவாதிகளின் சிந்தனைகள் முன்னையகால வணிகவாதிகளின் சிந்தனையில் இருந்து பெரிதும் மாறுபட்டு காணப்பட்டது. தங்கமும் வெள்ளியுமே நாட்டின் செல்வம் என வணிகவாதிகள் கொண்டனர். எனவே எவ்வளவுக்கு எவ்வளவு வெள்ளியையும் தங்கத்தையும் திரட்டமுடியுமோ அதற்கேற்ற

வாறு நாடு செல்வச் செழிப்பில் காணப்படும் எனவும் அந்நாடு வல்லரசாக திகழும் என வும் வணிகவாதிகள் நம்பினர் வலியுறுத் தினர்.

18ம்நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரான்ஸ் நாட்டில் இயற்கைவாதிகள் பிரபல்யமாக காணப்பட்டனர். இயற்கை நியதிப்படி, விவசாயமே நாட்டின் செல்வத் திற்கு ஆதாரம் என இயற்கைவாதிகள் வாதிட்டனர் . Quesnay, Gourney போன் றோர் இயற்கைவாதிகளில் முக்கியமான வர்கள். வணிகவாதிகளைப்போல பல நாடுகளையும் காலத்தையும் சேர்ந்தவராக இயற்கை வாதிகள் காணப்படவில்லை. எல்லா இயற்கைவாதிகளும் பிரான்ஸ் நாட்டில் ஒரே காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இயற்கை விதிகள் சிறந்த விதிகளா கும். அவை மனிதனால் இயற்றப் பட்டவை யல்ல. இறைவனால் அமைக்கப்பட்டது; உருவாக்கப்பட்டது. எனவே அவ் விதிகளை கடைப்பிடித்து வாழ்ந்தால் மட்டுமே மனிதன் சந்தோசமாய் வாழ முடியும் என்பதே இயற்கை வாதிகளின் கொள்கையாகும். எனவே தான் இவர்களை இயற்கைவாதிகள் என அழைக்கின்றனர். நெறிமுறை உணர்வுகளின் கோட்பாடு, தேசங்களின் செல்வம் (Theory of Moral Sentiment, Wealth of Nation) போன்ற நூல்களில் அடம்ஸ்மித்தின் சிந்த னைகள் அழகாக இழைக்கப்பட்டுள்ளது. இவருக்கு முற்பட்ட காலப்பகுதியில் பொருளாதார சிந்தனைகள பல ஆங்காங்கே ஓர் கட்டுக் கோப்புக்குள் இல்லாது சிதறிக் கிடந்தன. ஆனால் அடம்ஸ்மித் ஒரு குறிப் பிட்ட உற்பத்தி முறையான முதலாளித்துவ முறையின் தன்மை, அமைப்பு, அது எவ்வாறு இயங்குகின்றது என்ற விடயங்கள் தொடர்பாக கோட்பாட்டு ரீதியாக பூரணமான நிலையில் முதன்முதலாக அபிவிருத்தி செய்தார் (Documentation). முதலாளித் துவம் இவருக்கு முன்பு ஊற்றெடுத்தாலும் அதை ஓர் கோட்பாடாக அடம்ஸ்மிததின் காலத்திலே தான் உருவாக்கப்பட்டது.

சமூகத்தில் நிலவியிருக்கின்ற ஊடு தொடர்புகளை வெளிக்கொணரும் பங்களிப்பு இவரிடம் காணப்பட்டது. இதனை பின்வரும் தொடர்புகள் மூலம் காட்டுகின்றார்.

1.பிரதான வர்ககங்களுக்கிடையிலான ஊடு தொடர்பு.

மானிய முறையில் காணப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்களாக, மன்னன், பரிபாலகர்கள், பிரபுத்துவ வம்சத்தவர்கள், பாதுகாப்பு படையினர், குடியானவர்கள் என வர்க்க ஊடு தொடர்பு காணப்பட்டது.

2.உற்பத்தியின் வேறுபட்ட துறைகளுக்கிடையிலான தொடர்பு.

இங்கு உற்பத்தியில் விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்ற துறை களுக்கிடையே தொடர்பு காணப்பட்டது. மானிய முறையில் சேவைத்துறை அதிக மாக காணப்பட்டது. அதாவது குடியானவன் மன்னனின் நிலத்தில் வேலை செய்தான். ஊதியமில்லாது வேலை செய்வதே சேவையாகும். ஊதியத்தைப் பெறுகின்ற போது அது உற்பத்தியாகும்.

3.செல்வமும் வருமானமும் பங்கிடப் படுவதற்கான ஊடு தொடர்பு.

4.வர்த்தகத்தில் இருக்கக்கூடிய ஊடு தொடர்பு.

5.பணத்தின் சுழற்சியை எடுத்துக் காட்டும் ஊடு தொடர்பு.

6.விலைநிர்ணயம் எவ்வாறு இடம்பெறு கின்றது எனக்கூறப்பட்டது. தேசங்களின் செல்வம் எனும் நூலில் விலை என்பதனை மறைகரம் (Invisible Hand) எனக்கூறினார்.

7.எல்லாவற்றையும் தொகுத்து பொரு ளாதார வளர்ச்சியை எடுத்து விளக்கி யுள்ளார்.

அடம்ஸ்மித் இவ்வாறாக சமூக ஊடு தொடர்பின் வழியே பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்றது எனக்கூறினார்.

இவ்வாறு அடம்ஸ்மித் ஊடு தொடர்பு களை வெளிப்படுத்தியதன் விளைவாக ஓர்

மாதிரியுரு (Model) போன்று முதலாளித் துவம் கட்டியெழுப்பப்பட்டது. மாதிரியுரு எனும் போது சமன்பாடுகள், கூட்டுத் தொகை கள் என்ற கணிதரீதியான கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு மாதிரியுருவை கட்டியெழுப்ப முடியும் என்றவகையில் மிக ஆழமான வாச கங்களைக் கொண்டு ஓர் முதலாளித்துவ பொருளாதாரம் எவ்வாறு இயங்கமுடியும் என விளக்கினார். இதற்குப்பின் முதலாளித்துவம் பற்றிய சிக்கலான கோட்பாடுகள் உருவாகு கின்றன. இப்புதிய மாதிரியுருக்களை பார்ப் போமானால் அது அடம்ஸ்மித் முன்வைத்த மாதிரியுருவுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. அதாவது அடம்ஸ்மித் மாதிரியுருக்களே பின்னைய முதலாளித்து வத்தின் மூலவேர் அல்லது அடித்தளமாக அமைந்தது எனலாம். ஓர் தீபச்சுடரிலிருந்து ஏனைய தீபங்கள் சுடர்விடுவது போல அடம்ஸ்மித்தினது நூலும் அதனூடாக வெளியிட்ட கருத்துக்களும், சிந்தனை களுமே 19ம் 20ம்நூற்றாண்டுகளில் உருவா கிய நவீன பொருளாதார சிந்தனையின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி சமகாலப் பொருளியலுக்கு வழிசமைத்துக் கொடுக் கின்றது எனலாம். ஆகவே அடம்ஸ்மித்தின் சிந்தனைகளில் இருந்து ஏனைய சிந்தனை கள் முளைவிடுகின்றது எனலாம். இவ்வகை யில் முதலாளித்துவம் பற்றிய எதிர்கால சிந்தனைகளுக்கு வழிவகுத்தவராக அடம்ஸ்மித் காணப்படுகின்றார்.

## பண்டங்களின் பெறுமானம்

அடம்ஸ்மித்தின் சிந்தனைகளானது, முதலாளித்துவத்தின் தன்மை, போக்கு, அதன் தாக்கம் என்பவற்றை எடுத்துவிளக்கு கின்றது. இங்கு நிறுவனரீதியானதும் நடத்தை ரீதியானதுமான ஒழுங்குகளை பிரதிபலிப்ப தாகும். நிறுவனம் எனும் போது சந்தையையும் நடத்தை எனும் போது உற்பத்தியாளர், நுகர் வோர் நடத்தையையும் குறிக்கின்றது.

உற்பத்தி நடைபெறும் போது உற்பத்தியை நிர்ணயிப்பதற்கு பொறுப்பாக இருப்பது உற்பத்தியாளர் நடத்தையும் நுகர் வோர் நடத்தையுமாகும். இதனடிப்படையில் சந்தையில் பொருட்களுக்கு பெறுமதி ஏற் படுத்தப்படுகின்றது. இவ்வகையில் பொருட் களின் பெறுமதியை விளக்குவதற்கு ஒரு பொருளின் பாவனைப் பெறுமதிக்கும் (Value in use) பரிமாற்றப் பெறுமதிக்கும் (Value in exchange) உள்ள வேறுபாட்டை விளக்கு கின்றார். ஓர் பண்டம், அதனைப் பயன் படுத்துவோருக்கு கொடுக்கும் திருப்தியை பாவனைப் பெறுமதி என்றும் குறித்த பண்டத் தைக் கொண்டு எவ்வளவு வேறுபண்டங் களை கொள்வனவு செய்யக் கூடியதோ அதனைப் பரிமாற்றப் பெறுமதி என்றும் ஸ்மித் கூறுகின்றார். இங்கு இவ்விரு பெறுமதிகளின தும் இருப்பிடமாக சந்தையும் அதன் மத்தி யிலான நடத்தையும் காணப்படுகின்றது. பண் டங்களின் பெறுமதியை பாவனைப் பெறுமதி என்றும் பரிமாற்றப் பெறுமதி என்றும் சிக்கல் ஏற்பட்டதை ஸ்மித் உணராமலில்லை. உண்மையில் தாகத்தால் வாடும் ஒருவருக்கு ஓர் குவளை தண்ணீர் உயிர் போன்ற பெறுமதியுடையது. மதிப்புமிக்கது. ஆனால் ஓர் வைரக்கல்லை எடுத்துநோக்கினால் அது கட்டாயமாக அணிய வேண்டிய அவசிய மில்லை. ஆனால் அதன் பெறுமதி மிகஉயர் வாகும். அதனைக் கொடுத்து மாற்றீடாக இன்னொரு பண்டத்தை நாம் கொள்வனவு செய்யமுடியும். எனவே அதிக பாவனைப் பெறுமதியுடைய குடிநீருக்கு பரிமாற்றப் பெறுமதி கிடையாது. ஆனால் பாவனைப் பெறுமதி இல்லாத அல்லது குறைந்த வைரக் கல்லுக்கு எவ்வளவு பரிமாற்றப் பெறுமதி உண்டென அடம்ஸ்மித் வியந்தார். இதனையே ஸ்மித்தின் பெறுமதி முரண்பாடு (Pradox of value) என்கின்றோம்.

## நியம அணுகுமுறை (Nomative Approach)

ஸ்மித் சமூகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நியமநிலையில் அணுகி நோக்கினார். சமூகத்தில் இருப்பதை அவ் வாறே விட்டுவிடாமல் கூடியளவு மகிழ்ச்சி யாக இருக்கக்கூடிய வகையில் பொருளாதா ரக் கொள்கைகள் வகுக்கப்படவேண்டும் என் றும் அப்போதே அது பொருளாதார நல னுக்கு இட்டுச்செல்லும் என்றும் கூறினார்.

அவரின் கருத்துப்படி, ஊழியம் எந்தளவுக்கு உற்பத்தியை மேற்கொள்ள முடியுமோ அந் தளவிற்கு உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும். அப்போதே அது பொருளாதார நலனுக்கு இட்டுச்செல்லும். அது உத்தம நிலையில் ஈடுபடுகின்ற போது அது பொரு ளாதார நலனுக்கு இட்டுச்செல்லும். (தொழி லாளர்களிடமிருந்து உத்தம வெளியீட்டை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு பொருளா தாரத்தை வகுக்க வேண்டும்). இது பொரு ளாதார நலனுக்கு இட்டுச்செல்லும். இந்நிலை யில் பொருளாதார நலன் உறுதிப்படுத்தப் படும். இவ்வாறு கூறுகின்ற போது அடம்ஸ் மித் ஓர் விடயத்தை வெளிப்படையாகக் கூறாது மறைமுகமாக கூறுகின்றார். அதா வது பொருளாதார நலன் என்பது மக்க ளுடைய தேவைகளை கருத்தில் கொண்ட ஓர் விடயம் எனக்கூறினார். மக்களது தேவைகளை நிறைவேற்றினால் அது பொரு ளாதார நலனாகும்.

அடம்ஸ்மித் பொருளாதார நலனை வலியுறுத்துகின்ற போது அதை அடை வதற்கான மார்க்கமாக முதலாளித்துவத்தை முன்வைக்கின்றார். இது வெறுமனே பொரு ளாதாரப் பொறிமுறை அல்லாது சமூகப் பொறிமுறையாக காணப்பட்டது. எனவே தான் சமூக உற்பத்தி முறையை இயக்கு கின்ற ஒரு முறையே முதலாளித்துவம் எனக் குறிப்பிட்டார்.

உற்பத்தி செய்முறையில் முத லாளித்துவம் பற்றி அவர் கூறுகின்ற போது முதலில் துறை ரீதியாக தன் விளக்கத்தை எடுத்துச்செல்கின்றார்.

1. விவசாயம் 2. உற்பத் திக்கைத் தொழில் (ஆக்கக்கைத்தொழில்)

இவ்வகை கைத்தொழில் பொருட் களை உற்பத்தி செய்வதற்கு கீழ்வரும் உள்ளீடுகள் தேவையெனக் கூறுகின்றார். அவை நிலம், உழைப்பு, மூலதனம். இம்மூன்று உள்ளீட்டுத்தொகுதிகளுக்கும் ஒத்திசைவான வர்க்கங்களையும் இனம் கண்டார் (நிலம் - நிலச்சுவாந்தர், ஊழியம் - தொழிலாளா, மூலதனம் - முதலாளிகள்) இவற்றை இவருக்கு முற்பட்ட அறிஞர்கள் எவரும் இனங்காணவில்லை. இவரே முதன்முதலில் இனங்கண்டார். இதிலிருந்து தான் பொருளியல் ரீதியான விளக்கங்களும் கோட்பாடுகளும் ஊற்றெடுத்தன. இங்கு நிலச்சுவாந்தர்களே சொத்து உடமையாளர் களாக காணப்பட்டனர். எனினும் அது உற் பத்தியை தராது அத்துடன் உற்பத்தியை அவர்களே செய்யமுடியாது. இந்நிலையில் சொத்தினை அதாவது நிலத்தினை பங்கீடு செய்வதன் மூலமே உற்பத்தியைப்பெறலாம் எனக்கூறினார். இவ்வகையில் சொத்துக்கள் நிலச்சுவாந்தர்களிடையே குவிவதால் அது உற்பத்திக்காக பங்கீடு செய்யப்படுகின்ற போது உற்பத்தி நடைபெறுகின்றது. உற் பத்தி செய்வதற்கு தேவையான பௌதீக மூலதனம், போன்ற மூலதனச் சொந்தக்காரரி டம் இருப்பதனால் உற்பத்தியை மேற் கொள்ள சொத்தினை (நிலம்) பங்கிட்டுக் கொள்ள வேண்டிய தேவையிருந்தது. இங்கு நிலச்சுவாந்தர்களுக்கும் முதலாளிகளுக்கு மிடையே தொழிலாளிகள் காணப்பட்டனர். ஸ்மித் விளக்கங்களை கூறியதுடன் அதற்கு மூன்று வெகுமதிகளையும் குறிப்பிடுகின்றார்.

நிலச்சுவாந்தர் – வாடகை , தொழி லாளி - ஊதியம், மூலதனம் - இலாபம் (வட்டி).

தொகுத்து நோக்கின் சமூகநலன் என்று பார்க்கும் போது அது பொருளாதார சமூகப்பொறி முறையாக பயன்படுத்தப்படு கின்றன என்பதனால் காணமுடியும். அதனு டைய பொருளாதார நலன் என்பது ஏற்படு கின்றது என்பதை முக்கியமாக சுட்டிக் காட்டினார்.

இவ்வாறு உள்ளீடுகள், வர்க்கங்கள், கொடுப்பனவுகள் பற்றிய விடயங்களை நோக்கினாலும் அவற்றை தூண்டுவதற்கு ஓர் சக்தி இருக்கவேண்டும் என்பதையும் கண்ட றிந்தார். சமூகரீதியாக இருக்கவேண்டும் என் றில்லை. சமூகரீதியாக, தனிமனித ரீதியாக இருக்கலாம் என்றார். தன்னலம் அல்லது சுயநலன் என்பதே அந்த சக்தியாகும். முத லாளித்துவத்தில் காணப்படும் வர்க்கங்கள் யாவும் தன்னலம் கருதி செயற்பட்டன எனக் கூறுகின்றார். தன்னலமே சமூகத்தினுடைய

நலனுக்கு இட்டுச்செல்லும் என வலியுறுத்து கின்றார்.

இவ்வாறு அடம்ஸ்மித் வெளிப்படுத்திய கருத்துக்கள் 19ம், 20ம், 21ம் நூற்றாண்டுகளது பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்கின. இன்றுள்ள எல்லாவற்றுக்கும் அடிப்படை இவரது சிந்தனையேயாகும். இன்றைய சர்வதேச வர்த்தகத்தை எடுத்து நோக்கினால், நாடுகள் ரீதியாக, பிரதேச ரீதியாக தன்னலம் இருப்பதைக் காணலாம். ஸ்மித்தினுடைய சிந்தனைகளை நோக்கும்போது மனித நாகரிகத்தின் உயர்ந்த படி முதலாளித்துவம் எனக் கூறினார். ஆனால் மாக்ஸ் ஏகாதிபத்தியம் தான் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் எனக்கூறி முதலாளித்துவத்துக்கு உள்ளே இன்னொரு வாதத்தை முன்வைப்பதைக் காணலாம். காலனித்துவம் பற்றி ஸ்மித் அவ்வளவு முரண்பாடாக ஏதும் சொல்லவில்லை. ஆனால் கார்மாக்ஸ் லெனின் போன்றோர் கூறுகின்றபோது காலனித்துவத்தின் கீழ் ஏராளமான நாடுகளை அடிமைப்படுத்தி ஆட்கொண்ட போது ஏகாதிபத்தியவாதத்தை உட்படுத்தி அதனூடாக முதலாளித்துவ பொருளாதாரத்தை பார்க்கின்ற தன்மை காணப்பட்டது.

### அரசதலையிடாக்கொள்கை

உற்பத்திப்பொருளின் அளவு, விலை, தரம் ஆகியன அரசே நிர்ணயம் செய்ய வேண்டும். மக்கள் எப்பண்டங்களை நுகர வேண்டும் என்பதையும் அரசே தீர்மானிக்க வேண்டும். ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், இறக்குமதியை குறைப்பதற்கான நடவடிக்கைகள் யாவும் அரசினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். பொருளாதாரத்தின் எல்லாத்துறைகளிலும் நடவடிக்கைகளிலும் அரசு தலையிடவேண்டும் என வணிகவாதிகள் வலியுறுத்தினர்.ஆனால் இயற்கைவாதிகள் பொருளாதார விடயங்களில் அரசின் தலையீட்டை விரும்பவில்லை. எனவே தான் வணிக நடவடிக்கையில் அரசின் தலையீட்டை வெறுத்தனர். கைத்தொழிலையும் வணிகத்தையும் உற்பத்தித் திறனற்ற தொழிலென இயற்கைவாதிகள் கொண்டபோதும், வணிகக்கட்டுப்பாடு எதுவும் விதிக்காமல் அதன் போக்கிலேயே விட்டு விட வேண்டும் எனக்கருதினர். அதாவது சுதந்திர வர்த்தகம் என்பதனை வலியுறுத்தினர். இயற்கைவிதிகளை மக்கள் கடைப் பிடித்து ஒழுகச்செய்வதே அவனது கடமை யாகும். அதாவது உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டி, சொத்துரிமைக்கு பாதுகாப்பளித்தலும், பிறநாட்டு படையெடுப்பிலிருந்து நாட்டைக்காப்பதுமே அரசின் முக்கிய கடமையாகும். எனவே தனிமனிதனின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் எவ்விதத்திலாவது தலையிடக்கூடாதென்ற கொள்கையை முதன்முதலில் கூறியவர்கள் இயற்கைவாதிகளாகும். அதன்பின்னரே அடம்ஸ்மித் இக்கொள்கையை ஆழமாக வலியுறுத்தினார். இத்தலையிடாக்கொள்கை வணிகவாதிகளின் கொள்கைக்கு முற்றிலும் முரணானது என்பது கவனிக்கத்தக்கதாகும்.

முதலாளித்துவம் மனிதநாகரிகத்தின் உச்சத்தை அடையவேண்டுமாயின் இதற்கு உதவுகின்ற வகையில் அரசாங்கம் என்ற நிறுவனம் இயங்கவேண்டும் என்பதைக் கூறியதுடன், அடம்ஸ்மித் அரசாங்கம் எவ்வாறு பொருளாதாரத்துடன் ஊடு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதையும் கூறினார். இங்கு அரசாங்கம் பொருளாதாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? என்றால் இல்லை என்பதே பதிலாகும். ஆனால் அரசாங்கம் ஒன்று கட்டாயம் இருக்கவேண்டும். அத்துடன் அது தலையிடாக் கொள்கையினை பின்பற்ற வேண்டுமென அடம்ஸ்மித் கூறினார். உண்மையில் அரசாங்கம் போட்டிக்கான சூழலை அங்கீகரிக்க வேண்டும். கட்டற்ற முறையில் போட்டிச்சூழல் காணப்படவேண்டும். அப்போதே முதலாளித்துவம் அர்த்தம் உடையதாக காணப்படும் எனக்கருதினார்.

உண்மையில் தன்னலமும் பொருள் திரட்டும் ஆர்வமும் மக்களின் இயற்கையான பண்பாகும். இவ்வியற்கைப் பண்புகளால் தூண்டப்பட்டு தத்தம் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு, நாட்டின் செல்வத்தை மக்கள் கட்டாயம் பெருக்குவர்.

எனவே அவர்களது பொருளாதார நடவடிக் கைகளில் அரசு தலையிடாது இருப்பதே சிறந்தது என ஸ்மித் கருதினார். அவ்வாறா யின் அரசாங்கத்தின் பணி என்ன என்ற வினா எழுகின்றதல்லவா? இவ்வகையில் அரசு பின்வரும் கடமைகளுடன் தன்செயற் பாட்டை நிறுத்திக்கொள்ள வேண்டுமென ஸ்மித் கூறுகின்றார்.

1. நாட்டில் ஒழுங்கையும் அமைதி யையும் நிலவச்செய்தல். நீதிமன்றங்களை அமைத்துச் சட்டதிட்டங்களை பேணுவது, நாட்டை ஆக்கிரமிப்பதில் இருந்து பாது காத்தல்.

2. கீழ்க்கட்டுமானம் எனப்படும் நீர்ப்பா சனத் திட்டம், போக்குவரத்து வீதி அமைத்தல், புகையிரத வீதி அமைத்தல், பொதுத் தொடர்பு தபால் சேவை போன்ற பொது வேலைகளையும், மருத்துவநிலையங் கள், கல்வி நிலையங்கள் அமைத்தலும் பேணிப்பாதுகாத்தலும், வங்கிகளை நிறுவி கண்காணித்தல் போன்ற கடமைகளை அரசு செய்தால் போதுமானது.

இக்கீழ்க்கட்டுமாணம் அரசாங்கத் துக்கு வருவதற்கு காரணம் என்னவெனில் இவற்றில் ஏற்பட்ட செலவுகள் தனிப்பட்டவர் களுக்கு அல்லது தனிப்பட்டவரது குழுக்க ளுக்கு அவர்களது செலவை மீறிய இலாபத் தைக் கொடுக்கமாட்டது. இவற்றில் ஈடுபடுவ தற்கு எதுவித தூண்டுதலும் இருக்கவில்லை. பொருளாதாரத்துறையில் அரசாங்கம் தலை யிட்டால் நாடு சீர்குலைந்துவிடும் என்பதை வலியுறுத்துகின்றார். வீண்செலவுகள் செய் வதிலும், உற்பத்தி சாதனங்களை பாழாக்கு வதிலும் அரசாங்கத்தை யாரும் மிஞ்சமுடி யாது. அரசாங்கப்பணம் என்றால் அரச அதி காரிகள் வீண்செலவு செய்வர். அரச வேலைகளைப் பொறுப்புடன் செய்யமாட் டார்கள். அரசவேலைகளில் காலதாமதம் தவறுகள் ஏற்படும். எனவே அரசு பொரு ளாதார விடயங்களில் தலையிடுவது தவறு என்பதை வலியுறுத்துகின்றார்.

## தடையற்ற வர்த்தகம்(Free Trade)

வணிகவாதிகள் தங்கத்தையும் வெள்ளியையும் சேர்ப்பதே சர்வதேச வர்த் தகத்தின் நோக்கம் எனக்கருதினர். அதிகள வான வர்த்தகக்கட்டுப்பாடுகள் மூலம் பெரும ளவான வெளிநாட்டு பணத்தினை சேமிக்க முடியும் என நம்பினர். எனவே வணிகவாதி கள் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பில் தனியுரிமை தன்மையை வலியுறுததினர். ஆனால் உண்மையில் ஓர் நாடு உள்நாட்டில் உற்பத்தி செய்யும் பொருட்களுக்குப் பதிலாக பிறநாடுகளிலிருந்து மலிவாக அப் பண்டங்களை இறக்குமதி செய்யலாம். இதன் மூலம் ஓர்நாடு முழுமையாக நன்மை யடைய முடியும். ஆனால் வணிகவாதிகள் அதனை ஏற்கவில்லை. எனவே சுய தேவையை பூர்த்தி செய்வதைக் காட்டிலும் வெளிநாடுகளோடு வணிகம் செய்தால் அந்நாட்டின் உண்மை வருமானம் அதிகரிக்கும் என்பது அடம் ஸ்மித்தின் கருத்தாகும்.

ஓர் நாடு தனக்குவேண்டிய எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்யமுடியாது. அதேபோல் தான் உற்பத்தி செய்த முழுப்பொருட்களையும் நுகரவும் முடியாது. எனவே தனக்கு தேவையான பொருட்களை பெறவும், தன்னிடமுள்ள எஞ்சிய பொருட் களை விற்பனை செய்யவும் சர்வதேச வர்த்தகம் சிறந்தவழி என இயற்கைவாதிகள் நம்பினர். எனவே வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பில் இயன்றளவு கட்டுப்பாடுகள் இருத்தல் கூடாது என வலியுறுத்தி, சுதந்திர மாக வர்த்தகம் நடைபெறவேண்டும் என வலியுறுத்தினர்.

தடையில்லா வர்த்தகத்தை அடம் ஸ்மித் ஆழமாக வலியுறுத்துகின்றார். வர்த்த கத்தைப் பொறுத்து அரச கட்டுப்பாடோ பாதுகாப்போ இருக்கக்கூடாது. இந்த வாதம் அக்காலத்தில் எல்லோரையும் கவர்ந்தது. அதிகளவான வர்த்தக கட்டுப்பாடுகள் மூல மும், இறக்குமதி வரிகள் மூலமும் அதிகள வான செலாவணியை மிச்சப்படுத்த முடியும் என வணிகவாதிகள் நம்பினர். ஆனால் அடம்ஸ்மித் வணிகவாதிகளின் இக்கருத்தை

மறுத்துரைத்து, தடையில்லா வர்த்தகமே சிறந்தது என்றும், வர்த்தகத்தில் அரச கட்டுப் பாடோ தடைகளோ காணப்படக்கூடாது என்பதை அடித்து வலியுறுத்துகின்றார். வணிகவாதிகள் தங்கத்தையும் வெள்ளியை யும் செல்வமாகக் கருதினர். இதனை குவிப்பதே நாட்டின் செல்வமெனக் கருதினர். அடம்ஸ்மித்தின் கருத்துப்படி தேவைக்கு மேலதிகமாக தங்கத்தையும் வெள்ளியையும் சேர்த்துக்கொண்டால், நாட்டில் அதன் மதிப்பு குறைந்துவிடும் அல்லது வெளிநாடுகளுக்கு அது ஏதோ ஓர் வகையில் சென்றுவிடும் என்றார். மேலும் தடையில்லா வர்த்தகத்தை வலியுறுத்தும் அடம்ஸ்மித் முழு நயக்கோட் பாட்டை வலியுறுத்துகின்றார். ஏனெனில் ஒவ் வொரு நாடும் வெவ்வேறு வகையான இயற்கை வளங்களையும் இயற்கை அழ கையும் கொண்டிருக்கின்றன. எனவே அவற்றுக்கேற்ப ஒவ்வொரு நாடும் தமக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய் தும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். மறுபுறமாக வெளிநாடுகளில் உள்ள மலிவான பொருட்களை நாடுகள் இறக்குமதி செய்து பயன்படுத்த முடியுமெனக் கூறினார். எனவே தொழில்பிரிவு சிறப்புத்தேர்ச்சியில் அடிப்படையில் உள் நாட்டு வளங்களைக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்து, தனக்குத் தேவையான பொருட்களை மலி வான விலையில் இறக்குமதி செய்வதன் மூலம் ஓர் நாடு முழு நயத்தை அடைய முடியும் என்ற கருத்தை அடித்து வலியுறுத் துகின்றார். எனவே இந்த முழுநயகோட் பாட்டை வைத்து வணிகவாதத்துக்கு அடி கொடுக்கின்றார். அடம்ஸ்மித், இந்தவகை யில் பிற்காலத்தில் சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஒப்பீட்டுநயக்கோட்பாடு, சந்தர்ப் பச்செலவுக் கோட்பாடு போன்ற வற்றுக்கு அடிப்படையாக இவரது கோட்பாடு அமைந் தது என்றால் மிகையாகாது. ஸ்மித் சில முரண்பாடுகளையும் கொண்டிருப்பதையிட்டு கவனிக்கமுடியும். தடையில்லா வர்த்தகம் பற்றி கூறும் ஸ்மித், சில சந்தர்ப்பங்களில் தொழில் பாதுகாப்பு அவசியம் என்பதையும் கூறுகின்றார். இவ் வகையில் நாட்டின் பாது காப்புக்கு தேவையான போர்க் கருவி உற்பத்தி யில் வெளிநாட்டை நம்பியிருக்கக் கூடாது. எனவே இவற்றுக்குதக்க பாதுகாப்பு அளிக்கப்படல் வேண்டும். செல்வத்தைவிட நாட்டின் பாதுகாப்பே மிக முக்கியமென இவர் வலியுறுத்துகின்றார்.

### உழைப்பு அல்லது ஊழியம் நாட்டின் செல்வம்(Labour as Wealth of Nation)

அடம்ஸ்மித்துக்கு முற்பட்ட இயற்கை வாதிகள் உற்பத்திக்கைத்தொழில் மூலம் எப்பயனும் இல்லையென்றும், விவசாயமே முக்கியமானதென்றும் வலியுறுத்தினார். இதேபோல் வணிகவாதிகள் வணிகமே நாட்டின் செல்வத்திரட்டலுக்கு அடிப்படை யானது ஒன்றை வலியுறுத்தினார். ஆனால் அடம்ஸ்மித் இயற்கைவாதிகளின தும் வணிகவாதிகளினதும் கருத்துக்களை மறுக்கும் விதத்தில், மனித உழைப்புத்தான் நாட்டின் செல்வத்தின் ஆதாரமென வலி யுறுத்துகின்றார். நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களாயினும் சரி ஏனைய பொருட்களாயினும் சரி ஓர் நாட்டின் உழைப்பில் இருந்து தான் தோற்றுவிக்கப்ப டுகின்றது என்பதை வலியுறுத்துகின்றார். இவர் நிலம், மூலதனம் போன்றவற்றைப் பற்றிக் கூறினாலும் உழைப்பைத் தான் அதிகம் முதன்மைப்படுத்தி வலியுறுத்தி கூறிவருகின்றார். எனவே அடம்ஸ்மித் தனது சிந்தனையில் ஊழியம் இலாபத்தின் இருப்பிடம் எனக்குறிப்பிட்டு, இவர்கள் தான் உற்பத்தியை செய்கின்றார்கள். எனவே அவர்களிடமிருந்து தான் மூலதனம் திரட்ட முடியும். அதாவது உற்பத்தியின் இலாபங் கள் மூலம் மூலதனம் திரட்டப்படுவதனால் ஊழியம் தான் *பொருளாதார முன்னேற்றத் தின் இருப்பிடம் எனக்குறிப்பிட்டார். தனது நூலின் தொடக்க* ***உரையிலேயே*** உழைப்பே நாட்டின் செல்வம் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

அடம்ஸ்மித் பல இடங்களிலும் பொரு ளாதார நலன் பற்றி அழுத்தியே கூறிவரு கின்றார். அரசதலையீடு இல்லாத நிலையில் பொருளாதார நலன் பேணப்பட முடியும் என்ப தைக் கூறுகின்றார். அதாவது பொருளாதார நலன் என்பது எந்தளவான தொழிலாளர்கள் உற்பத்தியில் ஈடுபடுகின்றார்கள் என்பதையும்,

ஊழியர்களது உற்பத்தித்திறன் என்பதையும் பொறுத்தே அமைந்திருக்கும். ஊழியர் எண்ணிக்கை, உற்பத்தித்திறன் இரண்டையும் சேர்த்து உற்பத்தியை தீர்மானிக்கும் போது அதுதான் பொருளாதார நலனாக வெளிப்படுகின்றது. இதில் அரசுக்கு எவ்வித பங்குமில்லையென்பதை அடம்ஸ்மித் வலியுறுத்துகின்றார். உண்மையில் தொழிலாளர்கள் எண்ணிக்கை நேரடியாகவே சனத்தொகை மீது தங்கியிருக்கும் ஓர் காரணி என்பது வெளிப்படையாகும். ஆனால் உற்பத்தித்திறன் என்பது ஊழியத்தின் சிறப்புத்தேர்ச்சியினால் நிர்ணயிக்கப்படுகின்றது. தொழிலாளிகளுக்கு வேலையினை பங்கிட்டு கொடுப்பதன் மூலம் சிறப்புத்தேர்ச்சி ஏற்படமுடியும் என்பதை அடம்ஸ்மித் வலியுறுத்தி இதனூடாக உற்பத்தியை பல்வேறு மடங்காக பெருக்கமுடியும் என்கின்றார். இதற்காக ஓர் உதாரணத்தை சான்றாக எடுத்துக்காட்டுகின்றார். – குண்டூசி உற்பத்தி. பயிற்சி இல்லாத ஒருவன் ஓர் குண்டூசியை செய்வது மிக கடினமானது நிச்சயமாக அவனைக் குறித்தளவான குண்டூசியை ஓர் நாளில் உற்பத்தி செய்வது சாத்திய மற்றதாகும். எனவே குண்டூசி உற்பத்தியை பலபிரிவுகளாக பிரித்து பலரையும் பலநிலைகளில் வேலைக்கு அமர்த்தி உற்பத்தியை செய்தால் உற்பத்தி பல மடங்காக பெருக்கும் என்பதைக் கூறுகின்றார். எனவே தொழிற் பிரிப்பு மற்றும் சிறப்புத்தேர்ச்சியினால் உற்பத்தியை பல மடங்காக பெருக்கமுடியும் என்பதை மேலுள்ள உதாரணம் காட்டுகின்றது.இந்தவகை தொழிற் பிரிப்பு முறை உற்பத்தியில் புகுத்தப்பட வேண்டுமாயின் இரண்டு நிபந்தனைகள் அவசியமானவையாகும்.

1. விரிந்த சந்தை வசதிகள் (வாய்ப்புக்கள்)
2. பாரிய மூலதனம்.

மூலதனமும் சந்தைவாய்ப்பும் தொழிற் பிரிப்புக்கு மிக வேண்டப்பட்ட அம்சங்களாகும். அதிகளவு பொருட்களை உற்பத்தி செய்வது சந்தையில் விற்பனை செய்கின்ற போது அதிக மூலதனங்களையும் திரட்ட முடியும். ஏனெனில் ஓர்சில பொருட்களை விற்பனை செய்யும் சிறிய அளவான சந்தைகள் இருப்பின் அதிக மூலதனத்தை திரட்ட முடியாது. அது வெறுமனே வருமானத்தை திரட்டக்கூடியதாகவே காணப்படும். நன்கு அபிவிருத்தியடைந்த ஏராளமான பொருட்களை விற்பனை செய்யக்கூடிய சந்தை இருக்குமானால் மூலதன திரட்டலை மேற் கொள்ள முடியும். ஊழியப்பிரிவு சிறப்புத் தேர்ச்சியூடாக கூடியளவு உற்பத்திக்கு இட்டுச்செல்லும் போது, உற்பத்தி எவ்வளவுக்கு விரிவடைகின்றதோ அந்தளவுக்கு அளவுத் திட்ட சிக்கனமும் ஏற்பட்டுக்கொள்ளும். உற்பத் திச்செலவு குறைவாக இருக்க வேண்டுமானால் அதிகளவான உற்பத்தியை செய்து விற்பனை செய்யக்கூடிய பாரிய சந்தைகள் இருத்தல் வேண்டும். இங்கு உள்நாட்டு சந்தையில் மாத்திரம் பொருட்களை விற் பனை செய்வதால் மூலதன திரட்டுக்களை செய்யமுடியாது. அதற்கு அப்பால் வெளி நாட்டு சந்தைகளின் தேவைப்பாடு அவசிய மாகின்றது. எனவேதான் குடியேற்றங்கள் நிறுவப்படும் பண்பு காணப்பட்டது. இந்த குடியேற்றங்களின் தேவை என்ன என்பதை அடம்ஸ்மித்தினது சிந்தனை ஓட்டத்தினூடாக காணக்கூடியதாகவுள்ளது. அதாவது குடியேற்றங்கள் மூலம் வல்லரசு உருவாகிய போது சந்தைகள் அபிவிருத்தியடைந்தன. இந்த குடியேற்ற நாடுகளில் தங்கள் பொருட்களை விற்பனை செய்து மூலதனத்தை திரட்டியதுடன், இக்குடியேற்றங்கள் மூலம் சில மூலப்பொருட்களையும் பெறமுடிந்ததமை குறிப்பிடத்தக்கது. உதாரணம்:- மோட்டார் வாகன உற்பத்திக்கு தேவையான இறப்பர். இதனை இலங்கை, பிறேசில், மலேசியா போன்ற குடியேற்ற நாடுகள் மூலம் பெற்றுக்கொள்ள முடிந்தது.

## பொருளாதார அபிவிருத்தியின் இயற்கை வரிசை
## Natural order for Development

அடம்ஸ்மித் மூலதனம் ஊழியம் ஆகியவை பற்றிக்குறிப்பிட்ட போதும் ஊழியம் மூலதனத்தை விட உற்பத்தித்திறன் வாய்ந்ததென குறிப்பிட்டார். இவர் குறிப்பிட்ட விடயத்தை பொருளாதாரத்தின் துறைகளின் வடிவில் உற்பத்தித்திறனை வரிசைப்படுத்து

கின்றார். இவ்வாறு உற்பத்தித்துறைகளை நான்கு நிலைகளில் வகைப் படுத்துகின்றார்.

1. விவசாயம் (Agriculture)

2. உற்பத்திக் கைத்தொழில் (Manufactu ring)

3. உள்நாட்டு வர்த்தகம் (Domestic Trade)

4. வெளிநாட்டு வர்த்தகம் (Foreign Trade)

மேற்கூறிய வரிசைப்படுத்தலையே பொருளாதார அபிவிருத்தியின் இயற்கை வரிசையென அழைத்தனர். ஆனால் இன்றைய நவீன பொருளாதாரத்தில் இந்த வரிசைப்படுத்தலில் மாற்றங்கள் ஏற்பட்டுளளது. இவ்வகையில் உற்பத்திக்கைத்தொழிலும், வெளிநாட்டு வர்த்தகமும் என்பதுடன் முதல் நிலைக்கு வந்துவிட்டன. விவசாயத் தொழில் பின்நிலைக்கு போய்விட்டது. தற்கால நிலைமையின்படி பல நோக்கங்கள் கருதி, விவசாயத்தைவிட்டு உற்பத்தி கைத் தொழிலே முக்கிய இடத்தில் உள்ளது.

உலகமாயமாக்கலில் முதலாளித்துவத்தின் முக்கிய காரணியாக உற்பத்திக் கைத்தொழிலே காணப்படுகின்றது. இதற்கு அடுத்து உலகமயமாக்கலோடு வெளிநாட்டு வர்த்தகம் மிகமுக்கியமான ஒன்றாக மாறி விட்டது. உலகமயமாக்கலின் கீழ், பொருளாதார அபிவிருத்தியை அடைய வேண்டுமாயின் அதிக சொத்துக்களை உழைக்க வேண்டும். இன்று பல நாடுகள் பொருளாதார நலனை உச்சப்படுத்திக் கொள்வதற்கு பல அமைப்புக்களை தோற்றுவித்துள்ளது.

உ-ம்:- ஐரோப்பிய ஒன்றியம் - இது வர்த்தகத்தை மேம்படுத்துகின்ற ஓர் மையம். அங்கத்துவ நாடுகளிடையே பல கட்டுப்பாடுகள் வர்த்தகம் தொடர்பாக நீக்கப்பட்டுள்ளது. பொதுவான நாணயத்தை புழக்கத்துக்கு கொண்டுவந்துள்ளது. ஐரோப்பிய பாராளுமன்றத்தைக் கொண்டிருக்கின்றது. இவையெல்லாம் வர்த்தகத்தின் மூலம் பொருளாதார நலனை உச்சப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே உருவாக்கப்பட்டதாகும். அடம்ஸ்மித் காலத்தில் இத்தகைய கைத்தொழில், வர்த்தகத் துறைகள் வளர்ச்சியடையாத நிலையில் விவசாயம் முன்னுரிமையில் இருந்தது அவ்வளவு ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல. ஏனெனில் அவரது இயற்கை வரிசைப்படுத்தலில் உணவு அடிப்படையில் அவர் விவசாயத்திற்கு முன்னுரிமையளித்தது நியாயமானது தான். அதேபோல் உள்நாட்டு மக்கள் நியாயமான அளவில், முறையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள உள்நாட்டு வர்த்தகத்துக்கு முன்னுரிமையளித்ததும் பொருத்தமானதே. ஆனால் இன்றைய உலக மயமாதல், நவீன முதலாளித்துவத்தின் கீழ் அவரது வரிசைப்படுத்தல் பொருத்தமற்றதாகிவிட்டது.

## நிறைதொழில்மட்டம் (Full Employment)

அடம்ஸ்மித் போன்ற பழம்பொருளியலாளர்கள் அரசதலையீட்டை வலியுறுத்தாமல், அரசு பொருளாதார விடயங்களில் தலையிடாமல் இருத்தல் வேண்டுமென்றனர். அவ்வாறாயின் பொருளாதாரம் தன்னிச்சையாக நிறைதொழில் மட்டத்துக்குச்செல்லும் எனவும், குறைதொழில் மட்டம் சாத்தியமற்றதெனவும் வலியுறுத்தினர். பொருளாதாரத்தில் ஏற்படும் ஏதாவது இடையூறுகள் காரணமாக தற்காலிகமாக பொருளாதாரம் குறைதொழில்மட்ட சமநிலையில் காணப்பட்டால், பொருளாதாரத்தை தன்னிச்சையாக இயங்க விடுவதன் மூலம் மீண்டும் பொருளாதாரம் நிறைதொழில்மட்ட நிலையை அடைந்துவிடுமென வாதிட்டனர். இதற்கு சேயின் சந்தை விதியை ஆதாரமாகக் கொண்டனர். நிரம்பல் தனக்குரிய கேள்வியினை தானே ஏற்படுத்தும் என்பதே சேயின் சந்தை விதியாகும். இவ்வாறு நிரம்பல் தனக்குரிய கேள்வியினை தானே ஏற்படுத்திக்கொண்டால் பொருளாதாரம் எப்பொழுதும் நிறை தொழில்மட்டத்திலேயே காணப்படுமென பழம்பொருளியலாளர்கள் கருதினர். தற்காலிகமாக பொருளாதாரம் குறைதொழில்மட்ட நிலையில் காணப்பட்டால் கூலியினைக் குறைப்பதன் மூலம் அதற்கு தீர்வுகாண முடியுமென எடுத்துவிளக்கினர். ஏனெனில் கூலியைக்குறைத்தால் உற்பத்திச்செலவு குறையும் விலை குறையும் கேள்வி அதிகரிக்கும் மீண்டும்

பொருளாதாரம் நிறைதொழில்மட்ட சம நிலைக்கு வந்துவிடுமென வாதிட்டனர். ஆனால் 1929 – 1933காலப்பகுதியில் ஏற்பட்ட உலகப்பெருமந்தம் நிறைதொழில் மட்டம் எனும் சிந்தனையை பொய்ப்பித்து விட்டது. வேலையின்மைப்பிரச்சினை, வருமானவீழ்ச்சி என பாரிய பொருளாதார நெருக்கீடுகளை அமெரிக்கா, பிரித்தானியா போன்ற எல்லா உலகநாடுகளும் அனுப வித்தன. இந்நிலையில் தான் கெயின்ஸ் என்கின்ற பொருளியலாளர் நிறைதொழில் மட்டம் என்கின்ற பழம்பொருளியல் சிந்தனை நடைமுறைக்கு முற்றிலும் பொருத்தமற்ற தென விமர்சனம் செய்தார். அதேபோல கூலிக்குறைப்பு மூலம் பொருளாதாரத்தை நிறைதொழில்மட்டத்துக்கு எடுத்துச்செல்வது சாத்தியமற்றதெனவும் எடுத்துவிளக்கினார்.

## காப்புரிமைகள் (Patents)

காப்புரிமைகள் என்பது இன்று பெரு மளவு வளர்ச்சி பெற்றாலும் கைத்தொழில் புரட்சியிலேயே தோற்றம் பெற்றுவிட்டது. "ஒரு நிறுவனம் ஒன்றைக்கண்டுபிடித்தால் அதற்கு அரசாங்கம் உரிமையை வழங்கும் போது அது காப்புரிமை ஆகும். அதாவது ஆராய்ச்சிக்கான ஊக்குவிப்பு முறையாக காப்புரிமை வழங்கப்படுகின்றது." காப்புரிமை கள் இன்று மருத்துவமுறையில் கூடுதலாக காணப்படுகின்றது (மருந்தை ஆராய்ச்சி செய்கின்ற (Pharmaceuticals நிறுவனங்கள்). இதனடிப்படையில் தான் நிறுவனங்கள் ஆராய்ச்சியனை செய்ய பணத்தினை முடக்கு கின்றது. காப்புரிமைகள் மூலம் கைத் தொழில் புரட்சியின் வேகம் எவ்வாறு முன் னேறியுள்ளது என்பதற்கு 1760ம்ஆண்டுக்கு முந்திய காலகட்டத்தை எடுப்போமேயானால் (1660 – 1760) கைத்தொழில் புரட்சிக்கு முந்திய காலத்தை பார்த்தால் ஒரேயொரு தடவைதான் தசாப்தரீதியாக சராசரி 100 காப்புரிமைகளை தொட்டிருந்தது. 1760 – 1780ற்கு இடைப்பட்ட 20ஆண்டுகளை எடுத்துப் பார்க்கும் போது ஒவ்வொரு தசாப் தத்திற்குமிடையே சராசரியாக 100இற்கும் மேற்பட்ட காப்புரிமைகள் வழங்கப்பட்டன. 1760களில் 205 காப்புரிமைகள் 1770 களில் - 294காப்புரிமைகள், 1780களில் - 477காப்புரிமைகள் என கூடிக்கொண்டு சென்றது. இதிலிருந்து கண்டுபிடிப்புக்களுக்கு அரசாங்கம் உத்தரவு அளிப்பதும், எந்தளவு உத்வேகம் பெற்றிருந்தது என்பதை புள்ளிரீதியாக விளக்குகின்றது. கைத்தொழில் புரட்சியின் அபிவிருத்தியில் துணி நெசவுக்கைத்தொழில் முக்கிய இடத்தைப் பெற்றது. இது சாதாரண மக்களால் பயன் படுத்துவதாக காணப்பட்டது. இதிலிருந்து கைத்தொழில் புரட்சியை பார்த்துக் கொண்டால் உற்பத்தி செய்வதற்குரிய பொருட்களது வளர்ச்சி மிகையாக அதிகரித்துச் செல்வ தைக் காணலாம். துணி நெசவுக் கைத் தொழிலுக்கு அடுத்து புகையிரதப் போக்கு வரத்து கைத்தொழில் புரட்சியில் முக்கியம் பெறுகின்றது. கைத்தொழில் புரட்சியின் ஒரு பகுதியான நீராவியந்திரத்தை வழக்கமாகக் கொண்டு புகையிரத பிரமாண்டமான இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. புகையிரத போக்குவரத்து எங்கெல்லாம் வளர்ச்சி பெறுகின்றதோ அங்கெல்லாம் புகையிரதத்துறைக்கு பிரித்தானியா தொடர்பி ருக்கின்றது. கைத்தொழில் புரட்சியை பார்க்கும் போது பிரித்தானியாவின் கைத் தொழில் ஏனைய கைத்தொழில் கனரக கைத்தொழிலாக காணக்கூடியதாக இருந்தது.

இக்காலத்தில் சமூக மட்டத்தில் முக்கிய மாற்றம் சனத்தொகை வளர்ச்சி யாகும். நகரமயமாக்கலும், மக்கள் தொகை பெருகிச்செல்லும் தன்மை காணப்படுகின்றது. இந்தவகையில் திடீர் வளர்ச்சி கொண்ட நகரம் லண்டனிலுள்ள Manchester நகரம் காணப்படுகின்றது. இந்நகரத்தின் சனத் தொகை 1760இல் ஏறக்குறைய 17,000 மக்களையும் 1831இல் 23,700 மக்களையும் கொண்டதாக சனத்தொகை அதிகரித்தது. கைத்தொழில் புரட்சி முடிவடைந்த காலத் தில் 1851இல் ஏறக்குறைய 400,000 என மக்கள் தொகை அதிகரித்தது. இங்கு பொது வான சனத்தொகை அதிகரிப்பு நகரமயாக் கலில் எவ்வாறு அமைந்தது என பார்க்கப் பட்டது, அதேபோல் இலண்டனில் குறிப்பிடக் கூடிய சனத்தொகை வளர்ச்சி பெற்ற

நகரங்களாக Birmingam(பேர்மிங்கம்), அடம்ஸ்மித்தின் சொந்த இடமான Gasgow போன்றன காணப்படுகின்றது.

அடம்ஸ்மித் கைத்தொழில் புரட்சி நன்கு நிலைபெற்ற போது வாழ்ந்தார் எனக் கூறமுடியாது. 19ம்நூற்றாண்டிற்கு முன்பே 1790இல் மறைந்துவிட்டார். நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை பொறுத்தவரை அதன் தார்ப்பரியம் என்னவென்பதை தான் வாழ்ந்த காலத்திலேயே கூறினார். இந்த வகையில் சமூக விஞ்ஞானியாக விளங்கினார். இவர் சமூகவிஞ்ஞானி என்றவகையில் நுண்ணறிவு பெற்றவராக விளங்கினார் (Pers picacious).

சனத்தொகை வளர்ச்சியினை பொருளாதார வளர்ச்சிகளோடு இணைக்கின்ற போது கைத்தொழில்புரட்சிக்கு முன்பே தனது நுண்ணறிவு மூலம் கருத்தினை வழங்கினார். பொதுவாக சனத்தொகை அதிகரிப்பினை ஒரு புறநடையாகக் கருதுவது சமூக விஞ்ஞானிகளது தன்மையாகும். ஆனால் அடம்ஸ்மித் இத்தகைய சனத்தொகை வளர்ச்சியினை புறநடையாகக் கருதவில்லை. அவர் இதுவே சாதாரண நிலையெனக் கூறினார். அதாவது பிரித்தானிய பொருளாதார வளர்ச்சியிலும், முதலாளித்துவத்திலும் இது வொரு சாதாரண வளர்ச்சியெனக் கூறினார். அது மாத்திரமல்லாது வளர்ச்சிகளில் இடம்பெற்ற மூன்று வர்க்கங்களது பங்களிப்பை மிக ஆரம்பகால கட்டத்திலேயே இனங்காணக் கூடியவராகக் காணப்பட்டார்.

அந்தவகையில் மூலதனம்படைத்தவர்கள் OR மூலதனவாதிகள்

மூலதனம் படைத்தவர்கள் இருநிலையில் காணப்பட்டார்கள்.

1. விவசாயத்தில் மூலதனம் படைத்த வர்கள்.

இவாகள் மரபுரீதியாக முதலாளித்துவத்திற்கு முன்பிருந்தே மூலதனத்தை பங்களிப்புச் செய்தார்கள்.

உ-ம்:- நிலப்பிரபுக்கள், இராணுவ அதிகாரிகள் நிலமுதலாளிள் என்ற நிலையில் இவர்களை காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு மூலதனம் படைத்தோர் கைத் தொழில்புரட்சிக்கு முன்பே இருந்தாலும் கைத்தொழில் புரட்சிக்கு பின்பே பார்க்கக் கூடியதாக இருந்தது.

2. கைத்தொழில் முதலீட்டாளர்கள்.

இயந்திரத்தை விவசாயத்துறைக்கு பிரயோகிக்கக் கூடியதாக இவர்களுக்கு ஏற்பட்டது. பிந்திய நில முதலாளிகளாக தோன்றுவதைக் காணலாம். இவர்கள் மரபு ரீதியாக வாழ்ந்தாலும் பின்பே தோற்றம் பெற்றார்கள்.

1.வர்த்தகர்கள்

முதலாளிகளுக்கு வேண்டிய மூல தனப்பொருட்களை கொண்டு வரவும். உற்பத்திப் பொருட்களை விற்கவுமென இவ் வர்க்கத்தவர்கள் விளங்கினர்.

2.தொழிலாளர்கள்.

"உடல் சக்தியை பயன்படுத்தி பல்வேறு நிலைகளிலும் உற்பத்தியில் நேரடியாக ஈடுபடக்கூடியவர்களாக இருந்ததைக் காணலாம்".

இவ்வாறு மூன்று வர்க்கத்தவர்கள் விளங்கினர். வர்க்கங்களைப் பற்றிக்கூறியதுடன் மாத்திரமன்றி அவர்கள் செய்முறையில் எவ்வாறான பங்களிப்பு செய்தார்கள் எனவும் விளக்கமாகக் கூறினார். இம்மூன்று வர்க்கத்தவர்களும் மூன்றுதொழிற்பிரிவுக்கு இடமளித்துள்ளதைக் காணலாம்.

**உசாத்துணை நூல்கள்**

01. Barber, J., A history of Economic thought (1967), Penguin group Ltd.

02. Roll, E., A history of Economic thought (1985), Shenval Press Ltd., London.

03. Lokanathan, V.,A history of Economic thought (1974), S.Chand & Co.(Pvt) Ltd, Second edition.

04. Rae, J., Life of Adam Smith (1895).

05. Robbins, L., The Theory of Economic Policy in Classical Political Economy (1952).

06. Scott, W.R., Adam Smith as Student and Professor (1937).

# குறுங்கால பிலிப்ஸ் வளையியும் பேரினப் பொருளாதாரக் கொள்கைகளின் தெரிவுகளும்

*A.Thayaparan*
*Senior Lecturer Grade -1*
*Department of Economics & Management*
*Vavuniya Campus.*

## அறிமுகம்

இக் கட்டுரையானது ஒரு நாட்டின் பிரதானமான பேரினப் பொருளாதாரக் கொள்கைகளான வேலையின்மையைக் குறைத்தல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் என்ற இரண்டினதும் சேர்க்கைகள் சமூகத்துக்கும் பொருளாதாரத்துக்கும் ஏற்படுத்தும் செலவுகளை தவிர்க்கும் வகையில் எவ்வாறு சிறந்ததொரு சேர்க்கை, கொள்கை வகுப்பாளர்களால் தெரிவு செய்யப்படுகிறது என்பதை குறுங் கால பிலிப்ஸ் வளையி, சமூக பயனின்மை வளையி (Social disutility curve) போன்ற வற்றை பயன்படுத்தி விளக்க முற்படுகிறது.


ஆரம்ப காலங்களில் பிலிப்ஸ் வளையி தொடர்பாக David Hume (1752), Henry Thornton(1802) மற்றும் அதைத் தொடர்ந்து Irving fisher, Jan Tinbergen போன்றவர்களால் பல்வேறு கருத்துக்க ளும் விளக்கங்களும் அளிக்கப்பட்டிருந்த போதும் 1958லேயே பிலிப்ஸ் என்பவர் இங்கிலாந்தின் 1861-1913 காலப்பகுதிக் கிடையிலான வருடாந்த பணக்கூலி மாற்ற வீதத்துக்கும் ( change in wage rate - w) வேலையின்மை வீதத்துக்கும்( unemploy ment rate - u) இடையிலான தொடர்பை w = f (u) என்றவாறு புள்ளிவிபர ரீதியாக எடுத்துக்காட்டினார். இது கூலி வீதத் திற்கும் வேலையின்மைக்கு மிடையிலான ஒரு தலைகீழ் தொடர்பை எடுத்துக்காட்டி யது. இதன்படி குறைந்தளவான வேலை யின்மையானது பொருளாதாரத்தின் ஊழியச் சந்தையில் அதிகளவான ஊழிய மிகைக் கேள்வியை ஏற்படுத்தி மேல் நோக்கிய கூலி வீத அதிகரிப்பின் அழுத்தத்துக்கும், அதாவது பணவீக்கத் துக்கும் மாறாக உயர்ந்தளவான வேலையின்மை ஊழியச் சந்தையில் அதிகளவான ஊழிய மிகை நிரம்பலை ஏற்படுத்தி கீழ் நோக்கிய கூலி வீத வீழ்ச்சியின் அழுத்தத்துக்கும் அதாவது பணச்சுருக்கத்துக்கும் வழி வகுக்கிறது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

ஊழியச் சந்தையில் ஊழியத்திற்கு நிலவும் மிகைக் கேள்வி அதிகரிக்கு மாயின் கூலிவீதமும் அதிகரிக்கும். மாறாக அதன் மிகைக் கேள்வி குறைவடையு மாயின் கூலி வீதமும் வீழ்ச்சியடையும். இவ்வாறு ஊழியத்தின் மிகைக் கேள்விக்கும் கூலி வீதத்துக்குமிடையே நேர்கணியமான தொடர்பு காணப்படுமாயி னும் இக் கூலி வீதத்தில் ஏற்படும் மாற்றங் கள் வேலையின்மையுடன் எதிர்க்கணிய தொடர்பைக் கொண்டுள்ளது. ஊழியச் சந்தையில் ஊழியத்திற்கு மிகை நிரம்பல் அதிகரிக்குமாயின் கூலி வீதம் வீழ்ச்சிய டையும். மாறாக அதன் மிகை நிரம்பல் குறைவடையுமாயின் கூலி வீதம் அதிகரிக க்கும். இவ்வாறு ஊழியத்தின் மிகை

நிரம்பலுக்கும் கூலி வீதத்துக்குமிடையே எதிர்கணிய தொடர்பு காணப்படுவதுடன் இக் கூலி வீதத்தில் ஏற்படும் மாற்றங்களும் வேலையின்மையுடன் எதிர்க்கணிய தொடர்பை கொண்டுள்ளதைக் காணலாம். மேற்குறித்த இத் தொடர்புகள் யாவும் எதிர்கணியமான சரிவைக் கொண்

பிலிப்ஸ் வளையி மூலம் பிரதிபலிக்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கூலி வீதத்துக்கும் வேலையின்மை வீதத்திற்கும் இடையில் நிலவிய ஆரம்ப கால தொடர்பை பிலிப்ஸ் வளையி மூலம் பின்வருமாறு குறித்துக் காட்டலாம்.





இவ் வளையியானது குறித்த இரு மாறிகளுக்குமிடையிலான ஒரு விட்டுக்கொடுப்பை (Trade–off) எடுத்துக் காட்டுகிறது. அதாவது குறைவான வேலையின்மையை விரும்பும் ஒரு பொருளாதாரம் உயர்வான பணவீக்க வீதத்தையும், மாறாக குறைவான பணவீக்க வீதத்தை விரும்பும் ஒரு பொருளாதாரம் உயர்வான வேலை யின்மை வீதத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலையை இது பிரதிபலிக்கிறது. படத்தில் $u_1$ என்ற புள்ளியில் ஊழியச் சந்தை சமநிலை அடைவதையும் அதில் கூலி வீதம் நிலையாக இருப்பதையும் காணலாம். குறைந்தளவான வேலையின்மை வீதமும் மிகைக் கேள்வியும் நிலவும் பட்சத்தில் அது கூலி வீதத்தால் அதிகரிப்பையும், மாறாக உயர்ந்த வேலையின்மை வீதமும் மிகை நிரம்பலும் நிலவும் பட்சத்தில் அது கூலி வீதத்தில் வீழ்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு தூண்டுகோலாக அமையும்.

கொள்கை வகுப்பாளர்களால் பேணிக் கொள்ள விரும்பப்படும் சாத்தியமான பணவீக்க-வேலையின்மை வீதங்களின் சேர்க்கைகள் பொருளாதாரத்தில் நிலவும் ஊழிய மற்றும் பொருட்சந்தைகளின் கட்டமைப்பினால் தீர்மானிக்கப்படுவதுடன், கொள்கை வகுப்பாளர்கள் விரும்பும் இச் சேர்க்கைகளை அடைந்து கொள்வதற்கு நாணய மற்றும் இறைக் கொள்கைகளது அமுலாக்கலும் இன்றியமையாதது இவ்விரு பேரின பொருளாதார கேள்வி முகாமைத்துவ கொள்கைகள் (Macro economic Demand- Management Policies) மூலம் ஒரு பொருளாதாரம், பிலிப்ஸ்

வளையியின் ஏதோவொரு புள்ளியிலும் குறித்த இலக்கை அடைந்து கொள்ள முடியும். எனினும் வளையியின் இடதுபுற முள்ள பிரதேசங்களில் அமையும் எந்தவொரு புள்ளியும் குறிப்பிடும் குறைந்த ளவான பணவீக்க வீதம், குறைந்தளவான வேலையின்மை வீதம் என்பதை அடைந்து கொள்வதென்பது சாத்தியமற்ற தாகும். கொடுக்கப்பட்ட ஊழியம் மற்றும் பொருட் சந்தைகளின் கீழ் நாணய மற்றும் இறைக் கொள்கைகளால் மட்டும் குறைந் தளவான இச் சேர்க்கைகளை அடைந்து கொள்வதும் சாத்தியமற்றதே. படத்தில் பிலிப்ஸ் வளையிக்கு கீழான பகுதி அடைந்து கொள்ள முடியாத பணவீக்க-வேலையின்மை வீத சேர்க்கைகளின் பிரதேசத்தை எடுத்துக் காட்டுகிறது.


பணவீக்க வீதம் - வேலையின்மை வீதம் என்ற சேர்க்கைகளிலிருந்து சிறந்த தொரு சேர்க்கையை ஒரு பொருளாதாரம் எவ்வாறு அடைந்து கொள்ளலாம் என்பதை பிலிப்ஸ் வளையி, மற்றும் சமூக பயனின்மை வளையி (social disutility curve) என்பவற்றைப் பயன்படுத்தி எடுத்து விளக்கலாம்.

இங்கு சமூக பயனின்மை வளையி என்பது உற்பத்தித்தானத்திலிருந்து வெளி நோக்கியதாகவும் குழிவானதாக வும் காணப்படும். இது குறித்தவொரு சமூக செலவை அல்லது சமூக தீமையை (social cost or harm) ஏற்படுத்தக்கூடிய பணவீக்க -வேலையின்மை வீதங்களின் எல்லா சேர்க்கைகளையும் எடுத்துக் காட்டும் ஒரு வளையி ஆகும். இது உற்பத்தி தானத்தை நோக்கிச் செல்லும் போது அது குறித்த இவ்விரு சேர்க்கை களால் சமூகத்துக்கு ஏற்படும் குறைந்தள வான செலவை அல்லது தீமையை பிரதி பலிக்கும். பல்வேறு சாத்தியமான சமூக பயனின்மை வளையிகளும் கொடுக்கப் பட்ட ஒரு பிலிப்ஸ் வளையியும் உள்ள போது, பிலிப்ஸ் வளையியானது சமூக பயனின்மை வளையிக்கு தொடலியாக அமையும் புள்ளியே உத்தமமான சாத்திய மான பணவீக்க-வேலையின்மை வீதங்க ளின் சேர்க்கையாக அமையும் (Optimum Feasible Inflation – Unemployment Combination) அதாவது மிகச் சிறந்ததும் உத்தமமானதுமான பணவீக்க - வேலை யின்மை வீதங்களின் சேர்க்கையானது பிலிப்ஸ் வளையி, சமூக பயனின்மை வளையிக்கு தொடலியாக அமையும் புள்ளியிலேயே தீர்மானிக்கப்படுகிறது. இதை பின்வரும் ஒரு வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.



படத்தில் புள்ளி 'A' சிறந்தவொரு பணவீக்க- வேலையின்மை வீதங்களின் சேர்க்கையை காட்டுவதுடன் அப்புள்ளியில் இரு வளையிகளது சரிவும் சமமாக இருக்கும். இது கொடுக்கப்பட்ட பிலிப்ஸ் வளையியின் கீழ் ஒரு பொருளாதாரம் அடைந்து கொள்ளக்கூடிய மிகக் குறைந்தளவான சமூகச் செலவை உள்ளடக்கிய ஒரு சேர்க்கையை எடுத்துக் காட்டுகிறது.

பணவீக்கம் - வேலையின்மை போன்றவற்றால் சமூகத்துக்கு எற்படும் செலவும், அவை தொடர்பான மதிப்பீடுகளும் வேறுபட்ட அரசியல் நிர்வாக முறைமைகள், கொள்கை வகுப்பாளரின் வேறுபட்ட விருப்பத் தெரிவுகள் என்பவற்றைப் பொறுத்து வேறுபட்டு அமையலாம். அதாவது பணவீக்கத்துக்கு எதிராகவுள்ள வேலையின்மை தொடர்பான ஒப்பீட்டு ரீதியான ஒரு மதிப்பீடு, கொள்கை வகுப்பாளர்களது விருப்பத் தெரிவு மற்றும் அவர்களது அரசியல் நிர்வாக முறைமைகள் என்பவற்றைப் பொறுத்து வேறுபட்டு அமையலாம். இதன்படி கொள்கை வகுப்பாளர் ஒருவர் பணவீக்க அதிகரிப்பைவிட, வேலையின்மையானது அதிகளவு சமூகத்துக்கு தீங்கு தரும் என கருதும் பட்சத்தில் அவர் வேலையின்மையை தவிர்க்கும் வகையில் அதில் குறைந்தளவையும், பணவீக்கத்தில் அதிகளவையும் பிரதிபலிக்கும் ஒரு சேர்க்கையை தெரிவு செய்வார். இது வேலையின்மையைத் தவிர்க்கும் நிர்வாகத் தெரிவு (Choice of an Unemployment – Averse Administration) என அழைக்கப்படும். இது பிலிப்ஸ் வளை கோட்டின் மிக உயர்ந்த ஒரு சேர்க்கைப்புள்ளியில் காணப்படும். மாறாக வேலையின்மையை விட பணவீக்கம் அதிகளவு சமூகத்துக்கு தீங்கானது எனக் கருதும் கொள்கை வகுப்பாளர் ஒருவர் குறைந்தளவான பணவீக்கத்தையும், அதிகளவான வேலையின்மையையும் பிரதிபலிக்கும் வகையிலான ஒரு சேர்க்கையைத் தெரிவு செய்வார். இது பணவீக்கத்தை தவிர்க்கும் நிர்வாகத் தெரிவு (choice of an inflation averse administration) என அழைக்கப்படும். இது பிலிப்ஸ் வளை கோட்டின் மிகத் தாழ்ந்த ஒரு சேர்க்கைப் புள்ளியில் அமைந்திருக்கும். இவ்வாறு பணவீக்கம்-வேலையின்மை தொடர்பான வேறுபட்ட கொள்கை வகுப்பாளர்களது வேறுபட்ட கொள்கைத் தெரிவுகள், மற்றும் அவர்களது வேறுபட்ட விருப்பத் தெரிவுகளை பின்வருமாறு ஒரு வரைபடத்தில் குறித்துக் காட்டலாம்.



படத்தின்படி புள்ளி A யானது வேலை யின்மையால் சமூகத்திற்கு ஏற்படும் செலவு என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதை தவிர்க்கும் வகையில் குறைந்தளவான வேலையின்மை- அதிகளவு பணவீக்கம் என்றவொரு சேர்க்கை தெரிவு செய்யப்படுவதையும், மாறாக புள்ளி B யானது பணவீக்கத்தால் சமூகத்திற்கு ஏற்படும் செலவு என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதை தவிர்க்கும் வகையில் குறைந்தளவான பணவீக்கம்- அதிகளவு வேலையின்மை என்றவொரு சேர்க்கை தெரிவு செய்யப்ப டுவதையும் குறிப்பிட்டுக் காட்டுகிறது. எனினும் புள்ளிகள் A,B ஆகிய இரண்டும் சிறந்த உத்தமமான சேர்க்கைப் புள்ளி களாகவும், அதில் பிலிப்ஸ் வளையி, சமூக பயனின்மை வளையிக்கு தொடலி யாக அமைவதையும் இங்கு சுட்டிக் காட்டலாம்.

தொகுத்து நோக்குமிடத்து பிலிப்ஸ் வளையி சமூக பயனின்மை வளையி என்பவற்றின் மூலமாக ஒரு பொருளாதா ரத்தின் பணவீக்கம்-வேலையின்மை தொடர்பான பேரினப் பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்களின் வேறுபட்ட விருப்பத் தெரிவுக்கமைய அவற்றின் உத்தம தெரிவுச் சேர்க்கைகளும் வேறுபட்டமைவதைக் காணலாம்.

உசாத்துணைகள்

Ceoff Riley, S. (2012). The Phillips Curve. Retrieved on http://tutor2u.net/economics/revision-notes/a2-macro-phillips-curve.html

Thomas, M. Humphrey (2011). The evolution and policy implications of Phillips curve analysis. Retrieved on https://www.andrew.cmu.edu/course/88-301/phillips/phillips.pdf

A Short note on Inflation, Unemployment and Phillips curve, Retrieved on

http://www2.econ.iastate.edu/classes/econ102/bishnu/short_note.pdf

A Note on Phillips curve, Retrieved on http://sablon.sdu.edu.tr/fakulteler/iibf/dergi/files/2004-1-4.pdf

The Short-Run Phillips Curve, Retrieved on https://www.boundless.com/economics/inflation-and-unemployment/the-relationship-between-inflation-and-unemployment/the-short-run-phillips-curve/

# அறிவுசார் பொருளாதாரத்தின் தூண்கள்

*Miss.T.Kirijah,*
*Former Temporary Assistant Lecturer,*
*Department of Economics ,*
*University of Jaffna.*

புராதன கால மனிதன் தொடக்கம் தற்கால மனிதன் வரையான பொருளாதார செயற்பாடுகள் யாவும் அறிவுசார் பொருளாதாரத்தினால் தான் முன்னெடுக்கப்படுகின்றது. ஆதிகால மனிதன் ஒரு நாளுக்கான உணவை தேடுவதில் மட்டும் ஆற்றல் கொண்டிருந்தான். ஆனால் இன்றைய கால மனிதன் பன்முகப்படுத்தப்பட்ட தேவைகளை ஒருங்கே நிறைவேற்றக்கூடிய வல்லமையாளனாக மாற்றிவிட்டான். இது அறிவியல் பொருளாதாரத்தினூடாகவே சாத்தியமாகியது. அறிவியல் பொருளாதாரம் என்பது "Model of Learning by doing" தான் தொழிற்படுவதிலிருந்து கற்றுக்கொள்ளல் என கூறப்படுகிறது. இன்னொரு வகையில் கூறின் அறிவின் தொழிற்பாடே (knowledge function) அறிவுசார் பொருளாதாரம் எனப்படுகின்றது.

OECD நாடுகளால் (Organization for Economic Co -operation and Development) பொருளாதார மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள ஆட்சிமுறை Economic & Institutional Regime) மனிதமூலதனம் (Human Capital), உட்கட்டுமானம் (Information Infra structure) புத்தாக்க முறைமை (Innovation System) ஆகியன அறிவுசார் பொருளாதாரத்தின் நான்கு முக்கிய தூண்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. இத் தூண்களுக்குள்ளும் பல பிரதான அம்சங்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றை நோக்குவோமாயின்

பொருளாதார மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள ஆட்சிமுறை என்பதினுள் அறிவின் வினைத்திறனான பயன்பாட்டிற்கு தூண்டுதல் அளிக்கப்படவேண்டியதுடன் புதிய அறிவின் நவீன மயமாக்கம் உருவாக்கப்படவேண்டியுள்ளது. முயற்சியாண்மையும் கற்பனை வளம்மிக்க சமூகமும் சந்தைசார் பொருளாதாரமும் நெகிழ்ச்சியான இசைவாக்கத்தை கொண்டிருக்க வேண்டும். பொருளாதார மற்றும் நிறுவன கட்டமைப்பில் போட்டிதன்மையும் நெகிழ்வும் இருப்பதுடன் அறிவுச் சமூகத்திற்கு சமூகத்தை உள்ளடக்கிய பொறிமுறை அவசியமாகும். இந் நான்கு அம்சங்களையும் தொகுத்து பார்க்கையில் பொருளாதார கட்டமைப்பு எப்படி இருக்க வேண்டும்? அறிவு வினைத்திறனாக பயன்படுத்தக்கூடியளவிற்கு அங்கு (நிறுவனத்திற்குள்) ஊக்குவிப்பு கொடுக்க வேண்டும். நிறுவனம் புது அறிவை உருவாக்கக வேண்டும். புது அறிவு நவீனத்துவமுள்ளதாக உருவாக்கல் அவசியம். புதிய அறிவை உருவாக்க நிறுவனம் இசைவு அல்லது நெகிழ்வுடையதாக இருத்தல் வேண்டும். நிறுவனம் எதையும் உள்வாங்க கூடியதாக இருப்பதுடன் புது அறிவை சேர்க்கக்கூடிய சந்தைப் பொருளாதாரமும் தேவையாகவுள்ளது. முயற்சியாளனைப்போன்று சமூகமும் உள்வாங்கும் ஆற்றலுடையதாக இருக்கவேண்டும். புதிய தொழினுட்பம் வருகையில் சமூகம் அதை ஏற்றல் வேண்டும்.

சமூகம் நிறுவனமயப்படுத்தப்பட்ட தன்மையை ஏற்காவிடில் புத்தாக்கம் வரமாட்டாது. எல்லாவற்றையும் உள்வாங்க கூடியதாக சேர்த்து கொள்ளத்தக்கதான வழிகள் உள்ள சமூகமாக இருத்தல் வேண்டும். இத்தூணில் காணப்படும் மேற்கூறிய நான்கு அம்சங்களும் இருந்தால் தூண் பலமடையும்.

அடுத்து மனித மூலதனத்தை பார்த்தால் இங்கு உயரிய பயிற்சியும் நெகிழ்வும் கொண்ட ஊழியப்படையும் மனித மூலவள அபிவிருத்தியும் அவசியமானது. கல்விமாதிரியானது வாழ்வுமுழுவதும் அதாவது ஆயுள் வரைக்குமான கற்றலாகவும் புத்தாக்கம் செய்யக்கூடியதாகவும் தரமாகவும் முன்னேற்றத்தை அளிப்பதாகவும் இருக்க வேண்டும். அடுத்த அம்சம் யாதெனில் கல்வியும் பயிற்சியுமானது கட்டுபாடுகளற்ற மையப்படுத்தப்படாத அதாவது பரவலாக்கப்பட்டதாக இருப்பதுடன் பாகுபாட்டுத் தன்மையுடைய தாகவும் இருக்க வேண்டியது மனித மூலதனத்தின் வினைத்திறனை அதிகரிக்க உதவும்.

அறிவு சார் பொருளாதாரத்தை நகர்த்திச் செல்வதில் மனிதமூலதனம் முக்கியமானது. வெளிப்படையாக இதை எவ்வாறு செய்வது? என பயிற்சி கொடுத்தால் ஒருவர் மனித மூலதனமாக மாறிவிடுவார். மிக உயர்வான பயிற்சியை உள்வாங்க கூடியதான தொழிற்படை இருத்தல் வேண்டும். எது பயிற்சி? என்பதில் முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது. உதாரணமாக கணனிப் பயிற்சி மனிதவள அபிவிருத்தியை தரவல்லது. பயிற்சி பெறவிருப்பம் இருக்க வேண்டும். மனித மூலதனத்தை கல்வி மாதிரி, காட்டுருவுக்குள்ளால் தான் மேம்படுத்தலாம். வாழும் வரை கற்றல் என்பது தரமானதும் ஆக்கமுண்டாக்க கூடியதுமான கல்வியாக (creativity) இருத்தல் அவசியம். எனவே தான் மனிதமூலதனம் மேம்படுத்தப்படும். வரைமுறையற்ற (deregulation) மையப்படுத்தப்படாத பரவலாக்கப்படாத (decentralization) வகையில் பிரிந்து போகும் தன்மை அதாவது ஒன்றிலிருந்து விரிந்து போகும் தன்மையான (diversification) பயிற்சியும் கல்வியும் தேவை. அவை மனித மூலதனத்திற்குள் இருக்க வேண்டும். இவ் மூன்று விடயங்களாலும் கட்டியெழுப்பிய மனித மூலதன தூண் உடையதே அறிவு சார் பொருளாதாரம்.

தகவல் உட்கட்டுமானம் என்பதற்குள்ளும் மூன்று விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒரு நவீனமயமானதும் தாரளமயப்படுத்தப்பட்டதுமான தொலைத் தொடாபாடல் உட்கட்டுமானம் மற்றும் வலைப் பின்னலுடன் கூடிய அறிவுப் பொருளாதாரம் என்பது அவசியமாகும். எப் போதும் ஒன்றிணைக்ககூடியதான (wheels & wires) நிலைக்க கூடியதான உள்ளூர் மற்றும் பிரதேச தந்திரோபாயங்கள் அவசியம். நவீனமயமாக்கத்திற்கும் பொருளாதாரத்திற்கும் இயங்குநிலையிலுள்ள இலத்திரனியல் வர்த்தகம் (e-commerce) மற்றும் இலத்திரனியல் அரசாங்கம் (e-government) தொடர்புபட்டதாக இருத்தல் நன்று. தொடர்பாடல் என்பதிலும் பிரதேசம் சார்ந்ததான நடை முறைகளை உள்வாங்க கூடியதாக பிரதேச செயற்பாட்டுடன் கூடிய தான திட்டமிடல் தேவை. பழைய விடயங்களை வளர்முகநாடுகளில் சொத்தாக கருது வர். தொடர்பாடல் புரட்சி பல சேமிப்பை தரும். அதாவது அது முதலீடாக வரும். மனிதனை முகாமைப்படுத்தலில் தொடர்பாடல் செம்மையாக்கலை செய்கிறது. புதிதாக கற்பனையை உருவாக்குகிறது.

வினைத்திறனான புத்தாக்க முறையானது தொழில்நுட்பம் மற்றும் புதிய அறிவின் ஆக்கத்திற்கு அவசியம். பல்கலைக் கழகங்கள், விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சிமையங்கள், ஆலோசகர்கள் (consultants) சிந்தனை தொட்டிகளான அறிஞர்களிடமி

ருந்து புத்தாக்கம் உருவாகும். இது உலகளாவிய அறிவின் திறவுகருவியாக (tap), சர்வதேச அறிவின் திரட்சி மூலம் உள்ளூர் தேவை மற்றும் பயன்பாட்டிற்குதவும். எனவே புத்தாக்கமுறைமை அவசியம். சிறியகைத் தொழில் முயற்சியாண்மையானது உள்ளூர் சமூகத்தை பங்களிக்க செய்வதாகவும் அடித்தளமாகவும் கொண்டு புத்தாக்கத்தை உள்ளடக்கியுள்ளது. எல்லாவற்றிலும் புதிது புதிதாக கண்டுபிடிக்க தூண்டுதலானது பொருளாதாரத்தில் இருக்கவேண்டும். உலகளாவிய அறிவிலிருந்து தான் புத்தாக்கத்தை கொண்டு வரவேண்டும். சோவியத் ஒன்றியத்தில் 1917 போல்ஷிவிக்புரட்சியில் வெற்றி பெற்ற லெனின் மக்களை நோக்கி

"நீங்கள் ஐரோப்பாவிற்கு சென்று கல்வி பெற்று வரவேண்டும்" என்றார். அவ்வாறு தான் ஜப்பான் உலகஅறிவை பெற்று வளர்ந்தது எனவே சிறு தொழில்கள், குடிசனக் கைத்தொழில்களிலும் உள்ளூரில் தீர்மானம் எடுக்க கூடிய பங்குபற்றுதலுடன் தொகுதியாக பிரித்து புத்தாக்கத்தை உருவாக்க வேண்டும்.

உலக நாடுகளில் "நான்கு தூண்கள்" தொடர்பான சுட்டெண்கள்

| நாடு | KEI நிலை | KEI | EIR நிலை | Economic Incentive Regime Index | புத்தாக் நிலை | புத்தாக்க சுட்டெண் | கல்வி நிலை | கல்வி சுட்டெண் | ICT நிலை | ICT சுட்டெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுவீடன் | 1 | 9.26 | 13 | 8.59 | 2 | 9.27 | 6 | 8.98 | 1 | 9.76 |
| டென்மார்க் | 2 | 9.22 | 7 | 8.97 | 5 | 9.43 | 2 | 9.22 | 7 | 9.25 |
| நோர்வே | 3 | 9.17 | 3 | 9.45 | 16 | 8.86 | 3 | 9.2 | 9 | 9.17 |
| பின்லாந்து | 4 | 9.07 | 8 | 8.95 | 3 | 9.6 | 3 | 9.2 | 19 | 9.17 |
| நெதர்லாந்து | 5 | 9.02 | 11 | 8.69 | 6 | 9.41 | 8 | 8.74 | 5 | 9.25 |
| சுவிஸ்லாந்து | 6 | 8.99 | 4 | 9.42 | 1 | 9.82 | 34 | 7.44 | 4 | 9.28 |
| கனடா | 7 | 8.97 | 5 | 9.38 | 8 | 9.35 | 10 | 8.62 | 23 | 8.4 |
| அவுஸ்ரேலியா | 8 | 8.88 | 18 | 8.39 | 19 | 8.71 | 5 | 9.17 | 6 | 9.25 |
| ஐ.இராச்சியம் | 9 | 8.8 | 14 | 8.54 | 10 | 9.21 | 14 | 8.5 | 14 | 8.93 |
| ஐ.அமெரிக்கா | 10 | 8.8 | 16 | 8.45 | 4 | 9.44 | 16 | 8.35 | 13 | 8.95 |
| நியூசிலாந்து | 11 | 8.76 | 12 | 8.6 | 20 | 8.69 | 1 | 9.3 | 22 | 8.44 |
| ஐஸ்லாந்து | 12 | 8.71 | 9 | 8.77 | 28 | 7.95 | 7 | 8.78 | 3 | 9.32 |
| ஒஸ்ரியா | 13 | 8.58 | 10 | 8.69 | 17 | 8.82 | 23 | 8.08 | 16 | 8.75 |
| அயர்லாந்து | 14 | 8.56 | 15 | 8.69 | 15 | 8.92 | 11 | 8.62 | 27 | 8.16 |
| ஜேர்மனி | 15 | 8.54 | 19 | 8.38 | 13 | 8.93 | 22 | 8.08 | 15 | 8.79 |
| எஸ்டோனியா | 25 | 8.07 | 22 | 8.07 | 34 | 7.42 | 19 | 2.29 | 20 | 8.49 |
| ஹங்கேரி | 28 | 7.64 | 28 | 7.64 | 25 | 8.18 | 29 | 7.68 | 40 | 7.08 |
| மலேசியா | 40 | 6.23 | 46 | 6.5 | 42 | 6.74 | 78 | 4.45 | 37 | 7.23 |
| பல்கேரியா | 41 | 6.18 | 67 | 4.84 | 43 | 6.59 | 35 | 7.34 | 53 | 5.99 |
| ரஷ்யா | 47 | 5.94 | 101 | 2.99 | 38 | 6.92 | 30 | 7.66 | 50 | 6.19 |
| துருக்கி | 53 | 5.56 | 48 | 6.37 | 54 | 5.71 | 81 | 4.4 | 59 | 5.77 |
| பிறேசில் | 54 | 5.5 | 73 | 4.52 | 50 | 6.01 | 58 | 5.68 | 57 | 5.8 |
| சீனா | 75 | 4.42 | 76 | 4.27 | 64 | 5.09 | 87 | 4.09 | 78 | 4.21 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Kyrgyzrep | 75 | 3.63 | 103 | 2.76 | 100 | 2.78 | 47 | 6.3 | 103 | 2.69 |
| இந்தியா | 87 | 3 | 89 | 3.49 | 78 | 3.93 | 106 | 2.22 | 108 | 2.37 |
| கென்யா | 106 | 2.73 | 99 | 3.02 | 75 | 4.12 | 111 | 1.85 | 113 | 1.94 |
| லெசோதோ | 111 | 2.23 | 108 | 2.57 | 112 | 2.22 | 109 | 2.04 | 111 | 2.07 |
| செமரோன் | 123 | 1.46 | 131 | 1.05 | 121 | 1.32 | 113 | 1.82 | 120 | 1.65 |
| பங்களாதேஷ் | 130 | 1.14 | 137 | 0.79 | 122 | 1.27 | 117 | 1.48 | 126 | 1.01 |
| சியராலியோன் | 137 | 0.62 | 136 | 0.84 | 128 | 0.87 | 133 | 0.56 | 139 | 0.21 |

KEI - Knowledge Ecomomy Index        Source : Knowledge, Assessment Methodology 2007

எமது நாடனாது KEI நிலையில் 81வது இடத்திலுள்ளது. (கணிப்பிலுள்ள 140 நாடுகளில்) இந்தியாவை விட முன்னணி பெற்றிருந்தாலும் இலங்கையில் அறிவுப் பொருளாதாரத்தின் நான்கு தூண்களுள் கல்வி தவிர்ந்த நிறுவன அதிகாரம், புத்தாக்கம், தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் என்பவற்றில் திருப்திகரமான நிலையில்லையென்றே பொருளியலறிஞர்களால் கூறப்படுகின்றது. இலங்கையர்களின் கணனி அடிப்படையறிவு குறைந்த மட்டத்திலேயே காணப்படகின்றதெனினும் அரசாங்கம் e.lanka எனும் புதுமுயற்சிலிருப்பதால் முன்னேற்றம் அடையப்படலாம். விஞ்ஞானத் துறைகளில் மிகக்குறைந்தளவிலான மாணவர்களே நாட்டங்கொள்வதால் ஆராய்ச்சிகள், புத்தகங்கள் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

முடிவாக கூறுமிடத்து உலகின் அபிவிருத்தியடையாத பகுதிகளின் பாரம்பரிய ஜீவனோபாய பொருளாதாரத்தினை நவீன நுகர்வு சார்ந்த பொருளாதாரமாக மாற்றமடைச்செய்வதில் பொதுவாக கல்வி அதிலும் குறிப்பாக தொழில்நுட்பக் கல்வி மிகவும் பயனுடையதாக உள்ளது. தொழினுட்பதிறனை பயன்படுத்தும் பல்தேசியகம்பனிகள் ($MNC_3$) வளர்முக நாடுகளில் ஒரு குறுகலான முதலீட்டு அடித்தளத்தை வைத்துக்கொண்டே இயங்குவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுச் சேமிப்புக்களை பயன்படுத்திக்கொண்டே வெளிநாட்டு நிறுவனங்கள் உரிமை ஆதிக்கம் பெறுவதுடன் வேறு எவரும் பிரவேசிக்க இயலாத, தொழில்நுட்ப திறன்மிகுந்த, காப்புரிமைப் பாதுகாப்புப்பெற்ற துறைகளை இந்நிறுவனங்கள் நாடுவதால் உண்மையில் வளர்முக நாடுகளில் ஏகபோக உரிமையின் பயன்களை அனுபவித்துவருகின்றன. இதனால் வளரும் நாடுகள் அறிவுசார் பொருளாதாரத்தில் மிக கடினமாக உழைக்க வேண்டிய நிலையிலுள்ளன. மேலும் அறிவு உருவாக்கத்தை அளவிடும் எல்லாத் தூண்களும் மற்றும் அறிவைப் பரப்புவதற்கான ஆற்றல்களும் அவற்றின் செயற்பாடுகளும் குறைவிருத்தி நாடுகளில் பலவீனமாகவே உள்ளன. அதியுயர் ஆபத்து மற்றும் ஊக்குவிப்பு குறைபாடு என்பன காரணமாக தனியார் துறையினரும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடுசெய்யாது முரண்டுபிடிக்கின்றனர். அரச மற்றும் அரசசார்புடைய நிறுவனங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத் தூண்டும் அதேவேளை தனியார் துறையிலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள அந்நாட்டு அரசாங்கம் ஊக்கமளித்தால் இலங்கை போன்ற நாடுகள் வளர்ந்த நாடுகளைப்போல் அறிவு பொருளாதாரத்தில் சாதனை படைக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.


உசாத்துணைகள்:

www.worldbank.org/kam

www.localfutures.com

# சுற்றுலாவும் அதன் முக்கியத்துவமும்

*Miss. M. Sharmila,*
*Former Temporary Assistant Lecturer,*
*Department of Economics,*
*University of Jaffna.*

சுற்றுலா செல்லுதல் 19ம் நூற்றாண்டில் மலர்ச்சியுற்றது. இன்பப் பயணம், பணம் செலவு செய்தல், ஓரிடத்தில் குறிப்பிட்ட காலம் தங்குதல் போன்றவை இதனுள் அடங்கும். சுற்றுலா மையம், வாகனவசதி, தங்கும் இடம் ஆகிய மூன்றும் சுற்றுலாவின் முக்கியமான உள்ள மைப்புக்களாகும். கவர்ச்சியும் வசதிகளுமே சுற்றுலாவின் அடிப்படைக் காரணிகளாகும். இவை இரண்டும் இல்லாத இடங்களுக்கு பயணிகள் செல்லமாட்டார்கள். சுற்றுலாப் பயணியின் தேவையும் சுவையும் ஆளுக்கு ஆள் வேறுபடும். நாகரிகத்தின் காரணமாகப் பயணிகளின் தேவையும் மாற்றமடைந்து செல்லும் சுற்றுலா பற்றி பல அறிஞர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

◆ "பல்வேறு வகையான நடவடிக்கைகளின் மொத்த தொகையே சுற்றுலா ஆகும். அது குறிப்பாக ஒரு நாடு, நகரம், ஒரு பகுதி போன்றவற்றில் வெளிநாட்டவரின் வருகை, தங்குதல், வெளியேறுதல் போன்ற தன்மைகளின் அடிப்படையில் செயல்படுகின்ற பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய தன்மைகள் கொண்டதாகும்" என்று கி.பி. 1910ல் ஆஸ்திரேலியப் பொருளியல் அறிஞர் ஹெர்மேன் வி. சுவில்லார்டு என்பவர் கூறியுள்ளார்.

இவ்விளக்கம் பொருளாதார அடிப்படையை மட்டும் கூறுகின்றது. ஆனால் சமூகவியல், உளவியல், பண்பாட்டியல், புவியியல் அமைப்பு போன்றவற்றை உள்ளடக்கிக் கூறவில்லை. இவ் விளக்கம் உள்நாட்டு சுற்றுலாவைப் பற்றி கூறவில்லை.

◆ "பயணிகளின் பல்வேறு நடவடிக்கைகளின் கூட்டுத்தொகையே சுற்றுலா ஆகும். பொருள் தேடும் அடிப்படையிலோ, ஓரிடம் சென்று நிலையாக தங்கி வாழ வேண்டும் எனும் எண்ணத்திலோ அல்லாமல் அந்நியர்களால் மேற்கொள்ளப் பெறுகின்ற பயணம், தங்குதல் போன்றவற்றின் மொத்த உருவே சுற்றுலா எனப்படும்" என்று 1942ல் குளிகர் மற்றும் கிராப் எனும் அறிஞர்கள் விளக்கி உள்ளனர். இவ்விளக்கத்தில் பிறநாட்டைச் சார்ந்த வருடைய பயணம், தங்குதல், வருமானமின்மை எனும் மூன்று காரணிகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. இவ் விளக்கம் சுற்றுலாச் சந்தை பற்றி எதுவும் கூறவில்லை. இவ் விளக்கம் 1971 வரை ஏ.ஐ.இ.எஸ்.டி நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப் பெற்றது.

◆ "நாடுகளும், நகரங்களும், சிற்றூர்ப் பகுதிகளும் பயணிகளை கவர்ந்து ஈர்ப்பதனால் அதற்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது. தனி நபருக்கு மிகுதியான வேலை வாய்ப்பை நல்க கூடிய தொழிலகமாக விளங்குகின்றது" என்று பூர்கர்ட்டு மெட்லிக்கு ஆகியோர் கூறியுள்ளனர்.

◆ விளையாட்டுப் போட்டிகளை காணச் செல்லல், விளையாட்டு போட்டிகளில் பங்கெடுத்தல், ஊர்களைச் சுற்றிப் பார்த்தல், சைக்கிள்களில் பயணம் செய்தல், குறிப்பிட்ட

இடத்தில் தங்குதல், உல்லாசப் படகில் பயணம் செய்தல், படகுப் பந்தயம் காணச் செல்லல், மன மகிழ்ச்சிக்காக பிற இடங்களிற்கு செல்லுதல் போன்றவற்றிற்கு செல்லும் நிகழ்ச்சி களைச் சுற்றுலா என்று அழைத்தனர் என்று ஜோசி இக்னாசியோ குறிப்பிடப் பட்டுள்ளார். அதை உடனடியாக புலன்களால் நுகர முடியாது. அது ஒரு நாட்டின் சமூகப் பொருளாதாரதப் பண்பாட்டின் வழி வெளிப்படும்.

சுற்றுலாவின் வகைகள் என்பதனை நோக்கின் சுற்றுலாவினை உள்நாட்டுச் சுற்றுலா, வெளிநாட்டுச் சுற்றுலா என இரண்டு வகைப்படுத்தலாம்.

◆ உள்நாட்டுச் சுற்றுலா : இது மக்கள் தங்கள் நாட்டிற்குள்ளேயே சுற்றுப் பயணம் செய்வதாகும். அவ்வகைப் பயணம் எளிதானது. பணம் மாற்று தல், கடவுச்சீட்டு, தங்கும் உரிமை போன்றவை தேவையில்லை.

◆ வெளிநாட்டுச் சுற்றுலா : ஒருவர் தம்முடைய தாய் நாட்டை விட்டு வேற்று நாட்டிற்குள் பயணம் செய்வது வெளிநாட்டுச் சுற்றுலா எனப்படும். அதற்கு கடவுச்சீட்டு, தங்கும் உரிமை, பணம் மாற்றுதல் என்பன அவசியம்.

## சுற்றுலாவின் நோக்கம்

சுற்றுலாவினால் மக்கள் ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து கொள்கின்றனர். "சுற்றுலா என்பது மனிதனுடைய அடிப்படை தேவைகளில் ஒன்றாகும். அது அனைத்து மக்களாலும், எல்லா அரசாலும் புகழப்படுவ தாகவும் ஊக்கம் தருவதாகவும் உள்ளது, என்று ஐ.நா. பொதுக்குழு கூறியுள்ளது. அந்த வகையில் சுற்றுலா செல்வதன் நோக்கங்களாக,

(1) பொழுது போக்கு:

நாள் தோறும் இயந்திரம் போல உழைக்கும் மக்களுக்கு மாலையில் கிடைக்கும் ஓய்வு மட்டும் போதாது. நாள் தோறும் கிடைக் கும் அந்த மாலை ஓய்வு நாளடைவில் மனிதர் களுக்குள் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் இன்னொரு வேலை ஆகிவிடும். எந்தவொரு வழக்கமான பழக்கத்தையும் குறிப்பிட்ட காலத் திற்கு ஒரு தரம் மாற்றிக் கொள்ளாவிட்டால் வாழ்க்கையில் சலிப்பு ஏற்படும். வாழ்க்கையில் பணியில் மாற்றம் இருக்க வேண்டும். எனவே மாறுதலான பொழுதுபோக்கை நாட வேண்டும். சுற்றுலா மாறுதலான பொழுது போக்கைத் தரும். இந்த நோக்கில் செல்வோர் இயற்கை காட்சிகள் நிறைந்த மலை பகுதிகளிலும் கடற் கரைகளிலும் செலவிட விரும்புகின்றனர்.

(2) பண்பாடு :

பழமையான நினைவுச் சின்னங்களை காணல், வரலாற்று புகழ்மிக்க இடங்களைக் காணல், சமயத்தோடு தொடர்புடைய இடங்க ளிற்கு செல்லல், மக்களின் அறிவார்வத்தை நிறைவு செய்தல். பன்னாட்டு மக்களின் பண் பாட்டை அறிதல் போன்றவை பண்பாட் டிற்குள் அடங்கும் இந் நோக்கத்தை நிறைவு செய்வ தற்கு சுற்றுலா செல்வர்.

(3) விளையாட்டு :

பனிச் சறுக்கு விளையாட்டு, குழிப்பந் தாட்டம் ஆகிய விளையாட்டு, ஒலிம்பிக் விளையாட்டு போன்றவற்றைக் காணவும் அவற்றில் பங்கு கொள்ளவும் சுற்றுலா செல்கின்றனர்.

(4) உடல் நலம் :

வெந்நீர் ஊற்றுக்குள், அருவிகள், மருத்துவக் குணமுடைய கடற்கரைகள், யோகாசனம், கற்றுத்தரும் இடங்கள், கோடை காலத்தங்குமிடங்கள் போன்ற இடங்களிற்கு உடல் நலம் கருதிச் சிலர் பயணம் செய்கின்றனர்.

(5) மாநாடுகள் :

தங்கள் தொழிலோடு தொடர்புடைய

மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் கலந்து கொள்வதற்கு வெளிநாட்டிற்கு பயணம் செய்வர்.

(6) ஊக்கம்

ஒரு வணிக நிறுவனத்தில் மிகுதியாக வணிகம் செய்த விற்பனைப் பணியாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், பங்கிடுபவர்கள், வணிக முகவர்கள் போன்றோரை ஊக்கப்படுத்துவதற்காக வணிக நிறுவனமே அவர்களுக்குச் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்கின்றது. பணத்திற்கு பதிலாக, அன்பளிப்புக்கு பதிலாக அவ்வகைச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இம்முறையினால் இன்று அமெரிக்காவில் ஆண்டு தோறும் ஏறத்தாழ இரண்டு மில்லியன் டொலர்கள் வணிகம் நடைபெறுகின்றது.

இவற்றிடையே பின்வரும் நோக்கங்களுக்காகவும் சுற்றுலா செல்கின்றனர்.

1. புதிதாக திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் மனம்விட்டு பழக சுற்றுலா உதவும்.
2. நீண்ட இடை வெளிக்குப் பின் சந்திக்கும் நண்பர்கள் சுற்றுலா மேற் கொண்டால் நட்பு வளரும்.
3. காதலர்கள் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ளச் சுற்றுலா செல்கின்றனர்.
4. வாழ்க்கையில் விரக்தி கொண்டவர்கள் மனச்சலிப்பை போக்கச் சுற்றுலா செல்கின்றனர்.
5. வாழ்க்கையில் புத்துணர்ச்சி பெற விரும்புபவர்கள் கோடை வாசஸ் தலங்களுக்குச் சென்று வருவது நல்லது.

**சுற்றுலாத் துறையில் உள்ள தடைகள்**

சுற்றுலாவை மேற் கொள்வதற்கு பயணிகளுக்கு பல்வேறுபட்ட தடைகள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

1. செலவு :

மக்கள் மிகுதியாகச் செலவழிக்க முடியாத நிலையில் உள்ளனர். சுற்றுலாவிற்கு மிகுதியாக செலவழிக்கும் இந்தியாவில் 48 சதவிகிதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இவர்களால் வெளிநாட்டு பயணங்களை மேற் கொள்ள முடியாது. உணவு, உடை, இருப்பிடம், போக்குவரத்து போன்றவற்றின் விலைகள் உயர்ந்து விட்டன. எனவே, ஏழை எளியோர்களாலும், சாதாரணத் தொழிலாளர்களாலும் மிகுதியாகச் செலவழிக்க முடியவில்லை.

2. நேரம்

தங்கள் வணிகம், தொழில், கல்வி, அலுவலகம் போன்றவற்றை விட்டுச் சிலர் வெளியே செல்ல முடியாத நிலையில் உள்ளனர். சிலர் தங்கள் தொழிலைத் தங்களின் நேரடிப் பார்வையில் வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். சில சமயங்களில் தொழிலாளர்கள் முதலாளிகளை ஏமாற்றி விடுகின்றனர். மற்றவர்களை நம்பி எந்தத் தொழிலையும் செய்ய முடிவதில்லை. சிலர் தொழில் இரகசியங்களை மற்றவர்ளுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. அதனால், அவர்கள் வெளியே சென்று வர முடியாத நிலையில் உள்ளனர்.

3. உடல் நலம்

சுற்றுலா செல்வதற்கு நல்ல உடல் நலம் தேவை. நோயாளிகளால் நீண்ட தூரம் பயணம் செய்ய முடிவதில்லை. வயோதிபர்கள், உடல், ஊனமுற்றோர், குழந்தைகள் போன்றோர் உடல் நலக் குறைவினால் பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

4. குடும்பம்

கைக்குழந்தைகளை உடைய பெற்றோர்கள், உடல் நலமில்லா முதியோர்களை உடைய குடும்பங்கள் அவர்களை விட்டு விட்டுச் சுற்றுலா செல்ல முடியாது.

5. ஆர்வமின்மை

சிலர் தாங்கள் பிறந்து வளர்ந்த இடங்களைவிட்டு வெளியே செல்ல விரும்பமாட்

டார்கள். மற்றவர்களுடன் பழக விரும்ப மாட்டார்கள்.

6. கட்டுப்பாடுகள்

சில நாடுகளில் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன. அவ்விடங்களுக்குப் பயணிகள் செல்ல விரும்புவதில்லை. பாஸ்போட், விசா, பண மாற்றுதல் போன்ற கட்டுப்பாடுகள் பயணிகளைப் பாதித்துள்ளன.

7. கலவரங்கள்

இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமைதி இன்மை. யுத்த சூழல், இனக்கலவரங்கள் நடைபெறுவதால் மக்கள் அங்கு செல்ல அஞ்சுகின்றனர்.

8. சுகாதாரம்

சுத்தமான இடங்களிற்கே வெளிநாட்டுப் பயணிகள் பயணம் செய்ய விரும்புகின்றனர். அவ் இடங்களில் பொழுதைப் போக்குகின்றனர். சென்னை மாநகரில் காலடி எடுத்து வைத்தவுடன் வெளிநாட்டு பயணிகள் பெருமளவான பிரச்சினைகளை சந்திக்கின்றனர். ஏமாற்றுகின்ற ஆட்டோ – டக்சி சாரதிகள், முகத்துக்கு நேரே கையை நீட்டி வியூகம் வகிக்கும் தொழு நோய், பிச்சைக்காரர்கள், போன்றோரால் சுற்றுப் புறச் சுகாதாரம் கெடுகின்றது.

சுற்றுலாவில் நேரம் முக்கிய பங்கு பெறுகின்றது. வெளிநாட்டு பயணிகள் குறிப்பிட்ட நாட்கள் மட்டுமே வெளி நாடுகளில் சுற்றுப் பயணம் செய்ய முடியும். எனவே அவர்கள் திட்டமிட்டு செலவழிப்பர். காலதாமதம் அவர்களது திட்டத்தை கெடுத்துவிடும். வாகனங்களால் போக்குவரத்தால் பயணிகளுக்குக் காலதாமதம் ஏற்படக் கூடாது.

## சுற்றுலாவின் சமூகப் பொருளாதார விளைவுகள்

கொலம்பஸ், வாஸ்கொடகாம போன்றோர் நீர்வழிப் பயணத்தை மேற்கொண்டு புதிய நாடுகளைக் கண்டு பிடித்துள்ளனர். மக்களின் பழக்க வழக்கங்களை அறிந்துள்ளனர். பாகியன், தொலமி போன்றோர் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் அக்கால வரலாற்றை அறிய உதவுகின்றன.

சுற்றுலா சமூகப் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனால் முன்னேறாத நாடுகளில் சுற்றுலா பெருகுமானால் அவ் வருமானத்தைக் கொண்டு உட்கட்டுமானங்களை விருத்தி செய்து கொள்ள முடியும். இவ் உட்கட்டுமான விருத்தியானது சுற்றுலாத் துறைக்கு மிகவும் அவசியமானது. இருப்பினும் ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாடு, கலை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் கலக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே சுற்றுலாவினால் பல நன்மையான விளைவுகளும், தீமையான விளைவுகளும் ஏற்படும்.

(1) நன்மையான விளைவுகள்

சுற்றுலா மூலம், பண்பாட்டின் இருப்பிடம், உலகை உணர்தல், குடியேற்றம் போன்ற சமூக விளைவுகளும் மேலும் வேலை வாய்ப்பு உருவாக்கம் அன்னியச் செலாவணியை சம்பாதித்தல் போன்ற பொருளாதார விளைவு களும் ஏற்படும்.

◆ தேசிய ஒருமைப்பாடு

சுற்றுலாத்துறையினால் ஏற்படும் சமூக விளைவு என்ற வகையில் தேசிய ஒருமைப்பாடு ஏற்படும். இது மக்களிடையே தேசிய ஒருமைப்பாடு உணர்ச்சியை வளர்ப்பதற்கும், கருத்துக்களையும், கொள்கைகளையும் பரிமாறிக் கொள்வதற்கும், மக்கள் உலகை உணர்வதற்கும், சுற்றுலா பயன்படும். பல்வேறு சாதி, சமய, இன, மொழி, நிறம் கொண்ட மக்கள் நேருக்கு நேர் பார்ப்பதனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது. இதனால் உலகம் முழுவதும் நல்ல நாகரிகம் பரவ வழி ஏற்படுகின்றது. நாட்டினால், மொழியால், இனத்தால், சமயத்தால் வேறுபட்டவர்கள் நண்பர்கள் ஆகின்றனர். ஒரு நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றிய தவறான எண்ணத்தை போக்குகின்றது.

♦ வேலைவாய்ப்பு உருவாக்கம்

சுற்றுலாத்துறையானது சேவைத் துறையாக இருப்பதனால் பலருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றது. உணவு, விடுதிகள், தங்கும் விடுதிகள், சுற்றுலாக் கடைகள், பயண முகவர்கள், போக்குவரத்துத்துறை, கைத்தறி கைவினைப் பொருட்கள் செய்தல் போன்ற வற்றில் நேரடி வாய்ப்பு ஏற்படுகின்றது. சுற்றுலா வழிகாட்டிகள், சுற்றுலா விளக்குணர்கள் ஏற்பாடு செய்பவர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு கிடைகின்றது.

♦ அன்னியச் செலாவணி கிடைக்கின்றது

ஒரு நாடு சுற்றுலாத்துறையை மேம்படுத்தினால் அந்த நாட்டிற்கு நிலையான வருமானம் வரும். ஒரு நாடு பொருட்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும் வெளிநாட்டி லும் விற்பதனைக் காட்டிலும் இவ் வருமானம் அதிகமானதாக அமைகின்றது. வெளிநாட்டு பயணிகள் உள்நாட்டிற்குள் வரும் பொழுது அவர்கள் உள்நாட்டில் உள்ள பொருட்கள் மீதும் ஊர்திகள், இடவசதி, உணவு, பானங்கள், கடைகள், சேவைகள் போன்றவற்றினால் நேர டியாகப் பணவரவு கிடைக்கின்றது. மேலும் சமைப்பதற்கு உணவுப் பொருட்களை வாங்குதல், தங்குமிடத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குதல், விளையாட்டுப் பொருட்களை வாங்குதல் போன்றவற்றினூடாக பணவரவு இடம் பெறுகின்றது. இதனை மறை முக விளைவு எனலாம்.

இதனைவிட சுற்றுலாத்துறை நேர் வரிகள், மறைமுக வரிகள் போன்வற்றின் மூலம் அரசுக்கு அதிக வருமானம் ஈட்டித் தருகின்றது. தங்குமிட வசதிக்கான வரிகள், இறக்குமதி வரி, நுழைவு வரி, சுற்றுலா தொடர்பாக தொழில் தொடங்குவதற்கான வரி, உரிமம் பெறுவ தற்கான வரி என்ற வகையில் குறிப்பிடத்தக்க அளவான வருமானம் கிடைக்கின்றது.

♦ பொருளாதார பன்முகப்படுத்தலை ஏற்படுத்தும்

சுற்றுலாத் துறையானது பொருளாதார பன்முகப்படுத்தலினை தூண்டுவதுடன் சில துறைகளில் பொருளாதாரம் தங்கி இருக்கின்ற தன்மையினையும் குறைக்கின்றது. உல்லாசப் பிரயாணிகளினது கொள்வனவுகளானது Batics, Handicrafts, Souvenires, Gem and Juwellary போன்ற கைத்தொழிலுக்கான கேள்வியை ஏற்படுத்தி இருப்பதுடன் அதன் வளர்ச்சிக்கும் உதவி உள்ளது. நல்ல இலாபகர மான தொழிலாக இவை வளர்வதற்கு சுற்று லாத்துறை உதவி உள்ளது. இதற்கு சான்றாக Resord area இல் இத்தகைய தொழில்களின் வளர்ச்சியினை நாம் அவதானிக்க முடியும்.

♦ பிராந்திய அபிவிருத்தி ஏற்படும்

சுற்றுலாத் துறையானது வெளிநாட்டு பணத்தினை பெற்றுத்தரும் சிறந்த மூலமாக மட்டுமன்றி பிராந்திய அபிவிருத்திக்கும் உதவும் மூலமாகவும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 1963ல் ரோம் நகரில் கூடிய சர்வதேசப் பயணம் மற்றும் சுற்றுலா பற்றிய ஐக்கிய நாடுகள் மாநாடு பின்வருமாறு கூறுகின்றது. சுற்றுலாத்துறை அன்னியச் செலா வணியைப் பெற்றுத் தரும் துறையாக மட்டும் காணப்படக் கூடாது எனவும் மாறாக பின் தங்கிய பகுதிகளை அபிவிருத்தி செய்ய உதவும் சாதனமாகவும் பயன்படுத்த வேண்டும். எனவே பெருமளவான சுற்றுலா மையங்கள் பின் தங்கிய இடங்களிலேயே காணப்படுகிறது. எனவே அவற்றை சுற்றுலா மையங்களாக வளர்த்து எடுத்தால் அப்பிரதேசம் நல்ல அபிவி ருத்தி நிலையை எட்டிவிடும். அதாவது விமான நிலையங்கள், துறைமுகங்கள், பாதைகள், தங்குமிட வசதிகள், தொலைத்தொடர்பு, மின் சாரம் மற்றும் சுகாதார சேவைகள் போன்ற வற்றில் குறிப்பிட்ட பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படும் போது அவ்விடம் மேலும் புகழ் பெற்ற சுற்றுலா மையமாகின்றது. அதன் பின்னர் அந்தப் பிராந்தியம் அபிவிருத்தியின் உன்னத நிலையை அடைய முடியும்.

ஏனெனில் இவ்வாறான அடிப்படை வசதிகள் காணப்படும் போது சுற்றுலா பயணிகள் அவ்விடங்களிற்கு பெருமளவில் செல்வர்.

♦ வருமான பகிர்வு ஏற்படும்

ஒரு நாட்டின் வருமானப் பங்கீட்டில் ஏற்பட்டுவரும் ஏற்றத்தாழ்வைக் குறைக்க சுற்றுலாத்துறை வகித்து வரும் பங்கு நாட்டின் பொருளாதார முகாமையில் மிக முக்கியமான கூறாக இருந்து வருகின்றது. சுற்றுலாத்துறை வேறு கைத்தொழில்களை போலவே விமான சேவைகள், சுமை தூக்குபவர்கள், பயண முகவர்கள், வழிகாட்டிகள், ஹோட்டலில் வேலை செய்பவர்கள், சுற்றுலாப் பொருட்களை வழங்கும் ஏனைய வழங்குனர்கள் போன்ற பல்வேறு தரப்பினர்களிடையே வருமானப் பகிர்வு ஏற்பட்டுக் கொள்கின்றது. அதாவது சுற்றுலாக் கைத்தொழிலில் முன்னோக்கிய இணைப்புக்களும் பின்னோக்கிய இணைப்புக் களும் வருமானப் பகிர்வினை மேம்படுத்து கின்றன. ஆடைக் கைத்தொழில் மற்றும் பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் போன்றவை வருமானத்தினை பங்குதாரருக் கும் ஊழியருக்கும் ஒரு சில வழங்குனர்களுக் கும் இடையில் மட்டுமே பகிர்ந்து கொள்கின் றனர். மாறாக சுற்றுலாத்துறை மூலம் கிடைக் கும் வருமானங்கள் பல்வேறு பிரிவினர்களுக் கும் செல்வதனால் மற்றைய துறைகளை விட சுற்றுலாத்துறையானது வருமானப் பகிர்வுக்கும் உதவி புரிகின்றது.

♦ கைவினைப் பொருள் உற்பத்தியாளர் நன்மையடைவர்

சுற்றுலாத்துறை வளரும் போது ஏனைய தொழில்களும் அதனோடு இணைந்த வகையில் வளர்ச்சியடையும். வெளிநாட்டு பயணி ஒருவர் பயணத்தினை மேற்கொண் டால் அதன் நினைவாக குறித்த நாட்டில் சில பொருட்களை கொள்வனவு செய்து கொள் கின்றனர். அதாவது அரிய வகை கைவினைப் பொருட்களை வாங்குவதில் சுற்றுலாப் பயணி கள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இதன் காரணமாகவே இவ்வாறான பொருட்களை உற்பத்தி செய்பவர்கள் பெரிதும் நன்மை அடைவர்.

## (2) தீமையான விளைவுகள்

சுற்றுலாவினால் பல நன்மைகள் ஏற்படி னும் சில தீமைகளும் ஏற்படுகின்றன. அவை வருமாறு:

♦ கொடிய நோய்கள் உள்நாட்டில் பரவ வாய்ப்புக்கள் உள்ளன.

எயிட்ஸ் போன்ற பால்வினை நோய்கள் பரவ காரணமாக உள்ளது. புற்றுநோயைக் கண்டு அஞ்சிய உலகம் இன்று எயிட்ஸ் நோயைக் கண்டு அஞ்சுகின்றது. மேலும் சுற்று லாவினால் கொலரா, வாந்திபேதி போன்ற நோய்களும் பரவ வாய்ப்புக்கள் உள்ளன.

♦ சமூக கலாசார சீர்குலைவுகள் ஏற்படு கின்றன.

கலாசாரப் பரிமாற்றம் என்பது ஒரு இரு வழிப்பாதை ஆகும். அவை நாங்கள் எதை கொடுக்கின்றோம் எதைப் பெற்றுக் கொள்கின் றோம் என்பதே ஆகும். அதாவது எங்களது கலாசாரம் வெளிநாட்டவர்கள் மீது செல்வாக குச் செலுத்தும் அதேவேளை மறுபுறமாக அவர்களது கலாசாரம் எங்கள் மீது பாதிப் பினை ஏற்படுத்துகின்றது. நாகரிகம் என்ற போர்வையில் பண்பாடற்ற நடை உடை பாவ னைகள் உள்நாட்டில் வளர்கின்றன. உதாரண மாக கோவா கடற்கரையில் சில மேல் நாட்டு பயணிகள் ஆடையின்றி இருப்பது இளைஞர் களின் மனதைப் பாழ்படுத்துகின்றது. இவ்வா றான செயற்பாடுகளால் நாட்டின் மரபு, பண்பாடு, நாகரிகம் போன்றவை அழிய வாய்ப்புக்கள் உள்ளன.

இதனைவிட Nudism, Prostitution, Homosexuality போன்ற சமூகச் சீரழிவுகளும், வெளிநாட்டு பயணிகளினால் உள்நாட்டில் இடம் பெறுகின்றது.

◆பொருளாதார சீர்குலைவு ஏற்படுகின்றது

சிலர் மேல் நாட்டு முறையைப் பின்பற்றுவதற்கு மிகுதியாக செலவு செய்கின்றனர். வெளிநாட்டு பொருட்கள் மீது கொண்டுள்ள மோகம் பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்தலாம். கள்ளக் கடத்தல்கள் அதிகமாகலாம், சுற்றுலா சமூக கிளர்ச்சியை உருவாக்கும்.

◆போதைப் பொருள் பாவனை அதிகரிக்கின்றது

வெளிநாட்டு பயணிகளில் சிலர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளனர். அப்பழக்கம் அவர்கள் செல்லும் நாடுகளுக்கும் பரவுகின்றது. வெளிநாட்டுப் போதைப் பொருள், சிகரெட்டுக்கள், மது வகைகள் போன்றவற்றை இரட்டிப்பு விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்துகின்ற மக்களும் உள்ளனர்.

◆சுற்றுலாவினால் பொருட்களின் விலைவாசி உயர்கின்றது

ஓரிடத்திற்கு மிகுதியான பயணிகள் வரும்போது அவ் இடத்துப் பொருட்களின் விலை உயர்ந்து விடுகின்றது. சில பொருட்களிற்கு தட்டுப்பாடும் ஏற்படுகின்றது. அதனால் உள்ளூர் மக்கள் துன்பப்படுகின்றனர். சுற்றுலாப் பயணிகளிடம் உள்ளூர் வணிகர்கள் கொள்ளை இலாபம்பெற நினைக்கின்றனர்.

◆உள்நாட்டு மக்கள் இடர்பாடுகளை அனுபவிக்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகளால் அங்கு வாழும் மக்களுக்குச் சில இடர்பாடுகளும் ஏற்படுகின்றது. அப்பகுதியில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டுப் பயணிகளுக்கு வழங்கப்படும். மிகுதியான பயணிகளால் கோடை காலத்தில் இலண்டன் கோச்சுக்களில் பயணம் செய்வது எரிச்சல் ஊட்டுவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் மிகுதியினால் பொது வாகனங்களில் நாள் முழுவதும் பெரும் கூட்டம் உள்ளது. நகரத் தெருக்களில் பெரும் கூட்டங்கள் காணப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் அப்பகுதி மக்களுக்கு எவ் இடையூறுகளும் இன்றி பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் இலங்கையில் Hikkaduva, Beruwala போன்ற பிரதேசங்களில் உள்ள மீனவர்கள் அவர்களின் தொழில் தொடர்பிலும், வாழ்க்கை தொடர்பிலும் ஓரங்கட்டப்பட்டு இருக்கின்றனர். எனவே உண்மை யாதெனில் Best buildings, Best food, Best material போன்றவற்றையும் வெளிநாட்டவர்களிற்கு கொடுப்பதாகவே சுற்றுலாக் கைத்தொழில் காணப்படுகின்றது. எங்களது அருமையான வளங்களை பயனாளிகளுக்கு மாற்றுவதனால் எங்களது மக்களின் அடிப்படை தேவைகள் பின்தள்ளிப் போடப்படுவதுடன் அப்பண்டம் தொடர்பான விலைகளையும் உயர்த்தி விடுகின்ற ஒரு கைத் தொழிலாகவே இது காணப்படுகின்றது. இவ்வாறு சுற்றுலாவினால் நாட்டிற்கு நன்மை ஏற்படுகின்ற அதேநேரம் அதனால் தீமைகளும் இடம் பெறுகின்றது.

எனவே தொகுத்து நோக்குகின்றபோது சுற்றுலாத்துறையினால் ஒரு நாட்டிற்கு சமூக ரீதியான, பொருளாதார ரீதியான பல நன்மையான விளைவுகள் ஏற்படுகின்றபோதும் அதனால் ஏற்படுகின்ற கலாசார சீரழிவுகள் என்பதும் முக்கியமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இன்று பல நாடுகள் சுற்றுலாத்துறையை விருத்தி செய்து அதனூடாக அதிக வருமானத்தை பெற முயற்சி செய்யும் அதேவேளை சுற்றுலாவை தடை செய்யும் காரணிகளான செலவு, நேரம், உடல் நலம், குடும்பச் சூழல், ஆர்வமின்மை, கட்டுப்பாடுகள், கலவரங்கள், சுகாதார பிரச்சினைகள் என்பவற்றினால் சுற்றுலா பாதிப்படைகின்றது.

உசாத்துணை நூல்கள்

1) ஈஸ்வரன்.ச. "சுற்றுலாவியல்", பாவை பப்ளிகேஷன்
2) Leonard J.lickorish, Carson, L.Jenkins, "An introduction to tourism", Butter worth Heimemann, Linacre house, Jordon Hill, Oxford.
3) Peter Hayward, "Leisure and Tourism" Butterworth - Heinmann, educational publishers 2000.
4) Janet Rodgers, "Travel and Tourism" Heinamann educational publishers, 2001
5) Victor T.C.Middleton with Rebecca Hawkins, "Sustainable tourism : A mark etting perspective Butter worth - Heinmann Ltd. Linacre house Jordan Hill, Oxford.
6) "Tourism", http // en.wikipedia.org / wikil / tourism
7) Ian Ragsdale, "Possitive and Negative effects of tourism" http / www.echow - com/ Facts - 5244298 Positive - Negative - effects - tourism. html.

# பருநிலைப்பொருளாதார இலக்கினை அடைந்து கொள்வதில் இலங்கை எதிர்நோக்கும் சவால்கள்

*Mr. L. Reginold,*
*Former Temporary Assistant Lecturer,*
*Department of Economics,*
*University of Jaffna.*

**அறிமுகம்**

தற்போது நாடு பூராகவும் பேசப் பட்டுக் கொண்டிருக்கும் விடயங்களில் முதன்மையான விடயம் விலையேற்றமாகும், மிகவும் அண்மையில் அதிகரிக்கப் பட்ட பால்மாக்களின் விலை, எரிபொருட் களின் விலை என்பனவும் எரிபொருள் விலை அதிகரிப்பினைத் தொடர்ந்து ஏற்பட்ட பஸ் கட்டணங்களினதும் மற்றும் சில அத்தியாவசியப் பொருட்களினதும் விலை உயர்வுமே அரசு தொடர்பான மக்களின் விசனத்திற்கு இட்டுச்சென்றுள்ளது. மக்கள் தாம் உழைக்கும் வருமானத்தினைக் கொண்டு தமது அடிப் படைத் தேவையினைக் கூட நிறைவேற் றிக் கொள்ள முடியாத அளவுக்கு அவர் களின் வாழ்க்கைச் செலவு அதிகரித் துள்ளது இதன் எதிரொலியாகவே இன்று ஆங்காங்கே பணிப்புறக்கணிப்புக்களும், சம்பள உயர்வுக் கோரிக்கைகளும், கலவரங்களும் இடம்பெற்றவண்ணம் உள்ளன இது நாட்டின் நீண்டகால அபி விருத்திக்கு ஆரோக்கியத்தினைத் தராது என்பது யாவரும் அறிந்த உண்மை யாகும். மக்கள் உழைக்கும் வருமானம் முழுவதையும் செலவு செய்யமாட்டார்கள் என்பதுதான் "நுகர்வோன் உளவியல் விதி" ஆனால் இலங்கையில் மக்கள் தாம் உழைக்கும் வருமானத்திற்கு மேலாக செலவுசெய்து அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்து வாழ வேண்டும் என்பது அவர்கள் தலைவிதியாகிவிட்டது.

இது ஒரு புறம் இருக்க மறுபுறம் வேலைவாய்ப்பை வழங்கக்கோரி அரசுக்கு எதிராக கோசங்கள் எழுப்பும் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கும் குறைவில்லை இவர்களுள் பெரும்பாலானவர்கள் சாதாரனமானவர்களல்ல மாறாக பல்கலைக்கழகக் கல்வியை முடித்து விட்டு பலவருடங்களாக வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரிகளாவர். இருப்பினும் 2012 இல் 50 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் பட்டதனைத் தொடர்ந்து அந்த தலையிடி அரசுக்குத் தற்காலிகமாகக் குறைந் துள்ளது.

இவ்விதம் நாட்டில் சாதாரன மக்களினாலும் புரிந்து கொள்ளக்கூடிய பிரச்சினைகள் ஒரு புறம் இருக்க மறுபுறம் பங்குச்சந்தை, சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டுநாணய மாற்றுவீதம் என்பனவும் முன்னர் எப்போதும் இல்லாத

அளவுக்குப் பாதக நிலைக்குத் தள்ளப் பட்டு. நாட்டின் இறக்குமதிச் செலவானது துரிதமாக அதிகரித்துச் செல்கின்றது இதனால் நாட்டின் அமெரிக்க டொலர் கையிருப்பு ( Reseve ) வெகுவாகக் குறை வடைந்துள்ளது. இதன் விளைவே அண்மையில் (2012) அன்னியச் செலா வணிச் சந்தையில் இருந்து மத்தியவங்கி தமது தலையீட்டினை நீக்கிக்கொண்ட சம்பவமும் இதனால் அன்னியச்செலாவ ணிச் சந்தையில் அமெரிக்கடொலருக் கான கேள்வி அதிகரித்து அதன் பெறுமதி அதிகரித்துச் செல்லுகின்ற சம்பவமும் இடம்பெறுகின்றது. இது நாட் டின் பல்வேறு பொருளாதார உறுதிப்பாடு களுக்கும் ஓர் அச்சுறுத்தலாக அமைந்து காணப்படுகின்றது.

இதற்கும் மேலாக போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்னும் தொனிப் பொருளில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பல்வேறு நாடுகளி னதும் உதவித்திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன குறிப்பாக இந்தியா, சீனா போன்றவற்றின் நிதி உதவித்திட் டத்தின் கீழ் பாரியளவிலான அபிவிருத் தித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த சில காலங்களாக சீனா இந்தியா இரண்டினதும் வளர்ச்சி பிரமிக்கத்தக்க தாக. இருந்து வருகின்றமை யாவரும் அறிந்ததே அதிலும் சீனா உலகநாடுக ளுக்கே அச்சுறுத்தலாக அமையும் அள வுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது இந்நிலை யில் சீனா, இந்தியா இருவரில் யார் பிராந்திய ரீதியாக வல்லரசாகுவது என்ப தில் அவர்களுக்கிடையில் கடும் போட்டி காணப்படுகின்றது. இதற்கு அவர்கள் செய்யவேண்டிய முதல் வேலை தமது அயல் நாடுகளினைத் தம் வசப்படுத்து வதாகும். இத்தகைய ஒரு உள்நோக்கத் துடனேயே இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தினை உணர்ந்து யார் இலங்கையில் அதிகம் கால் ஊன்றுவது என்பது தொடர்பான போட்டியின் அடிப் படையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங் களும் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகையதொரு அரசியல் பொருளாதார பின்னணியைத் தமக்கு சாதகமாகப் பயன் படுத்தும் இலங்கைப் பொரளாதாரமானது. சீனா, இந்தியா போன்ற நாடுகளின் நிதியுதவியுடன் ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்ற முற்படுகின்றது. இருப்பினும் இந்தகைய நிலை தொடரும் பட்சத்தில் நீண்டகாலத்தில் இலங்கைக் குப் பெரும் ஆபத்தினைக் கொண்டுவரும் என்பது உறுதி.

இவ்விதம் நாட்டின் பல்வேறு பக்கங்களாலும் பிரச்சினைகள் எழுந்த வண்ணமே உள்ளன. உண்மையில் இப் பிரச்சனை தொடர்பான தீர்வுக்கு பாகு பாடற்ற நீண்டகால நோக்கம் கொண்ட சிறந்த பருநிலைப் பொருளாதாரக் கொள் கைகளே அவசியமாகும் ஆனால் அத்த கையதொரு பொருளாதாரக் கொள்கை யினை முன்னெடுப்பதென்பது இலங்கை அரசினைப் பொறுத்தவரையில் மிகவும் சவால் நிறைந்த ஒன்றாகவே உள்ளது என்பதனையே கடந்த கால அனுப வங்கள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

### பருநிலைப் பொருளாதாரக் கொள்கைகளும் இலங்கையின் அனுபவமும்

ஒரு நாடு தனது பொருளாதாரத் தின் ஊடாக அடைந்துகொள்ள முயற்சி செய்கின்ற பல்வேறுபட்ட இலக்குகள் பருநிலைப் பொருளாதார இலக்குகள் ஆகும். அதாவது பருநிலைப் பொருளா தார மாறிகளான தேசிய உற்பத்தி, வேலைமட்டம், விலைமட்டம், சென்மதி நிலுவை, வெளிநாட்டுநாணயமாற்றுவீதம் போன்றவை அடையப்பட வேண்டும் என

எதிர்பார்க்கப்படும் மிகச் சாதகமான இலக்குகள் பருநிலைப் பொருளாதார இலக்குகள் ஆகும். இந்த வகையில் பூரண வேலைமட்டம், பொருளாதார உறுதிப்பாடு, நியாயத்துவம், பொருளா தார வளர்ச்சி, நிலைபேண் அபிவிருத்தி என்பனவே பரிநிலைப் பொருளாதார இலக்குகளாகும். இத்தகைய பரிநிலைப் பொருளாதார இலக்குகளினை முன் னெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு பருநிலைப்பொருளாதாரக் கொள்கைகளும் நடைமுறையில் உள் ளன அட்டவணை – 1 இதனை விளக்கு கின்றது.

| பருநிலைப் பொருளாதாரக் கொள்கைகள் | கருவிகள் |
|---|---|
| ➢ பணக்கொள்கை/நாணயக்கொள்கை | • மத்தியவங்கி வட்டிவீதம்<br>• திறந்தசந்தை நடவடிக்கை<br>• சட்டரீதியான ஒதுக்குவீதம். |
| ➢ அரசநிதிக்கொள்கை/இறைக்கொள்கை | • அரச வரி<br>• அரச கடன்<br>• அரச செலவு |
| ➢ வருமானக் கொள்கை | • சம்பளம்<br>• விலைமட்டம் |
| ➢ நிரம்பல் ஊக்குவிப்புக் கொள்கை | • வரிக்குறைப்பு<br>• கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்<br>• தனியார்மயமாக்கல்<br>• மனித மூலதனத்தை விருத்தி செய்தல் |
| ➢ நேரடிக்கட்டுப்பாட்டுக் கொள்கை | • மக்கள் மயமாக்கல்<br>• நிலச்சீர்திருத்தம் |
| ➢ வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை | • தீர்வை வரிக்கொள்கை<br>• இறக்குமதிப் பங்கீட்டுக் கொள்கை<br>• வெளிநாட்டு நாணயமாற்றுவீதக் கொள்கை |
| ➢ பொருத்தமான கட்டுப்பாட்டுக் கொள்கை | • உயர்ந்தபட்ச விலைக்கட்டுப்பாட்டு கொள்கை<br>• குறைந்தபட்ச விலைக்கட்டுப்பாட்டு கொள்கை |

அட்டவணை - 1 இல் காட்டப் பட்டுள்ள பருநிலைப்பொருளாதாரக் கொள்கைகளே காலத்துக்குக்காலம் பல்வேறு நாடுகளிலும் தமது நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டவையா கும் என்பதுடன் தற்போதும் பயன்படுத்தப் படுகின்றன இதில் எந்தக் கொள்கை யினைப் பயன்படுத்துவது என்பது அந்த நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனையின் தன்மையினைப் பொறுத்து அமையும். குறிப்பிட்டு சொன்னால் 1930 களில்

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட உலகப் பெருமந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்க்கு அன்றைய பிரித்தானிய பொருளியல் அறிஞரான ஜோன் மேனாட் கெயின்ஸ் என்பவரினால் முன்மொழியப்பட்ட கொள்கையே இறைக் கொள்கை ஆகும் என்பதுடன் அப் பிரச்சனையினைத் தீர்ப்பதில் அக் கொள்கைகள் வெற்றியும் கண்டன. இருப்பினும் 1979 களில் அமெரிக்காவில் ஏற்ப்பட்ட தேக்கவீக்கப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் இறைக் கொள்கை தோல்வி காணவே அக்காலப்பகுதியில் ஆட்சிப் பீடம் ஏறிய அமெரிக்க ஜனாதிபதி றொணால்ட் றீகன் அவர்களினால் முன்மொழியப்பட்ட கொள்கையாக நிரம்பல் பக்கக் கொள்கைகள் காணப்படுகின்றன என்பதுடன் அப்பிரச்சனையினைத் தீர்ப்பதில் அக் கொள்கைகள் வெற்றியும் கண்டன இவ்விதம் நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்ப்படும் பிரச்சனைகளின் தன்மையைப் பொறுத்து அவற்றைத் தீர்ப்பதற்க்கான பொருளாதாரக் கொள்கைகளும் வேறுபடும். எனவே சரியானதொரு கொள்கையினைத் தேர்ந்தெடுப்பது மிகவும் அவசியமாகும் என்பதுடன் அவற்றினை சரியான வகையில் எந்தவித அரசியல் தலையீடோ சுயநல நோக்கமோ இல்லாமல் தனித்து பொருளாதார நோக்கத்துடன் நடைமுறைப்படுத்துவது என்பது மிகமிக அவசியமாகும். அப்போதுதான் கொள்கைகள் வெற்றிபெறும்.

**பூரண வேலைமட்டம்**

பொருளாதாரத்தில் காணப்படும் சகல வளங்களையும் பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்துதல் நிறைதொழில்மட்டம் எனப்படும். இங்கு நிறைதொழில் மட்டம் என்பது தனித்து ஊழியக் காரணிகள் மட்டும் முழு வேலை வாய்ப்பினைப் பெறுவதனைக் குறிப்பிடவில்லை மாறாக பொருளாதாரத்தின் ஏனைய வளங்களான நிலம், முதல், முயற்சி போன்றவையும் முழுமையாகப் பயன்படுத்துவதனைக் குறிக்கும். ஒரு நாடு பூரண வேலைமட்டத்தில் இருப்பதென்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகும் இருப்பினும் நிறைதொழில்மட்டத்தினை நோக்கி செல்ல வேண்டும் என்பது பருநிலைப் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.

இலங்கை அனுபவத்தினை நோக்குவோமாயின் இலங்கை சிறப்பான வளங்களை ஒருங்கே கொண்ட நாடாகும் நிலவளம், நீர்வளம் என்று அனைத்து வளங்களையும் ஒருங்கே கொண்ட நாடாகும். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட விவசாயம், மீன்பிடி என்பவற்றை சிறப்பாக மேற்கொள்ளக்கூடிய சூழமைவையும் கொண்டுள்ள ஒரு செழிப்பான நாடாகும் அதிலும் வடக்குக் கிழக்கு பிரதேசம் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடும் போது சிறப்பான வளங்களைக் கொண்ட பிரதேசமாகும். சிறந்த கடல் வளத்தினையும், இயற்கைத் துறைமுகத்தினையும், சிறந்த விவசாய நிலத்தினையும், நிலத்தடி நீரினையும் பனைவளத்தினையும் இவற்றைவிட சிறந்த மனித மூலதனத்தையும் கொண்டிருந்த பிரதேசம் வடக்குக் கிழக்குப்பிரதேசமாகும்.

இவ்விதம் இலங்கை சிறந்த வளங்களைக் கொண்டிருந்தும் அது பொருளாதார ரீதியாக இன்னமும் பின்தங்கியிருப்பதற்கு பிரதான காரணமாக இலங்கையில் இடம் பெற்ற மூன்று தசாப்த காலப் போரினைக் காரணம் காட்டினாலும் உண்மையில் உள்நாட்டு வளங்களினைப் பயன்படுத்தி சுயநிறைவுப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான ஒரு பொருத்தமான பருநிலைப் பொருளாதாரக் கொள்கை இல்லாமையே

மிக முக்கிய காரணம் ஆகும். காலா காலம் ஆட்சிக்கு வந்த அரசுகள் தமது இருப்பினைப் பலப்படுத்த வேண்டும் என்று எண்ணினார்களேயொழிய நாட்டையோ மக்களையோ முன்னேற்றவேண்டும் என்பதில் அதிகம் அக்கறை கொள்ள வில்லை என்றுதான் கூறவேண்டும். அரசியல் நோக்கத்திற்காக சிறிய சிறிய குறுங்காலத்திட்டங்களை முன்வைத்து மக்கள் மனங்களைக் குளிர்மைப்படுத்தி வாக்குகளைப் பெற்றார்களே ஒளிய ஒரு ஆட்சியாளர் கூட பொருளாதார நலனில் அக்கறை கொண்டு நீண்டகால பருநிலைப் பொருளாதாரக் கொள்கைகள் எதனையும் நடைமுறைப்படுத்தவில்லை என்றுதான் கூறவேண்டும்.

1977 களிற்கு முன்னர் பிரதமராக இருந்த திருமதி. சிறீமாவோ பண்டார நாயக்கா அவர்களினால் பின்பற்றப்பட்ட மூடிய பொருளாதாரக் கொள்கையை இலகுவில் யாரும் மறந்திருக்க முடியாது. தற்போதும் யாரிடம் கேட்டாலும் "பாணுக்காக வரிசையில் நிக்க வைத்த அம்மாவை மறக்கமுடியுமா" என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் அத்திட்டத்தி னைத் தொடர்ந்து உள்நாட்டு உற்பத்தி யாளர்கள் பலரும் எமது நாட்டு வளங் களினைப் பயன்படுத்தி பல்வேறு உற்பத்திகளை மேற்கொண்டார்கள் குறிப்பாக அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவுக்கு பதில் அரிசிமா உற்பத்தி அதி கரித்தது, உள்நாட்டில் உற்பத்திசெய்யப் பட்ட துணி, உடுபுடைவைகள் போன்ற வையும் சந்தைக்கு வந்தது, இதைவிட ஏனைய விவசாய கைத்தொழில் பொருட் கள் அனைத்தும் முன்னெப் போதும் இல்லாதா அளவுக்கு உற்பத்திசெய்யப் பட்டது. ஆனால் மக்களின் தேவைக ளோடு ஒப்பிடும்போது அவற்றின் நிரம்பல் வெகு குறைவாகவே காணப்பட்டது இதனால் மக்கள் இப்பொருட்களை உயர்ந்த விலையில் மிகவும் சிரமப்பட்டு பெறவேண்டியிருந்தது. இதனால் மக்கள் மிகவும் கஸ்டங்களை அனுபவிக்கவும் நேர்ந்தது. உண்மையில் அன்றைய பெரும்பாலான மக்களுக்கு பொருளாதார ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் இருக்க வில்லை. இதனால் மக்கள் அத்திட்டத்தி னால் வரக்கூடிய நீண்டகால நன்மை பற்றிய அறியாமையிலேயே இருந்தார்கள். மக்களின் இத்தகைய அறியாமையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திய அரசியல்வாதிகள் பொய்பிரச்சாரங் களைக் கூறி தாம் ஆட்சியமர்ந்தால் பொருளாதாரத்தினைத் தாராளமயப்படுத்தி மக்களின் பிரச்சனைகளுக்கு உடனடி யாகத் தீர்வு காணுவோம் என்று வாக்கு றுதி அளித்து வந்தனர். மக்களும் அறி யாமையால் அவர்களுக்கு வாக்குகளை அளித்து அறுதிப்பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் வெற்றிபெறச் செய்தனர் ஆட்சிப்பீடம் ஏறிய அரசு பொருளா்தா ரத்தினைத் தாராளமயப்படுத்தவே மக்களுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது இதனால் மக்களுக்கு வேண்டிய பொருட்கள் தாரா ளமாகவும் மிகவும் மலிவான விலை யிலும் கிடைக்கப் பெற்றது மறுபுறம் உள நாட்டு உற்பத்தியாளர்கள் பலரும் இறக்கு மதிப் பொருட்களின் தரத்தோடும் விலை யோடும் போட்டிபோட முடியாது சந்தையை விட்டு நீங்கிவிட்டார்கள் என்பதுடன் அவர்களின் பெருமளவான முதல்களும் அளிவடைந்து விட்டது. அன்றிலிருந்து இன்றுவரை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளும் தமது ஆட்சி பறிபோகக் கூடாது என்பதற்காகவே தொடர்ந்தும் திறந்த பொருளாதாரக் கொள்கையையே பின்பற்றி வருகின்றன எவரும் உள்நாட்டு வளங்களினைப் பயன்படுத்தி

உற்பத்தியை மேற்கொண்டு சுய நிறைவுப் பொருளாதாரத்தினைக் கட்டி யெழுப்புவதற்குத் தேவையான பொருத்த மான பரிநிலைப் பொருளாதாரக் கொள்கையினை முன்வைக்கவில்லை என்று தான் கூறவேண்டும். இன்றும் பல பொருளியலாலர்களின் கருத்து என்ன வென்றால் அன்றைய சீறீமாவின் பொருளா தாரக் கொள்கைகள் பின்பற்றப்பட்டிருந் தால் நாடு சுய நிறைவு பெற்று சுபீட்சம் அடைந்திருக்கும் என்பதாகும்.

அடுத்தபடியாக நாடு பூரண வேலை மட்டத்தினை அடைவதற்குத் தடையாக இருந்த காரணியாக உள் நாட்டு யுத்தத்தினைக் கூறிக்கொள்ளலாம் உள்நாட்டு யுத்தமானது நாட்டின் வளப் பயன்பாட்டினை குறிப்பாக வடக்குக் கிழக்குப்பகுதியில் ஸ்தம்பிக்க செய்து விட்டது. யுத்தம் காரணமாக வடக்குக் கிழக்கின் பல பிரதேசங்கள் யுத்த சூனியப் பிரதேசங்களாக பிரகடனப் படுத்தப்பட்டன என்பதுடன் இன்னும் பல பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் ஆக்கப்பட்டன இதைவிட கடல் வலயச் சட்டங்களும் மக்களின் வளப்பயன் பாட்டினை மிகமோசமாக பாதித்தது என்பதுடன் இக்காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இந்த இரு மாகாணங்களினதும் பங்களிப்பு சராசரியாக 3 – 4 சதவித வீச்சுக்குள் காணப்பட்டது. தற்போது போர் நிறைவுற்ற நிலையிலும் இப் பிரதேச வளங்களினை முழுமையாகப் பயன்படுத்தக்கூடியதான ஓர் பொருத்தமான பருநிலைப் பொருளா தாரக் கொள்கை இன்னமும் முன்வைக் கப்படவில்லை. என்றுதான் கூறவேண்டும் கடல் வலயச் சட்டங்கள் இன்னமும் முழுமையாக நீக்கப்பட்டதாகவோ, உயர் பாதுகாப்பு வலயம் என்றபெயரில் இன்ன மும் பல பிரதேசங்கள் பயன்படுத்தப் படாமல் இருப்பதுமே உண்மையாக உள்ளது. இதைவிட சிங்களக் குடியேற் றத்திட்டங்களும் பரவலாக இடம்பெற்ற வண்ணமே உள்ளது. இந்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களின் அபிவிருத்தியானது எவ்வாறு சாத்தி யப்படும் என்பது கேள்வியாகவே உள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் போருக்கு முன்னர் இயங்கிய காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையையோ, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை யையோ, ஆனையிறவு உப்பளத் தொழிற் சாலையையோ மீள ஆரம்பிப்பதற்கான எந்த முயற்சிகளும் இன்றுவரை சிறப்புற நடைபெறுவதாகத் தெரியவில்லை மாறாக அவற்றை எந்த நாட்டுக்கு குத்தகைக்கு கொடுப்பது என்பது தொடர்பாக இழுபறி களே நடந்த வண்ணம் உள்ளன ஆனால் வீதி அபிவிருத்தி என்பதில் மட்டும் அரசு தீவிரமாக உள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும் உண்மையில் வீதி என்பது ஒரு பொதுப் பொருளாக இருப்பதனால் இலாபநோக்கம் கொண்டு செயற்படும் தனியார் துறையினர் அவற்றினை வழங்க முன்வரமாட்டார்கள் இந் நிலையில் வீதி உட்கட்டமைப்பு கட்டாயம் அரசினால் வழங்கப்பட வேண்டிய ஒன்றாகும் சிறந்த வீதி உட்கட்டமைப்பானது உள்ளீடுகளை துரித கதியில் பெறுதல் மற்றும் உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் இது தனியார் துறையினரின் உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கம் அளிப்பதாகவும் அமைந்து காணப்படும். இருப்பினும் சேவைத்துறை விருத்தியில் மட்டும் கருத்தில் கொள்ளாமல் கைத் தொழில் உற்பத்தி முயற்சிகளினை ஊக்கு விப்பதிலும் கருத்தில் கொள்ளுதல் நாட்டின் பூரண வளப்பயன்பாட்டினை ஊக்குவிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது இது நாட்டின் நிறைதொழில்மட்ட வெளி யீட்டுக்கு இட்டுச் செல்லும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உருவாக்கப்படும் உற்பத்தி முயற்சிகளுக்குள் நாட்டில் உள்ள வேலைவாய்ப்பற்றோரை உள்வாங்கிக் கொள்வதே நாட்டுக்கு ஓர் ஆரோக்கியமான வளர்ச்சியைத்தரும். உண்மையில் கைத்தொழில்துறையின் அபரிமிதமான வளர்ச்சியே சேவைத் துறைக்கான தேவையினை உருவாக்க வேண்டும் குறிப்பாக கைத்தொழில் துறையினால் உருவாகும் சேமிப்புக்களினை சேமித்தல், கைத்தொழில்த்துறை வளர்ச்சிக்கு கடன்வழங்கள், காப்புறுதி வழங்கள் போன்ற செயற்பாடுகளுக்கு வங்கித்துறையும் இதர நிதி நிறுவனங்களும் வேண்டப்படும் அதேபோல் கைத்தொழில் மிகை உற்பத்தியினை சந்தைப் படுத்துவதற்காக சிறந்த போக்குவரத்து வசதிகளை உருவாக்க வேண்டும் என்ற நிலை தோன்ற வேண்டுமே ஒழிய அதை விடுத்து சேவைத்துறையினை விருத்தி செய்து பின்னர் கைத்தொழில் துறையினை விருத்தி செய்வோம் என்பது பொருளியல் கோட்பாடுகளுக்கு முரணானதாகவே உள்ளது.

இலங்கையில் இடம்பெறும் மற்றுமொரு துன்பகர நிகழ்வு புத்திஜீவிகளின் வெளியேற்றம் என்பதாகும். உண்மையில் இத்தகைய சிறந்த மனித வளங்களினைப் பயன்படுத்தக்கூடிய ஒரு சிறந்த பருநிலைப் பொருளாதாரக் கொள்கை இல்லாமையே இதற்கு முக்கிய காரணமாகும். அவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப உயர்ந்த சம்பளத்துடன் தொழில் வாய்ப்பினை வழங்கக்கூடிய ஒரு பொருத்தமான பொருளாதாரக் கட்டமைப்பு இல்லாமையே இதற்குக் காரணம் ஆகும் இத்தகைய சிறந்த மனித வளங்களின் வெளியேற்றம் என்பது நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கு பெரும் பின்னடைவைக் கொண்டு வரும் என்பதில் சந்தேகம் இல்லை இன்று பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நடத்தப்படும் பணிப் புறக்கணிப்புக்களுக்கு சரியானதொரு தீர்வு காணப்படாது விட்டால் நாட்டின் அருமையான சில விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் அபாயம் உண்டு என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்நிலையில் நாடு நிறைதொழில்மட்டத்தினை அடைவதென்பது எங்கனம் சாத்தியம்.

இலங்கைப் பொருளாதாரத்தில் உள்ள மற்றுமொரு விடயம் அரசாங்கம் வரி மூலம் திரட்டும் வருமானத்தினை நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் முதலீடுகளுக்கு செலவிடுவதனை விட நுகர்வுக்காக செலவிடுவதே அதிகமாக உள்ளது அதிலும் கடனுக்கான வட்டிக் கொடுப்பனவு, உழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு போன்றன மிகப்பெரும் பங்கினை வகிக்கின்றது மாறாக உள்நாட்டு வளங்களினைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கும் முதலீடுகளுக்கு மிகமிகக் குறைந்தளவே ஒதுக்கப்படுகின்றது. போர் நிறைவுற்றுள்ள நிலையிலும் பாதுகாப்பு செலவுக்கென பல மில்லியன் ரூபா வருடா வருடம் ஒதுக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இவற்றைவிட சமூக நலச் செலவுகளும் மிக உயர்வாகக் காணப்படுகின்றன. இவற்றை உடனடியாகக் குறைப்பதென்பதும் அரசக்கு உடனடியாக முடியாத காரியம் ஆகும். அரசின் இருப்புக்கே இது ஆபத்தானதாக அமைந்து விடும். இந்நிலையில் நாட்டு வளங்கள் எவ்விதம் முழுமையாகப் பயன்படுத்தப்படும் மாறாக எப்போதும் மற்றைய நாடுகளில் கையேந்தி நிற்கின்ற ஒரு பொருளாதாரமாகவே நமது நாடு காணப்படும் என்பது உறுதி.

இன்று இலங்கை அரசுக்கெதிராக வெளிநாட்டு அழுத்தங்கள் முடக்கிவிடப் பட்டிருக்கும் நிலையில் நமது நாட்டுக்

கெதிராக இறக்குமதித்தடைகள் கொண்டு வரப்படுமாயின் நமது நட்டினதும் மக்களினதும் நிலை மிகவும் கவலைக்கிடமாகப் போகும் என்பது உறுதி. இன்று ஜப்பான் உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளது அதற்க்கு காரணம் 2ஆம் உலக மகாயுத்தத்தில் ஜப்பானுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட இறக்குமதித் தடையும் அதனால் ஜப்பான் உணவு இன்றி தவித்த துர்ப்பாக்கிய நிலையுமே ஆகும். இதற்கான காரணம் ஜப்பான் இறக்குமதியில் பெருமளவு வெளிநாடுகளில் தங்கியிருந்தமையே ஆகும். 2ஆம் உலக மகா யுத்தத்தின் அனுபவமே இன்று ஜப்பான் கப்பலிலும், மலைகளிலும் விவசாயம் செய்து தன்னிறைவு கண்டமைக்குக் காரணமாகும். ஜப்பானை விட பலமடங்கு வளங்களினைக் கொண்ட இலங்கை இன்னமும் விவசாயத்தில் தன்னிறைவு அடையவில்லை மாறாக தற்போதும் அவற்றை இறக்குமதி செய்து கொண்டே இருக்கின்றது. இதற்கான பிரதான காரணம் நாட்டினதும் மக்களினதும் நலன் என்பதற்கும் மேலாக ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் தமது சுயநலனை நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றமையே ஆகும்.

**பொருளாதார உறுதிப்பாடு**

உள்நாட்டுப் பொருளாதாரத்திலும், வெளிநாட்டுப் பொருளாதாரத்திலும் உறுதிப்பாட்டைப் பேணச்செய்வதே பொருளாதார உறுதிப்பாடு என்பதனால் கருதப்படுகின்றது. உள்ளக உறுதிப்பாடு என்பது விலைமட்ட உறுதிப்பாட்டையும், வேலைமட்ட உறுதிப்பாட்டையும் முக்கியப்படுத்துகின்றது. வெளியக உறுதிப்பாடு என்பது சென்மதிநிலுவை மற்றும் நாணயமாற்றுவீதம் என்பவற்றை உறுதியாகப் பேணுவ்தைக் குறித்து நிற்கின்றது. இத்தகைய இலக்கினை அடைந்து கொள்வது என்பது பருநிலைப் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகவுள்ளது.

இலங்கையின் அண்மையகாலப் போக்கினை நோக்கும் போது பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேனுவதில் அரசு மூச்சுத்திணறுகின்றது என்பது மறுக்க முடியாதா உண்மையாகும். பால்மா, எரிபொருள் போன்றவற்றின் விலைகளும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அண்மைய காலங்களில் அதிகரித்துச் செல்வதனை அறிந்து கொள்ளமுடிகின்றது. இதன் எதிர் ஒலியாகவே தற்போது பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் கலவரங்களும் பணிப்புறக் கணிப்புக்களும் பரவலாக இடம்பெறுவதனை அவதானிக்க முடிகின்றது அதேசமயம் வேலைவாய்ப்பை வழங்கக் கோரியும், சம்பள உயர்வினை வழங்கக் கோரியும் பாரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற வண்ணமே உள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தில் உள்ள சிக்கலான விடயம் என்னவென்றால் அரச வருமானத்தில் 90 வீதம் வரி வருமானம் மூலமே பெறப்படுகின்றது எனவே புதிதாக வேலை வழங்கினால் என்ன, சம்பள உயர்வினை வழங்கினால் என்ன அதற்கு தேவையான வருமானத்தினை நிச்சயம் அரசு வரி மூலமே பெற்றுக்கொள்ளும். ஏனெனில் அரசுக்கு பெருமளவு வருமானத்தினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் உற்பத்தி முயற்சிகள் என்று ஒன்றும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அன்று தொடக்கம் இன்று வரை தேயிலை ஏற்றுமதி வருமானத்திலேயே பெருமளவு தங்கியிருக்கின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட தற்காலத்தில் வெளிநாட்டுப் பண அனுப்புகை, சுற்றுலாத்துறை மற்றும் ஆடை ஏற்றுமதி முலமான வருமானத்தினைக் குறிப்பிடமுடியும். இருப்பினும்

அதிலும் பல குறைபாடுகள் கூறப்படு கின்றது குறிப்பாக ஆடைகளுக்கான இறுதி உற்பத்தி மட்டுமே இங்கு இடம் பெறுகின்றது என்றும் அதற்குத் தேவை யான முலப்பொருட்கள் யாவும் இறக்கு மதி செய்யப்படுகின்றது என்றும் இதனால் ஆடை ஏற்றுமதி வருமானத்தில் இடைக் கொடுப்பனவாக பெருமளவு வருமானம் இழக்கப்படுகின்றது என்றும் கூறப்படு கின்றது. இதைவிட சுற்றுலாத்துறை வருமானம் என்பது நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டிலேயே அதிகம் தங்கி யுள்ளது தற்போதும் பல ஐரோப்பிய மற்றும் ஏனைய நாடுகள் தமது குடியிருப் பாளர்களுக்கு இலங்கைக்கு செல்வது தொடர்பாக எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே சுற்றுலாத் துறை வருமானம் என்பது நிலைபேண் தன்மையற்ற ஒன்றாகும் இதைவிட வெளி நாட்டுப் பண அனுப்புகை என்பதும் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கும் என்பது உறுதிபடக் கூறமுடியாது. ஏனவே வரி முலமான வருமானமே அரசுக்கு இப் போதைக்கு இருக்கும் நிரந்தர வருமான மாகும்.

பொருட்கள் சேவைகள் மீதான வரி அதிகரிப்பு என்பதன் ஒட்டுமொத்த விளைவு வேறு எதுவும் இல்லை பண வீக்கம் மட்டும்தான். வேலைக்குள் உள் வாங்கப்படும் தொழிலாளர்களும் பெரு மளவில் சேவைத்துறையினுள் தான் உள்வாங்கப்படுகின்றார்கள் அவர் களினால் நாட்டுக்கு எந்தவித உற்பத்தி யும் பெருகப்போவதில்லை உண்மையில் தொழில்வாய்ப்பினை வழங்கக் கூடிய எத்த னையோ துறைகள் உள்ளன அத் தகைய ஒரு துறையினை உருவாக்க வேண்டும் அதனுள் தொழிலாளர்களினை உள்வாங்க வேண்டும் என்ற எண்ணம் அல்லது சிந்தனை யாரிடமும் இல்லை. அரசு தனியே தேர்தல் காலங்களில் தனது வாக்குப்பலத்தினை அதிகரிப்பதற் காகவும். எதிர்க்கட்சிகளின் தேவையற்ற விமர்சனங்களினைத் தவிர்ப்பதற்காகவும் குறுங்கால சிந்தனையடிப்படையில் வேலைவாய்ப்பினை வழங்கி உற்பத்தியே இல்லாமல் செலவினை மட்டும் செய் கின்றது. இது குறைந்த உற்பத்திக்குப் பின்னால் அதிகளவான பணம் துரத்து வதற்கு வழிவகுத்து கேள்வித்தூண்டல் பணவீக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதனால் பொருளாதரத்தின் உள்ளக உறுதிப்பாட்டினைக் கேள்விக் குறியாக்கு கின்றது.

இதைவிட சென்மதிநிலுவையும் பலகாலமாக இலங்கைக்கு சாதகமாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சென்மதி நிலுவையின் முக்கிய கணக் காகக் கருதப்படும் பொருட்கள் பணிகள் கணக்கும் பலவருடங்களாக எதிர்க் கணியமாகவே உள்ளது. இந்நிலையில் 2012 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் அரசு சென்மதிநிலுவையினை சாதகப்படுத்துவதற்காக இலங்கையின் ரூபாவின் பெறுமதியினை 3 சதவீதத்தி னால் பெறுமதியிறக்கம் செய்தமை யாவரும் அறிந்த ஒன்றே. உண்மையில் இது பொருளாதாரக் கோட்பாட்டுக்கு முரணான ஒன்றல்ல. பொருளாதாரக் கோட்பாடுகள் சென்மதிநிலுவை பாத கமாக இருக்கும்போது நாணயப் பெறுமதி இறக்கம் செய்வதன் மூலம் சென்மதி நிலுவையின் பிரதான கணக்கான பொருட்கள் சேவைகள் கணக்கினை சாதகப்படுத்தி அதன் மூலம் சென்மதி நிலுவையினை சாதகமாக மாற்றலாம் என்றே கற்பிக்கின்றது.

உண்மையில் நாணயத்தினைப் பெறுமதி இறக்கம் செய்யும் போது உள் நாட்டவர்களுக்கு வெளிநாட்டுப் பொருட் களினைக் கொள்வனவு செய்வதற்காக அதிகம் செலவிடவேண்டியிருக்கும்

இதனால் அவர்கள் இறக்குமதியினைக் குறைப்பார்கள் அதேவேளை வெளிநாட்ட வர்களுக்கு நமது நாட்டுப் பொருட்கள் மலிவானதாக காணப்படும். இதனால் அவர்கள் ஏற்றுமதியினை அதிகரிக்கிறார் கள் இவ்விதம் இறக்குமதி குறைவதும் ஏற்றுமதி அதிகரிப்பதும் நாட்டின் வர்த்தக மிகையினைச் சாதகமாக்கும் இதன் விளைவாக சென்மதி நிலுவையும் சாதக மாக மாறும் இது ஒரு கோட்பாட்டு ரீதி யான விளக்கம் மட்டுமே ஆகும்.

இக்கோட்பாடு இலங்கையில் வெற்றியளிப்பது என்பது பெரும் சவாலான ஒன்றாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இலங்கை அதிகம் இறக்குமதி செய்வது அத்தியாவசியப் பொருட்க ளையாகும். அத்தகைய பொருட்களி னைப் பொறுத்தவரை இறக்குமதிச்செலவு எவ்வளவுதான் கூடினாலும் இறக்குமதியி னைக் கட்டுப்படுத்த முடியாது அதற்குக் காரணம் அதற்குப்பதிலாக உள்நாட்டில் நுகரக்கூடிய மாற்றுப் பொருட்களின் உற்பத்தி என்று எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது நாட்டின் கையிருப்பினை மேலும் குறைக்கும் ஒரு செயற்பாடாகவே உள்ளது.

இதைவிட அரசினால் அன்னியச் செலாவணிச் சந்தையில் மேற்கொள்ளப் பட்ட மற்றைய விடயம் மத்திய வங்கியின் தலையீட்டினை அன்னியச்செலாவணிச் சந்தையில் இருந்து நீக்கிக் கொண்டமை யாகும். இதற்குக் காரணம் அரசு ‘‘முகாமைசெய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்றுவீதத்தினைப்’’ பேணுவதற்கு அரசிடம் இருந்த அமெரிக்க டொலர் கை யிருப்பு வெகுவாகத் தீர்ந்து போனமையே ஆகும். இதன் எதிரொலி அமெரிக்க டொலருக்கெதிரான ரூபாவின் பெறு மதியை வீழ்ச்சியடையச் செய்தது முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்திருக்கின்றமை நாட்டின் இறக்குமதிச் செலவினை அதி கரிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதுடன் உள்நாட்டுப் பண வீக்கமும் அதிகரிக்கும். இதன் எதி ரொலியாகவே அரசு எங்கே கைவைப்பது என்று தெரியாமல் இலங்கையின் இறக்கு மதிச் செலவில் அதிக பங்களிப்பு வகிப்பது வாகனங்கள் இறக்குமதி எனக் கூறி வாகனங்களுக்கான இறக்குமதித் தீர்வையினை அதிகரித்தமையும் குறிப் பிடத்தக்கது. ஆனால் இன்று வாகனங்கள் கூட ஆடம்பரப் பொருள் என்பதில் இருந்து அத்தியாவசியப் பொருளாக மாறிவருவதனால் அத்தகைய திட்டம் கூட வெற்றியளிக்குமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இவ்விதம் இலங்கையில் பொருளாதார உறுதிப் பாட்டினை அடைந்து கொள்ளுதல் என்பதும் பெரும் சவாலாகவே உள்ளது.

### நியாயத்துவம்

வருமானப்பரம்பலில் காணப்படும் வேறு பாட்டினை குறைந்த மட்டத்தில் பேணு தல் நியாயத்துவம் ஆகும் இங்கு நியாயத்துவம் என்பது அனைவரும் சம னான வருமானம் பெறவேண்டும் என்பதி னைக் குறித்து நிற்கவில்லை மாறாக இயன்ற அளவுக்கு சமநிலைப் பங்கீடு இடம்பெற வேண்டும் எனக் கருதப்படு கின்றது. வருமானப் பங்கீட்டினை மேற்க் கொள்ளுவதற்கு அரசு பொதுவாக பின் வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

- வறியவர்கள் நுகரும் அத்தியாவ சியப் பொருட்களுக்கு குறைந்த அல்லது பூச்சிய வரியினை விதிக்கும் அதேவேளை செல் வந்தர்கள் நுகரும் பொருட்க ளுக்கு அதிக வரியினை விதித்து அவ்வரி வருமானத்தினை வறிய வர்களுக்கு நுகர்வுமானியம்,

வறுமை நிவாரணம் போன்ற வடிவில் வழங்குதல்

- வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் மீது படிப்படியாக அதிகரித்துச் செல்லும் அடிப்படையில் வரி விதிப்பினை மேற்க் கொள்ளுதல்.
- சொத்துரிமை தொடர்பான உச்ச வரம்பு விதித்தல் முலம் செல்வந்தர்கள் வைத்திருக்கும் சொத்துக்களை மட்டுப்படுத்துவதுடன், காணிச் சீர்திருத்தம், குத்தகை விவசாயிகளுக்கு உரிமம் வழங்குதல், சொத்துக்களை மீள் பங்கீடு செய்தல் போன்றவற்றின் மூலம் ஏழைகளுக்கு சார்பான கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும்
- தொழிலாளர்கள் சார்பாக இழிவுக் கூலிச்சட்டத்தினை கடுமையாக அமுல்செய்து தொழிலாளர்கள் உயர்ந்த பாதுகாப்புப் பெற உதவுல்.

இவ்விதம் பல்வேறு கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாடு வருமான சமமின்மையை நீக்க முடியும் என்பதுடன் இத்தகைய கொள்கைகளைப் பின்பற்ற இலங்கை தவறவும் இல்லை காலத்துக் குக் காலம் பல்வேறு கொள்கைகளைப் பின்பற்றியிருப்பினும் அவை அனைத்தும் ஒரு அரசியல் மயப்படுத்தப்பட்ட செயற் பாடாக இருந்தமையால் அவை வெற்றி யளிக்கத் தவறிவிட்டன. இதற்கு உதார ணமாக அரசினால் மேற்க் கொள்ளப்பட்ட நிலச்சீர்திருத்தங்கள், குடியேற்றத் திட்டங்கள் போன்றவற்றைக் கூறலாம் இத்திட்டங்கள் முழுக்க முழுக்க அரசியல் மயப்படுத்தப்பட்டதாக இருந்தமையே இதன் தோல்விக்குக் காரணமாகும் குறிப் பாக அரசு தமக்கு வாக்குப்பலம் சேர்த்த வாக்காளர்களுக்கும், தமக்கு கைக் கூலிகளாக வேலைபார்த்தவர்களுக்கும் தேர்தல் காலங்களில் முன்னின்று உழைத்தவர்களுக்குமே நிலச்சீர்திருத் தத்தின் ஊடாக நிலங்களைப் பெற்றுக் கொடுத்தது என்பதுடன் அவர்கள் விவசாயம் மேற்கொள்வதற்கு வேண்டிய நெல்விதைகள், உரமானியங்கள் மற்றும் ஏனைய வசதிகளையும் செய்து கொடுத் தது ஆனால் பயனாளிகள் தாம் உற்பத்தி களை செய்யாமல் தமது காணிகளை ஏழைகளுக்கு விற்றும் குத்தகைக்கு வழங்கியும் தாம் இலவசமாகப் பெற்ற உதவிகளை ஏழைகளுக்கு பணத்துக்கு விற்று வந்தார்கள். பலர் தமக்கு வழங்கப் பட்ட காணிகளுக்கு நேரடியாக சென்று பார்க்கவே இல்லை என்றும் குறை கூறப்படுகின்றது. அந்தளவுக்கு அத்திட்டம் உரியவர்களைச் சென்றடையவில்லை என்று கூறப்படுகின்றது இதனாலையே உள்நாட்டு உற்பத்தியும் பெருகவில்லை ஏழைமக்களின் வருமானமும் அதிகரிக்க வில்லை.

அதேபால் குடியேற்றத்திட்டம் என்பதும் நீதியானதாக இடம்பெறவில்லை என்றும் குறைகூறப்படுகின்றது குறிப்பாக வடக்குக் கிழக்கு நிலப்பரப்பில் பெரும் பான்மை இனத்தவரையும் குடியமர்த்த வேண்டும் தமிழ் மக்களின் பூர்வீகம் அழிக் கப்பட வேண்டும் என்ற உள்நோக்கத்துட னேயே அது இடம் பெற்றதாகவும் பல பொருளியலாளர்கள் கருத்துக் கூறியுள் ளார்கள். இத்தகைய ஒரு அரசியல் மயப் படுத்தப்பட்ட செயற்பாட்டினால் அரசு வரு மானப்பரம்பலில் சமநிலையை ஏற்படுத் தத் தவறிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இதைவிட நாட்டின் வரிக்கட்ட மைப்பினை நோக்கும் போது ஏழைகள் நுகரும் பொருட்கள் மீதான வரி உயர் வாகவே காணப்படுகின்றது. தாம் அதிக வருமானம் உழைப்பதற்காகவும், மக்கள் வரி செலுத்துவதில் இருந்து விலகுவதை

தடுப்பதற்காகவுமே இவ்விதம் நெகிழ்ச்சி குறைந்த அத்தியாவசியப் பொருட்க ளுக்கு உயர் வரியினை விதிக்கின்றது. இந்நிலையில் வருமான சமமின்மையைக் குறைத்து நீயாயத்துவத்தினை ஏற்படுத் துவது என்பது சாத்தியக் குறைவாகவே காணப்படுகின்றது

இதைவிட வடக்குகிழக்கில் இடம் பெற்ற உச்சக்கட்ட போரில் தமது சொத்துக்களை இழந்து நிற்கும் மக்களின் வருமானத்தினை உயர்த்துவதற்கென்று இதுவரை ஒரு செயற்திறனான திட்டம் முன்வைக்கப்பட்டதா என்றால் அது கூட கேள்விக்குறியாகவே உள்ளது. உண்மை யில் யுத்த முடிவென்பது செல்வந்தர் களை மேலும் செல்வந்தர்களாக மாற்று வதற்கான ஒரு வழியைத் திறந்துள்ளது என்பதைத் தான் யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங் களும் விளக்கி நிற்கின்றன.

**முடிவுரை**

மேலே கூறப்பட்ட விடயங்களில் இருந்த புரிந்து கொள்ளக் கூடிய விடயம் யாதெனில் இலங்கை போன்ற அபிவிருத்தி யடைந்து வரும் ஜனநாயக நாடுகளில் அபிவிருத்தி நோக்கிய ஒரு பருநிலைப் பொருளாதாரக் கொள்கைகளை முன் வைப்பது என்பது மிக கடினமானதொரு விடயமாகும். இருப்பினும் நாட்டின் தலை வர்கள் தனித்து ஆட்சி பீடத்தினைக் கைப்பற்றுவதற்காக என்று இல்லாமல் பொருளாதார நோக்கத்தினை முக்கிய நோக்கமாகக் கொண்டு பருநிலைப் பொருளாதாரக் கொள்கைகளை முன் வைக்கும் போது நாட்டு மக்களும் குறுங் கால நலனுக்கு மண்டியிடாது நீண்ட கால நோக்கத்தில் சிந்தித்து செயற்படு வது அவசியமாகும்.


உசாத்துணை நூல்கள்:

1) வி. நித்தியானந்தம், (1989), "1948-56 இலங்கை அரசியல் பொருளாதாரம்",
2) வி. நித்தியானந்தம், (2003) "இலங்கையின் பொருளாதார வரலாறு : வடக்கு – கிழக்கு பரிமாணம் "
3) பொருளியல் நோக்கு (2011மார்கழி – 2012 தை) " பொருளாதார வளர்ச்சி தொடர்பான கொள்கைப் பிரச்சினைகள்
4) வி. நித்தியானந்தம் ( 2008 ) , " பருநிலைப் பொருலியல் ஓர் அறிமுகம்
5) Richard G. Lipsey (1972 ) "An introduction to positive Economics" pp. 689-705
6) இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2012

# பிஃலிப்ஸ் வளைகோடு

## - ஒரு கோட்பாட்டு விளக்கம்

*Mr. N. Natheeskumar*
*Economics special*
*2007/ A/ 135*

**பிஃலிப்ஸ் வளைகோடு - ஒரு கோட்பாட்டு விளக்கம்.**

பி∴லிப்ஸ் வளைகோடு பணவீக்கம் விகிதத்திற்கும், வேலையின்மை விகிதத்திற்கும் மத்தியிலான எதிர்கணிய தொடர்பினை விளக்குவதாக உள்ளது. பி∴லிப்ஸ் வளைகோடு வேலையின்மை, பணவீக்கத்திற்குமிடையிலான குறுகிய கால உறவு முறையின் மறுஉருவம் என்பதாகவே வர்ணிக்கலாம் என ஜோர்ஸ் அக்கர் லொங் குறிப்பிடுகின்றார். 1958ம் ஆண்டு நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த A.W.Phillips எனும் பொருளியல் அறிஞர் Economica எனும் பிரித்தானிய பொருளியல் சஞ்சிகையில் "பிரித்தானியாவில் வேலையின்மைக்கும் பண வேதனங்களிலான விகிதாசார மாறுபாட்டிற்குமான தொடர்பு" எனும் ஆய்வுக் கட்டுரையினை வெளியிட்டார். இக் கட்டுரையில் பி∴லிப்ஸ் வேலையின்மை விகிதாசாரத்திற்கும் பணவீக்க விகிதத்திற்கும் இடையே நிலவியிருக்கக் கூடிய எதிர்க் கணியத் தொடர்பினை எடுத்துக் காட்டினார். அதாவது பி∴லிப்ஸ் முன்வைத்த தரவுகள் பிரித்தானிய பொருளாதாரத்தின் வேலையின்மை உயர்வாய் இருந்த வருடங்கள் குறைந்தளவான பணவீக்க அனுபவத்தையும் பெற்றிருந்தார். இத்தகைய சூழ்நிலையில் Paul samuelson, Robert solow என்போர் American Economic Review என்கின்ற அமெரிக்க பொருளியல் சஞ்சிகையில் "பணவீக்க எதிர்க்கொள்கைப் பகுப்பாய்வு" எனும் தணிப்பில் Phillips கூறிய அதே கருத்தினை அமெரிக்க பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியிட்டனர். இவ்வாறாக பணவீக்கத்திற்கும் வேலையின்மைக்கும் மத்தியில் நிலவியிருந்த எதிர்க் கணியத் தொடர்பைக் குறிக்கும் வகையில் தாம் முன்வைத்த எண்ணக் கருவுக்கு பி∴லிப்ஸ் வளைகோடு என முன் வைத்தனர். பி∴லிப்ஸ் வளைகோடானது கொள்கை வகுப்போருக்கு நாடு ஒன்றில் இடம்பெறக் கூடிய பொருளாதார சாத்தியங்கள் பல வற்றை பட்டியலிட்ட முறையிலேயே சுட்டிக் காட்டுவதாக அமைகிறது.




புள்ளி A ஆனது உயர்ந்த வேலையின்மை விகிதத்தையும் குறைந்த பணவீக்கத்தையும் புள்ளி B ஆனது உயர்ந்த பண வீக்க விகிதத்தினையும் குறைந்த வேலை யின்மை விகிதாசாரத்தையும் கொண்டிருப்பதையும் காட்டுகிறது.


### பி∴லிப்ஸ் வளைகோடும் மொத்த கேள்வி மொத்த நிரம்பல் வளைகோடும்

பி∴லிப்ஸ் வளைகோட்டின்படி குறுகிய காலத்தில் பொருளாதாரம் ஒன்றில் எழக் கூடிய பணவீக்கம், வேலையின்மை இணைப்புக்களேயாகும். ஒரு நாட்டுக்கான மொத்த கேள்வி வளைகோட்டில் ஏற்படும் நகர்வுகள் அந்நாட்டுப் பொருளாதாரத்தை குறுகிய கால நிரம்பல் வளைகோட்டுப் பாதை வழியே எடுத்துச் செல்லும்போது இவ்வாறான இணைப்புக்கள் தோன்றும். வெளியீடு விரிவடையுமாயின் கூடியளவான தொழில் வாய்ப்புக்கள் உருவாகி வேலை யின்மை குறைவடைகிறது. அதேபோல விலை மட்டம் உயர்கின்ற போது அது உயர்ந்தளவிலான பணவீக்க விகிதத் திற்கும் இட்டுச் செல்கிறது. எனவே மொத்த கேள்வியில் உண்டாகும் நகர்வுகள் பொரு ளாதாரத்தில் பணவீக்கத்தையும், வேலை யின்மையையும் ஒன்றுக்கு ஒன்று எதிரான நிலைக்கு இட்டுச் செல்கிறது.

(அ)




(ஆ)




வரைபு (அ) படி புள்ளி A யில் இயங்குவதாயிருக்கும் வெளியீடு, விலை மட்டம் என்ற இரண்டும் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக முறையே 7500 ஆகவும் 102 என்பதாகவும் காணப்படுகின்றன. மொத்தக் கேள்வி உயர்வாக இருக்குமாயின் இப்பொரு ளாதாரம் புள்ளி B இல் இயங்கிக் கொண் டிருக்கும் வெளியீடு விலைமட்டம் முறையே 8000, 106 என்பதாகக் காணப்படும். வரை படம் (ஆ) படி பி∴லிப்ஸ் வளைகோட்டில் புள்ளி A மொத்தக் கேள்வி குறைவாக விருக்குமிடத்து உயர்ந்த வேலையின்மை யையும் (7%) குறைந்த பணவீக்கத்தையும் (2%) புலப்படுகிறது. மறுபுறம் புள்ளி B என்பது மொத்த கேள்வி இருக்கும் நிலை யில் வேலையின்மை குறைவானதாகவும் (4%) பணவீக்கம் உயர்வாகவும் (6%) இருப்பதைக் காட்டுகிறது.

### பி∴லிப்ஸ் வளைகோட்டின் நகர்வுகள்


பி∴லிப்ஸ் வளைகோடு ஒரு பொரு ளாதாரத்திலான கொள்கை வகுப்போருக்கு வேலையின்மை - பணவீக்க இணைப்புக் களின் பட்டியலை இட்டுக்காட்டுவதாக உள்ளது. எனினும் பி∴லிப்ஸ் வளைகோடு தரும் இந்த முடிவு காலத்தை மீறி நிலைத்து நிற்கக் கூடியதொன்றா? அது கொள்கை வகுப்போரை எந்தளவிற்கு நம்பகத்தன்மை வாய்ந்தது? என்கின்ற சர்ச்சைகள் காணப்படு கின்றன.

### நீண்டகால பி∴லிப்ஸ் வளைகோடு


1968ம் ஆண்டு Miltor friednam எனும் பொருளியலாளர் American Ecomic Review

எனும் சஞ்சிகையில் நாணயக் கொள்கையின் விகிதாசாரம் எனும் தலைப்பில் எழுதியிருந் தார். இதில் நாணயக் கொள்கை செய்யக் கூடியது யாது? நாணயம் செய்ய முடியாதது யாது? எனும் உபதலைப்புக்கள் காணப்பட் டன. இதில் நாணயக் கொள்கை ஒரு குறுகிய காலத்திற்கன்றி நீண்ட காலத்தில் செய்ய முடியாததொன்று யாதெனில் பி∴லிப்ஸ் வளைகோட்டில் வேலையின்மையும் பணவீக்கமும் இணைகின்ற ஒரு புள்ளி யைத் தேர்ந்தெடுப்பதாகுமென பி∴ரீட்மன் வாதிட்டார். அதே சமயத்தில் Edwund phelps எனும் பொருளியல் அறிஞர் நீண்ட காலத் தில் வேலையின்மைக்கும் பணவீக்கத்திற் கும் இடையில் ஈடுகொடு தன்மையொன்று நிலவுகின்றது என்பதை மறுத்துரைக்கும் கட்டுரை யொன்றை வெளியிட்டார். பீ∴ரீட்மன், பெ∴ல்பஸ் ஆகிய இருவரும் பண நிரம்பல் வளர்ச்சிதான் பணவீக்கத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணி அது வெறுமனே நாணய வளரச்சிக்கு விகிதாசாரமாக பொருளாதாரத்தின் விலைகளையும் பெயரளவு வருமானங்களையும் மாற்றிவிடுகின்ற செயற்பாட்டையே செய்கின்றது என்பதாகும். அதேநேரம் நீண்ட காலத்தின் பின் பணவீக்க விகிதம் என்பது பொருளாதாரத்தின் வேலையின்மை விகிதத்துடன் தொடர்புபட்ட தென்று கொள்வதற்கு எவ்வித நியாயப்பாடும் இல்லை என முடிவு செய்தார்.

இதனடிப்படையில் பி∴ரீட்மன், பெ∴ல்பஸ் ஆகியோரின் கருத்துப்படி நீண்ட காலத்தில் வேலையின்மைக்கும் பணவீக்கத்திற்கும் மத்தியில் ஈடுகொடு தன்மை எதுவும் கிடையாது பணவீக்க விகிதம் என்பது பண நிரம்பலின் வளர்ச்சி விகிதத்தினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. பணவீக்க விகிதம் எவ்வாறு இருப்பினும் வேலையின்மை விகிதமானது அதன் இயற்கை விகிதத்தினை நோக்கி ஈர்க்கப்படுகின்றது. அதன் வாயிலாக நீண்ட கால பி∴லிப்ஸ் வளைகோடானது நிலைக்குத்தச்சிற்கு சமாந்தரமாகக் காணப்படுகின்றது.



வெளியீட்டின் இயற்கை வெளியீடு விகிதம்



வேலையின்மையின்
வேலையின்மை இயற்கை விகிதம்

நீண்ட கால பி∴லிப்ஸ் வளைகோட்டுக்கும் AD-AS மாதிரியுருவுக்குமிடையிலான தொடர்பு

இரு சட்டங்களைக் கொண்ட இந்த வரைபடத்தில் சட்டம் (அ) மொத்தக் கேள்வி - மொத்த நிரம்பல் மாதிரியுருவினை பிரதிபலிக்கின்றது. விரிந்த நாணயக் கொள்கையின் கீழ் மொத்தக் கேள்வி வளைகோடானது $AD_1 \rightarrow AD_2$ என்பதாக வலது புறம் நகரும்போது பொருளாதாரத்தின் சமநிலைப் புள்ளி A யிலிருந்து B இற்குச் செல்கிறது. அத்துடன் விலை மட்டமும் $P \rightarrow P_2$ என்பதாக உயர்கிறது. ஆனால் வெளியீட்டின் அளவில் மாற்றமில்லை. சட்டம் (ஆ)

நீண்ட கால பி∴லிப்ஸ் வளைகோட்டைச் சித்திரிக்கின்றது. இதில் விரிந்த நாணயக் கொள்கையின் கீழ் வேலையின்மையில் எவ்வித மாற்றமும் இன்றிக் குறிப்பிட்ட பொருளாதாரத்தினை ஒரு தாழ் நிலையிலான பணவீக்கத்திலிருந்து உயர் நிலையிலான பணவீக்கத்திற்கு இட்டுச் செல்கிறது. அதாவது நிலைக்குத்திற்குச் சமாந்தரமான நீண்ட கால மொத்த நிரம்பல் வளைகோடும் நீண்டகால பி∴லிப்ஸ் வளைகோடும் காணப்படுவதனால் ஒரு நாட்டின் நாணயக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்கள் அந்நாட்டின் பெயரளவு மாறிகளாகிய விலை மட்டத்தையும், பணவீக்கத்தினையும் செல்வாக்கிற்கு உட்படுத்தலாமே தவிர மெய்யளவு மாறிகளாகிய வெளியீட்டையும் வேலையின்மையையும் பாதிக்காது ஆகும். அந்நாட்டு மத்திய வங்கியினால் நாணயக் கொள்கையினால் பின்பற்றினாலும் வெளியீடும் வேலையின்மையும் நீண்ட காலத்தில் அவற்றின் இயற்கை விகிதத்திலேயே காணப்படும்.


## எதிர்பார்க்கைகளும் குறுங்கால பி∴லிப்ஸ் வளைகோடும்

பி∴ரீட்மன், பெல்ஸ் என்போர் நீண்ட காலத்தில் பணவீக்கத்திற்கும் வேலையின்மைக்கும் மத்தியில் ஈடுகொடு தன்மை இல்லை எனக் கூறுகின்றனர். ஆனால் பி∴லிப்ஸ், சாமுவெல்சன், சோலோ ஆகியோர் பணவீக்கத்திற்கும் வேலையின்மைக்கும் இடையில் எதிர்க்கணியத் தொடர்பு உண்டு என்றார். பி∴ரீட்மன், பெ∴ல்ஸ் ஆகியோர் பி∴லிப்ஸ், சாமுவெல்சன், கோலோ ஆகியோரின் கருத்திற்கு ஒத்துப் போகக் கூடிய வகையில் பணவீக்கத்திற்கும், வேலையின்மைக்கும் இடையில் எதிர்க்கணியத் தொடர்பு குறுகிய காலத்திற்கு பொருத்தமானதாகும். ஆனால், நீண்டகாலத்தில் நாணயக் கொள்கையின் கீழ் வேலையின்மை தனது இயற்கையான விகிதத்திற்குத் திரும்பவே செய்யும் மாறாக இது பணவீக்கத்திற்குத் தான் பொருளாதாரத்தை இட்டுச் செல்லும்.

குறுகிய காலத்தில் மொத்த நிரம்பல் வளைகோடு மேல்நோக்கிய சரிவு கொண்டது. அதாவது விலை மட்டம் அதிகரிக்கும் போது நிறுவனங்கள் தமது பொருட்கள் சேவைகளின் நிரம்பல் வளைகோடு நிலைக்குத்தச்சிற்கு சமாந்தரமாக காணப்படும். நீண்ட காலத்தில் விலைமட்ட மாறுபாடு நிறுவனங்கள் நிரம்பல் செய்யும் தொகையினை பாதிப்பதில்லை. குறுகிய காலத்தில் ஒட்டு தேவைகள், ஒட்டு விலைகள், சார்பு விலைகள் பற்றியும் தவறான புல்லுணர்வுகள் காரணமாக குறுகிய கால நிரம்பல் வளைகோடு மேல் நோக்கிச் செல்கிறது. ஆனால் நீண்ட காலத்தில் இவை எல்லாமே மாறுபடக் கூடியவையாகும். குறுங் காலத்தில் காணப்படும் விலை மட்டத்திற்கும் வேலையின்மைக்குமிடையிலான நேர்க் கணியத் தொடர்பினை பி∴ரீட்மன், பெ∴ல்ப்ஸ் , பி∴லிப்ஸ் வளைகோட்டுக்கு பிரயோகித்தனர். இதேபோல நீண்ட கால மொத்த நிரம்பல் வளைகோடு நிலைக் குத்தச்சிற்கு சமாந்தரமாகக் காணப்படுகிறதோ அதேபோல நீண்ட காலத்தில் பி∴லிப்ஸ் வளைகோடும் காணப்படும் என்றனர்.

குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் பணவீக்கம் வேலையின்மைக்கும் இடையிலான தொடர்பினை விளக்குவதற்கு பி∴ரீட்மன், பெ∴ல்ப்ஸ் என்போர் எதிர்பார்க்கைப் பணவீக்கம் என்பதனை அறிமுகஞ் செய்தனர். இதனடிப்படையில் குறுங்காலத்தில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கமானது நாணய மாற்றங்களின் கீழ் வெளியீடு, விலைகள், பணவீக்கம், வேலையின்மை இவ்வாறு பி∴லிப்ஸ், சாமுவெல்சன், சோலோ ஆகியோர் கூறிய பி∴லிப்ஸ் வளைகோட்டுக்கு பிரீட்மன், பெ∴ல்ப்ஸ் விளக்கம் தந்தனர். நீண்ட காலத்தில் மத்திய

வங்கி உருவாக்க முனையும் பணவீக்கமானது எத்தகைய விகித அளவு கொண்டிருந்தாலும் இது மக்களின் எதிர்பார்க்கைக்கு உட்பட்ட ஒன்றாகவே காணப்படும். இந்நிலையில் பண நிரம்பல் மாறல்கள் மொத்தக் கேள்வியில் உண்டாக்கக் கூடிய




P - விரிவாக்கத் தன்மை கொண்ட கொள்கையானது பொருளாதாரத்தைக் குறுகிய கால பி:.லிப்ஸ் வளைகோட்டில் வழி எடுத்துச் செல்கிறது.

Q - நீண்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம் விரிவடைந்து வலது புறமாக நகர்கின்றது.

எந்த மாற்றமும் பொருளாதாரத்தில் பொருட்கள், சேவைகளின் வெளியீட்டைப் பாதிப்பதில்லை. எனவே நீண்ட காலத்தில் வேலையின்மையானது தனது இயற்கையான விகிதத்திற்கு திரும்பிவிடும் என பி:.ரிட்மன் பெ:.ல்ப்ஸ் முடிவு செய்தனர். இதனை


பண வீக்கத்தின் எதிர்பார்க்கை விகிதம் எந்தளவிற்கு உயர்வாக உள்ளதோ அந்தளவிற்குப் பணவீக்கத்திற்கும் வேலையின்மைக்கும் மத்தியிலான குறுகிய கால ஈடுகொடு தன்மையும் கூடுதலாக இருக்கும். வரைபின்படி புள்ளி A இல் எதிர்பார்க்கப்படும் பணவீக்கம், நிலவுகின்ற பணவீக்கம் என்ற இரண்டுமே குறைவாக உள்ளது. அத்துடன் வேலையின்மையும் அதன் இயற்கை விகிதத்தில் காணப்படும். இந்நிலை யில் குறிப்பிட்ட பொருளாதாரத்திற்கு பொறுப்பாகவுள்ள மத்திய வங்கியானது விரிந்த நாணயக் கொள்கையினைப் பின்பற்றுமாயின் குறுகிய காலத்தில் புள்ளி A இலிருந்து புள்ளி B க்கு அசைந்து செல்கிறது. புள்ளி B யில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கம் உயர்வானதாகும். இந்நிலையில் வேலையின்மை அதன் இயற்கை விகிதத்திலும் குறைவாக உள்ளது. நீண்ட காலத்தில் பணவீக்கம் உயர்வடைந்து பொருளாதாரப் புள்ளி C இனைச் சென்றடைகின்றது. இப் புள்ளியில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கம், நிலவுகின்ற பணவீக்கம் என்ற இரண்டும் உயர்வாக உள்ளன. அத்துடன் வேலையின்மையும் அதன் இயற்கை விகிதத்திலிருந்து திரும்பி விடுகின்றது. மேற் கூறிய செய்முறையின் அடிப்படையில் தான் பி:.ரீட்மன் பெ:.ல்ப்சும் கொள்கை வகுப்போர் பணவீக்கத்திற்கும் வேலையின்மைக்கும் மத்தியில் ஈடுகொடு நிலை ஒன்றினை எதிர்கொள்வது உண்மையாயினும் அது தற்காலிகமானது என முடிவு செய்தனர்.

### பி:.லிப்ஸ் வளைகோட்டின் நகர்வில் நிரம்பல் அதிர்ச்சியின் வகிபாகம்

1968ம் ஆண்டு பி:.ரிட்மன், பெ:.ல்ப்ஸ் ஆகிய இருவரும் ஒரு பொருளாதாரத்தின் எதிர்பார்க்கைப் பணவீக்கத்தில் உண்டாகக் கூடிய மாற்றங்கள் குறுகிய கால பி:.லிப்ஸ் வளைகோட்டை நகர்வுக்கு உட்படுத்தும் என்ற உண்மையினை முன்வைத்தனர். ஆனால், 1970களின் பின்னர் பி:.லிப்ஸ் வளைகோட்டில் ஏற்படக்கூடிய நகர்வுக்கு இன்னுமொரு காரணம் மொத்த நிரம்பலில்

ஏற்படும் அதிர்ச்சியாகும். 1974இல் ஏற்பட்ட உலக எண்ணெய் விலையில் ஏற்பட்ட பாரிய உயர்வு நிரம்பல் அதிர்ச்சிக்கான ஓர் எடுத்

(அ)





யீட்டு வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. இவ்வாறு விலையுயர்வு, வெளியீட்டு வீழ்ச்சி என்ற இரண்டும் இணைந்த வகையில் ஏற்படுவது தேக்கவீக்கம் என அழைக்கப் பட்டது.

வரைபடம் (அ) படி மொத்த கேள்வி, மொத்த நிரம்பல் மாதிரியினைச் சித்தரிக் கின்றது. எண்ணெய் விலை உயர்வின் காரணமாக மொத்த நிரம்பல் வளைகோடு $AS_1$, இலிருந்து $AS_2$ இடது புறமாக நகரும் போது வெளியீடானது $y_1$ இருந்து $y_2$ ஆக குறைவடைகிறது. வரைபடம் (ஆ) இன்படி பணவீக்கத்திற்கும் வேலையின்மைக்கும் மத்தியிலான ஈடுகொடு நிலையினை புலப்படுத்துகிறது. மொத்த நிரம்பலில் ஏற்பட்ட குறைவானது குறைந்த வேலை யின்மை, குறைந்த பணவீக்கத்தைக் கொண்ட புள்ளி A யிலிருந்து கூடிய வேலை யின்மையையும் கூடிய பணவீக்கமும் கொண்ட B புள்ளிக்கு எடுத்துச் செல் கின்றன. இத்தகைய நிலையானது நாட்டினது கொள்கை வகுப்பாளரை உயர்ந்த பணவீக் கத்திற்கும் உயர்ந்த வேலையின்மைக்கும் எதிராக போராட வேண்டிய நிலையினை உருவாக்குகிறது. இத்தகைய நிலை தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பது மக்களின் எதிர்பார்க்கையில் பண வீக்கத்திலேயே தங்கியுள்ளது. நிரம்பல் அதிர்ச்சி காரணமாக ஏற்பட்ட பணவீக்கத் தின் உயர்வு தற்காலிகமானது எனக் கொள் வார்களாயின் எதிர்பார்க்கை பணவீக்கத்தில் மாறுபாடு எதுவும் ஏற்படாது பி∴லிப்ஸ் வளை கோடு தனது பழைய நிலைக்குத் திரும்பி விடும். மாறாக மக்கள் நிரம்பல் அதிர்ச்சி நிலையானது என கருதுவார்களாயின் அத்த கைய பி∴லிப்ஸ் வளைகோடு கொள்கை வகுப்பாளரை சிக்கல் தன்மைக்கு உட்ப டுத்தி விடுகிறது.

துக்காட்டாகும். இது பெற்றோலிய உற்பத்தி, வெப்பமூட்டல் எண்ணெய் உற்பத்தி, ரயர் உற்பத்தி என்பவை உட்பட பல்வேறு பொருட்களின் உற்பத்தியில் குறுக்கிட்டு உற்பத்திச் செலவைக் கூட்டியது. இது வெளி

(ஆ)




Referecne

1. Vaish.M.C., 2003 Monetary Theory
Fifteenth Revised
page 58-66

2. Patrick Mainford and David Peel, 1983
Rational Expectations and the New Marco Economics
Page 95-116

3. Rudiger Dorn Busch and S.Tanley Fischer 1994
Macro Economics
Sixth Edition.

4. Nithiyananthan.V.2008
Macro Economics - An Introduction
Kumaran Publishers.

# பொருளியலில் எதிர்பார்க்கை கோட்பாடுகள்

*Miss. P. Suveedda*
*Economics special*
*2007/A/ 247*

1. அறிமுகம்(Introduction)

பொருளாதார தீர்மானங்களினை வினைத்திறனான வகையில் வரையறுப்ப தில் எதிர்பார்க்கையின் (Expectation) பங்கு என்பது மிகப்பிரதான ஒன்று என்ப தனை பல பொருளியலாளர்கள் வெளிப் படுத்தியுள்ளனர். கடந்த கால அனுப வங்கள் மற்றும், நிகழ் கால நிதர்சனங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தினை எதிர்வு கூறுவது என்பது பொருளாதார செயற்பாடுகளினை மேலும் வலுப்படுத்த உதவும் (Moris Olivares, 2009) கெய்ன்ஸ் எதிர்பார்க்கையினை அடிப்படையாகக் கொண்டு பணத்திற்கான கேள்வியை புதிய கோணத்தில் நோக்கி அதன் எல்லையை விரிவாக்கி இருந்தார் தொடர்ந்து வந்த பொருளியலறிஞர்க ளான மில்ரன் பீரிட்மன் மற்றும் ரொபோட் லூகாஸ் ஆகிய இருவரும் எதிர்பார்க்கை தொடர்பில் முறையே உள்ளீர்க்கப்பட்ட எதிர்பார்க்கைக் கோட்பாடு, பகுத்தறிவான எதிர் பார்க்கைக் கோட்பாடு ஆகிய கோட்பாடுகளினை முன்வைத்திருந்தனர். அந்த வகையில் இவர்களால் வெளிப்படுத் தப்பட்ட எண்ணக் கருக்களின் பிரகாரம் எதிர்கால பொருளாதார செயற்பாடுகள் தொடர்பிலான ஓர் பகுத்தறிவான எதிர் பார்க்கையானது நாணய கொள்கையை வினைத்திறனற்ற ஓர் கருவியாக மாற்றி விடுகின்றது அவ்வகையில் தான் சரியான எதிர்கூறல் காணப்படுமிடத்து அதற்கு எதிராக மக்கள் எதிர் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது பணம் ஓர் நடு நிலைத் தன்மையான மாறியாக மாற்றப்ப டுகின்றது (Money is neutral) என்பதே இவர்களின் கருத்துக்களில் இருந்து வெளிப்படும் சாராம்சம் ஆகும்.

2. கெய்ன்சும் எதிர்பார்க்கையும் (Keynes and Expectation )

நவீன பொருளியலின் தந்தை எனப்படும் கெயன்ஸ் முதன்முதல் எதிர் பார்க்கை தொடர்பில் அதிக முக்கியத துவம் அளித்திருந்தார். இவர் நிகழ்கால வட்டி வீதம் தொடர்பான எதிர்கால எதிர் பார்க்கையானது பிணையங்களின் சந்தையின் ஏற்ற இறக்கங்களினைத் தீர மானிப்பதோடு, பணச்சந்தையில் பணத்துக்கான கேள்வியிலும் கணிசமான தாக்கத்தை செலுத்தும் என்றார் அதாவது கெய்ன்ஸ் குறிப்பிடும் உத்தேச நோக்கம் குறித்த பணத்துக்கான கேள்வியானது (Speculative demand) பணத்தினை வருமானம் தரும் நிதிச் சொத்துக்களின் மீது முதலிட முடியும் என்ற எண்ணக்

கருவில் இருந்து தோன்றியதாகும் அதாவது பணத்திற்கான பதிலீடாக பிணைகளினை சுட்டிக் காட்டி,நிகழ்கால வட்டி வீதம் குறைவாக காணப்படுமிடத்து எதிர்காலத்தில் இது உயர்வடையலாம் என்று எதிர்பார்த்து முதலீட்டாளன் பணத்தை பிணைகளில் முதலிடுவதனை தவிர்த்து கையில் பணமாக வைத்திருக்கின்றான். மாறாக நிகழ்கால வட்டி வீதம் உயர்வாக காணப்படின் பிணையங்களில் அதிக பணத்தினை முதலீடு செய்ய முன் வருகின்றான். இவ்வாறான தீர்மானமானது எதிர்காலத்தில் முதலீடுகளால் பெறப்படும் இலாப, நட்டங்களினை ஒப்பிடுவதற்கு முதலீட்டாளனுக்கு உதவுகிறது.குறித்த எதிர்பார்கையானது பணச்சந்தை மற்றும் பிணையங்களின் சந்தையில் ஓர் காத்திரமான விளைவினை பிரதிபலிக்க கூடிய ஒன்றாக உள்ளது. அந்த வகையில் வட்டி வீதம் மிககுறைவாக அல்லது பூச்சியத்தினை அண்மித்து காணப்படும் போது முதலீட்டாளன் வருமானம் முழுவதனையும் பணமாக வைத்திருக்கும் நிலையில் வட்டி வீதம் சார் முதலீட்டின் நெகிழ்ச்சியானது மிகக் குறைவாகவோ அல்லது பூச்சியமாகவோ அமையாலாம் இதனை கெய்ன்ஸ் திரவப் பொறி நிலை (Liquidity trap)என்கிறார். எதிர்பார்க்கை காரணமாகத் தோன்றும் திரவப் பொறி நிலையானது, நாணய கொள்கையின் பிரயோகத்தை செயற்திறனற்றதாக்கி விடுகின்றது. அந்த வகையில் தான் எதிர்கால வட்டி வீதம் தொடர்பான எதிர்பார்க்கையானது திரவப் பொறிநிலை ஊடாக நீண்ட காலத்தில் பணம் ஒரு நடுநிலைத் தன்மையானது என்பதனை கெய்ன்ஸ் ஏற்றுக் கொள்கிறார்.தொடர்ந்து எதிர்பார்க்கையோடு ஆபத்து மற்றும் நிச்சயமற்ற தன்மை என்பவற்றினை இணைக்கும் கெய்ன்ஸ் ஓர் பகுத்தறிவான முதலீட்டாளன் தனது முதலீட்டுத் தீர்மானத்தின் போது நம்பிக்கையான காரணியாக குறிப்பிடப்படும் வட்டி வீதம் தொடர்பில் கவனம் செலுத்தும் அதேவேளை அவ நம்பிக்கையான காரணிகள் எனப்படும் ஆபத்து (Risk) மற்றும் நிச்சயமற்ற தன்மை (Uncertainty) என்பவற்றினையும் அதிகம் கவனத்தில் கொள்கிறான் என்றார். அந்தவகையில் வட்டிவீதம் குறைவாக காணப்படும் நிலையிலும் ஒருபகுத்தறிவான முதலீட்டாளன் குறித்த அவ நம்பிக்கை காரணிகளை கவனத்தில் எடுத்து புதிய முதலீடுகளினை மேற் கொள்வதில் இருந்து பின்வாங்குகிறான். அததோடு இவ்வாறான காரணிகளை வைத்து கொண்டு எதிர்கால முதலீடு களினை திட்டமிடும் போது குறித்த முதலீட்டாளன் புதிய முதலீடுகளை மேற்கொள்ளாது விடுவதோடு ஏற்கனவே செய்யப்பட்ட முதலீட்டுத் திட்டங்களினையும் மீளப் பெற்றுவிடுகின்றான். இவ்வாறான ஓர் பதற்ற சூழ்நிலையானது (panic) பொருளாதாரத்தில் மேலும் ஓர் நிச்சயமற்ற நிலையை தோற்றுவிக்கிறது. இவ்வாறான எதிர்பார்க்கைகள் மிக குறுகிய காலத்துக்குள் வர்த்தக சகட ஓட்டத்தையும் தொடர்ந்த பொருளாதார மந்தத்தையும் ஏற்படுத்திவிடும் என்பது கெய்ன்சின் கருத்தாகும். 1990களில் ஐப்பானில் ஏற்பட்ட நிதி நெருக்கடி மற்றும், 2008 அளவில் அமெரிக்காவில் ஏற்பட்ட நெருக்கடிகளினை தீவிரப்படுத்தியதில் மக்களின் முதலீட்டாளர்களின் தவறான எதிர்பார்க்கையும் பிரதான காரணங்களாகும்.

[1]அந்தவகையில் எதிர்காலம் தொடர்பான சரியான எதிர்பார்க்கையானது முதலீட்டினை ஊக்குவித்து வேலைவாய்ப்பு,வெளியீட்டினை அதிகரிப்பதில் ஓர்முதன்மையான கருவியாகத் தொழிற்படும் அதேவேளை குறிப்பாக விலைஅதிகரிப்புதொடர்பான தவறான


எதிர்பார்க்கைகள் பல்வேறு நாடுகளில் நிதி நெருக்கடிகளை வலுவடையச் செய்தனஎன்பதனையும் நாம் குறிப்பிடல் வேண்டும்.

### 3.பிறீட்மனின் உள்ளீர்க்கப்பட்ட எதிர்பார்க்கை கோட்பாடு (Friedman's Adaptive Expectation theory)

1970 களில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட எண்ணெய்விலை அதிகரிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த நெருக்கடிகளானவை, பணவீக்கம் மற்றும் வேலையின்மைக்கு இடையே இருந்து வந்த எதிர்க்கணிய தொடர்பினை கேள்விக்கு உள்ளாக்கியது. அந்த வகையில் பணவீக்கம் மற்றும் வேலை யின்மை இடையே காணப்பட்ட பதிலீ டானது ஓர் நிரந்தரமானது என்பதனை வலியுறுத்திய பிலிப்ஸ் வளைகோட்டின் மீது விமர்சனத்தை தொடுத்தவர்களின் வரிசையில் பிரீட்மன் பிரதானமானவர். அந்த வகையில் பிரீட்மன் மேற்குறித்த இரு மாறிகளிற்கும் இடையேயான பதிலீடானது குறுங்காலத்தில் சாத்தியப்படலாமே ஒழிய நீண்டகாலத்தில் நிரந்தமான பதிலீடு சாத்தியமற்றது என் கிறார்.இவரது கருத்துப்படி பகுத்தறிவான தொழிலாளர்கள் நீண்டகாலத்தில் தமது கூலியை தீர்மானிக்கும் போது விலை அதிகரிப்பு தொடர்பில் அதிக கவனத் தினை செலுத்தி அதிகரித்த விலைக்கு இணையாக தமது பணக் கூலியை நிர்ண யிப்பதால் மெய்க்கூலியானது மாற்ற மின்றி காணப்படும். தொழிலாளர்கள் எதிர் பார்க்கப்பட்ட பணவீக்கத்தினை உள் வாங்கித் கொண்டு கூலி நிர்ணயத்தினை செய்வதால் நாணய கொள்கையால் ஏற்பட்ட பண மாயையினை எதிர்பார்க்கப் பட்ட பண வீக்கத்தினால் இல்லாது செய் கிறார்கள். தொழிலாளர்கள் பண மாயையை புரிந்து கொண்டு எதிர் நடவடிக்கை மேற்கொள்ளாதவரை நாணய கொள்கை மூலம் வேலையின்மையை குறைப்பதற்கு ஓர் கருவியாக பணக் கொள்கையை பயன்படுத்தலாம். ஆனால் தொழிலாளர்கள் பண மாயையை புரிந்து கொண்டு பணக்கூலியை நிர்ணயிப்பதால் இப்பதிலீடு சாத்தியமற்றதாக மாறிவிடு வதால் நீண்ட காலத்தில் வேலையின்மை யானது அதன் இயற்கை வீதத்தில் நிலைத்திருக்க நீண்ட கால பிலிப்ஸ் கோடானது நிலைக்குத்தச்சுக்கு சமாந் தரமாக செல்லும் போக்கில் காணப்படும்.

பிரீட்மன் தலைமையிலான பணவியலாளர்களின் குறித்த எதிர் பார்க்கையானது உள்ளீர்க்கப்பட்ட எதிர் பார்க்கை கோட்பாடு என குறிப்பிப்படுகி ன்றது. அதாவது மக்கள் பணவீக்கம் தொடர்பிலானகடந்த கால அனுபவங்க ளினை அடிப்படையாக கொண்டு எதிர் பார்ப்பினை செய்து தீர்மானம் எடுப்பதோடு இத்தீர்மானம் ஒப்பீட்டளவில் மெதுவான ஒன்றாகவும் குறிப்பிடப்படு கின்றது. அந்த வகையில் மக்கள் பொரு ளாதார செயற் பாடுகள் தொடர்பில் ஓர் அறியாதவர்க ளாக (Fooled) இருக்கும் போதுதான் பணவீக்கத்தை வேலையின்மைக்கு பதிலீடு செய்து வேலை வாய்ப்பு, வெளியீட்டினை அதிகரிக்கலாம் எனவும், அதேநேரம் நீண்ட காலத்தில் குறிப்பிட்ட அறியாமையில் இருந்து விடு பட்டு சிறந்த எதிர்பார்க்கையை கொண்டு தீர்மானத்தை மேற்கொள்வதா உள்ளீர்க்கப்பட்ட எதிர்பார்க்கை கோட்பாடு என்ற பிறீட்மனின் எண்ணக்கருவானது நாணய கொள்கை யானது நீண்ட காலத்தில் வினைத்திறனற் றது என்ற கெய்ன்சின் கருத்தினை வலுப் படுத்தி நிற்பதனை காணலாம்.

மேற்காட்டப்பட்டுள்ள வரைபடத்தில் விலையானது4% இனால் அதிகரித்த




போது ஆரம்பத்தில் 2% விலை அதிகரிப்பை மட்டுமே தொழிலாளர்கள் தமது பணக்கூலியில் சேர்த்து கொள்வதால் AD ஆனது AD2 ஆக அதிகரிக்க வேலை வாய்ப்பு மற்றும் வெளியீடு என்பனவும் அதிகரிக்கிறது (Window -2) இவ்வாறான நிலையில் வேலையின்மையானது U2 ஆகக்குறைவடைவதனை காணலாம். இங்கு குறுங்காலத்தில் வேலையின்மைக்கு விலை அதிகரிப்பானது பதிலீடு செய்யப்படுகிறது ஆனால் நீண்ட காலத்தில் தொழிலாளர்கள் அதிகரித்த பணவீக்கத்துக்கு (4%) இணையாக கூலியை அதிகரிப்பதால் வெளியீடானது முன்னர் இருந்த நிலைக்கு சென்றுவிடுகிறது (Window –3). அதாவது மொத்த கேள்வியானது AD2 ஆக அதிகரித்த போதும் மெய்க்கூலி, மாற்றமடையாத காரணத்தினால் மெய்வெளியீடு மற்றும் வேலையளவிலும் எந்தவித மாற்றமும் ஏற்படாத நிலையை காணலாம் மக்கள் அல்லது தொழிலாளர்கள் பணவீக்கம் தொடர்பான எதிர்பார்க்கை காரணமாகவே விலை அதிகரிப்புக்கு சமமான வகையில் கூலி அதிகரிப்பைஏற்படுத்துகிறார்கள். இதனை பிரீட்மன் உள்ளீர்க்கப்பட்ட எதிர்பார்க்கை என்கிறார்.

## லூகாஸின் பகுத்தறிவான எதிர்பார்க்கைக் கோட்பாடு (Lucas's RationalExpectation Theory).


பொருளியலில் பகுத்தறிவான எதிர்பார்க்கை(Rational Expectation) தொடர்பான கோட்பாட்டினை பிரபல்யப் படுத்திய பொருளியல் அறிஞராக ரொபேட் லூகாஸ்(Robert Lucas)ஆவார். இவர் குறித்த விடயம் தொடர்பில் 1995ல் நோபல் பரிசினையும் பெற்றுக் கொண்டார். இருப்பினும் பகுத்தறிவான எதிர்பார்க்கை தொடர்பில் ஆரம்பத்தில் கருத்தை வெளிப்படுத்தியவராக JohnMuth (1961) சுட்டிக் காட்டப்படுகின்றார்.அந்த வகையில்

கடந்த கால அனுபவங்களையும், நிகழ் கால செயற்பாடுகளினையும் வைத்துக் கொண்டு எதிர்கால விலைகள் மற்றும் அளவுகள் (Price and Quantity) தொடர் பில் ஓர் எதிர்பார்க்கையை கொண்டி ருத்தலே பகுத்தறிவான எதிர்பார்க்கை ஆகும். எனினும் இங்கு மக்களின் பகுத்தறிவான எதிர்பார்க்கையானது அதிகளவுக்கு நிகழ்கால செயற்பாடு களினை அடிப்படையாக கொண்டு எதிர் காலத்தினை எதிர்பார்க்கும் தன்மையே உள்ளது எனலாம்[2].


லூகாஸ்தனது கருத்தின் ஊடாக மக்கள் யாவரும் பகுத்தறிவானவர்களாக இருப்பதுடன் அவர்கள் உயர்ந்த தகவல்களினைப் பெற்று தீர்மானத்தை எடுப்பவர்களாகவும் உள்ளனர். என்று கருதி அவ்வாறு பணக் கொள்கையால் ஏற்படும் மாற்றங்களிற்கு மிக குறுகிய காலத்திலேயே மக்கள் எதிர் நடவடிக கையை மேற்கொள்வதால் பணத்தினை பயன்படுத்தி வேலைவாய்ப்பு, வெளி யீட்டினை அதிகரிக்க முடியாது என்பது இவரது வாதமாகும். மேலும் லூகாஸ்,

- ❖ எதிர்பார்க்கையானது பகுத்தறிவான வகையில் மேற்கொள்ளப்படுகின்றது.
- ❖ கூலி மற்றும் விலைகள் பூரணமாக நெகிழ்வுடையன.

என்ற அடிப்படையில் தான் தனது கோட்பாட்டினை முன்வைத்திருந்தார்.அந்த வகையில் லூகாஸ் மக்கள் யாவரும் குறிப்பாக விலை அதிகரிப்புத் தொடர்பில் ஓர் பகுத்தறிவான எதிர்பார்க்கையை கொண்டு காணப்படுவதற்கு 'தகவல்களின் பூரணமான கிடைப்பனவு'(perfect information) என்பதனை காரணமாகக் குறிப் பிடுகின்றார். இவ்வாறான சூழ்நிலையில் நாணயக் கொள்கையின் பிரயோகமானது பூரணமாக வினைத்திறன் அற்றது (completelyineffective) என்ற பழம் பொருளியாலாளர்களது கருத்தினை மேலும் வலுப்படுத்தியவராக லூகாஸ் இனங்காணப்படுகின்றார். அந்த வகையில் இவரது கருத்துப்படி மக்கள் எவருமே பணமாயையில் சிக்கவில்லை என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது.



படம் A



படம் B

[2]Expectations, which are subjective, are fundamental to the behavior of economic agents and all economic activities have an informational/expectational dimension. For example, expectations of the future value of economic variables will clearly influence demand and supply decisions. Snowden and vanne (2005),p.225.

மேற்காட்டப்பட்டவாறு படம் (A)ல் அதிகரி கரித்த விலைக்கு ஏற்ப எதிர்நடவடிக்கை எடுக்காததன் காரணத்தினால்,AD1 ஆனது AD2ஆக அதிகரித்து வெளியீடானது Q2ஆக அதிகரிக்கிறது. ஆனால் படம் (B)ல் மக்கள் எதிர் நடவடிக்கையை மேற் கொள்வதன் விளைவாக மெய் வெளியீடா னது மாற்றமின்றி காணப்படுகின்றது. இவ்வாறான நிலையானது குறுங்காலத்தி லேயே ஏற்பட்டு விடும் என்பது லூகாஸின் கருத்தாகும். அதாவது மக்கள் பூரணமாக தகவலை பெற்று பகுத்தறிவான எதிர் பார்க்கையை கொண்டு எதிர் நட வடிக்கையை (Anticipated Action) எடுக்கின்ற காரணத்தால் விலை அதி கரிப்பினால் ஏற்பட்ட பணமாயை அகற்றப்படுகின்றது.

## 5. முடிவுரை (Conclusion)

எதிர்பார்கையானது பொருளா தாரத்தின் இயக்கத்தோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகவே இருந்து வருகின்றதனை கோட்பாடுகள் சுட்டி நிற்கின்றன. அந்த வகையில் பொருளியல் எதிர்பார்க்கை தொடர்பில் காத்திரமான கருத்துக்களினை முன்வைத்தவர்களில் கெய்ன்ஸ் பிரதான மானவர் இவர் வட்டி வீதம் தொடர்பான எதிர்பார்க்கையானது குறுங்காலத்தில் நாணய கொள்கையை வழிப்படுத்தியது என்றும் நீண்ட காலத்தில் அதன் வினைத் திறனை அகற்றி விடுகிறது என்றும் குறிப் பிட்டார். அந்த வரிசையில் தொடர்ந்து பிரீட்மன் உள்ளீக்கப்பட்ட எதிர்பார்க்கை பற்றிகுறிப்பிட்டு விலை அதிகரிப்பு தொடர் பான எதிர்பார்க்கையானது நீண்ட காலத்தில் வேலையின்மை மற்றும் பண வீக்கத்துக்கு இடையான பதிலீட்டுத் தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது என்றார். அடுத்து லூகாஸ் பகுத்தறிவான எதிர்பார்க்கை பற்றிக் குறிப்பிட்டு பூரண தகவல் கிடைப்பதால் ஏற்படும் தொழி லாளரின் பகுத்தறிவான எதிர்பார்க்கை யானது நாணய கொள்கையை குறுங்காலத்திலும் சரி நீண்ட காலத்திலும் சரி முற்றாக வினைத்திறனற்ற கருவியாக (Completely ineffective) மாற்றி விடுகிறது என்றார்.

அண்மைக்காலங்களில் நிதிச் சந்தைகள் உச்ச வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் எதிர்பார்க்கை என்பதே குறித்த சந்தை தொழிற்பாட்டினை இயக்கும் பிரதான கருவியாகும். அந்த வகையில் நிதிச்சந்தையில் எதிர்பார்க்கைகளால் நிகழும் மாற்றங்களினை பற்றி அண்மைக் காலத்தில் ஆய்வு செய்த ஜேம்ஸ் ரொபின் (James Jobbin,) பின்வரும் இரு கோட்பாடுகளின் ஊடாக எதிர்பார்க்கை யின் முக்கியத்துவத்தினை விளக்கி இருந்தார்

- **Tobbins "q" Theory**
- **Port -folio selection Theory.**

அந்த வகையில் எதிர்பார்க்கை தொடர்பில் ஆய்வு செய்த பொருளியலறி ஞர்களால்:எதிர்பார்க்கை என்பது பகுத்தறிவாக, பூரணமாக இருக்கும் போது நாணய கொள்கை வினைத்திற னற்று போய்விடும் என்பதையே உணர்த்தி இருந்தமையை காணமுடிகிறது. அதாவது பூரணமான தகவல்களின் கிடைப்பன வானது மக்களை புத்திசாதுரியமாக சிந்திக்க தூண்டுவதால் அவர்கள் பண மாயையை நன்கு உணர்ந்து எதிர் நட வடிக்கை எடுக்க தூண்டுகிறது இதனால் தான் லூகாஸ் "Information Is wealth" என்றார். அந்தவகையில் பூரணமாக தகவல்கள் கிடைக்கும் போது அதனை கொண்டு பகுத்தறிவான வகையில் தீர்மா னம் எடுக்கும் போது பணம் ஒரு நடுநிலை

யான மாறி என்ற பழம் பொருளியலாளர்களின் நிலைபாட்டிற்கே இட்டுசெல்லும் என்பது இவர்களது கருத்தாகும் (Money is neutral). இருப்பினும் யதார்த்தமான உலகில் பூரண தகவல் என்பதும், பகுத்தறிவான எதிர்பார்க்கை என்பதும் ஓர் கேள்விக்குரிய விடயமாகவே இருந்து வருவதனையும் நாம் இங்கு குறிப்பிட வேண்டியது அவசிமாகும்.

## References


Abel Bernanke and Croushore "Keynesian macroeconomics in the AD-AS Model", ( chapter-2)

Bharat Trehan and Oskar Zorrilla, "Financial crisis and inflation expectation", FRBSF Economic letter,2012

John Maynard Keynes, "The general Theory of Employment Interest and Money", 1937(chapter-5)

Mario Oliveres, "Expectation and Uncertainty in the Keynesian Theory", 2009

Russel R James, "Expectation Theory and the Economy", South western publishing, 2005

Snowden B and Vanne R "Modern Macroeconomics", Edward Elgar publishing Ltd, 2005

# உள்வீட்டு வெளியீட்டு ஆய்வு

*Miss. L. Mary Delcia,*
*Economics special*
*2007/A/114*

## 01) அறிமுகம்

உள்ளீட்டு, வெளியீட்டு பகுப்பாய்வு என்ற எண்ணக் கருவானது முதன் முதலாக 18ம் நூற்றாண்டில் Tableau Economique எனும் பெயரில் குவெஸ்னே (Quesney) என்பவரினால் விருத்தி செய்யப்பட்டது. நவீன நோக்கில் இது அமெரிக்கப் பொருளியலாளரான பேராசிரியர் லியோன்ரிவ் (W.W. leontief) என்பவரினால் வால்றஸ் (Walras) என்பவரின் பொதுச் சமநிலை ஆய்விற்கான நடைமுறை வடிவமாகக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இதன் நவீன விருத்தியாக தேசிய பொருளாதார சமனிலை (national economic blance) என்ற கருத்தில் U.S.S.R. இன் பொருளாதாரத் திட்டமிடல்களில் பயன்படுத்தப்பட்டது. லியோன்ரிவ் கூட இத்தகைய பொருளாதார சமனிலை எண்ணக்கருவிலிருந்தே இதனைப் பெற்றிருக்கலாம். ஆனால் அவர் இதனை குறிப்பிடத்தக்க விதத்தில் விருத்தி செய்துள்ளார் அவர் தனது நூலான அமெரிக்கப் பொருளாதாரக் கட்டமைப்பு (Structure of the American Economy) இல் இதனை பொருளாதாரத்தின் வேறுபட்ட துறைகளுக்கிடையிலான ஊடு தொடர்புகளையும் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தன்மையையும் விளக்கினார். இவ் ஆய்வானது வளர்ச்சியடைந்த நாடுகளில் பொருளாதார எதிர்வு கூறல்களுக்கும், இந்தியா போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பொருளாதார திட்டமிடல்களை மேற்கொள்ளவும் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.

## 02) வரையறை

பொருளாதாரத்தில் ஒரு கைத்தொழில் எவ்வாறு ஏனையவற்றின் வெளியீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்பதையும், அதன் வெளியீடு எவ்வாறு ஏனையவற்றிற்கு உள்ளீடாக மாறுகின்றது என்பதையும் விளக்கும் ஒரு வழிமுறையே உள்ளீட்டு - வெளியீட்டு ஆய்வாகும். இது வேறுபட்ட தொழில்களுக்கிடையிலான ஊடு தொடர்புகளையும், ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தன்மையையும் விளக்குவதனால் Inter - industry analysis எனவும் கூறப்படுகின்றது. இங்கு ஒரு தொழிலில் ஒரு பொருளின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுபவை உள்ளீடுகள் எனவும், அவற்றின் உற்பத்திகள் வெளியீடுகள் எனவும் அழைக்கப்படும். இதனால் பொருளாதாரத்தில் வேறுபட்ட தொழில்களின் உள்ளீடு, வெளியீடு என்பவற்றிற்கிடையிலான ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தன்மையை விளக்கும் ஆய்வாக இது உள்ளது.

03) பண்புகள்

இந்த ஆய்வுமுறை பிரதானமாக மூன்று இயல்புகளைக் கொண்டுள்ளது. அவற்றை நோக்கின், முதலாவதாக, உள்ளீட்டு - வெளியீட்டு ஆய்வானது உற்பத்தியோடு மட்டும் தொடர்புடையதாக உள்ளது. இது பொருட்களுக்கான கேள்வியை கருத்திற் கொள்வதில்லை. அதாவது நுகர்வோர்க் கேள்விக் கோட்பாடானது இவ் ஆய்வில் இடம்பெறுவதில்லை. இந்த வகையில் இவ் ஆய்வானது சாதாரண தொழில்நுட்பப் பிரச்சினைகளை விளக்குகின்றது. கொடுக்கப்பட்ட அளவில் கிடைக்கத்தக்க வளங்கள் மற்றும் தொழில் நுட்ப அறிவுடன், உள்ளீட்டு - வெளியீட்டு ஆய்வானது தொழில்களில் வேறுபட்ட உள்ளீடுகளின் பயன்பாட்டையும், அவற்றின் சாத்தியமான வெளியீட்டையும் விபரிக்கின்றது. இரண்டாவதாக, இந்த ஆய்வானது அனுபவ ரீதியான தரவுகளை மட்டுமே தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதாவது இது அனுபவ ரீதியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வேறுபட்ட தொழில்களின் வேறுபட்ட உள்ளீட்டு - வெளியீட்டு அளவுகளை மதிப்பீடு செய்கின்றது. இறுதியாக, இந்த ஆய்வானது பொதுச் சமனிலை எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது கோட்பாட்டு ரீதியான பொதுச் சமனிலை ஆய்விற்கு நடைமுறை வடிவம் கொடுக்கின்றது. இவ் ஆய்வானது பொருளாதாரத்தில் வேறுபட்ட தொழில்களின் திட்டமிட்ட உற்பத்திகளின் தங்கியிருப்புத் தன்மையை மதிப்பிடுகின்றது. இத் தங்கியிருப்புத் தன்மையானது ஒவ்வொரு தொழில்துறையும் உள்ளீட்டு தேவைக்காக ஏனைய தொழில்களில் தங்கியிருக்க வேண்டியதால் ஏற்பட்டதாகும்.

உதாரணமாக: விவசாயத் துறையானது சீமெந்து, உரம், களை கொல்லி, உழவு இயந்திரம் போன்றவற்றிற்காக கைத்தொழிற் துறையிலும், சீனி, பருத்தி, ஆடை, சணல் போன்ற தயாரிப்புத் துறையானது, அவற்றின் மூலப் பொருட்களுக்காக (Sugarcane, Cotton & Jute) விவசாயத் துறையிலும் தங்கியிருக்கின்றன.

04) எடுகோள்கள்

இங்கு பிரதானமாக நான்கு எடுகோள்கள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. முதலாவதாக "கிடைக்கத்தக்க வளங்கள், இறுதி உற்பத்திக்கான கேள்விகள் மற்றும் அனைத்து உள்ளீடு வெளியீடுகளின் விலைகளும் கொடுக்கப்பட்டவை என்பதுடன் மாறாதவையுமாகும்". இங்கு உள்ளீடு, வெளியீடுகளின் விலைகள் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் பௌதீக வெளியீடுகளில் ஏற்படும் மாற்றங்களுக்கிடையிலான தொடர்புகளை ஆராய்வதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். இரண்டாவதாக "உற்பத்தியின் தொழில்நுட்பக்குணகம் நிலையானது. அதாவது, வேறுபட்ட உற்பத்திகளின் நிலையான வெளியீட்டைப் பெறுவதற்கான உள்ளீட்டு விகிதம் (காரணி விகிதம்) பூரணமாக நிலையானது ஆகும். ஒரு உற்பத்தியை மேற்கொள்வதற்கான வேறுபட்ட காரணிகளுக்கிடையிலான தொழில்நுட்பப் பதிலீட்டுச் சாத்தியங்கள் இங்கு கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. மூன்றாவதாக "பொருளாதாரத்தில் மாறா அளவுத் திட்ட விளைவு விதி செயற்படுகின்றது". அதாவது உள்ளீடு, வெளியீடுகளின் அளவுகளுக்கிடையிலான விகிதங்கள் நிலையானவை. அதாவது ஒரு வெளியீட்டை உற்பத்தி செய்வதற்கான எல்லா உள்ளீடுகளிலும் ஏற்படுத்தப்படும் ஒரு சதவீத அதிகரிப்பானது வெளியீட்டிலும் ஒரு சதவீத அதிகரிப்பினை ஏற்படுத்தும். இறுதியாக "இறுதிப் பொருட்களுக்கான கேள்வியானது இவ் வேலை முறைமையை அதன் முழு இயலளவைத் தொடர்ந்தும் பேணக் கூடிய வகையில் போதுமான அளவில்

உள்ளது" அதாவது, எந்தவொரு உள்ளீடும் குறையளவுப் பயன்பாட்டில் இல்லை.

## 05) உள்ளீட்டு - வெளியீட்டு முறைமை அல்லது அமைப்பு

உள்ளீட்டு - வெளியீட்டு முறைமை ஒன்றை அமைப்பதற்கு முதலில் பொருளாதாரமானது குறிப்பிடத்தக்களவான எண்ணிக்கையான துறைகளாக பிரிக்கப்படல் வேண்டும். ஒரு உள்ளீட்டு - வெளியீட்டு மாதிரியில் ஒவ்வொரு துறைகளும் ஒரேயொரு உற்பத்தியை மட்டுமே மேற்கொள்வதாக எடுகோள் கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு துறையும் மிக நெருங்கிய உற்பத்தி செய்யும் வேறுபட்ட தொழில்களை தன்னகத்தே கொண்டிருக்கலாம். இத்தகைய உற்பத்திகள் ஒரு தனிப்பட்ட உற்பத்தித் தொகுதியை உருவாக்க ஒன்றிணைக்கப்படுகின்றன. பொருளாதாரம் பல துறைகளாகப் பிரிக்கப்படும் போது, அடுத்த படிமுறையாக துறைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு துறைகளினதும் வேறுபட்ட உள்ளீடுகளிற்கும் அதன் உற்பத்திகளின் வெளியீடுகளிற்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் வகையிலான சமன்பாடுகளை அமைத்தல் வேண்டும். இதேபோல ஒருதுறையின் வெளியீட்டிற்கும், ஏனைய துறையின் வெளி யீடு (இத் துறையினால் உள்ளீடாகப் பயன் படுத்தப்படும்) இற்குமிடையிலான தொடர்பினையும் வெளிப்படுத்தும் வகையிலான குறிப்பிட்ட எண்ணிக்கையான சமன்பாடுகளையும் அமைத்தல் வேண் டும். இந்த வகையில் நுகர்வுக் கேள்விக்கு அல்லது மூலதன இருப்பின் அதிகரிப்பிற்கு கிடைக்கத்தக்க இறுதி வெளியீடு நிர்ணயிக்கப்படும். இறுதியாக இச் சமன்பாடுகள் தீர்க்கப்படும். இங்கு பெருமளவான மதிப்பீடுகளும் சமன்பாடுகளும் உள்ளடக்கப்படுவத னால் கணனியின் உதவியுடன் இதன் தீர்வுகள் அடையப்படுகின்றன. இத்தகைய மேற் குறிப்பிட்ட பெருமளவான சமன்பாடுகள் ஒவ்வொரு துறையினதும் உற்பத்திகள், தம் உற்பத்தி மற்றும் தேறிய இறுதி விளைவினையும் பயன்படுத்தும் ஏனைய எல்லாத் துறைகளினதும் வெளியீட்டுடனும் தொடர்புபடுத்தப்படுகிறது. இங்கு மாறா அளவுத் திட்ட விளைவு விதி செயற்படுவதாக எடுகோள் கொள்ளப்படுவதனால் உள்ளீடு, வெளியீடுகளிடையே ஒரு நேர்கோட்டுத் தொடர்பு பெறப்படும். ஒவ்வொரு உள்ளீடும் பல்வேறுபட்ட வெளியீடுகளுடன் தொடர்புபடுத்தப்படுவதனால் அவற்றைக் கணித மொழியில் மாற்றும் போது பெருமளவான சமன்பாடுகள் பெறப்படுகின்றன. இவை தீர்க்கப்படும் போது தீர்வு பெறப்படுகின்றது.

## 06) உள்ளீட்டு - வெளியீட்டு மாதிரி

முதலில் உள்ளீட்டு - வெளியீட்டு அட்டவணை (Input - output tables) பற்றி அறிய வேண்டும். இது உள்ளீட்டு, வெளியீட்டுப் பாய்ச்சலையும், இறுதித் தேவை யையும் காட்டும் ஓர் அட்டவணையாகும். இதனால் இது மாற்றுத் தாயம் (Transaction Matrix) எனப்படும்.

Skeleton of Input - Output table / Transactions Matrix

அட்டவணை 01 வெளியீட்டுப் பாவனையாளர்

| | | தொழில் இடையீட்டுத் துறை<br>Inter - Industry Sector | இறுதிக் கேள்வித்துறை |
|---|---|---|---|
| | மொத்தம் | $X_1 X_2 \ldots\ldots X_n$ | D |
| உள்ளீட்டு உற்பத்தியாளர் | $X_1$ | $X_{11} X_{12} \ldots\ldots X_{1n}$ | $D_1$ |
| | $X_2$ | $X_{21} X_{22} \ldots\ldots X_{2n}$ | $D_2$ |
| | .... | .................................... | ..... |
| | .... | .................................... | ..... |
| | .... | .................................... | ..... |
| | $X_n$ | $X_{n1} X_{n2} \ldots\ldots X_{nn}$ | $D_n$ |

மேலுள்ள உள்ளீட்டு - வெளியீட்டு அட்டவணை 01ஐ கிடையச்சு ரீதியாக நோக்கின் குறித்த தொழிலின் வெளியீடானது ($X_1$) அதன் சொந்த வெளியீட்டினதும் ($X_1$) ஏனைய தொழில்களின் உள்ளீடுகளினது ($X_2, X_3$ .....$X_n$) இறுதித் தேவை (D) யினதும் ஒன்றிணைப்பினால் பெறப்பட்டதாகும். இதனை சமன்பாட்டு வடிவில் நோக்கின்

$X_1 = X_{11} + X_{12}$.............. $+ X_{1n} + D_1$

$X_2 = X_{21} + X_{22}$.............. $+ X_{2n} + D_2$

.......................................................

.......................................................

.......................................................

$X_n = X_{n1} + X_{n2}$.............. $+ X_{nn} + D_n$ என்ற வகையில் அமையும் இச் சமன்பாடுகள் ஒவ்வொரு தொழிலினதும் வெளியீடுகள் எவ்வாறு வேறுபட்ட தொழில்களினுள்ளும் உள்ளீடுகளாகப் பாய்கின்றன என்பதையும் நுகர்வு அல்லது மூலதன திரட்சிக்கான இறுதிக் கேள்வியையும் காட்டுவதனால் இவற்றை லியோன்ரிவ் சமநிலைச் சமன்பாடுகள் (Balance Equations) என அழைக்கின்றார்.

இனி, இந்த அட்டவணை 01ஐ நிலைக்குத்தச்சு ரீதியாக நோக்கின் ஒரு தொழிலின் வெளியீட்டிற்கான உள்ளீட்டுத் தேவையை அறிய முடியும். அதாவது, ஒரு தொழிலில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடான $X_1$ ஆனது $X_1$ இன் அதன் வெளியீட்டின் ஒரு பகுதி உள்ளீடாக பயன்படுத்தப்படுவதுடன் $X_2$ ..... $X_n$ என்பவற்றின் வெளிப்பாடுகளின் ஒரு பகுதிகளும் பயன்படுகின்றன. இவற்றை சமன்பாட்டு வடிவில் நோக்கின்......

$X_1 = f_1(X_{11}, X_{21}, \ldots\ldots X_{n1})$

$X_2 = f_2(X_{12}, X_{22}, \ldots\ldots X_{n2})$

.......................................................

.......................................................

.......................................................

$X_n = f_n(X_{1n}, X_{2n}, \ldots\ldots X_{nn})$ என அமையும். இச்சமன்பாடுகள் $X_1$, $X_2$ ...... $X_n$ என்ற வேறுபட்ட தொழில்களின் கட்டமைப்பினை விளக்குவதனால் இது அமைப்பு சார் சமன்பாடு (Structural Equation) என அழைக்கப்படுகின்றது.

இனி இவற்றை செயற்கைப் புள்ளி விபரங்களின் துணைகொண்டு விளக்குவோம்.

அட்டவணை 02

**உள்ளீட்டு வெளியீட்டு அட்டவணை / மாற்றுத்தாயம் (கோடி ரூபாயில்)**

வெளியீட்டுப் பயன்பாட்டாளர்

| | | விவசாயத் துறை | தயாரிப்புத் துறை | இறுதிக் கேள்வி | மொத்த வெளியீடு |
|---|---|---|---|---|---|
| உள்ளீட்டுப் உற்பத்தியாளர் | விவசாயத்துறை | 75 | 125 | 100 | 300 |
| | தயா. துறை | 100 | 150 | 250 | 500 |
| | ஊழியர் | 125 | 225 | ------ | 350 |
| | மொ.கேள்வி | 300 | 500 | ...... | 1150 |

இங்கு நாம் விவசாயத்துறை, தயாரிப்புத்துறை ஆகிய இரு துறைகளையும் ஆரம்ப காரணியாகிய உழைப்பையும் கவனத்திற் கொண்டுள்ளோம். அட்டவணையின்படி மொத்த வெளியீடான 300 கோடியில் 75 கோடி வெளியீடு விவசாயத் துறைக்குப் பயன்படுத்தப்படுவதுடன், 125 கோடி பெறுமதியான விவசாய வெளியீடுகள் தாயாரிப்புத் துறையில் பயன்படுத்தப்படுவதுடன், 100 கோடி இறுதிக் கேள்விக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இது உள்ளீட்டு - வெளியீட்டு ஆய்வானது கிடையச்சு ரீதியாக

எவ்வாறு ஒரு வெளியீடானது வேறுபட்ட தொழில்களிடையேயும், இறுதித் தேவைக் காகவும் பயன்படுத்தப்படுகின்றது என்ப தைக் காட்டுகின்றது. இவ்வாறாக நிலைக் குத்தச்சு வேறுபட்ட வெளியீடுகளின் உள்ளீட்டுத் தேவைகளையும் புலப்படுத்தும்.

மேலுள்ள அட்டவணை 02ல் வேறுபட்ட உள்ளீடு வெளியீடுகளுக்கு நாம் முழுப் பெறுமதி (Absolute Value) வழங்கியுள்ளோம். இதனடிப்படையில் வேறுபட்ட வெளியீட்டு உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் உள்ளீடு களின் சார்புப் பெறுமதியை நாம் கணிக்க முடியும். இத்தகைய உள்ளீடுகளின் சார்புப் பெறுமதிகள் உள்ளீட்டுக் குணகங்கள் (input - coefficients) எனப்படும். அவற்றைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\alpha_{ij} = \frac{X_{ij}}{X_j} \qquad \text{or} \qquad \alpha_{ij} X_j = X_{ij}$$

$\alpha$ Alpa

இங்கு

$\alpha_{ij}$ = j ஆவது தொழிலால் ஏற்படுத்தப்படும் i ஆவது தொழிலின் வெளியீட்டுத் தேவை $X_{ij} = X_j$ இன் உற்பத்தியில் பயன்படுத்தப் படும் $X_i$ தொழிலின் வெளியீடு.

$X_{ij}$ = j தொழிலின் மொத்த வெளியீடு என்ப வற்றைக் கருதும். இங்கு $\alpha_{ij} X_j = X_{ij}$ என்பது அமைப்பு சார் சமன்பாடு எனப்படும். இதனடிப்படையில் நாம் வேறுபட்ட தொழில் களுக்கான வேறுபட்ட உள்ளீட்டுக் குணகங் களைக் கண்டறிய முடியும். இவற்றை ஒரு அட்டவணையில் பிரதியிடுவதன் மூலம் உள் ளீட்டுக் குணக அட்டவணையைப் பெறலாம்.

அட்டவணை 03

உள்ளீட்டுக் குணகம் / தொழில்நுட்பத் தாயம்

வெளியீட்டுப் பயன்பாட்டாளர்

| | | விவசாயத்துறை | தயாரிப்புத் துறை | |
|---|---|---|---|---|
| உள்ளீட்டு உற்பத்தியாளர் | விவசாயம் | 0.25 | 0.25 | 75/300 = 0.25 |
| | தயாரிப்புத்துறை | 0.33 | 0.30 | |
| | ஊழியம் | 0.42 | 0.45 | 125/500 = 0.25 |

மேலுள்ள அட்டவணை 03இன்படி ரூபா 1 பெறுமதியான விவசாய வெளியீட் டைப் பெற ரூபா 0.25 பெறுமதியான அதன் சொந்த உற்பத்திகளும் (விதை, உணவுத் தானியம் மற்றும் இதர வகைகள்), ரூபா 0.33 பெறுமதியான தயாரிப்புத்துறையின் வெளி யீடுகளும் (களை கொல்லி, தயாரிப்புக் கைத்தொழிலால் உருவாக்கப்பட்ட விவசாய இயந்திர உற்பத்திகள்), ரூபா 0.42 பெறுமதி யான ஊழியமும் தேவைப்படுகின்றது. இதே வழியில் தயாரிப்புத்துறையையும் நோக்க முடியும்.

## 07) உள்ளீட்டு வெளியீட்டு ஆய்வில் மூன்று துறை மாதிரி

இங்கு நாம் பொருளாதாரமானது விவசாயத்துறை, தயாரிப்புக் கைத்தொழில் மற்றும் போக்குவரத்துச் சேவை ஆகிய மூன்றையும் உற்பத்தி செய்வதாகக் கொள் வோம். ஒவ்வொரு துறைகளும் ஏனைய துறைகளின் உற்பத்தி களைப் பயன்படுத்து கின்றன. இங்கு நாம் தொழில்களுக்கிடை யிலான இடையீட்டுத் தேவையையும் இறுதித் தேவையையும் பூர்த்தி செய்ய எவ்வளவு பொருட்கள் சேவைகள் உற்பத்தி செய்யப் பட வேண்டும் என்பதை மதிப்பிடுவோம்.

அட்டவணை 04

உள்ளீட்டு - வெளியீட்டு அட்டவணை

வெளியீட்டுப் பயன்பாட்டாளர்

| ↓ → | விவசாயம் | தயாரிப்புத் | போக்குவரத்து | இறுதிக்கேள்வி |
|---|---|---|---|---|
| விவசாயம் | 0.1 | 0.2 | 0.2 | 50 கோடி |
| தயாரிப்பு | 0.2 | 0.3 | 0.2 | 100 கோடி |
| போக்குவரத்து | 0.2 | 0.2 | 0.2 | 25 கோடி |
| ஊழியர் | 0.5 | 0.3 | 0.4 | --------------- |
| மொத்தம் | 1.0 | 1.0 | 1.0 | --------------- |

இங்கு A என்பது விவசாயத்தையும் M என்பது தயாரிப்புத் துறையையும், T என்பது போக்குவரத்தையும் குறிப்பதாகக் கொண்டால் ரூபா 1 பெறுமதியான விவசாய வெளியீட்டில் ரூபா 0.1 பெறுமதியான பங்கு விவசாய வெளியீட்டிற்கும், ரூபா 0.2 பெறுமதியான பங்கு தயாரிப்புத்துறை வெளியீட்டிற்கும், ரூபா 0.2 பெறுமதியான பங்கு போக்குவரத்துச் சேவைக்கும் பயன்படுத்தப் படுகின்றது. இந்த வகையில் ரூபா 50 கோடி என கொடுக்கப்பட்ட விவசாய இறுதிக் கேள்வி வெளியீட்டில் மொத்த விவசாய வெளியீட்டைப் பின்வருமாறு மதிப்பிடலாம்.

$A = 0.1A + 0.2M + 0.2T + 50$ கோடி -------- (1)

இவ்வாறாக ஏனைய துறைகளினதும் சமன்பாடுகளைப் பெறலாம்.

$M = 0.2A + 0.3M + 0.2T + 100$ கோடி -------- (2)

$T = 0.2A + 0.2M + 0.2T + 25$ கோடி -------- (3)

இம் மூன்று சமன்பாடுகளையும் தீர்ப்பதன் மூலம் தீர்வு பெறப்படும். இங்கு முக்கியமான விடயம் யாதெனில் இம் மூன்று துறைகளிலும் எதுவாயினும் ஊழியத்தின் பயன்பாடின்றி பெறப்பட முடியாத ஒன்றாகும். இதனாலேயே மூன்று துறைகளிலும் முறையே 0.5, 0.3, 0.4 பங்குகள் ஊழியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு W என்பது ஊழியத்திற்கான மணித்தியாலம் ஒன்றிற்கான கூலியைக் குறிப்பதாகக் கொள்வோமாயின் இம் மூன்று துறைகளிலுமான மொத்த வெளியீட்டிற்குத் தேவையான ஊழிய மணித்தியாலமானது மொத்த ஊழியப் பெறுமதியைக் கூலியால் பிரிப்பதன் மூலம் பெறலாம். இதனைப் பின்வருமாறு பெறலாம்.

$$L = \frac{0.5A + 0.3M + 0.4T}{W}$$

L = மொத்த ஊழிய மணித்தியாலம்

W = மணித்தியால மொன்றிற்கான கூலி

இங்கு மொத்த உற்பத்திக்குத் தேவையான ஊழிய மணித்தியாலங்கள் தேவையானளவு அல்லது அதனைவிட அதிகளவு கிடைப்பின் உற்பத்தியின் கொடுக்கப்பட்ட இலக்கு அடையப்படும். மாறாக குறைவாக இருப்பின் அதை அடைய முடியாது.

இவ்வாறாக மூன்று துறைமாதிரியில் ஒன்பது உள்ளீட்டுக் குணகங்கள் பெறப்பட்டது போல இதனை நான்கு துறை மாதிரியில் மேற்கொள்ளும் போது பதினாறு உள்ளீட் டுக் குணகங்கள் பெறப்படும். இவ்வாறாக இதன் பரப்பளவை அதிகரித்துக் கொண்டு செல்ல முடியுமாயினும் இந்த ஆய்வில் நூற்றுக்கணக்கான தொழில்களைக் கவனத்தில் எடுக்கும் போது தீர்வினைப் பெறுவதற்கு கணணியின் உதவி மிகவும் அவசியமாக உள்ளது.

## 08) பயன்பாடுகள்

இறுதியாக உள்ளீட்டு - வெளியீட்டு மாதிரி ஆய்வின் பயன்பாடுகளை நோக்கு வோமாயின் இந்த மாதிரி ஆய்வாது வளர்ந்த நாடுகளில் பொருளாதார எதிர்வு கூறல் களை மேற்கொள்ளவும், வளர்முக நாடுக ளில் பொருளாதார திட்டமிடல்களை மேற் கொள்ளவும் அவசியமாக அமைவதுடன் எதிர்கால இலக்கை நிறுவனங்கள் அடைய வும், குறுங்கால, நடுத்தர கால, நீண்ட கால திட்டமிடல்களை மேற்கொள்ளவும், திட்டமிடல்களில் காரண காரிய ரீதியாக வெற்றி பெறவும், வேலைவாய்ப்பு மற்றும் வருமான அதிகரிப்பைப் பெற்றுக் கொள்ள வும் பொருளாதார அடிமட்ட விபரங்களை அறியவும் தனியார் துறைப் பொருளாதாரங் களை முன்னெடுத்துச் செல்லவும் அவசிய மாகின்றது. மேலும், மத்திய திட்டமிடல் பொருளாதாரங்களிலும் இம்முறை பெரும ளவாகப் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இருப்பினும் இந்த ஆய்வானது இயங்கியல் ரீதியில் செயற்படுத்தப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இது ஒரு கணிய ரீதியான ஆய்வே தவிர பண்பியல் ரீதியான ஆய்வல்ல என்பதும் குறிப்பிடத் தக்கது.

## 09) முடிவுரையும் தொகுப்பும்

இவ்வாறாக இந்த உள்ளீட்டு - வெளியீட்டு மாதிரி ஆய்வானது பல்வேறு பட்ட சாதகமான விடயங்களையும் பயன்படு தன்மையையும் கொண்டுள்ளமை இதன் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. இந்த ஆய்வு மாதிரியானது பிரதானமாக மூன்று இயல்புகளையும், நான்கு எடுகோள்களை யும் கொண்டு கட்டி யெழுப்பப்பட்டுள்ளது. மேலும் இந்த உள்ளீட்டு - வெளியீட்டு முறைமையானது பல்வேறு படிமுறைகளினூ டாக அமைக்கப்படுகின்றது. இதற்கான பல்வேறு கற்பனையான புள்ளி விபரங்களின் உதவியுடன் இருதுறை மற்றும் மூன்றுதுறை மாறிகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக இம்மாதிரி ஆய்வின் பயன்பாடு களும் நோக்கப்பட்டுள்ளன. இவ்வாறான இந்த உள்ளீட்டு - வெளியீட்டு மாதிரி ஆய்வா னது கடந்த காலங்களில் மட்டுமன்றி எதிர்கா லத்திலும் பல்வேறு செயற்பாடுகளிற்கும் ஆதாரமாக அமையும் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

உசாத்துணை நூல்கள்

1. kewal krishan deweet (2002) Modern Economic Therory, 21st Revised edition, Shyamial charitable trust, New delhi.
2. http : // reference for business. com
3. http : // en.wikipedia. org.

# நீர்வளம் - சிறப்பாக நீர் நுகர்வு நீர் விலையிடல் தொடர்பானது

*Miss. G. Keethaviny,*
*Temporary Assistant Lecturer,*
*Department of Economics,*
*University of Jaffna.*

பௌதீக சூழலுக்கும், மனித நடவடிக்கைக்குமான தொடர்புகளை மனிதனின், தோற்றப்பாட்டிலிருந்தே புவியியளாரர்கள் அவதானித்து வந்துள்ளனர். பௌதீக சூழலானது பெருமளவு வளங்களை மனிதனின் பயன்பாட்டுக்கென கொண்டுள்ளது. பௌீதகச் சூழலில் காணப்படும் வளங்கள் பெறுமதியுடையவை. மனிதனுக்கும் பயன் தருபவை, பொருளாதார ரீதியாக நன்மைகளைக் கொண்டவை, சமூக ரீதியாகப் பயன்படுத்தி அதன் மூலம் சிறப்புக்பெற்றுக் காணப்படுகின்றது. அந்த வகையில் நீர் வளங்கல் பற்றியதானதும் அதனோடு தொடர்புடைய நீர் நுகர்வு, நீர்விலையிடல், பொருளாதாரம் பின்னணி என்பனவற்றினை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் பிரதான சிறப்பு நோக்கமாகும்.

எனவே நீர் வளம் பற்றி (Water Resuurce) எடுத்து நோக்கும் போது! மனித ஆரோக்கிய வாழ்வின் அத்தியவசிய தேவையாக நீர் முதன்மை பெறுகின்றது. இறைவனின் இயற்கை அன்பளிப்பில் கிடைத்த ஓர் அழியா சொத்தாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் நீரின்றி இயற்கை சூழல் சமநிலை அற்றதாகக் காணப்படுகின்றது. விவசாயம், கைத்தொழில், மற்றும் ஏனைய துறைகளின் இயக்கம் நீர் வளங்களில் தங்கியுள்ளமை. வளி மண்டல கோள அமைப்பில் நீர் கோளம் சிறப்பாக தனி இடம் வகிக்கின்றதாம். அத்தோடு, நீர்வளம் இரு வழிகளில் கிடைக்கின் றதாகும். அதாவது

- ♦ புவிமேற்பரப்பு நீர் (Surface Water Resuurce)
- ♦ நிலத்தடிநீர் (Ground Water Resuurce)

எனக் காணப்படுகின்றது. எனவே புவிக் கோளத்தில் 71% நீரினால் சூழல்பட்டு காணப்படுவதோடு 97.5% உவர் நீராகவும், 2.5% நன்னீராகவும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக காணப்படும் நீர்வளம் ஆசிய நகரங்களுக்கு தற்போது கிடைக்கக் கூடியதாக இருந்து வரும் நீரின் அளவு தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி பெரும் கவலை கொண்டுள்ளதாம். 2025ம் ஆண்டு அளவில் ஆசியாவின் குடித்தொகையில் சுமார் 56% த்தினர் நகரங்களிலேயே வாழ்ந்து வருவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆசிய வளர்முக நாடுகளில்,பசுபிக் பிராந்தியத்திலும் வாழ்ந்து வரும் சுமார் 83 கோடி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை. அதே வேளையில் 200 கோடி மக்கள் போதிய அளவிலான பொதுச் சுகாதார வசதிகள் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர் என ஆசிய வங்கி குறிப்பிட்டுள்ளது

எனவே இத்தகைய விளைவுகளை

கவனத்தில் எடுத்திருக்கும் விஞ்ஞானிகள் 2030 ஆவது ஆண்டளவில் நிச்சயமாக மிகக் கடுமையான ஓர் நீர் நெருக்கடி தோன்றும் என குறிப்பிட்டுள்ளர். நீர் அருமைத் தன்மை காரணமாக இப்பொழுது ஒரு மதிப்பு மிக்க பண்டமாக மாற்றம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலைகளில் கீழ் ஓர் இயற்கை வளமான நீர் சந்தையில் விலையைக் கொண்ட வியாபாரம் செய்யக் கூடிய ஒரு பண்டமாக மாற்றமடைந்துள்ளது. அந்த வகையில் வீட்டு நீர் மற்றும் கைத்தொழில் உபயோக நீர் என்பவற்றுக்கான விலையிடல் இப்போது அமுழில் இருந்து வருகின்றது. இத்துறை தொடர்பாக நீருக்கு விலை நிர்ணயிக்கும் விடயத்தில் பாரிய மாற்றங்கள் எவையும் உத்தேசிக்க வில்லை. இக் கொள்கை ஆவணம் செலவைப் பகிர்ந்து கொளள்ல் என்ற பெயரின் கீழ் நீர்ப் பாசனத் துக்கான நீர் விலையிடல் கொள்கை ஒன்றை உத்தேசிக்கின்றது. எவ்வாறு இருப்பினும் விவசாயிகள் தற்போதைய பொருளாதார நிலையைக் கவனத்திற் கொண்ட பின்னர் விவசாயிகள் பொருளாதார ரீதியில் உயர் நிலையை எட்டும் வரையில் நீருக்கான விலை அரசாங்கத்தினால் செலுத்தப்படும் என பல ஆய்வுகளில் குறிப்பிட்டதாகும்.

மேலும், 1992ல் அயர்லாந்தில் (டப்ளின்) நகரில் இடம் பெற்ற நீர் மற்றும் சூற்றுச் சூழல் தொடர்பான மாநாட்டின் போது நீர் ஓர் பொருளாதாரம் பண்டமாக பிரகடனம் செய்யப்பட்டது. உலக நீர் ஆணைக்குழு 1996ல் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முதலாவது உச்சி மாநாடு 1998 இல் இடம் பெற்றது. உலக வங்கி 1996ல் அதன் அறிக்கையில்! இலங்கையில் நீர் தனியார் துறையினரால் வியாபாரம் செய்யப்பட வேண்டும் என்றும் அந்த இலக்கினைச் சாதித்துக் கொள்ளும் பொருட்டு நீர் வளம் தொடர்பான சட்டவாக்கம் அறிமுகம் செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் GATT அமைப்பும் உலக வர்த்தக நிறுவனமும் நீருக்கான ஒரு சந்தையை உருவாக்குவதன் மூலம் நீர் விநியோகம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயமும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் பொருட்கள் மற்றும் சேவைகள் மட்டுமன்றி நீரும் வியாபாரம் செய்யக்கூடிய ஒரு பண்டமாக ஆக்கப்படவேண்டும் என்ற ஒரு கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஓட்டு மொத்த நீர் உபயோகவிகிதங்களுடன் ஒப்பிட்டு நோக கும் போது! தரையின் மேற்பரப்பில் இருந்து வரும் நீர் மற்றும் நிலத்தடி நீர் என்ப வற்றின் மொத்த வளங்கள் மிகவும் பாரிய அளவில் இருந்து வரும் அதே வேளையில், காலநிலை நிலைமைகள், புவியியல் உபயோக முறை மாதிரிகள் மற்றும் நீர் விலையிடல் கொள்கை என்பவற்றின் விளைவாக உலகின் பல பாகங்களில் நீர் மிகவும் அருமையான ஒரு வளமானதாகக் காணப்படுகின்றது. நிலத்தடி நீர் ஒன்றில் புதுப்பிக்கத்தக்க அல்லது புதுப்பிக்கமுடியாத ஓர் இயற்கை வளமாகக் காணப்படுகின்றது. நிலத்தடி நீர் நிலைகள் மழை நீர் கசிவுக்கு ஊடாக அல்லது பனி உறைதலுக்கு ஊடாக புதுப்பிக்கப்படு கின்றது. நிலத்தடி நீரின் உபயோகம் மீள நிரம்பும் அளவை விட குறைவானதாகும். எனினும் நிலத்தடி நீர் நிலைகளிலிருந்து பெறும் நீரின் அளவு இயற்கை மீள் நிரம்பல் விகிதத்தையும் மிஞ்சியதாக இருந்து வந்தால் நிலத்தடி நீர் புதுப்பிக்கப்பட முடி யாத ஒரு வளமாக இருந்து வரும். மேலும் சொத்து உரிமைகள் ஸ்தாபிக்கப்படா திருந்தால் நிலத்தடி நீர் எவரும் பெற்றுக் கொளக்கூடிய ஒரு வளமாக மாறிவிடும். நிலத்தடி நீர் சேகரமொன்றுக்கு எவரும் உரிமை பாராட்டியிருந்தால் அதிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ள முடியாத ஆட்கள் முன்வருவர். எனவே நீர்ப் பம்புகள் மூலம் இறைக்கும் நீரின் செலவும் குறைந்த மட்டத்திலேயே இருந்து வரும். இதன்

விளைவாக நீர் உயயோகிப்பாளர்கள் உயர் அளவான நீரை நுகர்வதற்கு தூண்டப்படுவர். ஆனால் நீர் உபயோகம் அதிகரித்து செல்லும் போது நீர் இருப்பின் அளவு வீழ்ச்சி அடைந்து நீரை இறைப்பதற்கான செலவு ஒரு காரணமாகி விடுகின்றது.

நீரின் செயல்திறன் கூடிய ஒரு காரணமாகி வருகின்றது.

நீரின் செயல்திறன் மிக்க விலையிடல் மற்றும் உபயோகம் என்பவற்றை நிர்ண யிக்கும் விடயத்தில் ஒரு சில முக்கியமான பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட்டது. அவையாவன!


1. வேறுபட்ட தேவைகளைக் கொண் டிருக்கும் நீர் உபயோகிகப்பாளர்களுக் கிடையே தோன்றக் கூடிய சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருநத்தல்.

2. காலநிலைக் காரணிகளால் நீர் வளங்களில் தோன்றக் கூடிய தளம்பல் நிலைமைகளை கவனத்திற் கொள்ளல்.

தரை மேற்பரப்பு நீர் புதுப்பிக்கக் கூடிய ஒரு வளமாக இருந்து வருவதனால் அது தொடர்பாக ஒரு வரைபட ரீதியாக இதற்கான விளக்கத்தினை கூறலாம்.

இவ் வரைபடம் மூலம் விளக்கினால்! தரை மேற்பரப்பு நீர் தொடர்பாக இரு கேள்வி வளைகோடு காட்டுகின்றது. அவை யாவன!

* DU நீரின் நகர்ப்புற உபயோகிப்பா




ளர்களின் கேள்வியையும்,

* DU கிராமம் பிரதேசங்களைச் சேர்ந்த நீர் உபயோகிப்பாளர்களின் கேள்வி யையும் எடுத்துக் காட்டுகின்றது. விவசாயத் துறையைச் சேர்ந்த நீர் உபயோகிப்பாளர்கள் இருந்து வருவதனால் நகர்புற நீர்ப்பாவனை கிராமப்புற நீர்ப் பாவனையிலும் பார்க்க அதிக அளவுக்கு நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டதாக இருந்து வருகின்றது. கிராமப் புற நீர் உபயோகிப்பாளர்கள் விவசாயத் துறையின் தேவைகளையும் நகர்புற நீர் உபயோகம் இந்த இரு வகையும் சேர்ந்த உபயோகிப்பாளருக்கு கிடைத்து வரும் மொத்த நீரின் அளவை காட்டுகின்றது. இவ்

வரைபடம் மூலம் நீர் விலையிடல் மற்றும் அதன் உபயோகம் என்பன குறித்த முக்கிய மான பல விடயங்கள் எடுத்து விளக்க முடியும்.

முதலாவதாக நீரின் விலை பூச்சியமாக இருந்து வருகின்றது எனக் கருதினால் நீருக்கு ஓர் அலகு விலையை நிர்ணயிப்பதற்கு எத்தகைய முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதில்லை. இந்நிலைமையில் நீருக்கான மொத்தக் கேள்வி OUO + WRO ஆக இருந்து வரும். இது கிடைக்கக் கூடியதாக இருந்து வரும் முழுவதின் நிரம்பல் அளவைப் பார்க்கிலும் மிகைத்துக் காணப்படும் இந்நிலைமையை தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்ள முடியாது என்பது தெளிவாகின்றது. ஏனெனில் இரு குழுக்க ளிடமிருந்தும் வரும் கேள்வியை நிறைவு செய்து வைக்க முடியாது. அருமையான நீரைப் பல்வேறு உபயோகிப்பாளர்களிடம் பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறைகள் கண்டறியப்படவேண்டும்.

நீரைப் பகிர்ந்தளிக்கக் கூடிய பல்வேறு வழிகள் இருந்து வருகின்றன. பொருளாதார ரீதியில் செயல் திறன் மிக்க தீர்வுடன் எடுத்துக் காட்டினால் ஒவ்வொரு குழுவின னாலும் நுகரப்பட்ட இறுதி நீர் அலகு தொடர் பான எல்லைப் பெறுமதி சமனான தாக இருந்து வந்த, நீர் விநியோகத்தின் எல்லைச் செலவுக்கும் சமனானதாக இருந்து வந்தால் அதுவே பொருளாதார செயல்திறனாகும். இந்த எளிய நீர் விநி யோகம் முழுமையாக நெகிழ்ச்சித் தன்மை யற்றதாக இருந்து வருகின்றது. எனவே கேள்வி விலையை நிர்ணயிக்கின்றது. இங்கு DR.DU என செயல் திறன் மிக்க ஒரு சமநிலை தோன்று கின்றது. சமநிலை விலை P* ஆகும். உபயோகிப்பாளர்களிடையே மேலும் ஏதேனும் நீர் பகிர்ந்தளிக்கப்பட்டால் ஒருவரின் எல்லைப் பெறுமதி மற்றவரின் எல்லைப் பெறுமதியை மிகைத்து விடும். குறைந்த பெறுமதி மிக்க பாவனையாளரிடம் இருந்து உயர்தரம் மிக்க பாவனையாள ருக்கு நீரைப் பகிர்ந்தளிக்க முடியும் என்பதும் இதன் மூலம் ஒட்டு மொத்த சமூக நலனை விருத்தி செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. உலகின் பல பாகங்களில் நீர் உரித்துக்கள் இந்த விதத்தில் செயற்பட்டு வரவில்லை. உதாரணமாக! ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் முன்னர் நீரைப் பிரித்தெடுக்கும் உரிமைகள் தொடர்பான கோட்பாடு இருந்து வருகின்றது. நீரை முதலில் உபயோகிக்கும் நபர் ஒரு சொத்துரிமையைப் பெற்றுக் கொள்வதுடன், அதனை பெரும்பாலும் வியாபாரம் செய்யமுடியும். இத்தகைய உரிமைகள் பொருளாதார செயல்திறமைக்கு பங்களிப்புச் செய்கின்றன. கிராமிய உபயோகிப்பாளர்கள் ஒரு முன்னுரிமை யைக் கொண்டிருப்பதுடன் தமக்கு கிடைக்கும் நீரை உபயோகிக்கும்/ இழந்து விடவேண்டியவர்களாக இருந்து வருகின்றன. நீர் விநியோகத்தில் தட்டுப்பாடு நிலவி வரும் காலங்களில் முதலில் நீரைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும் உபயோகிப்பா ளர்கள் பின்னர் பெற்றுக் கொள்ள வேண்டி யிருக்கும் உபயோகிபாளர்களை முந்தி தமக்கு அவசியமான நீரைப் பெற்றுக் கொள் வார்கள் என்பதனைக் காட்டுகின்றது. இதனை பெறுபவர் முதலில் உபயோகிப் பவர் என்றகோட்பாட்டின் எளிமையான மாதிரிக் கூடாக எடுத்து விளக்க முடியும். கிராமிய நீர் உபயோகிப்பாளர்கள் ஒரு முன் னுரிமையைக் கொண்டுள்ளார்கள் எனக் கருதுவோம். அவர்கள் நீருக்கான தமது கேள்வி முடிவடையும் வரையில் அதனை நுகர்வார்கள். அதாவது அவர்கள் சிறு அளவு நீரை பயன்படுத்துவதுடன் முழு அளவினை மட்டுமே நகர உபயோகிப்பாளர்களுக்கு விட்டு வைப்பார்கள். W இக் இடது புறத்தில் இருக்கும் தொகைகளுக்கும் நகர உபயோகிப்பாளர்கள் நீருக்கான ஓர் உயர் பெறுமதியை கொண்டிருப்பதனால்

பொருளாதார விரயம் ஏற்படுகின்றது.

பல நாடுகளில் நீர் விநியோகத்தை அரசாங்கமே கட்டுப்படுத்தி வருகின்றது. இந்நாடுகள் பொதுவாக பொருளாதார செயற்பாடுகளின் அடிப்படையில் நீரைப் பகிர்ந்தளிப்பதில்லை. அதற்கு பதிலாக வேறு சில அளவு கோல்களை உபயோகித்து வருகின்றன. நியாயம் அல்லது சமத்துவம் என்ற விடயம் இங்கு வழிகாட்டும் கோட்பாடாக இருந்து வருவது போல் தெரிகிறது. கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கு சாகுபடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீர்ப்பாசனம் அவசியமானதாகும். நகர் புறங்களில் வாழும் வீடுகளில் நீர்ப்பாசனம் மிக முக்கியமானது என அரசாங்கங்கள் கருதக் கூடும். அதன் காரணமாக அவை நகர நீர் உபயோகிப்பவர்களிடமிருந்து அறவிடும், கட்டணங்களைப் பார்க்கிலும் குறைந்த கட்டணங்களை கிராமியத் துறையைச் சேர்ந்த உபயோகிப்பாளர்களிடம் இருந்து அறவிடமுடியும். இது நீரின் செயல் திறன் மிக்க வெளியீடு என்ற முறைக்கு மாறாக இருந்து வருவதுடன் இதன் இறுதி விளைவாக கிராமியத்துறை நீர் உபயோகிப்பாளர்களைப் பார்க்கிலும் சார்பு ரீதியில் உயர் அளவிலான நீரை நுகரும் ஒரு நிலை தோன்றுகின்றது.

மேலும், காலநிலை நிலைமைகளுக்கு ஏற்ற விதத்தில் நீர் வழங்கல் நிலை தளம்பிச் சென்றாலும் நீர் விநியோகத்தில் செயல் திறனை எடுத்து வருவது சாத்தியமில்லாது போய்விடும். ஒரு வரட்சி நிலை நிலவி வருவதாகவும் கிடைக்கக் கூடியதாகவும் இருக்கும் நீரின் வழங்கல் மட்டும் இங்கு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. அதே போல W அளவுக்கு குறைந்து விடுகின்றது. என அனுமானித்துக் கொள்வோம். இப்போது BUDT என்ற இடத்தில் ஒரு விலை இருந்து வருவதில்லை. எனவே உயர் பெறுமதி மிக்க நீர் உபயோகிப்பாளர்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும். ஒட்டு மொத்த நீர் வழங்கல் தொடர்பாக கிராமிய உபயோகிப்பாளர்களைப் பார்க்கிலும் உயர் விலையைச் செலுத்தக் கூடியவர்களாக இருந்து வரமுடியும். மக்களில் ஒரு பிரிவினர் நீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றும். சந்தைச் சமநிலையொன்று ஏற்படுவதற்கு அரசாங்கங்கள் இடமளிக்கும் என எதிர் பார்க்க முடியாது. எனவே நீரைப் போன்ற ஓர் அத்தியாவசிய பண்டத்தை விநியோகிப்பதில் சந்தைகள் அவசியமானதாகவே இலட்சிய ரீதியான பொறிமுறையாகவே இருந்து வரவில்லை. நீரின் சந்தைப் பகிர்வு முறையை ஏனைய பண்டங்களில் சந்தைப் பகிர்விலிருந்து வேறுபடுத்தி நோக்க முடியும். அடுத்து, நீர் எவ்வாறு விலையிடப்பட்டு வருகிறது என்பதனையும், மாற்று விலையிடல் முறைகளின் மூலம் செயற்திறனை எவ்வாறு விருத்தி செய்து கொள்ள முடியும் என்பதனை நோக்குவோம். அந்தவகையில் ஒவ்வொரு உபயோகிப்பாளர்களினதும் நீரின் எல்லைப் பெறுமதி சமமாக இருந்து வருவதுடன் அது நீரைப் விநியோகிக்கும் எல்லைச் செலவுக்கு சமமானதாக இருந்து வரும் நிலையில் பொருளாதார செயற்திறன் மிக்க நீர் உபயோகமும் விலையிடலும் இடம் பெறுகின்றது. நடைமுறையில் இது மிகவும் அரியதாகவே இடம் பெறுகின்றது. செயல் திறன் மிக்க நீர்ப் பகிர்வினைத் தடுப்பதில் சொத்து உரிமைகளை வழங்கும் நிலை மிகவும் முக்கியமான ஒரு காரணியாக இருந்து வரும் என்ற விடயத்தை ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. வட அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் நீரைப் பகிர்ந்தளிப்பதற்கென அரசாங்கங்கள் சந்தை முறையைப் பயன்படுத்தி வருகின்றன. ஆனால் நீர் தொடர்பான சந்தைகள் எல்லா இடங்களிலும் காணப்படுவதில்லை. இதற்கு இரு காரணங்கள் உள்ளன. அவையாவன:

1. நீருக்கான ஒட்டுமொத்த கேள்வி நீர் விநியோகத்தின் எல்லைச் செலவுக்கு

சமனாக இருக்கும் இடத்தில் நீரின் விலை நிர்ணயிக்கப்பட்டால் வழங்குனர் ஓர் உற்பத்தி மிகையை அல்லது ஒரு வாடகையைப் பெற்று விடுவார்.

2. சந்தை விலைகள் பெருமளவுக்கு உயர்ந்த மட்டத்தில் காணப்படமுடியும். குறைவருமானப் பிரிவினரால் சந்தை விலையில் நீரைக் கொள்வனவு செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்படலாம். அல்லது,

வருமானத்தில் கணிசமான ஒரு தொகையை நீருக்காக செலவீடு செய்ய வேண்டி நேரிடலாம்.

வீட்டு உபயோகத்துக்கென வழங்கப்பட்டு வரும் நீர் தொடர்பாக பின்பற்றி வரும் விலையிடல் நடைமுறைகளையும் அதனையடுத்து விவசாய நீர் உபயோகத்தையும் எடுத்து நோக்கினால்! வீடுகளுக்கு குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர் என்பவற்றை விநியோகிப்பதற்கு கணிசமான அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டிய தேவை இருந்து வருகின்றது. முதலில் நீர் ஏரிகள், நீர்த்தேக்கங்கள், ஆறுகள், சமுத்திரங்கள் போன்ற ஏதேனும் ஒரு மூலாதாரத்திலிருந்து சேகரிக்கப்படுதல் வேண்டும். அரசாங்கங்கள் பொதுவாக அத்தகைய மூலதாரங்களின் உரித்தைக் கொண்டுள்ளன. அல்லது அவற்றை ஒழுங்குபடுத்தி வருகின்றன. அடுத்ததாக நீரினைச் சுத்திகரித்தல் வேண்டும். நீரைச் சுத்திகரிப்பதில் பொருளாதார சிக்கனங்கள் இருந்து வருகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனினும், தற்பொழுது தனிநபர்களுக்கு கிடைத்துவிடும் சார்பு ரீதியில் செலவு குறைந்த நீர் சுத்திகரிப்பு தொழில் சட்டங்களின் அறிமுகத்தினால் இந்தக்கருத்துக்கு சவால்விடுக்கப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் இன்னமும் கூட வீடுகளுக்கான நீர் விநியோகத்தில் ஓர் இயற்கை ஏகபோக நிலை நிலவி வருகின்றது. நீர்க் கட்டமைப்புக்கள் பொதுவாக அரசாங்கத்துக்குச் சொந்தமானவையாக இருந்து வருவதுடன் நீர் குழாய் வழிகளை நிர்மாணித்து பராமரிக்கும் பொறுப்பு அரசாங்கத்திடம் இருந்து வருகின்றன. கட்டணங்கள் நீர் சேகரிப்பு, சுத்திகரித்தல், விநியோகம் என்பவற்றுக்கான செலவுகள் உள்ளடக்க வேண்டியிருப்பதனால் இது நீரின் விடயத்தை சிக்கல் மிக்கதாக்கிவிடுகிறது. வளர்முக நாடுகளில் பொதுக் கிணறுகளில் மட்டுமே சுத்திகரிக்கப்பட்ட நீர் கிடைக்கப்பெறும். வீடுகளில் வசிப்பவர்கள் நிலத்தடி நீர்வளங்களை உபயோகித்து தமது சொந்தக் கிணறுகளை உருவாக்கிக் கொள்ள முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நீரைப் பெற்றுக் கொள்வதற்கான அனைத்துச் செலவையும் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்கின்றனர்.

உள்ளூர் ஏகபோக அமைப்புகளான மாநகர சபை நீர் விநியோகத் திட்டங்களுக்கூடாக நீர் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் இம் முறை இரு வழமையான பொது விலையிடல் முறைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

1. நீர் எந்த அளவு நுகரப்பட்டாலும் ஒரு பொதுவான கட்டணம்

2. நுகரப்படும் நீரின் அளவை அடிப்படையாகக் கொண்ட அலகு விலையிடல்

இது உயர் அளவில் செயல் திறனற்ற ஒரு முறை என்பது தெளிவாகும். இங்கு மற்றொரு கலன் நீரை நுகர்வோரின் எல்லை விலை நுகரப்படும் அனைத்து அலகுகள் தொடர்பாகவும் பூச்சியமாகவே இருந்து வருகின்றது. மாநகர சபையினால் விநியோகிக்கப்படும் நீரின் எல்லை விலை பூச்சியமாக இருந்து வரவில்லை. தமது நீர் உபயோகிப்பாளர்கள் தொடர்பாக மீற்றர்களைப் பொருத்தாதிருக்கும் மாநகர சபைகளிலும் பார்க்க வருடாந்தம் இரு மடங்கு நீர் நுகரப்பட்டு வருவதனை ஓர் ஆய்வு எடுத்துக்காட்டப்படுகின்றது. எனினும் மீற்றர்களை

பொருத்தும் செலவு குறிப்பித்தக்க அளவில் உயர் அளவாக வருவதில்லை. குடித் தொகை அதிகரித்து வருவதுடன் இணைந்த விதத்தில் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் விநியோகம் தொடர்பாக தற்போதைய கட்டமைப்புகளின் மீது பெருமளவில் அமுக் கங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. மீற்றர்கள் இல்லாதிருக்கும் நிலை ஒரு முக்கிய மானதொரு பிரச்சினையாக இருந்து வருவது டன் மிதமிஞ்சிய அளவிலான நீர் நுகர்வுக்கு வழிகோலும் ஒரு விடயமாகக் காணப்படு கின்றது.

நீர் விநியோகம் தொடர்பாக மீற்றர் களைப் பொருத்தியிருக்கும் மாநகர சபை கள் செயல்திறனற்ற விலையிடல் கொள் கைகளையே பொதுவாக பின்பற்றி வருகின் றன. ஏகபோக விநியோகஸ்தர்கள் என்ற முறையில் மாநகர சபைகள் நீருக்கான விலைகளை நிர்ணயிக்கும் விடயத்தில் ஒரு தடுமாற்ற நிலையை எதிர் கொள்கின்றன. ஏற்கனவே குறிப்பிட்டது போல அவை நீரின் மூலம் மேலதிக இலாபங்களை அல்லது வாடகைகளை பெற்றுக்கொள்வதனை ஒழுங்கு விதிகள் தடுக்கின்றன. மேலும் குறைவருமான சமூகப் பிரிவினருக்கு கட்டுபடியாகாத விதத்தில் நீருக்கு உயர் அளவில் விலையிடவும் அவை விரும்புவ தில்லை. இதன் விளைவாக நுகரப்படும் ஒரு அலகு நீரின் விலை பொதுவாக எல்லா விலையிலும் பார்க்க குறைவாக நிர்ண யிக்கப்பட்டு வருகின்றது. நீர் அதன் உபயோகத்தின் சந்தர்ப்பச் செலவை உபயோகிக்கும் வகையில் அதற்கு ஒரு பெறுமதி சேர்க்கப்படவில்லை. மேலும் சராசரி செலவுகள் நீரை வழங்குவதற்கான வரலாற்று ரீதியான செலவுகளை அடிப்படை யாகக் கொண்டுள்ளன. பொதுவாக வர லாற்று ரீதியான செலவுகள் கொள் திறனை அதிகரிக்கும் செலவு அல்லது பழைய உபகர ணங்களுக்குப் பதிலாக புதிய உபகரணங் களை பொருத்தும் செலவு மற்றும் நகர வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் புதிய விநியோகக் கட்டமைப்புக்களை நிர் மாணிக்கும் செலவு என்பவற்றை பார்க் கிலும் பெருமளவுக்குக் குறைவானதாகவே இருந்து வரும். இந்த நிர்மாணச் செலவுகள் மற்றும் புதிதாக உபகரணங்களைப் பொருத்து வதற்கான செலவுகள் என்பன அனைத்து நீர் உபயோகிப்பாளர்களிடம் இருந்து அறவிடப் படும் ஒரே அளவிலான வருடாந்த கட்ட ணங்கள் மூலமே ஈடு செய்யப்பட்டு வரு கின்றது. அவ்வாறில்லாவிடில் உள்ளூர் சொத்து வரிகளை உயர்த்துவதன் மூலம் கடன்களை பெற்றுக் கொள்வதன்மூலம் அல்லது அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் இருந்து மானியங்களைக் கோருவதன்மூலம் அச் செலவுகள் ஈடு செய்யப்பட்டு வரு கின்றன. இறுதியாக இவற்றின் விளைவாக குறை நிதிப்படுத்தல் மற்றும் உயர் வரிகள் அல்லது இவை இரண்டும் தோன்றுகின்றன. இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாது எனின்! நீரை வழங்குவதற்கான செலவை பிரதிபலிக்காத விலைகள் உபயோகிப் பாளர்களுக்கு ஒரு பாரிய மானியத்தை வழங்குவதுடன், நீரைச் சேமிப்பிப்பதற்கான தூண்டுதலையும் அளிப்பதில்லை. பின் பற்றப்பட்டு வரும் மற்றொரு பொதுவான விலையிடல் முறை குறைவடைந்து வரும் தொகுதி விலையாகும். ஆரம்பத்தில் நுகர ப்படும் குறித்துரைக்கப்பட்ட ஓர் அளவு நீருக்கு உயர் எல்லை விலையொன்று அறவிடு வதுடன் அதன் பின்னர் நுகரப்படும் நீர்த் தொகுதிகளுக்கு குறைந்த அளவிலான அலகு விலை அறவிடப்படுகின்றது. இந்த செயல் திறன் அற்ற நடைமுறை நீரின் மிகை நுகர்வுக்கு ஊக்கம் அளிக்கின்றது. குறைந்த அளவில் நீரை நுகரும் போது நுகர்வோரை மானியப்படுத்தப்பட வேண்டிய நிலை இதன் மூலம் ஏற்படுகின்றது. மேலும் ஏற்கனவே குறிப்பிட்டது போல புதிய நீர் விநியோகக் கட்டமைப்புக்களை நிர்ணயிக்கும் செலவு பெரும்பாலான பிராந்தியங்களில் மிக

உயர்வானதாகவே இருந்து வருகின்றது. நீரை வழங்குவதுடன் தொடர்பான செலவுக் கட்டமைப்பின் பின்னணியில் நோக்கும் போது நீர்த் தொகுதியின் அடிப்படையில் விலையிடல் முறை நேர் எதிரான விதத்தி லேயே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதாவது முதலில் நுகரப்படும் குறிப்பிட்ட ஓர் அளவில் நீருக்கான விலை பாரிய அளவில் நுகரப்படும் நீரின் விலையிலும் பார்க்க குறைவானதாக இருந்து வருதல் வேண்டும்.

நீர் நுகரப்படும் அலகுகள் அதிகரித்துச் செல்லும் பொழுது விலைகளும் அதிகரித்துச் செல்லும் நிலை ஏனைய முறைகளிலும் பார்க்க பல அனுகூலங்களைக் கொண்டுள்ளது. அந்தவகையில்

1. முதல் உபயோகத்தில் இருந்து அடுத்த கட்ட உபயோகத்துக்கான நீரின் எல்லை விலையை அதிகரிக்கச் செய்வதனால் பெருமளவுக்கு செயற்திறன் கொண்ட நீரும் பாவனைக்கு ஊக்கம் அளிக்கின்றது.

2. நீருக்கான கேள்வி தொடர்பான உச்சமட்ட அளவுகளை சமாளிப்பதற்கான முறையை பின்பற்ற முடியும்.

உதாரணமாக வரட்சி நிலவிடும் கோடைகால மாதங்களில் மேலதிக நீர் விநியோகம் தேவைப்பட்டால் அதற்கான உயர் தொகுதி விலை அறவிடலாம்.

இது நீரை விநியோகிப்பதற்கான மேலதிக செலவுகளை சமாளிப்பதற்கு உதவுவதுடன் நீரைப் பாதுகாப்பதற்குமான தூண்டுதல் அளிக்கும். பல மாநகர சபைகளில் குறிப்பிட்ட பருவங்களில் நீருக்கான கேள்வி உயர்மட்டத்தில் நிலவி வரும் பொழுது ஒரு வகையான பங்கீட்டுமுறை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இது ஆகக் கூடிய விலையை செலுத்தக்கூடிய உபயோகிப்பாளர்களுக்கு நீரைப் பகிர்ந்தளிப்பதற்குப் பதிலாக ஒரு சமத்துவக் கோட்பாட்டினைப் பின்பற்றுகின்றது.

3. குறை வருமான உபயோகிப்பாளர்களுக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் அது பின்னர் பயன்படுத்தப்படும் நீரின் தொகுதி விலைகளை உயர்த்துகின்றது. தொடக்கத்தில் வழங்கப்படும் நீரின் தொகுதி அத்தியாவசிய நீர்த் தேவையை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் அதற்கு குறைவருமானம் பிரிவினருக்கு கட்டுப்படியாக கூடிய ஒரு விலை நிர்ணயிக்கப்படுகின்றது. அதிகரிக்கும் நீர் அலகு அடிப்படையிலான விலையிடல் பின்பற்றப்பட்டால் குழு அளவலான எல்லைச் செலவை அதற்குரிய விலையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. அரசாங்கம் பொதுவாக உயர் செலவுப் பாவனையாளர்கள் மற்றும் குறைந்த செலவுப் பாவனையாளர்கள் என்பவர்களுக்கிடையே வேறுபாடு காட்டாதிருத்தல் வேண்டும். உதாரணமாக உயர் செலவுப் பாவனையாளர்கள் மலைகளில் வாழ்ந்து வரும் போது அவர்களுக்கு கிடைக்கும் நீர் அந்த மலைக் பகுதிகளுக்கு இறைக்கப்படல் வேண்டும். அவர்களுடைய தேவையை நிறைவேற்றுவதற்காக நீர்த் தேக்கத்தின் கொள்திறன் அதிகரிக்கப் படுதல் வேண்டும். எனவே நீர் விலையிடல் செயற் திறனை எடுத்து வரும் பொருட்டு புதிய உபயோகிப்பாளர்களும் நீர் இறைப்பதற்கு செலவுகள் ஏற்படும் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் உபயோகிப்பாளர்களும் உயர் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

குறிப்பாக நீர்ப்பாசனத்துக்கென விவசாயத் துறையில் பாரிய அளவிலான நீர் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய விலையை உபயோகிப்பாளர்களிடம் அறவிடப்படும் விலை அவர்களுக்கு நீரை விநியோகிப்பதற்கான எல்லைச் செலவினை பெறுவதற்காக பிரதியில்லை. விவசாய நீர் விநியோகத்திற்கு மானியங்களை வழங்குவதன் மூலம் விவசாயத் துறைக்கு உதவுவதே அரசாங்கத்தின் கொள்கையாக

இருந்து வருகின்றது. விவசாயத்தில் பயன் படுத்தப்படும் நிர் பெரும்பாலான சந்தர்ப் பங்களில் மிக மோசமான சுற்றுச் சூழல் தாக்கங்களை எடுத்து வருகின்றது. உர வகைகள் கலந்திருக்கும் நீர்ப்பாசன நீரின் ஓட்டம் மண்ணில் உவர்த்தன்மையை எடுத்து வருவதுடன் நீர் நிலைககளையும் மாசு படுத்துகின்றது. நீர் மானியப்படுத்தப்படு வதன் காரணமாக விவசாயத்தில் செயல் திறன் அற்ற சாகுபடிப் பயிர்கள் தெரிவு செய்யப்படுகின்றன. பெறுமதி குறைந்த பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நீர் பகிர்ந்தளிக்கப்படுவதனால் உயர் மதிப்பு மிக்க பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசா யிகளுக்கு இந்த வாய்ப்பு இல்லாமல் போகின்றது. இது பயிர் தெரிவுகளில் திரிபுகளை எடுத்து வருகின்றது.

நீர்ப்பாசனம் தொடர்பாக பொருத்த மான விதத்தில் விலையிடல் மேற்கொள்ளப் பட்டால் குறைந்த பெறுமதி கொண்ட நீர் உபயோகிப்பாளர்களின் வெளியீட்டில் ஒரு வீழ்ச்சி ஏற்படுவதுடன் உயர் பெறுமதி மிக்க நீர் உயயோகிப்பாளர்களின் வெளியீட்டில் ஓர் அதிகரிப்பு ஏற்படும். அரசாங்கம் இத்தகைய பிரச்சினைகளையை இனங் கண்டு இப்பொழுது படிப்படியாக நீர் விலைகளில் சீராக்கங்களை மேற்கொள்வ துடன் இத்துறையில் வரையறுக்கப்பட்ட அள விலான சந்தைச் செயற்பாடுகளுக்கு இடம் அளித்து வருகின்றது. எனினும் விலைகள் இன்னும் செயற் திறன் மட்டங்களை எட்டியிருக்கவில்லை. நீர் பகிர்ந்தளிப்பதில் காணப்படும் வெவ்வேறுபட்ட நிலைமை களின் விளைவாக இத்தகைய செயற் திறனற்ற நீர் விலையிடல் நிலைமையைப் தேற்றம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

"Every thing orginated in the water
Every thing is sustained by water"

*-Geethe-*

# உற்பத்திக் காரணிகளிற்கான விலை நிர்ணயிக்கப்படும் விதம்

*Miss. M. Sutharsiny*
*2009/A/ 219*

உற்பத்தி என்பது பொருளாதாரத்தில் பயன்பாட்டை உருவாக்குவதாகும். ஒரு பொருளை உருவாக்குவதற்குத் தேவையான காரணிகளே உற்பத்திக் காரணிகளாகும். இவை உள்ளீடுகள் (Inputs) எனப்படுகின்றன. உற்பத்திக்கு ஆதாரமானவையாக அமைவதனால் உற்பத்திக் காரணிகள் எனப்படுகின்றன. உறபத்திக் காரணிகளாக,

1. நிலம் / இயற்கை வளங்கள்
2. உழைப்பு / ஊழியம்
3. மூலதனம் / முதல்
4. முயற்சி / முயற்சியாண்மை

என்பன காணப்படுகின்றன. இவற்றுள் நிலம், உழைப்பு என்ற இரு காரணிகளும் முதல்நிலை உற்பத்திக் காரணிகள் என்றும், மூலதனம், முயற்சியாண்மை என்ற இரு காரணிகளும் நிலை உற்பத்திக் காரணிகள் எனவும் கூறப்படுகின்றன.

உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வியானது வழி வந்த கேள்வி (Derived Demand) எனக் கூறப்படும். அதாவது இறுதிப் பொருட்கள், சேவைகளின் வழியாக உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி ஏற்படுவதனால் இங்கு வழிவந்த கேள்வி எனப்படுகின்றது. இதன்படி உற்பத்திக் காரணிகளுக்கான விலைகள்,

1. நிலத்துக்கான வாடகை
2. உழைப்புக்கான கூலி
3. முதலுக்கான வட்டி
4. முயற்சிக்கான இலாபம்

எனத் தீர்மானிக்கப்படுகின்றன. காரணிகள் விலைகள் என்று இங்கு குறிப்பிடுவது, குறிப்பிட்ட காலத்துக்கு அக்காரணிகள் வழங்கும் சேவைக்கு எவ்வாறு விலை நிர்ணயிக்கப்படுகின்றது என்பதாகும்.

குறிப்பிட்ட நிலத்தின் விலை அல்லது பெறுமதி எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது என்பதனை இங்கு ஆராய்வதில்லை. பதிலாக, குறிப்பிட்ட காலத்துக்கு அந்நிலத்தைப் பயன்படுத்துவதற்கான வாடகை அல்லது விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது என்பதனையே ஆராய்கின்றது. அதேபோன்று, உழைப்பைப் பொறுத்து ஒரு தொழிலாளியின் விலை என்னவென்று இங்கு ஆராய்வதில்லை. பதிலாக, குறிப்பிட்ட காலத்திற்கு அத்தொழிலாளி வழங்கும் உழைப்புக்கான விலை அல்லது கூலி எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது என்பதனையே ஆராய்கின்றது.

தொழில்சார் வருமானப் பங்கீட்டினை சிற்றின ரீதியாக அல்லது பேரின

ரீதியாக எடுத்து நோக்க முடிகின்றது. இங்கு சிற்றின ரீதியான பங்கீட்டுக் கோட்பாட்டு என்பது வட்டி, வாடகை, இலாபம் என்பன எவ்வாறு நிர்ணயிக்கப் படுகிறது என்பது பற்றி ஆராய்கின்றது பேரினப்பங்கீட்டுக் கோட்பாடு என்பது மொத்தத் தேசிய வருமானத்தில் உழைப்பின் பங்கு, வாடகையின் பங்கு, இலாபத்தின் பங்கு என்பன எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பது பற்றி ஆராய்கின்றது. பேரினப் பங்கீட்டுக் கோட்பாட்டின் படி தேசிய வருமானம் பங்கிடப்படும் விதத்தினை நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| | A | |
| கூலிகள் | B | |
| வாடகை | C | தேசிய |
| வட்டி | D | வருமானம் |
| இலாபம் | E | |

மொத்த தேசிய வருமானத்தில் மொத்தக் கூலிகள் AB எனவும், மொத்த வாடகை BC எனவும், மொத்த வட்டி CD எனவும், மொத்த இலாபம் DE எனவும் காட்டப்படுகின்றது.

குறித்த ஒரு பொருளுக்கான விலையை அப்பொருளுக்கான கேள்வியும், நிரம்பலும் தீர்மானிப்பது போலவே ஒரு காரணிக்கான விலையினை அக்காரணிகளின் கேள்வியும், நிரம்பலும் தீர்மானிக்கின்றது. காரணிகளுக்கான கேள்வி என்பது பொருட்களிற்கான கேள்வி என்பதிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. காரணிகளுக்கான கேள்வியானது அக் காரணிகளைக் கொண்டு தேவையான பொருட்களை உற்பத்தி செய்யலாம் என்பதற்காவே உற்பத்திக் காரணிகளுக்கு கேள்வி ஏற்படுத்தப்படுகின்றது. அதாவது முடிவுப் பொருட்களுக்கு ஏற்படும் கேள்வியின் காரணமாகவே அவற்றை உற்பத்தி செய்யும் நோக்குடன் காரணிகளுக்கான கேள்வி ஏற்படுத்தப்படுகின்றது. உதாரணமமாக நெல்லுக்கான கேள்வி இருப்பதன் காரணமாகவே நிலத்துக்கான கேள்வி ஏற்படுகின்றது. நிறுவனங்கள் கணனியை கூடுதலாக உபயோகிக்க முன்வரும்போது கணனி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கான கேள்வி அதிகரிக்கின்றது. இவ்வாறாக காரணிகளுக்கு ஏற்படும் கேள்வி வழிவந்த கேள்வி என அழைக்கப்படுகின்றது.

காரணிகளுக்கான கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளில் மாற்றமேற்படும் போது, காரணிகளுக்கான கேள்விக் கோடு அல்லது எல்லை வருமான உற்பத்திக்கோடு (MRP) மாற்றமடைகின்றது. குறிப்பிட்ட காரணிகளுக்கான கேள்வி, அக்காரணியைப் பயன்படுத்திச் செய்யும் பொருளுக்கான கேள்வியில் தங்கியுள்ளது. அப்பொருளுக்கான கேள்வி அதிகரிக்குமாயின், உற்பத்திக் காரணிக்கான கேள்வியும் அதிகரிக்கும். உற்பத்தி காரணிகளின் கேள்வியைத் தீர்மானிக்கும் இன்னொரு காரணி உற்பத்தித் திறன் என்பதாகும். விலை அல்லது சராசரி வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தினைப் போல் எல்லை பௌதீக உற்பத்தியில் ஏற்படும் மாற்றம் எல்லை வருமான உற்பத்தியை அல்லது காரணிகளுக்கான கேள்விக் கோட்டை முழுமையாக நகர்த்தும் தொழிலாளிக்கு கல்வி, பயிற்சி போன்றன வழங்கப்படும் போது உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கின்றது. தொழில் நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றத்தினாலும் எல்லைப் பௌதீக உற்பத்தி அதிகரிக்கும்.

குறித்த ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குப் பல காரணிகள் பயன்படுத்தப்படலாம். எனினும், உற்பத்தியாளன்

மலிவான விலையில் கிடைக்கக் கூடிய காரணியை ஒப்பீட்டு ரீதியில் சேர்த்து குறைந்த செலவில் உற்பத்தியை மேற் கொள்ள முனைவர். உற்பத்திக் காரணி யின் விலையில் கிடைக்கக்கூடிய காரணியை ஒப்பீட்டு ரீதியில் சேர்த்து குறைந்த செலவில் உற்பத்தியை மேற் கொள்ளமுனைவர். உற்பத்திக் காரணி யின் விலையில் ஏற்படும் மாற்றத்திற் கேற்ப உற்பத்திக் காரணிக்கான கேள்வி யில் எத்தகைய மாற்றம் ஏற்படுகின்றது என்பதைக் கூறுவதாகவே காரணிக்கான கேள்வி நெகிழ்ச்சி அமைந்துள்ளது. உற்பத்திக் காரணிக்கான விலை வீழ்ச்சி யடையும்போது உற்பத்திச் செலவு குறைவடைகின்றது. இதனால் குறிப்பிட்ட பொருளுக்கான நிரம்பல் கோடு வலது பக்கம் நகர்கின்றது. இதனால் பொருளின் விலை முன்பிலும் பார்க்கக் குறைவாக இருக்க, அவ்விலையில் அதிக அலகுகள் விற்பனைக்கு வழங்கப்படும். குறிப்பிட்ட பொருளுக்கான கேள்வி நெகிழச்சியானது உயர்வாக இருக்குமாயின், விற்பனையும் ஒப்பீட்டு ரீதியில் அதிகமாக இருக்கும் இதனால் ஒப்பீட்டு ரீதியில் உற்பத்திக் காரணிக்கான கேள்வி அதிகரிக்கும்.


ஒவ்வொரு உற்பத்திக் காரணியும் அதற்கான தனித்தன்மையைக் கொண் டுள்ளன. இங்கு நிலம் என்ற காரணியை எடுத்துநோக்குமிடத்து, நிலத்திற்கென்று சில தனித்தன்மைகள் உள்ளன. நிலம் என்ற சொல் நிலப்பரப்பை மட்டும் குறிக் காமல் எல்லா இயற்கை வளங் களையும் குறிக்கின்றன. நிலம் இயற்கை யின் நன்கொடையாகக் கருதப்படுகின்றது. அதன் நிரம்பல் நிலையானது. இதை நகர்த்த முடியாது. நிலம் வெவ்வேறு தன்மைகளைக் கொண் டது. செழிப்புத் தன்மையில் வேறுபாடு டையது. நிலம் குறைந்து செல் விளைவு விதிக்குட்பட் டது. மரபு ரீதியாக பொருளி யலில் நிலத்தின் நிரம்பல் பூரண நெகிழ்ச்சியடை கிறது எனக் கூறப்பட்டது. பயிர்ச் செய் கைக்குக் கிடைக்கும் செழிப்பான நிலத் தையே நிலத்தின் நிரம்பல் எனக் கருதின் அத்தகைய நிரம்பல் அதிகளவு தளம் பலுக்குட்படும்.

உழைப்பு என்பது மற்றக் காரணிகளிலி ருந்து வேறுபட்டது. உழைப்பை உழைப் பாளரிடம் இருந்து பிரிக்க முடியாது. இது நேரடியாகச் செலுத்தப்பட வேண்டியது. உழைப்பின் நிரம்பல் மாறுதலுக்குட்பட் டது. இது திறமையானதாகவும், திறமை யற்றதாகவும் உள்ளது. உற்பத்தியில் பயன்படுத்தப்படுவதற்கு மனிதனால் உருவாக்கப்பட்ட சாதனங்கள் மூலதன மாகும். இது அதன் உரிமையாளருக்கு வருமானம் தருகின்றது. மூலதனத்தில் எல்லா வகையான மூலதனக் கருவிகளும் அடங்கும். இங்கு உற்பத்திக் காரணிகளுக் கான விலை அதன் எல்லை உற்பத்தித் திறனில் தங்கியுள்ளது எனக் கூறப்படு கின்றது.


ஒரு உற்பத்தியாளன் ஒரு உற்பத்திக் காரணியினை வேலைக்கு அமர்த்துவது (உதாரணமாக ஒரு தொழிலாளியை) அதன் உற்பத்தித் திறனுக்கேற்பவே ஆகும். முயற்சியாளர் அக்காரணியின் உற்பத்தித் திறனுக்கேற்ப வேலை வழங்குவதற்குச் தயாராக உள்ளார். காரணியில் உற்பத்தித்திறன் கூடுதலாக இருக்குமாயின் முயற்சியாளர் அதற்குக் கூடிய விலை கொடுப்பதற்குத் தயாராக உள்ளார். உதாரணமாக அறிவு மிக்க வேலையில் கவனமுள்ள தொழிலாளி உற்பத்திக்கு அதிகளவு பங்களிப்பு வழங்கும்போது முயற்சியாளர் அவருக் குக் கூடிய கூலியை வழங்குகின்றனர். இதேபோன்று, இயந்திரமொன்று அதிகளவு வருமானத்தைக் கொண்டு வரக்கூடியதாக

இருக்குமாயின் உற்பத்தியாளர் அதற்குக் கூடிய விலை வழங்கத் தயாராக இருக்கும் ஒரு உற்பத்திக் காரணியானது எல்லை உற்பத்தி என்பது, உற்பத்திச் செயன்முறையில் காரணியொன்றின் மேலதிகமான அலகினை ஈடுபடுத்தும் போது மொத்த உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பாகும். நிறைபோட்டிச் சந்தை அமைப்பின் கீழ் சந்தையில் கொடுக்கப் பட்ட விலையில் எவ்வளவு அலகுகளை விற்பனை செய்ய முடியுமோ அந்த அளவிற்கு அங்கு விலையும், எல்லை வருமானம் சமமாக இருப்பதால் எல்லை வருமான உற்பத்தியும், எல்லைப் பெறுமான உற்பத்தியும் ஒரே பெறுமதியுடைய தாக இருக்கும்.

இங்கு படம் 1 நிறைபோட்டிச் சந்தையின் கீழ் உள்ள நிலைமைகளையும், படம் 2 நிறைவில் போட்டி காணப்படும் நிலைமையையும் விளக்குகின்றது.





படம் - 1





படம் - 2

தனியுரிமையின் கீழோ அல்லது நிறைபோட்டி நிலைமைகளின் கீழே உற்பத்திக் காரணியின் MRP கோடே அதனது கேள்விக் கோடாக அமையும் காரணிச் சந்தையில் நிறைபோட்டி நிலவும் போது எல்லைக் காரணிச் செலவு காரணியின் விலைக்குச் சமமாக இருக்கும். மேலதிகமாக அலகுகள் வேலைக்கமர்த் தப்படும். இதனை வரைபடத்தில் நோக்கு வோம்.




ஒரு காரணிச் சந்தை விலை OP என இருக்குமாயின் முயற்சியாளர் ON என்றளவு அலகுகளை வேலைக்கமர்த்து கின்றனர். காரணம் ON என்ற அலகுக ளின் MRP அக்காரணியின் விலையான OP என்பதற்குச் சமமாக இருப்பதாலகும். எனவே OP என்ற சந்தை விலையில் குறிப்பிட்ட காரணியில் ON என்ற அல குகளுக்கு உற்பத்தியாளர் கேள்வியினை ஏற்படுத்துகின்றார். தற்போது காரணியின் சந்தைவிலை $OP_1$ ஆகச் சிறையின் குறிப்பிட்ட காரணியில் மேலும் கூடுதலான அலகுகளை வேலைக்கமர்த்துகின்றார்கள். அதாவது முயற்சியாளர் கூடுதலான அலகுகளுக்கு கேள்வியை ஏற்படுத்துவர். எல்லை வருமான உற்பத்திக் கோடானது வழக்கமாக ஆரம்பத்தில் அதிகரித்துச் சென்று பின்நோக்கிச் பின்னர் கீழ்நோக்கி சரிந்து செல்லும் ஆனால் MRP கோட்டின் பகுதியே காரணிக்கான கேள்விக் கோடாக அமையும் படத்தில் OP என்ற விலையில் R என்ற புள்ளியிலும், E என்ற புள்ளி யிலும் காரணியின் விலையானது எல்லை வருமான உற்பத்திக்குச் சமமாக அமை கின்றது. ஆனால் E என்ற புள்ளியிலேயே நிறுவனம் உச்ச இலாபத்தினைப் பெறும். R என்ற நிறுவனம் உற்பத்திக் காரணி களை வேலைக்கமர்த்துவதை நிறுத்தின் அது நட்டமடையும். எனவே MRP கோட் டின் மேலிருந்து கீழ்நோக்கி இடமிருந்து வலமாகச் செல்லும் பகுதியே உற்பத்திக் காரணிக்கான கேள்விக் கோடாக அமையும்.

அத்துடன் குறிப்பிட்ட தொழிலில் கூலி அதிகரிக்கப்படின் தொழிலாளர்கள் வேறு தொழில்களிலிருந்து குறிப்பிட்ட தொழி லுக்கு நகர்வர். வேலை செய்யா மல் இருப்பதற்கான செலவே ஓய்வுக்கான விலையாகும். கூலி விகிதம் உயர்வாக இருக்குமாயின் ஓய்வுக்கான செலவும் கூடுதலாக இருக்கும். காரணம் ஓய்வெடுக் கின் ஓய்மானம் இழக்கப்படுவதனாலா கும். இதனால் கூலி விகிதத்தில் ஏற்படும் மாற்றம் என்பது ஓய்வுக்கான விலையில் ஏற்படும் என்பதனையும் உள்ளடக்கி நிற்கின்றது. அமுதன் என்ற தொழிலாளிக் குரிய 24 மணித்தியாலங்களையும் அவர் எவ்வாறு செலவிடுகின்றார் என வரைபில் நோக்குவோம்.




இங்கு குறிப்பிட்ட தொழிலாளி மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ 100 உழைக்க முடியுமெனின், இங்கு AB கோட்டின் சரிவு எந்த விகிதத்தில் உழைப் பிற்கான நேரத்தை விட்டுக்கொடுத்து தொழிலாளி வருமானம் உழைக்கலாம் என்பதனைக் காட்டி நிற்கிறது. புள்ளி A முழுநேர ஓய்வினைக் காட்டுகின்றது. 24 மணி நேரமும் குறித்த தொழிலாளி உழைப்பாளியாயின் ரூ. 2400 வருமான மாகப் பெறமுடியும். இதனைப் புள்ளி B காட்டுகின்றது. A,B க்கிடைப்பட்ட புள்ளிகள் வேலைக்கும், ஓய்வுக்குமான பகுதியைக் காட்டுகின்றன. புள்ளி X என்பது 14 மணி நேர ஓய்வையும், 10 மணி நேர வேலையையும் காட்டுகின்றது. இதன் மூலம் ரூ. 1000 வருமானமாகப் பெறப்படுகின்றது.

கூலி உயரும் போது உழைக்கும் நேரத்தைக் குறைப்பதனால் பின்னோக்கி விளையும் நிரம்பல் கோடு உருவாகின் றது. கூலியின் பிரதியீட்டு விளைவானது சில தொழிலாளர்களை முன்பிலும் பார்க்க கூடிய நேரம் வேலை செய்யத் தூண்டும் சிலரைக் குறைந்த நேரம் வேலை செய்யத் தூண்டும்.




தனிப்பட்ட நபரொருவரின் பொருட்கள், சேவைகள் குறித்த விருப்பமானவை குறிப்பிட்ட பண வருவாயைக் கொண்டு பூர்த்தி செய்யக்கூடிய அளவில் காணப்ப டுகின்றது. உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி வழிவந்த கேள்வி என்பதனை வரைபடம் காட்டுகின்றது.




ஒரு பொருளினது விலையை அப் பொருளின் கேள்வியும், நிரம்பலும் தீர்மா னிப்பது போலவே காரணியின் விலையும் அக்காரணியின் கேள்வி நிரம்பலும், தீர்மானிக்கப்படுகின்றது. காரணியின் விலையை அக்காரணியின் கேள்வியும், நிரம்பலும் தீர்மானித்தலும் அவ்விலை காரணியின் எல்லை வருமான உற்பத்திக் குச் சமமாகும். உற்பத்திக் காரணிகளுக் கான விலை நிர்ணயிக்கப்படும் விதத் தினை மேல்வருமாறு விளக்க முடிகின்றது.

# வேறுபட்ட சந்தை நிலைமைகளின் கீழ் கூலி நிர்ணயம்

*Miss. M. Suthesiny*
*2008 / A/ 188*

விற்பனையாளரும், கொள்வனவாளரும் பொருட்கள், சேவைகளின் பரிமாற்றம் தொடர்பாக தொழிற்படும் பல்வேறு சந்தர்ப்பங்கள் சந்தையாகும். இது விற்பனையாளருக்கும், கொள்வனவாளருக்கும் இடையே நேரடியான பொருட்கள், சேவைகள் பரிமாற்றப்படுகின்ற முறையாகவோ இருக்கலாம். உதாரணமாக வீதிக்கடை, ஏலச் சந்தை, செய்திப் பத்திரிகை, கடிதங்கள், முகவர்கள் போன்றவற்றின் ஊடாக கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் சகல சந்தர்ப்பங்களையும் குறிப்பதாகவே இது அமைகின்றது.


பொருளியலில் சந்தையைப் பொதுவாக பொருட்சந்தை, காரணிச் சந்தை என்றும், காலத்தின் அடிப்படையில் குறுங்கால, நீண்டகால சந்தை என்றும், போட்டியின் அடிப்படையில் நிறைப்போட்டி, தனியுரிமை, தனியுரிமைப் போட்டி, சிலருரிமை என்றும் வகைப்படுத்தலாம். அந்த வகையில் பொருளியலின் சந்தை வகைப்பாட்டின் படி பொருட் சந்தை, காரணிச் சந்தை என்ற வெவ்வேறுபட்ட சந்தை நிலைமைகளின் கீழேயே கூலி நிர்ணயிக்கப்படுகின்றது.

பொருட்சந்தை என்பது உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள், சேவைகளுக்கான கேள்வி என்பததையும், காரணிச் சந்தை என்பது உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவை உற்பத்திக்குரிய உள்ளீடுகளாக அமைகின்றன. இக் காரணங்களுக்கான விலைகள் முறையே வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பன காரணிகளுக்கான கேள்வி நிரம்பலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. உற்பத்திக் காரணிகளுக்கு வழி வந்த கேள்வி நிலவுகின்றது. எனவே இவ்விரு சந்தைகளிலும் கூலி நிர்ணயமானது நான்கு சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்றது. அந்த வகையில்,

1) பொருட் சந்தை தனியுரிமை : காரணிச் சந்தை தனியுரிமை
2) பொருட்சந்தை நிறைபோட்டி : காரணிச் சந்தை நிறைபோட்டி
3) பொருட் சந்தை நிறைபோட்டி: காரணிச் சந்தை தனியுரிமை
4) பொருட் சந்தை தனியுரிமை : காரணிச் சந்தை நிறைபோட்டி


என்பன காணப்படுகின்றன.

பொருட் சந்தையும், காரணிச் சந்தை இரண்டும் தனியுரிமைக்காகக் காணப்படுகின்ற சூழ்நிலையை நோக்கின், பொருட்சந்தை தனியுரிமையில் உள்ள போது,





$$MR = MC < P$$
$$MR = PL / MP < P$$
$$MR.\ MRL = PL < P.MPL$$
$$MRP = PL < VMP$$

காரணிச் சந்தை தனியுரிமையில் உள்ள போது,




$W = AFC = SL < MFC$ ஆகக் காணப்படும்.

எனவே பொருட்சந்தை, காரணிச் சந்தை இரண்டும் தனியுரிமையாகக் காணப்படுகின்றபோது, $MRP = MFC$ ஆக உள்ள நிலையில் சமநிலைக் கூலி ஊழிய மட்டம் என்பன நிர்ணயிக்கப்படும் இதனை, பின்வரும் வரைபடத்தின் விளக்கலாம்.



அதாவது MRP = MFC ஆக உள்ள புள்ளி E இல் சமனிலைக் கூலி $W_3$ ஆகவும், தொழிலாளரின் அளவு $L_5$ ஆகவும் உள்ளது. இங்கு AFCக்கு சமனாகவே கூலி வழங்கப்படும். ஆனால் தொழிலாளர் விரும்பும் கூலி அல்லது நியாயமான கூலி VMP க்கு சமனாகவே இருக்கும். அதாவது $N_2$ என்ற கூலி மட்டத்தினையே விரும்புவர். பொருட் சந்தை தனியுரிமையாக இருந்தால் ஏற்பட்ட கூலிச் சுரண்டல் பொருட் சந்தை சுரண்டல் எனக் கூறப்படும். இது $W_3$க்கும் $W_1$க்கும் இடைப்பட்ட பகுதி ஆகும். ($W_3$ - $W_2$) அவ்வாறே தனியுரிமையாகவே காரணிச் சந்தை இருந்தால் ஏற்பட்ட கூலிச் சுரண்டல் $W_1$-$W_3$ க்கும் இடைப்பட்ட பகுதியாகும். இதுவே காரணிச் சந்தை சுரண்டல் எனப்படும். ஆகவே மொத்தக் கூலிச் சுரண்டல் $W_3T_SW_1$ என்றளவு ஆகும். சமநிலையில் $MRP < VMP = AFC = W < MFC$.

பொருட் சந்தை நிறைபோட்டியாக வும், காரணிச் சந்தை நிறைபோட்டியாக வும் உள்ளபோது ஒவ்வொரு நிறுவனமும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் தொழிற்படு வர். இத்தகைய ஒரு பொருட்சந்தையின் நடவடிக்கையிலிருந்தே காரணி கேள்விக் கோடு பெறப்படுகின்றது. இதனை,

$$MR = MC = P$$

$$MRP = PL = VMP$$

$$MR = \frac{PL}{MPL}$$

$$MR.MPL = PL = P.MPL$$

$$MRP = PL = VMP$$

$$MC = \frac{\Delta TVC}{\Delta Q}$$


$$MC = \frac{\Delta Q}{\Delta L}$$

$$\Delta Q = MPL \,.\, \Delta L \,;\, \Delta TVC = \Delta L.PL$$


$$\therefore\ MC = \frac{\Delta L.PL}{MPL.\,\Delta L}$$

$$MC = \frac{PL}{MPL}$$

என்ற சமண்பாட்டின் ஊடாக விளக்கலாம்.




எனவே பொருட்சந்தை நிறைபோட்டியாக உள்ள நிறுவனத்தினரை ஊழியத்திற்கான எல்லைப் பெறுமான உற்பத்தி (VMP) உற்பத்திக்கு சமனாக இருக்கும். அதேபோன்று ஊழியச் சந்தையானது நிறைபோட்டியாக உள்ள சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் கூலியைத் தீர்மானிப்பதாகத் தொழிற்படுவர். SL = MFC = AFC = N என்ற சமநிலையில் இது காணப்படும்.




எனவே இவ்வகையான சமனிலையை பின்வருமாறு காணலாம்.


| L | W | TFC | AFC | MFC |
|---|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 | 10 |
| 2 | 10 | 20 | 10 | 10 |
| 3 | 10 | 30 | 10 | 10 |
| 4 | 10 | 40 | 10 | 10 |




புள்ளி E இல் இலாப உச்சப்படுத்தற் புள்ளியாகும். இங்கு MRP = MFC ஆக இருப்பதால் இதுவே சமனிலைக் கூலி மட்டாகும். இந் நிலையில் வேலை மட்டம் அல்லது தொழிலாளியின் அளவு $L_5$ ஆகும். MRP ஆனது $SL_3$ அளவு ஆகும். எனவே இங்கு MRP > MFC ஆக இருப்பதனால் குறித்த நிறுவனம் அதிக இலாபத்தைச் சம்பாதிக்கும் நிலையில் மேலும் ஊழியத்தை உற்பத்தி நிறுவனத்தின் நடவடிக்கையில் இணைத்துக் கொள்ளும். இதனால் சமநிலைப் புள்ளி E இனை நோக்கி நகரும்.

$L_7$ ஊழியத்தில் பயன்படுத்தும் போது MFC இன் அளவு $V_7U$ ஆகும். எனவே இங்கு MRP < MFC அளவு ஆக இருப்பதனால் சமனிலை மேல் நோக்கித் தள்ளப்படும். அதாவது இந் நிலைமை காணப்படுகின்ற போது நிறுவனம் ஊழி யத்தின் அளவை குறைத்துக் கொள்ளும். இலாப உச்சப்படுத்தல் நிறுவனத்தை பொறுத்து MRP = MFC ஆக இருக்கின்ற நிலையில் தான் சமனிலைக் கூலி மட்டத் தையும் தொழிலாளியையும் நிர்ணயித்துக் கொள்ளும். இங்கு இரு சந்தையும் நிறை போட்டியாக இருப்பதனால் வழங்கப்படு கின்ற கூலி நியாயமானதாக உள்ளது. ஆகவே, MRP = VMP = MFC = AFC W= PL என சமனிலைப் புள்ளியால் காணப்படும் ஆனால் இங்கு சமனிலையா னது. நடைமுறையில் காணப்படுவது இல்லை. அத்துடன் இங்கு தொழிற்சங்க நடவடிக்கைக்கும் இடம் இல்லை.

பொருட்சந்தை நிறைபோட்டியாக வும், காரணிச் சந்தை தனியுரிமையாக வும் காணப்படுகின்ற சூழ்நிலையினை எடுத்துநோக்குகின்ற போது, இதில் பொருட்சந்தை நிறைபோட்டியாக




$$MR = MC = P$$

$$MR = \frac{PL}{MRL} = P$$


$$MR.MPL = PL = PMP$$

$$MRP = PL = VMP$$

காரணிச் சந்தை நிறைபோட்டி யாகவும், காரணிச்சந்தை தனியுரிமையாக வும் காணப்படுகின்ற சூழ்நிலையினை எடுத்துநோக்குகின்ற போது, இதில் பொருட்சந்தை நிறைபோட்டியாகக் காணப் படின்,


காரணிச் சந்தை தனியுரிமையாக இருப்பின் அதனை கொள்வோன் தனி யுரிமை என்பர் ஊழியச் சந்தையில் கொள்வோன் தனியுரிமையாளர் என்னும் போது ஒரு குறித்த நிறுவனம் மட்டுமே குறிக்கப்பட்ட வகையிலான ஊழியத் தினைக் கொள்வனவு செய்யும் நிலை காணப்படும். இந்நிலையில் ஊழியம் தொடர்பாக எல்லைச் செலவுக் கூலிக் கோடும் காரணிச் செலவுக் கூலிக் கோடும் வேறுபட்டதாக அமைவதுடன் ஒரு குறிப்பிட்ட ஊழிய நிரம்பலில் சராசரி கூலிச் செலவை விட எல்லைக் கூலிச் செலவுக் கோடு உயர்வாக இருப்பதனைக் காணலாம். இதன்போது, W=AFC <MFC OR MRP = MWC > $P_L(W)$ என்ற வகையில் காணப்படும்.

இதனை வரைபடத்தில் நோக்கின்




இங்கு நிறுவனம் AFC க்கு சமனாகவே கூலியை வழங்கும். இந் நிலையில் கூலி மட்டும் $W_1$ ஆகக் காணப்படும். ஆனால் தொழிலாளர் VMP க்கு சமனாகவே கூலியை எதிர்பார்ப்ப தால் $W_2$ அளவு கூலியினையே எதிர்பார்ப்பர். இங்கு நிழற்றப்பட்ட பகுதியே காரணிச் சந்தை தனியுரிமையால் ஏற்பட்ட கூலிச் சுரண்டலாகும். $W_1W_2E_3$ (W) ஆகும். சமனிலைப் புள்ளி E இல் VMP = MRP = MFC >P ஆகும்.

பொருட்சந்தை தனியுரிமையாக வும் காரணிச் சந்தை நிறைபோட்டியாக வும் உள்ள நிலையில் ஊழியம் தொடர் பாக வேலையின்மை, சுரண்டல் என்பவற் றினை நோக்கலாம். பொருட் சந்தை தனியுரிமையாக உள்ள போது எல்லை வருமானம், எல்லைச் செலவு என்பன சமனாக இருக்கும். ஆனால் அதைவிட அதிமானதாக விலை இருக்கும்.




$$MR = MC < P$$

$$MR = \frac{PL}{MP} < P$$

$$MR.MP = P_L < P.MP$$

$$MRP = P_L < VMB$$

மேலும் பொருட் சந்தையானது தனியுரிமையாக உள்ளபோது, MRP < VMP ஆக இருக்கும்.

$$MC = \frac{\Delta TVC}{\Delta Q}$$

$$TVC = \Delta L \text{ x } PL$$

$$MP = \frac{\Delta Q}{\Delta L}$$


$$Q = MP \text{ x } \Delta L$$

$$\therefore MC = \frac{\Delta/L.PL}{\Delta/L.MP}$$


$$\therefore MC = \frac{PL}{MP}$$

காரணிச் சந்தை நிறைபோட்டி யில் அங்குள்ள ஒவ்வொரு நிறுவனமும் விலையை அல்லது கூலியை விற்பவராக காணப்படும். இதனால் உழியத்துக்கான நிரம்பல் கோடு கிடை அச்சுக்கு சமாந்தர

மாக அமைகின்றது. அதாவது AFC = MFC = W = SL என்றவாறு காணப்படும்.




இந்நிலையில் சமனிலைக் கூலி மட்டம், கூலிச் சுரண்டல் என்பனவற்றினை நோக்கலாம். தனியுரிமையாகக் காணப் படின் அங்கு நிறைபோட்டிக்குரிய பண்பு களை உருவாக்கியதன் மூலம் சுரண்ட லினை நீக்க முடியும்.




மேற்படி வரைபடத்தின் படி நிறுவனத்தின் ஊழியத்திற்கான கேள்விக் கோடானது எல்லை வருமான உற்பத்திக் கோடும் ஊழிய நிரம்பலுக்கான எல்லைக் கூலிச் செலவுக் கோடும் ஒன்றையொன்று சந்திக்கும் புள்ளி E இல் ஊழியக் கொள் வனவு இடம்பெறும். அதாவது சமனி லைக் கூலி மட்டம் நிர்ணயிக்கப்படும். இங்கு நிறுவனமானது $L_5$ என்றளவு ஊழியத்தினை $W_1$ என்ற கூலியை கொடுத்து கொள்வனவு செய்கின்றது. ஆனால் உற்பத்தி செய்த பொருட்களை சந்தையில் விற்பனை செய்யும் போது அதன் பெறுமதி $L_5H$ ஆகும். தொழிலாளி யைப் பொறுத்தவரை VMPக்கு சமனா கவே கூலியைப் பெற விரும்புவார்கள். ஆகவே தொழிலாளர் விரும்பும் கூலி $W_2$ ஆகும். ஆனால் நிறுவனம் $W_1$ என்ற

கூலியையே வழங்கும். எனவே $W_1$-$W_2$க்கு இடைப்பட்ட பகுதி கூலிச் சுரண்டற் பகுதியாகும். எனவே, கூலிச் சுரண்டலால் தொழிலாளர்களின் உற்பத்திப் பொருட்களை தாமே கொள்வனவு செய்ய முடியாத நிலை இருக்கும். இந் நிலை தொடர்ந்து காணப்பட்டால் வேலையின்மை, தங்கி வாழ்வோர், ஏழ்மை, வறுமை ஏற்படுவதோடு முதலாளி வருமான அதிகரிப்பினால் செல்வந்தராகும் நிலையும் காணப்படும். இது வருமான அதிகரிப்பினால் செல்வந்தராகும் நிலையும் காணப்படும். இது வருமான ஏற்றத் தாழ்வுகள் மற்றும் வர்க்க முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்.

எனவே பொருட்சந்தை நிறை போட்டியாக இருக்குமாயின் MRP = MFC இல் $L_9$ என்றளவு ஊழியம் பயன்படுத்தப்படும். ஆனால் பொருட்சந்தை இங்கு தனியுரிமையாகக் காணப்படுவதனால் $L_5$, $L_9$ என்பதனை ஊழியம் பயன்படுத்தாமல் வேலை இன்மையாக இருப்பதனைக் காணலாம்.

எனவே, John Robhinshon ஐப் பற்றி A.C. Pigu என்பவரும் ஊழியச் சுரண்டலானது ஊழியத்திற்கான கொடுப்பனவு எல்லைப் பெறுமான உற்பத்தியை விட குறைவாகக் கொடுக்கப்படும் போது ஏற்படுகின்றது எனக் கூறுகின்றார். இவர்கள் VMP க்கு சமனான கூலியை வழங்கினால் அது நியாயமானது அல்லது ஊழியத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியை விலையினால் பெருக்கும் போது கிடைக்கும் என்றும் கருதப்படும். மேலும் Pigu, Robhinshon போன்றோர் VMP க்கு சமனான கூலி வழங்கப்பட வேண்டும் என்றனர். ஆனால் Chamberlin MRP க்குச் சமனாக கூலி வழங்கப்பட்டால் அது போதுமானது அத்துடன் நியாய மானது. அத்துடன் நீதியானது என்றார். அதாவது MRP இற்குக் குறைவானதாக கூலி வழங்கப்பட்டால் அது சுரண்டலின் உடைய நீதியற்ற கூலி எனக் கருதினார். இந்த வகையில் மேல் வரும் விதமாக வேறுபட்ட சந்தை நிலைமைகளின் கீழ் கூலி நிர்ணயம் செய்யப்படுகின்றது.

# மொத்தக் கேள்வி மற்றும் மொத்த நிரம்பல்
# – ஒரு பொதுவான நோக்கு

*Miss. K. Kunaja*
*Economics special*
*2008/A/ 085*

எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையும் காலத்திற்கு காலம் தளம்பலுக்குட்படுகின்றதென்பது கண்கூடு. அந்த வகையில் செல்நெறிப் பொருளாதாரங்களில் நீண்டகால நிதர்சனநிலை காணப்படுகின்ற போதிலும் குறுங்கால ரீதியான தளம்பல்கள் என்பன தவிர்க்கமுடியாததாகின்றன.

எனவே ஒரு பொருளாதாரம் அனுபவிக்க கூடிய குறுங்காலத் தளம்பல்களைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பொதுவான ஒருமித்த கருத்து பொருளியலாளர்களிடையே இல்லாதபோதும், பெரும்பாலானோர் மொத்தக்கேள்வி - மொத்த நிரம்பல் மாதிரியுருவினை அதற்கென பயன்படுத்த முன்வருவதனைக் காணலாம். பொருளாதாரத் தளம்பல்களானவை ஒழுங்கற்றவையாக அமைந்துள்ளதுடன் எதிர்வுகூறக் கடினமானவை என்பது மட்டுமன்றி பொருளாதாரத்தொகைகளான கேள்வித் தொகை, நிரம்பல்தொகை என்பன ஒன்றா கவே தளம்புகின்றன. எனவே முழுமையான பொருளாதாரமொன்றில் இடம்பெறக்கூடிய தளம்பல்களை மொத்தக்கேள்வி (AD) - மொத்தநிரம்பல்(AS) மாதிரியுருவினைப் பயன்படுத்தி -பகுப்பாய்வு செய்வோம்.

ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள், சேவைகள் மீதான திட்டமிட்ட செலவினங்கள் யாவும் மொத்தக்கேள்வி எனப்படும். மொத்தக்கேள்வி என்பது பொருட்கள், சேவைகளின் வேறுபட்ட தொகைகளை காட்டிநிற்கும். இது பொருளாதாரத்தின் மொத்த செலவுக்கு சமனாகக் காணப்படுவதுடன் வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை, வெளிநாட்டுத்துறையினால் மேற்கொள்ளப்படுகின்றது. சேமிப்பும் முதலீடும் தொழிற்படுகின்ற எளிய பொருளாதாரத்தில் $(AD = C+I)$ எனவும், சேமிப்பு, முதலீடு, அரசாங்கசெலவு தொழில்படுகின்ற மூடிய பொருளாதாரத்தில் $(AD= C+I + G)$ எனவும் சேமிப்பு, முதலீடு, G அரசாங்கச் செலவு, தேறிய ஏற்றுமதிகள் தொழிற்படுகின்ற திறந்த பொருளாதாரத்தில் $[(AD = C+I + G + (X-M)]$ எனவும் மொத்தக் கேள்விக் காணப்படும். இங்கு AD என்பது மொத்த கேள்வியையும் C நுகர்வினையும் I முதலீட்டினையும் G அரசாங்கச் செலவினையும் (X-M) தேறிய ஏற்றுமதிகளையும் காட்டி நிற்கின்றது.

ஒரு பொருளாதாரத்தில் நுகர்வுச் செலவு அதிகரித்தல், முதலீட்டுச்செலவு அதிகரித்தல், அரச செலவு அதிகரித்தல்,

தேறிய ஏற்றுமதிகள் அதிகரித்தல் காரண மாக மொத்தக்கேள்வி அதிகரிப்பதாகவும் மேற்குறித்த நிலைகளில் எதிர்மாறான சூழ்நிலைகள் காணப்படும் போது AD குறைவடைவதாகவும் உள்ளது.

மொத்த நிரம்பல் என்பது ஒரு பொருளாதாராத்தில் உற்பத்தி செய்யப்படு கின்ற எல்லா பொருட்கள், சேவைகளையும் குறிக்கும். இம் மொத்த நிரம்பலானது பொருளாதாரத்தின் மொத்த வருமானத் திற்கு (Y) அல்லது மொத்த உற்பத்திக்கு (AS = Y) சமனாக காணப்படும்.

ஒரு பொருளாதாரம் சமநிலை அடைவதற்கு பொருளாதாரத்தின் மொத்த கேள்வி மட்டமானது மொத்த நிரம்பல் மட்டத்திற்கு சமனாக (AD = AS) காணப்பட வேண்டும். இவ்வாறு பொருளாதாரம் சம நிலை அடையும் போது பொருட்கள் சேவை களுக்கான மொத்தக் கேள்வி முழுவதையும் பொருளாதாரம் உற்பத்தி செய்து வழங்கத் தயாராக இருக்கும். இதன்போது பொருளா தாரம் தளம்பலின்றிக் காணப்படும். மொத் தக் கேள்வி மட்டமானது மொத்த நிரம்பல் மட்டத்திற்கு சமனற்றுக் காணப்படும் போது பேரினப் பொருளாதார சமநிலை பாதிக்கப் பட்டு பொருளாதார உறுதியின்மை (வேலை யின்மை, பணவீக்கம், சென்மதி நிலுவைப் பிரச்சினை போன்ற பல) தோன்றும் பேரினப் பொருளாதார சமநிலையின் (AD = AS) போது எளிய பொருளதாதரத்தில் Y= C + I எனவும் மூடியபொருளாதாரம் எனின் Y= C + I+ G எனவும் திறந்த பொருளாதார மெனின் Y= C + I+ G (X-M) என்றவாறா கக் காணப்படும்.

1929 -1935 காலப்பகுதியளவில் ஐரோப் பாவில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் பற்றி ஆய்வு செய்த பிரித்தானியப் பொருளியலா னரான J.M.Keynes 1936இல் வெளியிட்ட வேலையின்மை, வட்டி, பணம் பற்றிய பொதுக் கொள்கை எனும்நூலின் பின் மொத் தக்கேள்வி பற்றி அதிககவனம் செலுத்தப் பட்டது. அப்போது ஏற்பட்ட உலகப் பொரு ளாதார மந்தத்திற்கு காரணம் மொத்தக் கேள்வியில் நிலவிய குறைபாடு என்பது அவரது கருத்தாகும்.


மொத்தக் கேள்வி, மொத்த நிரம்ப லானது சந்தைக்கேள்வி, சந்தை நிரம்ப லிருந்து கணிசமான அளவிற்கு வேறுபட்ட தாகும். குறிப்பிட்ட பண்டத்திற்கான சந்தைக் கேள்வி, சந்தைநிரம்பல் பற்றி நோக்கும் போது, வாங்குவோரதும் விற்போரதும் நடத்தை என்பது வளங்களை ஒரு சந்தையி லிருந்து இன்னொரு சந்தைக்கு மாற்றிக் கொள்வதற்கான பொருளாதாரத்தின் ஆற்ற லில் தங்கியுள்ளது என்பது குறிப்பாக கணிப் பிற்கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

உதாராணமாக மாம்பழத்தின் சந் தையை நோக்கும் போது, மாம்பழத்தின் விலை உயர்வடையும் போது அதன் கேள்வி குறைவதற்கு காரணம் நுகர்வோர் தமது வருமானத்தை மாம்பழம் தவிர்ந்த வேறு பொருட்களின் கொள்வனவு நோக்கித் திருப்பிவிடுவதாகும். அதேபோன்று மாம் பழத்தின் விலைகுறைவடையும் போது அதிகளவு மாம்பழம் சந்தையில் நிரம்பல் செய்யப்படுவதற்கு காரணம், உற்பத்தியா ளர்கள் பொருளாதாரத்தின் ஏனைய பகுதி களிலிருந்து உற்பத்திக்கு நிலம், ஊழியம் போன்ற உற்பத்திக் காரணிகளை திருப்பி விடக்கூடிய சக்தி பெற்றிருப்பதனாலகும்.

ஆனால் இவ்வாறான ஒரு சந்தை யிலிருந்து இன்னொரு சந்தை நோக்கிய நுண்ணிலைப் பொருளாதாரப் பதிலீடு என்பது ஒரு பொருளாதாரத்தையே முழுமை யாக எடுத்துக்கொண்டு ஆய்வு செய்யும் போது சாத்தியமற்றது. AD= AS ஐ விளக்கு வதற்கு முற்படும் தொகையாகிய மெய்ய ளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு பொருளாதாரத்திலான எல்லா சந்தை களிலும் உற்பத்தி செய்யப்படும் எல்லா

வெளியீடுகளினதும் மொத்த தொகை பற்றிய அளவீடாகும். இந்நிலையில் சந்தைக ளுக்கிடையிலான பதிலீடு என்பதற்கு இடமில்லை. அவ்வாறாயின் மொத்த கேள்வி - மொத்த நிரம்பல்- சந்தைக்கேள்வி போன்று கேள்வி வளைகோடு கீழ்நோக்கிச் சரிந்து செல்வதற்கும் நிரம்பல்வளைகோடு குறுங் காலத்தில் மேல்நோக்கிச் சரிந்தும், நீண்ட காலத்தில் நிலைக்குத்தச்சிற்கு சமாந்தத ரமாக காணப்படுவதற்கும் பருநிலைக் கோட்பாடு விளக்கம் அவசியமாகின்றது.

அந்தவகையிலே மொத்த கேள்வி வளை கோடானது தரப்பட்ட ஏதாவது ஒரு விலையில் ஒரு பொருளாதாரம் கேள்வியை உருவாக்கும் எல்லாப் பொருட்கள், சேவை களினதும் தொகையை எடுத்துக் காட்டு கின்றது. மொத்தக் கேள்வி வளைகோடானது மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக சரிந்து செல்லும். இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்




இதன் கருத்து யாதெனில் ஒரு பொரு ளாதாரத்தின் ஏனைய யாவும் தரப்பட்ட நிலையில் இருக்கும்போது அதன் முழு நிலை விலைமட்டத்தில் ஏற்படக்கூடிய ஓர் வீழ்ச்சி பொருட்கள் சேவைகளின் பொருளா தார கேள்வித்தொகையை அதிகரித்து விடுமென் பதாகும். வரைபடத்தில் $P_1$-$P_2$ என ஏற்படும் விலைமட்ட வீழ்ச்சி, பொருட்கள் சேவைகளுக்கான கேள்வித்தொகையை $L_1$-$L_2$ என அதிகரித்துவிடுகின்றது.

இவ்வாறு விலைக்கும் தொகைக்கு மிடையே எதிர்க்கணியத் தொடர்பு அதாவது மொத்த கேள்வி வளைகோடு கீழ்நோக்கிச் சரிந்து செல்வதற்கான காரணத்தை நோக் கும் போது Y என்று நாம் குறிக்கும் நாடொன்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தி யானது நுகர்வு (C) முதலீடு (I), அரசாங்க கொள்வனவு (G), தேறிய ஏற்றுமதி (NX) என்பவற்றின் (Y+ C +I+ G+ NX) கூட்டுத் தொகையாகும். இச்சமன்பாட்டின் வலதுபுறத் திலுள்ள நான்கு மாறிகளும் தனித்தனியாக பொருட்கள், சேவைககளின் மொத்தக் கேள்விக்குப் பங்களிப்புச் செய்கின்றது. தற் போது அரசாங்கச் செலவானது அரசாங்க கொள்கையினால் நிலைப்படுத்தப்பட்ட ஓர் அளவு என்று எடுத்துக்கொண்டு, அது தவிர்ந்த நுகர்வு, முதலீடு தேறிய ஏற்றுமதி மூன்றும் நாடொன்றின் பொருளாதார நிலை களில் குறிப்பாக அந்நாட்டில் நிலவுகின்ற விலைமட்டத்தில் தங்கியுள்ளது. ஆகவே விலைமட்டமானது எவ்வாறு C,I, NX என்பவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் பொருட் கள் சேவைகளுக்கான கேள்வித்தொகை யைப் பாதிக்கின்றதென்பதனை நோக்குவ தன் மூலம்தான் மொத்த கேள்வி வளை கோட்டின் கீழ் நோக்கிய சரிவினை சரியாக விளக்கிக்கொள்ளலாம்.

மொத்தக்கேள்வி வளைகோடானது ஏனைய விடயங்கள் மாறவில்லை என்ற எடு கோளின் அடிப்படையிலேயே வரையப்பட் டுள்ளது. முக்கியமாக பணநிரம்பல் மாற வில்லை என்ற அடிப்படையில்தான் கீழ்வரும் விளக்கங்கள் அமைந்துள்ளன.

1) விலைமட்டமும் நுகர்வும்: செல்வத் தாக்கம்:-

விலைமட்டம் தனியொருவரின் செல்வநிலைமீது தாக்கத்தை ஏற்படுத்து கின்றது. விலைமட்டம் பொருளாதாரத்தில்

வீழ்ச்சியடைகின்றது எனக்கொள்கின்ற நுகர்வோர் செல்வம் உயர்வடைந்து அவர்களைக் கூடுதலாகச் செலவு செய்யத் தூண்டுகின்றது. நுகர்வோரின் செலவீட்டிலான அதிக ரிப்பு கூடிய தொகைப் பொருட்களுக்கு கேள்வியை ஏற்படுத்தும்.

2) விலைமட்டமும் முதலீடும்: வட்டிவீதத்தாக்கம்:

விலைமட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சி வட்டி வீதத்தை குறைத்து முதலீட்டுப் பொருட்களின் செலவைத்தூண்டி அதன் வழியே பொருட்கள், சேவைகளின் கேள்வித் தொகையை அதிகரிக்கும்.

3) விலைமட்டமும் தேறிய ஏற்று மதியும்: நாணய மாற்றுவிகிதத் தாக்கம்

குறைந்த ஒரு விலைமட்டம் நாடொன் றின் கடன்நிதிச் சந்தையில் நிலவும் வட்டி வீதத்தைக் குறைத்து விடுவதற்கு காரணமா கின்றது. ஒரு குறிப்பிட்ட நாட்டில் இவ்வாறு நிலவுகின்றபோது, அந்த நாட்டு கடன்நிதிச் சந்தையில் முதலீட்டாளர் சிலர் கூடியளவு வருமானம் உழைக்கும் நோக்குடன் உள்நாட்டிலிருந்து பணத்தை வாபஸ்வாங்கி அதனை வெளிநாடுகளிலுள்ள சொத்துக்க ளில் முதலீடு செய்ய விரும்புவர். இவ்வாறு மெய்யளவு நாணமாற்றுவீதத்தில் ஒரு மாறுபாடு ஏற்படும். இது ஏற்றுமதிப் பொருட் களின் விலையைக் குறைத்து ஏற்றுமதியை அதகரிப்பதற்கும், இறக்குமதிப் பொருட் களின் விலையை கூட்டி இறக்குமதியை குறைப்பதற்கும் காரணமாகின்றது. இதைத் தொகுத்து நோக்கும் போது மெய்யளவு நாணமாற்றுவிகிதத்தினையும் பெறுமதிக் குறைவு, நாட்டின் ஏற்றுமதிகளைத் தூண்டி அதன்வழி பொருட்கள் சேவைகளுக்கான கேள்வித்தொகையை அதிகரிக்கின்றது.

இந்நிலைமைகள் அனைத்தும் மாறாகக் காணப்படும் போது கேள்வித் தொகை குறைவடையும். இதனால் மொத்தக் கேள்வி வளைகோடு கீழ் நோக்கிச் சரிந்து செல்கின்றது.

குறிப்பிட்ட விலைமட்டத்தில் வேண் டப்படும் பொருட்கள் சேவைகளின் மொத் தக் கேள்வித்தொகையை வேறுபல காரணி களும் தமது செல்வாக்கிற்கு உட்படுத்தலாம். இவ்வாறான இதர காரணிகளில் ஏதாவது ஒன்று மாற்றமடையும் போது மொத்தக் கேள்வி வளைகோடு நகரும். AD வளை கோட்டு நகர்விற்கான சம்பவங்கள் பற்றிய சில உதாரணங்கள் வருமாறு:

1. நுகர்வு மூலமான நகர்வுகள்: வரிக் குறைப்பு வேதன அதிகரிப்பு என்பன மொத் தக் கேள்வி வளைகோட்டினை வலது புறமாகவும் வரி உயர்வு மாற்றுக் கொடுப்ப னவு வாபஸ் மொத்தக் கேள்வி வளை கோட் டினை இடதுபுறமாகவும் நகரும்படி செய்யும்.

2) முதலீடு மூலமான நகர்வுகள்: - தரப்பட்ட ஒரு விலைமட்டத்தில் நிறுவனங் களை கூடுதலாக முதலீடு செய்வதற்கு தூண்டும் ஒரு சம்பவம் (எதிர்காலம் பற்றிய நம்பிக்கை, பணநிரம்பல் அதிகரிப்பால் ஏற்படும் வட்டிவீத வீழ்ச்சி) AD வளை கோட்டை வலதுபுறம் நகரும்படி செய்கின் றன. தரப்பட்ட ஒரு விலைமட்டத்தில் நிறுவ னங்களை குறைவாக முதலிடுவதற்கு நிர்ப்பத்திக்கும் ஒரு சம்பவமும் (எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கை, பணநிரம்பலிலான குறைவு காரணமாக ஏற்படும் வட்டிவீத உயர்வு) AD வளைகோட்டை இடதுபுறம் நகர்த்தும்.


3) அரசாங்கக் கொள்வனவு மூலமான நகர்வுகள்:-

பொருட்கள் சேவைகளின் அரசாங்க கொள்வனவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (பாதுகாப்பு, வீதி நிர்மாணம் என்பவற்றி லான கூடுதலான செலவீடு) AD ஐ வலதுபுற மும் பாதுகாப்பு, வீதி நிர்மாணம் என்பவற்றி லான குறைந்த செலவீடு: AD ஐ இடதுபுற

மும் நகர்த்தும்

4) தேறிய ஏற்றுமதிகள் மூலமான நகர்வுகள்- தரப்பட்ட விலைமட்டத்தில் தேறிய சம்பவம் (அயல்நாடு ஒன்றிலேற்படும் பூரிப்பு நிலை, நாணயமாற்றுவிகித பெறுமதிக் குறைப்பு) AD வளைகோட்டை வலது புறமாகவும் அயல்நாட்டில் ஏற்படும் ஒரு பொருளாதார பின்னடைவு நிலை, நாணயமாற்று பெறுமதி உயர்வு) AD வளைகோட்டை இடதுபுறமும் நகர்த்தும்.

AD வளைகோட்டின் நகர்வினை வரைபடம் மூலம் காட்டுவோம்.





AD - மொத்தக் கேள்வி
AD - $AD_1$ மொத்தக் கேள்வி அதிகரிப்பு
AD - $AD_2$ மொத்தக் கேள்வி குறைவு

இங்கு AD - $AD_1$ நகர்வு மொத்தக் கேள்வி அதிகரிப்பினையும் AD - $AD_2$ நகர்வு மொத்தக் கேள்வி குறைவினையும் ஏற்படுத்துகின்றது. இதற்கு மேற்குறிப்பிட்ட காரணிகள் பொறுப்பாகின்றன.

குறுகிய கால மொத்தக் கேள்வியில் உண்டாகும் நகர்வுகள் ஒரு பொருளாதாரத்திலான பொருட்கள் சேவைகளின் வெளியீட்டுத் தளம்பலைக் கொண்டு வரும் எனினும் நீண்ட காலத்தில் AD நகர்வுகள் முழு நிலையிலான பொருளாதாரமொன்றின் விலை மட்டத்தைப் பாதிக்கின்றதேயன்றி அதன் வெளியீட்டைப் பாதிப்பதில்லை.


அடுத்து, மொத்த நிரம்பல் வளைகோடு பற்றி நோக்கின் ஒரு குறிப்பிட்ட பொருளாதாரத்தில் நிலவும் தரப்பட்ட ஒரு விலைமட்டத்தில் அந்நாட்டிலான நிறுவனங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்ய முன் வரும் பொருட்கள் சேவைகளின் மொத்தத் தொகையை எடுத்துக் கூறுகின்றது. மொத்த நிரம்பல் வளைகோடானது மொத்தக் கேள்வி வளைகோடு போன்று எப்போதும் ஒரே தன்மையான சரிவினைக் கொண்டிராது. நாம் கணிப்பிட்டுக் கொள்ளும் கால அளவின் தூரத்திற்கேற்ப மாறுபடுகின்ற ஒரு தொடர்பினை விலைமட்டத்திற்கும் வெளியீட்டுத் தொகைக்குமிடையே புலப்படுத்தக் கூடிய ஒன்றாகும். மொத்தக் கேள்வி வளை கோடானது கால அளவு எவ்வாறிருந்தாலும் எப்போதும் கீழ்நோக்கி சரிந்து செல்லும் பண்பு கொண்டது. AS வளைகோடானது நீண்ட காலத்தில் நிமிர்நிலை கொண்டதாகவும் குறுகிய காலத்தில் மேல்நோக்கிச் சரிந்து செல்லும் ஒன்றாகவும் காணப்படுகின்றது.

ஒரு பொருளாதாரத்தில் நீண்ட காலத்தில் நிரம்பல் செய்யப்படும் வெளியீட்டுத் தொகை அப்பொருளாதாரத்திலான ஊழியம், மூலதனம், இயற்கை வளங்கள் என்பவற்றின் அளவிலும் இவ்வாறான உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றுகின்ற தொழில்நுட்பத்திலும் தங்கியுள்ளது. பொருளாதாரத்தின் நீண்ட கால நிரம்பல் தொகை என்பது விலை மட்டத்தில் தங்கியிருப்பதொன்றல்ல. அதன் காரணமாக ஒரு பொருளாதாரத்தின் நீண்ட கால நிரம்பல் வளைகோடு வெளியீட்டின் இயற்கை விகிதத்தில் நிமிர்நிலை கொண்டதாகும். இதனை வரைபடத்தில் காட்டுவோம்.




இங்கு மெய்யளவு மாறியாகிய வெளியீட்டுத் தொகை என்பது பெயரளவு மாறியாகிய விலைகளின் மட்டத்தில் தங்கி யிருப்பதில்லை என்பது புலனாகின்றது.

நீண்ட கால AS வளைகோடானது ஊழியம் மூலமான நகர்வுகள், மூலதனம் மூலமான நகர்வுகள், இயற்கை வளங்கள் தொழில்நுட்ப அறிவு ரீதியான நகர்வுகள் காரணமாகவும் சர்வதேச வர்த்தக விரிவாக் கம் காரணமாகவும் வலதுபுற, இடதுபுற நகர்விற்கு உட்படலாம்.




நீண்ட காலத்தில் எல்லாக் காரணிக ளும் பயன்படுத்தப்பட்ட பின் விலை அதிக ரித்தாலும் நிரம்பல் அதிகரிக்காது. இதன் போது விலையில் ஏற்படும் அதிகரிப்பு பண வீக்கமாகும்.

குறுகியகால மொத்த நிரம்பல் கோடா னது சாதாரண நிரம்பல் கோடு போல காணப்படும். அதாவது கீழிருந்து மேலாக இடமிருந்து வலமாக சரிந்துசெல்லும். அதா வது ஒரு பொருளாதாரத்தின் அனுபவத்தை ஓரிரு வருடங்கள் கொண்ட குறுகிய காலப் பகுதியில் நோக்குமிடத்து அதன் முழுநிலை விலைமட்டத்திலேற்படும் உயர்வு என்பது அப்பொருளாதாரத்தில் மொத்தமாக நிரம் பல் செய்யப்படும் பொருட்கள் சேவை களின் தொகையை அதிகரிக்கக் கூடியதாகும். அதேபோன்று விலைமட்டம் குறையுமானால் நிரம்பல் செய்யப்படும். பொருட்கள், சேவை களின் மொத்த தொகையும் குறைவடையும்.





வரைபடமானது குறுகிய கால விலை மட்டம் $P_1$- $P_2$ என அதிகரிக்கும் போது வெளியீட்டுத் தொகையும் $Q_1$ - $Q_2$ என அதிகரிக்கும். நேர்க்கணிய தொடர்பைக் காட்டுகின்றது.

ஒட்டு வேதனக் கொடுப்பனவு, ஒட்டு விலைக்கோட்பாடு, தவறான புலனுணர்வுக் கோட்பாடு என்பன குறுங்கால மொத்த நிரம்பல் வளையி மேல்நோக்கி சரிவதற்கு காரணமாகின்றன. இக்கோட்பாடுகள் தனித் தனியாகவும் தற்காலிகமாகவும் மாத்திரம் ஏற்படக் கூடிய ஒவ்வொரு பிரச்சினையை யும் வலியுறுத்துகின்றன. மொத்த நிரம்பல் வளை கோட்டின் சரிவு இம்மூன்று நிலைமை களில் எந்த ஒன்றில் ஏற்பட்டிருந்தா லும் சரி இந்த நிலைமைகள் தொடர்ந்து நீடிக்கப் போவ தில்லை.

அதாவது ஈற்றில் மக்கள் தமது எதிர் பார்க்கைகளை சரிப்படுத்திக் கொள்ளும் போது, பெயரளவு வேதனங்கள் சரிப்படுத் தப்பட்டு, விலைகள் ஒட்டு நிலையினின்றும் சுழன்று தவறாக இருந்த புலனுணர்வுகளும் திருத்தப்பட்டு சரியாக்கப்படவேசெய்யும். இதன் கருத்து யாதெனில் எதிர்பார்க்கப்படும் விலை மட்டங்களும் நிலவுகின்ற விலை மட் டங்களும் நீண்ட காலத்தில் சமனடையும் என்பதாகும். ஆகவே அதற்கேற்ப மொத்த நிரம்பல் வளைகோடு தமது மேல் நோக்கிய சரிவை விட்டு நிமிர்நிலை கொண்டதாக

மாறிவிடும். சுருங்கக் கூறின் குறுங்கால மொத்த நிரம்பல் வளைகோடும் அதன் மேல்நோக்கிய சரிவும் பொருளாதாரத்தின் ஒரு தற்காலிக நிலையேயன்றி வேறில்லை.




குறுங்கால மொத்த நிரம்பல்கோடு நகர்விற்குட்படும் சந்தர்ப்பங்களாக ஊழியம் மூலமான நகர்வுகள், மூலதனம் மூலமான நகர்வுகள், இயற்கை வளங்கள் மற்றும் எதிர் பார்க்கை விலை மட்டம் மூலமான நகர்வு களைக் குறிப்பிடலாம்.


(1) ஊழியர் மூலமான நகர்வுகள் : பொருளாதாரம் ஒன்றில் கிடைக்கக் கூடியதான ஊழியத் தொகையின் அதிகரிப்பு AS ஐ வலது புறமும் மறு புறம் கிடைக்கக் கூடிய ஊழியத் தொகையின் குறைவு மொத்த நிரம்பல் வளைகோட்டினை இடது புறமும் நகர்த்தும்.

(2) மூலதனத்தின் மூலமான நகர்வுகள் பொருளாதாரம் ஒன்றில் பௌதீக / மனித மூலதன அளவில் உண்டாகும் உயர்வு AS ஐ வலது புறமாகவும் இவற்றில் ஏற்படும் குறைவு மொத்த நிரம்பல் வளை கோட்டை இடது புறமாகவும் நகர்த் தும்.

(3) இயற்கை வளங்கள் மூலமான நகர்வு: இயற்கை வளங்களின் கிடைப்புத் தன்மையில் ஏற்படும் அதிகரிப்பு மொத்த நிரம்பல் வளை கோட்டை வலதுபுறமும் அவற்றின் கிடைப்புத் தன்மையிலான ஒரு குறைவு ASஐ இடது புறமும் நகர்த்தும்.

(4) தொழில்நுட்ப அறிவில் ஏற்படும் முன்னேற்றம் ASஐ வலது புறமும் மறுபுறம் எதிர்பார்க்கை விலை மட்டம் உயர்வடையுமாயின் அது மொத்த நிரம்பல் வளைகோட்டை இடது புறமும் நகர்த்தும்.

இதனை வரைபடத்தின் மூலம் நோக்கிக் கொள்வோம்.




S- $S_1$ - குறுங்கால மொத்த நிரம்பல் அதிகரித்தல்.
S- $S_2$ - மொத்த நிரம்பல் குறைவு.


மொத்த நிரம்பலில் உண்டாகும் நகர்வுகள் பொருளாதாரத்தில் தேக்க வீக்கம் ஒன்று தோன்றுவதற்கு இடமளிக்கலாம். இந்நிலையில் குறைவடையும் வெளியீட்டின் வடிவிலான பின்னடைவும் அதிகரிக்கும் விலைகளின் வடிவிலான பணவீக்கமும் பொருளாதாரத்தை ஒரு சேரத்தாக்கும்.

மொத்தக் கேள்வியை செல்வாக்கிற் குட்படுத்த விளையும் நாட்டின் கொள்கை வகுப்போர், ஒரு போதும் வெளியீட்டுக் குறைவு, பணவீக்கம் என்ற இரண்டையும் ஏக காலத்தில் அகற்றிவிட முடியாது. விலை உயர்வை கட்டுப்படுத்த முயன்றால் வெளி யீட்டில் குறைவையும் மாறாக வெளியீட்டை ஒரே அளவில் வைத்திருக்க முயன்றால்

விலைகளின் உயர்வையும் தவிர்க்க முடியாத வகையில் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

குறுகிய கால தளம்பல்கள் பற்றிய மாதிரியுருவானது பெருமளவிற்கு 1930களில் இடம்பெற்ற பெருமந்தத்தின் ஒரு பக்க விளைவு என்பதாகவே அபிவிருத்தியடைந்தது. இவ்வாறான குழப்பமான சூழ்நிலையில் தான் Keynes தனது நூலினை அறிமுகம் செய்தார். Keynes இன் பகுப்பாய்விலிருந்தே வெளிப்பட்ட முக்கிய செய்தியாக பொருட்கள் சேவைகளுக்கான போதியளவு மொத்தக்கேள்வி பொருளாதாரத்தில் இல்லாததாலேயே பின்னடைவுகளும் மந்தங்களும் பொருளாதாரத்தைப் பீடிக்கின்றன.

பொருளாதாரம் ஒன்றில் நீண்டகால சமநிலையானது AD,AS வளைகோடுகள் வெட்டிச் செல்லும் புள்ளியில் அடையப்படும் நீண்ட கால நிலையில் வேதனங்கள், விலைகள், புலனுணர்வுகள் என்பவையும், தம்மைச் சரிசெய்து கொண்டிருப்பதனால், இச்சமநிலைப் புள்ளியினை குறுங்கால AS உம் ஊடறுத்துச் செல்லும். இதனை வரிப் படத்தில் நோக்குவோம்.




A புள்ளியானது சமநிலையைக் காட்டுகின்றது

மேலும் உலகப் பொருளாதாரங்கள் யாவும் கூரிய வேலையின்மையால் அல்லற்பட்டுக் கொண்டிந்தபோது Keynes மொத்தக் கேள்வியினை தமது பொருளாதாரங்களில் முடக்கிவிடக் கூடிய கொள்கையைப் பரிந்துரைத்தார். மிக அண்மையில் கூட அமெரிக்கா அனுபவித்த பொருளாதார நெருக்கடியினையும் அதனால் ஏற்பட்ட பெருந்திரளானோருக்கான வேலை இழப்பினையும் மறந்து விட முடியாது. மொத்தக் கேள்வியில் ஏற்பட்ட வேறுபட்ட அதிர்ச்சிகளே இதற்கு காரணியாகியுள்ளமை அறிந்ததே.

Keynes இன் கருத்தான "நீண்ட காலம் என்பது நடப்பு நிலை அலுவல்கள் பற்றிய ஒரு தவறான வழிகாட்டியாகும். நீண்ட காலத்தில் நாம் அனைவரும் மரித்து விடுவோம். சூறாவளி வரும் போதெல்லாம் புயல் ஓய்ந்து நீண்ட காலத்தின் பின்பு சமுத்திரம் சாந்தமடையும் என்று கூறுவது தான் பொருளியலாளரின் கடமை என்றால் அது சுலபமான பணி என்பதுடன் எந்தவித பயனுமற்றதாகும்" என்றார். இதன்படி குறுங்காலத் தளம்பல்களை முக்கியமாகக் கருதி ஆய்வு செய்யும் மொத்தக் கேள்வி - மொத்த நிரம்பல் பகுப்பாய்வானது பயனுடையதாக அமையும் என்றால் மிகையாகாது.

References

1. F.S. Brooman, (1997)
Macro Economics,
6th Edition - 1977

2. வி.நித்தியானந்தம், (2008)
பருநிலைப் பொருளியல் ஓர் அறிமுகம்
1st Edition - 2008

3. David N.Hyman
Economics
3rd Edition

# பணவீக்கமும் அதன் விளைவுகளும்

*Miss. S. Rajeeth*
*Economics special*
*2008/A/ 143*

பணவீக்கம் என்பது பேரினப் பொருளியல் ஆய்வில் மிகுந்த முக்கியத்துவம் வகிக்கும் ஒரு விடயமாகக் கருதப்படுகின்றது. எப்பொழுது பொருட்களின் கிடைப்பனவை விட பொருட்களுக்கான கேள்வி அதிகமாகக் காணப்பட்டதோ அப்போதே உலகில் பணவீக்கம் என்னும் எண்ணக்கருவும் தோற்றம் பெற்றுவிட்டது. (Akerlof etal, 1996). பொருளியலில் பணவீக்கம் என்பது 'நீண்ட காலப்பகுதியில் ஒரு நாட்டின் பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் ஒரு தொடர்ச்சியான அதிகரிப்பு' என பொதுவாக வரையறுக்கப்படுகின்றது. இங்கு பொது விலை மட்டம் என்பது ஓர் நாட்டின் பொருட்கள் சேவைகளின் சராசரி விலை மட்டத்தைக் குறிக்கின்றது. ஒரு நாட்டின் பணவீக்க வேகம் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பின் சதவீதமாகக் காட்டப்படும். இவ் பணவீக்கம் தொடர்பாக அறிஞர்கள் கூறிய சில கருத்துக்கள் பின்வருமாறு.

*'பொருட்களின் நிரம்பலை விடப் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பதனால் பணவீக்கம் தோன்றுகிறது':- லண்டன் The Economist என்ற சஞ்சிகை

*'பொருட்களின் நிரம்பலை விட பொருட்களின் கேள்வி அதிகமாக இருப்பதை தொடர்ந்து விலைகள் மென்மேலும் உயர்ந்து செல்லும் நிலை பணவீக்கம் ஆகும்':- E.James

*'அதிகமானளவில் பணத்தாள்களை வெளியிடுவதன் காரணமாகவே பணவீக்கம் தோன்றுகின்றது':- Hawtrey

*'பொருட்களுக்கான விலைகள் அதிகளவில் இருப்பதை பணவீக்கம் என்று கொள்ளமுடியாது. பொருட்களின் விலைகள் அதிகரித்த வண்ணம் இருப்பதே பணவீக்கமாகும்.':- Garder Ackleg -Mocro Economic Theory

பொருளியல் கோட்பாட்டில் பணவீக்கத்திற்குக் காரணமாக பல காரணிகள் அடையாளங்காணப்பட்டுள்ளன. பொருட்கள் சேவைகளின் மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு, மொத்தக் கேள்வி மாறாத நிலையில் நிரம்பல் குறைவடைதல், அரச தனியார் துறை நிறுவனங்களின் செலவுகள் அதிகரித்தல், அரசாங்கம் வங்கித் துறையிலிருந்து கடன் பெற்று வரவு செலவுத் திட்டத்தை நிதிப்படுத்தல், உற்பத்திச் செலவுகள் அதிகரித்தல், இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் அதிகரித்தல், வெளிநாட்டு உள்நாட்டு அதிர்ச்சிகள், அரசியல் உறுதிப்பாடின்மை, சமூகங்களுக்கிடையில் நிலவும்

பிரிவினைகள், குறைந்தளவு ஜனநாயகம் நிலவுதல், மத்திய வங்கியின் சுதந்திரம் குறைவாகக் காணப்படல், வருமான சமமின்மை, பொருளாதாரத்தின் நிலவும் கட்டுப்பாடுகள், வருமானத்திற்காக நேரில் வரிகளில் அதிகளவு தங்கியிருத்தல், ஊழல்கள், பொருளாதார முகாமைத்துவத்தில் காணப்படும் சீரின்மைகள் போன்றன அவற்றில் முக்கியமானவையாகும். எனினும் பணவீக்கத்திற்கான ஆரம்பக் காரணிகள் எதுவாக இருந்த போதிலும் கேள்வி, நிரம்பற் காரணிகளே முக்கியமானவையாகும். இதன் அடிப்படையிலேயே பணவீக்கக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன.

பொதுவிலைமட்ட அதிகரிப்பு வீத வேகத்தை அடிப்படையாகக் கொண்டு பணவீக்கத்தை 07 வகையாக வகுக்கலாம்.

(1) தவளும் பணவீக்கம்:- பணவீக்க வீதம் நிலையாக இருக்கும் போது பணவீக்கத்தை அண்மித்ததாக இருப்பதை இது குறிக்கின்றது.

(2) பாயும் பணவீக்கம்:- பணவீக்க வீதம் மிகக் கூடுதலாக இருக்கும் நிலையை குறிக்கும்.


(3) எதிர்பார்க்கப்ட்ட பணவீக்கம்:- கடந்தகால பணவீக்கப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தின் விலை அதிகரிப்பை கவனத்தில் கொண்டு நிகழ்காலப் பொருட்கள் சேவைகளின் பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பினை இது குறிக்கும்.

(4) அமுக்கிய பணவீக்கம்:- பொதுவிலைமட்டத்தில் அதிகரிப்பு வெளிப்படையாகக் தெரியாமல் அரசாங்கத்தின் கொள்கைகள் மூலம் கட்டுப்படுத்தி காணப்படுதல்

(5) திறந்த பணவீக்கம்: வெளிப்படையாக பணவீக்கப் போக்கு தெரியும் நிலை

(6) உச்ச வேக பணவீக்கம்:- ஒரு பொருளாதாரதில் அசாதாரண சூழ்நிலைகளுக்குப் (போர், வெள்ளப்பெருக்கு, இயற்கை அழிவு) பின்னர் பொருட்கள் சேவைகளின் விலைகள் கட்டுக்கடங்காது 200% வரை அதிகரிக்கக் கூடும். இவ்வதிகரிப்பு உச்சமான ஒரு விலை அதிகரிப்பாக இருப்பதால் உச்ச பணவீக்கம் என இதனை அழைப்பர்.


மேலே கூறப்பட்ட பணவீக்க வகைகளைப் பின்வருமாறு வரைப் படத்தில் காட்டலாம்.




பணவீக்கக் கோட்பாடுகள் பற்றி நோக்குகையில் பணவீக்கக் கோட்பாடுகள் 5 வகைப்படும். அவையாவன

1) கேள்வித் தூண்டல் பணவீக்கம்
2) செலவுத் தூண்டல் பணவீக்கம்
3) இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம்
4) அமைப்பு ரீதியான பணவிக்கம்
5) நிதி விரிவாக்கப் பணவீக்கம்

கேள்வித் தூண்டல் பணவீக்கம் என்பது ஒரு பொருளாதாரம் நிறைதொழில் மட்டத்தில் நிரம்பல் மாறாத நிலையில் மொத்தக் கேள்வி அதிகரிக்குமானால் அது பொருளாதாரத்தில் மிகைக் கேள்வியை ஏற்படுத்தி விலைமட்டத்தில் அதிகரிப்பை ஏற்படுத்துவதைக் குறிக்கும். இதனை பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.





படத்தில் மொத்த நிரம்பல் $AS_0$ மாறாத நிலையில் மொத்தக் கேள்வி $AD_O$ விலிருந்து AD, ஆக அதிகரிக்கும் போது பொதுவிலை மட்டம் $P_0$ விலிருந்து $P_1$ ஆக அதிகரித்துள்ளது. இன்நிலையில் நாட்டின் தேசிய வருமானம் அல்லது மொத்த வெளியீடு $y_0$விலிருந்து $y_1$ ஆக அதிகரித்துள்ளது. நாட்டின் நிறைதொழில்மட்ட வெளியீடு $Y_F$ ஆகக் காணப்படும் போது மொத்த கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு பண வீக்கத்தை $P_2$,$P_3$ என்ற விலைட்டம் வரை வேகமாக அதிகரிக்கும்.

பொதுவிலை மட்டம் $P_O$விலிருந்து $P_1$ ஆக அதிகரிக்கும் போது அவ் அதிகரிப்பு சாதாரணவிலை அதிகரிப்பேயாகும். எனவே இங்கு பணவீக்கம் ஏற்பட்டுக்கொள்ளாது. ஆனால் விலைமட்டம். $P_2$ விலிருந்து $P_3$ என அதிகரிக்கும் நிலை பணவீக்கம் ஆகும். ஏனெனில் நிறைதொழில் மட்டம் இருக்கும் போது வெளியீட்டை அதிகரிக்க முடியாது. எனவே நிரம்பல் மாறாத நிலையில் மொத்த கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு பொருட்கள் சேவைகளின் விலைமட்டத்தை சடுதியாக அதிகரிக்கும். இந்த நிலையே பணவீக்கம் ஆகும்.

இக் கேள்வித் தூண்டல் பணவீக்கமானது பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்

* பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு
* வீட்டுத்துறையினரின் வருமானம் அதிகரித்தல்
* தனியார் நுகர்வுச் செலவுகள் அதிகரித்தல்
* அரசாங்கச் செலவுகள் அதிகரித்தல்
* நாட்டில் முதலீட்டு மட்டம் அதிகரித்தல்

அடுத்து செலவுத் தூண்டல் பணவீக்கம் என்பது ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளின் பொது அதிகரிப்பே காரணமாகும் என்பதை விளக்குகிறது. மொத்தக் கேள்வி மாறாத நிலையில் உற்பத்திச் செலவு அதிகரிக்குமானால் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி குறைவடைந்து நிரம்பல் குறைவடையும். இதனால் விலைமட்டம் அதிகரித்துச் செல்லும். உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணம் கூலி அதிகரித்தலாகும். அதனால் இது கூலித் தூண்டலின் காரணாக ஏற்படும் பணவீக்கமாகக் காணப்படுகின்றது. இதனை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.




மொத்தக் கேள்வி AD, $AD_0$ மாறாத போது உற்பத்தி செலவு அதிகரிப்பதன் காரணமாக மொத்த நிரம்பல் குறைவடையும் போது பொதுவிலை மட்டம் $P_0$ இல் இருந்து $P_1$ ஆக அதிகரிக்கும். இன் நிலையில் நாட்டின் தேசிய வருமானம் அல்லது வெளியீடு $Q_2$ இருந்து $Q_1$ ஆகக் குறைவடைகின்றது. இது செலவு அதிகரிப்பால் ஏற்பட்ட பணவீக்கம் ஆகும்.

இச் செலவுக் தூண்டல் பணவீக்கம் பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

* கூலி அதிகரித்தல்
* உள்ளீட்டு விலை அதிகரித்தல்
* அரசாங்க வரிகள் தீர்வைகள் அதிகரித்தல்
* தொழிற்சங்கப் போராட்டங்கள்
* இறக்குமதிப் பொருட்களின் விலைகள் அதிகரித்தல்

இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம் என்பது திறந்த பொருளாதாரங்களில் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் காரணமாக உருவாகும் இவ் பணவீக்க வீதம் பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

* இறக்குமதிப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் நாட்டின் பணவீக்கம் இறக்கு மதி ஊடாக குறித்த நாட்டின் பணவீக்கத் திற்கு காரணம் ஆகும்.

* உற்பத்தி செலவில் ஏற்படும் அதிகரிப்பு

* தாராள மயமாக்கல் மற்றும் உலக மயமாக்கல்

* நாணயப் பெறுமதி இறக்கம்

அமைப்பு ரீதியான பணவீக்கம் 1960 களில் பிரதானமாக வலியுறுத்தப்பட்டது. ஓர் துறையின் ஊடாக மாற்றொரு துறைக்கு பரவும் பணவீக்கம் அமைப்பு ரீதியான பணவீக்கம் எனப்படும். இது துறைசார் பணவீக்கம் எனவும் அழைக்கப்படும். அதாவது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெரும்பாலும் விவசாயத்துறை யில் தங்கியிருப்பதன் மூலம் ஏனைய கைத் தொழில் துறை பொருட்களை இறக்குமதி செய்வதனூடாக ஏற்படுகின்ற பணவீக்கம் விவசாயத்துறை உற்பத்திகளின் விலை களை அதிகரிக்கும்.

நிதி விரிவாக்கப் பணவீக்கம் என்பது பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு காரணமாக பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பே ஆகும். இப் பணவீக் கம் வரவு செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு வங்கிகளில் இருந்து கடன்களைப் பெறுகின்றது. இந்த நிலையில் பணநிரம்பல் அதிகரித்து பண வீக்கம் ஏற்படுகின்றது.

பணவீக்க இடைவெளி எனும் எண் ணக்கரு பற்றி நோக்குகையில் பொருளாதா ராத்தில் நிறைதொழில் மட்டம் காணப்படும் போது மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு விலை மட்டத்தை அதிகரிக்கும். உற்பத்தியில் மாற்றம் இல்லாத நிலையில் கேள்வி அதிகரிக்க விலைமட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு பணவீக்க இடைவெளி எனப்ப டும். அதாவது மொத்தக் கேள்விக்கும் மொத்த நிரம்பலுக்கும் இடையிலான வித்தி யாசம் வீக்க இடைவெளி என அழைக்கப் படும்.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங் கையில் பணவீக்கத்தின் போக்கினை ஆராய் வோமானால் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுக் காரணிகள் இலங்கையின் பணவீக் கத்தினை தீர்மானிக்கின்றன இக் காரணிகள் மூன்று வகைப்படும். அவை

1) அமைப்பு ரீதியான காரணிகள்
2) கொள்கை மாற்றங்கள்
3) வெளிநாட்டு அதிர்ச்சிகள் என்பனவாகும்

இதனை விட இலங்கையில் பணவீக்க வீதத்தினை அளவிட பல விலைச் சுட்டெண் கள் பயன்படுத்தப்படுகின்றன. பணவீக்க வீதம் குறிப்பிட்ட ஆண்டின் விலைச் சுட் டெண்ணை கடந்த ஆண்டு விலைச் சுட் டெண்ணுடன் ஒப்பிட்டு அளவிடப்படும். அதாவது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிட்ட ஆண்டு விலைச் சுட்டெண்ணின் வீதமாக கூறுவதாகும். இலங்கையில் பணவீக்கத்தை அளவிட

* கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

* கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்

* கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்

* மொத்த விற்பனை விலைச்சுட்டெண்

* தேசிய உற்பத்தியின் உள்ளடக்கச் சுருக்கி

போன்றவற்றைக் குறிப்பிட்டாலும் உத்தியோக பூர்வ பணவீக்க வீதத்தை அளவிட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணே பெருமளவு பயன்படுகிறது. இது குடிசன மதிப்பிடு மற்றும் புள்ளி விபர வியல் திணைக்களத்தினால் 1952ஆம் ஆண்டினை அடியாண்டாகக் கொண்டு கொழும்பு மாநகரசபைப் பிரதேச எல்லைக் குள் அமைந்துள்ள ஏழு சந்தைகளில் பெறப்படும் சில்லறை விலை தொடர்பான தகவல்களைக் கொண்டு கணிக்கப்படுகிறது.

அடுத்து பணவீக்கம் ஏற்படுத்தும் சாதக விளைவுகளை நோக்குவோம். ஆனால் Robertson, keynes, போன்ற பொறிளியலறிஞர்கள் அதிக பணவீக்கம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்ற கருத்துடையவர்களாக காணப்பட்ட னர். இதற்காக இவர்கள் பின்வரும் காரணங்களை முன்வைத்தனர்.

* உயர் பணவீக்கம் உற்பத்தியை பெருக்கும்.
* வேலை வாய்ப்பை அதிகரிக்கும்.
* பண வருமானங்கள் உயர்வடையும்.
* மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.
* பொருட்கள் சேவைக்களுக்கான கேள்வி அதிகரிக்கும்.
* ஆற்றலுள்ள கேள்வி பெருகி அதன் மூலம் மூலதன சூழ்நிலை உருவாகும். போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

மறுபுறம் அதிகூடிய பணவீக்கமானது எந்த நாட்டிலும் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் என பரந்தளவில் தாக் கத்தை ஏற்படுத்தக் கூடியது. ஏனெனில் பண வீக்கத்தில் ஏற்படும் அதிகூடிய அதிகரிப்பா னது முழுப் பொருளாதார முறைமையையும் செயற்றிறனற்றதாக ஆக்கிவிடும். இவ்வா றான சந்தர்ப்பங்களாக

* பணவீக்க வேகம் அதிகரித்தால் பணத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை குறைவடையும்

* பணத்தின் மெய்ப்பெறுமதி வீழ்ச்சியடையும். இதனால் ஆற்றலுள்ள கேள்வி குறைவடையும்

* நிலையான வருமானம் பெறுபவர்களின் மெய்வருமானம் வீழ்ச்சியடையும்

* பணவீக்கத்தினை விட வருமான அதிகரிப்பு வீதம் குறைவாக இருக்குமானால் அனைவரினதும் மெய்வருமானம் குறை வடையும். அதாவது கொள்வளவு ஆற்றல் குறைவடையும்.

* பணத்தின் பெறுமதி வீழ்ச்சிய டைந்தால் சேமிப்பாற்றல் குறைவடையும்.

* பொருளாதாரத்தில் பொருத்தமற்ற ஏற்ற இறக்கங்களை தோற்றுவிக்கும்.

* இலஞ்சம், கறுப்புச் சந்தை நட வடிக்கைகள் அதிகரிக்கலாம்.

* நீண்ட கால முதலீடுகள் மேற் கொள்ளப்பட மாட்டாது.

போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே பணவீக்கத்தால் ஏற்படும் சிறு நன்மை யைக் காட்டிலும் அது பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தீங்கு அதிகமானதாகும். ஆகவே பணவீக்கத்தினைக் கட்டுப் படுத்தி சார்பளவில் உறுதியான விலை மட்டத்தி னைப் பேணுதல் என்பது பேரினப் பொருளி யலில் ஒரு மிக முக்கியமான குறிக்கோளாக கருதப்படுகின்றது. பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு பணக் கொள்கை, இறைக்கொள்கை என்பன பயன்படுத்தப்படு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**உசாத்துணைகள்**

1) எஸ். ஜேசுதாஸ் (2007), பொருளியல் அலகு - 5 'பணம், வங்கி, விலைமட்டம்' தென்றல் பப்ளிக்கேஷன் கொழும்பு 06

2) கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் (2008) இலங்கைப் பொருளாதாரம் குமரன் பதிப்பகம், கொழும்பு.

3) செ.சந்திரசேகரம் (2003), பொருளியல் - 2, Higher Edycation Service Centre, Jaffna

4) கோபாலப்பிள்ளை அமிர்தலிங்கம் (2008) பொருளாதரம் அபிவிருத்திச்செல்வழி' இலங்கையின் பணவீக்கம்' கோட்பாடும் நடைமுறையும், பேராசிரியர் பாலகிருஷ்ணை சேவைநலன் பாராட்டுகுழு, கொழும்பு.

5. வி.நித்தியானந்தன் (2008) பகுநிலைப் பொருளியல் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

# சர்வதேச வர்த்தகம்

*Miss. S. Neeraja*
*Economics special*
*2008/A/ 114*

ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட அரசியல் எல்லைக்கு அப்பால் உள்ள நாடுகளுக்கும் குறித்த நாட்டிற்கும் இடையில் நடைபெறும் கட்புலன் மற்றும் கட்புலனாகாத பண்டங்களின் சேவைகள் : ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றின் சட்டரீதியான கொடுக்கல் வாங்கல்களே "சர்வதேச வர்த்தகம்" எனப்படும். ஓர் நாட்டிற்கும் மற்றைய நாடுகளுக்கும் இடையில் சட்டரீதியற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான பொருள் மற்றும் சேவைப் பரிமாற்றங்களும் இடம்பெறலாம். இருப்பினும் சட்டரீதியான ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான வர்த்தக முயற்சிகளையே வெளிநாட்டு வர்த்தகம் அல்லது பன்னாட்டு வர்த்தகம் என அழைக்கப்படும்.

அந்த வகையில் வெளிநாட்டு வியாபார முறைகள் மூன்று வகைப்படும். அவை யாவன :

(1) ஏற்றுமதி வியாபாரம்

(2) இறக்குமதி வியாபாரம்

(3) மீள் ஏற்றுமதி வியாபாரம்

ஏற்றுமதி வியாபாரம் என்பது பிற நாடுகளுக்குப் பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல் ஆகும். வெளிநாட்டிலிருந்து பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்தல் இறக்குமதி வியாபாரம் எனப்படும். மீள் ஏற்றுமதி வியாபாரம் எனப்படுவது இறக்குமதி செய்யும் பொருட்களை அந்த நாட்டில் பயன்படுத்தாது வேறு நாடுகளுக்கு விற்பனை செய்தல் ஆகும். வணிக வாதம் சர்வதேச வர்த்தகம் பற்றிக் குறிப்பிடும்போது ஓர் நாடு வர்த்தகம் மூலம் தனது செல்வத்தை அதிகரிக்கலாம் எனக் கூறுகின்றது. பொருளாதார வளர்ச்சியின் இயந்திரம் என வெளிநாட்டு வர்த்தகம் வர்ணிக்கப்படுகின்றது. ஒரு நாடு தனக்குத் தேவையான சகல பொருட்களையும் உற்பத்தி செய்து கொள்ளுமாயின் அது சுய தேவைப் பூர்த்தியில் தன்னிறைவு கொண்ட நாடாகும். ஆயினும் இவ்வகையான நாடுகள் மிக மிக குறைவாகவே காணப்படுகின்றன. எனவே உலக நாடுகள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சர்வதேச வியாபாரத்தில் பெரிதும் தங்கியுள்ளன. சர்வதேச வியாபாரத்தின் பொதுவான பண்புகள் பற்றி நோக்குவோமாயின்,

(1) ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்கு அப்பால் இடம்பெறும்.

(2) சர்வதேச வர்த்தக சட்டதிட்டங்கள் பின்பற்றப்படும்.

(3) சர்வதேச ரீதியாக அங்கீகரிக் கப்பட்ட நாணயங்கள் கொடுப்பனவுக்கு பயன்படுத்தப்படும்.

(4) சர்வதேச நிறுத்தல் அளவு முறை கள் பின்பற்றப்படும்.

சர்வதேச வர்த்தகத்தை தீர்மானிக்கும் காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(1) இயற்கைக் காரணிகளின் வளவேறு பாடுகள்.

(2) தொழில்நுட்ப வேறுபாடுகள்.

(3) காரணிகளின் இணைப்பு விகிதம்.

(4) உற்பத்தியில் அளவுத்திட்ட வேறு பாடுகள்.

(5) ஒப்பீட்டு செலவு வேறுபாடுகள்.

(6) போக்குவரத்து துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

(7) தொலைத் தொடர்புகளில் ஏற்பட்ட வளர்ச்சி.

(8) வங்கித் தொழில் வளர்ச்சி.

(9) களஞ்சியப்படுத்தல் வசதி.

(10) காப்புறுதி தொழில் வளர்ச்சி.

(11) சர்வதேச வர்த்தக கூட்டுக்கள் மற்றும் பிரதேச ரீதியான கூட்டுக்களில் ஏற்பட்ட வளர்ச்சி.

(12) பொருட்கள் சேவைகளுக்கான தேவைகள் தெரிவுகள் : நாடுகளிடையே வேறுபட்டு இருத்தல்.

(13) நாடுகளின் மிகை உற்பத்தியினை விற்பனை செய்தல்.

(14) சிறப்புத் தேர்ச்சியினாலும், பரிமாற்றத்தினாலும் அடையக் கூடிய நன்மைகளைப் பெறல்.

சர்வதேச வர்த்தகத்தின் முக்கியத்து வம் பற்றி நோக்குவோமாயின்,

(1) ஒரு நாட்டில் உற்பத்தி செய்ய முடியாது அல்லது உற்பத்திச் செலவு கூடிய பொருட்களைப் பெற்றுக் கொள்ள.

(2) ஒரு நாட்டின் உற்பத்தி மிகைகளை ஏற்றுமதி செய்ய.

(3) வேலை வாய்ப்புக்களை உரு வாக்க.

(4) வளங்களை திட்டமிட்டு பயன்படுத் தவும் வளங்களின் வினைத்திறனான பயனைப் பெற்றுக் கொள்ளவும்.

(5) சர்வதேச தரத்திலான பொருட் களை சேவைகளை நுகர்வதற்கு.

(6) அன்னிய செலவாணியை உழைக்க

(7) சர்வதேச நல்லுறவை வளர்க்க

(8) மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

சர்வதேச வர்த்தகம் தொடர்பான கோட்பாடுகள் பற்றி நோக்குவோமாயின் இன்று பொதுவாக சுயதேவைப் பூர்த்தி என்ற அடிப்படையில் தனித்து இயங்குகின்ற நாட்டினைக் காண்பது அரிதாகும். பொருளா தார ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ ஒரு நாடு ஏனைய நாடுகளில் தங்கி இருப்பது தவிர்க்க முடியாததாகும். வர்த்தகம் தொடர் பாக நோக்குகின்றபோது வர்த்தக கோட்பாடு கள் முக்கியம் பெறுகின்றன. நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபடும்போது அதில் ஏற்படும் நன்மை, தீமைகளை விளக்க எழுந்த கோட் பாடுகளே வர்த்தக கோட்பாடுகளாகும்.

17ம், 18ம் நூற்றாண்டில் எழுந்த கோட்பாடுகளாக வணிகவாத கோட்பாடுகள் காணப்படுகின்றன. இக்கோடுபாடுகள் பக்கச் சார்பாக கோட்பாடுகளாக அமைந்து காணப்படுகின்றன. ஏனெனில் இக்கோடு பாடுகளின்படி ஒரு நாடானது செல்வமும் பலமும் பொருந்திய நாடாக விளங்குவ தற்கு இயலுமான அளவில் ஏற்றுமதிகளை உச்சப்படுத்தி இறக்குமதியை அதாவது ஆடம்பரப் பொருட்களைக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது முடிந்தவரை தடை செய்ய வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இந்நிலையில் வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற நாடுகள் யாவும் ஒரேயளவான வர்த்தக மீதியை அனுபவிக்க முடியாது. ஒரு நாடு பாதக வர்த்தக மீதியை அனுபவிக்கின்ற போது மற்றைய நாடு சாதக வர்த்தக மீதியை அனுபவிக்கும். இந்நிலையில் வர்த்தக மீதியை அனுபவிக்கின்ற நாடுகள் யாவும் நன்மையினைப் பெற்றுக் கொள்ள முடியா திருப்பதாலேயே வணிகவாத கோட்பாடுகள் பக்கச் சார்பான வர்த்தகம் தொடர்பான கோட்டுபாடுகள் எனக் கூறப்படுகின்றன. எனவே சர்வதேச வர்த்தகம் தொடர்பான கோட்பாடுகள் படிமுறையாக வளர்ச்சிய டைய முற்பட்டன. அந்த வகையில் அடிப் படைக் கோட்பாடுகளாக பின்வருவன காணப்படுகின்றன.

(1) முழு நன்மைக் கோட்பாடு

(2) ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு

(3) போட்டி நன்மைக் கோட்பாடு

"முழு நன்மைக் கோட்பாடு" என்பது ஒரு நாடு குறிப்பிட்டளவு உள்ளீடுகளை பயன்படுத்தி மற்றைய நாட்டைவிட குறித்த ஒரு பொருளை கூடியளவில் உற்பத்தி செய்யக்கூடிய வல்லமையினை கொண்டிருக் குமாயின் அப்பொருள் உற்பத்தியில் அந்நாடு முழு நன்மையினை பெற்றுக் கொள்ள முடியுமெனக் கூறும் கோட்பாடு இதுவாகும். இக்கோட்பாடானது பொருளிய லின் தந்தையாகிய அடம்ஸ்மித் என்பவரால் "நாடுகளின் செல்வம்" என்ற நூலில் முன் வைக்கப்பட்டது. அதாவது இங்கு ஒரு நாடு மற்றைய நாட்டை விட செயற்திறன் அல்லது வினைத்திறன் கூடிய விதத்தில் ஒரு பொருளை உற்பத்தி செய்ய முடியுமாயின் அந்நாட்டிற்கு ஒரு நன்மை காணப்படுகிற தெனவும் மற்றைய நாட்டிற்கு முழுமையற்ற நன்மை காணப்படும் எனவும் கூறும் கோட் பாடு இதுவாகும். இங்கு உற்பத்தி அலகு, அல்லது கிரயம் கவனத்தில் கொள்ளப்படும். அதாவது ஒரு நாடு மற்றைய நாட்டை விட குறைந்தளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தி கூடியளவில் உற்பத்தி செய்தல் வேண்டும். அல்லது குறைந்த செலவில் உற்பத்தி செய்தல் வேண்டும்.

| உதாரணம் : | A | B |
|---|---|---|
| நெல் | 16 | 6 |
| பால் | 8 | 16 |

உதாரணத்தின்படி A நாடானது நெல் உற்பத்தியில் முழு நயத்தையும் B நாடானது பால் உற்பத்தியில் முழுநயத்தை யும் அனுபவிக்கின்றது. அதாவது A நாடு 1 மனித மணித்தியாலத்தில் 12 அலகு நெல் உற்பத்தி செய்கின்ற அதேவேளை B நாடு 1 மணித்தியாலத்தில் 6 அலகு நெல்லி னையே உற்பத்தி செய்யும் பால் உற்பத்தி யினை நோக்கினால் A நாடு 8 அலகினையும் B நாடு 10 அலகி னையும் உற்பத்தி செய்யும். இரு நாடுகளிற்கு இடையிலான தீர்மானிக் கப்பட்ட வர்த்தக மாற்றுவீதம் 12 P = 12 M எனக் கொண்டால் A நாடு 12 அலகு நெல்லினை உற்பத்தி செய்ய வேண்டு மாயின் 2 மனித மணித்தியாலங்கள் வேலை இல் 2 மனித மணித்தியாலங்களையும் உற்பத்தியில் பயன்படுத்தி 20 அலகு பால் உற்பத்தி செய்து அதில் 12 அலகு பாலினை A நாட் டிற்கு ஏற்றுமதி செய்யும். இங்கு A நாட்டிற்கு 4 அலகு பால் இலாபம்

ஆகும். B நாட்டிற்கு 12 அலகு நெல்லினையும் 8 அலகு பாலும் இலாபமாக கிடைக்கும்.

தீர்மானிக்கப்பட்ட வர்த்தக வீதமானது A யின் உள்நாட்டு மாற்று வீதத்திற்கு அண்மையாக உள்ளதால் சர்வதேச வர்த்தகத்தால் பெறப்படும் நன்மை B நாட்டிற்கே அதிகம் ஆகும். அதாவது B நாட்டின் உள்நாட்டு மாற்றுவீதமான 6P = 10 M ஆகும். எனவே தீர்மானிக்கப்பட்ட மாற்று வீதமான 12 P = 12 M என்றளவிற்கு அண்மையில் A நாட்டின் மாற்றுவீதம் காணப்படுகிறது.

முழு நன்மைக் கோட்பாட்டின் குறைபாடு பற்றி நோக்குவோமாயின் அடம் சிமித்தினால் முன்வைக்கப்பட்ட முழுநன்மைக் கோட்பாட்டின்படி நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு முழுநன்மை அவசியம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் ஒரு நாடே இரண்டு பொருட்களின் உற்பத்தியிலும் முழு நன்மையினைக் கொண்டதாகக் காணப்படும் போது மற்றைய நாடு சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட முடியாமற் போகும் அதாவது இன்றைய உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடியதாக இருப்பதனால் அவை மட்டும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடக் கூடியதாகவும், வளர்முக நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட முடியாதவையாகவும் காணப்படலாம். எனவே இத்தகைய சந்தர்ப்பத்தில் முழுநன்மை அவசியமற்றதென்றும் ஒப்பீட்டு நன்மையே சிறந்தது என்றும் கூறப்படுகின்றது.

| நாடு | கணனி | தொலைக்காட்சி |
|---|---|---|
| ஜப்பான் | 10 | 12 |
| அமெரிக்கா | 05 | 08 |

ஜப்பான் குறைந்த செலவில் உரியளவு பொருளை உற்பத்தி செய்தால் இரு பொருள் உற்பத்தியிலும் முழுநன்மை அடையும்.

"ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு" என்பது ஒரு நாடு மற்றைய நாட்டைவிட ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அமையச் செலவில் ஒரு பொருளை உற்பத்தி செய்யும் வல்லமையினை கொண்டிருக்குமாயின் அந்நாட்டிற்கு ஒப்பீட்டு நன்மை காணப்படுமெனக் கூறும் கோட்பாடு இதுவாகும். அதாவது ஒரு நாடு மற்றைய நாட்டைவிடக் குறைந்த அமையச் செலவினைக் கொண்டுள்ள பொருளின் உற்பத்தியை நிறுத்தி அதனை ஏற்றுமதி செய்ய வேண்டுமெனவும் மாற்றக் கூடிய அமையச் செலவினைக் கொண்டுள்ள பொருட்களின் உற்பத்தியை நிறுத்தி அதனை இறக்குமதி செய்ய வேண்டுமெனவும் கூறும் கோட்பாடு இதுவாகும். ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு மிகக் கூடிய செயற்திறன் அல்லது மிகக் குறைந்த செயற்திறனின்மை என்பன கவனத்தில் கொள்ளப்படும். இது டேவிட் றிக்காடோ என்பவரினால் 1817ம் ஆண்டு வெளியிடப்பட்ட "அரசியல் பொருளாதார தத்துவம்" என்று நூலில் வெளிப்படுத்தியுள்ளார். இவர் இக்கோட் பாட்டை விளக்குவதற்கு சில எடுகோள்களை முன்வைக்கினறார். அவையாவன:

1) இரண்டு நாடுகள், இரண்டு பொருட்கள் காணப்படுகின்றன.

2) நாடுகளிற்கு இடையில் வர்த்தகம் சுதந்திரமாக இடம் பெறுகின்றது.

3) இரு நாடுகளிற்கு இடையில் உழைப்பு என்ற காரணி அசைவற்றது.

4) மாறாத உற்பத்திச் செலவு.

5) போக்குவரத்துச் செலவு / கொண்டு செல்லும் செலவு காணப்படுகின்றது.

6) தொழில் நுட்பம் நிலையானது மாற்றமின்றிக் காணப்படுகின்றது.

7) ஊழியத்தின் பெறுமதியே உற்பத்திப் பொருளின் பெறுமதியாகும்.

உதாரணம் : ஒரு அலகு உள்ளீட்டைப் பயன்படுத்தி A,B ஆகிய இருநாடுகள் அரிசி, புடவை ஆகியவற்றில் உற்பத்தி செய்யக் கூடிய அளவு வருமாறு:

| நாடு | அரிசி | புடவை | அலகு அரிசிற்கு | அலகு புடவைக்கு |
|---|---|---|---|---|
| A | 10 | 5 | 5/10 = 0.2 அலகு புடவை | 10/5 = 2 அலகு அரிசி |
| B | 5 | 4 | 4/5 = 0.8 அலகு புடவை | 5/4 = 1.2 அலகு அரிசி |

இங்கு முழு நன்மையில் நோக்குகையில் A நாடே அரிசி, புடவை இரண்டிலும் முழு நன்மையைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆனால், ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் நோக்கும்போது அரிசிக்கு A நாட்டிற்கு அமையச் செலவு குறைவாகவும் புடவை உற்பத்திக்கு B நாட்டிற்கு அமையச் செலவு குறைவாகவும் காணப்படுகின்றது. எனவே A நாடு அரிசி உற்பத்தியிலும் B நாடு புடவை உற்பத்தியிலும் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது எனலாம்.

எனவே A நாடு தனது வளங்களை அரிசி, புடவை ஆகிய இரண்டிற்கும் ஒதுக்காது அரிசிக்கு மட்டும் ஒதுக்குதல் வேண்டுமெனவும், B நாடு தனது வளங்களை அரிசி, புடவை இரண்டிற்கும் ஒதுக்காது புடவைக்கு மட்டும் ஒதுக்குதல் வேண்டுமெனவும் A நாடு அரிசியை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் B நாடு புடவையை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் கூறலாம்.

ஒப்பீட்டு நன்மையைத் தீர்மானிக்கும் காரணிகள் பற்றி நோக்கின் :

(1) காரணி வளப்பேறுகள் (காரணி செறிவுகள், காரணி அளவு, காரணி விலை) என்பவற்றில் நாடுகளிற்கு இடையில் காணப்படும் வேறுபாடுகள்.

(2) உற்பத்திக் காரணிகள் விளைத்திறனைத் தீர்மானிக்கும் காரணிகளான தொழில்நுட்பம், மனித மூலதனம், முகாமைத்துவத் திறன் என்பவற்றில் நாடுகளிற்கு இடையில் காணப்படும் வேறுபாடுகள்.

"போட்டி நன்மைக் கோட்பாடு" என்பது ஒரு நிறுவனம் அல்லது நாடு அதன் போட்டி நிறுவனம் அல்லது நாட்டினை விட குறித்த செயற்பாடுகளை முற்றிலும் வேறுபட்ட வகையில் அல்லது உயர் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் போட்டி நன்மையாகும். இப் போட்டி நன்மையானது தனது போட்டியாளர்கள் மேற்கொள்ள முடியாத விடயங்களை அல்லது அசாத்திய விடயங்களைச் சிறப்பாக மேற்கொள்ளக் கூடிய ஆற்றலாக காணப்பட முடியும்.

உதாரணம் :

◆ ஜப்பான் கொரியா ஆகிய நாடுகள் ஏனைய உலக நாடுகளைவிட மிக தரமான வாகனங்களையும் குறைந்த விலையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தல்.

◆ சீனா மிகவும் மலிவாக ஆடைகள், விளையாட்டு உபகரணங்கள், பொறியியந்திரங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து வழங்குதல்.

◆ அமெரிக்கா உயர்தரத்திலான ஆயுதங்கள், கணனிகளை உற்பத்தி செய்தல்.

இப்போட்டித் தன்மையானது தனது வேட்பாளர்களால் சாதிக்க முடியாத விடயங்களை சாதிப்பதாக காணப்படலாம். உதாரணம் : Nike,Adidos,fila,Reebok போன்ற நிறுவனங்கள் உலகளாவிய ரீதியில் தமது போட்டியாளர்களை விட தமது

உற்பத்திகளுக்கு உயர்தரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் இவற்றின் மூலம் சர்வதேச வர்க்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை உணர முடிகின்றது.

சர்வதேச வர்த்தகத்தின் நன்மை தீமைகள் பற்றி நோக்குவோமாயின் சர்வ தேச வர்த்தகத்தின் நன்மைகளாக பின்வரு வனவற்றைக் குறிப்பிடலாம்.

1) நுகர்வோருக்கு ஓர் உயர்ந்த தரமுடைய பொருட்களின் வகைகளை வழங்கக் கூடியதாக இருக்கும்.

2) பொருளாதாரத்தில் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கத்தக்க உயர்ந்த அளவுத்திட்ட விளைவுகளால் ஏற்படும் பாரிய உற்பத்திகளை சந்தைப்ப டுத்துவதற்கு சர்வதேச வர்த்தகம் இடம் கொடுக்கின்றது.

3) ஒரு நாடு தானாக உற்பத்தி செய்ய முடியாத பொருட்கள் சேவைகளை மக்க ளின் நுகர்வுக்கு பெற்றுக் கொள்ளுதல்.

4) சர்வதேச போட்டி காரணமாக நுகர்வோர்களுக்கு உயர்ந்த பொருளாதார நன்மைகளை சர்வதேச வர்த்தகம் பெற்றுக் கொடுக்கின்றது.

5) சர்வதேச வர்த்தகம் குறித்த ஓர் நாட்டுக்கு தொழில்நுட்பம் முகாமைத்துவம் மற்றும் புதிய கருத்துக்களைத் தோற்றுவிக் கின்றது.

6) சர்வதேச வர்த்தகம் சர்வதேச நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துகின்றது.

7) சர்வதேச சிறப்புத் தேர்ச்சி ஓர் நாட்டின் வெளியீட்டு அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.

8) ஒப்பீட்டு நலனின் அடிப்படையில் பொருளாதார சேவைகளை உற்பத்தி செய்யும் நாடுகள் தமது மிகையினை ஏற்றுமதி செய்வதற்குக் காரணமாக அமைகின்றது.

9) அந்நிய செலாவணியை உழைப்பதற்கென ஒரு முக்கிய மூலமாக வர்த்தகம் காணப்படுகின்றது.

10) வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் வருமான வாழ்க்கைத் தரம் என்பவற்றை மேம்படுத்தலாம்.

11) புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதில் வர்த்தகம் முக்கியம் பெறுகின்றது.

12) நாடுகளிற்கு இடையில் இன்று நிலவும் பொருளாதார சமமின்மைகளை நீக்கி சமமான பொருளாதார நிலைமை யினை தோற்றுவிக்கின்றது.

13) நாடுகளிற்கு இடையில் அரசியல் பொருளாதார உறவு முறைகள் வளர்வ தற்கு வர்த்தகம் அடிப்படையாய் அமைகிறது.

சர்வதேச வர்த்தகத்தின் தீமைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1) குழந்தைப் பருவத் தொழில்கள் வெளிநாட்டு போட்டியால் அழிவடையலாம். வெளிநாட்டு நிறுவனங்கள் அவைகள் கொண்டிருக்கும் உயர்ந்த அளவுத்திட்டச் சிக்கனத்தால் குறைந்த செலவில் உற்பத்தி செய்வார்கள். இது சிக்கனமின்மையை அதிகரிக்கும். குழந்தைப் பருவக் கைத் தொழில்களைப் பாதிக்கும்.

2) வேலையின்மையை அதிகரித்தல் வர்த்தகத்தால் உள்நாட்டு தொழில்களின் வீழ்ச்சி உயர்தர வேலையின்மைக்கு இட்டுச் செல்லும்.

3) வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் தங்களது மிகை உற்பத்திகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்வதால் ஏற்படும் பாதக விளைவுகள்.

4) ஓர் நாடு தொடர்ந்து வெளிநாடு களில் உற்பத்திப் பொருட்களுக்கு

தங்கியிருத்தல் நிலை உருவாகுதல்.

5) ஓர் நாடு சிறப்புத் தேர்ச்சியால் அனுபவிக்கும் பிரதி கூலங்களை சர்வதேச வர்த்தகம் ஏற்படுத்தும்.

6) சர்வதேச வர்த்தகம் பொருளாதார மந்தத்திற்கு இட்டுச் செல்லலாம்.

7) சுயநிறைவு என்பது அழிவடைதல்.

8) மக்களுக்கு அவசியமில்லாத பண்டங்கள் இறக்குமதி செய்யப்படுவதால் நுகர்வுச் செலவீடு அதிகரிக்கும். சேமிப்பு குறையும், முதலீடு குறையும், கடன்பெறும் நிலை உருவாகும்.

சர்வதேச வர்த்தகமானது நாடுகளிற்கு இடையில் சட்டரீதியாக ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பாக மேற்கொள்ளப்படுவதுடன் நாடுகளிற்கு இடையில் பல நன்மை தீமைகளையும் பெற்றுத் தருவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துறுதியாக விளங்குகின்றது.

உசாத்துணை நூல்கள்

1) செல்வரத்தினம் சந்திரசேகம் (August) 2003 பொருளியல் II - "சர்வதேச வர்த்தகம்"

2) அ.சிவநேசராஜா (2006) வணிக்கக்கல்வி I
"உள்நாட்டு வெளிநாட்டு வியாபார நடவடிக்கை"

3) S.மயூரன் (2005), வணிகக் கல்வி, "சர்வதேச வர்த்தகம்"

4) வி.நித்தியானந்தம் (2008) பருநிலைப் பொருளியல் ஓர் அறிமுகம்
"சர்வதேச வர்த்தகம்"

# பொதுத் தீர்வைகள் மற்றும் வர்த்தகமும் சார்ந்த பொது உடன்படிக்கையும் (GATT)
# உலக வர்த்தக நிறுவனமும் (WTO) ஒரு நோக்கு

*Mr. S. Thenesh,*
*Visiting Tutor,*
*Department of Economics,*
*University of Jaffna,*

இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாடுகள் எதிர்நோக்கிய சீரழிவில் இருந்து அவற்றை மீட்டெடுத்து சர்வதேச ரீதியில் பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்பும் நோக்கில் 1947 களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலா பலனாக 1948 இல் அமுலுக்கு வந்த ஒரு பல்பக்க உடன்படிக்கையே பொதுத் தீர்வைகளும் வர்த்தகமும் சார்ந்த பொது உடன்படிக்கை ( General Trade and Tariff Agreement - GATT ) ஆகும்.

இரண்டாம் உலக யுத்தத்தால் சீரழிவுக்குட்பட்ட நாடுகளின் புனருத்தார ணத்துக்கும் அபிவிருத்திக்கும் என பிரிட் டன் வூட்ஸ் முறையினால் உத்தேசிக்கப் பட்டிருந்த சர்வதேச வர்த்தக நிறுவனத்திற் கான வலுவான பட்டயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது. இத னால் வரையறுக்கட்பட்ட சில ஏற்பாடுக ளைத் தன்னகத்தே கொண்டு ஆரம்பிக் கப்பட்டது. இதனால் மேற்கொள்ளப்பட் டிருந்த சர்வதேச வர்த்தக நிறுவனத்திற் கான திட்டங்களைக் கைவிட நேரிட்டது. இதன் விளைவால் இந்த GATT உடன்படிக்கையானது தற்காலிகமான தாக இருந்த போதிலும் அனேகமான நாடு களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக விதிகளை விதந்துரைக்கும் தனியான ஒரு பல்பக்க அமைப்பாக இருந்தது.

இந்த GATT உடன்படிக்கையா னது விதிமுறைகளின் தொகுப்பாக மாத்திரமன்றி வியாபாரம் தொடர்பான பிரச்சனைகளைக் கலந்துரையாடித் தீர்க் கக்கூடிய அரங்கமாகச் செயற்படுதல், நாடுகளிடையே சமமான கவனிப்பினை வழங்குவதனை உறுதிசெய்யும் பொருட்டு வர்த்தகத் தடைகளையும் வர்த்தகம் தொடர்பான ஒரு தலைப்பட்சமான நிலை மைகளைக் குறைத்துவிடுதல், உலக வர்த்தகத்தைத் தாராளமயமாக்கு வதோடு இதன் உதவியுடன் வளர்ச்சிக்கும் அபி விருத்திக்கும் பங்களிக்கக்கூடிய வகை யில் கைத்தொழில் மற்றும் வணிக நிறுவ னங்களில் முதலீடு செய்வதற்கும் உதவி புரிதல், அல்லது வியாபாரம் செய்வதற் கும் தொழில்களை உருவாக்குவதற்கும் அது தொடர்பான நம்பிக்கையை வளர்ப்ப தற்கும் உதவுதல் போன்ற பல நோக்

கங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

GATT அமைப்பில் உள்ள ஒவ்வொரு நாடும் ஏனைய அங்கத்துவ நாடுகளுக்கு தன் சந்தையினை சமமான முறையில் திறந்து விடுகின்றது. இந்த வகையில் குறிப்பிட்ட ஒவ்வொரு நாடும் வர்த்தகக் கூட்டாளிகளும் இணைந்து தீர்வை வெட்டு ஒன்றுக்கு உடன்படும் போது பெருமளவுக்கு விரும்பப்படும் நாடு என்ற கோட்பாட்டுக்கிணங்க சகல நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படும். ஆகவே தான் இத்தகைய தடங்கல் அற்ற சந்தை சக்திகளின் தொழிற்பாட்டினாலும் சுதந்திரமான போட்டியாலும் சிறப்பான முறையில் கட்டற்ற வர்த்தகத்தை ஸ்தா பித்துக் கொள்ளலாம் எனக் கருதுவ தோடு இதனை அதிகரிக்கும் விதமாக விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளதோடு பழைய கோட்பாடான நாடுகள் இறக்குமதிகளை கட்டுப்படுத்தி ஏற்றுமதிகளுக்கு மானியம் வழங்குவதன் மூலம் செழிப்பு நிலையினை அடைய முடியும். என்ற கருத்தினை நிராகரிக்கின்றது. இதனால் தான் இந்த அமைப்பின் விதிமுறைகள் கட்டற்ற போட்டியினைத் தாக்குப்பிடித்து நிற்கக்கூடிய நாடுகளுக்கு அல்லது வர்த்தகர்களுக்குச் சாதகமானதாக இருந்து வருகின்ற அதே நேரம் போட்டியிடும் ஆற்றல் செயல்திறன் அற்ற நாடுகளுக்கு அல்லது வர்த்தகர்களுக்குப் பாதகமானவையாக அமைந்து விடுகின்றன என்றும் இதனால் சில வறிய நாடுகள் உலகின் சந்தை சக்திகளுக்கு ஈடுகொடுக்க முடியாது போகும் பட்சத்தில் மேலும் மோசமான வறுமைக்குத் தள்ளப்படும் என்றும் கருதப்படுகின்றது. ஆயினும் உறுப்பு நாடுகளுக்குப் பல்பக்க ஒழுக்காற்றினை விதித்து வருவதும் அதே நேரம் இவற்றைக் கண்டிப்பான முறையில் பிரயோகிக்கப்படுமாயின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான விடயங்களில் தேசிய இறைமையைக் கூடப் புறக்கணித்து விடக்கூடிய தன்மையையும் கொண்டது என விமர்சிக்கப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் இந்த உடன்படிக்கையானது காலத்திற்குக் காலம் பல்வேறு நாடுகளில் தனது செயற்பாடு பற்றி பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தயை GATT அமைப்பானது சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்டு வருகின்ற தடைகளை முற்றாக நீக்கிவிடும் அல்லது குறைத்துவிடும் நோக்கில் வர்த்தகம் தொடர்பான பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் முறையே 1947 இல் ஜெனிவாவில் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையும் தொடர்ந்து 1949 இல் பிரான்சில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையும் என்ற வகையில் தொடர்ந்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்து இறுதியில் எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 1986 தொடக்கம் 1993 வரையான காலப்பகுதியில் உருகுவேயில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் உருகுவேயில் நடைபெற்ற எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெறுகின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறாக காலத்துக்குக் காலம் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக வர்த்தகத் தடைகள் அதிகளவிற்கு நீக்கப்பட்டதுடன் உலக வர்த்தகம் எதிர்நோக்கி வந்த பல பிரச்சனைகளும் ஓரளவு தணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் உதாரணமாக பிரதான கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் மீதான நிறைவேற்றப்பட்ட சராசரித் தீர்வையானது 1940 இல் 40% ஆக இருந்து தொடர்ந்து 1950 இல் 25% ஆகி பின் 1960 இல் 17% ஆகி 1970 இல் 12% ஆகி 1980 8%ஆகி 1990 இல்

4.7% என்ற வகையில் தொடர்ந்து குறைக்கப்பட்டு வந்தமையை அவதானிக் கலாம்.

இத்தகைய தாராள வர்த்தகத் தன்மை கொண்ட GATT என்ற அமைப்பு உருவாக்கப்பட்டமையைத் தொடர்ந்து கடந்த 50 வருடங்களில் வர்த்தகத்தின் அளவு 10 மடங்குக்கு மேல் அதிகரித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1999 இல் வர்த்தகத்தின் பெறுமதி 3500 அமெரிக்க டொலர்களாக் காணப்பட்டது. இதில் 11% விவசாயப் பொருட்களும் 5.7% தொழில சார்ந்த பொருட்களும் உள்ளடங்கும். இக்காலத்தில் இலங்கைப் பொருளாதார மும் வர்த்தகத்தில் கணிசமான வளர்ச சியை எதிர்நோக்கிய அதேவேளை கிழக் காசிய தென்கிழக்காசிய நாடுகளின் துரித ஏற்றுமதி வழிப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் ஜப்பானின் திடீர் எழுச்சிக் கும் தென்கொரியா, கொங்கொங், தாய் வான், சிங்கப்பூர் போன்ற கிழக்காசியா வில் நான்கு வேங்கைகள் என அழைக்கப் படும் நாடுகள் புதிய கைத்தொழில்மய நாடுகளாக மிளிரவும் இவ்வமைப்பினால் உருவாக்கப்பட்ட கட்டற்ற உலக வர்த்தக மும் துணைபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் 1920, 1930 களில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு வாதம் உலக மந்தத்துக்கு துணைபோனது போன்று இந்த GATT உடன்படிக்கை உலகப் பொருளாதாரம் மீது பிரமாண்ட மான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் வளர்ந்த நாடுகள் நன்மைபெற வளரும் நாடுகள் பல அச்சுறுத்தல் களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமையும் காணப்படுவதற்கு இந்த அமைப்பின் ஒழுங்கு விதிகளில் உள்ள குறைபாடுகளே காரணமாகும். 1986 தொடக்கம் 1990 வரை இந்த அமைப் பைச் சேர்ந்த நாடுகளில் தாராள வர்த்தக நிலை காணப்பட்டபோதும் 45 நாடுகளில் 284 வகையான வர்த்தகத்தடைகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1986களிலிந்து 1994கள் வரை யான காலப்பகுதிக்குள் மேற்படி உருகுவே வட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அண்மைக்கால வரலாற் றில நீண்ட காலம் இடம் பெற்ற பேச்சு வார்த்தையாகவும், அதே நேரம் முக்கியத் துவம் பெற்ற பேச்சு வார்த்தையாகவும் இது கருதப்படுகின்றது. இத்தகய உருகுவே சுற்றுப்பேச்சுக்கள் முதலில் மந்திரிகளின் ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது. இதில் விவசாயம், துணி என்பவற்றின் வர்த்தகம், சந்தைப்படுத்தல் போன்றன பற்றி விவாதிக்கப்பட்டன. 1990இற்கு முன்னர் 15 உப பகுதிகளில் விவாதிக்கப்பட்டு இறுதியாக 07 பகுதிக ளில் சேர்க்கப்பட்டன. இதன் விளைவாக இலகுவான சந்தைப்படுத்தல், குறைந்த தீர்வைகள், ஏற்கனவே இருந்த தீர்வைத் தடைகளைக் குறைத்தல் போன்றவை முக்கியம் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தை முக் கியமானதும், விரிவானதும், பெருமளவு அபிலாசைகளைக் கொண்டதுமான ஒரு வர்த்தகத் தாராள மயப்படுத்தல் வழி முறையாகக் கருதப்பட்டது.

1986களில் பொருளாதார செழிப்பு நிலையின் நம்பிக்கையோடு ஆரம்பிக்கப் பட்ட உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தை 1990களில் மந்தம் மற்றும் பாதுகாப்புவாத உண்மைகளைப் புலப்படுத்தி பல கசப் பான வாக்குவாதங்களைத் தூண்டிய தோடு மட்டுமன்றி ஐரோப்பிய சமூகத் திற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மானியப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி விடயங்கள் பற்றி காரசாரமான வாதங்கள் ஏற்படத் துணைபோனது. இந்த உடன் படிக்கையை முன்னெடுத்துச் செல்வதில் இதன் பணிப்பாளர் நாயகமான 'பீட்டர்

சதர்லாண்ட்' மிக முக்கிய பங்கினை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நடைபெற்ற பேச்சு வார்த்தையின் பலனாக 1993 டிசம்பரில் ஓர் உடன்படிக்கைக்கு வந்தாலும் தேசிய அரசுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டிய தேவை முதலில் காணப்பட்டது. அடுத்த தாக 500 பக்கங்களைக் கொண்ட தீர்வை, கோட்டா வெட்டு தொடர்பான நிரல்களை நிறைவு செய்வதற்கு "நாட்டுக்கு நாடு" என்றும் "பண்டத்துக்குப் பண்டம்" என்றும் உடன்படிக்கைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டிய தேவை காணப்பட்டது. இந்த வகையில் 1994 ஏப்ரலில் 125 நாடுகளி னால் கைச்சாத்திடப்பட்ட இந்த உடன் படிக்கை 1995 ஜனவரி 01 தொடக்கம் அமுலுக்கு வரும் என எதிர் பார்க்கப் பட்டது. இந்த உடன்படிக்கையின்படி,

- ❖ உற்பத்திப் பொருட்கள் மீதான தீர்வையை 2/3 பங்குக்கு மேல் குறைத்தல்
- ❖ 40 % இற்கு மேலான பொருட் களை வரியில்லாமல் சந்தைப் படுத்த முடியும்.
- ❖ 06 வருடங்களில் விவசாயம் சம்பந்தமான வர்த்தக மானியங் கள், வர்த்தகத் தடைகள் என்பன நீக்கப்படும்.
- ❖ முதன் முதலாக தொழில் (வேலை) சார்ந்த, வர்த்தகத்தை அடிப்படை வர்த்தக விதிகளின் கீழ்க் கொண்டு வருதல் போன்ற வற்றினை தன்னகத்தே உள்ள டக்கியிருந்தது.

இத்தகைய உருகுவே சுற்றுப்பேச்சு வார்த்தை மூலம் மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கைகள் என்ற வகையில் முக்கியமாக,

- ❖ தீர்வையில் மேலும் பொருட்களை எடுத்து வருவதும், தீர்வையில் லாத தடைகளைக் குறைத்து விடுதலும்,
- ❖ குறிப்பாக சேவைகள், முதலீடுகள் மற்றும் அறிவுசார் சொத்துக்கள் போன்ற புதிய விடயங்களை இதன் கட்டுப்பாட்டின கீழ் கொண்டு வருதல்,
- ❖ வேளாண்மை, புடவைகள் மற்றும் ஆடைகள் என்பவற்றை விதி முறையின் கீழ் கொண்டு வருவதன் மூலம் உலகு தழுவிய வியாபாரப் பண்டங்களை உள்ள டக்குதல்
- ❖ இந்த அமைப்பினை புதிய உலக வர்த்தக நிறுவனம் என்ற வகை யில் நிலை மாற்றம் செய்வதன் மூலம் அதனைச் சீர்திருத்தி அமைப்பதுடன், இதன் அனுசர ணையுடன் வர்த்தக உடன் படிக்கைகளைக் கண்காணிக் கவும், உறுப்பு அரசுகள் இடையே தகராறுகள் ஏற்படாது பார்த்துக் கொள்வதுடன் அவ் வாறு ஏற்படும் போது அவற்றைக் கண்காணித்து தீர்த்து வைக்கவும், அதிகரித்த அளவில் அதிகாரம் வழங்கல் என்ற வகையிலும் பல நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய வகையில் இப் பேச்சு அமைந்தது.

இந்த வதையில் பண்டம் மட்டுமன்றி, சேவைகள் விரிவாக்கம், சந்தைகள் பிர வேசம், கைத்தொழில் கொள்கை, மானி யம் தொடர்பான கொள்கை, புடவைகள், ஆடைகள் வர்த்தகம் போன்றவை கூட இதன் கட்டுப்பாட்டில் வந்ததுடன் (கைத்தறி உற்பத்தி தவிர), வேளாண்மை வர்த்தகம் கூட பாதுகாப்புவாதம் மூலம் தீர்க்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organization - WTO) தொடர்பாக நோக்கவோமாயின், சர்வதேச ரீதியில் பொருளாதார வளர்ச்சி யைக் கட்டியெழுப்புமுகமாக உருவாக்கப்

பட்ட நிறுவனங்களில் மிகக் கடைசியாக அறிமுகப்படுத்தப்பட்டதே உலகவாத்தக நிறுவனம் ஆகும். 1986 – 1994 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் பிரதிபலனாக 1995 ஜனவரி 16ம் திகதியன்று இந்த உலக வர்த்தக நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் அமெரிக்கா உட்பட 130 இற்கு மேற்பட்ட நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த உலக வர்த்தக நிறுவனத்துடன் உலக வங்கி, சர்தேச நாணய நிதியம் என்பனவும் இணைந்து செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். உலக நாடுகளுக்கிடையே வர்த்தகக் கட்டுப்பாடுகள், தடைகள் ஏற்படாமல் வர்த்தகம் சீராகவும், நியாயபூர்வமாகவும் நடைபெறவும் மிக ஏழை நாடுகளின் வர்த்தகத்தில் வளர்ச்சியை ஏறபடுத்துவதற்கும் உதவுவதே இதன் பிரதான நோக்கமாகும். இந்த உலக வர்த்தக நிறுவனத்தின் முக்கிய பணிகள் என்ற வகையில்,

உருகுவே மாநாட்டின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்

- ❖ உலக வியாபார விதிகளை நடைமுறைப்படுத்துதல்
- ❖ அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பொருளாதார உறவுகளை வளர்த்தலும் அங்கத்துவ நாடுகளின் விவசாயம், கைத்தொழில், வெளிநாட்டுச் செலாவணி, புத்திஜீவித சொத்துரிமை (Intellect ual Property Rights) தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துதல்
- ❖ சுறறுச் சூழலைப் பாதுகாத்தல்
- ❖ நிதிச்சேவை, ஊழியநகர்வு, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, கட்புலசெவிப்புல காட்சிகளைத் தாராளமாக்குதல் போன்ற பலவற்றை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

உலக வர்த்தக நிறுவனம் (WTO) ஸ்தாபிக்கப்பட்டு வருங்காலத்தில் எழக்கூடிய சச்சரவுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தியிருக் கின்றார்கள். இதற்கு TRPM (Trade Policy Review Mechanism) என்பது 1989 இல் இருந்து நடைமுறையில் இருந்தாலும் வருங காலத்தில் 2 வருடங்களுக்கொரு முறை கூடும் Ministers Conference ஒப்பந்தங்களையும் நாடுகளுக்கிடையில் உள்ள ஏற்பாடுகளையும் பரிசீலனை செய்யக் கூடியதாக இருக்கும். மேலும் ஒரு குறிப்பிட்ட நாடு ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்த மறுக்கும் சந்தர்ப்பத்தில் அதனிடமிருந்து நட்டஈட்டினைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இத்தகைய உலக வர்த்தக நிறுவனத்தின் செயற்பாட்டால் உலக ரீதியல் ஏற்படக் கூடிய பலாபலன்கள் என்ற வகையில் முக்கியமாக,

- ❖ இறுப்புக் (Tariff) குறைவடையும்.
- ❖ தொழிற் பொருட்களின் அளவு தொடர்பான கட்டுப்பாடுகள நீங்கும். (உ+ம் :- துணிவகைகள், மோட்டார்கள்)
- ❖ இறக்குமதித் தடைகள் நீங்கும் அல்லது குறைவடையும்.
- ❖ விவசாயப் பொருட்களுக்குக் கொடுக்கும் மானியம் போன்றவையால் உலக ஏற்றுமதி 2005 அளவில் 25% கூடும் என்றும் 1990இன் விலைகளின் படி உலகிற்கு இதனால் 500 பில்லியன் ஸ்ரேலிங் பவுண் அளவு கூடிய வருமானம் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெற்றி தராத பட்சத்தில் வர்த்தகத்தில் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு என்ற

ஒன்று இருந்துவர இடமுள்ளது என்றும் இதன் விளைாக வறியவர்கள் மட்டுமே உயிர்வாழக்கூடிய நிலையை உருவாக்கி விடும் என்பதனையும் உணர்த்தப்பட்ட நிலையில் பேச்சின் இறுதி உடன்பாடாக வேலைகளிலான (தொழில்களிலான) வர்த்தகத்தையும், சர்வதேச முதலீடுகளை யும் தாராளமயப்படுத்தி வேளாண்மைத் துவ முறையிலும், பொருள் உற்பத்தித் துறையிலும் அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாக்கும் என்று கருதி மேற்படி சகல விடயங்களையும் 1995 ஜனவரி மாதம் ஸ்தாபிக்கப்பட்ட உலக வர்த்தக நிறுவன மானது உலக வங்கி (World Bank) மற்றும் சர்வதேச நாணய நிதியம் (Inter national Monetary Fund) என்பவற்றுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து செய லாற்றுவதன் மூலம் உலக வர்த்தகத் தைத் திறமையாக நிர்வகிக்கும் எனற எதிர்பார்ப்பு உள்ள அதே நேரம் இன் றைய உலகில் வர்த்தகத்தில் முக்கிய ஆதிக்கம் செலுத்துகின்ற அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் வர்த்தகம் தொடர்பாகக் கடைப்பிடிக்கும் கொள்க கைளிலேயே அதன் வெற்றி தங்கியுள்ள மையால் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) செயற்பாட்டின் விளைவினைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்


1. பொருளியல் நோக்கு: "இலங்கையும் ஐரோப்பிய பொருளாதார சமூகமும்"
2. சமூக ஒளி (1994),:"சர்வதேசமும் வர்த்தக கொள்கைகளும்" சமூக ஒளி, இதழ்- 4சமூக விஞ்ஞான மன்றம், பொருளியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்.
3. மா.சின்னதம்பி(1997) :"பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்கள் 1990 களின் வளர்ச்சி"
4. News Survey(2000), "Globalition and its impact". The bi monthly publication of the Information deparment,,Gentrel Bank of Srilankan,Vol,No.4
5. http;// WWW.imf.org/External

# யூரோ நாணயம்

*Miss.T.Sakitha*
*Economics special.*
*2009/A/ 181*

சர்வதேச நாணய அமைப்பினிலே ஆரம்ப காலங்களில் (1950-1960) காலங்களிலே, டொலர் நாணயமும், ஸ்ரேலிங் பவுண் நாணயமும் அங்கீகரிக்கப்பட்டு சர்வதேச கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. எனினும் தொடர்ந்து வந்த ஆண்டுகளிலே இந் நாணயங்களில் குறிப்பாக ஸ்ரேலிங் பவுணின் பெறுமதி பல தடவைகள் உலக ரீதியாகக் குறைவடையத் தொடங்கியமையால் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களிற்கு டொலர் நாணயம் தனியான நாணயமாக தொடர்ந்தும் பயன்பட்டு வந்தது.

எனினும் ஐக்கியஅமெரிக்கா வங்கியமைப்பில் காணப்பட்ட பல்வேறு வகையான நாணயக் கட்டுப்பாடுகள் காரணமாக அங்கு இருந்த டொலர் நாணயங்களினை அந்நாட்டிலேயே முதலீடு செய்வது கடினமான தொன்றாகக் காணப்பட்டது. இதன் காரணமாக டொலர் நாணயத்தின் பெறுமதியினையும் அதன் பயன்பாட்டினையும் ஐக்கிய அமெரிக்காவிற்கு வெளியே அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

1970ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெரு மாற்றங்கள் யூரோ நாணயமுறைமை (Euro Money System -Ems) வளர்ச்சி அடையத் தூண்டுகோலாயின. குறிப்பாக 1970ம் ஆண்டுகளில்"பிரிட்டன் வூட் நாணயமாற்றுத் திட்டம்" (Bretton wood system) ஒரு முடிவுக்கு வந்தமையினால் டொலர் நாணயத்தினை தங்கமாக மாற்றுவது ஐக்கிய அமெரிக்க அரசினால் தடை செய்யப்பட்ட போது உலக ரீதியாக நாணய மாற்று வீதத்தில் ஓர் ஆரம்பநிலை தோன்றியது. இதனை 'Break down of Gold Exchange Standard' என அழைப்பர். இவ்வாறு டொலர் தங்கமாக மாற்றும் முறை நிறுத்தப்பட காரணம் Japan இல் இருந்து அதிக பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு ஐக்கிய அமெரிக்காவினை வந்தடைந்தன.

இவ்வாறான சந்தர்ப்பத்திலே புதிய நாணங்களை உருவாக்க வேண்டிய தேவை சர்வதேச நாணய நிதியத்திற்கு (IMF) ஏற்பட்டது. இந் நிலைமையானது சர்வதேச நாணய அமைப்பில் பெரும் அதிர்ச்சியையும் நிச்சயமற்ற தன்மையினையும் தோற்றுவித்தது. இதனால் நாடுகள் தமது நாட்டு நாணய தளம்பல்களை தவிர்ப்பதற்கும் அதனை உறுதி நிலையில் வைத்திருக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை செயற்படுத்தத் தொடங்கின. இதன் காரணமாக அமெரிக்காவின் வங்கிகளில் உள்ள டொலர் வைப்புக்கள் ஐரோப்பிய நாடுகளிற்கு மாற்றப்பட்டன.

அத்துடன் 1960ம் ஆண்டளவில்

ஐக்கிய அமெரிக்காவின் சென்மதி நிலுவையில் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக டொலரின் பெறுமதி குறைவடைந்தது. இதனால் ஐக்கிய அமெரிக்கா வங்கிகள் வெளிநாடுகளுக்கான கடன் கொடுப்பனவுகளை கட்டுப்படுத்தியதுடன் உள்நாட்டு முதலீடுகளுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைத்தனர். இதனால் இங்கிலாந்தில் டொலர் சந்தையின் வளர்ச்சி உயர்நிலையினை அடைந்தது.

இதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியிலே உலக ரீதியாக பணவீக்க நிலைமைகள் ஏற்பட்டு அவை உறுதியற்ற நிலைமைகளை உருவாக்கியமையினால் 1979-03.13 இல் உருவாக்கப்பட்ட "ஐரோப்பிய நாணய முறையானது" -Europian Monetary System- EMS நாணயதளம்பலை ஓர் கட்டுக் கோப்பில் வைத்திருக்கும் பொருட்டு (Exchange Rate Mechanism- EMR) என்ற முறையினை நடைமுறைப்படுத்தியது. இதனால் ஐரோப்பிய நாடுகளின் நாணய தளம்பல்கள் ஓர் குறிப்பிட்ட எல்லைக்குள் தளம்புவதற்கு அனுமதிக்கப்பட்டது. இதனை "Sang in the tunnel" என அழைப்பர்.

இவ்வாறாக டொலர் நாணயத்தைப் போன்று வெவ்வேறு நாடுகளில் இருப்பவர்களும் தமது நாணயங்களை தமது எல்லைப் பிரதேசத்துக்கு அப்பால் கொண்டு சென்று ஐரோப்பிய நாடுகளில் முதலீடு செய்ய விரும்புகின்றனர். இவ்வாறான பெருமளவு முதலீடுகள் ஐரோப்பிய நாட்டில் இடம் பெறுவதனாலேயே "யூரோ (Euro) என்ற பதம் முன்வைக்கப்பட்டது. யூரோ என்பது ஒரு நாட்டின் எல்லைக்கப்பால் அந்நாட்டின் நாணயம் பயன்படுத்தப்படின் அது "யூரோ" என்ற வடிவத்தினைப் பெறும்.

யூரோ நாணயத்தின் தோற்றத்தின் பரிணாமப் போக்கினை நோக்கின்,

1989:- Dalaras Report" வெளியா னது. இதில் ஐரோப்பிய நாடுகளிடையே நிதி ஒருங்கிணைப்பு பற்றி இடம்பெற்றிருந்தது.

1991:- 'Masris' ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

1994:- ' European Money Company' ஆரம்பிக்கப்பட்டது.

1995 :- புதிய நாணயப் பெயர் (யூரோ) நிர்ணயிக்கப்பட்டது.

1998 :- ஐரோப்பிய மத்திய வங்கி உருவாக்கப்பட்டது.

1999 :- யூரோ அறிமுகமானது

2002 :- யூரோ புழக்கத்திற்கு வந்தது.

2003 :- யூரோ அங்கத்துவ நாடுகளின் பழைய நாணயங்கள் மீளப் பெறப்பட்டன.

யூரோ நாணயத்தின் தோற்றத்தினை காலகட்டங்களாக வகுத்து நோக்கின் 1979-1983 வரையான காலப்பகுதியில் ஐரோப்பிய நாணயமுறை உருவாக்கப்பட்டது. இக்காலப் பகுதியிலே உறுதியான பொருளாதார திட்டங்கள் பேணப்படாமையினால் ஒவ்வொரு நாடும் பல வகையான வெளிநாட்டு நாணயங்களினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன், நாடுகளிடையே உறுதியான தன்மை விலைமட்டங்கள், செலவுகள் என்பவற்றை பேணக்கூடியதாக ஒரு கொள்கையை வழிவகுக்க முடியாமல் இருந்தது. இக் காலத்தில் யூரோ கொடுக்கல் வாங்கலுக்கு பயன்படுத்தக்கூடிய வகையிலோ யூரோ வளர்ச்சியடையாமையினால் யூரோ எனும் நாணய அலகு முக்கிய இடத்தை பெற முடியவில்லை

இதன் பின்பு "1983-1987" வரையான காலப்பகுதியிலே யூரோ நாணயத்தை பொதுவான நாணயமாக உருவாக்குவதற்கான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப் பட்டன. ஐரோப்பிய நாட்டிற்கு இடையிலான பொருளாதாரக் கொள்கைகள் சர்வதேச நாணய உறுதிப்பாட்டினை உருவாக்கக் கூடிய நிலையிலே முன்னெடுத்துச் செல்லப் பட்டன. 1983ல் ஐரோப்பிய நாடுகளுக்கு

இடையிலான நாணய மாற்று வீதங்கள் சீரமைக்கப்பட்டன. இதனால் சில நாடுகள் உறுதியான பொருளாதார கொள்கைகளை மாற்றங்களை செய்து ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்தன.

1987ல் ஐரோப்பிய நாணய அமைப்பால் உள்ள மத்திய வங்கிகள் யாவும் ஒன்று சேர்ந்து நாணய தளம்பல்களை ஓரளவு நிர்ணயிப்பதற்கு 'Basale /Nyborg ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டன. இவ் அமைப்பினிலே 'Dutch Mak' ஓர் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. யூரோ பிரதேசத்தின் பணவியல் கொள்கை ஆனது ஐரோப்பிய மத்தியவங்கி (ECB) மற்றும், ஐரோப்பிய மத்தியவங்கிகள் யூரோ நாணய அமைப்பு என்பவற்றால் நிர்வகிக்கப்படுகின்றது, வழங்குரிமை, வங்கித் தாள் அச்சிடல் நாணயவார்ப்பு போன்றவற்றை ஐரோப்பிய மத்தியவங்கி செய்து வருகின்றது.

1990ம் அதற்குப் பின்பும் யூரோ நாணயத்தின் வளர்ச்சி பெருமளவுக்கு நாணய உறுதிப்பாட்டினை தொடர்ந்தும் பேணுவதிலேயே கவனம் செலுத்தியது. ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த "ஆஸ்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, லக்சம்பேர்க், ஸ்பெயின், போத்துக்கல் ஆகிய 11 நாடுகளும் சேர்ந்து யூரோ நாணயத்துக்கு இறுதி வடிவம் கொடுத்தனர்.

இந் நாணயத்தினை வெளியீடு செய்ய ஒரு மத்திய வங்கியினை உருவாக்குவதென்றும் இவர்கள் தீர்மானித்தனர். ஐரோப்பிய நாடுகள் யாவும் பல காரணங்களால் இணைந்திருந்த போதும் அனுபவங்கள், பொருளாதார முன்னேற்றம் சர்வதேச நாணய அமைப்பில் ஏற்படும் பல நிச்சயமற்ற தன்மைகள் என்பன காரணமாக தனக்கென ஒரு நாணய அமைப்பை செயற்படுத்தி நீண்ட கால உறுதியினை பேணலாம் எனும் அடிப்படையிலே யூரோ நாணயத்தினை உருவாக்கினர்.

இதற்காக உருவாக்கப்பட்ட மத்திய வங்கியானது 'European Central Bank' என அழைக்கப்படுகின்றது. தற்போதைய நிலையிலே ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 27 நாடுகளில் 16 நாடுகளில் உத்தியோக பூர்வ நாணயமாக யூரோ நாணயம் காணப்படுகின்றது. இவ்வாறாக யூரோ நாணயத்தை பயன்படுத்தும் நாடுகளாக

| | |
|---|---|
| ஒஸ்ரியா | இத்தாலி |
| பெல்ஜியம் | லக்சம்பேர்க் |
| சைப்பிரஸ் | மோல்ற்றா |
| பின்லாந்து | நெதர்லாந்து |
| பிரான்ஸ் | போத்துக்கல் |
| ஜேர்மனி | சுலோவாக்கியா |
| கிறிஸ் | சுலோவீனியா |
| அயர்லாந்து | ஸ்பெயின் |

போன்றவற்றைக் குறிப்பிடலாம்

இந்நாடுகளில் கிரிஸ் ஐரோப்பிய யூனியன் மத்திய வங்கியின் நிபந்தனைகளை நிறைவு செய்யத் தவறியமையால் கிரிஸ் இணையாது இருந்த போதும் பின்பு இணைந்து கொண்டது. யூரோ நாணயத்தை மட்டும் தங்களின் தனி நாணயமுறையாக ஏற்றுக்கொண்ட 16 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அமைப்பினை யூரோ வலயம் / யூரோ ஏரியா (Euro Area) என அழைக்கப்படுகின்றது. இவ்வாறான இந்த வலய நாடுகள் பொதுவான நாணய முறை ஒன்றை உருவாக்க முயற்சி மேற்கொண்டன. இதற்காக 1990களில் இதற்கான திட்ட அளவைகள் வரையறுக்கப்பட்டன. இத்திட்டம் (Euro Convergence Criteria) என அழைக்கப்பட்டது.

ஐரோப்பிய யூனியன் வங்கியானது யூரோ நாணய அமைப்பில் நாடுகள் இணைய பின்வரும் நிபந்தனைகளை முன்வைக்

கின்றது. இந் நிபந்தனையினை எந்நாடுகள் பின்பற்றுகின்றனவோ அவை இவ் அமைப்பிலே சேர்ந்து கொள்ள முடியும்.

1. நாட்டின் சென்மதிநிலுவை வரவு செலவுத்திட்டத்திலே காணப்படும் குறை நிலையானது மொத்த தேசிய உற்பத்தியின் 3வீதத்திற்கு மேல் இருத்தல் கூடாது. அதாவது அரசின், நாட்டின் வருடாந்த பற்றாக் குறை யானது மொத்த தேசிய உற்பத்தியின் 3வீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.

2. இவ் அமைப்பிலே இணையும் நாடுகள் இவ் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய அங்கத்துவ நாடுகளின் பொருளாதார நிலைகளிற்கு ஏற்றவாறு தமது பொருளாதாரத்தை கொண்டுவரல் வேண்டும். குறிப்பாக அங்கத்துவ நாடுகள் மேலதிக குறை நிலைகள் உருவாவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

3. பணவீக்கத்தினைப் பொறுத்த வரையில் அங்கத்துவ நாடுகளில் சிறப்பாகச் செயற்படும் 03 நாடுகளின் சராசரி பணவீக் கத்திற்கு மேலாக 1.5வீதம் வரை அதிகரிப்பு ஏற்படுவதற்கு இடமளிக்கப்படும். அதாவது பணவீக்க வீதம் ஆனது ஐரோப்பிய ஒன்றியத்தில் குறைந்த பணவீக்கம் கொண்ட 03 நாடுகளின் சராசரிப் பணவீக்கம் 1.5வீதம் வரை அதிகரிக்கலாம். ஆனால் இதனைத் தாண்டக் கூடாது.

4. நாட்டில் காணப்டும் வட்டி வீதங்க ளினை பொறுத்தவரை இந்த அங்கத்துவ நாடுகளின் பணவீக்கத்தில் மூன்று நாடுக ளின் குறைந்த மட்ட பணவீக்கத்தின் சராசரி யிலும் பார்க்க 2வீதம் அதிகரித்துக் காணப் படலாம்.

5. நாணயமாற்றுவீதத்தினை பொறுத்த வரை 2வருடங்களில் ஐரோப்பிய நாணய அமைப்பில்அங்கீகரிக்கப்பட்ட தளம் பல் எல்லைக்குள் இருந்திருத்தல் வேண்டும்.

யூரோ நாணயமானது 1999 ஜனவரி - 01ல் சட்டரீதியான நாணயமாக அமுல்படுத் தப்பட்டது. இது 03 கட்டங்களாக பாவ னைக்கு கொண்டு வரப்பட்டது.

1) 1999ல் யூரோ நாணயமானது வங்கி நடவடிக்கைகளுடன மட்டும் தொடர்புபடுத் தப்பட்டு காணப்பட்டது.

2) 2000ம் ஆண்டு பொதுகடன் காசோலைகள் உட்பட சகல நடவடிக்கைக ளும் யூரோ நாணயத்தில் மேற்கொள்ளப் பட்டது.

3) 2002ம் ஆண்டு யூரோ நாடுகளின் தேசிய நாணயங்கள் நீக்கப்பட்டு யூரோ நாணயம் பயன்படுத்தப்பட்டது. யூரோ குற்றி நாணயங்களாகவும், தாள் நாணயங்களாக வும் வெளியிடப்பட்டது.

யூரோ நாணய அறிமுகத்தால் ஏற்பட்ட விளைவுகளாவன

1) வெளிநாட்டு நாணய மாற்று விலை கள் அற்றுப் போய் நாணயத்தை மாற்றுவது தொடர்பில் ஒரு விரயமும் தவிர்க்கப்படுகின்றது.

2. யூரோ நாணய அறிமுகத்தால் வங்கிகள் பல வகையான சவால்களை எதிர் நோக்கியது.

உதாரணம்: தொடர்புகளை யூரோ நாணயத்தில் மேற்கொள்ளும் போது அதற் கேற்ப பயன்பாடுகள்தொடர்பாக வாடிக்கை யாளர் அறிந்து கொள்ள வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

3. பொருட்கள், சேவைகள் விலைகள் ஒரு நாணயமாக நிர்ணயிக்கப்பட்டால், இலாப நட்டம் தோன்றுவதற்கான சாத்தியம் இல்லா திருக்கும். இதனால் நுகர்வோர் நன்மை யடைவர்.

4. ஒரே நாணய அலகு கையாளப்படு மானால் ஒரு பொதுவான நாணயச்சந்தை உருவாகுவதுடன், நியாயமான விலையில்

பொருட்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

5. உலக நாடுகளின் அன்னியச் செலா வணி நடவடிக்கை ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகளில் பெரும் மாற்றங்கள் இடம் பெறும்.

யூரோ நாணயத்தினை பன்னாட்டு கொடுக்கல், வாங்கலில் பயன்படுத்தும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படல் வேண்டும். இவ்வாறு யூரோ நாணயத்தை ஏற்றுக் கொள்ளும் நாடுகளின் எண்ணிக் கைக்கேற்ப இதன் பயன்பாடும் உயர்வ டைந்து செல்லும். சில நாடுகள் தங்கள் நாணயமுறை புழக்கத்தில் உள்ள போதும் யூரோவையும் பயன்படுத்திவருகின்றன. "டென்மார்க்" ஐக்கிய இராச்சியம்" போன்ற நாடுகள் யூரோவைப் பயன்படுத்த தகுதி இருந்தும் அரசியல் காரணங்களால் இன்னும் பயன்படுத்தவில்லை.

யூரோ நாணயமானது பல நாடுகளில் பல பெறுமதியினைக் கொண்டு காணப்படு கின்றது.

Euro Exchange Rates: (07.02.2011)

| நாடுகள் | 1 Euro | In Euros |
|---|---|---|
| அவுஸ்ரேலியன் டொலர் | 1.34 | 0.7449 |
| கனேடியன் டொலர் | 1.34 | 0.7447 |
| சுவிஸ் பிராங் | 1.3 | 0.7682 |
| பிரிட்டன் பவுன்ஸ் | 0.843 | 1.186 |
| கொங்கொங் டொலர் | 10.6 | 0.0943 |
| இந்தியன் ரூபா | 62 | 0.0161 |
| இலங்கை ரூபா | 151 | 0.0066 |
| அமெரிக்கன் டொலர் | 1.36 | 0.7344 |
| யப்பான் ஜென் | 112 | 0.0089 |

Source: www. fx rate-Eureo.com

யூரோ நாணயமானது தற்போதைய 1 டொலருக்குச் சமனாக (2011ல்)

Averoge - $ 0.745

Minimum - $ 0.722

Maximum - $ 0.776 ஆகக் காணப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்

1) www. Gogle.tamil.com

வணிகவியல் சஞ்சிகை - 1997

The Newyork Times -1999

பொருளியல் நோக்கு - 1998

# பொருளாதார உலகமயமாதல்

*Miss. R. Thavarani,*
*Economics special*
*2010/ A/ 62*

தற்காலத்தில் உலகளாவிய ரீதியில் அதிகம் பேசப்பட்டு வருகின்ற ஒரு விடயமாக உலகமயமாதல் காணப்படுகின்றது. உலகமயமாக்கம் என்பது ஒரு புறம் தேவையான ஒன்றாகக் கருதப்படினும் மறுபுறம் அது பற்றிய கண்டன விமர்சனங்கள் எழுந்த வண்ணமே உள்ளன. இவ் உலகமயமாக்கல் என்ற சொல் 1960 களிலே முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டாலும் தற்போது அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இந்தக் கட்டுரையானது பொருளாதார உலகமயமாதல் என்ற விடயத்தினை விமர்சன ரீதியாக ஆராய்வதாக அமைகின்றது.

உலகமயமாதல் எனும்போது மூலதனம் எந்த இடத்தில் அதிகமாகக் குவிந்து இருக்கிறதோ அங்கிருந்து அதனைப் பெற்று மனிதவளம் எங்கு மிதமாகவும் செலவு குறைவானதாகவும் இருக்கிறதோ அங்கு உற்பத்தி செய்து பொருள்களுக்கு எங்கு சந்தை அதிகமாக இருக்கிறதோ அங்கு விற்பனை செய்வதனையே குறிக்கின்றது. மேலும் இவ் உலகமயமாதலானது நாடுகளுக்கு இடையேயான புவியியல் எல்லைக்கோடுகளையும் தாண்டி இடம்பெறுகின்றது. பல்வேறுபட்ட இடங்களில் இருக்கின்ற மக்கள் மற்றும் நிறுவனங்களிடையே ஒன்றிலொன்று தங்கியிருத்தலையும், ஒருங்கிணைத்தலையும் ஊடு தொடர்புகளையும் அதிகரிக்கின்ற பொருளியல், சமூகம், தொழில்நுட்பம், பண்பாடு மற்றும் அரசியல் தொடர்பில் ஏற்படுகின்ற வரிசையான மாற்றங்கள் எனவும் இது குறிப்பிடப்படுகின்றது. பொருளாதார ரீதியான உலக மயமாதலினை தகவல் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியும் போக்குவரத்து சாதனங்களின் விருத்தியும் பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கமும் உச்சப்படுத்தியுள்ளன எனலாம்

உலகமயமாதல் என்பதை பொருளாதாரம் தொடர்பில் பயன்படுத்தத் தொடங்கியது 1981 ஆம் ஆண்டிலேயே ஆகும். தியோடர் லெவிட் (Theodore Levitt) என்பவர் எழுதிய சந்தைகளின் உலகமயமாதல் ("The Globalization of Markets": 2004) என்னும் நூலில் உலகமயமாதல் என்பது பொருளாதாரம்

தொடர்பில் பயன்படுத்தப்பட்டமை குறிப்பி டத்தக்கது. இதுமட்டுமன்றி உலகம் தழு விய சமூகவியல் ஆய்வுகளிலும் இது பரந்த மற்றும் அனைத்தும் தழுவிய தோற்றப்பாடாக உணரப்பட்டது.

உலகமயமாதல் என்பது பல கோணங்களில் நோக்கப்படுகின்றது. அவ்வகையில்

1.வளர்ந்து வரும் நாடுகளுக்கு அதிகரித்த வாழ்க்கைத் தரத்தையும் வளத்தையும் கொண்டு வருகின்றது என்ப தும், முதலாம் உலக நாடுகளினதும் மூன் றாம் மண்டல நாடுகளினதும் நிதி வளத் தினை பெருக்க முனைகின்றது என்பதும் ஒரு வகையான நோக்கமாகும். இந்நோக்கு உலகமயமாதலைப் பொருளியல் மற்றும் சமூக அடிப்படையில் விரும்பத்தக்க விடயமாக கருதுகின்றது.

2.பொருளியல், சமூக மற்றும் சூழலியல் அடிப்படையில் உலகமயமா தலை எதிர்மறையாக விரும்பத்தகாத விடயமாகக் கருதுவது மற்றுமொரு நோக்காகும். இதன்படி உலகமயமாதல் வளர்ந்து வருகின்ற சமுதாயங்களின் மனித உரிமைகளை நசுக்குகின்றது என வும் வளத்தைக் கொண்டுவருவதாக கூறிக் கொண்டு இலாபமீட்டுவதை அனும திக்கின்றது என்றும் சுட்டிக்காட்டப்படு கின்றது.

உலகமயமாதல் என்பதை வெறும் பொருளாதாரப் பார்வையில் மட்டும் சுருக்கிவிட முடியாது. பொருளாதாரம் சமூகத்தை கட்டாயம் பாதிக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை. உலக மயமாதல் என்பதனை தனியாகப் பார்க்காமல் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்று இணைத்துக் கூறுவதே நன்று. இது பல்பரிமாணத்தைக் கொண் டதாக எல்லாக்கூறுகளையும் அதாவது பொருளாதார, நாகரிக, சூழலியல் மற்றும் சமூக விடயங்களை உள்ளடக்கியதாக மட்டுமன்றி அரசுக்கும் நாடுகளுக்கும் இடை யிலான தொடர்புகளையும் விளக்குவதாக அமைகின்றது. இதன் மூலம் வர்த்தக மேம்பாடு, அதிகளவிலான நிதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளது பாய்ச்சல் போன்றவை மட்டுமன்றி விரைவான தாராண்மைப்படுத்தலின் ஊடாகவும் முன்னேற்றமடைந்த தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் ஊடாகவும் தூண்டப்படுகின்றன. Jilberto மற்றும் Mommen (1998) போன்ற பொருளியலாளர்கள் உலகமயமாக்க லானது நாடுகளுக்கும் சமூகங்களுக்கும் இடையிலான பல்பக்க தொடர்பாடல்க ளையும் உட்தொடர்புகளையும் கொண்டது எனக் குறிப்பிடுகின்றனர்.

நுகர்வோரின் கேள்வி மாற்றங்கள் உலகளாவிய மாற்றங்களில் முக்கியமான பங்கினைப் பெற்றுவருவதால் உலகமய மாக்கலானது "புதிய சந்தைகள்" என்று அர்த்தப்படுத்துவது போல புதிய போட்டி யாளர்கள் என்பதனையும் அர்த்தப்படுத்து வதாக அமைகின்றது. இது அதிகரித்த வளர்ச்சிக்கும் செல்வத்திற்கும் உதவி புரிகின்றது. ஆயினும் எல்லா நாடுகளா லும் இத்தகைய நலனை அனுபவிக்க முடிவதில்லை. இது இடரீதியாக வேறு படுகின்றது. குறிப்பாக குறைவிருத்தி நாடு களைப் பொறுத்த வரையில் அவற்றின் அபிவிருத்தி மீது குறிப்பாக பொருளாதா ரம் மீது குறித்த நாடுகளுக்குப் பொருத்த மில்லாத பாதிப்பினை ஏற்படுத்தி விடுகின் றது. உலக வர்த்தகத்தில் இந்நாடுகளின் குறைந்தளவிலான பங்களிப்பு மற்றும் குறைந்தளவான வெளியீடு மற்றும் வெளி நாட்டு நேரடி முதலீடு என்பனவற்றின் பிரதிபலிப்புக்கள் மூலம் இதனை அறிய முடிகின்றது.

உலகமயமாதலின் வரையறை யானது பொருளாதாரப் பின்னணியில், மூலதனம் எவ்வாறு ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மாறுகின்றது என்ப திலிருந்து ஆரம்பமாகின்றது. முதலாளித் துவம் உருவாகியதன் பின் அறிமுகமான உலகமயமாதல் என்ற கருத்தியலுக்கு முதலாளித்துவப் பொருளாதாரப் பின் னணியில் தான் இன்று பொருள் விளக்கம் கூறப்படுகின்றது. வெளிப் பார்வைக்கு இது உருத்தெரியாத ஒன்றாகவே இயங்கு கின்றது.

மனித உலகத்தின் சொந்த அவ லத்தைக் கண்கொண்டு பார்க்க மறுக்கும் உலகமயமாதலானது மனிதனுக்கு எதிரான நடத்தையை தனது வாழ்விற்கான கூறாகப் பார்க்கின்றது. இப்படி உலகள வில் மக்களைச் சுரண்டி வாழ்கின்ற ஒரு வர்க்கத்தின் சொர்க்கம்தான் பொருளா தார உலகமயமாதலின் சுபீட்சம். இப்படி உருவாகும் சிலரின் சுபீட்சமோ சமூக உயிரியான மனிதனுக்கு துன்பத்தை உருவாக்குகின்றது. இந்தப் பொருளாதார உலகமயமாதலானது உலகளவில் உழைப்பு உருவாக்கும் சொத்துடமையை குறிப்பிட்ட சிலரின் சொத்தாக மாற்று கின்றது. தனிமனித சுதந்திரம் என்பது ஒரு வர்க்கத்தைச் சார்ந்தது என்பது வர்க்க நலன்களுடன் மாற்றப்பட்டுவிட்டது. அதாவது தனிமனித சுதந்திரம் என்பது குறித்த ஒரு வர்க்கத்தின் பொதுநலன் என்ற மாயையைக் கலைந்து அதில் உள்ள சிலரின் நலன் என்ற எல்லைக்குள் குவிந்து விட்டது. விரல்விட்டு எண்ணக் கூடிய சிலருக்காக உலகம் வேகமாக சுருங்கிச் செல்கின்றது. இதனால் நாடுகள் ரீதியாக காலத்துக்கு காலம் வறிய மக்கள் கூட்டத்தின் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகரித்து வருகின்றது. இந்த வகையில் நோக்கும்போது மனித உழைப்பிலான அனைத்து வகைச் செல் வத்தையும் ஜனநாயகத்தின் பெயரிலும் சுதந்திரத்தின் பெயரிலும் சுரண்டுவதே உலகமயமாதல் என வெளிப்படையாகத் தெரிகின்றது.

இது உலகப் பொருளாதாரம் மற்றும் தேசியப் பொருளாதாரம் முதல் ஒரு தனிமனிதனின் பொருளாதாரம் வரை யிலான அனைத்தையும் அனுமதிப்பதா கத் தெரியவில்லை. தனிமனிதனின் சுயேட்சை முதல் ஒரு மக்கள் கூட்டத்தின் சுயேட்சை வரை செயற்பாட்டை மட்டு மன்றி அதன் இருப்பையும் தகர்ப்பது தான் உலகமயமாதலின் உள்சாரமாகும். அதாவது செல்வத்தை வரைமுறையின்றி குவிப்பதற்கேற்ற சுரண்டலே உலகமய மாதல், இதுவே உலகப் பொருளாதாரமும் ஆகும். உலகப் பொருளாதாரம் என்பது உயர்வான இலாப நோக்கில் அனைத்தை யும் தனிச்சொத்தாக்கும் வகையில் திட்டமிடப்படுகின்றது.

இந்த உலகமயமாதலில் யாரெல் லாம் பொருட்களை வாங்கி நுகரும் வசதியையும் வாய்ப்பையும் கொண்டிருக் கின்றனரோ அவர்களுக்கு மட்டுமே உற் பத்தி என்பது உலகமயமாதலின் சந்தை விதியாகக் காணப்படுகின்றது. பொருட் களை வாங்கி நுகர முடியாத வகையில் சுரண்டப்படும் மனித குலத்தைப் பற்றி உலகமயமாதலின் சமூக அமைப்பு கவலைப்படுவது கிடையாது. இந்த சமூக அமைப்பை ஏற்றுக் கொண்ட நாடுகள், கோட்பாடுகள் மற்றும் பொதுநல அமைப் புக்கள் அனைத்தும் இந்த சந்தை விதியை அனுசரித்து அதற்குள் செயற்படு கின்றன. இங்கு எந்த மனித மனமும் சமூக அமைப்பும் இருப்பதில்லை.

உலகமயமாதல் அறிவியல் நோக்கு என்பது பொருட்களை வாங்க முடியாதவனை பொருள் உலகில் வாழத் தகுதியற்றவனாகப் பார்க்கின்றது.

உலகமயமாதலானது பொருட்களினாலானது, இலாபமே குறிக்கோளாகக் கொண்டது. இதனை நுகர்வு என்பதே தீர்மானிக்கின்றது. சுதந்திரம், ஜனநாயகம் என அனைத்தும் இதற்குள் அடிமையானவையே. இவற்றை மீறி அதிகமாகக் கூறிக்கொள்ள எதுவும் கிடையாது. மனிதப் பண்பாடு, கலாசாரம், கல்வி, மருத்துவம் என எதுவாக இருந்தாலும் உலகமயமாதல் என்ற தனிமனித நலனைச் சார்ந்த சந்தை விதிக்கு உட்பட்டதேயாகும். யாரெல்லாம் பணம் கொடுத்து இவற்றைப் பெற முடியுமோ அவர்களுக்கு மட்டுமான ஓர் உலகம் தான் உலகமயமாதல். எனவே வாழ வழியற்றவர்களாகக் கப்பட்ட வறியவர்கள் இந்த உலகமயமாதலில் வாழ முடியாது. இப்படி வாழ முடியாதவன் யார்? உலகமயமாதலில் வாழக்கூடியவன் நுகரும் பொருட்களை, அதன் அடிக்கட்டுமானங்களை உற்பத்தி செய்பவன் தான். இவ்வாறு வாழ முடியாதவனை உற்பத்தி செய்யும் உலகமயமாதல் என்பது மனித உழைப்பு அதியுயர் இலாப எல்லைக்குள் வரைமுறையின்றி சுரண்டப்படுவதால் உருவாக்கப்படுகின்றது. உலகமயமாதல் உற்பத்தி செய்பவனுக்கு கொடுக்கும் அற்பக் கூலியில் அவன் உற்பத்தி செய்தவற்றை அவனே நுகர முடியாது போகின்றது. உண்மையில் ஒருவர்க்கத்தின் நுகர்வுக்குரிய பொருளை உற்பத்தி செய்பவன் அதை நுகர முடியாது பிறிதொரு வர்க்கமாகி விடுகின்றான். இதனால் மனித வாழ்க்கையே வர்க்கப் போராட்டமாகி விடுகின்றது. நவீன மனித அடிமைத்தனங்களே இன்று உலகமயமாகின்றது.

இத்தகைய நிலையில் பொருளாதார உலகமயமாதல் புவியியலிலும் தாக்கத்தினைச் செலுத்தி வருவதாக வாதங்கள் காணப்படுகின்றன. அதாவது பொருளாதார உலகமயமாதல் காரணமாக புவியியல் எல்லைகள் சுருங்கி நாடுகள் பிராந்தியங்கள் என்ற வேறுபாடுகளின்றி அனைத்தும் ஒன்று என்ற நிலையினை எட்டியுள்ளன. அதாவது உலகமயமாதல் என்பது புவியியலின் முடிவாக பொருளாதார வளர்ச்சி வேறுபாடுகளின் அடிப்படை அம்சங்கள் அனைத்தையும் இல்லாமல் செய்துவிட்டது, இணையத்தளங்கள் மூலமான பொருள்களை கொள்வனவு செய்கின்ற நடவடிக்கைகள் இதற்கு சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும்.

எனினும் பொருளாதார உலகமயமாதல் காரணமாக புவியியல் எல்லைகள் அனைத்தும் இல்லாமல் போய்விட்டன என்றும் அர்த்தப்படுத்தி விடவும் முடியாது. இதனை John Key, (2001) என்பவர் உலகமயமாதலானது ஓர் அமைவிடத்தின் பொருளாதார முக்கியத்துவத்தினை இன்னும் இல்லாமல் செய்துவிடவில்லை என்று குறிப்பிடுகின்றார். பொருளாதார உலகமயமாதலின் செல்வாக்கு எல்லா நாடுகளிலும் காணப்படினும் மிகத் தெளிவான பரப்பியல் வேறுபாடுகளைக் கொண்டிருப்பதனை அவதானிக்க முடியும். அதாவது சில நாடுகளில் அதிகமாகவும் சில நாடுகளில் அடிமட்ட நிலையில் இருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. பல்தேசிய நிறுவனங்களுக்குச் சொந்தமான நாடுகள் விருத்தியடைந்து வரும் நாடுகளின் வளங்களினைப் பயன்படுத்தி பொருளாதார வல்லரசுகளாக உருவாகியுள்ளதுடன் இன்றும் உருவாகிக்கொண்டு வருகின்றன. இதனால் பின்தங்கிய நாடுகள் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றன. இத்தகைய நிலையில் வளர்ச்சியடைந்த, மற்றும் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் என்ற எல்லை தொடர்ந்தும் இருந்து வருகின்றமை புவியியலின் தொடர்ச்சியான இருப்பினை நிலைநாட்டுவதாகக் காணப்படுகின்றது.

சுருங்கக் கூறின் புவியியல் எல்லைகளைக் கடந்து வளர்ச்சியடைந்து வரும் உலகமயமாதலானது பொருளாதார ரீதியில் பலம் மிக்க ஒன்றாக வளர்ச்சியடைந்து வருவது முக்கிய விடயமாகும்.. அதாவது பொருளாதார உலகமயமாதலானது அபிவிருத்தியுடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஆகிய இரு தரப்பிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றமையினை அவதானிக் கலாம். பொருளாதார அபிவிருத்தியையே மிகப்பிரதான இலக்காகக் கொண்டு வளர்ச்சியடையும் நாடுகளுக்கு பொருளாதார உலகமயமாக்கல் முக்கிய விடயமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

உசாத்துணைகள்:-


Henry Wai-chung Yeung (2001), **"The Limits to Globalization Theory",** Department of Geography, National University of Singapore.

Jam Aart Scholte, (2005), **"Globalization: A Critical Introduction",** P Palyrave Mac Millan, New York.

Manfred Besieger, (2003), **"Globalization: A very short introduction",** oxford university press, UK.

http://www.manthirachimizh.com

http://thoughtsintamil.blogspot.com

http://www.geographyalltheway.com

# உணவுப் பொருளாதாரத்தில்
# உலகமயமாக்கல் ஏற்படுத்திய அச்சுறுத்தல்கள்

*Miss. G.Nirushiga,*
*Economics special,*
*2007/A/148*

கடந்த 3 தசாப்தங்களாக பொருளாதார மற்றும் அரசியல் சமூக அடிப்படையில் முழு உலகிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அமைப்பு மாற்றங்கள் உலகமயமாக்கல் என அழைக்கப்படுகின்றது. உலகமயமாக்கல் என்பது "உலகில் உள்ள நாடுகளையும் அதில் உள்ள மக்களையும் ஒருங்கிணைக்கும் ஓர் செய்முறை" ஆகும். தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் தலையிடாகக் கொள்கை, மற்றும் கட்டற்ற சந்தையினையும் வலியுறுத்தும் புதிய தாராளவாத, நாணயவாத பொருளாதாரத்தை நோக்கிய சித்தாந்த ரீதியான நகர்வினால் பொருளாதார உலக மயமாக்கலிற்கு ஏற்ற சூழ்நிலை உருவானது. இவ்வகையில் அனைத்து நாடுகளினதும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. இவ் உலக மயமாக்கல் நடவடிக்கையானது வளர்ந்த நாடுகளைப் பொறுத்து மென்மேலும் அவற்றின் வளர்ச்சிக்கு துணைபுரியும் அதேவேளை, வளர்முக நாடுகளைப் பொறுத்து கிடைத்தற்கரிய அழிவடைந்து போகும் மூலவளங்களை உலக மயமாக்கல் மூலம் இந்த நாடுகள் இழக்க நேரிடுகிறது. மேலும் ஊழியச் சுரண்டல், வருமான சமமின்மை, வறுமை என்பன ஏற்படுவதோடு குழந்தை நிலை கைத்தொழில்கள் அழிவடைதல், வேலை வாய்ப்புக்கள் இழக்கப்படுதல், விவசாய உற்பத்திகள் மீதான பாதுகாப்பினை உலகமயமாக்கல் குறைத்தமையால் விவசாயிகள் பாதிப்படைந்து உணவில் சுயநிறை வினை இழந்தமை போன்ற பாதக விளைவு களை வளர்முக நாடுகளில் ஏற்படுத்தி வரு கின்றது. இவ்வகையில் இவ் உலகமயமாக்கல் உணவுப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக் கங்களை நோக்கும்போது உணவுப் பொருளா தாரம் என்பது "உணவுப் பொருட்களின் உற்பத்தி, கேள்வி, நிரம்பல், பங்கீடு, ஏற்றுமதி வர்த்தகம் போன்றவை தொடர்பான மனித நடத்தைகளை ஆராயும் செயற்பாடு ஆகும்" ஒவ்வொரு உயிரினமும் உணவிலேயே தங்கியிருக்கின்றது. உணவு என்பது மனிதனது தேவைகள் பட்டியலில் முதன்மையான தேவையாகும். உணவுக்கு வேறு மாற்றீடுகள் கிடையாது. முழு மனித வளமும் அதன் மீதே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. உணவு வெறுமனே ஒரு வர்த்தகப் பண்டமாக இல்லாது ஏனைய அனைத்துப் பண்டங்கள் மற்றும் பணிகளையும் தாண்டிச் சென்று முதலிடத்தில் இருப்பது, இதனால் ஆகும். ஆகவே உணவுப் பிரச்சினை தற்கால உலகில் மிக முக்கியமான மானிட பிரச்சினையாகும்.

உணவைப் பொறுத்தவரை தன்னிறைவடைதல் சிறந்த தீர்வாயிருப்பினும் நடைமுறையில் அவ்வாறு செய்வதும் அதனைப்

பேணி வருவதும் பிரச்சினைக்குரியதாகும். பண்டைக் காலத்தில் "கிழக்கின் தானியக் களஞ்சியம்" என அழைக்கப்பட்ட இலங்கையில் விவசாயத்தின்பால் விவசாயிகளை ஊக்கு விக்கின்ற விவசாய வளங்கள் உருவாக்கப்படுத் தலைக் காணமுடியுமாயிருந்த போதிலும் தற்போதைய நிலை முற்றிலும் மாற்றமாகி யுள்ளது. இதனால் இன்று உணவுப் பாதுகாப்பு மீது பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்பு என்பது "செயலூக்கமும், தேக ஆரோக்கியமும் கொண்டதொரு வாழ்க்கையின் பொருட்டு தனது அன்றாடத் தேவைகளையும், உணவுத் தேவையையும் நிறைவேற்றத் தக்கவாறு போதியளவில் பாதுகாப்பானதும், போசாக்கு மிக்கதுமான உணவினைப் பெற்றுக் கொள்வதற்கு அனைவ ராலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இயலுமாயி ருத்தலாகும்" இந்த நிலையில் இன்று உலக மயமாக்கல் செயற்பாடு ஆனது உணவுப் பொரு ளாதாரத்திலும் உணவுப் பாதுகாப்பிலும் சாதக பாதக தன்மைகளை ஏற்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் உலகமயமாக்கல் உண வுப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திவரும் "அச்சுறுத்தல்களை" நோக்கும்போது, "நிலக் கொள்ளையால் நெருங்கும் உணவுப் பஞ்சம் – ஜகத்தினை பட்டினியால் அழிக்கும் திட்டத் தினை செயற்படுத்த பல்தேசிய கம்பனிகள் முன் வந்துள்ளன. ஜப்பான், அரபு நாடுகள் ஒன்றியம், சவுதி அரேபியா, தென்கொரியா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் நில அபகரிப்புப் போட்டியில் முன்னிலை வகிக்கின்றன. நில அபகரிப்பு போட்டியினால் உடனடியாக பெருமளவு பாதிப்பைச் சந்திக்க போவது ஆபிரிக்க நாடுகளே. ஏற்கனவே ஆயிரக் கணக்கான மக்கள் பஞ்சத்தில் மடிந்து வரும் எதியோப்பியாவில் 6 லட்சம் ஹெக்டேயர் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது. 1 ஹெக்டேயர் நிலம் ரூ 150 லிருந்து 500 ரூபாவரை விலை உயர்த்தப்பட்டுள்ளது. இத்தகைய நிலையால் 3 லட்சம் குடும்பங்கள் நிலத்தைவிட்டு வெளியேற் றப்பட்டுள்ளனர்.

நிலப் பறிப்புப் போட்டியில் முன்னிலை யில் இருப்பது இந்தியா, "கருதூரி குளோபல் லிமிடெட்" என்ற பெங்களூர் கம்பனி ஒன்று மட்டுமே 350000 ஹெக்டேயர் நிலத்தை அபக ரித்துள்ளது. மேலும் இந்தியா இதுவரை எதியோப்பாவிற்கு 50 கோடி பவுண்ட் கடனு தவி அளித்துள்ளது. அதாவது உணவுப் பொருட் களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையோடு தான் இக் கடன் வழங்கப்பட்டுள்ளது. எதியோப்பியாவில் மட்டும் 80 இந்திய கம்பனிகள் நில அபகரிப்பு போட்டியில் இறங்கியுள்ளன. இந்தியாவில் மாமிச உணவுக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில் மாட்டுத் தீவனமாக மக்காச் சோளம் விளைவிக்க இந்திய அரசு உதவி செய்யாத நிலையில் இதை ஆபிரிக்காவில் விளைவிக்க இவ் அரசு 430 கோடி ரூபாய் முதலிடப்பட் டுள்ளது. இது விரைவில் 1000 கோடியை எட்டும் என எதிர்வு கூறப்படுகின்றது.

ஏற்கனவே பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் எதியோப்பியாவின் கிழக்கு தெற்குப் பகுதிகளில் மட்டுமே 52 இலட்சம் மக்கள் உணவுக்காக சர்வதேச சமூகத்தின உதவியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே கோடிக் கணக்கான மக்களைப் பட்டினியில் சாகவிட்டு விளைச்சலை அந்நிய முதலாளிகளிடம் விற்கும் நிலையை உலக மயமாக்கல் ஏற்படுத்தியுள்ளது.

அடுத்தபடியாக நில அபகரிப்பு காரணமாக சூழலியல் பாதிப்புக்கு இரையாகப் போவது பாகிஸ்தான். கத்தர் நாடு பாகிஸ்தா னின் பஞ்சாப் மாநிலத்தில் 16 லட்சம் ஹெக்டே யரில் உணவு உற்பத்தியை தொடங்க உள்ள தால் 25000 கிராமங்களில் மக்கள் தங்கள் விளை நிலங்களையும், வாழ்விடங்களையும் விட்டுத் துரத்தப்படுவார்கள். சவுதி அரேபியா வும் பாகிஸ்தானில் 5 லட்சம் ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளது. பாகிஸ்தான் வேளாண்மை நிலங்களை கம்பனிக்கு வழங் கும் படலத்தை ஆரம்பித்துள்ளது. "விவசா யத்தை தாராள சந்தை அழிப்பது ஏன்? எவ்

வாறு என்று ஆராய சரியான இடம் பாகிஸ்தான் தான்" என்று அந்நாட்டு பொருளாதார வல்லுனர்களே கூறுகின்றார்கள். நாடுகளின் இந்த நிலைமை தொடர்ந்தால் உலகம் முழுவதிலுமுள்ள நாடுகள் பலவும் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் அபாய நிலை ஏற்படும்.

ஒரு புறம் வங்கிகளும், காப்பீட்டுக் கழகங்களும் பெரு முதலாளிகளின் நில அபகரிப்புக்கு எவ்வித உத்தரவாதமும் பெறாமல் கடனுதவி அளிப்பதற்காக சாதாரண மக்களின் சேமிப்புக்களை வீணாக்கி வருகையில், மறுபுறம் ஆராய்ச்சி நிறுவனங்கள் அனைத்தும் புவி வெப்பமாதல் பற்றியும் உணவு உற்பத்திப் பெருக்கம் பற்றியும் கூறி வருகின்றன. மேலும் நில அபகரிப்புடன் உற்பத்தியாளர்களுக்கான கூலியும் குறைந்து புதுக்காலணி ஆதிக்கம் ஏற்பட உலகமயமாக்கல் வழிகோலுகின்றது.

2008ல் தொடங்கி இன்று வரை வட அமெரிக்காவில் இருந்து உலகெங்கும் பாதிப்புக்களை ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியின் மோசமான விளைவுகளை இன்று வரை அனுபவித்து வரும் அதேவேளை விளைநிலங்களின் பரப்பளவு குறைவதால் உலகெங்கும் உணவுப் பற்றாக்குறையும் அதிகரித்து வருகின்றது. முதலாளிகளுக்கு இந்த 2 பற்றாக்குறைகளும் சேர்ந்து புதியதோர் இலாபகரமான தொழிலுக்கு வழி அமைத்துள்ளது. உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம், மறு கட்டமைப்புக்கும் வளர்ச்சிக்குமான ஐரோப்பிய வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் நில அபகரிப்புக்கு பெரும் தொகைகளை கடனாக அளிக்கின்றன. இதற்காக அரசுகளை நில உரிமைக் கொள்கைகளை மாற்றி அமைக்குமாறு வற்புறுத்தி வருகின்றன. "அயல் நாட்டவர் இந்தியாவில் விளைநிலம் வாங்கலாம்" என இந்திய அரசு அண்மையில் சட்டம் ஒன்றை முன்வைத்தமை இதற்கு எடுத்துக்காட்டாகும். நிலப்பரப்பில் உலக வங்கி போன்றவை மட்டுமன்றி "மார்க்கண் ஸ்டான்லி", "டாயிச் வங்கி", "கோல்ட்மேன் சாக்ஸ்" ஆகியவை பெருமளவு முதலீடு செய்துள்ளன. "மக்களின் இயல்பான உரிமையாக அல்லாமல் பொருள் படைத்தவரின் தனி உரிமையாக உணவினை மாற்றும் சூதாட்டத்தில் கொழுத்த இலாபம் அடைவதற்காக உலகெங்கிலும் விளைநிலங்களை இந்நிறுவனங்கள் அபகரித்துள்ளன. தென் அமெரிக்கா நாடுகளான பிரேசில், ஆர்ஜன்ரீனா, உருகுவாய், பரகுவவே ஆகியவற்றிலும் விளை நிலங்களை வாங்க இந்தியா, சீனா உள்ளிட்ட பல நாடுகள் போட்டியில் இறங்கியுள்ளன.

சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில் நாட்டின் ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரமான சிறு துண்டு நிலங்களை எல்லாம் பெரும் முதலாளிகளின் வசம் ஒப்படைக்கும் அதேவேளை இம் மக்களின் உணவுத் தேவையை நிறைவேற்ற வெளிநாடுகளின் இறக்குமதியில் தங்கியிருக்கும் ஒரு நிலையைத்தான் தோற்றுவித்துள்ளனர். எனவே உணவை உற்பத்தி செய்யும் விளை நிலங்களை பன்னாட்டு கம்பனிகளுக்கு தாரைவார்த்துக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்தாவிட்டால் எதியோப்பிய மக்களைப் போல் பட்டினியால் மடியும் நிலை தான் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் ஏற்படும்.

அடுத்து தாராளமயக்கப்பட்ட பொருளாதாரத்தின் கீழ் மானிய விலையில் உற்பத்தி செய்யப்பட்ட பெருமளவான பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் போது அவற்றுடன் போட்டியிடக் கூடியவலுவும், தொழில் நுட்பமும் இல்லாமையால் இளம்பருவக் கைத்தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. புதிய பொருளாதாரக் கொள்கையினால் பன்னாட்டுக் கம்பனிகளின் வருகை அதிகரிக்கும். வேலை வாய்ப்பு பெருகும். பொருட்களின் விலை குறையும். உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு உலக அளவில் சந்தை வாய்ப்புக் கிடைக்கும் என கூறப்பட்டு வந்தாலும் நடைமுறையில் நேர் எதிரான விளைவுகளையே சந்திக்க வேண்டியுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் உள்ள விவசாயிகள் தமது அரசுகளிடமிருந்து கோடிக் கணக்கில்

மானியம் பெறுவதால் அவர்களுடன் வளர்முக நாடுகளின் விவசாயிகளால் போட்டி போட முடியவில்லை. அமெரிக்காவில் 1 விவசாயிக்கு வருடத்திற்கு மானியமாக 15 லட்சம் வழங் கப்படுகின்றது. இதில் ஏழை விவசாயி பணக்கார விவசாயி என்ற பாகுபாடு காட்டப்ப டுவதில்லை. உலகப் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ள டெட்டர்னரும், டேவிட் ராக்பெல்லரும் மானியம் பெறும் விவசாயிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இங்கிலாந்தில் 55000 ஹெக்டேயர் பண்ணை நிலத்துக்கு சொந்தக்காரனான வெஸ்ட் மின்ஸ்டர் பிரபுவும் மானியம் பெறும் விவசாயி என்பது குறிப்பிடத்தக்கது. வளர்ந்த நாடுகளில் 1 விவசாயி பெறும் மானியத்தில் 1/100 பங்கு தான் இந்திய விவசாயிகளின் சராசரி ஆண்டு வருமானமாக இருக்கின்றது.

2001ம் ஆண்டில் 25000 அமெரிக்க பருத்தி விவசாயிகள் ஏறக்குறைய 3.9 கோடி டாலர்கள் மானியமாகப் பெற்றனர். ஆனால், அவர்கள் உற்பத்தி செய்த மொத்தப் பருத்தியின் மதிப்பு 3 கோடி டாலர் அதாவது மானியத்தின் மதிப்பை விட உற்பத்தியின் மதிப்பு குறைவான தாகும். ஐரோப்பிய கூட்டமைப்பில் 1 பசு மாட்டிற்கு தினமும் $ 2.7 (டொலர்) மானியம் வழங்கப்படுகிறது. ஜப்பானில் இதனைப் போல் 3 மடங்கு அதாவது $8மானியம் வழங்கப்படு கின்றது. வளர்ச்சி அடைந்த நாட்டின் 1 பசு மாட்டின் வாழ்க்கையை விட வளரும் நாட்டில் உள்ள விவசாயியின் நிலை மிக கேவலமாகி விட்டது.

1999 – 2000ம் ஆண்டில் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளிலிருந்து 130000 டன் பால் பொருட்களை இந்தியா இறக்குமதி செய்ய நேர்ந்தது. இத்தனைக்கும் இந்தியா பால் மொத்த உற்பத்தியில் உலகிலேயே முதலிடம் வகிக்கின்றது. இவ்வாறே, உலகில் அதிகளவு காய்கறி உற்பத்தி செய்யும் நாடான இந்தியா வின் காய்கறி இறக்குமதி ஓராண்டு காலத்தி லேயே இருமடங்காக உயர்ந்தது. 2001 – 2002 இல் 92.8 கோடியாக இருந்து 2002 –2003ல் 171 கோடியாக உயர்ந்தது.

குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் தருவது குடி தண்ணீர் வியாபாரம் தான். பன் னாட்டு நிறுவனங்களான கொக்கக்கோலா, பெப்சியின் அக்குவாஃபினா, பார்லேயின் பிஸ்லேரி ஆகிய நிறுவனங்கள் இந்தியாவின் தண்ணீரை பாட்டிலில் அடைத்து 700 கோடி லாபத்தை அள்ளிச் செல்கின்றன. இதனால் இந்தியாவில் தண்ணீர் படிப்படியாக தனியார் மயமாக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே பல நதிகள் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டு விட்டது. இப்பொழுது கங்கை நதியும் பேரம் பேசப்பட்டு வருகிறது. கங்கை நதியில் நாள் ஒன்றுக்கு 63 கோடி லீட்டர் தண்ணீரை விற் பனை செய்து கொள்ள பிரான்ஸ் நாட்டின் ஆன்டியோ டிக்ரிமவுண்ட் கம்பனி டெல்லி நீர் துறையிடம் ஒப்பந்தம் செய்துள்ளது.

ஐ.நா. சபையின் வர்த்தக மற்றும் மேம்பாட்டு குழுவின் ஆய்வுப்படி வளர்ந்த நாடுகள் ஏறத்தாழ 1 லட்சம் கோடி ரூபாய் தங்களது விவசாயத்துக்கு மானியமாக கொடுத்து வருகின்றது. இது குறைக்கப்பட்டால் கிட்டத்தட்ட 4 லட்சம் மக்கள் (இந்தியாவில் மாத்திரம்) வறுமையிலிருந்து மீள வாய்ப் புண்டு.

தமிழ் நாட்டில் 1950–51இல் ஒரு ஹெக்டேயருக்கு 552kg நெல் விளைந்தது. இது 1998 – 99ல் 1620kg ஆகவும் 2003ல் 3500kg ஆகவும் விளைச்சல் உயர்ந்தது. ஆனால் விளைவித்த விவசாயிகளின் வாழ்க் கைத் தரம் மட்டும் உயரவில்லை. ஏனெனில் அவன் உற்பத்தி செய்யும் விளை பொருளுக்கு அவனே விலை நிர்ணயிப்பதில்லை. விவசாயி களின் பாரம்பரிய உரிமையாக இருந்த விதைகள் பன்னாட்டு விதைக் கம்பனிகளின் வணிகப் பொருளாக மாறியது. இதனால் விதைகளின் விலை உயர்ந்தது, தரம் தாழ்ந்தது. விளைச்சல் வீழ்ச்சி கண்டது. கடன் சுமை அதிகரித்தது, மான் சோன்டா வீரிய சோளத்தை விதைத்த பீகார் விவசாயிகள் ரூ 100 கோடியை இழந்த னர். பஞ்சாப்பில் கோதுமை விதைத்தவ

னுக்கும் உத்தரப் பிரதேசத்தில் கரும்பு நட்டவனுக்கும் மலைப் பகுதியில் தேயிலை வளர்த்தவனுக்கும் இதே கதிதான்.

மேலும் மானியங்கள் என்பது உற்பத்தி ரீதியிலும் விற்பனை ரீதியிலும் மிகவும் சாதகமான ஒன்று. இது வளர்ந்த நாடுகளில் இவ்வாறு அதிகரித்த மானியங்கள் அவற்றின் உற்பத்திச் செலவைக் குறைத்து, பொருட்களின் விலையைக் குறைப்பதால் வளர்முக நாடுகளே இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன.

நாடுகளும் மானியங்களும் பின்வருமாறு 2004

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுவிஸ் | 68% | கனடா | 21% | அவுஸ்ரேலியா | 4% |
| யப்பான் | 56% | USA | 18% | நியூசிலாந்து | 3% |
| ஐரோப்பிய யூனியன் | 68% | மெக்சிக்கோ | 17% | 30 Countries over all | 30% |

**Source :**

இத்தகைய நிலையால் வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் விவசாயிகள், வளர்ந்த பொருளாதாரத்திலிருந்து வரும் மானியப்படுத்தப்பட்ட மலிவான இறக்குமதிகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதால் உணவுப் பாதுகாப்பு என்பது கேள்விக் குறியாகின்றது.

உலகமயமாக்கலானது உணவில் தன்னிறைவு நிலையை இழக்க வழிசமைத்துள்ளது. 1966-70 களில் ஆபிரிக்கா உணவில் தன்னிறைவு நிலையில் காணப்பட்டதுடன் ஏறத்தாழ 13 மில்லியன் தொன் உணவினை அயல் நாடுகளிற்கு ஏற்றுமதி செய்தது. ஆனால் இன்று 25 மில்லியன் தொன் வரையிலான உணவினை இறக்குமதி செய்கிறது. இலங்கை கூட புராதன காலங்களில் "கிழக்கின் தானியக் களஞ்சியம்" என வர்ணிக்கப்படுமளவிற்கு காணப்பட்டது. ஆனால் இன்று இதன் நிலமை எவ்வாறு உள்ளது என்பது வெளிப்படையானதே. உலகின் பிரதான தானிய நாடாக இருந்த சீனா இன்று இறக்குமதியில் யப்பானுக்கு அடுத்த நிலையில் உள்ளது. உலகமயமாக்கல் மூலமே இத்தகைய தன்னிறைவு நிலை சீர்குலைக்கப்பட்டு சார்பு / தங்கியிருக்கும் நிலைமை உருவாக்கப்படுகின்றது.

தொடர்ச்சியான உணவுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பால், உணவுப் பணவீக்கம் ஏற்பட உலகமயமாக்கல் காரணமாக அமைகிறது. உலகமயமாக்கம் மூலமான நாடுகளிடையேயான வர்த்தக மயமாக்கத்தாலும், போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் மூலமும் எரிபொருட்களுக்கான அதிகரித்த கேள்வியால் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்தன, இதனால் உற்பத்திச் செலவு அதிகரித்து உணவுப் பொருட்களின் விலை அதிகரித்ததுடன், இவ் எரிபொருளுக்கான மாற்று எரிபொருளாக உயிரியல் எரிபொருள் (Bio fuel) இன் அதிகரித்த கேள்வி மூலம் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்தது. இவ் Bio - fuels இனை உற்பத்தி செய்ய சோளம், மக்காச் சோளம், சோயா போன்றன பயன்படுத்தப்படுகின்றன. 2000ம் ஆண்டில் USA 16 மில்லியன் மெற்றிக் தொன் சோளத்தை எதனோல் உற்பத்திக்காக பயன்படுத்தியது. இதுவே 2007ம் ஆண்டில் மொத்த சோள உறபத்தியில் 1/4 ஐ விட அதிக பெறுமானத்தைப் பெற்று 86 மில்லியன் மெற்றிக் தொன் வரை அதிகரித்திருந்தது.

ஐக்கிய அமெரிக்காவின் உயிரின எரிபொருள் உற்பத்தியின் பொருட்டு சோளத்தை பயன்படுத்தலும் – சோளத்தின் ஏற்றுமதியும் (2000 – 2007)

| ஆண்டு | உற்பத்தி | உயிரின எரிபொருள் உற்பத்தியின் பொருட்டு பயன்படுத்தல் | ஏற்றுமதி |
|---|---|---|---|
| 2000 | 252 | 16 | 49 |
| 2001 | 241 | 18 | 48 |
| 2002 | 228 | 25 | 40 |
| 2003 | 256 | 30 | 48 |
| 2004 | 300 | 34 | 46 |
| 2005 | 282 | 41 | 55 |
| 2006 | 268 | 55 | 55 |
| 2007 | 316 | 86 | 50 |

**Source : USA** வேளாண்மைத் திணைக்களம்

இதனைவிட உலகமயமாக்கலினால் ஏற்பட்ட அதிகரித்த சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், அருகிவரும் எண்ணெய் வளங்களுக்கு மாற்று எரிபொருளைப் பெற வேண்டிய தேவையுமே Bio - Fuel உற்பத்தியைத் தூண்டி யது. இந்தோனேசியா Bio - Fuel உற்பத்தியின் பொருட்டு காடுகளை அழிப்பதன் மூலம் காபனை வெளியேற்றுவதில் 21வது இடத்தலிருந்து இன்று 3வது இடத்திற்கு வந்துள்ளது. இதேபோன்று பிரேசில் 4வது இடத்தை வகிக்கின்றது. பிரேசிலில் 6 மாதத்திற்குள் 300000 ஹெக்டேயர் மழைக் காடுகள் அழிக்கப்பட்டிருப்பதன் மூலம் நிலைமையின் பாரதூரமான தன்மை தெளிவாகின்றது. இதற்கிணங்க இவ் உயிரின எரிபொருள் பயன்பாடு பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டிய அவசியமுமே உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணமாகியது.

2008ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் செனகலில் கோதுமை விலை இரண்டு மடங்காகவும், இறுங்கின் விலை 56% இனாலும் அதிகரித்தது. நைஜீரியாவில் இறுங்கு மற்றும் மிலட் விலைகள் 2 மடங்காக அதிகரித்தன. சூடானில் கோதுமை விலை 2 மடங்காகவும், சோமாலியாவில் சோளத்தின் விலை அதிகரிப்பு 2007 ஐ விட 2008ல் 65% ஆகவும் காணப்பட்டது. பிலிப்பைன்ஸ் இல் அரிசி விலை 50% ஆலும் பங்களாதேஷில் 66% ஆலும் அதிகரித்தது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நுகர்வோர் தமது வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் அதிகமானதொரு தொகையை செலவிட கைத்தொழில் நாடுகளில் இது ஏறத்தாழ 10–20 சதவீதமாகும். எனவே இத்தகைய விலை அதிகரிப்பானது. குறை அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மீது தீவிர அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

உலக உணவு விலைச்சுட்டெண்

| காலம் | உணவு விலைச் சுட்டெண் | இறைச்சி விலைச் சுட்டெண் | பாற்பொருள் விலைச் சுட்டெண் | தானிய விலைச் சுட்டெண் | விலங்கு, மரக்கறி எண்ணெய் விலைச்சுட்டெண் | சீனி விலைச் சுட்டெண் |
|---|---|---|---|---|---|---|
| 2000 | 92.7 | 100 | 106 | 87 | 72 | 105 |
| 2001 | 94.5 | 100 | 117 | 89 | 72 | 114 |
| 2002 | 94.1 | 96 | 86 | 97 | 91 | 88 |
| 2003 | 102.3 | 105 | 105 | 101 | 105 | 94 |
| 2004 | 114.4 | 118 | 130 | 111 | 117 | 92 |
| 2005 | 117.3 | 121 | 145 | 106 | 109 | 127 |
| 2006 | 127.4 | 115 | 138 | 124 | 117 | 190 |
| 2007 | 157.4 | 121 | 247 | 172 | 150 | 129 |

**Source :** USA ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

மேலும் உலகமயமாக்கல் நடவடிக்கை மூலம் ஆரோக்கியமற்ற பலவீனமான மனித வளம் உருவாக்கப்படுகிறது. ஏனெனில் உலக மயமாக்கல் எப்போதும் வளர்ந்த கைத்தொழில் நாடுகளுக்கு ஏற்றவையாக உள்ளமையால் இவை வளர்முக நாடுகளுக்கு சிறிதும் பொருத்தம் இல்லாததாக இப் பொருளாதாரங்கள் பசி, பட்டினி, பஞ்சம், வறுமை, போசாக்கின்மை என்பனவற்றால் ஆட்கொள்ளப்படுகின்றன. ஒழுங்குபடுத்தப்படாத உணவு விநியோகத் தின் மூலம் போசாக்கின்மையும் அதிகரித்து வருகின்றது. உணவு மூலமான நோய்கள் அறிவிக்கப்படும் அளவிலும் பார்க்க 350 மடங்கு அதிகமாக உள்ளன என கூறப்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபன அறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் உணவு சம்பந்தப்பட்ட 7 நோய்கள் USA யில் 3.3 மில்லியன் – 12.3 மில்லியன் வரையிலான ஆட்களை தொற்றுகின்றன எனவும், இதன் விளைவாக 3900 மரணங்கள் சம்பவிக்கின்றன என்றும் குறிப்பிடப்படுகின்றது. பிரான்ஸில் உணவினால் பரவும் நோய்களின் எண்ணிக்கை 1990ல் 594 ஆக இருந்தது. 1992ல் 732 ஆக அதிகரித்தது. ஸ்பெயினில் 1994ல் குழந்தைப் பால்மாவினால் 48 பேர் நோயுற்றனர். இறைச்சிக்கடைகள், பல தேசியக் கம்பனிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 175 உணவுப் பண்டங்கள் எகிப்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் கிருமி நீக்கப்படாத பாலில் 6% புத்தம் புதிய இறைச்சியில் 4% பக்றீரியாக்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. USA யிலும் கனடாவிலும் "சலமுனெலோசிஸ்" என்ற உணவு சார்ந்த நோய் வருடாந்தம் 40000 பேரையும் 9000 பேரையும் தாக்கி வருகின்றது.

பிரதேச ரீதியாக ஊட்டச்சத்து குறைவானோர்
(மில்லியன் 1996 – 1998)

| | |
|---|---|
| உபசகாரா ஆபிரிக்கா | 186 |
| தூரக் கிழக்கு வட அமெரிக்கா | 36 |
| இலத்தீன் அமெரிக்கா, கரீபியன் தீவுகள் | 55 |
| சீனா, இந்தியா தவிர்ந்த ஆசிய நாடுகள் | 167 |
| சீனா | 207 |
| இந்தியா | 140 |

**Source : Role trade liberalization in a sustainable global food system**

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் இறப்புக்களிற்கு காரணம் 1997

| | |
|---|---|
| Infection & Parastic Disease | 172000 பேர் |
| எதிர்ப்பு சக்தி இல்லாத நிலை | 9600 000 |
| புற்றுநோய் | 3600 000 |
| Disease of the repiratory System | 2000 000 |
| மகப்பேற்றுடன் கூடிய இறப்பு | 40000 000 |
| அறிய முடியாத காரணம் | 3600 000 |

Source : witolteath report 1998

உலகளாவிய ரீதியில் நிறை குறைவானோர் வீதாசாரம்

| | 17 வயதிற்கு குறைவு | 30 வயதிற்கு சமமானதும் கூடியதும் |
|---|---|---|
| உலகளாவிய வகையில் | 5.8 | 8.2 |
| அபிவிருத்தி அடைந்த நாடு | 8.9 | 1.9 |
| அபிவிருத்தி அடைந்து வரும் நாடு | 6.9 | 4.8 |
| நிலைமாற்று பொருளாதாரம் | 2.4 | 17.1 |
| விருத்தியடைந்த சந்தைப் பொருளாதாரம் | 1.6 | 20.4 |

Source : www.who.int/nut/db-bm/.htm

உணவு உற்பத்திக் கைத்தொழிற்சாலைகள் மூடப்படலும், விவசாயிகள் கூலித் தொழிலாளராக மாற்றப்படலும், உலகமயமாக்கலின் ஒரு விளைவு ஆகும். இறைச்சிக்கோழி உற்பத்தியில் KFC எனும் பல்தேசிய கம்பனி இலாபத்தை பெறுவதற்காக உலகமெங்கும் கிளைகளை அமைத்து குறைந்த விலையில் விற்பனை செய்வதால் தம் உற்பத்திச் செலவை குறைக்க இயலாத பண்ணைகள் மூடப்பட்டன.

உலகமயமாக்கலினால் வரவு செலவுத் திட்டக் கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சுங்கத் தீர்வைகள் விதிக்கப்பட முடியாத நிலையில் இவற்றின் மூலமான வருமானங்கள் இழக்கப்படுவதோடு அந்நியநாட்டு பொருட்கள் மீதான மோகம், (Pizza, விதையில்லாத பழங்கள்) இவற்றை ஒரு சமூக அந்தஸ்தாக கருதும் நிலை போன்றவற்றால் வெளிநாட்டு உணவு உற்பத்தி நிறுவனங்கள் மக்களின் அறியாமை. வறுமையை பயன்படுத்தி இலாபம் அடைகின்றன. மேலும் உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் உண்மையான பெறுமதியை – உழைப்பின் பலனை பெறுவதில்லை. விவசாய சுரண்டல்கள், இடைத்தரகர்களின் செல்வாக்கு அதிகரிக்கின்றது.

இதனால் ஊட்டிய பெறுமதி அதிகரிப்பினால் விலை அதிகரிப்பதன் மூலம் நுகர்வோருக்கு வாழ்க்கைச் செலவு அதிகரிக்கின்றது. பல்தேசியக் கம்பனிகள் மற்றும் சிறப்புச் சந்தைகளின் ஆக்கிரமிப்பால் உள்நாட்டு உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. உதாரணமாக சீனாவில் 4 பிரதான நகர்களில் உள்ள சிறப்புச் சந்தைகளினூடாக 60% மான நுகர்வுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் மத்தியில் நம்பிக்கையினை ஏற்படுத்தி உணவுப் பொருளாதாரத்தை பாதிக்கின்றன.

இந்த வகையில், உலகமயமாக்கல் என்பது உணவு உற்பத்தி, நுகர்வு பங்கீடு பாதுகாப்பு என்பவற்றிற்கு பல நாடுகளிலும் பாரிய சவாலாக உள்ள அதேநேரம் சிலவாய்ப்புக்களையும் உணவுப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தியுள்ளன. அதாவது உலகமயமாக்கல் மூலம் உலக உணவு விளக்களம் என்பது உரு

வாக்கப்பட்டு இதன் மூலம் ஒரு நாடு தனக்கு தேவையான உணவுப் பொருட்களை தன்னால் உற்பத்தி செய்ய முடியாத நிலையில் இறக்குமதி செய்யவும், மிகை உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவும் என நாடுகளிடையிலான ஊடு தொடர்புகளை மேம்படுத்தும் சிறந்த வலைத் தளம் ஒன்றை உருவாக்கியதுடன் பாரியள விலான சந்தை வாய்ப்புக்கள், ஏக்கருக்கான விளைச்சலின் அதிகரிப்பு, உணவுப் பொருட் களின் உற்பத்தி மற்றும் தரம் என்பன அதிகரித்த தோடு பொருள் விநியோக வினைத் திறனுக் கும், நேர சிக்கனம், தேவைக்கேற்ற முறையில் உணவினை பெறுவதற்கும் உலக உணவுச் சங்கிலி மாற்றமும், சந்தைகளின் விரிவாக்க மும், ஆராய்ச்சிகள் தொழில்நுட்ப முன்னேற்றத் தால் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்க ளுக்கும், சிறந்த சந்தை ஒழுங்கு படுத்தல்கள் மற்றும் இடத்தெரிவு மூலமான நன்மைகள் போன்ற சாதக தன்மைகளையும் உணவுப் பொருளாதாரத்திற்கு வழங்கி யுள்ளது.

எனவே தொகுத்து நோக்கின் உலக மயமாக்கலின் பலா பலன்கள் உரிய முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு பங்கிடப்படாமையால் ஏனைய துறைகளின் நிலையை விட கூடியள வில் உணவுப் பொருளாதாரத்திற்கு குறிப்பாக 3ம் உலக நாடுகளிற்கு பாரிய அச்சுறுத்தலா கவே உள்ளது. எனவே, உலக மயமாக்கல் என்பது "உலகப் பொருளாதாரக் கொள்கை வெற்றி பெற வேண்டுமானால் அந்தக் கொள்கை தனிப்பட்ட நாடுகளின் மாறுபட்ட அடிப்படை நிலைமையை பிரதிபலிக்க வேண்டும். இது தவிர்க்க முடியாது. உலக மயமாக்கல் என்பது நடைமுறைக்கு வந்துவிட்ட ஓர் உண்மை நிலமை. எல்லா நாடுகளும் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொரு ளாதார மாற்றம். ஆனால் உலகமயமாக் கத்தை நடை முறைக்கு கொண்டு வரும் அமைப்புக் களின் அணுகு முறையில் அது கொண்டு வரப்படும் முறைகளில் மனித நோக்கு, சமத்துவம், நியாயம் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் பாதிப்புக்கள், உணர்வுகள், அடிப்ப டைத் தேவைகளைக் கருத்தில் கொண்ட தாகத் தெரியவில்லை. எனவே, இதனால் பாதிக்கப் பட்ட வர்கள் விவசாயிகள் தான். எனவே உலகமய மாக்கல் கொள்கைகள் உணவுப் பொருளா தாரத்தில் ஏற்படுத்திய சாதகத் தாக்கத்தினை விட அச்சுறுத்தல்களே மிகவும் அதிகமாக உள்ளன.

எனவே, இவ் உணவுப் பிரச்சினைக்கு அடிப்படையான காரணமான உணவைக் கொள்வனவு செய்வதற்கு போதிய வருமானம் கிடைக்காமை, உற்பத்தியை சந்தை வரை எடுத்துச் செல்வதற்கான உட்கட்மைப்பு வசதி கள் இல்லாமை, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விவசாயத்திற்கு பாதகமான வர்த்தகக் கொள்கைகள், உரம் போன்ற விவசாய உள்ளீடுகளின் பற்றாக்குறை, தவறான விவசாய பயன்பாடுகள் போன்றவற்றை ஒழுங் கான தீர்வுகள் உள்ள சூழலுடன் உற்பத்தித் திறன் மிக்க பயிர்களின் மூலமும் இதன் மூலமான தோல்விகளை நீக்கி "அமத்தியா சென்" அவர்கள் கூறியபடி விவசாயக் கொள்கை களும், அவற்றின் நோக்கங்களும், வறிய நாடுகளைப் பிரதிபலிப்பனவாக அமைந்தால் உலகமயமாக்கல் மூலம் உணவுப் பொருளா தாரம் பாதுகாக்கப்பட முடியும்.

Refrence:


1. M.R.ரகுநாதன் " உலகமயமாக்கலும் இந்திய விவசாயியும்" நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். 2005
2. குறிப்பேடு 2008 நவம்பர் / டிசம்பர்.
3. www.fao.org
4. http: // tasty foods pea.body.com
5. www.help guide.org
6. www.en.wikipedia.com
7. www.tasty blend.com
8. http : // diet routes to self imporvement.com
9. http : // www emera / dinsight.com
10. www. atlantic - community. org
11. http: // unstats. un.org / unsd / comtrade.

# உலகளாவிய நிதி நெருக்கடியும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும்

*Mr.R.Piranavan*
*Economics special*
*2007/A/ 162*

கடந்த காலத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பல நாடுகள் வேகமாக வளர்ச்சியைக் கண்டு வந்தன. ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்த பல நாடுகள் தமது பொருளாதாரக் கொள்கைகள், திட்டமிட்ட வர்த்தக முறைகள் மூலம் இத்தகைய விரைவான வளர்ச்சியைக் கண்டு வந்தன. அவ்வகையில் இறக்குமதி பதலீட்டுக் கைத்தொழில் (Import substitutional Industriali gation) ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் (Export Oriented Industrialigation) போன்ற கொள்கைகளைச் சிறப்பாகக் கையாள்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்ததுடன் வேலைவாய்ப்பு உருவாக்கம் தலா வருமானம் என்பனவும் அதிகரித்தன.

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் இந்த அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைப் பாதிப்படையச் செய்கின்றன. 1997-1999 காலத்தில் ஏற்பட்ட கிழக்காசிய நிதிநெருக்கடி, 2008 - 2009 இல் ஏற்பட்ட உலகளாவிய நிதி நெருக்கடி போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.

உலகளாவிய நிதி நெருக்கடி, 2007ம் ஆண்டின் நடுப்பகுதியில் அமெரிக்காவில் ஆரம்பித்தது. உலகளாவிய ரீதியில் மிகப் பெரிய நிதி நிறுவனங்களான அமெரிக்காவின் "Lehman Brothers", "Morgan Stanley", "Inc" போன்றனவும் ஐக்கிய இராச்சியத்தின் "Brad ford Bingley", "Lloyds TSB" போன்ற பல நிதி நிறுவனங்கள் முடக்கம் அடைந்தன. இந்த நிதி நெருக்கடி காரணமாக அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய நாடுகள் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பல நாடுகள் பாதிப்படைந்தன. இதனால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் எவ்வாறான பல மாற்றங்கள் ஏற்பட்டன என நோக்குவோம்.

உலகநிதி நெருக்கடி காரணமாக உலகளாவிய ரீதியில் பொருட்கள், சக்தி வளம் என்பனவற்றுக்கான கேள்வி பாதிக்கப்பட்டது. இது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதியில் பாதிப்பை ஏற்படுத்தியது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கையில் அதிகளவில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தங்கியிருக்கின்றன. இதனால் வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. மேலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் குறைவடைந்தன. வெளிநாட்டு நிறுவனங்களின் நிதிச்சந்தை மீதான முதலீடுகளும் குறைவடைந்தன. இதனால் அபிவிருத்தி அடைந்து வரும்

நாடுகளின் பங்குச் சந்தையிலும் சரிவு நிலை ஏற்பட்டது. மேலும் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிப்பு உணவுப் பொருட்களின் வேகமான விலை மாற்றம் போன்ற பல பிரச்சினைகளை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் நிதிநெருக்கடி காலத்தில் எதிர்கொண்டன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இலத்தீன் அமெரிக்க பிராந்தியத்தை எடுத்துக்கொண்டால், இந்தப் பிராந்திய நாடுகள் தமது பிராந்தியத்துக்கு வெளியேயான வர்த்தகத்தில் முக்கியமான நாடாக ஐக்கிய அமெரிக்காவைக் கொண்டிருந்தன. 2007ம் ஆண்டு அமெரிக்காவில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக இலத்தீன் அமெரிக்க நாடுகளின் வர்த்தகம் பாதிக்கப்பட்டது. இந்த நாடுகளின் பிரதான ஏற்றுமதிகளான எண்ணெய், உணவுப் பொருட்கள், முதல் விளைவுப் பொருட்கள் என்பவற்றின் மொத்த ஏற்றுமதி குறைவடைந்தது. அத்துடன் இப்பிராந்தியத்தின் வெளிநாட்டு நேரடி முதலீட்டிலும் அமெரிக்காவின் பங்கு உயர்வாகக் காணப்பட்டது. அமெரிக்காவின் முதலீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக இப்பிராந்தியத்தின் சிறிய நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. 2011ம் ஆண்டு இப் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி வீதம் சராசரியாக 3% ஆக இருக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

ஆசிய நாடுகளை எடுத்து நோக்கும் போது ஆசிய நாடுகள் அண்மைக் காலமாக வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வந்தன. அந்த வேகமான வளர்ச்சியில் ஏற்பட்ட தடையாக நிதிநெருக்கடி அமைகிறது. ஆசிய நாடுகளின் வேகமான வளர்ச்சிக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முக்கியமான பங்கு வகித்தன. நிதி நெருக்கடி காரணமாக வளர்ந்த நாடுகளின் முதலீடுகள் ஆசிய நாடுகளில் குறைவடைந்தமை காரணமாக விரைவான வளர்ச்சி தடைப் பட்டது.

மேலும் ஆசிய நாடுகளின் உற்பத்திக்கான பிரதான கேள்வி நாடுகளாக வளர்ந்த நாடுகள் அமைந்திருந்தன. இதனால் வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி ஆசிய நாடுகளைப் பாதித்தது. இதனால் ஆசிய நாடுகளில் உற்பத்தி வீழ்ச்சி, வேலையின்மை அதிகரிப்பு என்பன ஏற்பட்டதுடன் வெளிநாட்டு உதவிகளும் குறைவடைந்தன. மேலும் வெளிநாட்டு கடனை செலுத்துவதற்கான அழுத்தமும் ஏற்பட்டது.

இந்தியா, சீனா ஆகிய நாடுகள் உலகளாவிய ரீதியில் மிக வேகமாக வளர்ந்து வரும் நாடுகளாக உள்ளன. இந்தியா 2007ஆம் ஆண்டில் 9% பொருளாதார (வளர்ச்சியை அடைந்தது) 2009ம் ஆண்டில் நிதிநெருக்கடியைத் தொடர்ந்து 7% ஆக பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவடைந்தது. சீனாவும் 2007ம் ஆண்டில் 13% பொருளாதார வளர்ச்சியை அடைந்தது. இது 2009இல் 8.7% ஆக குறைவடைந்தது. இதே போல இலங்கையையும் எடுத்துக் கொண்டால் 2007ம் ஆண்டில் 6.8% ஆன பொருளாதார வளர்ச்சியை அடைந்தது. இது 2009 இல் 3.5% ஆக குறைந்தது. எனினும் ஆசிய நாடுகள் உலகளாவிய நிதி நெருக்கடி மூலம் ஏனைய பிராந்தியங்களை போல பெரியளவில் பாதிப்படையவில்லை எனக் கூறப்படுகிறது. அதாவது இந்த ஆசிய பிராந்தியத்துக்குள்ளான வர்த்தகம், முதலீட்டு பரிமாற்றம் என்பவற்றின் காரணமாக வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி ஆசிய நாடுகளை பெரியளவில் பாதிப்படையச் செய்யவில்லை என்றும் அதேநேரம் வளர்ந்த நாடுகளைவிட சீனா, இந்தியா போன்ற நாடுகள் இந்நெருக்கடியிலிருந்து விரைவான விடுதலை பெறுகின்றன என்றும் கூறப்படுகின்றது. நிதி நெருக்கடி காலத்தில் ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வீதத்தின் போக்கினைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| Country | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|
| Chiana | 13.0 | 9.6 | 8.7 | 6.5 |
| Vietnam | 8.5 | 6.2 | 3.3 | 6.5 |
| Hong hong | 6.4 | 2.1 | 2.7 | 5.2 |
| South korea | 3.1 | 2.3 | 0.2 | 5.2 |
| Bangaladesh | 6.4 | 6.2 | 5.6 | 5.5 |
| India | 9.2 | 6.7 | 7.2 | 8.2 |
| Pakistan | 6.8 | 4.1 | 2.0 | 3.0 |
| Srilanka | 6.8 | 6.0 | 9.5 | 6.0 |
| Indonesia | 6.3 | 6.0 | 9.5 | 5.5 |

Source : ADB Reports

ஆபிரிக்க நாடுகளை எடுத்து நோக்கும் போது உலகிலேயே அதிக வறுமையான நாடுகளைக் கொண்ட பிராந்தியமாக ஆபிரிக்கப் பிராந்தியம் காணப்படுகின்றன. இந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளுடான முதல் விளைவுப் பொருட்களின் வர்த்தகம் மூலம் அந்நிய செலாவணி ஈட்டி வந்தன. இருந்தாலும் ஆபிரிக்க நாடுகளிடையே கடும் போட்டி நிலமை காணப்பட்டது. இந்த நிலையில் வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி இந்த நாடுகளின் ஏற்றுமதியை பாதிப்படைய செய்தன. இதன் காரணமாக ஆபிரிக்க நாடுகள் மேலும் வறிய நாடுகளாக மாற்றமடைந்ததுடன் அமைதியின்மை, அரசியல் குழப்பங்கள், என்பனவும் இப்பிராந்தியத்தில் அதிகரித்தன. நிதி நெருக்கடி காரணமாக ஏற்பட்ட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு ஆபிரிக்க நாடுகளைப் பெரிதும் பாதிப்படையச் செய்தன. மேலும் வளர்ந்த நாடுகள் மூலமும் நிறுவனங்கள் மூலமும் ஆபிரிக்க நாடுகள் பெற்றுவந்த உதவிகள் குறைவடைந்தன. அதுமட்டுமன்றி ஆபிரிக்க நாடுகள் பெற்ற கடனை மீளச் செலுத்துவதிலும் அதிகளவில் அழுத்தங்கள் ஏற்பட்டது. இதனால் ஆபிரிக்க பிராந்தியந்திற்கு கிடைக்கும் நீண்ட கால உதவிகள் முதலீடுகள் என்பவற்றிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என கூறப்படுகின்றது.

எனவே உலகளாவிய நிதி நெருக்கடி 2007ம் ஆண்டின் நடுப்பகுதியில் அமெரிக்காவில் ஆரம்பித்த உலகளாவிய ரீதியில் பொதுவாக எல்லா நாடுகளையும் பாதிப்படையச் செய்தது. இதனால் வேகமான வளர்ச்சி கண்டு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சியும் தடைப்பட்டது. அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீட்டினை ஆபிரிக்கா செய்துள்ளன. பொது செலவினத்தை அதிகரித்தல், வட்டி வீதம் குறைதல், வரிகளைக் குறைத்தல், உட்கட்டுமான செலவுகளை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் இந்நெருக்கீட்டிலிருந்து விடுபட்டு வருகின்றன. அதே போல் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் தமது பிராந்தியங்களான வர்த்தகம், முதலீட்டு பரிமாற்றம் மூலம் இந்நெருக்கடிகளிலிருந்து விரைவாக விடுதலை பெற்று வருகின்றன. எனினும் வளர்ந்த நாடுகளை விட இந்தியா, சீனா போன்ற நாடுகள் இந்நெருக்கடியிலிருந்து விரைவாக விடுதலை பெறுவதைக் காண முடியும்.

**உசாத்துணை நூல்கள்:**

Global Economic Crisis and developing countries

S.H.A.M.Abeyaratne Bankers Journal Nov. 2010

http // w.w.w. global issues org/ariticle/ 768/ Global / Finacialcrisis

# பொருளாதாரத்தில் வெளி அதிர்வுகளின் தாக்கம்


*Mr. S. Ramapirianthan*
*2009/A/ 157*

முகவுரை

உலகமயமாதல் வியாபித்திருக் கும் இன்றைய பொருளாதர ஒழுங்கில் ஏற்படும் வெளி அதிர்வுகள் உலகப் பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற் படுத்துகின்றது. பொருளாதார, அரசியல் மற்றும் சமூக அடிப்படையில் உலக ளாவிய ரீதியில் நடைபெற்றுக் கொண்டி ருக்கும் அமைப்பு மாற்றங்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதார அமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்தி வருகின்றது. இந் நிலையில் ஓர்நாட்டின் புறக்காரணிகளினால் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களே வெளி அதிர்வு ஆகும். வெளி அதிர்வுகள் பொருளா தாரத்தில் சாதகமான தாக்கங்களையும், பாதகமான தாக்கங்களையும் ஏற்படுத்து கின்றது. ஒருங்கிணைந்த உலகப் பொரு ளாதாரத்தின் செயற்திறன் உலக நாடுக ளின் பொருளாதார வளர்ச்சியினைப் பொறுத்து அமைகின்றது. இக்கட்டுரை யின் ஊடாக வெளி அதிர்வுகள் உல கப் பொருளாதாரத்தில் என்ன வகையில் உள் நுழைகின்றன, அத்தகைய காரணி கள் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக் கத்தினை ஏற்படுத்துகின்றன தொடர்பாக நோக்கப்படுகின்றது.

## உலகப் பொருளாதார வெளி அதிர்வுகள் (External Shocks to the Global Economy)

உலக நடவடிக்கைகள் பல்வேறு வகைகளில் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரங்களில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. வெளி அதிர்வுகளின் தாக்கத்தின் அளவே குறித்த நாட்டுப் பொருளாதாரத்தின் செழிப்புக்கும், வீழ்ச்சிக் கும் காரணமாக அமைகின்றது. பொருளா தார மாற்றத்தினை ஏற்படுத்தும் பிரதான வெளி அதிர்வுக் காரணிகளாக பின்வரு வன காணப்படுகின்றன.




### 01. வலுவுக்கான செலவு (Energy Costs)

வலுவுக்கான செலவு குறித்த நாட்டின் வரவு செலவுத்திட்டத்தின் அடிப் படையில் ஒரு நாட்டின் பொருளாதாரத் தினை ஒழுங்குபடுத்தினாலும் வலுச் சக்திக்கான செலவானது அதிகரிக்கும்.

- எண்ணெய் விலை (Oil Prices)
- எரிவாயுவின் விலை (Gas Prices)
- மீள உருவாக்க முடியாத வளங்கள் (Non-Renewable Resources)

என்பனவற்றின் விலை அதிகரிப்பதனால் ஏற்படும் மாற்றங்கள் ஓர் நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும். வலுவுக்கான விலை அதிக ரிப்பு உலக அளவில் பல தொழில்க ளைப் பாதிப்பதுடன் வாகன உற்பத்திக் கான கேள்வியினையும் குறைத்து போக்குவரத்துச்செலவை அதிகரிக் கின்றது. வலுவுக்கான விலை அதிகரிப்பு உற்பத்திச் செலவை அதிகரிப்பதுடன் வெளியீட்டு விலையினையும் அதிகரிக் கின்றது.

- 1970 களில் ஏற்பட்ட எண்ணெய் விலை அதிகரிப்பு பணவீக்கத்தில் தாக்கம் செலுத்தியது.
- 2003 ஆம் ஆண்டு ஈராக்கில் நடை பெற்ற போர் காரணமாக எண்ணெய்விலை அதிகரித்தது.

வளர்ந்த நாடுகள் தங்களின் எரிபொருள் தேவையினை பூர்த்தி செய்வதற்காக தாம் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட் களில் இருந்து உயிரியல் எரிபொருட்கள் உற்பத்தி செய்யப்படும் நிலை மூன்றாம் உலக நாட்டின் பொருளாதாரத்தினை பாதிப்புக்கு உள்ளாக்கின்றது.

### 02. பஞ்சம் (Famine)

பொருளாதாரச் சீரழிவு, அறுவடை முறிவு மற்றும் சர்வதேச சந்தைகளின் தாக்கம் எனும் வெளி அதிர்கள் பஞ்சத் தினை ஏற்படுத்துகின்றது. உலகலாவிய ரீதியில் ஏற்படும் வெப்ப அதிகரிப்பு அறு வடை முறிவிற்கு காரணமாக உள்ளது. உதாரணமாக 1970 களில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட வரட்சியினால் அறுவடை முறிவு ஏற்பட்டதுடன் இது உணவுப் பஞ்சத்தினை ஏற்படுத்தி உலகப் பெருமந்தம் ஏற்பட வழிவகுத்தது. தட்ப வெப்பநிலைமைகள் பாதகமாக இருப்ப தனால் ஜேர்மன், கொங்கொங் மற்றும் யப்பான் போன்ற நாடுகளிலும் அறுவடை முறிவு ஏற்பட்டது.

வரட்சி ⟹ அறுவடைமுறிவு ⟹ உணவுப் பஞ்சம் ⟹ பொருளாதார மந்தம்

2013 December மாதம் தென் சூடானில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் தென் சூடான் மற்றும் நாட்டின் பலபகுதிகளில் உணவுப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று ரோமில் செயற்பட்டு வரும் உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது. பூகோளத்தில் ஏற்படும் நோய்த்தாக்கம் பொருளாதார செயற் பாடுகளினை நலிவடையச் செய்கின்றது. உதாரணமாக கோழிக்காய்ச்சல் மற்றும் பன்றிக்காய்ச்சல் காரணமாக பல்லாயிரக் கணக்கான கோழி மற்றும் பன்றிகளின் இறப்பு முதலீட்டார்களை பெரிதும் பாதித்தது. கைத்தொழிற் செயற்பாட்டின் மூலம் வெளியேறும் காபன் வாயுவின் தாக்கம் இயற்கை சமநிலையினைப் பாதிக்கிறது. இலங்கை மற்றும் தென் இந்தியாவில் முருங்கை மரங்களின் அழிவு வாயுத்தாக்கத்தினால் ஏற்பட்டது.

## 03. பங்கு விலைகள் (Share prices)

உலகளாவிய ரீதியில் பங்கு விலையில் ஏற்படும் மாற்றம் பொருளாதார பெருமந்தம் மற்றும் பிராந்திய பொரு ளாதார பிரச்சினைகளினையும் ஏற்படுத்து கிறது. பங்குகளின் விலை எதிர்பார்ப்பு எதிர்கால நிதிச்செயற்பாடுகளை திட்டமிட உதவுவதுடன், பங்குகளின் விலைச் சரிவுகள் வெளிநாட்டு நேரடி முதலீட்டி னையும் தடுக்கிறது.

- 1920 ஆம் ஆண்டு அமெரிக்க பங்குச்சந்தை சரிவு ஏற்பட்டது.
- 1987 ஆம் ஆண்டு நியூயோர்க் நகரத்தின் Dow- Jones பங்குச் சந்தைக்குரிய குறியீடு 22% சரிவடைந்தது.
- 1997 ஆம் ஆண்டு பாங்கொங்கில் ஏற்பட்ட நிதி நெருக்கடி பங்கு களின் விலைச்சரிவால் ஏறபட்டது.
- 2008 ஆம் ஆண்டு ரஷ்ய பங்குச் சந்தையின் குறியீடான RTS 72 வீதம் சரிவு ஏற்பட்டது.

1997 ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட பங்குகளின் விலைச் சரிவு நிதிச் சந்தை யில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இச் சரிவு முதன் முதலில் கொங்கொங்கில் உருவாகி பின்னர் ஜப்பான், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவினையும் ஆக்கிர மித்தது. மேற்கு நாடுகளின் முதலா ளித்துவ பொருளாதார அமைப்பில் மூன்று அடித்தளங்களின் ஊடாக பங்குச் சந்தைகள் இயங்குகின்றன

I. பொதுவான நிறுவன அமைப்பு [Public Limited Company System – PLC]
II. வட்டி அடிப்படையில் இயங் கும் வங்கி அமைப்பு [Usuri ous Banking System]
III. மாற்றிக் கொள்ள முடியாத காகித நாணய முறை [Incon vertible paper money standard]

## 04 பொருளாதாரக் கொள்கைகள் (Economic policies)

வட்டி வீதம், உதவிக் கொள்கை, உள்நாட்டுக் கொள்கை, மற்றும் நாணயக் கொள்கை போன்ற பல்வேறு பொருளா தாரக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்கள் பொருளாதார அதிர்வுகளை ஏற்படுத்து கின்றது. ஒரு நாட்டின் நிதிச் சொத்து மற்றும் நிதி வளம் என்பனவற்றினைக் கவனத்திற் கொண்டே வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகிறது. இவ் வட்டி வீதம் பங்குகளின் விலையினைத் தீர்மானிக் கிறது.

வெளிநாட்டு எதிபார்ப்புக்கு ஏற்ப வட்டிவீதத்தினை வைத்திருக்க வேண்டிய தேவை உண்டு. உள்நாட்டில் சேமிப்புக் கான வட்டிவீதம் (7%) குறைவாகவும், கடனுக்கான வட்டிவீதம் (22%) உயர் வாகவும் உள்ளது. இந்நிலை வறிய நாடுகள் உறுதியற்றது என்பதனை வெளிப்படுத்துகிறது. அரசியல் குழப் பங்கள் உள்ள ஒரு நாடு வெளிநாட்டு முதலீட்டினை பெறுதல் சிரமமான விடை யமாகும். இந்நிலையினால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாகின்றன. வேறு நாடுகளின் சர்வதேச ரீதியிலான ஒதுக்கு கள் ஒரு குறித்த நாட்டினது பொரு ளாதாரத்தினை பாதிக்கும். இந்த ஒதுக்கு உள்நாட்டு நாணயத்தின் பலத்தையும் பலவீனத்தையும் தீர்மானிப்பதாக உள்ளது.

வர்த்தக பாதுகாப்பு வாதம் அதாவது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருளாதாரக் கொள்கை உள்நாட்டுப் பொருளாதாரத்தினைப் பாதிக்கும். உதாரணமாக அமெரிக்க இரும்பு உருக்குக்கான ஏற்றுமதித் தடை வர்த் தக கட்டுப்பாட்டினை ஏற்படுத்தியது. இது அமெரிக்க இரும்பினை கொள் வனவு செய்யும் நாட்டினைப் பாதித்தது. முக்கியமான பொருளாதார விரிவாக்கல் மற்றும் சுருக்கக் கொள்கைகள் உலகம் முழுவதும் பொருளாதார தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

**05.நிச்சயமற்ற தன்மை (Uncertainty)**

தொழில் நிறுவனங்களின் வீழ்ச்சி, மோசடி, ஊழல், அரசியற் கொள்கை, இயற்கைவளம், வதந்திகள், மற்றும் மீளப்பெறமுடியாத கடன்கள் போன்ற பல காரணிகள் பொருளாதார நிச்சயமற்ற தன்மையினை ஏற்படுத்து கின்றது. நிச்சமற்ற தன்மை எதிர்கால முதலீட்டினைப் பாதிப்பதுடன் வர்த்தகச் செயற்பாட்டினையும் பாதிக்கிறது. இந்தியா பொருளாதாரத்தில் முன்னேறி வரும் நாடாக இருப்பினும் ஊழலில் முதன்மை பெறும் நாடாகவும் இருக் கிறது. IMR அறிக்கையின்படி ஊழல் என்பதனை குறைந்தது 5% த்தினை யாவது நாடுகள் அனுபவிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. ஊழல் சிவப்பு நாடாப்பிரச்சினையினை தோற்றுவிக்கும்.


- 1930 - உலகப்பொருளாதார பெருமந்தம்
- முதலாம் (1914), இரண்டாம் (1939) உலகப்போர்
- 1972 - dollar crisis
- 1992 - Russion Bond Crisis
- 2004 - ஆண்டு சுனாமி அனர்த்தம்
- 2007 / 2008 - அமெரிக்க நிதி நெருக்கடி

இத்தகைய பல்வேறு நடவடிக்கைகள் பொருளாதார நிச்சயமற்ற தன்மை யினை தோற்றுவித்தமை குறிப்பிடத் தக்கது. ஈரான், சிம்பாவே, லிபியா, மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடு களில் இடம்பெற்ற அரசியல் மாற்றங் கள் மற்றும் ஈராக், லிபியா போன்ற நாடுகளில் அமெரிக்க தலையீடுகள் போன்றனவும் பொருளாதார நிட்சயமற்ற தன்மையினைத் தோற்றுவிப்பதுடன் முதலீடு, வர்த்தகம், பொருளாதார அபி விருத்தி மற்றும் எதிர்காலத் திட்டங் களையும் பாதிக்கின்றது.

**06.போர் (War)**

ஒரு நாட்டில் ஏற்படுகின்ற போர் பெரும்பாலான நாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தி பொருளாதாரத்தில் நிச்ச யமற்ற தன்மையினைத் தோற்றுவிப்பது டன் சாத்தியமற்ற பொருளாதார சீர்குலைவுகளினையும் ஏற்படுத்து கின்றது.

உதாரணமாக முதலாம் உலகப் போர் (1914), இரண்டாம் உலகப்போர் (1939), ஈராக் போர் (2003), மத்திய கிழக்கில் இடம்பெறும் போர், மற்றும் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போர் என்பன பொருளாதார ரீதியிலான தடைகளையும் கட்டுப்பாட்டினையும் தோற்றுவித்தது. உதாரணமாக ஈரானில் நடைபெற்ற போரானது எண்ணெய் நெருக்கடியினை தோற்றுவித்ததுடன் நிலநடுக்கம், வரட்சி, வெள்ளப்பெருக்கு, சூறாவளி மற்றும் வெப்பமயமாதல் என்பனவற்றினால் ஏற்படும் தாக்கம் பொருளாதாரத்தில் பாதகமான தன்மையினைத் தோற்றுவிக்கின்றது. வெப்பமயமாதல் ஒசோன் படைத் தாக்கத்துக்கும், கதிர்வீச்சுக்கும் காரண மாக இருப்பதுடன் பயிர் அழிவுக்கும் காரணமாக இருக்கின்றது.




மேலும் போரின் விளைவு இரும்பு, ஆயுதங்கள் மருத்துவ உபகரணங்கள் என்பனவற்றுக்கான தேவையினை அதிகரித்ததுடன் பணவீக்கம், மற்றும் வளங்களின் அழிவுக்கும் காரணமாக அமைந்தது. போர்த்தாக்கத்தினால் ஏற்படும் பணவீக்கம் மற்றும் மொத்தத் தேவையின் அதிகரிப்பை வரைபடம் காட்டுகிறது.

வரைபடத்தின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி $GDP_1$ இருந்து $GDP_2$ ற்கு அதிகரிக்கிறது. பணவீக்க நிலைமையும் 103.0% இருந்து 10.0 ஆக உயர்கின்றது.

## 07.இயற்கை அனர்த்தம் (Natural Disaster)

இயற்கை அனர்த்தங்கள் வள ஒதுக்கீடு மற்றும் பாரிய பொருளாதார சீர்குலைவுகளினை ஏற்படுத்துகிறது. பயிர் அழி வானது உணவுப் பஞ்சத்தினை ஏற்படுத்தி பொரு ளாதார மந்தத்தினை தோற்று விக்கும்.

- 1906 – சான்பிரான்சிஸ்கோ பூகம்பம்
- 1970 – உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட வரட்சியினால் அறுவடை முறிவு ஏற்பட்டு உணவுப்பஞ்சம் ஏற்பட்டது (ஜேர்மனி, கொங்கொங், யப்பான்)
- 2004 – சுனாமி அனர்த்தம்

## 08.நிதிசந்தை (Financial Market)

நிதி நிறுவனங்களின் தோல்வி உள்நாட்டுப்பொருளாதாரத்தில் வெகுவான பாதிப்பினை ஏற்படுத்துகிறது. மிகவும் பழமை வாய்ந்த அமெரிக்காவின் கட்டுமான நிதியீட்டு வங்கி 2000ம்ஆண்டு September – 15ம் திகதி 6000 கோடி அமெரிக்க டொலர்களை இழந்தது. இது ஜேர்மனியப் பொருளாதாரத்தினை மட்டுமன்றி உலகப் பொருளாதாரத்தினையும் வெகுவாக பாதித்தது. ஜேர்மனியின் பெரும் வங்கியான டொச்சவங்கி, கொமஸ் வங்கி மற்றும் போஸ்வங்கி என்றும் வங்கிகளும் நெருக்கடிக்கு உள்ளாகின. அடமான முறை வீட்டுக்கடன் திட்டத்தின் (Sub prime mortgage programme) மூலம் அமெரிக்காவில் 300 மில்லியன் டொலர் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 550 மில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டது. 2007 – 2008 நிதி நெருக்கடி காரணமாக பணவீக்கம் 4.28% ஆக அதிகரித்தமையானது நுகர்வோர் வாங்கும் பொருட்களின் பொதுவான விலைகள் 4% உயர்ந்துள்ளது. 1920 இல் ஏற்பட்ட பங்குச்சந்தையின் சரிவு, 2008இல் ஏற்பட்ட ரஷ்ய பங்குவிலை வீழ்ச்சி என்பனவும் உலகளாவிய பொருளாதாரத்தினை தாக்கத்திதுக்கு உள்ளாக்கி உள்ளது.

## 09. வர்த்தகத்தடைகள் (Trade barrier)


உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தப்படும் வர்த்தகத் தடைகள் பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. வர்த்தகத்தில் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் முகமாக ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. ஏற்றுமதி விரிவவாக்கம் 2010-2011ம் ஆண்டுகளில் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டமை உள்நாட்டுப் பொருளாதாரத்தில் பாதகத்தன்மையை தோற்றுவித்தது. உலக வங்கியின் அறிக்கையின்படி ஐரோப்பிய ஒன்றியம் தென்னாசியாவின் 27 நாடுகளில் ஏற்றுமதி சந்தையில் தனது பங்களிப்பினை வழங்குகின்றது. 2007 – 2008ம் ஆண்டின் அமெரிக்க நிதி நெருக்கடியின் காரணமாக இறக்குமதி உணவு மற்றும் எரிபொருட்களுக்கான விலை அதிகரிப்பானது உள்நாட்டுப்பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

## 10. அந்நிய முதலீடு (Foreing Invest)

அந்நிய முதலீடு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் பொருளாதார சுரண்டல்கள் உள்நாட்டுப் பொருளாதாரத்தினை பாதிக்கின்றது. அமெரிக்காவும் மேற்கத்தேய முதலாளித்துவ நாடுகளும் இத்தகைய நடவடிக்கையிலேயே ஈடுபட்டு வருகின்றன. இத்தகைய முதலீடுகள் மறைமுக முதலீடுகள் என்று அழைக்கப்பட்டாலும் அவை அந்த நாட்டின் பொருளாதாரத்தில் இடப்படும் உண்மையான முதலீடாக இருப்பதில்லை. ஏனெனில் 2ம் உலகப்போருக்குப்பின்னர் ஐரோப்பாவிலும் உலகின் இதர பகுதிகளிலும் அமைந்துள்ள கனரக தொழிற்சாலைகளையும் (Heavy Industries) வர்த்தக நிறுவனங்களையும் (Trading Indus tries) அமெரிக்கா விலைக்கு வாங்கி அதனை தமது தாய் நிறுவனங்களுடன் இணைத்து அவற்றில் முதலீடு செய்தது இம் முதலீடுகள் குறுகிய காலத்தில் பெரும் இலாபத்தினை உழைக்கும் நோக்கோடு செயற்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட காரணிகள் உலகளாவிய பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துவதாக உள்ளது. உள்நாட்டு பொருளாதாரத்தில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் சாதகமான தாக்கத்தினையும் ஏற்படுத்துகிறது என்பது தெளிவாகின்றது. கீழ்வரும் வரைபடமானது உலகளாவிய ரீதியில் ஏற்படும் வெளியக அதிர்வுகளினால் பொருளாதாரத்துக்கு ஏற்படும் சாதக மற்றும் பாதக தன்மையினை வெளிப்படுத்துகிறது.

## ECONOMIC GROWTH VERSUS EXTERNAL SHOCKS




source:- Journal of Applied Business and Economics

வரைபடத்தின் படி உலகளாவிய ரீதியில் வெளியக அதிர்வு பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதனை விட பாதகமான தாக்கமே பொதுவாக இடம்பெறுகின்றது. இங்கு 1973 தொடக்கம் 2005ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 1996 தொடக்கம் 2006ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் வெளியக அதிர்வு சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. சாதகமான வெளிப்புற அதிர்ச்சி குறித்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு உதவும் மாறாக சாதகமற்ற வெளிப்புற அதிர்வுத் தாக்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியை வீழ்ச்சி அடையச் செய்யும்.

### முடிவுரை

உலகமயமாதலினால் உலகளாவிய ரீதியில் பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படுகின்றன. வெளியக அதிர்வுகள் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தினையும், பாதகமான தாக்கத்தினையும் தோற்றுவிக்கின்றது. வெளி அதிர்வுகள் தனித்து பொருளாதார நடவடிக்கையில் மட்டும் தாக்கத்தினை ஏற்படுத்தாது அரசியல், சமூகக் கட்டமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. உலகப் பொருளாதாரத்தினை வர்த்தக நெருக்கடி, எண்ணெய்விலை நெருக்கடி, நிதி நெருக்கடி, பொருட்களின் உயர் விலைச்சுழற்சி, கடன்நெருக்கடிகள், இயற்கை அனர்த்தம் மற்றும் பூகோள

அரசியல் அதிர்ச்சிகள் எனும் காரணிகள் வெளி அதிர்வு மாறியில் வலுவான தாக்கத்தினைச் செலுத்துகின்றது. இக் காரணிகள் உலக பொருளாதாதார வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்து வதுடன் எதிர்கால பொருளாதார திட்ட மிடற் செயற்பாட்டினையும் பாதிக்கிறது.

**உசாத்துணைகள்**


- ❖ Pradumna B. Rana, 2007, Economic integration and synchronization of business cycles in East Asia, Journal of Asian Economics,_2007, vol. 18, issue 5, pages 711-725

- ❖ Lewis, Jeffrey D. 1991. "A Computable General Equilibrium (CGE) Model of Indonesia."Development Discussion Paper 378. Harvard University, Harvard Institute for International Development, Cambridge, Mass. Processed.

- ❖ Sharma, S.C. and Dhakal, D., 1994, Causal analyses between exports and economic growth in developing countries, Applied Economics, 1994, 26, pp. 1145-1157

- ❖ Sheery, E., 1990, Exports and Growth: A flawed frame-work, The Journal of Development Studies, Vol. 27, No. 14, 1990

- ❖ Sachs, J.D. and Warner, A.M., 1995, Economic reform and the process of global integration, Brooking Paper on Economic Activity, 25th Anniversary Issue, 1-95

- ➢ http://www.tamilcircle.net
- ➢ http://www.wsws.org
- ➢ http://lightink.wordpress.com
- ➢ http://warmcall.blogspot.com/
- ➢ http://www.xtremepapers.com

# சீனாவின் பொருளாதார வளர்ச்சியில் அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களின் முக்கியத்துவம்

*Mr.V.Ramanan,*
*Economics special,*
*2008/ A/147*

உலகின் சனத்தொகை கூடிய நாடு, சீனப் பெருஞ்சுவர், புராதன நாகரிகத்தைக் கொண்ட நாடு, இராட்சத பண்டா, குவாங்கோ நதி போன்றவற்றைக் கொண்டே சீனா என்ற ஒரு நாட்டைப் பற்றிக் கடந்த காலங்களிலெல்லாம் பலர் அடையாளப்படுத்திக் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். நூல்களில் வாசித்திருக்கின்றோம். ஆனால், இன்று வேகமான வலுவான பொருளாதார வளர்ச்சி, வியக்க வைக்கும் பாரிய நெடுஞ்சாலைகள், நான்கு வழிப் பாதைகள், வானுயர்ந்த கட்டடங்கள், வளம் கொழிக்கும் நகரங்கள், முன்னேற்றம் கண்டுவரும் கைத்தொழில் போன்ற அடையாளங்களில் பலர் வியப்பாக நோக்குகின்ற ஒரு நாடாக சீனா இன்று வளர்ச்சி பெற்றிருக்கின்றது. இதற்குக் காரணம் எந்த நாட்டையும் போலன்றி கடந்த 30 வருடங்களாக சீனப் பொருளாதாரம் வருடாந்தம் சராசரி 10% பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் தக்கவைத்திருக்கின்றது. அமெரிக்க, ஐரோப்பிய பொருளாதாரம் ஆட்டம் கண்டுவரும் இவ்வேளையில் சீனப் பொருளாதாரம் வளர்ந்து செல்வதைக் காணலாம். கடந்த 1000 ஆண்டுகளுக்கு முன் இன்றைய அமெரிக்கா போல உலகின் முதலாவது வல்லரசு நாடாகத் திகழ்ந்த சீனா மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது.

2010ம் ஆண்டின் 2வது காலாண்டில் உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாகவிருந்த ஜப்பானை சீனா பின்னுக்குத் தள்ளிவிட்டு அதனைத் தான் கைப்பற்றியுள்ளது. இக்காலப் பகுதியில் ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.28 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதே காலப்பகுதியில் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.33 ரில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது. இந்நிலையில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் இல் 2வது இடத்தைப் பிடித்த சீனா 2027ம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாகத் திகழும் என பிரபல பொருளாதார ஆய்வு நிறுவனமான கோல்டமன் சக்ஸ் நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது.

யென் நாணய மதிப்பு அதிகரித்ததனால் ஜப்பானின் ஏற்றுமதி பாதிப்படைந்ததோடு வெளிநாட்டு உற்பத்திகளோடு ஒரு போட்டி நிலையினை உருவாக்கியிருந்தது. எண்பதுகளின் பிற்பகுதியில் மேற்கொண்டு வந்த முதலீடுகள், தொழில்நுட்பம் ஆசியாவின் வளர்முக நாடுகளில் ஆகியன மூலம் அந்நாடுகளின் நுகர்வுப் பொருட்களில் பிரதான இடத்தை வகித்த ஜப்பானின் செல்வாக்கு அந்நாடுகளில் மங்கிச் செல்ல சீனா அந்நாடுகளில் ஆழமாகக் கால்பதித்து வருகின்றது. உதாரணமாக 2004ம் ஆண்டில் 179 மில்லியன் டொலராகவிருந்த இலங்கைக்கான ஜப்பானிய உதவி 2008இல் 44 மில்லியன் அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சி

யடைந்துள்ளதாகப் பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்தி நிறுவனப் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ள அதேநேரம் இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் நிர்மாணப் பணிக்காக சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி 300 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. அதுமட்டுமல்லாது. பாகிஸ்தானிலும் ஆயுத அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி போன்றவற்றில் சீனா காலடி பதித்துள்ளது. இந்நிலையில் சீனாவின் பெரிய நிறுவனங்கள் அனைத்துமே 50% இற்கும் அதிக இலாபமீட்டி சாதனை படைத்துள்ளதாக அறிவித்துள்ளது. அதாவது 2010ம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் 39 பெரிய நிறுவனங்கள் 754 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலாபமாக ஈட்டியுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றது. இதில் முக்கியமாக அரச நிறுவனங்கள் கணிசமானளவு இடத்தை வகிப்பதாகக் கூறியுள்ளது. இந்நிலையில் தான் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா "கல்வி , தொழில்நுட்பம் போன்றவற்றில் சீனா, இந்தியா போன்ற நாடுகளை விடவும், அமெரிக்கா தங்கும் நிலையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். எனவே சீனா என்ற நாட்டைவிட்டு பொருளாதார விடயங்களை ஆராய முற்படுவதென் பது முழுமையற்றதொன்றாகவே அமையும்.

சீனா என்று பொதுவாக அழைக்கப்படும் சீன மக்கள் குடியரசு கிழக்காசியாவிலே அமைந்துள்ள நாடாகும். உலகிலேயே சனத்தொகை கூடிய நாடாகத் திகழும் இந்நாட்டில் ஏறத்தாழ 1, 306, 313, 812 மக்கள் வாழ்கின்றார்கள். சீனாவின் தலைநகர் பீஜிங், வர்த்தகத் தலைநகர் சங்காய் ஆகும். மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்ட சீன நாகரிகமானது வடசீனச் சமவெளியூடாகப் பாயும் மஞ்சள் ஆற்றங்கரையில் உருவாகி வளர்ந்தது. நாலாயிரம் ஆண்டுகளாக சியா வம்சம் (Xia) தொடக்கம் சிங் (Qing) வம்சம் வரையான அரச வம்சத்தவர்களால் ஆளப்பட்டு வந்ததுடன், 1911 இல் சீனக் குடியரசு உருவாகியதுடன் முடிவுக்கு வந்தது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குவோமிந்தாங், சீனப் பொதுவுடமைக் கட்சி எனச் சீனா இரண்டு குழுக்களாகப் பிளவுபட்டிருந்தது. ஆயினும், 1949இல் சீனப் பொதுவுடமைக் கட்சி வெற்றி பெற்றதோடு தேசியவாதிகளான குவோமிந்தாங் தைவானுக்கு விரட்டப்பட்டு சீனக் குடியரசு நிறுவப்பட்டது.

சீனப் பொதுவுடமைக் கட்சியின் தலைவராக இருந்த மாவோ சேதுங் பல்வேறு பொருளாதார செயற்திட்டங்களை முன்னெடுத்தார். எல்லாச் சீன மக்களும் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து வாழக் கூடியவாறு இவரது திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. விவசாயத்தில் கூட்டுப் பண்ணை முறை கொண்டு வரப்பட்டது. வெளிநாட்டு தொழில்நுட்பங்களைப் புகுத்துவதை இவர் விரும்பவில்லை. இவரது முன்னோக்கிப் பெரும் பாய்ச்சல் (Great leap forward) போன்ற பல திட்டங்களை தோல்வியைக் கொடுத்ததோடு அவை வறுமையையே ஏற்படுத்தின. இந்நிலையில் அவர் தனது கட்சிப் பதவியிலிருந்து விலக லியூ ஷாவோக்கி பதவியேற்றார். 1966இல் மாவோவால் மேற்கொள்ளப்பட்ட கலாச்சாரப் புரட்சியானது தேசிய ரீதியாக சீன மக்களை ஒன்றுபட வைத்து பலமானதொரு அடித்தளத்தை மறைமுகமாக ஏற்படுத்தியபோதும் அக்காலத்தில் பல குழப்பங்களுக்கும் அதுவே காரணமாகியது. 1976இல் மாவோ காலமானதைத் தொடர்ந்து பதவிக்கு வந்த மாவோவின் வாரிசு எனக் கருத்தப்பட்ட ஹீவா குவோபெங் இடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய டெங்சியாபிங் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையில் அரசாங்கம் கொண்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதோடு கம்யூன்களையும் கலைத்தார். "பூனை சிவப்பா வெள்ளையா என்று பார்க்காதே, அது எலியைப் பிடிக்கிறதா என்று மட்டும் பார்" என்று கூறிய டெங்சியாபிங் சோஷலிசப் பாதையிலிருந்து சந்தைப் பொருளாதாரத்திற்குச் சீனா திரும்புவதற்

கான புதுவிளக்கத்தை அளித்தார். சீனாவில் வர்த்தகத்திற்கு விதித்திருந்த தடைகளை ஒவ்வொன்றாகவும் படிப்படியாகவும் நீக்கினார். இதற்குப் பல பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அரசியல் ரீதியாக மாகாணங்களின் அதிகாரங்களை அதிகரித்துக் கொண்டு வந்தார். இவ்வகையில் டெங்சியாபிங் காலத்தையே சீர்திருத்த காலம் என பொருளியலறிஞர்கள் வர்ணிக்கின்றனர். இவ்வகையில் சீனாவில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் 3 வகையான காலப்பகுதிகளாக வகுத்து நோக்கப்படுகின்றது.

1. சீர்திருத்த நிகழ்வுப்போக்கு : முதற்கட்டம் (1978 - 1989 வரை)

இச்சீர்திருத்தங்கள் 1979இன் தொடக்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டன. உற்பத்தியின் முதன்மை நோக்காக இலாபம் என்ற நிலை உருவாக்கப்பட்டது. எனவே சில தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்சாலைகளில் வாழ்நாள் முழுவதும் வேலை என்பதை இரத்துச் செய்யவும் திறனற்ற தொழிற்சாலைகளை மூடவும் நிர்வாகிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. 1983இல் அரச தொழில் நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள முடிவதோடு அத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பும் கிடையாது. எப்போது வேண்டுமாயினும் அவர்களை வேலையிலிருந்து நீக்கலாம் என்ற அதிகாரத்தை அரசு வழங்கியது. இந்த நடவடிக்கையானது முயற்சியாளர் வர்க்கத்தை ஊக்குவித்ததோடு துணிந்து முதலிடவும் தூண்டியது.

1980வரை வியாபாரம் என்பது தடை செய்யப்பட்டிருந்தது. மாவோவின் காலத்தில் எந்தப் பொருளையும் இலாபத்திற்கு விற்பது குற்ற மாகக் கருதப்பட்டது. நகர்ப்புற கூட்டு நிறுவனங்களுக்கே அரசு ஆதரவளித்த போதும் கூட்டு நிறுவனங்கள் என்ற சிவப்புத் தொப்பியை அணிந்து கொண்டு பல தனியார் நிறுவனங்கள் செயற்பட்டன. 1979 இல் டெங்சியாபிங் நுழைவுச் சலுகைக் கொள்கையினை அறிவித்தார். இதன்படி குவாங்டாங், ஃபுஜியன் மாகாணங்களில் 4 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special economic zones) உருவாக்கப் பட்டன. 1980 செட்டெம்பரில் வேளாண்மை உற்பத்தியில் காணப்பட்ட கூட்டுப்பண்ணை முறை நீக்கப்பட்டு குடும்ப அடிப்படையிலான தனியார் உற்பத்தி அமைப்பு நடைமுறைக்கு வந்தது. இதனடிப்படையில் தனிக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கப்பட்டதுடன் அதில் வேளாண்மை செய்து குறிப்பிட்ட அளவை அரசு நிர்ணயிக்கும் விலையில் அரசிற்கு விற்றதுபோக எஞ்சியதை சந்தையில் விற்க முடியும் என்ற ஒப்பந்தம் காணப்பட்டது. இங்கு முக்கிய அம்சம் யாதெனில் நிலமானது ஒப்பந்த அடிப்படையில் தான் வழங்கப்பட்டது. ஆனால் கோட்பாட்டு ரீதியாக அது பொதுச்சொத்தாகவே இருந்தது.

சீர்திருத்தங்களில் அடுத்து 1983, 1984 களில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் முக்கியமானவை. அதாவது இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் அரசாங்கத்திடமிருந்து நிலங்களைப் பெற்றவர்கள் கூலித் தொழிலாளர்களை உற்பத்தியில் ஈடுபடுத்தலாம் அல்லது அந்நிலங்களை குத்தகைக்கு விடலாம் என்ற விதியாகும். இதன்படி நிலத்தை விற்கவும், தமது வாரிசுகளுக்கு உரிமை மாற்றம் செய்யும் உரிமையையும் இவர்கள் பெற்றனர்.

ஆனால், 1982இல் கொண்டு வரப்பட்ட புதிய அரசியலமைப்புச் சட்டமானது கம்யூன்கள் கலைக்கப்படுவதற்கு முன்பு அவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த அரசியல் நிர்வாக ரீதியான அதிகாரங்களை பின்பு உருவாக்கப்பட்ட நகர கிராம அரசாங்கங்களுக்கு வழங்கியது. இந்நிலையில் இத்தகைய நகர, கிராம அரசாங்கங்கள் முன்பு

கம்யூன்களின் பொறுப்பிலிருந்த தொழிற் சாலைகளை எடுத்து, நகர கிராம தொழில் நிறுவனங்களாக அமைத்தது மட்டு மன்றி நிதி உதவியினை வழங்கி இந் நிறுவனங்க ளின் நிர்வாகிகளுக்கு அதிகாரங்களையும் வழங்கியது. இத்தகைய சாதகமான ஊக்கு விப்புகளால் இத்தகைய நிறுவனங்கள் மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் மின்னி யல் பொருட்கள், ஆயத்த ஆடைகள், நவீன பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யுமளவிற்கு வளர்ச்சி பெற்றன. இங்கு 1982இல் டெங்சியாபிங் ஆல் கொண்டுவரப்பட்ட "நான்கு அனுமதி கள் திட்டம் முக்கியமானதாகும். இத்திட்டத் தின் மூலம் கிராமப்புற விவசாயிகள் வியா பாரத்தில் ஈடுபடவும் தங்களது விளை பொருட்களை சந்தைகளில் விற்கவும் தூர இடங்களுக்கு அனுப்பவும் பல கிளைகள் வழியாக விற்பனை செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டது. மேலும் 1983இன் 1ம் எண் ணிட்ட ஆவணமானது தனியார் தொழிலா ளர்களை அமர்த்திக் கொள்வதையும், உற் பத்திச் சாதனங்களை பெருமளவு தனியார் வாங்குவதையும், தனியார் முதலீட்டிற்காக முதலைக் குவித்தல், கூட்டுச் சொத்தை தனியாருக்கு விடுத்தல் ஆகியவற்றைச் சட்டபூர்வமாக்கியது. மேலும் நிறுவனத்தில் அதிகமாக முதலீடு செய்திருந்தால் அதனை மெதுவாகத் தனியார் சொத்தாக மாற்றும் உரிமையும் வழங்கப்பட்டது.

### சீர்திருத்த நிகழ்வுப் போக்கு : இரண்டாம் கட்டம் (1984 - 1991 வரை)

இரண்டாவது கட்டச் சீர்திருத்தமானது அரசு சாராத உற்பத்தியை ஊக்குவிப்பதாக அமைந்ததோடு முதலீடு, உற்பத்தி முறையை வடிவமைத்தல் போன்றவை சந்தைச் சக்தி களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தாக அமைந்தது. இதனடிப்படையில் அரசுத் தொழில் நிறுவனங்கள் மீதான மத்திய கட்டுப்பாட்டைக் குறைத்ததுடன் அரசுத் தொழில் நிறுவனங்கள் தமக்குத் தேவையான நிதியை அரசிடமிருந்து பெறும் முறை நீக்கப்பட்டு தமது வருமானத்திலிருந்தும் வங்கிக் கடன்கள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளும் முறை கொண்டு வரப்பட்டது. மேலும் உற்பத்தி, முதலீடு மற்றும் விலை போன்றவற்றை சந்தைச் சக்திகளைக் கொண்டே நிர்ணயம் செய்வதற்கான ஏற்பளிப்பானது 1984இல் கட்சியின் 12வது பேராயத்தில் வழங்கப்பட்டபோதும் இரும்பு, நிலக்கரி, பெற்றோலியப் பொருட்கள் போன்ற அடிப்படைத் தொழிற்துறைப் பொருட்களுக்கு மாத்திரம் அரசாங்கம் விலையை நிர்ணயித்தது. 1987இல் 14 கடற்கரை நகரங்கள் அந்நிய முதலீட்டை அதிகரிப்பதற்காகத் திறந்து விடப்பட்டதுடன் நேரடி அந்நிய முதலீடுகளிற்கும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கும் ஊக்குவிப்புக் களை அரசு வழங்கியது. 1984இல் நிலப் பயன்பாடு, ஊழிய மற்றும் கூலி முகா மைத்துவம் பொருளாதாரக் கட்டுமாணம், பொருளாதார முன்னேற்றம் தொடர்பான சட்டங்கள் கொண்டு வரப் பட்டன. 1986இல் வேலையாட்களிற்கான கூலி விகிதம், காப்புறுதி, மற்றும் நலச் சேவைகளிற்கான செலவுகள் என்பவற்றிற்கான சட்ட முன் மொழிவுகள் கொண்டு வரப்பட்டது. 1987இல் சீனாவின் ஏற்றுமதி சார் நிறுவனங்களின் உற்பத்தி முகாமைத்துவம், வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களிற்கான விசேட முகாமைத்துவம் மாநில ரீதியாக "மாநிலத் திட்டமிடல் ஆணைக்குழுவால் கொண்டு வரப்பட்டது. 1988இல் தாய்வான் முதலீட்டாளர்கள் சீனாவின் முதலீட்டில் கலந்துகொள்ளும் அனுமதி வழங்கப்பட்டது. 1989இல் மாநிலச் சுங்கத் திணைக்களத்தால் இறக்குமதிப் பொருட்களிற்கான வரிச் சலுகை வழங்கப்பட்டது. இத்தகைய சாதக மான போக்குகளால் அந்நிய முதலீடுகள் அதிகரித்துச் சென்றன.

வேளாண்மை வருமானமானது 1978 - 1984 காலப்பகுதியில் ஆண்டிற்கு 15% ஆக வளர்ச்சியடைந்தபோதும் 1985 - 1988, 1989 - 1991 காலப் பகுதியில் முறையே 5%, 2% ஆக வீழ்ச்சியடைந்தது. இதற்குரிய காரணத்தை நோக்கினால், அரச, நகர - கிராமப் புற நிறுவனங்கள் இலாபத்தைப் பெருக்கும் நோக்கில் பொருள்களின் விலையை உயர்த்தியதோடு தம்முடைய உற்பத்தியை அதிகரிப்பதற்காக கடன்களை வாங்கத் தொடங்கின. மேலும் விவசாய நிலங்களை வாங்கி அவற்றையும் தொழிற்துறைக்காக இணைத்துக் கொண்டது. இதனால் பண வீக்கம் அதிகரித்ததோடு வங்கிக் கடன்களை அதிகம் சார்ந்திருந்த நகர - கிராமப்புறத் தொழில் நிறுவனங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதால் கிராமப்புறத்தால் வேலையின்மை அதிகரித்தது மக்கள் நகரங்களுக்குக் குடி பெயர்ந்தனர்.

## சீர்திருத்த நிகழ்வுப்போக்கு மூன்றாவது கட்டம்

### (1991 முதல் இன்று வரை)

1992 ஒக்டோபரில் கட்சியின் 14வது பேராயம் "சீனப் பண்புகளுடன் கூடிய சோஷலிசப் பொருளாதாரத்தை நிறுவுதல்" என்கின்ற முடிவினை அறிவித்தது. இதன் முதன்மையான முடிவு யாதெனில் இதுவரை காலமும் இருந்துவந்த அரசுத் தொழிற்சாலைகள் மீதான அரசின் கட்டுப்பாட்டைக் கைவிடுவதாகும். இதன்படி பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய அல்லது பங்குதாரர் நிறுவனங்களாக மாற்றப்பட்டன. தொழிற்சாலைகளின் பங்குகள் தொழிற்சாலையின் பணியாளர்களுக்கு மட்டும் விற்கப்படும் என்று கூறப்பட்ட போதும் நிர்வாகிகளும் பணியாளர்கள் எனக் கருதப்பட்டதால் இலாபம் தரக்கூடிய தொழிற்சாலைகள் நிர்வாகிகளைச் சென்றடைந்தது. இவ்வாறு அரசியல் ரீதியாக சொத்து அபகரிப்புக்கள் நிகழ்ந்த போதும் அவை மூலதனச் சொத்தாக மாறியது. படிப்படியாக அரசின் அனைத்து சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் அனைத்தின் மீதான அரசுடமை மற்றும் கூட்டுடமை நீக்கப்பட்டது. 1998இல் கிராமங் களில் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்ட நிலத்தின் ஒப்பந்தக் காலம் 30 ஆண்டுகள் என மாற்றப்பட்டது. இதனால் உழவர்கள் நிலங்களைக் குத்தகைக்கு விடல், விற்றல் போன்றவற்றில் ஈடுபட்டனர். புதிய முதலாளிகள் தமது தொழிற்துறைக்காக இந்நிலங்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்தினார்கள். நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களின் பங்குகளை வாங்குமளவிற்கு உள்நாட்டு முதலீட்டாளர்களிடம் நிதி இல்லாததால் நாட்டின் புதிய பகுதிகளையும், தொழில்களையும் அந்நிய முதலீடிற்காக அரசு திறந்து விட்டது. 1986 - 1999 காலப் பகுதியில் 90% முதலீடுகள் கரையோரப் பகுதிகளில் செய்யப்பட்டது. இவ் அந்நிய முதலீட்டின் விளைவாக சீனப் பொருளாதாரம் ஓர் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாறியது. 1990இல் மொத்த GDP இல் 16% ஆகவிருந்த ஏற்றுமதி 2002இல் 26% ஆக வளர்ச்சியுற்றது.

இத்தகைய அம்சங்களோடு சீனாவில் மேற்கொள்ளப்பட்ட விலைச் சீர்திருத்தங்கள், வரிச் சீர்த்திருத்தங்கள் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான சீர்திருத்தங்கள் மற்றும் நிதி முறைமைகளுக்கான சீர்திருத்தங்கள் போன்றவற்றை சுருக்கமாக நோக்குவோம். இந்த வகையில் பொருளாதார தளத்திலுள்ள ஒட்டுமொத்த சீர்திருத்தங்களிற்கே பிரதானமாக (Main key) விலைச் சீர்திருத்தம் (Price reform) உள்ளது. சீர்திருத்தக்கொள்கைகளின் அறிமுகத்துடன் சீனாவின் பெரும்பாலான பொருட்களின் விலைகள் அரசினால் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் திறந்த பொருளாதாரத்துடன் இது மாற்றியமைக்கப்பட்டது. உள்நாட்டுச் சந்தையில் பொருட்களின் விலைகள் சர்வதேச் சந்தை

யின் விலையுடன் இணைந்த வகையில் விரிவடைந்தன. அடுத்து வரிச் சீர்திருத்தங்களை (Tax Reforms) நோக்கும்போது 1949 - 1952 காலப் பகுதியில் மத்திய மக்கள் அரசாங்கத்தின் நிர்வாக முறையின் கீழ் வரி அமைப்புக்களைக் கொண்டுவருவதற்கான திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டது. 1958 - 1978 காலப் பகுதியில் முதலாவது 5 ஆண்டுகாலத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் பிரதான நோக்கம் வரிகளை ஒரு வகையின் கீழ் ஒன்று சேர்த்தலாகும். மேலும் பொதுப் பொருட்களுக்கான வரி விதிப்பு தனிமுறைமையாக்கப் பட்டதுடன் இதில் பருத்தி ஆடைகள், தோற் பொருட்களுக்கான வரி தவிர்க்கப்பட்டது. 1973இல் சில வகையான வரிகள் உள்நாட்டரசின் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. விவசாயம், கால்நடை, வர்த்தகம் சார்ந்த வரிகள் அவற்றில் அடங்கும். 1979 - 1993 காலப் பகுதியில் நிறுவனங்களின் இலாபத்தின் ஒரு பகுதி வரியாகப் பெறப்பட்டது. இதற்குக் காரணம் பொருளாதார நிலையை உறுதிப்படுத்தவும் பொருளாதார நிறுவனங்களுக்கு நாட்டின் அபிவிருத்தியிலுள்ள பொறுப்பை உணர்த்துவதுமாகும். கைத்தொழில், வியாபாரவரி என்பன உற்பத்தி வரி, vat வரி எனப் பிரிக்கப்பட்டது. 1984இல் வற்வரி (vat) அறிமுகம் செய்யப்பட்டாலும் 1994 இல் இது விரிவுபடுத்தப்பட்டது. அடுத்து வெளிநாட்டு வர்த்தகம் சார்ந்த சீர்திருத்தத்தை நோக்கும்போது, ஏற்றுமதிக்கான சுங்க நடைமுறை குறைவாக அமுல்படுத்தப் பட்டதோடு சில வகையான ஏற்றுமதிப் பொருட்களுக்கான சுங்கவரி நீக்கப்பட்டது. இறக்குமதிக்கான சில உத்தரவாத திட்டங்கள் மீளமைக்கப்பட்டதோடு சர்வதேச வர்த்தக உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்து நிதிமுறைமைகளுக்கான சீர்திருத்தத்தை நோக்கும்போது, சோஷலிச சந்தைப் பொருளாதாரத்திற்கேற்ப சீனாவின் நிதி முறைமை மாற்றியமைக்கப்பட்டதோடு, சுதந்திர முறையிலான நாணயக் கொள்கையுடன் மத்திய வங்கியினால் இது அமுல்படுத்தப்பட்டது. திறந்த முறையிலான நிதிச் சந்தை முறை போட்டியுடன் கூடிய முறையில் இறுக்கமான நிர்வாகத்தைத்தின் கீழ் இருந்தது. இத்தகைய பேரின்ப பொருளியல் சார்ந்த சீர்திருத்தங்கள் சீனாவின் வளர்ச்சியில் கணிசமானளவு பங்கினைக் கொண்டிக்கின்றன.

இத்தகைய அரசியல், பொருளாதார சீர்திருத்தங்கள் சீனாவிற்கு சில பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தியது. அந்நிய முதலீட்டில் சார்ந்திருக்க முற்பட்டதால் உலக வணிக அமைப்பில் இணைய வேண்டிய நிலை ஏற்பட்டதோடு "இயல்பான வணிக உறவுகள்" (Normal Trade Business Relations) என்ற ஒப்பந்தத்தில் அமெரிக்காவோடு கையெழுத் திட்டது. இதன்படி தொழிற்துறை, வேளாண்மை துறைகளின் ஏற்றுமதி, இறக்குமதி, விநியோகம் ஆகியவற்றிலும் தகவல் தொடர்புகளின் முக்கியமான பகுதிகள் மொத்த விற்பனை, பராமரிப்பு, பழுது பார்த்தல் ஆகியவற்றிலும் அரசிற்கிருந்த ஏகபோக உரிமையைக் கை விட நேர்ந்தது. மேலும் கம்யூனிஸ்ட் கலைக் கப்பட்டதனால் கிராமப்புற மக்கள் பெற்று வந்த இலவச மருத்துவம், இருப்பிட வசதி, ஓய்வூதியம், தொடக்க, நடுநிலைக் கல்வி போன்றவற்றை இழக்க நேரிட்டது. இதன் விளைவு காசநோய், எயிட்ஸ் போன்றவற்றை இன்னும் கட்டுப்பத்த முடியாமல் இருப்ப தோடு பல உயர்களையும் காவு கொடுத்தது. அது மட்டுமல்லாமல் இருப்பிட வசதிகளை பலர் இழக்க வேண்டியேற்பட்டதோடு கல்விக் கட்டணங்களின் உயர்வால் கிராமப்புற மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் குறைவான கூலி, சமூகப் பாதுகாப்புக்கள் இல்லாமை, வேலை நாள்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, உத்தரவாதமற்ற தற்காலிக வேலை போன்றவற்றால் தொழிலாளர் வர்க்கம் பாதிக்கப்படுவதாக பல அமைப்புக்கள் குற்றம் சாட்டியபோதும்

ஏனைய வளர்ந்து வரும் நாடுகளில் தொழிலாளர்கள் வேலையற்று வறுமை நிலையில் உள்ளதைப் போல அல்லாத நிலை தோன்றியிருப்பது முதன்மையான விடயமாகும்.

இவ்வாறு சீனப் பொருளாதாரத்தின் வளர்ச்சிப் பாதையின் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட பல அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான சீர்திருத்தங்கள் குறிப்பிடக் கூடிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியபோதும் கூட ஒட்டுமொத்த சீனப் பொருளாதாரத்தை நோக்கும்போது, ஓர் நீடித்த வளர்ச்சிப் போக்கிற்கு இட்டுச் சென்றது என்பதை அவதானிக்க முடிகிறது. இத்தகைய சீர்திருத்தங்களைத் துணிவுடன் மேற்கொண்ட டெங்சியா பிங் ஐ சிறந்த தலைமைத்துவமிக்க தலைவராக கருதலாம். ஏனெனில் உலகின் முக்கிய நாடாகக் கருதப்படும் ரஷ்யா 1990களில் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு வந்தது. ஓர் இரவிற்குள் அரச துறைத்தொழில் முயற்சிகள் தனியார் துறைக்கு மாற்றப்பட்டதுடன் வெளிநாட்டு தொழில் முயற்சிகளை மிகக் குறைந்த கட்டுப்பாட்டுடன் உள்வாங்கிக் கொண்டது. இதன் விளைவு 1990 - 1995களில் வேலையின்மை, வறுமை, சமூகச் சீரழிவு, பயங்கரவாத நடவடிக்கை போன்றவற்றை ரஷ்யா எதிர்கொண்டது. ஆனால் சீனா படிப்படியாக ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்பட்ட சமூகப் பொருளாதார விளைவுகளை கவனத்திற்கொண்டே சீர்திருத்தங்களை அமுல்படுத்தியது. எந்தச் சந்தர்ப்பத்திலும் எத்தொழிலும் 25 வருட சீர்திருத்தங்களின் பண்பு கூட அரசாங்கம் கணிசமான பங்கைக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நிதானமான அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களே சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு காலாக அடித்தளமாக பக்கபலமாக அமைந்தது என்று உறுதியாகக் கூறலாம்.

## References


1. வில்லியம் ஹின்டன்
   "சீனா : ஒரு முடிவுறாத போர்"
   தமிழில் - கி.இரமேஷ்
   பக்கங்கள் 133, 144
2. Huijiong Wang
   "China's development and reform"
   Pages - 252 - 255, 272 - 285, 298 - 305
3. Wang Mengkui
   "China's economic transformation over 20 years"
   Pages - 396 - 398, 417 - 420
4. கலாநிதி. செ.சந்திரசேகரம்
   அரசியல் முறைமையும் பொருளாதார அபிவிருத்தியும் - அத்தியாயம் 04
   "சீனா - இந்தியா பொருளாதார அபிவிருத்தி - ஓர் ஒப்பீட்டு ஆய்வு
   முதுநிலை விரிவுரையாளர், பொருளியல்துறை
   யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
   (64-66), (63-65), (67-71)
5. இணையத்தளங்கள்
   keetru.com
   thinnai.com
   sinthanaiyalan.com
   thinakaran.com

# கிழக்கு ஆசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் வெற்றி பெற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் திறந்த சந்தைப் பொருளாதாரம் வெற்றி பெறாமைக்கான காரணம்

*Mr.A. Ajanthan,*
*Economics special,*
*2007/A/ 06*

இலங்கைப் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருகின்ற தென் ஆசியாவை சேர்ந்த சிறிய தீவுப் பொருளாதாரம் ஆகும். இலங்கை பிரதான எரிபொருள் நகர்வுக் கான கடற்பாதையில் உள்ள தீவு ஆகும். சர்வதேச பொருளாதார செழிப்புக்கள் மந்தங்கள் அதிர்வுகள் என்பனவற்றின் போக்கிற்கு ஏற்ப சாதகமான திசையிலும் பாதகமான முறையிலும் உள்ள ஊழியச் சந்தை முதலீடுகளையும் சந்தையையும் கொண்டுள்ளது. தென் ஆசியாவில் உள்ள நாடுகளின் பொருளாதார வெற்றிக்கு முன் இலங்கையுடன் சமத்துவமான வளர்ச்சி யினை கொண்டு இருந்தது. ஆனால் பின்னர் தென்கிழக்கு ஆசியாவின் பொரு ளாதரம் முன்னேறிக்கொண்டு இருந்தது. இலங்கையைப் பொறுத்தமட்டில் சுதந்திரம் அடைந்த காலத்தில் ஏறக்குறைய ஒரு தசாப்த காலத்திற்கு ( 1948- 1960 ) திறந்த பொருளாதார கொள்கையினை அறிமுகம் செய்தது. பின்னர் 1960 களில் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையினை அறிமுகம் செய்தது. பின்னர் ( 1965 - 1969 ) காலப் பகுதிகளில் ஒரு பகுதியான தாராளமயமா க்கல் நடவடிக்கையை தவிர்த்து அப்போது இருந்த அரசாங்கம் அறிமுகம் செய்தது. தாராள மயமாக்கங்களின் ஊக்குவிப்பு நடவடிக்கையாகவே 1967 இல் இலங்கை ரூபாயின் நாணய மதிப்பிறக்கம் 1968 இல் கொண்டுவரப்பட்ட அன்னியச்செலவாணி உரிமைச் சான்றிதழ் திட்டம் ( FEECS ) திறந்த பொது அனுமதி முறையினை (OGL) மீளமைத்தல் போன்றன அமைந்தன. எனி னும் ஏற்றுமதி துறையின் வளர்ச்சி குறைவு பணவீக்கம் ( 15 - 20 %) வேலையின்மை ( 24 %) கைத்தொழில் துறை வளர்ச்சி குறைவு ( 39 %), முழு வறுமை அதிகரிப்பு என்பன தாராளமயமாக்கல் என்பதில் இருந்த நம்பிக்கை யினையும் குறைவடையச் செய் தது. 1977இல் ஆட்சியை கைப்பற்றிய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பொருளாதாரத்தை திறந்து விட்டதன் மூலம் தாராளமயமாக்கல் கொள்கையினை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் அபிவிருத்தி அணுகு முறை யினை இலக்காகக் கொண்டு விலைக்கட்டுப் பாட்டு நீக்கம் வெளிநாட்டு வங்கிகளின் திறப்பு, அதிகரிப்பு, இறக்குமதிக் கட்டுப் பாட்டு நீக்கம் மிதக்க விடப்பட்டது. நாணய முறைமை அறிமுகம், இறக்குமதி கட்டுப் பாடுகளின் சீராக்கம் அறிமுகப்படுத்தப் பட்டன. எனினும் அபிவிருத்தி என்கின்ற இலக்கினை அடைய முடியவில்லை.

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை அடைந்து கொள்ள வேண்டுமாயின் பொருளாதார வளர்ச்சி என்பது முக்கியமானதாகும். ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சி எனப்படுகின்றது. Sunderatne (2005) என்பவரது கருத்துப்படி இலங்கையைப் பொறுத்த மட்டில் தாராளப் பொருளாதார கொள்கைக்கு கூடிய நிர்வாக இயலளவு ஆய்வு அபி விருத்தியை தூண்டும் விஞ்ஞான தொழில் நுட்ப கல்வியின் தரம், சட்ட மறுசீரமைப்பு, மனப்பாங்கு மற்றும் வேலைசார் ஒழுக்கம், வேலைக் கலாசார பொறிமுறைகள், சேமிப்பு மற்றும் முதலீட்டு நாட்டம் தேசிய பிரச்சினைகள் மீதான யதார்த்த அணுகுமுறை, வரலாற்று மனப்பான்மை தவிர்ப்பு பொருளாதார வளர்ச்சிக்கு அவசியம் என்றார்.

Juncoro (2006) என்பவரது கருத்துப்படி கிழக்காசிய நாடுகளைப் பொறுத்த மட்டில் மனித மூலதனம் மீதான முதலீடு, பிறப்பு வீதம், வீட்டுத்துறையின் சேமிப்பு, வருமானப் பகிர்வு போன்றனவும் பொருளாதார வளர்ச்சியினைக் கொண்டு வருகின்றன. இவற்றுடன் சமயம், சுகதேகியான ஊழியப் படை குடிசன வளர்ச்சி போக்கு போன்றனவும், பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்றன என்றார்.

ஆனால் இலங்கையைப் பொறுத்த மட்டில் திறந்த பொருளாதார கொள்கை அறிமுகம் செய்த காலத்தில் இருந்து கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவான பொருளாதார வளர்ச்சியினை கொண்டிருந்தனை பின்வரும் அட்டவணை காட்டி உள்ளது.

| *நாடுகள்* | *1985-1987* | *1990-1999* |
|---|---|---|
| *சீனா* | *10.09* | *8.46* |
| *தாய்லாந்து* | *8.76* | *6.68* |
| *தென்கொரியா* | *8.41* | *7.63* |
| *சிங்கப்பூர்* | *7.85* | *8.16* |
| *மலேசியா* | *7.57* | *6.911* |
| *இந்தோனேசியா* | *7.18* | *6.33* |
| *இலங்கை* | *4.42* | *4.54* |

Source: உலக வங்கி உலக அபிவிருத்தி குறிப்பு (2001)

இதுவும் இலங்கை திறந்த பொருளாதார கொள்கையில் வெற்றி பெற முடியாமைக்கு காரணம் ஆகும்

ஒரு நாடு திறந்த பொருளாதார கொள்கையினை அறிமுகம் செய்கின்ற சூழ்நிலை காணப்படின் அங்கு மூலதன திரட்சி என்பது அதிகரிக்கும் சூழ்நிலை காணப்பட வேண்டும் ஆனால் இலங்கையினை பொறுத்த மட்டில் அவ்வாறான ஒரு சாதகமான மூலதன திரட்தி ஏற்படுகின்ற சாதகமான சூழ்நிலை இல்லாமல் திறந்த பொருளாதார கொள்கையினை பின்பற்றி வந்தமையும் இலங்கை திறந்த பொருளாதார கொள்கையில் வெற்றி பெற முடியாமல் உள்ளதனை பின்வரும் அட்டவணை காட்டி நிற்கின்றது.

| நாடுகள் | 1990 | 1996 | 2000 | 2005 | 1990 -2005 Average |
|---|---|---|---|---|---|
| இலங்கை | 0.54 | 0.86 | 1.06 | 1.16 | 1.19 |
| சீனா | 0.98 | 4.69 | 3.20 | 3.53 | 3.65 |
| தென்கொரியா | 0.29 | 0.41 | 1.81 | 1.54 | 0.73 |
| மலேசியா | 5.30 | 5.04 | 4.19 | 3.03 | 4.7 |
| பிலிப்பைன்ஸ் | 1.20 | 1.83 | 2.95 | 1.15 | 1.61 |
| சிங்கப்பூர் | 15.1 | 10.5 | 17.8 | 17.2 | 12.8 |
| தாய்லாந்து | 2.86 | 1.29 | 2.74 | 2.57 | 2.35 |
| இந்தோனேசியா | 0.95 | 2.72 | -2.75 | 1.83 | 0.56 |

Gource:- World bank's inline tute base

இங்கு கிழக்காசிய நாடுகளின் FDI அதிகமாக இருப்பதனால் அதுவும் அவற்றின் அபிவிருத்திக்கு பங்காற்றியது எனலாம். எனினும் மூலதன திரட்சியில் அன்னிய உதவிகளும் உள்ளடங்குகின்றன. இலங்கையினை பொறுத்த மட்டில் 1961- 2005 காலப் பகுதிகளில் தலா வெளிநாட்டு உதவியாக 30.4 USS இணை பெற்றுள்ளது. ஆனால் இதே காலப்பகுதியில் சீனா 1.48 USS, மலேசியா7.62 USS சிங்கப்பூர் 5.5 USS, தாய்லாந்து 8.65 USS என்ற அளவுகளில் வெளிநாட்டு உதவியைப் பெற்று வந்துள்ளன. இங்கு இலங்கை கிழக்காசியாவினை விட அதிகளவு அன்னிய உதவிகளை பெற்று வந்த போதும் அது அதிகளவு அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு செலவழிக்காமல் சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதனால் அபிவிருத்தியினை அடைய முடியவில்லை. இதன் மூலம் கிழக்காசிய நாடுகள் சமூகநலச் செலவீடுகளை செய்யவில்லை என்ற முடிவுக்கு நாம் வரக்கூடாது மாறாக அவை சமூக நலச் செலவீடுகளை மக்களின் உற்பத்தி திறனை அதிகரிப்பதனை நோக்காக கொண்டு செயற்படுத்துவதனால் அவை இன்று அபிவிருத்தி என்ற இலக்கினை அடைந்து நிற்பதனை காணலாம்.

1950களில் கிழக்காசியா உட்பட அதிகமான நாடுகள் இறக்குமதி முதலீட்டு கைத்தொழில்களை மேற்கொண்டன. ஆனால் இலங்கை அவ்வாறான முயற்சி எதனையும் மேற்கொள்ளவில்லை காரணம் அக்காலப்பகுதியில் பெருந்தோட்டதுறையின் ஏற்றுமதி வருமான செழிப்பும் குறைந்த அரச தலையீடு இதற்கு காரணம் ஆகும். இந்த நிலை தொடர்ந்து காணப்பட்டதனால் கைத்தொழில் துறையின் வளர்ச்சி குறைவாக காணப்பட்டது. ஆனால் கிழக்காசியாவினை பொறுத்தமட்டில் கைத்தொழில்துறை மிக சிறப்பாக வளர்ச்சி பெற்று வந்ததனை காணலாம். இதனை பின்வரும் அட்டவணை காட்டி நிற்கின்றது.

| நாடு | வருடம் | விவசாயம் % | கைத்தொழில் | சேவைதுறை |
|---|---|---|---|---|
| சிங்கப்பூர் | 1985 | 1.0 | 34.5 | 68.8 |
| | 1995 | 0.2 | 33.3 | 65.3 |
| | 2002 | 0.1 | 33.6 | 66.6 |
| தென்கொரியா | 1985 | 12.6 | 41.0 | 46.5 |
| | 1995 | 6.2 | 43.2 | 50.6 |
| | 2002 | 4.0 | 40.9 | 55.1 |
| தாய்லாந்து | 1985 | 15.8 | 31.8 | 52.3 |
| | 1995 | 11.0 | 39.3 | 49.7 |
| | 2002 | 9.0 | 42.5 | 48.5 |
| இலங்கை | 1985 | 24.4 | 26.8 | 48.8 |
| | 1995 | 18.7 | 28.1 | 53.1 |
| | 2001 | 20.1 | 26.3 | 53.6 |
| மலேசியா | 1995 | 12.9 | 41.4 | 47.9 |
| | 2001 | 9.1 | 48.3 | 46.4 |

Gource: முதன்மை பொருளாதார குறிகாட்டிகள் 2003 ஆசியஅபிவிருத்தி வங்கி

இவ் அட்டவணையினை பார்க்கும் போது இலங்கையினை பொறுத்த மட்டில் சேவைத்துறையானது உயர்வாக காணப்படினும் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கு ஏற்றவகையில் கைத்தொழில் துறையானது வளர்ச்சியடைந்து இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. புடவைக் கைத்தொழில்களின் ஏற்றுமதி அதிகளவு பங்காற்றிய போதும் இதற்கான மூலப்பொருட்கள் அதிகம் வெளிநாடுகளில் தங்கி இருப்பதனால் தேறிய இலாபம் என்பதும் குறைவடைந்து காணப்பட்டது. குறிப்பாக புடவை, ஆடைகளின் ஏற்றுமதி 1977 இல் 2.1 வீதமாக காணப்பட்டதும் 2005 இல் இது 45.6 வீதமாகவும் உயர்வடைந்தது எனினும் தேறிய இலாபம் என்பது விவசாய பொருட்களின் ஏற்றுமதியிலும் பார்க்க குறைவாகவே காணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கான குறிகாட்டிகளில் ஒன்று தலா வருமானம் ஆகும். குறிப்பாக 1962இல் இலங்கை, தாய்லாந்து, தென் கொரியா போன்ற நாடுகளின் தலா வருமானங்களை விட இலங்கையின் தலா வருமானம் உயர்வாக காணப்பட்டது. ஆனால் இப்போது இலங்கையின் தலா வருமான இடைவெளியும் கூடியதாக இருப்பதனை பின் வரும் அட்டவணையின் ஊடாக நிரூபிக்கலாம்

தலா வருமானம் US$

| நாடுகள் | 1962 | 1980 | 2000 | 2005 |
|---|---|---|---|---|
| இலங்கை | 150 | 280 | 810 | 1170 |
| சிங்கப்பூர் | 450 | 4850 | 23030 | 26630 |
| தென்கொரியா | 110 | 1810 | 9800 | 15880 |
| தாய்லாந்து | 120 | 730 | 1990 | 2720 |
| கொங்கொங் | 530 | 5740 | 26980 | 27690 |

மூலம் : World bank tata base

இலங்கை திறந்த பொருளாதார கொள்கையில் வெற்றி பெற முடியாமைக்கான மற்றுமொரு காரணியாக வறுமை உயர்வாக காணப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. வறுமையினை குறைப்பதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட வறுமை ஒழிப்பு திட்டம் மற்றும் சமூக நலன் புரிச் சேவைகள் என்பன தனியே வறுமை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாக இருந்ததே தவிர வறுமையை இல்லாது ஒழிக்க மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கையாக காணப்படவில்லை

வறுமை மட்டத்தில் உள்ள சனத்தொகை வீதம்

| நாடுகள் | வருடம் | முதல் வருடம் | இறுதி வருடம் | மாற்றம் |
|---|---|---|---|---|
| இந்தோனேசியா | 1972 – 1982 | 58 | 17 | – 41 |
| மலேசியா | 1978 – 1987 | 37 | 14 | – 23 |
| சிங்கப்பூர் | 1972 – 1982 | 31 | 10 | – 21 |
| தாய்லாந்து | 1962 – 1986 | 59 | 26 | – 30 |
| இலங்கை | 1963 – 1982 | 37 | 27 | – 10 |

மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியீடு

கிழக்காசிய நாடுகளின் வெற்றிக்கு மற்றுமொரு காரணியாக இந்நாடுகளின் முதலீடுகள் அதிகமாக இருந்தது மட்டுமன்றி தேர்ந்தெடுக்கப்பட்ட சிலதுறைகளின் மீது பெரியளவாக முதலிடப்பட்டது. போக்குவரத்து, தொடர்பாடல், துறைமுகங்கள் மின்சாரம் என்பவற்றில் முதலீட்டாளர்கள் கிழக்காசியாவில் போட்டித் தன்மையை உருவாக்கினர்.

உ+ம் சிங்கப்பூர் எயர்லைன் உலகத்தில் முதன்மையான விமான சேவை ஆகும்

மேலும் கிழக்காசியாவில் அரச கொள்கைகள் கூட சந்தைப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதாக காணப்பட்டது. உதரணமாக கொரியாவில் பாரியளவிலான கைத் தொழில்கள் அரசுக்கு சொந்தம், சிங்கப்பூரில் வீடமைப்பு சபை அரசிற்கு உரியதாகும் இவை எல்லாம் இலாபத்தில் இயங்கி தனியார் நிறுவனங்களையும் இணைத்து வெற்றி பெற்றன. ஆனால் இலங்கையில் அவ்வாறான நிலை காணப்படவில்லை.

இது வரை இலங்கை திறந்த பொருளாதார கொள்கையில் வெற்றி பெறாமைக்கான பொருளாதார காரணிகளை நோக்கினோம். ஆனால் இவை மட்டுமன்றி பல் வேறு அரசியல் காரணிகளும் இங்கு செல்வாக்கு செலுத்தி இருப்பதனை காணலாம். அரசியற் காரணிகளை பின்வருமாறு நோக்கலாம்.

⊘ இனமுரண்பாடும், யுத்தமும்

இலங்கையில் கடந்த 30 வருடங்களாக ஏற்பட்டு வந்த யுத்தங்காரணமாக வடக்கு கிழக்கின் பொருளாதார வளங்களை

அழித்ததுடன் மத்திய அரசும் யுத்தத் திற்காக அதிகளவு நிதிகளை செலவு செய்து விட்டது. 1978 இன் பின் ஜெயவர்தனாவின் ஆட்சியில் இன முரண்பாடும் யுத்தமாக பரிணமித்து 1990களின் பிற்பகுதியில் மோதலும் பொருளாதாரமும் ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்பினை கொண் டிருந்தன மோதலினால் கொழும்பிலும் அதன் சூழலிலுமான பகுதிகளில் மேற் கொள் ளப்பட்ட தாக்குதல்களும் பொருளாதார பின்னடைவுக்கு காரணமாயிற்று.

- 1996 ஜனவரி இலங்கை மத்திய வங்கி மீதான தாக்குதல்
- 1996 பிற்பகுதியில் உலக வர்த்தக மையம் மீதான தாக்குதல்
- 1997இல் கொழும்புக்கு வெளியே உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீதான தாக்குதல்
- 2001 இல் கட்டுநாயக்கா விமான நிலையம் தாக்குதல்

மேலும் நாட்டின் பல பகுதிகளில் ஏற்படும் தாக்குதல் என்பவற்றை கூறலாம்.

தற்போது யுத்தம் முடிவடைந்த நிலை யில் இனி அபிவிருத்தியினை நோக்கிய பாதையில் இலங்கை பொருளாதாரம் வள ரும் என்ற எண்ணம் எம்மத்தியில் எழலாம். ஆனால் இன்னமும் பொருளாதார ரீதியில் இனப் பேதப்படுத்தப்படுதல்கள் காணப்படு வதனால் அபிவிருத்தியினை அடைவதற்கு அதுவும் தடையாக அமைந்துவிடும். உதார ணமாக வடக்கில் நீண்டகாலமாக காணப்ப டும் விமானநிலையம் ( பலாலி ) திருகோண மலை துறைமுகம் பற்றி தற்போது அரசாங் கம் கவனத்தில் கொள்ளாது அம்பாந் தோட்டையில் உட்கட்டுமான வசதிகளை அமைப்பது இனரீதியான பேதப்படுத்தலை வெளிக்காட்டி நிற்கின்றது.

- தூர நோக்கற்ற அரசியல் வாதிகள்

இலங்கையினைப் பொறுத்த மட்டில் நீண்டகால நோக்கமாக கொண்ட கொள்கை களை வகுக்கக் கூடிய அரசியல் வாதிகள் எவரும் காணப்படவில்லை இலங்கையினை ஆட்சி செய்த அரசியல் வாதிகள், தமது ஆட்சியினை தக்க வைப்பதனை நோக்க மாக கொண்டு செயற்பட்டனரே தவிர நாட்டின் அபிவிருத்தி பற்றி அக்கறை கொள்ள வில்லை

உ-ம் குட்டிச் சிங்கப்பூர்
சமுர்த்தி திட்டம்
மகிந்த சிந்தனை

போன்றவற்றை கூறலாம்

ஆனால் சிங்கப்பூரினை பொறுத்தமட் டில் Leekuan yew நீண்ட காலத்தில் ஆட்சி யில் இருந்து தூர நோக்கோடு கொள்கை களை வகுத்தமையை இங்கு கூறலாம்.

- இருகட்சி ஆட்சி முறையும், பொரு ளாதார கொள்கை மாற்றமும்

இலங்கையில் UNP,SLFP என்பன மாறி மாறி ஆட்சியினை அமைத்ததனால் கொள்கை மாற்றங்களும் அதற்கு ஏற்ற வகையில் மாற்றப்பட்டதனால் திறந்த பொரு ளாதாரதத்தில் வெற்றி பெற முடியாமல் போய்விட்டது.

மூலம்: பொருளாதார அபிவிருத்தி செல்வழி (2008)

- தாராள ஜனநாயகம்

| காலப்பகுதி | ஆட்சி மாற்றம் | பொருளாதார கொள்கை | சராசரி பொருளாதார வளர்சி |
|---|---|---|---|
| 1951- 1956 | ஐக்கியதேசிய கட்சி | திறந்த பொருளாதாரம் | 3.7 |
| 1957-1964 | சுதந்திரக்கட்சி | மூடப்பட்ட பொருளாதாரம் | 3.6 |
| 1965-1970 | ஐக்கியதேசிய கட்சி | பகுதி அளவிலான திறந்த பொருளாதாரம் | 4.7 |
| 1971 - 1977 | சுதந்திரக்கட்சி | பூரணமாகமூடப்பட்ட பொருளாதாரம் | 2.9 |
| 1978-1988 | ஐக்கியதேசிய கட்சி | திறந்த பொருளாதாரம் | 5.0 |
| 1989-1994 | ஐக்கியதேசிய கட்சி | தீவிர திறந்த பொருளாதாரம் | 5.0 |
| 1995-2001 | பொதுஜன ஐக்கிய முன்னனி | திறந்த பொருளாதாரத்திற்கு மனிதமுகம் | 4.2 |
| 2002-2004 | ஐக்கிய தேசிய கட்சி | திறந்த பொருளாதாரம் | 5.1 |
| 2005-2007 | சுதந்திரக்கட்சி | தேசிய பொருளாதாரம் | 6.9 |

இலங்கையினை பொறுத்த மட்டில் தாராள ஜனநாயகத்தை கடைப்பிடித்தது இத னால் அதிகளவு இராணுவ செலவீனங்கள் அரசியல் உறுதியின்மை என்பன ஏற்பட்டன ஆனால்கிழக்காசிய நாடுகளை பொருத்த மட்டில் ஜனநாயக சுதந்திரத்தை கட்டுப் படுத்தி அதன்மீதி அபிவிருத்தியை ஏற்படுத்து வதற்கான உறுதி தன்மையை ஏற்படுத்தி உள்ளதனைக் காணலாம்.

ஜனநாயகத்தின் இராணுவ செலவு

| நாடுகள் | அளவு | (1989-1999) |
|---|---|---|
| இலங்கை (1965-2005) | 6.6 | 3.4 |
| சிங்கப்பூர் (1965-1984) | 0.2 | 4.7 |
| தென்கொரியா (1972- 1987) | 0 | 2.85 |
| சீனா (1962- 2005) | 0 | 2.1 |
| மலேசியா (1970-1991) | 5 | 2.54 |

மூலம்: சந்திரசேகரம் சீனா -இந்தியா அபிவிருத்தி ஒப்பிட்டு ஆய்வு

இங்கு சிங்கப்பூரில் இராணுவ செலவு அதிகமாக காணப்படுகின்றது. தேசிய பாதுகாப்பிற்காக இராணுவ செலவினை அதிகரித்துள்ளதனை காணலாம்.

⃠ மிகையான அரச தலையீடு

இலங்கைப் பொருளாதாரத்தில் அதிகளவு அரச தலையீடு காணப்பட்ட தனால் தனியாருக்கான வாய்ப்புகள் குறைந் தது டன் அரசும் நட்டத்தில் செயற்படுகிறது.

உ+ம் மத்திய வங்கி, இலங்கை வங்கி என்பன அரசியல் வாதிகளுக்கும், அவர்களின் உறவினர்களுக்கும் வழங்கிய மில்லியன் அளவான அறவிட முடியாக் கடன்கள் காரணமாக வினைத்திறமையை இழந்து அரசநிதியில் இயங்குகின்றன.

புகையிரத நிலையம் மின்சாரம் என்பனவும் நட்டத்தில் இயங்குவதற்கு அரச தலையீடும் காரணமாக ஆகின்றது.

⃠ கொள்கைத் தெரிவுகளில் பின்னடைவு

கிழக்காசிய நாடுகளின் அரசியல் தலைவர்கள் அவிவிருத்தி அடைந்த நாடுகளின் கொள்கைகளை அதிகம் பின்பற்றாமல் தமது பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் கொள்கைகளை பின்பற்றினார்.

Leckvanyew சிங்கப்பூரில் நடைமுறைப்படுத்திய கொள்கைகள் (அரசமொழியாக ஆங்கில மொழி பிரயோகம்)

ஆனால் இலங்கையின் அரசியல் வாதிகளின் பிரித்தானியாவின் பொருளாதார கொள்கைகளை அதிகம் பின்பற்றியமையினை இங்கு கூறலாம். பிரித்தானியாவுடன் கொள்ளும் தோழமையே இலங்கைக்கு மிகப் பெரும் பாதுகாப்பு என D.S சேனநாயக்கா வகுத்த் கொள்கையே 1948-1956 காலப்பகுதியிலும் பின்னர் வந்தவர்களும் அத்தகைய தலைமையில் கொள்கைத் தெரிவுகளை மேற்கொண்டமை

⃠ உள்நாட்டு அரசியலும், புவிசார் அரசியலும்

உலகின் பனிப் போரின் பின்னர் அமெரிக்கா போன்ற முதலாளித்துவநாடுகளை கவர பல தந்திரோபாயங்களை மேற்கொண்டன. அதன் பயனாக சீனாவிற்கு எதிராக தாய்வானையும் இந்தியாவிற்கு அண்மையில் சிங்கப்பூரையும் வட கொரியாவிற்கு எதிராக தென்கொரியாவையும் தம் அரசியல் நலன்கருதி அழைத்தன. இவ்வாறான ஒரு நேசக்கரம் இலங்கைக்கு இல்லாமல் போனமையும் அபிவிருத்தியை அடைய முடியாமல் போய் விட்டமையும் கவலைக்குரியதாகும். 1990 இல் ரஷ்யா உடைவிற்கு பின்னர் பனிப்போர் முடிவடைந்து விட்டது.

⃠ பொருளாதார இலக்கினை விட அரசியல் இலக்குகளிற்கு முக்கியத்துவம் கொடுத்தமை

இலங்கையில் அறிமுகப்படுத்திய பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் பொருளாதார நோக்கத்தை முதன்மையாக கொண்டிருக்காது அரசியல் நோக்கத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தது.

⃠ 1960களில் அதிகரிக்கப்பட்ட கல்விச் செலவீனங்கள் பெரும்பாண்மை மக்கள் மத்தியில் வேலையின்மையை ஏற்படுத்தி அரசுக்கு எதிராக வன்முறையை ஏற்படுத்தியது இது 1971இல் புரட்சியாக வெடித்தது

⃠ பல்கலைக்கழக தரப்படுத்தலினால் சிறுபாண்மை மக்கள் அரசிற்கு எதிராக புரட்சியை ஏற்படுத்தியமை.

⃠ விவசாய அபிவிருத்தி மீதான குடியேற்றத் திட்டங்கள் பெரிய நிலையங்களை சிறு துண்மங்களாக்கி மக்களுக்கு வழங்கினர். இவை அனைத்தும் அரசியல்வாதிகளும் , அரசியல் கட்சிகளும், தமது வாக்கு வங்கியை தக்கவைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அரசியல் இலாபங்கள் ஆகும்.

⃠ அரசின் குறைந்த இயல் தகவு

அரச செயற்றிட்டங்கள் தூரநோக்குள்ளவையாக இருக்க வேண்டும். ஆனால் இலங்கையில் அவ்வாறான நிலை காணப்படவில்லை.

* சுய சார்பு - ஸ்ரீமா பண்டார நாயக்கா (1970-1977)

* Becoming another Sungapure - ஜெயவர்த்தன (1978-1979)

* Gam Uolawa -Janasaniga (1989-1993)

* Open .E.conomy with a human face- சந்திரிக்கா (1994-1999)

இவை அனைத்தும் தூர நோக்கோடு மேற்கொள்ளப்பட்டாலும் அடையப்படாத இலக்குகளாக உள்ளன.

ஆனால் கிழக்காசிய நாடுகளை பொறுத்தமட்டில் "இலக்குகளை அடையும் இயல் தகவினை கொண்டிருந்ததனை காண லாம். இந்நாடுகளின் அரசுகள் சில தெரிந்து எடுக்கப்பட்ட தலையீடுகள் மூலம் கைத் தொழில் இலக்குகள், மேற்பார்வை, ஏற்று மதி போன்ற நடவடிக்கையில் அரசு ஈடுபட்ட தனால் சிறந்த நிறுவனங்களை உரு வாக்கின.

சிங்கப்பூர் -பொருளாதார அபிவிருத்தி

யப்பான் - சர்வதேச வர்த்தகத்திற்கு கைத் தொழிலுக்குமான அமைச்சு

கொரியா- பொருளாதார திட்டமிடல் சபை

தாய்வான் - Council.for e.conomic Planning an development

என்பவற்றைக் கூறலாம்.

முடிவுரை

இந்த வகையில் தொகுத்து நோக்கும் போது 1960 களின் முன்னர் பின்னணி வகித்த கிழக்காசிய நாடுகள் 1970களிற்கு பின்னர் பொருளாதார அபிவிருத்தி காரணி களில் இலங்கையினை விட முன்னனி வகுத்தது மட்டுமல்லாமல் தெற்காசிய நாடு களையும் பின்னுக்கு தள்ளி அனைத்து குறிகாட்டிகளிலும் இன்று வெற்றி நடை போட்டு கொண்டு செல்கின்றது.

இலங்கையினை பொறுத்த மட்டில் கிழக்காசியநாடுகளுக்கு கிடைக்க பெறாத பல சாதகமான காரணிகளை கொண்டிருந் தும் திறந்த பொருளாதார கொள்கையில் வெற்றி பெறவில்லை. உதாரணமாக இயற்கை வளம் அன்னிய உதவிகள் பெருந் தோட்டப்பயிர் செய்கை, புவியிற் காரணிகள் என்பவற்றை கூறலாம். மேலும் 1960 களிற்கு முன்னர் சிங்கப்பூர் தான் இலங்கையினை போல வரவேண்டும் என்ற எண்ணத்தினை கொண்டிருந்தது. ஆனால் 1978இல் J.R ஜெயவர்த்தனா இலங்கையினை குட்டிச் சிங்கப்பூராக மாற்ற முயன்றார். இங்கு ஒரு விடயத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண் டும். சிங்கப்பூர் அரசு மற்றும் பொருளாதார கொள்கைகள் என்பன சிங்கப்பூர் போன்ற ஒரு நகர அரசிற்கு பொருந்தக் கூடியதாக இருக்கலாம். மாறாக J.R ஜெயவர்த்தன அவ்வாறான கொள்கைளை இலங்கைக்கு பிரயோகிக்க முயன்றது இலங்கை அபிவி ருத்தியில் வெற்றி பெற முடியாமைக்கு காரணமாகிவிட்டது என்றே கூறமுடியும் மேலும் சிங்கள பௌத்த மதத்தை மற்றும் சிங்கள மொழியினை சிஙகள இனத்தை முன்னிலைப்படுத்தி முயன்ற சிங்கள அரசியல் வாதிகள் மட்டும் தான் காரணம் என்று கூறிவிடமுடியாது. மாறாக பெரும் பாண்மை சிங்களமக்கள் மத்தியில் சிறு பாண்மை இனத்தவராக தமிழர்களின் அரசியல் தலைவர்கள் 50:50 (ஜீ.ஜி பொன்னம்பலம்) கோரிக்கையும் அரசியல் கட்சிகளும் சேர்த்து இனமுரண்பாட்டை தோற்றுவித்தமையும் இலங்கை பொருளா தாரத்தை வலுப்படுத்த தவறியவர்கள் என்றே கூறவேண்டும். மேலும் கிழக்காசிய நாடுகளை பொறுத்தமட்டில் அனைத்து அபிவிருத்தி குறிகாட்டியாலும் விருத்தி பெறா மையும் அரசியல் தலைவர்களும் பொருளா தார கொள்கையும் அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் சாதகமாக அமைந்தமையும் இன்று அவற்றின் வெற்றிக்கு காரணமாகி விட்டது. எனவே இலங்கை இவ்வாறான வெற்றி பெற்ற நாடுகளின் அனுபவங்களை ஒரு படிப்பினையாக கொண்டு எமது நாட்டின் அரசியல் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் நல்லதொரு பணிக்குழுக்களையும் தொழில் முயற்சியாக்கி எதிர்கால இலங்கை யில் அபிவிருத்தியாளர்களையும் புத்திஜீவி களையும் உருவாக்கி அபிவிருத்தி இலங்கை யாக மாற்ற வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

1) பொருளாதார அபிவிருத்தி செய்வழி (இலங்கையின் அனுபவத்தினை ஆதாரமாக கொண்ட ஒரு உலாவல் பேராசிரியர் ராகலிங்கம் பாலகிஸ்ணன் சேவை விதப்பு வெளியீடு 2008 (P.P169-189)

2) சமூக மாற்றம் பொருளாதார உறுதியின்மை இலங்கையின் அனுபவம் செ.சந்திர சேகரம் (P.P. 384-399)

3) இதழ் 12 ஜனவரி மார்ச் 2009 ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும் ஆசியாவில் இலங்கையின் அனுபவம் முன்னர் செ.சந்திரசேகரம் (P.P 4-30)

4) இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

5) கலாநிதி செ. சந்திரசேகரம் 2009 சீனா- இந்தியா பொருளாதார அபிவிருத்தி ஒப்பீட்டாய்வு

5) நவ பொருளியலாளன் யூலை 2001, மலர் பொருளியல் வணிக சஞ்சிகை 2001

பொருளியல் நோக்கு (மார்ச் 1994)

# GSP + உம் இலங்கைப் பொருளாதாரமும்

*Mr.V.Thuvakaran,*
*Economics special,*
*2007/A/273,*

Gsp என்பது ஆங்கிலத்தில் Generalized Seystem of Preference என்ற விரிந்த பொருளின் சுருங்கிய (Abbrevation) பதமாகும். Gsp தமிழில் பொதுமைப்படுத் தப்பட்ட முன்னுரிமைத் திட்டம் எனப் பொருள் கொள்ளலாம். பொதுமைப்படுத் தப்பட்ட முன்னுரிமைத் திட்டம் Gsp என்பதற்கான விளக்கத்தினை பின்வருமாறு தரலாம்.

27 நாடுகளை உள்ளடக்கிய மிகப் பலம் வாய்ந்ததும் பரந்த சந்தையைக் கொண்டதுமாக ஐரோப்பிய யூனியன் (Eu) விளங்குகின்றது. ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகள் தமக்கிடையில் வர்த்தகத் தடைகளை நீக்கியுள்ளதுடன் ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகளைத் தளர்த்தி சுதந்திரமான வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன.

ஐரோப்பிய யூனியன் அமைப்பானது தமது அங்கத்துவ நாடுகளுடன் மட்டுமல்லாது அங்கத்துவமற்ற நாடுகளுடனும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன. அந்தவகையில் 176 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்காத இந்நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் போது ஐரோப்பிய யூனியன் அமைப்பின் நாடுகளால் ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைக்கு இந்நாடுகளின் பொருட்கள் உட்படும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமது பொருட்கள் ஏற்றுமதியின் போது ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தீர்வைக்கு உட்படுமாயின் அப்பொருட்கள் இறக்குமதி செய்யும் நாட்டில் தீர்வையுடன் கூடி விலை அதிகரிக்கும்.

இதனால் அந்நாட்டில் மற்றைய நாடுகளின் பொருட்களுடன் போட்டி போட முடியாமல் இருக்கும். இத்தகையவொரு சூழ்நிலையில் ஐரோப்பிய யூனியனுக்கான அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களின் ஏற்றுமதி தடைப்படும். அல்லது உற்சாகம் குன்றும் அல்லது போட்டி போட முடியாமல் போகும். ஐரோப்பிய யூனியன் அமைப்பானது மேற்படி நிலைமைகளை கவனத்தில் எடுத்தும் வேறும் சில நோக்கங்களின் அடிப்படையினையும் கருத்தில் கொண்டு அபிவிருத்தி அடைந்த நாடுகளுடான வர்த்தகத்தின் போது அவர்களுக்கு

தீர்வைகளை விதிக்கும் முறையில் சலுகை களை வழங்குவதற்கான முன்னுரிமைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தின. அந்த முன்னுரிமைத் திட்டமே Gsp என்பதாகும்.

ஐரோப்பிய யூனியனுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளுக்கு அந்நாட்டின் ஏற்றுதிப் பொருட்களுக்கு தீர்வை விலக்கு, தீர்வைச் சலுகை என்பவற்றை வழங்குவதற்கான திட்டமாக Gsp என்பது ஐரோப்பிய யூனியனால் முன் மொழியப்பட்டது.

இப் பிரதான நோக்குடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வறுமைக் குறைப்பு, நிலைத்து நிற்கும் அபிவிருத்தி, நல்லாட்சி என்பவற்றை ஏற்படுத்தும் ஒரு விதமான துணை நோக்குடனும் Gsp சலுகைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

எனவே ஐரோப்பிய யூனியனுடன் அதற்கு வெளியில் இருந்து அதனுடன் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் மூன்றாம் மண்டல நாடுகளுக்கு இது வரப்பிரசாதமாக அமைந்தது.

2004ம் ஆண்டு இலங்கை சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்டபோது இலங்கைக்கு ஐரோப்பிய யூனியன் Gsp+ திட்டடத்தினை அறிமுகம் செய்து தீர்வைக் குறைப்பு (reduced traiffs) தீர்வைச்சலுகை என்பதினை இலங்கைக்கு வழங்கியது. ஆசியாவில் Gsp+ திட்டத்தினால் நன்மை அடையும் ஒரே நாடு இலங்கையாகும்.

## Gsp+ இனால் கிடைக்கும் பொருளாதார நன்மை

Gsp+ அல்லது தீர்வை முறையில் சலுகை அடிப்படையான ஏற்றுமதி வர்த்தகமொன்றில் இலங்கையானது ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் ஏற்றுமதி வர்த்தகத்தில், ஈடுபடலானது. இது பொருளாதார நன்மைகளை இலங்கைக்கு வழங்கி வருகின்றது. இச் சலுகைத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி ஆடைக் கைத்தொழில் மட்பாண்டத் தொழில் என்பன மிகவும் செழிப்பான துறைகளாக வளர்ந்துள்ளன.

7000 பொருட்கள் வரையிலான ஏற்றுமதி தீர்வைச் சலுகைகள் Gsp+ திட்டத்தினால் இலங்கைக்கு கிடைத்த போதும் மேற்படி இருதுறைகளும் பாரிய வளர்ச்சி கண்டுள்ளன. மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10வீத பங்கினை ஏற்றுமதி ஆடைக் கைத்தொழில் வழங்குகின்றது.

அது மட்டுமல்லாமல் ஏறக்குறைய 25000 பேருக்கு மேல் இத்தொழில் வேலை வாய்ப்பினையும் வழங்கியுள்ளது. வடகிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் குறிப்பாக கிராமப் புறங்களிலும் ஆடைத் தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்ட்டு கிராமப்புற வேலையின்மையினையும் இது தணித்துள்ளது.

புதிய முகாமை, புதிய தொழில் நுட்பம் என்பவற்றினை நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் வறுமையினையும் தணித்துள்ளது.

இவையாவற்றுக்கும் மேலாக இலங்கைக்கு ஒரு பில்லியன் US$ க்கு மேலாக அன்னிய செலவாணியினை உழைத்துத் தரும் மூன்று பெரும் துறைகளினுடைய வருமானமானது அதிகளவில் பெண்களினால் ஈட்டப்படுகின்றது.

எனவே அதிகளவு பெண்களுக்கு வாய்ப்பினை வழங்கும் துறையாகவும் ஏற்றுமதி ஆடைக் கைத்தொழில் காணப்படுகின்றது. 2008ம் ஆண்டு ஆடைக் கைத்தொழில் துறையானது 3.5 பில்லியன் டொலர் அன்னியச் செலவாணியினை இலங்கைக்கு ஈட்டித் தந்தது.

இதில் 43வீதம் வருமானம் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு Gsp+ திட்டத்தின்

மூலம் ஏற்றுமதி செய்ததினால் கிடைத்தது. சுருக்கமாக கூறின் 7000 பொருட்களுக்கான Gsp+ சலுகைத் தீர்வை 900 மில்லியன் யூரோ வருமானமொன்றினை பெற்றுக்கொள்கின்ற ஓர் சலுகைத் திட்டாகும்.

### 30வருடகால யுத்த முடிவும் Gsp+ உம்

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தில்இலங்கை அரசாங்கம் வெற்றியினை அடைந்த போது ஐரோப்பிய யூனியன் Gsp+ இனை ஒரு அரசியல் ஆயுத மாக பாவிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டது.

யுத்தத்தின் இறுதி நாட்களில் ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு மாறாக இலங்கை அரசாங்கம் நடந்து கொண் டுள்ளது. என ஐரோப்பிய யூனியன் இலங்கை அரசாங்கத்தின் மீது பழி சுமத்தியது. அதாவது ஐக்கிய நாடுகளின் பிரகடனமான

1. சித்திரவதைக்கு எதிரான
2. சிறுவர் உரிமைக்கு எதிரான
3. அரசியல் சிவில் உரிமைக்கு எதிரான

செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டதாகக் கூறி 2010 ஜனவரி மாதத்தில் இருந்து Gsp+ சலுகையினை இலங்கைக்கு வழங்க மறுப்ப தாக எச்சரிக்கையொன்றினை ஐரோப்பிய யூனியன் நாடுகள் விடுத்துள்ளன.

வறுமையின் பிரபுக்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன மூன்றாம் உலக நாடுகளுக்கு கடனுதவி களை வழங்கும் போது அந்நாடுகளின் அரசியல், பொருளாதாரவிடயங்களிலும் உள்நாட்டு அரசியலிலும் நிபந்தனைகளை விதிப்பதும் நிபந்தனைகளுக்கு அடிபணிய வைப்பதும் அவற்றின் செயற்பாடுகளாக இருந்து வந்துள்ளமையினை வரலாறுகள் காட்டி நிற்கின்றன.

வர்த்தகச் சலுகைகளை வழங்கி அதனூடாக ஐரோப்பிய யூனியன் நாடுகளும் புதிய வடிவில் வறுமையின் பிரபுக்கள் போலவே நடந்து கொள்ள விரும்புவதனை Gsp+ சலுகையினை இலங்கை தொடர்ந்து பெற அது விதிக்கும் நிபந்தனைகள் பழைய கதையினை ஞாபகப்படுத்துகின்றன. Gsp+ சலுகையை இலங்கை இழந்தாலும் அது ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் வர்த்தகத் தில் ஈடுபடமுடியும். ஆனாலும் சலுகைகள் அற்ற வகையில் ஏனைய நாடுகளுடன் போட்டி போட வேண்டியிருக்கும். குறிப்பாக குறைந்த விலையில் ஐரோப்பிய யூனிய னுக்கு ஏற்றுமதி செய்யும் சீனா போன்ற நாடுகளுடனும் போட்டி போட வேண்டியி ருக்கும். அது சாத்தியமற்ற ஒன்றாகும்.

தற்போதைய நிலையில் உலகப் பொருளாதார நிதி நெருக்கடியும் வளர்ச்சி அடைந்த நாடுகளின் மந்தமான பொருளா தார வளர்ச்சியும் இலங்கையின் ஏற்றுமதித் துறையினை பாதித்துள்ளது.

இந்நிலையில் ஐரோப்பிய யூனியன் ஒற்றைச் சந்தை (Single maket) யின் ஏற்றுமதி சலுகை வாய்ப்பினை Gsp+ இலங்கை இழக்க நேரிடின் அது பொருளா தாரப் பாதிப்பை ஏற்படுத்தும்.

இலங்கை மத்திய வங்கி அதிகாரி களின் கணிப்பின்படி Gsp+ சலுகைத் திட்டத்தின் மூலம் 116.5 மில்லியன் US$ வருமானம் 2008ம் ஆண்டில் கிடைத்தது. இது இலங்கையின் 2008 ஏற்றுமதி வருமானத்தில் 1.4 வீதம் மட்டுமே எனக் கூறுகின்றனர். இதனால் Gsp+ சலுகை வாபஸ் பெறுதலா னது கடுமையான விளைவினை (Adverse impact) இலங்கையின் ஏற்றுமதி வருமா னத்தில் ஏற்படுத்தாது என்கிறார்.

ஆனாலும் Gsp+ வரிச்சலுகை வாபஸ் பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத் தும் குறிப்பாக கிராமப்புற இளைஞர்கள் ஆடைக் கைத்தொழிலில் ஈடுபட்டிருப்போர் போன்றோர் வேலை வாய்ப்பினை இழப்பார்கள்.

தொழிற்சாலை முதலீட்டாளர் நட்டம்

அடைந்தலுடன் முதலீடு தொடர்பான ஆர்வத்தினையும் இழப்பார்கள். இவ்வாறு பல துணை விளைவுகள் பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

எது எவ்வாறு இருந்த போதும் இலங்கைக்கான Gsp+ சலுகைத் திட்டம் வாபஸ் பெறப்படுவதும் அதனைத் தொடர்ந்து பெறுவதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகள் ஒன்றை மட்டுமே தெளிவுபடுத்துகின்றது.

ஐரோப்பிய யூனியனும் அது சார்ந்த நாடுகளும் தமது பொருளாதார சிந்தனை மற்றும் நலன் சார்ந்த விடயங்களுக்கு சார்பில்லாத நாடுகளையும் அதன் தலைவர் களையும் தம் வழிக்கு வரவழைப்பதற்கான கருவியாக Gsp+ போன்ற திட்டங்களைப் பயன்படுத்தலாம் என்பது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இலங்கை அனுபவம் எடுத்துரைக்கின்றது.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரமும் அதன் தலைவர்களும் ஈரான்,வெனிசூலா, லிபியா, வியட்நாம், சீனா போன்ற நாடுகளுடனான வெளிநாட்டு உறவுகள் பலமடைவதும் இவ்வணிகன் ஓர் அணியில் கைகோர்க்க முயற்சிப்பதும் ஐரோப்பிய யூனியன் நாடு களால் பொறுக்கமுடியவில்லை.

வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் வெளிநாட்டு உறவுகளில் தலையீடு செய் வதற்கான கருவியாக Gsp+ பயன்படு கின்றது. இதற்கு இலங்கை நல்ல உதாரண மாகும். வர்த்தகம் சாராத விடயங்களில் வர்த்தக சலுகையூடாக அடிபணிய வைத்தல் மூன்றாம் உலகநாடுகள் இது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும்.

Reference


(i) www.Google.com

(ii) மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2009

(iii) மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2010

(iv) மத்திய வங்கியின் பொன் விழாச் சிறப்பு மலர்

# அறிவுப் பொருளாதாரமும் இலங்கையும்

*Mr. S. Saroopan,*
*Economics special,*
*2009/A/ 174*

## அறிமுகம் (Introduction)

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் பொருளாதாரங்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொருளாதாரங்கள் சந்தைப் பொருளாதாரம், சமவுடமைப் பொருளாதாரம், நிலைமாற்றுப் பொருளாதாரம்,கலப்பு பொருளாதாரம், என்ற வகைகளுக்கு மேலாக தற்காலத்தில் அறிவும் பொருளாதாரமும் (KNOWLE DGE ECONOMY) என்ற புதிய பொருளாதாரம் தோற்றம் பெற்றுள்ளது. மரபு வழியான பொருளாதார வளர்ச்சியானது பெருமள வில் பௌதிக மூலதனத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றது. உதாரணமாக கரட்டோமரின் வளர்ச்சி கோட்பாடு பௌதீக மூலதனத்தின் அதிகரிப்பின் ஊடாக பொருளாதார வளர்ச்சி துரிதப் படுத்தப்படுவதை விளக்கி நிற்கின்றது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் அறிவு என்பதும் முக்கியபங்கு வகிக்கின்றது. மரபு வழிப்.பொருளாதாரம் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி போன்றவற்றை முக்கியத்துவப்படுத்துகின்றது. ஆனால் அறிவுப் பொருளாதாரமானது கண்ணுக்குப் புலப்படாத சொத்துக்கள் என்று கூறக் கூடிய அறிவு(knowledge) திறன் (skill) புதியது புனைதல் (Inno vation) போன்றன.பிரதான வளமாக (key Resource)உள்ளதாக அண்மைக் கால ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சுருங்கக்கூறின் அறிவுப் பொருளாதாரம் என்பது இக்கண்ணுக்கு புலப்படாத சொத்துக்களின் வினைத்திறனான பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது. இங்கு அறிவு என்பது ஒரு வளமாக கருதப்படும் போதும் அதன் கருத்து நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவை புறக் கணிக்க கூடியவை அல்ல. இன்னுமொரு வகையில் கூறின் அதி முக்கியத்துவ வளங்களாக கூறக் கூடிய நிலம், உழைப்பு, மூலதனம் முயற்சியோடு அறிவினை இணைக்கின்ற போது பொருளாதார வளர்ச்சி உற்பத்தி ஆற்றல் பன்மடங்காக விரிவடைந்து செல்லும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தகவல் என்பது அறிவு சார் பொருளாதாரத்தின் பிரதான கூறாகும். நவீன அறிவுசார் பொரு

ளாதாரத்தை உருவாக்குவதற்கான முன் நிபந்தனை குறைந்த செலவில் பெருமளவு தகவல்களை உருவாக்கி களஞ்சியப் படுத்தும் ஆற்றல் ஆகும்.

## 2.அறிவு சார் பொருளாதாரத்திற் கான வரைவிலக்கணம்.

அறிவுப் பொருளாதாரம் தொடர்பாக பல்வேறு காலப் பகுதியில் வேறுபட்ட சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு பீற்றர்ரக்கர், OECD அமைப்பு, kok அறிக்கை, Charles Lead beater, ESRC போன்றன அறிவுப் பொருளாதாரத்தின் வரைவிலக்கணத்தைக் வழங்கியுள்ளன. இதில் Charles Lead beater என்பவர்,

"அறிவினால் உந்தப்படும் பொருளாதார சிந்தனையானது உயர் தொழில் பற்றிய விபரணம் மட்டுமன்று எல்லாத்துறைகள், கம்பனிகள், சகல பிராந்தியங்கள் விவசாயம் தொடக்கம் மென்பொருள் மற்றும் உயிரியல் தொழிநுட்பம் வரையிலான சகல துறைகளையும் பொறுத்த வரையில் மிக சாதகமாக பயன்படுத்தும் புதிய வளங்களை அறிவு சார் பொருளாதாரம் என்பார்".

இலங்கையின் அறிவுசார் பொருளாதாரத்தின் பண்புகளை அடிப்படையாக கொண்டும் அறிவு சார் பொருளாதாரக் குறிகாட்டிகளான பொருளாதார தூண்டுதலும் நிறுவன ஆட்சியும், கல்வியும் மனித மூலதனமும், புத்தாக்க பொறிமுறை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் ஆகியவற்றின் அடைவு நிலைகளையும் எதிர்நோக்கும் பிரச்சனைகள், உலக நாடுகளுடன் ஒப்பீடு செய்தல், மற்றும் எதிர்கால அறிவுப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான தீர்வுகள் என்பன விளக்கப்படுகிறது.

அண்மையில் 58 நாடுகள் செய்த ஆய்வின் பிரகாரம் ஆராய்ச்சி அபிவிருத்தி (R&D) மீது ஒரு சதவீத அதிகரிப்பை ஏற்படுத்தும் போது மொத்த தேசிய வருமானம் 0.78% ஆல் அதிகரிக்கிறது. புத்தாக்கம் என்பது இருக்கின்ற பொருளாதார செயற்பாட்டில் ஏற்படும் மாற்றம் ஆகும்.

அறிவு சார் பொருளாதாரம் என்பது உயர் தொழில்நுட்பத்தினை அல்லது தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தினை மட்டுமல்லாது பொருளாதார முறைகள் தமது உற்பத்தித் திறனையும் மக்கள் நலனையும் மேம்படுத்த பொருத்த மான அறிவைப் பயன்படுத்துதல் என்பதையும் கருதும். புதிய அறிவை உருவாக்குதல், தற்போது கிடைக்கப் பெறும் அறிவைப் பயன்படுத்தல் என்பனவும் அறிவு சார் பொருளாதாரத்தின் பண்புகளாகும். புதிய தொழிநுட்பங்களைக் கண்டு பிடிப்பதால் கிடைக்கும் நன்மைகளை விட தற்போது கிடைக்கப் பெறும் தொழிநுட்பத்தினை பயன்படுத்துவதால் அதிக நன்மைகளை பெற முடியும் என்ற கருத்தும் உண்டு.

இலங்கையில் புத்தாக்கமும் பொரு ளாதார வளரச்சியும் பற்றி நோக்கும் போது சுதந்திரத்திற்குப் பின்னரான காலம் முழுவதும் கைத்தொழில் மற்றும் விவசாய அபிவிருத்திக்கு துணைபுரிவதற்காக வீதிகள்,துறைமுகங்கள், நீர்ப்பாசன வசதிகள் போன்ற துறைகளில் காணப்படும் உட்கட்டுமாணங்கள் உள்ளடங்கலாக பல்வேறு வகையான பௌதீக மூலதனத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு சிறப்பியல்புடன் கூடிய ஒரு பொருளாதார வளர்ச்சி செய்முறையை

இலங்கை அனுபவித்து வந்துள்ளது. சிங்கப்பூர், தென்கொரியா போன்ற நாடுகள் மிக முக்கியமாக தொழிநுட்ப முன்னேற்றத்தால் தூண்டப்படும் ஒரு பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட அறிவாற்றலை அடிப்படையாக கொண் டுள்ளது. இலங்கை பொருளாதாரம் இன்றும் பௌதீக மூலதனத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை ஆதார மாக கொண்டே இயங்கிக் கொண்டி ருக்கிறது.

## 3. இலங்கையில் அறிவு சார் பொருளாதாரத்தின் வளர்ச்சிப் போக்கு

அண்மைக் காலங்களில் இலங்கையின் பொருளாதாரமானது விவசாயத் துறையை விடுத்து சேவைத் துறைப் பொருளாதாரமாக மாறி வருவது குறிப்பிடத் தக்கது. 2006ம் ஆண்டில் சேவைத்துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56% இனையும், கைத்தொழில் துறை 27% இனையும், விவசாயத் துறை 17% கொண்டுள்ளது. எவ்வாறாயினும் உழைப்பினரில் 33 சதவீதமானோர் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து, தொடர்பாடல், வீதிச் சேவைகள், உல்லாசப்பயணம் பேன்ற துறைகள் உள்ளடங்கிய சேவைத் துறை விரிவடைந்தமைக்குப் பல கார ணங்கள் உண்டு. தாராளமயமாக்கம், தனியார் துறையின் பங்களிப்பு, பொருளாதார முறையின் நவீன மயமாக்கம் அதிகரித்த போட்டி என்பன சேவைத்துறையின் வளர்ச்சிக்கு காரணமாயின. அண்மைக் காலங்களில் தொலைத் தொடர்பில் ஏற்பட்ட 27% வளர்ச்சி சேவைத்துறை வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாயிற்று. இலங்கையில் வெளிநாட்டு மூலதனமும் கடல் கடந்த வர்த்தக செயற்பாடுகளும் அதிகரித்து வருவதால் சேவைத்துறையானது எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சி பெற வாய்ப்புண்டு. இன்று உலகில் 40% உழைப்பினர் சேவைத்துறையிலேயே பணி புரிகின்றனர். தயாரிப்புத் தொழில் இருந்த 22 மில்லியன் வேலை வாய்ப்புகள் அண்மைக் காலங்களில் இல்லாதொழிந்த தாக சர்வதேசத் தொழில் நிறுவனத் தரவுகள் (ILO) தெரிவிக்கின்றன. இத்தகைய உலகளாவிய போக்கு இலங்கையிலும் காணப்படுகின்றன.

உலக வங்கியின் மதிப்பீட்டின் படி இலங்கை ஓர் அறிவு சார் பொருளாதாரமாக மாற்றுவதற்கு உதவக் கூடிய காரணிகளாக

* இலங்கையின் தாராளப் பொருளாதாரம்
* உயர் எழுத்தறிவு வீதங்கள்
* விரிவான முறையில் ஆங்கில மொழியைப் பயன்படுத்தல்
* கணக்கியல் மற்றும் நிதிச் சேவைத் துறைகளில் பயிற்சி பெற்றோர் கிடைக்கின்ற நிலமை.
* சுதந்திர சந்தைப் பொருளாதாரம்
* வளர்ச்சி பெற்று வரும் தனியார் துறை
* வெளிநாட்டு மூலதன வருகைக்கான வாய்ப்பு
* கடல் கடந்த வர்த்தக நடவடிக்கைக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பு

அறிவு சார் பொருளாதாரம் நோக்கிய முன்னேற்றமானது இலங்கை யில் படிப்படியாகவும் அதே வேளையில் ஒரு வரம்பிற்கு உட்பட்ட முறையிலும் இடம் பெற்றுள்ளதாக உலக வங்கி மதிப்பீடுகள் கூறுகின்றன. 1995 தொடக் கம் இலங்கை சிறிய முன்னேற்றங்களை

கண்டுள்ள போதும் ஏனைய ஆசிய நாடுகளான மலேசியா, கொரியா, சிங்கப் பூர் என்பன இலங்கையை விட சிறந்த முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. இந்நாடுகள் கண்ட துரித வளர்ச்சியை இலங்கையும் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அதன் அறிவு உள்ளீடுக ளுக்கான விருத்தியில் மேலும் அதிக முதலீட்டைச் செய்ய வேண்டும் என்பது உலக வங்கியின் கருத்தாகும். உலக வங்கியின் மதிப்பீடுகளின் படி பிலிப்பைன், தாய்லாந்து, மெக்சிக்கோ ஆகிய நாடுக ளும் இலங்கையை விட இவ்விடயத்தில் பல முன்னேற்றங்களை கண்டுள்ளன.

உலக வங்கியின் அறிவுக் கணிப் பீட்டு முறையானது இலங்கை அறிவு சார் பொருளாதாரத்தின் நான்கு தூண் களைப் பொறுத்த வரையில் ஆசியாவின் 8 நாடுகளில் எந்த இடத்தில் இருக்கின்றது என்பதை சுட்டிக் காட்டுகிறது. இந்தியா, வியட்னாம் ஆகிய நர்டுகளை விட இலங்கை சற்று முன்னேறியும் மலேசியா, மெக்சிக்கோ, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகள் பின்தங்கியிருப்பதையும் உலக வங்கியின் அறிவு சார் பொருளாதார சுட்டெண் எடுத்துக் காட்டுகிறது.

1995க்கு பின் பிந்திய காலப் பகுதியில் கல்வி தவிர்ந்த ஏனைய மூன்று தூண்களை பொறுத்த வரையில் (தகவல் தொழிநுட்பம், புத்தாக்கம், பொருளாதார ஊக்குவிப்பு) இலங்கை மிகச் சிறிய முன்னேற்றங்களையே கண்டுள்ளது. 1995க்கு பின்னர் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பயன்பாடு, கணணி பயன் பாடு, தொலைபேசித் தொடர்புகள் ஆகிய துறைகளில் சில முன்னேற்றங்க ளைக் காணமுடிகிறது.

- இலத்திரனியல் அஞ்சல் இணையத்தளச் சந்தாதாரர் தொகை 1998இன் 19 ஆயிரமாக இருந்தது. ஆனால் 2007ல் 202,000 ஆக அதிகரித துள்ளது.
- கையடக்கத் தொலைபேசித் தொகை 1998 இல் 174000 இருந்து 2007ல் 80,00000 ஆக அதிகரித்துள்ளது.
- தற்போது 100:40 பேர் கையடக்க தொலைபேசியைப் பயன்படுத்துகின்றனர

அட்டவணை: 01 இலங்கை வீட்டுத்துறை கணனி பயன்படுத்தும் வீதம்.

| | மாகாணங்கள் | கொழும்பு | நகரம் | கிராமம் | தோட்டம் |
|---|---|---|---|---|---|
| கல்வி | 76.0 | 74.8 | 76.6 | 75.8 | 71.7 |
| சுயதொழில் | 15.3 | 12.8 | 17.5 | 14.2 | 22.9 |
| வியாபார தேவை | 15.4 | 17.0 | 18.5 | 14.0 | 20.6 |
| ஓய்வு நடவடிக்கை | 49.4 | 50.7 | 44.3 | 57.6 | 64.8 |
| உத்தியோக தேவை | 20.6 | 25.0 | 21.2 | 20.3 | 26.6 |
| மின் அஞ்சல் | 16.0 | 28.0 | 23.6 | 12.6 | 1..5 |
| இணையத்தளம் | 16.2 | 24.4 | 22.8 | 13.3 | 5.6 |
| ஏனையவை | 3.8 | 3.0 | 2.5 | 4.4 | 5.6 |

மூலம்- குடி மதிப்பு புள்ளி விபர அறிக்கை 2006/2007

தகவல் உட்கட்டமைப்பில் ஏற்படும் அபரிதமான மாற்றங்கள், அறிவைப் பெறுதல், உருவாக்கல், பரப்புதல், பயன்படுத்தல் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளாகும். இவை நாட்டின் பொருளாதார சமூக செயற்பாடுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

உலக நாடுகள் எந்தளவுக்குத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் நன்மைகளைப் பெற ஆயத்தமாக உள்ளன என்பது பற்றிய ஒரு சுட்டெண் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் இலங்கை புதிய தொழில்நுட்பத்தின் நன்மைகளைப் பயன்படுத்த இன்னும் ஆயத்தமாக இல்லை என்பதாகும். இவ்விடயத்தில் மலேசியா 24வது இடத்தையும் தாய்லாந்து 34வது இடத்தையும் இந்தியா 40 வது இடத்தையும் பெற்றுள்ளது.

நாட்டில் இணையத்தள தொடர்புகளை விரிவாக வழங்குவதிலுள்ள ஒரு முக்கிய தடை அதற்கான மிகக் கூடிய செலவுகளாகும். 2004ம் ஆண்டின் இச்செலவானது இந்தியாவை விட இருமடங்காகவும் சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளை விட அதிகமாகவும் காணப்பட்டது. இலங்கையர்கள் இதற்கு உயர்ந்த விலையைச் செலுத்த வேண்டியதன் காரணம் தொலைத் தொடர்புத் தொழிலில் அதிக போட்டியின்மையும் அத்துறையை ஒழுங்குபடுத்தும் அமைப்பின் பலவீனங்களுமாகும். 1000:14.4 பேரே இணையத்தள பாவனையாளர்கள்.

| | 1km | 1-3km | 3-6km | 6km | தெரியாதவர்கள் |
|---|---|---|---|---|---|
| இலங்கை | 16.8 | 19.1 | 15.7 | 23.66 | 24.9 |
| கொழும்பு | 49.1 | 28.8 | 7.7 | 3.8 | 10.7 |
| நகரம் | 45.5 | 24.5 | 7.2 | 3.9 | 18.9 |
| கிராமம் | 13.3 | 18.9 | 17.4 | 26.1 | 24.3 |
| தோட்டம் | 4.2 | 9.2 | 10.2 | 36.0 | 46.5 |

மூலம்;-குடி மதிப்பு புள்ளி விபர அறிக்கை (2006/2007)

மேலும் தகவல் தொலைத் தொடர்பு தொழிநுட்பத்தின் மற்றுமொரு அம்சமாக கையடக்கத் தொலைபேசியின் பயன்பாடு மேற்கு மாகாணத்தில் அதிகமாக உள்ளது. இது சுமார் 60 சதவீதமாகும். மிகக் குறைந்த வீதாசாரம் ஊவா மாகாணத்திலுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 65.0 வீதத்தினர் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துகிறார்கள். நகர மற்றும் கிராம சனத்தொகையில் 50 சதவீதத்தினரும், தோட்டத்துறையில் 20 சதவீதத்தினரும் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துகின்றனர். பெரும்பாலும்

ஆங்கில அறிவுள்ள மக்கள் தொகுதியினர் கையடக்கத் தொலைபேசிகளை மிக உயர்ந்த அளவில் (80%) பயன் படுத்துவதாக இம் மதிப்பீடு குறிப்பிடுகிறது. உலக வங்கியின் கருத்தின் படி, கடல் கடந்த வர்த்தகம் செயற்பாட்டுத் துறையில் (BOT) இலங்கை துரித வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அண்மைக் காலங்களில் கணக் கியல், மருத்தக் காப்புறுதி, சட்டப்பாணி, வங்கித்துறை, அழைப்பு நிலையங்கள் ஆகிய துறைகள் ஈடுபடக் கூடிய கம்பனிகள் விருப்பம் தெரிவித்துள்ளன உலக கம்பனிகள் இலங்கையின் உட்கட்ட மைப்பின் போதாமை பற்றி சுட்டிக் காட்டியுள்ளது.

தகவல் தொழிநுட்ப அடிப்படை அறிவையும் தகவல் தொடர்பாடல் தொழி நுட்ப பயன்பாட்டை மேம்படுத்தக்கூடிய கலாசாரத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை சற்று நீண்ட தூரம் செல்ல வேண்டி யுள்ளது என்பது உலக வங்கியின் கருத்தாகும். 2005 இல் பொருளாதார புலனாய்வுப் பிரிவின் இலத்திரன் ஆயத்த நிலை அறிக்கையானது ஒரு சந்தை எந்த ளவுக்கு இணையத்தள வாய்ப்புக்களை பயன்படுத்த ஆயத்தமாகவுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டும் உலக தரவு களை கொண்டிருந்தது. இலத்திரன் ஆயத்த நிலை என்பது ஒரு நாட்டிலுள்ள சேவையகம் இணையத்தளம், கைய டக்கத் தொலைபேசி என்பவற்றின் தொகையை மட்டுமன்றி பின்வரும் அம்சங் களை கருதும் தொழிநுட்பத் திறமை யுடன் பயன்படுத்த மக்களுக்கு உள்ள ஆற்றல்.

☞ தொழிலாற்றுத்துறையின் வெளிப்படைத்தன்மை

☞ தொழிநுட்பங்களை அரசாங்கம் எந்தளவிற்கு ஊக்கிவிக்கிறது என்னும் விடயம்

இவ் விடயத்தில் இலங்கை 56 வது இடத்தை பெற்று இந்தியா (49 வது இடம்) சீனாவை (54வது இடம்) விடப் பின்தங்கிய நிலையிலுள்ளது. இச் சுட்டெண்ணின் படி இலங்கையர்களின் கணினி அடிப்படையறிவுவீதம் பொது வாகக் குறைவு தற்பொழுது அரசாங்கம் e-SriLanka என்ற புதியமுயற்சியில் ஈடுபட்டிருப்பதால் இச் சதவீதம் எதிர்காலத்தில் முன்னேறவாய்ப்புண்டு.

இவ் விடயத்தில் இலங்கை எதிர்நோக்கும் முக்கிய சவால்களுள் ஒன்று இணையத் தொடர்புகளுக்கான செலவுகளாகும். 20 மணி நேர இணையத்தளப்பாவனைக்கு ஆகும் செலவு 25.2 டொலராகும். இது மலேசி யாவை விட 4 மடங்கு அதிகமாகும். தாய்லாந்து (7 டொலர்) சீனா (10டொலர்) இந்தியா (9 டொலர்) ஆகிய நாடுகளை விட இலங்கையின் செலவு அதிகமாகும். ஆசியப் பிராந்தியத்தில் குறைந்த தரமுள்ள சேவைகளுக்கே இலங்கை உயர்ந்த செலவுகளை செய்யவேண்டி யிருப்பது ஒரு மோசமான நிலமையாகும்.

இலங்கையில் தொலைத்தொடர்பு கட்டமைப்புச் சேவைகள் மிகப் பிரதா னமாக நகர்ப்புறங்களிலும் கொழும்பு, காலி ஆகிய இடங்களில் வாழும் செல்வந்தர் பிரிவினர் மத்தியிலும் கூடுதலாக உள்ளன. இவ்வாறான தொலைத் தொடர்புகள் சாதாரண மக்களை சென்றடைந்தால் மட்டுமே அதிகமானவர்கள் தகவல் தொழிநுட்பம் பற்றிய அடிப்படை அறிவினை பெற்றுக் கொள்ள முடியும். மாகாண ரீதியான வீட்டுத் தொலைபேசிப் புள்ளிவிபரங்களின்

படி 54 சதவீதம் ஏனைய 8 மாகாணங்களிலும் கூடியும் குறைந்தும் பகிரப்பட்டுள்ளன. (வடமாகாணம் 1 சதவீதம், வடமேற்கு மாகாணம் 7 சதவீதம், மத்திய மாகாணம் 10 சதவீதம், தென் மாகாணம் 10 சதவீதம்) கிராமப்புறங்களில் சிறு தொகையான சந்தாதாரர்கள் காணப்படுவதால் தொடர்புகளை வழங்கும் போது செலவுகள் அதிகமாகின்றன. இது மாகாணங்களுக்கு இடையில் பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.


ஆய்வாளர் கருத்தின் படி தொலைத் தொடர்புகள் நிறுவனங்கள் கிராமப்புறங்களுக்குச் செய்வதில் தயக்கம் காட்டுகின்றன. கிராமப்புரங்களில் தொலைத் தொடர்புகளை ஏற்படுத்துவதால் அவர்களால் அதிக இலாபத்தினை பெற முடியாது. ஒரு விஞ்ஞானக் கலாசாரத்தை ஏற்படுத்துவது அபிவிருத்தியை நோக்கி அறிவினை பயன்படுத்துவதற்கு இன்றியமையாததாகும். கடந்த கால விஞ்ஞான தொழிநுட்பத் துறையில் மேற்கொள்ள வேண்டிய முதலீடுகளுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டதன் காரணமாக இத்துறை சார்ந்த விஞ்ஞான அறிவை உருவாக்கக் கூடிய புத்தாக்க முறைமைகள் இலங்கை போன்ற நாடுகளுக்கு முக்கியமானவை. விஞ்ஞான கலாசாரத்தை ஏற்படுத்த அத்துறையில் ஈடுபாடு காட்டும் நிறுவனங்களும் பல்கலைக் கழகங்களும் பெரு முன்னேற்றம் காண வேண்டும். இதற்கு விரிவான தொரு பல்கலைக்கழக முறைமை, விஞ்ஞானிகளுக்குச் சன்மானங்களும் தேசிய அங்கீகாரங்களும், பிரதான துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி வகைத் தொகுதிகள் புலமை சார் அமைப்புகள், சஞ்சிகை என்பன தேவை. மேலும் விஞ்ஞான ஆய்வுக்கான அரசாங்க ஆதரவு, விஞ்ஞானிகள் தேசிய எல்லைக்குள் பணியாற்றக் கூடிய அறிவார்ந்த சூழல் என்பனவும் இவ்வாறான கலாச்சாரம் மேலோங்குவதற்கு அடிப்படையான தேவைகளாகும். இத் துறையில் பிரதான பங்கேற்கும் நிறுவனங்களுக்கு இடையே அதிகளவிலான இடைத்தாக்கம் இருத்தல் வேண்டும்.

உதாரணமாக அரசாங்கம், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், தனியார் துறையினர், விஞ்ஞானிகள், மற்றும் ஆய்வாளரின் தொகையைப் பொறுத்த வரையில் இலங்கையின் சாதனை குறிப்பிடத்தக்கதல்ல. இவ்விடயத்தில் மலேசியா, இந்தியா, தாய்லாந்து முதலிய நாடுகளின் செயலாக்கத்தினை விட இலங்கை மிகவும் பின் தங்கியுள்ளது. உலகில் 71% ஆய்வாளர்கள் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் 24% ஆனவர்கள் வளர்முக நாடுகளிலும் காணப்படுகின்றனர். இலங்கையில் 15 பல்கலைக்கழகங்களிலும் 19 ஆராய்ச்சி நிறுவனங்களிலும் 5250 விஞ்ஞானிகள் காணப்படுகின்றனர். (2005) 60 சதவீதமான ஆராய்ச்சிகள் விவசாயம் தொடர்பானவை.

தென்னாசியவில் விஞ்ஞானத் துறைகளில் மிகக் குறைவான பட்டப்பின் படிப்பு மாணவர் காணப்படும் நாடு இலங்கையாகும். 2001ம் ஆண்டின் தொழிநுட்ப அடைவுச் சுட்டெண்ணானது ஒரு நாடு எந்தளவுக்கு தொழில்நுட்பத்தை உருவாக்கி பரப்புகின்றது என்பது பற்றிது ஒரு நாடு புத்தாக்கங்களைப் பயன்படுத்தக் கூடிய தனியாட்களின் தொகை புத்தாக்கங்களை பயன்படுத்தக் கூடிய பரப்பக் கூடிய வசதிகள், உற்பத்திகளையும் செய்முறைகளையும் உள்ளூர் நிலமைகளுக்கு ஏற்றவாறு பின்பற்றக்

கூடிய ஆற்றல் முதலிய விடயங்களையும் ஆய்வின் படி 72 நாடுகளில் இலங்கை 62வது இடத்திலுள்ளது.

மிக முக்கியமாக சேவைத்துறையில் பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் உட்கட்டுமானங்கள் உட்பட பௌதீக மூலதனத்தில் இடப்படும் முதலீட்டால் தூண்டப்படுவ தாகவே இலங்கையின் தற்போதைய உயர் பொருளாதார வளர்ச்சி நிகழ்வு காணப்படுகிறது. சிங்கப்பூர், தென்கொரியா போன்ற நாடுகள் புத்தாக்கத்தால் தூண்டப்படுவதாகவே காணப்படுகிறது. இலங்கையின் வளர்ச்சிக்கு இன்னும் புத்தாக்க முயற்சிக்கான ஒரு நிலை இன்னமும் ஏற்படவில்லை. இலங்கை ஊழியச் செறிவுடன் மேற்கொள்ளப்படும் முதல்நிலை பொருட்கள், இயந்திரங்களை பயன்படுத்தல் என்பன முக்கியத்துவம் பெற்றிருக்கும் ஒரு பொருளாதார கட்டமைப்புடன் கூடிய குறைந்த மட்ட தொழிநுட்பத்துடன் இயங்கிக் கொண்டு இருக்கிறது. இலங்கையில் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த ஆட்சி மாற்றங்களும் உயர் பொருளாதார வளர்ச்சியினை அறிவு பொருளாதார நிலையில் அடைவதற்கு தடையாக உள்ளது.




உரு.1 புத்தாக்கங்களும் பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களும்

அறிவு சார் பொருளாதாரத்தில் அதிக நன்மைகளை வெளிப்படுத்துவதற் கும் ஆற்றல் அதிகரிப்பதற்கும் கல்வித் துறை பயன்படுகிறது. ஆக்கத்திறனை வெளிகப்படுத்தல், அடிப்படை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வின் தராதரத்தை முன்னேற்றல், வாழ்க்கை நீடித்த கல்விக்கான வாய்ப்புக்களை வழங்குதல் என்னும் அம்சங்களுக்கும் கல்வி முறையானது அதிகரிக்க வேண்டும்.

இலங்கையில் எழுத்தறிவு வீதம் நன்றாக வளர்ச்சி கண்டுள்ளது என்றும் (92%) இன்றைய அறிவு சார் யுகத்திற்கு இது மட்டும் போதுமானது அல்ல. பொரு ளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் சந்தையை இலக்காக கொண்ட உழைப்பி னர் தொகுதி மாற்றம் செய்தல் வேண்டும். இன்னும் இலங்கையின் சராசரிப் பாடசா லைக் கல்வி மட்டம் 9 ஆண்டுகளாகும். கல்வி முறையுடன் தொழில் கல்வி இணைக்கப்பட வேண்டும். ஆங்கிலமொழிக் கல்வி, தகவல் தொழிநுட்பக் கல்வி, தொழிநுட்ப தேர்ச்சி என்பன விரிவாக் கப்பட்டன.

விஞ்ஞானம், கணிதம் மற்றும் பாடசாலைகளில் இணையத்தள தொடர்பு ஆகிய விடயங்களில் இலங்கையின் அடைவுகள் மிகவும் குறைவு. இந்தியா வில் வளர்ந்தோர் எழுத்தறிவு குறைவாக இருந்த போதிலும் விஞ்ஞான கணித கல்வியின் தராதரம் அதிகம்.

அண்மைக் காலங்களில் கல்வி யின் மீதான அரசாங்கச் செலவு சார்பள வில் குறைந்த வீதத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த 15 ஆண்டு களாக இச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2-3 சதவீதமாகவே உள் ளது. ஏனைய தென்னாசிய நாடுகளில் இது 3.5சதவீதமாகும். மொத்த செலவில் 82 சதவீதம் பாடசாலைக் கல்விக்கும் 14 சதவீதம் பல்கலைக்கழக கல்விக்கும், 3சதவீதம் தொழிற்கல்விக்கும் செல விடப்படுகின்றது. இத்தகைய குறைந்த முதலீடானது பாடசாலையை விட்டு வெளியேறுபவரின் கல்வித் தேர்ச்சியை பெரிதும் பாதிக்கின்றது. 1960களின் முற்பகுதியில் தரங்கள் 1-9 வரையிலான தனியார் பாடசாலைகளை நிறுவுவதற்கு பூர்வீகமாகத் தடை விதிக்கப்பட்டது. இத் தடை இன்றுவரை இருந்து வருகின்றது.

இலங்கையின் ஆரம்ப, இடை நிலைக் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி தரமுயர்த்த வேண்டும். ஆரம்ப இடைநிலை கல்வியை பன்முகப்படுத்தி நவீனமயமாக்க வேண்டிய ஒரு முக்கிய தேவை உண்டு. செயற்பாட்டு முறைக் கல்வி, ஆளுமை விருத்தி, தொழிநுட்பக் கல்வி என்பனவற்றிற்கு உயர் வகுப்பு களிற்கு (10-11) அதிக முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. 6 சதவீதமான பாடசாலைகளே 12ம், 13ம் தரங்களில் விஞ்ஞானக் கல்வியை வழங்குகின்றன.

பூகோள மயமாக்கப்பட்ட உலகில் ஆங்கிலம் பெற்றிருக்கும் முக்கியத்துவம் காரணமாக இலங்கை அறிவு சார் பொரு ளாதாரத்தின் வினைத்திறனுடன் பங்கு கொள்ள எதிர்கால தேவைகளை நோக்கி ஆங்கிலத்தின் முக்கியத்துவம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். ஆங்கில மொழித்திறன்கள் தேசிய, சர்வதேச தொழிற்சந்தைகளிலும் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள மிகவும் அவசியமானது. கல்வி அமைச் சின் தரவுகளின் படி 7சதவீதமானவர்கள் கிராமப்புறத்திலும், நகரப்புறத்தில் 23% மானவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுகின்றனர். 6ம், 7ம் தரங்களில் சில பாடங்களை ஆங்கிலத்தில் கற்பிக்கும் செயற்றிட்டம் பரீட்சாத்தமாக சில

பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

## 04. முடிவுரை (Conclusion)

இலங்கை அறிவுப் பொருளாதாரத்தினை அடைவதில் உள்ள பிரச்சனைகளாக கல்வி முறைக்கும் தொழில் கல்விக்கும் இடையில் வேறுபட்ட தன்மை, உட்கட்டமைப்பு போதாமை, அரசாங்கத்தின் குறைந்தளவான ஊக்குவிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இன்மை, முதலீடுகள் குறைவாக காணப்படல், அபிவிருத்தி நிறுவனங்கள் பற்றாக்குறை, R&D க்கான தொழில் ரீதியான சம்பளக் குறைவு, தனியார் முயற்சி குறைவாக காணப்படல், மூளைசாலிகள் வெளியேற்றம், பிரயோக விஞ்ஞானத்தை வளர்க்க கூடிய தன்மை இன்மை, மூடநம்பிக்கைகளும் இலங்கையின் அறிவுப் பொருளாதார உயர்ந்த வளர்ச்சி இன்மைக்கு காரணங்கள் எனலாம்.

இவ்வாறு இலங்கையின் அறிவுப் பொருளாதாரப் பண்புகளையும் அறிவுப் பொருளாதார குறிகாட்டிகளில் இலங்கையின் நிலை, அறிவுப் பொருளாதாரத்தில் இலங்கை எதிர் நோக்கும் பிரச்சனைகள், அவற்றை அடைவதற்கான எதிர்கால வாய்ப்புகளும் அவற்றுக்கான தீர்வுகள் தற்போதைய பொருளாதார வளர்ச்சி வீதத்தை நெடுங்காலம் நிலைத்திருக்கச் செய்வதற்கு அறிவு சார் குறிகாட்டிகள் மீது அதிகரித்த முதலீடுகளைச் செய்ய வேண்டும். NICs அமைப்பில் உள்ள நாடுகளினைப் போன்று உயர் ஆற்றுகை கொண்டதாக மாற்றம் அடைவதற்கு அரசாங்க கொள்கைகள், தனியார் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டும். இவ்வாறு தொழிநுட்ப வினைத்திறன் மிக்க உட்கட்டுமானங்களையும் அறிவு, திறன், புத்தாக்கம் மற்றும் மனித மூலதனம், முகாமை மட்டம், வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் முதலீடுகள் என்பன அதிகரிக்கப்படும் போது இலங்கையின் அறிவுசார் பொருளாதாரம் எதிர்காலத்தில் வேகமாக வளர்ச்சியடைவதற்கான சாத்தியக்கூறு அதிகமாக காணப்படும் எனலாம்.

### உசாத்துணை நூல்கள்


1. பொருளியல் நோக்கு, மார்கழி 2011/ தை 2012 பக்கம்- 18-30
2. சந்திரசேகரன்.சோ, கருணாநிதி.மா (2008) அறிவு சார் பொருளாதார்ரமும் கல்வியும்" சேமமடுப் பதிப்பகம்.
3. ரவீந்திரகுமார்.ந கணேசமூர்த்தி.மு (2008) பொருளாதார அபிவிருத்திச் செல்வழி, பேராசிரியார் பாலகிருஸ்ணன் சேவை நலன் பாராட்டுக் குழு.

# இலங்கையின் வேலைவாய்ப்பும் வேலையின்மையும்

*Miss. S . Josika,*
*Economics Special,*
*2009/A/054*

நாடொன்றின் பொருளாதார வளர்ச்சியில் அந்நாட்டின் ஊழியப் படையின் முக்கியத்துவத்தினை குறைத்து மதிப்பிட்டு விட முடியாத ஒன்றாகும். எனவே ஊழியப் படையைச் சரியாக இனங்காணல் அதன் போக்குகள் என்பன பற்றிய அறிவு பொருளாதாரம் பற்றிக் கற்கும் மாணவர்கள் அறிந்திருப்பது அவசியமானதாகும்.

1. ஊழியப்படை என்றால் என்ன?

இலங்கையில் ஊழியப்படையை வரைவிலக்கணப்படுத்தும்போது வீட்டுத் துறையில் 10 வயதிற்குமேற்பட்ட வேலை செய்யக் கூடிய சனத்தொகையிலுள்ள மக்கட் பிரிவினரை உள்ளடக்குகின்றோம். இருப்பினும் வரைவிலக்கணங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இதில் காணப்படும் மற்றுமொரு சட்டரீதியான முரண்பாடு யாதெனில் 10 வயது தொடக்கம் 18 வயது வரையிலான நபர்கள் சிறுவர்களாகக் கணிக்கப்படும் காரணத்தால் அவர்களை ஊழியப் படையில் உள்ளடக்குவது சிறுவர் ஊழியத்தை அங்கீகரிப்பதற்கு ஒத்தவொரு நடவடிக்கையாக அமையலாம். இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் ஊழியப்படையை வரைவிலக்கணம் செய்வதில் காலத்திற்குக் காலம் வேறுபட்ட அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளமையினால் அது தொடர்பான கால அடிப்படையிலான ஒப்பீடுகளைச் செய்வது சிரமமானதாக உள்ளது.

அண்மைக் காலத்தில் இலங்கையின் ஊழியப் படை தொடர்பான தகவல்களைப் பின்வரும் அட்டவணை வெளிப்படுத்துகின்றது.

| ஆண்டு | ஊழியப்படை (மில்லியன்) | ஊழியப்படையில் | வேலையின்மை வீதம் |
|---|---|---|---|
| 1990 | 6.0 | 51.9 | 15.9 |
| 2001 | 6.8 | 48.1 | 7.9 |
| 2002 | 7.1 | 50.3 | 8.8 |
| 2003 | 7.7 | 48.9 | 8.4 |
| 2004 | 8.1 | 48.6 | 8.3 |
| 2005 | 7.3 | 48.3 | 7.2 |
| 2006 | 7.6 | 51.0 | 6.5 |
| 2007 | 7.5 | 49.8 | 6.0 |
| 2008 | 7.6 | 50.2 | 5.2 |
| 2009 | 7.57 | 48.7 | 5.8 |

2. ஊழியப் படையில் பங்கு கொள்ளல் வீதம்

ஊழியப்படையின் பங்கு கொள்ளல் வீதம் என்பது ஊழியப்படையினை தொழில் புரியக்கூடிய வயதில் உள்ள சனத்தொகையின் வீதாசாரமாகக் குறிப்பிடுவதாகும். ஊழியப் படையில் ஏற்படும் மாற்றங்களுக் கேற்பவும், வேலை செய்யக்கூடிய வயதுப் பிரிவு சனத் தொகையில் ஏற்படும் மாற்றங்களுக் கேற்பவும் இவ்வீதம் மாற்றமடைகின்றது.

3. வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு என்பது ஆய்வு மேற்கொள்ளப்படும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முந்திய காலப்பகுதியில் தனிநபரொருவர் ஒரு மணித்தியாலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியில் பண ரீதியான அல்லது வேறு கொடுப்பனவின் பொருட்டு அல்லது கொடுப்பனவைப் பெறா மல் குடும்பத்தின் பொருளாதார முன்னேற் றம் கருதி வேலையில் ஈடுபடுகின்ற நிலை மையினைக் கருதும். இலங்கையில் வேலை வாய்ப்பு நிலைமையில் ஏற்பட்டுள்ள மாற் றங்களைப் பின்வரும் அட்டவணை காட்டு கின்றது.

இலங்கையின் வேலைவாய்ப்புக் கட்டமைப்பு (சதவீதம்)

| துறை | 1946 | 1981 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|---|
| விவசாயம் | 53 | 51 | 32 | 31 | 33 | 33 |
| கைத்தொழில் | 10 | 20 | 27 | 27 | 26 | 25 |
| சேவை | 37 | 29 | 41 | 42 | 41 | 42 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

இலங்கையின் தொழில் நிலைக் கட்டமைப்பு (சதவீதம்)

| வகை | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|
| அரச துறை ஊழியர் | 13 | 14 | 15 | 16 |
| தனியார் துறை ஊழியர் | 42 | 43 | 41 | 42 |
| தொழில் தருனர் | 03 | 03 | 03 | 03 |
| சுயதொழில் புரிவோர் | 31 | 30 | 30 | 29 |
| சம்பளம் பெறா குடும்ப ஊழியர் | 11 | 10 | 11 | 10 |
| ஊழியர் மொத்தம் | 100 | 100 | 100 | 100 |

மூலம் : மத்திய வங்கி ஆண்டறிக்கை

அட்டவணையின்படி இலங்கையின் வேலைவாய்ப்புக்கட்டமைப்பில் குறிப்பிடத் தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை தெளிவா கின்றது. 1946ம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து தொழில் வாய்ப்புத்தரும் துறை என்ற வகையில் கைத்தொழில் துறையின் முக்கியத்துவம் படிப்படியாக அதிகரித்துள்ள அதே வேளை விவசாயத்துறையின் முக்கியத் துவம் வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது.

இலங்கையின் வேலைவாய்ப்புத் தொழிற்படையின் தொழில் நிலையின்

முக்கிய மூலமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பும் தற்போது முதன்மைபெற்று வருகின்றது. அந்த வகையில் 2006ம் ஆண்டில் 201143 பேரும் 2007 இல் 218459 பேரும் 2008 இல் 250499 பேரும் 2009இல் 247119 பேரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தகவல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

4. குறைதொழில் வாய்ப்பு

குறைதொழில் வாய்ப்பு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது மாற்றீடான தொழில்களில் ஈடுபட்டுள்ள காலப் பகுதிக்குக் (அதாவது கிழமையொன்றிற்கு 35 மணித்தியாலங்கள்) குறைவானதொரு காலப் பகுதியில் வேலையில் ஈடுபட்டுள்ள அதேவேளை அதனைவிடக் கூடுதலான மணித்தியாலங்கள் வேலை செய்ய விருப்பம் இருந்தும் அதற்குரிய வாய்ப்புக் கிடைக்காத நிலைமையைக் குறைதொழில் வாய்ப்பு எனலாம்.

அதாவது ஒருவருடைய ஆற்றுலுக்கும் தகைமைகளுக்கும் ஏற்ற தொழிலொன்றில் ஈடுபட்டிராத நிலைமையினைக் குறிக்கும். தமது பயிற்ச்சி கல்வித் தகைமைகளுக்கு ஒவ்வாத அல்லது அதனைவிடக் குறைந்த தகைமைகள் தேவைப்படும் தொழில்களில் ஈடுபடும் தன்மையை இது குறிக்கின்றது. பட்டதாரிகள் பேருந்து நடத்துனர்களாகத் தொழில் புரிவது இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

இவ்வாறாக ஊழியம் குறைதொழில் வாய்ப்பில் உள்ளதன் காரணமாக ஊழிய உற்பத்தித் திறன் வீழ்ச்சியடைதல், வறுமை நிலை அதிகரித்தல், குறைந்த வெளியீட்டு மட்டம் நிலவுதல், சமூகத்தில் அமைதியின்மை ஏற்படல் போன்ற பிரதிகூலமான விளைவுகள் ஏற்படலாம்.

இலங்கையின் குறைதொழில் வாய்ப்பு வீதம்

| துறை | 1996 / 1997 | 2003 / 2004 |
|---|---|---|
| விவசாயம் | 31 % | 35 % |
| கைத்தொழில் | 20 % | 20 % |
| சேவை | 20 % | 18 % |
| மொத்தம் | 24 % | 24 % |

இதனடிப்படையில் மொத்த தொழில் வாய்ப்புக்களில் 24% குறைதொழில் வாய்ப்பு நிலை நிலவுகின்றமை தெளிவாகின்றது. துறைரீதியாக நோக்குமிடத்து விவசாயத் துறையிலேயே இந்நிலை கூடுதலாகக் காணப்படுகின்றன. எனவே பரந்ததோர் விவசாயத்துறை காணப்படுகின்றமை, போதுமானளவு தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டமை, நகர்ப்புறங்களில் காணப்படும் முறைசாராத் துறையின் பருமன், கற்றோர் மத்தியில் நிலவும் வேலையின்மை போன்ற காரணங்களால் மேற்படி உயர்ந்தளவிலான குறைதொழில் வாய்ப்பு நிலை நிலவுகின்றது.

பிரதேச வாரியாக நோக்குமிடத்து நகர்ப்புறங்களில் இந்நிலை குறைவாகவும் (16%) கிராமப் புறங்களில் மிக உயர்வாகவும் (25%) தோட்டத்துறையில் கணிசமாகவும் (20%) காணப்படுகின்றது. ஆண்களை விடப் பெண்களே அதிகளவு குறைதொழில் வாய்ப்பு நிலையில் உள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

5. வேலையின்மை

இலங்கை மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி மற்றும் சமூக ஆய்வின் படி வேலையற்ற நபரொருவரைப் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யலாம்.

வேலையற்ற நபரொருவர் என்பது, தொடர்புடைய காலப்பகுதியொன்றில் கூலி அல்லது சம்பளத்தின் பொருட்டு அன்றேல் இலாபத்தின் பொருட்டு அல்லது குடும்ப பொருளாதார நிலையை மேம்படுத்தற் பொருட்டு யாதேனுமொரு தொழிலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கையில் அந்த தொழில் வாய்ப்பு கிடைக்காதிருப்பதனைக் கருதலாம். மொத்த ஊழியப்படையில் இவ் வாறு வேலையற்ற நிலையில் உள்ள நபர்க ளின் சதவீதத்தினை வேலையின்மை வீதம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் வேலையின்மையின் போக்குகள்

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1963 | 15.3 | 20.0 | 16.6 |
| 1968 | 11.2 | 20.1 | 14.3 |
| 1971 | 14.3 | 31.1 | 18.7 |
| 1978 | 9.2 | 24.9 | 14.8 |
| 1982 | 7.8 | 21.3 | 11.7 |
| 1990 | 11.8 | 23.4 | 15.9 |
| 1995 | 8.8 | 18.8 | 12.3 |
| 2000 | 5.8 | 11.1 | 7.8 |
| 2005 | 5.3 | 10.7 | 7.2 |
| 2007 | 4.3 | 9.0 | 6.0 |
| 2008 | 3.6 | 8.0 | 5.2 |
| 2009 | 4.3 | 8.6 | 5.8 |

அட்டவணையின் பிரகாரம் இலங்கை யின் வேலையின்மை வீதம் படிப்படியாகக் குறைந்து சென்றுள்ளமை தெளிவாகின்றது. ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்கள் மத்தியிலான வேலையின்மை சார்பளவில் மிக உயர்வாக உள்ளமை அவதானிக்க முடி கின்றது. அண்மைய ஆண்டுகளில் வேலை யின்மை வீதத்தில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட் டுள்ளது.

முழுப் பொருளாதாரத்தினதும் விரி வாக்கம் காரணமாக தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டமை. அரச கொள்கை கார ணமாக அரச துறையிலே அதிகளவா னோர் இணைத்துக் கொள்ளப்பட்டமை, ஊழியச் சந்தை பற்றிய தகவல்கள் பரவலாக தொழில் தேடுவோருக்கு கிடைக்கின்றமை தொழில்சார் மற்றும் ஆயத்தப்படுத்தற் பயிற்சி வகுப்புகளின் விரிவாக்கம் போன்றன அண்மைக் காலத்தில் வேலையின்மை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களில் சிலவாகும்.

இலங்கையில் நிலவும் வேலையின்மையின் முக்கிய பண்புகள்

1. இலங்கையில் நிலவும் வேலையின்மை இளைஞர்கள் இடையிலான வேலையின்மையாகும். இது 2009ம் ஆண்டின் தரவுகளின்படி 15-29 வயதுப் பிரிவினரிடையே 36.3% ஆகவும் 30-39 வயதுப் பிரிவினரிடையே 3.7% ஆகவும் 40 வயதிற்கு மேற்பட்ட பிரிவினருக்கிடையிலான வேலையின்மை 1.4 % ஆகவும் காணப்படுகின்றது.

2. இலங்கையில் நிலவும் வேலையின்மை கற்றோர் மத்தியில் நிலவும் வேலையின்மையாகும். நபர்களின் கல்வி மட்டம் அதிகரிக்கின்ற போது அவர்கள் மத்தியில் வேலையின்மையும் உயர்கின்றது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண மற்றும் உயர்தரம் அத்துடன் அதற்கு மேற் பட்ட தகைமை கொண்டோர் மத்தியி லான வேலையின்மை 2009இல் 11.2% ஆகக் காணப்பட இது 1980களில் 40% ஆகக் காணப்பட்டிருந்தது. இவ்வாறு கற்றோர் மத்தியில் வேலையின்மை உயர்வாக இருப்பதற்கு ஏதுவான காரணிகள் சில பின்வருமாறு:

1. பொருளாதார வளர்ச்சி மந்தகதியடைதல்.

2. கல்விசார் திறன்களுக்கும் தொழில் தேவைப்பாடுகளுக்கும் இடையில் நிலவும் பொருத்தப்பாடின்மை.

3. அரச தொழில்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தன்மை.

4. ஊழியச் சந்தையில் நிலவும் இறுக்கத் தன்மை.

ஆகிய காரணிகளைக் குறிப்பிடலாம் அண்மைக் காலத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் அவர்களின் வினைத்திறன் பற்றி அனேக குறைபாடுகள் நிலவுகின்றன.

3. இலங்கையின் வேலையின்மை பெண்களின் பிரச்சினையில் அதாவது ஒப்பீட்டு ரீதியில் ஆண்களை விடப் பெண்களே அதிகளவில் வேலையற்ற நிலையில் காணப்படுகின்றனர். 2008 இல் ஆண்களின் வேலையின்மை 3.6% ஆக இருக்க பெண்களின் வேலையின்மையானது 8% ஆக இருமடங்கிற்கு மேல் அதிகரித்துக் காணப்பட்டது.

4. தொழில் எதிர்பார்க்கைகளின் அடிப்படையில் நோக்குமிடத்து வேலையற்றிருப்போரின் பெரும் பங்கினர் 22% எதிர்பார்த்திருப்பது எழுதுவினைஞர் தரத்திலான தொழில் வாய்ப்பிற்கேயாகும். 1% வீதத்திற்கும் குறைவானோர் படைத்துறை, விவசாயம், சேவைத் துறையில் இணைவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

5. வேலையற்றிருக்கும் காலப்பகுதியினை நோக்குமிடத்து வேலையற்றிருப்போரில் 57% மானோர் ஒரு வருடத்திற்கு குறைவான காலப் பகுதியிலும் 23% மானோர் இரு வருடங்களுக்கு மேற்பட்ட காலப் பகுதியிலும் வேலையின்மையால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர்.

## இலங்கையில் வேலையின்மை குறைவதற்கான காரணங்கள்

1. பொருளாதாரத்தின் 3துறைகளிலும் ஏற்படும் சாதகமான வளர்ச்சிப் போக்கு.
2. சுனாமிக்குப் பின்னரான மீள் கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகள்.
3. பட்டதாரிகளில் ஒரு தொகுதியின ருக்கு அரச துறையில் வேலைவாய்ப்பு வழங்கியமை.

4. தனியார் துறையில் ஊழியச் சந்தை பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றதுடன் உரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டமை.

5. மிக அண்மைக் காலமாக தொழில் தேடுவோருக்கான பயிற்சி நெறிகள் அறிமுகமானமை. (அரச, தனியார்)

6. சுயதொழில் வாய்ப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு.

## இலங்கையின் வேலையின்மையைக் குறைக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

1. தனியார், அரச துறைகளில் முதலீடுகளை அதிகரித்தல்.

2. தேசிய ரீதியில் ஊழியச் செறிவான உற்பத்திகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

3. வெளிநாட்டு வேலை வாய்ப்புக் களை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

4. தொழில் வாய்ப்புக்களுக்கு ஏற்ற வகையில் கல்விச் சீர்திருத்தங்களை மேற் கொள்ளல்.

5. கைத்தொழில்களின் அடித்தளத்தை விரிவாக்கல்.

6. உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.

7. கிராமிய மட்டத்தில் சிற்றளவுக் கைத்தொழில்களை ஊக்குவித்தல்.

8. ஓய்வுபெறும் வயதெல்லையை மாற்றியமைத்தல்.

9. சுயதொழில் வாய்ப்புக்களை விரிவாக்கல்.

Reference


(i) www.Google. Tamil. com

(ii) பொருளியல் நோக்கு - 2000

(iii) மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2009

(iv) அறிவுத்தேடல் சஞ்சிகை - 2009

(v) மத்திய வங்கியின் பொன் விழாச் சிறப்பு மலர்

# இலங்கையின் சமாதான நடவடிக்கையும் போருக்குப் பின்னரான அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளும் பொருளாதார நன்மைகளும்

*Miss. T. Sivaruby,*
*Former Temporary, Assistant Lecturer,*
*Department of Economics,*
*University of Jaffna.*

சுதந்திர இலங்கையின் கடந்த அறுபது வருட கால வரலாற்றில் குறுகிய இனவாத பண்புகளை மறந்து "இலங்கையர்" என்ற தேசிய அடையாளத்தை கட்டி எழுப்ப ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசுகளும் முயன்றன. ஆனால், இலங்கை அரசு கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அழிவை மட்டும் பிரதி கூலமாகப் பெறும் யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்து வந்தது. ஆனால், 2009ம் ஆண்டு நடுப்பகுதி யளவில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட் டது.

இந்த வகையில் 1980களில் இலங்கை யில் ஆரம்பமான இனயுத்தம் இடையிடையே பல்வேறு சமாதான நடவடிக்கைகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது இவ் முப்பது வருட கால யுத்தத் தின் பொருளாதார விளைவுகள் எனும் போது,

- பல இலட்சக்கணக்கான மனித வளங் கள் இழக்கப்பட்டன. பலர் அங்கவீனர் களாயினர்.
- வடக்கு, கிழக்கு பொருளாதார செயற் பாடுகள் சீர்குலைக்கப்பட்டு வறுமை நிலை தோற்றம் பெற்று காணப்பட்டது. Eg: மீன்பிடி, விவசாயம் போன்றன வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது.
- சுகாதார அடித்தள அமைப்பு வசதிகளின் வீழ்ச்சி இதனால் தாய் சேய் இறப்பு வீதங்கள் அதிகரித்துக் காணப்பட்டது.
- கல்வித்துறை வீழ்ச்சி நிலையில் இரு ந்தது எடுத்துக் காட்டாக யாழ்.மாவட் டத்தில் க.பொ.த. உ/த பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் 63% ஆகக் காணப்பட 1996இல் இது 33% ஆக வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது.
- புத்தி ஜீவிகளினதும் பயிற்றப்பட்ட ஊழி யர்களினதும் வெளியேற்றம். இதனால் நாடு பொருளாதார ரீதியான நட்டத்தை எதிர் கொண்டது.
- நாட்டின் பணவீக்கம், வட்டி வீதம் என்பன அதிகரித்துச் சென்றது.
- யுத்தத்தினால் பல பில்லியன் ரூபா வீணடிக்கப்பட்டிருந்தது.
- வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சி அடை ந்து காணப்பட்டது. 1983 – 1996 வரை இலங்கைப் பொருளாதாரம் இழந்த வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி சுமார் 495 பில்லியன் ரூபா எனக் காணப்பட்டது.
- இதேபோன்று சுற்றுலாத்துறை, பணி கள் துறை என்பனவும் வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது.

இதன் பின்னர் 2002.02.22 இல் ஏற் பட்ட சமாதான நடவடிக்கையைத் தொடர்ந்து மீண்டும் இலங்கைப் பொருளாதாரம் வலுப் பெற்றது. இது உற்பத்தி அதிகரிப்பு, புதிய சந்தை வாய்ப்புக்கள், முதலீட்டு அதிகரிப்பு, தொழில் மற்றும் மூலதன சந்தைகளுக்கு புத்துயிர் அளிக் கப்பட்டது போன்ற பல நன்மைகளைப் பெற்றுத்

தந்தது. இதன்போது வடக்கு கிழக்கு பகுதிகளின் உற்பத்தி நிலங்கள் அதிகரித்து நெல் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. மீன்பிடி தொழிலுக்கான மணித்தியாலங்கள் நீடிக்கப்பட்டு மீன்பிடி உற்பத்தி அதிகரித்தது. குறிப்பாக 12 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த A-9 பாதை மீண்டும் திறக்கப்பட்டமை இவ் வளர்ச்சிக்கு உறுதியளித்தது. வடக்கு, கிழக்கு பகுதியில் புதிய தொலைத் தொடர்பு இணைப்புக்கள் வழங்கப்பட்டன. இலங்கைத் துறைமுகங்களை வந்தடையும் கப்பல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த யுத்த இடர் நேர்வுக் காப்புறுதிக் கட்டணம் 2002ம் ஆண்டு நீக்கப்பட்டமையாலும் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் மேம்பட்டன.

இதனைவிட அரசிறை நன்மைகள் என்ற வகையில் பாதுகாப்பு செலவினம் குறைக்கப்பட்டமை, இது வரை காலமும் 100 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட பாதுகாப்பு செலவு 2002இல் 60 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டது. இது வரவு செலவுத் திட்ட பற்றாக் குறையை குறைக்க காரணமாகியது. 2002 இல் 330 மில்லியன் US டொலர், வெளிநாட்டு முதலீடாக வரவழைக்கப்பட்டது. பங்குச் சந்தை வளர்ச்சி அடைந்தது. 2002 ஜனவரியில் 562 ஆகக் காணப்பட்ட பங்கு விலைச் சுட்டெண் 2002 டிசம்பரில் 815 ஆக அதிகரித்தது. இவ்வாறாக 2002ல் ஏற்பட்ட சமாதான நடவடிக்கை பல நன்மைகளை இலங்கைப் பொருளாதாரத்திற்கு அளித்திருந்தது.

பின்னர் 2006ம் ஆண்டு இந்நிலைமை மாற்றம் அடைந்து 2006ம் ஆண்டு ஓகஸ்ட் 11ந் திகதி மீண்டும் A-9 வீதி மூடப்பட்டது. இதன் பின்பு வடக்கு கிழக்குப் பகுதியில் தீவிரமான பொருட் தட்டுப்பாடு நிலவியது. நெல்லிற்கான விலை தொடர்ந்து அதிகரித்ததுச் சென்றது. நாட்டில் ஸ்திரமற்ற நிலை பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக நிலவியது. மீண்டும் 2009இல் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதுடன் A-9 வீதியும் திறக்கப்பட்டது. யுத்தம் அற்ற இச் சூழ்நிலையில் இலங்கைப் பொருளாதாரம் பல நன்மைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. இதனைத் தொடர்ந்து அரசு நாடு முழுவதும் பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. கடந்த 5 ஆண்டுகளாக 6% பொருளாதார வளர்ச்சி வீதத்தை அனுபவித்துக் கொண்டு வரும் இலங்கைப் பொருளாதாரத்தை 8% வீதத்திற்கு உயர்த்துவது எனத் திட்டமிடப்பட்டது. இலங்கைப் பொருளாதாரத்திற்கு மேல் மாகாணம் 45% பொருளாதாரப் பங்களிப்பை வழங்க வடக்கு மாகாணம் 3% பங்களிப்பையும் கிழக்கு மாகாணம் 5% பங்களிப்பையும் வழங்கி வந்தது. இதனைக் கருத்தில் கொண்டு அரசு வடக்கு கிழக்கு பகுதிகளில்

- வடக்கின் வசந்தம்
- கிழக்கின் உதயம்

போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. இதன் காரண மாக அரசின் மொத்த முதலீடு மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக 32%ற்கு உயர்வடை யும் எனவும் தனியார் முதலீடு 24%ற்கும் அரச முதலீடு 8%ற்கும் பங்களிப்பு செய்யும் என 2009ல் எதிர்வு கூறப்பட்டது.

இவ்வகையில் வடக்கு மாகாணத்தினை நோக்கின் இது யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கி உள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் 8, 884 சதுர கிலோ மீற்றர்களை உள்ளடக்கி 13.6 சதவீதப் பரப்பைக் கொண்டுள்ளது. இங்கு நாட்டின் மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 6.5 சதவீதமான சனத்தொகையை வடமாகாணம் கொண்டுள்ளது. இவ் வகையில் வடக்கு மாகாணம் 1980களின் ஆரம்பத்தில் வேளாண்மை, கால் நடை, மீன்பிடி, சிறிய தயாரிப்பு மற்றும் ஆடைகள் போன்ற சிறு அளவிலான கைத்தொழில்களில் சிறந்து விளங்கியது. பின்பு ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் வடக்கு மாகாணத்தின் பங்களிப்பு 2007 இல் 2.9 சதவீதத்திற்கு மட்டுமே வகை கூறியது. 2005இல் குடித்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினால் நடத்தப்பட்டதொரு அளவீட்டின்படி வட

மாகாணத்தில் மாதமொன்றிற்கு வீட்டுடமை யாளரின் சராசரி வருமானம் தேசிய சராசரி யான ரூ. 20.048 உடன் ஒப்பிடும் போது மாதமொன்றிற்கு ரூ 16, 725 ஆகக் காணப் பட்டது. இந்நிலையில் மீண்டும் வட மாகா ணத்தை கட்டி எழுப்ப வடக்கின் வசந்தம் நிகழ்ச்சி திட்டத்தை 2010 – 2012 அரசு ஏற் படுத்தியது. இதன் கீழ் ரூ. 294.9 பில்லியன் செலவீடு செய்யப்படுகிறது.

இவ் செயற்திட்டக் காலத்தில் மிக முக்கியமான துறைகளான நிதியத்தின் அளவு என நோக்கும் போது

– மனித குடியிருப்பு அபிவிருத்தி (ரூ.45.7 பில்லியன்)

– பொருளாதார உட்கட்டுமானங்களை மேம்படுத்தல் (ரூ 176.2 பில்லியன்)

– சமூக உட்கட்டுமானங்களைப் பலப் படுத்துதலும் சமூக சேவைகளைப் பேணுதலும் (ரூ. 29.3 பில்லியன்)

– சமூக பாதுகாப்பும் வாழ்வாதார அபிவிருத்தியும் (ரூ 15 பில்லியன்)

– உற்பத்தித் துறைகளுக்குப் புத்துயிரளித் தல் (ரூ. 28.4 பில்லியன்)

என காணப்படுகின்றது.

இதன் கீழ் அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டமான ரூ. 2.112 மில்லியன் செலவிலான "ரண்டொர" திட்டத்தில் மன்னார் பாலத்தின் கட்டுமானம் மற்றும் ரூ. 11,800 மில்லியன் செலவிலான யாழ்ப்பாணத்தின் நீர் வழங்கல் செயற்றிட்டம் போன்றன அடையாளம் காணப் பட்டுள்ளன. மேலும் இதன் கீழ் கமநெகும (கிராம மீளெழுச்சி) செயற்றிட்டம், காங்கேசன் துறை துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டம் போன்றன உள்ளடங்குகின்றன.

இவ்நிகழ்ச்சித் திட்டமானது பின்வருவ னவற்றை பிரதான குறிக்கோள்களாக கொண் டுள்ளது. மீளக் குடியமர்த்தல், வாழ்வாதா ரங்கள் மற்றும் நீர் வழங்கல், சுகாதாரம், மின் வலு மற்றும் கல்வி வசதிகள் போன்ற அடிப் படைத் தேவைகளை மீள ஏற்படுத்துவதுவதற்கு பொருளாதார உட்கட்டமைப்பின் புனரமைப்பு மற்றும் மீள் நிர்மாணம் மற்றும் மாகாணத்தில் வருமானத்தை உழைக்கும் செயற்பாடுகளை, உருவாக்கல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு உள்ளது. வடக்கையும், தெற்கையும் இணைக்கும் புகையிரதப்பாதை மற்றும் பெருந் தெருக்களையும் பாடசாலைகள், வைத்திய சாலைகள், அரச அலுவலகங்கள் மற்றும் ஏறத்தாழ 80,000 வீடுகள் போன்றவற்றை மீளக் கட்டமைப்பது இந்த திட்டத்தில் எதிர் பார்க்கப்படுகின்றது. மீள் கட்டமைப்பு மற்றும் மீள் குடியேற்றதிட்ட செயற்பாடுகளை ஆரம் பிப்பதற்குமாக ரூ 3000 மில்லியன் ஒதுக்கீடு செய்துள்ள வேளையில் வடமாகாணத்தில் மீள் குடியேற்ற நிகழ்ச்சி திட்டங்களைக் கொண்டு நடாத்துவதற்காக ரூ 500 மில்லியன் தொகை மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண பணிகள் அமைச் சிற்கு வழங்கப்பட்டு உள்ளது.

மக்களின் வாழ்வாதாரங்களை மீள ஏற்படுத்துவதற்கு மீன்பிடி வேளாண்மை, வேளாண்மைப் பதனிடல், பனை தெங்கு மற்றும் மரமுந்திரிகை பயிரிடல் போன்றவற்றை உள்ள டக்கி கிராமத்தை அடிப்டையாகக் கொண்ட நுண்பாக கைத்தொழில்களை முக்கிய மைய மாகக் கொண்ட பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங் கள் நடுத்தர காலத்தில் நடைமுறைப்படுத்தப்ப டவுள்ளன. கண்டியையும் யாழ்ப்பாணத்தை யும் இணைக்கின்ற நெடுஞ்சாலை யாழ்ப்பாண நீர்வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்கள், மன்னார் பாலம், வவுனியா, கிளிநொச்சி, மின் கடத்தல் செயற்திட்டம் போன்றனவும் யாழ் பல்கலைக்கழத்தை விஸ்தரித்தல் போன்றன வும் திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும் காங்சேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மற்றும் பரந்தன் இரசாயன தொழிற்சாலை போன்றனவும் மீள அமைக்கப் படும். பனை சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏனைய வேளாண்மை உற்பத்திகளான வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, மர முந்திரிகை மற்றும் மாம்பழம் போன்றன வற்றை பதனிடல் போன்றவற்றில் சுய வேலை

வாய்ப்பு சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. A9 மற்றும் A32 நெடுஞ் சாலைகளைத் திறப்பதன் மூலம் பொருளாதார பாய்ச்சலை அதிகரித்தலும் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

மேலும் மக்கள் புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உதவுவதற்காக வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் பல தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் திருகோணமலை, யாழ்ப்பாணம், நிலாவெளி, அறுகம்குடா மற்றும் பாசிக்குடா ஆகிய இடங்களில் விடுமுறை இல்லங்கள், உல்லாசப் பயண விடுதிகள், உணவகங்கள் போன்றன மீது முதலிடப்படுகிறது. உல்லாசப் பயணத் துறையின் துணைப் பணிகளான பயண மற்றும் மனித வள அபிவிருத்தி உள்ளடங்கலான ஏனைய வள வழங்கல்கள் ஆகியவற்றுக்கான முதலீட்டு வாய்ப்புகளும் அதிகரித்துள்ளது.

இதேபோன்று கிழக்கு மாகாணத்தை நோக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி உள்ளது. கிழக்கு மாகாணமானது நாட்டின் 15 சதவீத நிலப்பரப்பையும் மொத்த சனத்தொகையின் 7.9 சதவீதத்தினையும் பங்களிப்பு செய்த போதும் வறுமை ஆதிக்கம் செலுத்தும் பிரதேசமாக உள்ளது. அத்துடன் இப்பிரதேசம் வேளாண்மை, மீன்பிடி, சுற்றுலாத்துறை போன்ற பல வளங்களை தன்னகத்தே கொண்டு உள்ளது. இந்நிலையில் இப் பிரதேசத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் அரசாங்கமானது "மூன்றாண்டு கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டம்" 2007 – 2010 ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்கு என ரூ 198.5 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன் கீழ் பின்வரும் செயற்றிட்டங்கள் இலக்கிடப்பட்டன.

- இடம்பெயர்ந்தோரின் மீள் குடியேற்றம் (ரூ 21.5 பில்லியன்)
- பொருளாதார உட்கட்டுமானங்கள் (ரூ 84 பில்லியன்)
- சமூக உட் கட்டுமானங்கள் (ரூ. 19 பில்லியன்)
- மனிதக் குடியிருப்புக்கள் (ரூ. 38 பில்லியன்)
- பொது நிறுவனங்களின் இயலளவு விருத்தி (ரூ. 2.2 பில்லியன்)

மேலும் இத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்கள் மாகாணத்திலுள்ள உட்கட்டுமானங்களையும் துணைச் சேவைகளையும் மேம்படுத்தி தரம் உயர்த்துதல், நீடித்து நிலைத்திருக்க தக்க ஓர் பொருளாதார புத்துயிர்ப்பைச் சாத்தியமாக்குதல். தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்தக்கூடிய வகையில் பாதுகாப்பை உறுதிப் படுத்தல், விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்கள், சுற்றுலா ஆகிய துறைகளை விருத்தி செய்தல் போன்றன குறிப்பிடத்தக்கது. கிழக்கின் உதயம் திட்டத்தின் கீழ் திருகோணமலையில் 500 மெகாவாற் நிலக்கரி வலு பொறியினை அமைப்பதன் ஊடாக வலு பிறப்பிக்கும் ஆற்றலை அதிகரிப்பதற்கு கருதியுள்ளது. அத்துடன் திருகோணமலை துறைமுகம் அரச தனியார் பங்குடமையினூடாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் சுற்றியுள்ள 10,565 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்தி துறைமுக நகராக அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றது.

மேலும் இவ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக பல்வேறு வரிச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. போருக்குப் பின்னரான முதலாவது அரங்கமாக "சமாதான நடவடிக்கைளுக்கான நிகழ்ச்சித் திட்ட வியாபார முதலீட்டு அரங்கு யாழ்ப்பாணம்" 2009 யூனில் நடாத்தப்பட்டுள்ளது. தனியார் துறைக்கு உதவுவதற்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 137 வங்கிக் கிளைகளை நிறுவதற்கான ஒப்புதல் மத்திய வங்கியால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வட

மாகாணத்துக்கான மத்திய வங்கியின் பிராந் திய நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இன்று யுத்தம் அற்ற இச் சூழலில் இலங்கையின் சகல மாகாணங்களிலும் பல்வேறு முதலீடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளது. குறிப்பாக அம்பாந்தோட்டையில் "மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்" சர்வதேச துறைமுகமாக புதிதாக தோற்றம் பெற்றுள்ளது. அதுபோல அங்கு சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் சகல மாவட் டங்களிலும் நீர்ப்பாசன குளங்கள், பெருந் தெருக்கள், பாடசாலைகள், அணைக்கட்டுக்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அரசினால் மேற்கொள்ளப் படும் முதலீட்டு திட்டங்கள் உற்பத்தி திறனை அதிகரித்து உயர் மொத்த உள்நாட்டு உற்பத்தி யின் வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தினை மேம்படுத்தல் ஆகியவற்றினையும் உருவாக்கும். இது மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தி வறுமை நிலையினைக் குறைவடையச் செய் யும் அதேவேளை பொருளாதாரத்துக்குப் பங்க ளிப்புச் செய்து நாட்டின் அபிவிருத்தியை விரைவுபடுத்தும்.

யுத்தம் முடிவுற்றதன் பின்னர் இன்று சகல துறை வாரியான வளர்ச்சியை அவதா னிக்க முடிகிறது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் இதுவரை சராசரியாக 6 சதவீதமாக இருந்து வந்தது. இன்று 8.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன் பாதீட்டு பற்றாக்குறை பெருமளவு குறைவடைந் துள்ளது. அதுபோல இலங்கையானது வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவரும் ஓர் நாடாக உள்ளது என கூறப்படுகின்றது. அதாவது "SriLanka is the best country for invest" என்று "Indian times" பத்திரிகை கூறுகின்றது. அதேபோல இலங்கையின் தேயிலை மற்றும் இறப்பருக்கான விலை மற்றும் கேள்வி தொடர்ச்சியாக அதிகரித்து செல்கின்றது. அதேபோல் பங்குச் சந்தையின் துரித வளர்ச்சியை "கொழும்பு பங்குப் பரிவர்த்த னையின்" தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

இவ்வகையில் முடிவாக நோக்கும் போது இலங்கை யுத்தம் முடிவுற்ற பின்னரான இன்றைய சூழலில் சகலதுறை ரீதியாகவும் அதீத வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதுடன் பாரிய பொருளாதார நன்மைகளையும் வழங்குகின்றது. இதற்கு இன்று அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முதலீட்டு திட்டங்கள் பாரிய வாய்ப்பாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரித்து இலங்கையை அபிவிருத்தி நோக்கி நகர வழி வகுக்கும்.

## References


1. பொருளியல் நோக்கு – பெப் / மார்ச் 2010
2. http : // en.wikipedia.org
3. வர்த்தகி – 2004
4. http :w.w.w.lankan news papers.com
5. http :w.w.w.theodora.com
6. பொருளியல் நோக்கு – ஐப்பசி / கார்த்திகை 2009
7. மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2007
8. மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2008
9. மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2009
10. http :// w.w.w.treuters .com

# பொதுச் செலவினம் தொடர்பான பருநிலை மாதிரிகளும் இலங்கையின் பொதுச்செலவினப் போக்கும்

*Mr. R. Raheesan,*
*Economics Special,*
*2007/A/174*

அரசாங்கமானது சமுகநீதி கருதி அபிவிருத்தியினை நோக்கமாக கொண்டு பொதுச் செலவினங்களை மேற்கொள்கின்றது. அரசாங்கத்தின் கொள்கைத் தெரிவுகளை பொதுச் செலவினம் என்பது பிரதிபலிக்கின்றது. பொதுத்துறை பாதீட்டின் ஊடாக பொருட்கள் சேவைகள் வழங்குவதனை பொதுத்துறை செலவினம் எனப்படுகின்றது. பொதுத்துறை செலவினத்துக்குள் முக்கியமாக மூன்று விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

1. நடைமுறைச் செலவு
2. மூலதனச் செலவு
3. தேறிய கடன் வழங்கல்

நாட்டை நிர்வகிப்பதற்கும் மக்களின் பல்வேறு வகையான அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்கும் நடைமுறைச் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மூலதனச் செலவு என்பது ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி, அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் செலவிடுகின்ற தொகையினை குறிக்கின்றது. நீண்ட கால அபிவிருத்தியினை நோக்கமாக கொண்டு மூலதனச் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தேறியகடன் வழங்கல் என்பது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன்களில் திருப்பி செலுத்தப் பட்டது போக எஞ்சியுள்ள கடன்களே தேறிய கடன் வழங்கல் ஆகும்.

பொதுவாக எந்தவொரு நாட்டினதும் அனுபவத்தினை நோக்குகின்ற போது பொதுச் செலவினமானது தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதனை அவதானிக்க முடியும். மொத்த செலவானது பெறுமதி ரீதியில் அதிகரித்து செல்வதற்கு காரணங்களாக சனத்தொகை அதிகரிப்பு, விலைமட்ட உயர்வு, நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பு, உள்நாட்டு யுத்தங்கள் என்பன காரணமாக அமையலாம்.

பொதுச் செலவின வளர்ச்சி தொடர்பாக 2 வகையான மாதிரிகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

1. பேரின மாதிரிகள் (Macro Models)
2. சிற்றின மாதிரிகள் (Micro Models)

பேரினமாதிரிகள் என்பதற்குள்

1) அபிவிருத்தி மாதிரி (Development Model)

2) வைக்னரின் விதி (Wagner's Law)

3) பீக்கொக், வைஸ்மன் மாதிரி (Peacock and wiseman's model) என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. பேரின மாதிரிகள் தொடர்பாக விளக்கங்களை நோக்குவோம்.

## 1. அபிவிருத்தி மாதிரி (Development Model)

அபிவிருத்தி மாதிரியானது மஸ்கிரோவ், றொஸ்ரவ் ஆகியோரால் முன் வைக்கப்பட்டது. "பொதுச்செலவின் வளர்சிச்யினு

டைய அபிவிருத்தி மாதிரி" எனும் நூலில் இவர்கள் எவ்வாறு பொதுச் செலவினங்கள் வளர்ச்சியடைந்து செல்கின்றன என்பதை விளக்கியிருந்தார்கள். றொஸ்ரோவ் வரலாற்று ரீதியாக நாடுகளின் அபிவிருத்தியினை ஆராய்ந்த போது ஒரு பொருளாதாரம் வெவ் வேறு கட்டங்களில் அதற்கு தகுந்த மாதிரி பொதுச் செலவினங்கள் மாறுபட்டு செல்லும் என விளக்கியிருந்தார். றொஸ்ரோவ் அபிவிருத்தி கட்டத்தினை 5 வகையாக குறிப்பிடுகிறார்.

1 மரபார்ந்த சமூகம் (Traditional Society)

2.மேலெழுவதற்கான முன் நிபந்தனை (Pre Condition to take off period)

3. மேலெழும் காலம் (Take off Period)

4. முதிர்ச்சிக் காலம் (Maturity Period)

5. பெருநுகர்ச்சிக் காலம் (Mass Consumption Period)

றொஸ்ரோவ்வின் கருத்துப்படி ஆரம்பத் தில் மரபார்ந்த சமூகத்தில்மொத்த முதலீட் டில் பொதுத்துறை முதலீடு அதிகமாக காணப்படும். ஏனெனில் ஆரம்பத்தில் அபிவிருத்திக்கு அவசியமான உட்கட்டு மானங்களான கல்வி, சுகாதாரம், போக்கு வரத்து, தொடர்பாடல், சட்டம், ஒழுங்கு, வீதியமைப்பு என்பவற்றின் மீது அரசு அதிகம் செலவு செய்கிறது. இதனால் முதலாவது கட்டத்தில் பொதுச் செலவினங்கள் மிகை யாக காணப்படும். 2வது காலகட்டமான மேலெழுவதற்கான முன்நிபந்தனை கால கட்டத்தில் பொருளாதாரம் வளர்ச்சியடைய தொடங்கும் போது அடுத்த கட்டமாகிய மேலெழும்கால கட்டத்தினை அடைகின்றது. இந்த 3வது கட்டத்தில் சேமிப்பு வீதம் மிகவும் அதிகமாக காணப்படும் என்கிறார். 3வது கட்டத்திலிருந்து பொருளாதாரம் வளர்ச்சியடையும் போது 4வது கட்டமான முதிர்ச்சி காலத்திற்கு பொருளாதாரம் மாற்ற மடையும் எனவும் இந்நிலையில் சமூக பொருளாதார உட்கட்டுமானம் என்ற நிலை யிலிருந்து தனியே சமூககட்டுமானம் என்ற நிலையை நோக்கி அரசு தன்னுடைய நட வடிக்கையை மாற்றிக் கொள்ளும் எனவும் இவர் குறிப்பிடுகிறார். இதிலிருந்து பொரு ளாதாரம் வளர்ச்சியடைந்து நுகர்வுப் பொரு ளாதாரம் என்ற நிலைக்கு மாற்றமடைந்து பெரு நுகர்ச்சி நிலையினை அடையும் எனவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்வாறான அனுபவம் காணப்பட்டமையால் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும் இந்த படிமுறையூடாகவே வளர்ந்து வரும் என Rostow குறிப்பிட்டார்.

மஸ்கிறேவ்வின் விளக்கத்தின்படி பொருளாதார அபிவிருத்தியோடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக மொத்த முதலீடு அதிகரித்து செல்லும் எனவும் ஆனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக அரச செலவினம் குறைந்து செல் லும் எனவும் விளக்குகின்றார். அதாவது தனி யார் முதலீடுகள் அதிகரித்து செல்லும் என வும் விளக்குகின்றார். அதாவது ஆரம்பத்தில் வளர்ச்சிக்காக அரசு பொருளாதார உட் கட்டுமானங்களுக்காக அதிகளவு முதலீடு களை செய்யும் ஆனால் பொருளாதாரம் வளர்ச்சியடைந்த பின்பு அரசு பெருமளவு முதலீடுகளை செய்ய வேண்டியதில்லை. மாறாக சமூக நலன் தொடர்பான செலவி னங்களை அரசு செய்தால் போதுமானது என Musgrave கூறுகிறார்.

2) வைக்னர் விதி (Wagner Law)

ஜேர்மன் நாட்டு பொருளியல் அறிஞ ரான வைக்னர் என்பவர் 19ம் நூற்றாண்டில் இந்தமாதிரியினை முன்வைத்தார். வைக்ன ரின் கருத்தின்படி பொருளாதாரத்தில் தனி நபர்களின் வருமானம் அதிகரித்து செல்லும்

போது, பொதுத்துறையின் சார்பளவு செலவினங்களும் அதிகரித்து செல்லும் என்பதாகும். வைக்னரின் அவதானிப்புகளின் படி மொத்த தேசிய உற்பத்தியில் பொதுத் துறை செலவினங்கள் என்ற விகிதாசாரத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. வைக்னர் 19ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளினதும், ஜப்பான் நாட்டினதும் பொதுத்துறை வளர்ச்சியினை அவதானித்து அதன் அடிப்படையில் தனது விளக்கத்தை முன்வைத்துள்ளார். வைக்னர் இன் கருத்துப்படி பொதுச் செலவின் அதிகரிப்புக்கு இரண்டு காரணிகளை முன்வைத்துள்ளார்.

1. பொருளாதாரக் காரணி
2. அரசியல் காரணி


பொருளாதாரக் காரணி விளக்கத்தின்படி வருமானம் அதிகரிக்கும் போது கல்வி, சுகாதாரம், போக்குவரத்து சேவைகள், தொடர்பாடல் போன்றவற்றுக்கான கேள்வி அதிகரித்து செல்லும். இவற்றின் வருமானம் சார் கேள்விநெகிழ்ச்சி 1இனைவிட அதிகம் என்பதால் வருமானம் அதிகரிக்கும் போது கேள்வி பெருமளவாக அதிகரிக்கும். எனவே கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு அரசு பெருமளவு அரச செலவினங்களை செய்ய வேண்டும் என்றார்.

வைக்னரின் அரசியல் காரணி விளக்கத்தின்படி ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் கைத்தொழில் மயமாக்கம் ஏற்படும் போது விரிவடையும் சந்தைகளுக்கும் இச் சந்தை முகவர்களுக்குமிடையிலான உறவுகள் மேலும் சிக்கல் நிறைந்தவையாக அமைகின்றன. இந்த இடைத் தொடர்புகளின் சிக்கல் தன்மையானது வணிக சட்டங்கள் ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் அவசியத்துக்கு இட்டுச் செல்கின்றது. எனவே இத்தகைய சிக்கல் தொடர்புகளை ஒழுங்குபடுத்துவதற்கு நீதி நிர்வாகம், சட்டம் போன்ற பல நிறுவன அமைப்புகள் தேவைப்படுகின்றன. எனவே அரசாங்கமானது தனது செலவினங்களை அதிகரிக்க வேண்டி ஏற்படும் என்றார். மேலும் நகரமயமாக்கல் ஏற்படும் போது அது சனத்தொகை செறிவினை அதிகரிப்பதன் காரணமாக நெருக்கடி நிலைமைகளும் வெளிவாரி விளைவுகளும் அதிகரிப்பதால் அரசாங்கமானது பொதுத்துறை செலவினங்களை அதிகரிக்க வேண்டியேற்படும் என்றார்.

3. பீக்கொக், வைஸ்மன் மாதிரி (Peacock - wiseman model)


பீக்கொக், வைஸ்மன் மாதிரி பொது செலவினம் பற்றி கால அடிப்படையில் விளக்குகின்றது. அரசியல் கோட்பாடு அடிப்படையில் பொதுத்துறை செலவினம் பற்றி விளக்கியுள்ளார். இவர்களது கருத்துப்படி அரசாங்கம் பொதுமக்கள் தாங்கக்கூடிய வரிமட்டம் ஒன்றினை நிர்ணயம் செய்யவேண்டும். ஏனெனில் பொது மக்கள் கூடியளவு வரியினை செலுத்துவதற்கு விரும்புவதில்லை ஆனால் அரசாங்கம் வாக்குகளை பெறுவதற்கு பொது மக்களின் விருப்பம் மீது அக்கறை செலுத்த வேண்டி ஏற்படுகிறது.

சாதாரண காலங்களில் பொதுத்துறை செலவினம் படிப்படியாக அதிகரித்து செல்லும் தன்மை கொண்டிருக்கும் ஆனால் அசாதாரணமான ஒரு சூழ்நிலையில் சமூக குழப்பங்கள், யுத்தங்கள் போன்ற நிலைமைகளில் பொது செலவினங்களின் சாதாரணமான அதிகரித்த போக்கில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அசாதாரண சூழலில் பொதுச் செலவினமானது இடம்பெயர் விளைவுக்கு (Displacement effect) உட்பட்டு பின் நெருக்கடி நிலை முடிவடைந்த பின்னர் அது மீண்டும் ஆரம்பத்தில் அதிகரித்து சென்றது போன்ற பழைய நிலைக்கு மீண்டுவிடும் என்றனர். அத்துடன் பொதுச் செலவினத்தில் இடம்பெயர் விளைவு ஏற்படும் போது தனியார் செலவினமும் வீழ்ச்சியடையும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.





வரைபடத்தின்படி போருக்குமுன் அரசாங்க செலவினங்கள், தனியார் செல வினங்கள் அதிகரித்து செல்கின்றன. ஆனால் யுத்த காலத்தில் பொது செலவினங்கள் சடுதியாக அதிகரிக்கும் அதே நேரம் தனி யார் செலவினங்கள் பெருமளவில் வீழ்ச்சி யடைகின்றன. ஆனால் போர் முடிவடைந்த பின் பொதுச்செலவினங்களும் தனியார் செலவினங்களும் பழைய நிலைக்கு திரும்பி சீராக அதிகரித்து செல்வதை வரை படம் விளக்குகின்றது.

இங்கு போருக்கு பின்னர் அரச செல வினமானது பழைய நிலைக்கு திரும்பி அதிகரித்து செல்லும் என்பதில் பலர் முரண் படுகின்றனர். அதாவது நெருக்கடி நிலை நீங்கிய பின்னர் அரச செலவினங்கள் கடந்த கால போக்கிற்கு திரும்பிச் செல்லாது என் பதனை வலியுறுத்துகின்றனர். ஏனெனில் யுத்தத்தின் போது அதற்கு தேவையான செல வினங்களை செய்வதற்கு வரியின் மூலம் மட்டும் வருமானம் பெறமுடியாது. மாறாக பிறநாடுகளிடமிருந்து கடன்கள் பெறப்படும் எனவே இக்கடன்கள் திருப்பி செலுத்துவ தற்கு குறிப்பிட்டளவு காலம் எடுக்கலாம். எனவே அரச செலவினம் பழைய நிலைக்கு வருவதற்கு குறிப்பிட்டளவு காலம் எடுக்கும் என்பது சிலரது கருத்தாகும். இதனை பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.



இங்கு வரைபடத்தின்படி போருக்கு முன் தனியார் செலவினங்கள், பொதுச் செலவினங்கள் சீரான போக்கில் அதிகரித்து செல்கின்றன. ஆனால் யுத்த காலத்தில் பொதுச்செலவினங்கள் சடுதியாக அதிக ரிக்கும் அதேநேரம் தனியார் செலவினங்கள் வீழ்ச்சியடைகின்றது. ஆனால் போர் காலத் தில் காணப்பட்ட பொதுச் செலவின் அதி கரிப்பு யுத்தத்தின் பின்னரும் அதே வேகத் தில் அதிகரிப்பதை காணமுடிகின்றது. ஆனால் தனியார் செலவினங்கள் போர் முடிவடைந்த பின் போருக்குமுன் காணப் பட்டதனை போன்று சீரான நிலையில் அதி கரித்து செல்வதை வரைபடம் காட்டி நிற் கின்றது.

அடுத்தாக பீக்கொக் பரிசோதனை விளைவு (Inspection effect) என்பதையும் குறிப்பிடுகின்றார். இதன்படி மக்கள் யுத்த காலங்களில் ஏற்படும் சமூக பிரச்சனைகள் பற்றி அறிந்திருப்பதால் அரசாங்கம் தமது சேவைகளை அதிகரிக்க வேண்டும் என்பதற் காக வாக்காளர்கள் அதிகளவு வரியினை செலுத்துவதற்கு முன் வருகின்றனர். இங்கு அரச செலவினமானது போருக்கு பின் வீழ்ச்சி ஏற்படுவதனை அவதானிக்க முடியும் இதனை பின்வரும் வரைபடம் காட்டு கின்றது.




இங்கு வரைபடத்தின் படி போருக்கு பின் அரச செலவினங்களில் வீழ்ச்சி ஏற்படுகின்றது. இங்கு போரின் போது இருந்த நிலையினைவிட போருக்கு பின் அரச செலவினம் வீழ்ச்சியடைந்து பின் சீரான நிலையில் அதிகரித்து செல்வதனை காணமுடிகின்றது. இங்கு நெருக்கடி நிலை மைக்கு பின் அரச செலவின போக்கிற்கு என்ன நடைபெறும் என்பதில் கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்ற போதும் Pea cock இன் ஆய்வு சிறந்ததாக கொள்ள ப்படுகின்றது.

இந்த மூன்று வகையான பேரின மாதிரிகளையும் தொகுத்து நோக்கும் போது அபிவிருத்தி மாதிரியானது அரசாங்க செல வினம் வளர்ச்சியடைந்து செல்வதனையும் அரசாங்கம் அபிவிருத்தியினை அடைவ தற்கு பொருளாதார சமூக உட்கட்டுமானங் களை வழங்குதல் எனும் அடிப்படையிலும் சந்தைத் தோல்வியினை நிவர்த்தி செய்யும் வகையில் அரசு செலவினத்தை அதிகரித்து செல்லும் என கூறுகின்றது. வைக்னர் இம் மாதிரியில் வருமான நெகிழ்ச்சி பற்றி அதிகம் கவனம் செலுத்தியதுடன் சந்தை

தோல்வி தொடர்பாகவும் குறிப்பிட்டார். ஆனால் பீக்கொக் -வைஸ்மன் மாதிரியில் பொதுத்துறை செலவினமானது கால அடிப்படையில் அதிகரித்து செல்வதற்கான அரசியல் காரணங்கள் பற்றி ஆராய் துள்ளனர்.

அடுத்து நாம் இலங்கையின் அரச செலவினங்கள் பற்றி நோக்குவோம். இந்த வகையில் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்று வரையான காலத்தில் பொதுச் செலவினத்தின் போக்கினை நோக்குவோம்.

அரச செலவினம் (பெறுமதி மில்லியன் ரூபாக்களில்)

| ஆண்டு | நடைமுறைச் செலவு | மூலதனம் மற்றும் தேறிய கொடு கடன் | மொத்தம் | செலவினம் GDP இன் வீதமாக |
|---|---|---|---|---|
| 1950 | 461 | 325 | 786 | 20.3 |
| 1955 | 762 | 306 | 1068 | 20.4 |
| 1960 | 1365 | 456 | 1821 | 27.1 |
| 1965 | 1732 | 515 | 2247 | 27.8 |
| 1970 | 2659 | 1013 | 3672 | 26.9 |
| 1975 | 5153 | 2033 | 7186 | 27.0 |
| 1980 | 12319 | 16069 | 28388 | 42.7 |
| 1985 | 32645 | 22589 | 55234 | 34.0 |
| 1990 | 71771 | 28043 | 99814 | 31.0 |
| 1995 | 154159 | 49325 | 203484 | 30.5 |
| 2000 | 254279 | 81544 | 335822 | 26.7 |
| 2005 | 443350 | 141434 | 584784 | 23.8 |
| 2007 | 622758 | 218846 | 841604 | 23.5 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி, குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்

அட்டவணையின் படி இலங்கையின் நடைமுறைச் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் என்பன பெறுமதி ரீதியாக அதிகரித்து செல்வதை காணமுடிகின்றது. 1950களில் 461 மில்லியன் ரூபாக்களாக காணப்பட்ட நடைமுறைச் செலவினம் 1960இல் 1365 மில்லியன் ரூபாக்களாகவும் 1970களில் 2659 மில்லியன் ரூபாக்களாகவும்

1980களில் 12319 மில்லியன் ரூபாக்களாகவும் 1990இல் 71771 மில்லியன் ரூபாக்களாகவும் 2000ம் ஆண்டில் 254279 மில்லியன் ரூபாக் களாகவும் 2007இல் 622758 மில்லியன் ரூபாக் களாகவும் அதிகரித்து செல்வதனைக் காண முடிகின்றது.

நடைமுறைச் செலவினமானது அதி கரித்துச் சென்றமைக்கு காரணமாக இக் காலப்பகுதியில் உணவு உதவி கொடுப்ப னவு நிகழ்ச்சி திட்டம் மிக முக்கிய பங்கு வகித்திருந்தது. இந் நிகழ்ச்சித் திட்டம் அத்தியாவசிய உணவுகளான அரிசி, மா, சீனி போன்றவற்றை உதவிக் கொடுப்பனவு விலைகளில் வழங்குவதாக காணப்பட்டது. 1948 - 1977 காலப்பகுதியில் உணவு உதவிக் கொடுப்பனவு முக்கிய செலவினமாக காணப்பட்டது. 1958 -1977 வரையான காலப் பகுதியில் உணவு உதவிக் கொடுப்பனவு நிகழ்ச்சி திட்டத்தின் சராசரி மொத்த செலவு GDP இன் வீதமாக 4.5 வீதமாக காணப் பட்டது. 1978இல் உணவு உதவி கொடுப் பனவு நிகழ்ச்சி திட்டத்திற்கு பதிலாக உணவு முத்திரைத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. 1989-1994 காலத்தில் ஜனசக்தி திட்டத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 19176 மில்லியன் ரூபாக்களாகும். 1995 இல் ஜனசக்தி திட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதுடன் சமுர்த்தி திட்டம் அறிமுகப்ப டுத்தப்பட்டது. அனைத்து முக்கியமான சமூக நலன்புரி திட்டங்களினையும் சமுர்த்தி யின் கீழ் கொண்டுவருவது குறிக்கோளாக காணப்பட்டது. 1996-97 காலப்பகுதியில் சமுர்த்தி திட்டத்தின் மொத்த செலவு 17017 மில்லியன் ரூபாக்களாக காணப்பட்டது. அரச ஓய்வூதிய பட்டியல் 1948இல் ரூபா22 மில்லியனில் இருந்து 1997இல் ரூபா 18825 மில்லியனாக அதிகரித்திருந்தது. வட்டிக் கொடுப்பனவுகள் 1948இல் 18மில்லியன் ரூபாவிலிருந்து 1997இல் 54086 மில்லியன் ரூபாக்களாக அதிகரித்திருந்தது. அரச மொத்தப்படுகடன் 1948இல் 517மில்லியன் ரூபாவாக இருந்து (GDP இன் வீதமாக 18 வீதம்) 1996இல் 708859 மில்லியன் ரூபாக்களாக (GDP இன் வீதமாக 92 வீதமாக) உயர்வடைந்திருந்தது. பாதுகாப்பு செலவி னமானது சுதந்திரத்தின் போது 0.2 வீதமாக காணப்பட்டது. மொத்த பாதுகாப்புச் செல வினம் 1983வரை GDP இன் வீதமாக 1.5வீதத்திற்கு குறைவாக காணப்பட்டது. 1983க்கு பின் தீவிரமடைந்த இனப்பிரச் சினை, உள்நாட்டு யுத்தம் காரணமாக பாதுகாப்பு செலவு அதிகரித்து சென்றது. 2005 இல் பாதுகாப்பு செலவு 82 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

மூலதனம் மற்றும் தேறிய கடன் வழங்கல் என்பன1950 இல் 325 மில்லியன் ரூபாவாகவும் 1960இல் 456 மில்லியன் ரூபாவாகவும் 1980களில் 16069 மில்லியன் ரூபாவாகவும் 1990களில் 28043 மில்லியன் ரூபாவாகவும் 2000இல் 81544 மில்லியன் ரூபாவாகவும் 2007இல் 218846 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்தது. மூலதன செலவில் ஏற்பட்ட மாற்றத்தினை நோக்கின் 1948 - 1977 வரையான காலப்பகுதியில் மூலதன செலவினம் GDP இன் வீதமாக 7 வீதமாக காணப்பட்டது. இது மொத்த அரச செலவினத்தில் 27வீதமாக காணப்பட்டது. இவ்வாறான மூலதன செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு கல்வி, சுகாதாரம், சமூக நலன்புரி, மின்வலு, வேளாண்மை, போக்கு வரத்து, நீர்வழங்கல், தொடர்பாடல் போன்ற பொருளாதார உட்கட்டமைப்புகளின் அபிவிருத்திக்கு அரசு முதலிட்டமையே காரணமாகும். 1977இல் திறந்த பொருளாதார கொள்கையின் பின்னர் துரித மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி போன்ற வற்றில் அரசு அதிகம் முதலீடு செய்தது. 1978- 90 வரையான காலப்பகுதியில் அரச முதலீட்டு பெறுமதியானது ஆண்டுக்கு சராசரியாக GDP இன் வீதமாக 13 வீதத்திற்கு மேலாக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசாங்க செலவினத்தினை GDP இன் வீதமாக பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அரசாங்க செலவினம் (GDP இன் வீதமாக)

| நாடுகள் | 1880 | 1929 | 1960 | 2002 |
|---|---|---|---|---|
| ஜப்பான் | 11 | 19 | 18 | 37 |
| ஜேர்மனி | 10 | 31 | 32 | 44 |
| அமெரிக்கா | 8 | 10 | 28 | 29 |
| பிரான்ஸ் | 15 | 19 | 35 | 50 |
| பிரித்தானியா | 10 | 24 | 32 | 39 |

Sources : World Bank, OECD Economics out look

அட்டவணையின்படி வளர்ச்சியடைந்த நாடுகளில் அரச செலவினமானது 1880- 2002 காலப்பகுதியில் GDP இன் வீதமாக அதிகரித்து சென்றமையினை காட்டுகின்றது. 2002இல் பிரான்ஸ் GDP இன் வீதமாக 50வீதமாக அரச செலவினத்தினை கொண்டிருந்தது. அடுத்த நிலையில் ஜேர்மனி 44 வீதமாக அரச செலவினத்தை GDP இன் வீதமாக கொண்டிருந்தது. குறிப் பிடத்தக்கது. இதன்படி வளர்ச்சியடைந்த நாடுகள் GDP இன் வீதமாக பெருமளவு அரச செலவினத்தை கொண்டிருப்பதை அவதானிக்க முடியும்.

எனவே முடிவாக நோக்குமிடத்து இலங்கையின் அரச செலவினமும் பேரின மாதிரிகளில் கூறப்பட்டது போன்று அதிகரித்து செல்லும் போக்கினை காட்டி நிற்கின்றது. 1950இல் 786 மில்லியன் ரூபாவிலிருந்து 1960இல் 1821 மில்லியன் ரூபாவாகவும், 1970இல் 3672 மில்லியன் ரூபாக்களாகவும் 1980இல் 28388 மில்லியன் ரூபாவாகவும் 1990இல் 99814 மில்லியன் ரூபாவாகவும் 2000ம் ஆண்டு 335822 மில்லியன் ரூபாவாகவும் 2007இல் 841604 மில்லியன் ரூபாவாகவும் அரசசெலவினம் அதிகரித்திருந்தது. GDP இன் வீதமாக அரச செலவினமானது 1948 இல் 20.5வீதமாகவும் 1970இல் 26வீதமாகவும் 1980இல் 36.6 வீதமாகவும் அதிகரித்தது. பின்னர் 1990இல் 31வீதமாகவும் 2000இல்26.7 வீதமாகவும் 2007இல் 23.5 ஆகவும் குறைவடைந்து செல்லும் தன்மையினை காண முடிகின்றது. இலங்கை அரசாங்கமானது பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்காகவும், அபிவிருத்தியினை பெறுவதற்காகவும் பொதுச் செலவினத்தினை அதிகரித்து வந்திருந்தது. எனினும் 1983இன் பின் உள்நாட்டு யுத்தம் காரணமாக பெருமளவு செலவானது பாதுகாப்பு செலவாக யுத்தத்திற்கு முதலிடப்பட்டமையால் அது நாட்டின் அபிவிருத்திக்கு உகந்ததாக அமையவில்லை. யுத்தம் முடிவடைந்த இன்றைய நிலையில் அரச செலவினத்தினை நாட்டின் அபிவிருத்திக்கு சாதகமாக பயன்படுத்துவதன் மூலம் அபிவிருத்தியினை துரிதமாக அடைய வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

References

1. David Begg, stanley fischer, Rudiger Dorn busch, Economics Seventh edition, the mc graw hill companies, (2003) Page 229-231)
2. Lipsey & Cheystal –Economics- tenth edition Oxford University Press( 2004) Page (428-437)
3. Central Bank Reports – 2005-2006, 2007
4. Economic Review, January/ March 2008
5. சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம், இலங்கை மத்தியவங்கி, 1998

# கிராமிய வறுமையின் உருவாக்கம்

*Mr. V. T. Selvamalai*
*Economics special*
*Temporary Assistant Lecturer,*
*Department of Economics ,*
*University of Jaffna.*

இன்று உலக நாடுகள் யாவற்றிலும் பேசப்படும் ஓர் விடயமாக வறுமை காணப் படுகின்றது. இன்று உலக நாடுகளில் அபிவிருத்தியடைந்த நாடுகள் முதல் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் யாவற்றிலும் வறுமையுள்ளதென்பது எமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். உலக சனத் தொகையில் 1/5 பங்கினர் வறுமையால் பாதிக்கப்படுபவராக அல்லது துன்பப்படு வோராகவுள்ளனர். வறுமை பல்வேறு பரிமா ணங்களில் வரைவிலக்கணப்படுத்தப்படுகின் றது. "மிகக் குறைந்த வாழ்க்கைத் தரத்தினை யாவது அடைய முடியாத நிலைமை" வறுமை யாக நோக்கப்படுகின்றது. இங்கு மிகக் குறைந்த வாழ்க்கைத் தரம் என்பது நாடு ளுக்கு நாடு வேறுபடுகின்றது. எமது நாட்டில் வறுமைக்கோட்டு மட்டம் தீர்மானிக்கப்பட்டு அதற்குக் கீழ்ப்பட்டோருக்கு நிவாரண உதவிகளை அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்குவதனைக் காணலாம். இன்று உலகில் 44 பில்லியன் மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். அவர்களில் கிட்டத்தட்ட 63% மானவர்கள் கிராமிய வறுமைக்குட்பட்டவர்களாகவே காணப்படு கின்றனர். இதிலும் சீனா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் 65% -70% ற்குட் பட்டவர்களும் கிராமிய வறுமைக்குபட்டு வாழ்ந்து வருவதை அவதானிக்கலாம்.

வறுமை தொடர்பான மற்றுமொரு விளக்கமாக முழுவறுமை (Absolute Poverty) சார்பு வறுமை (Relative Piverty) என நோக்கப்படுகின்றது. இதன்படி முழு வறுமை என்பது ஒரு தனிநபர் அல்லது ஒரு குடும்ப அலகு தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வருமானத்தின் அளவைக் குறிப்பிட்டு அவ்வருமான மட்டத்தின் கீழ் உள்ள நிலையை இது குறிக்கும். மாறாக சார்பு வறுமை என்பது வெவ்வேறு வருமா னப் பிரிவினரை உள்ளடக்கி ஒப்பீட்டு ரீதியில் நாகரீக வளர்ச்சி, சுற்றாடல், குடும்ப அந்தஸ்து போன்ற அம்சங்களை கொண்டு விளங்குவதாகும். எனவே இங்கு அடிப் படைத் தேவைகள் முழுவதும் பூர்த்தி செய் யப்பட்ட ஒரு நிலையைக் குறிப்பிடும். பொது வாக கிராமப் புறங்களில் நிலவும் வறுமை சார்பு வறுமையாகக் காணப்படும். நாம் இங்கு கிராமிய வறுமை எவ்வாறு உருவெ டுக்கின்றது என்பது பற்றி எடுத்து நோக்கு வோம்.

## கிராமிய வறுமையின் உருவாக்கம்

கிராமிய வறுமையின் உருவாக்கத் திற்கு தனித்து ஒரு காரணி மட்டும் காரணி யாக அமையாது. அது பல்வேறு காரணிக ளின் கூட்டு மொத்தத்தாலும் வறுமையைத்

தோற்றுவிக்கும். அவ்வாறு உருவான வறுமை இருக்கின்ற பிரச்சினைகளைவிட மேலும் பல புதுப்புது பிரச்சினைகளைத் தோற்றுவித்து கிராம மக்களை வறுமையில் இருந்து மீள முடியாது செய்துவிடுகின்றன.

கிராமிய வறுமையினைத் தோற்றுவிக்கும் காரணிகளை பிரதானமாக பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. புவிசார் மற்றும் சூழல்சார் காரணிகள் (Geographical and Envirornmental factors)

2. அரசியல் மற்றும் சட்டம் (Political and law)

3. சமூகக்காரணிகள். (Social factors)

4. பொருளாதாரக் காரணிகள் (Ecomic Factors)

5. சுகாதாரம் தொடர்பான காரணிகள்.

6. கலாச்சாரக் காரணிகள் (Cultural Factors)

01. புவிசார் மற்றும் சூழல்சார் காரணிகள்

புவி மற்றும் சூழல்சார் காரணிகளில் பின்வரும் இரண்டு காரணிகள் முக்கியமானவை. நிலம், நிலத்தின் தன்மை , நிலவுடமை என்பன முக்கியமானவை. நிலத்தின் தன்மையை உயர், நடுத்தர, குறைந்த செழிப்புத் தன்மை என நோக்க முடியும். கிராமிய மக்கள் தொழில்நுட்பத்தையோ மற்றும் நவீன முறைகளையோ பயன்படுத்துவது குறைவு. இதனால் செழிப்பற்ற நிலங்களைக் கொண்டிருக்கும் மக்கள் உற்பத்தியின் மூலம் செலவுக்கு குறைந்த வருமானத்தையே பெற்றுக்கொள்ள வறுமை அதிகரிக்கின்றது. மேலும் நிலத்தின் செழிப்புத் தன்மையானது மண்ணரிப்பு, மிகையான மந்தை மேய்ப்பு, காடழிப்பு, வெள்ளம், வரட்சி மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக குறைவடைகின்றது. உலகில் 40% விவசாய நிலங்கள் நிலத்தரமிழப்பினை எதிர்நோக்கி நிற்கின்றன. ஆபிரிக்க கண்டத்தில் தற்பொழுதுள்ள நிலைமை தொடருமானால் 2025 ஆம் ஆண்டில் அக்கண்டம் தனது மொத்த குடியிருப்புத் தொகையில் 25% மானவர்களுக்கு மட்டுமே உணவினை வழங்கக் கூடிய பயிர் நிலயங்களைக் கொண்டிருக்கும் இதனால் நிலத்தை நம்பி வாழும் கிராமிய விவசாயிகள் மிகவும் மோசமாக பாதிக்கப்படுபவர். சீனாவில் காடழித்தல் வழியாக கிராமிய வறுமை பரவலடைகின்றது.

கிராமிய வறுமை என்பது நிலவுடமையுடன் தொடர்புபட்டது. கிராமியப் பொருளாதாரக் கட்டுமானம் விவசாயத்தில் தங்கியிருப்பதால் நிலம்சார் உரிமை முக்கியமானது. நிலம் ஒருவரிடம் உரிமையாகும் போது முதலாளி - தொழிலாளி வர்க்கம் தோன்றும் போது நகர மக்களை விட கிராம மக்களே அதிகம் சுரண்டப்படுவர். அகோரப் பசி கொண்ட முதலாளித்துவம் ஊற்றெடுக்கும் பட்சத்தில் கிராமிய வறுமையும் துரிதமடையும். சமவுடமை நிலவும் நாடுகளில் நிலவுடமையானது ஓரளவு சமமாக பங்கிடப்படுவதால் கிராமிய வறுமை குறைவடையும். உதாரணமாக சீனாவில் முழு வறுமையானது 5% ஆகவுள்ளது. அரசு சிலவேளைகளில் வறுமையைத் தடுப்பதற்கு நிலப் பங்கீட்டை மேற்கொள்ளலாம். இதனால் வறுமை குறையலாம். ஆனால் ஒரு சாராரி அந்த நிலப்பங்கீடுகள் தான் மேலும் வறுமை உருவாக அடிப்படையாக அமையும் எனக் குறிப்பிடுகின்றனர். இலங்கை, சிம்பாவே, பலஸ்தீனம் போன்ற நாடுகளில் நிலப் பங்கீடுகள் வெற்றியளிக்கவில்லை. எடுத்துக் காட்டாக இலங்கையை நோக்கின் நிலப் பங்கீடுகள் வெற்றியளிக்கவில்லை. நிலப் பங்கீடுகள் தீர்த்து வைத்த பிரச்சினைகளை விட புதிதாக உருவாகியவையே அதிகம். மேலும் நிலப்பங்கீடுகள். "பிரதானமான சில அரசியல் வாதிகளினதும் நிர்வாகிகளினதும்

பெரிதுபடுத்தப்பட்ட இச்சையை திருப்திப்ப டுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டன" என்றும் இலங்கையில் கிராமிய மக்களை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட நிலப்பங்கீடுகள் வெற்றியளிக்கவில்லை என்றும் கூறப்படு கின்றன.

02. அரசியல் மற்றும் சட்டம்

நாடொன்றில் ஆட்சிமுறை வறு மைக்கு வித்திடும் என்பதிற்கு சிம்பாவே நாடு இன்றைய நிலையில் சிறந்த உதாரண மாகவுள்ளது. வறிய நாடுகளில் காணப்படு கின்ற ஜனநாயக பாரம்பரியங்களின் பற் றாக்குறை நிலை பல வழிகளில் வறு மைக்கு வித்திடுகின்றது. ஜனநாயக நாடுக ளின் அரசுகள் தங்கள் வாக்கு வங்கியை தக்க வைப்பதற்காக சமூக நலச் செலவீடு களை செய்கின்றது. தாராள ஜனநாயக நாடுகள் குறுங்கால நோக்கிலேயே வறுமை யைக் குறைக்கின்றன. அதாவது மக்கள் தாங்களா கவே உற்பத்தி செய்து கொள்ளும் திறனை சொந்தக் காலில் நிற்கும் வலிமையை இந்நாடுகளின் அரசுகள் வளர்க்கவில்லை. அரசாங்கங்களின் சமூக நலச் செலவீடுகள் நிறுத்தப்படின் அதிகளவான மக்களுக்கு மரணப் புதைகுழிகள் தோண்டப்படும். இவ்வாறு அரசு தங்களில் தங்கியிருக்கின்ற ஏழ்மை மக்கள் கூட்டமொன்றை உரு வாக்குகின்றன. இவ்வாறான ஒரு நில மையை உலக வங்கியில் 20 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய William Esterly ஜன நாயக நாடுகளில் வறுமை அதிகம் உருவாவ தற்கு அந்நாட்டு அரசியல்வாதிகளும் அரசி யல் தலைவர்களும் தான் காரணம் என் கிறார். அதாவது இந்நாடுகளில் வெளிநாடு களிடமிருந்து கடன் பெறுவதற்காக வறிய வர்களை பணயக் கைதிகளாக வைத்திருக் கின்றனர் என்றார்.

சர்வாதிகாரப் பண்பு வறுமையை அதிகரிக்கும் என்று கூறுவது எல்லா நாடுக ளுக்கும் பொருந்தாது. இது குறிப்பாக சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குப் பொருந் தாது. சீனாவில் விவசாயப் புரட்சிக் காலத் தில் வறுமையின் கொடூரத்தால் அதிகள வான மக்கள் பட்டினிச் சாவை எதிர் கொண்ட னர். இது ஒரு குறுகிய கால ஒரு நிலமையா கவே காணப்பட்டது. ஆனால், இன்று அந்தச் சர்வாதிகாரப் பண்புகளால் உற்பத்தித் திறனை அதிகரித்து உலகில் வறுமை குறைந்த நாடுகளில் ஒன்றாகச் சீனா இருந்து வருகின்றது. சீனாவில் முழு வறுமை 5% ஆகவே உள்ளது. இத்தன்மை இந்தியா வில் 20% ஆக உள்ளது. இந்தியா உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்பது குறிப் பிடத்தக்கது. சீனா போன்ற நாடுகளில் சமூக நலச் செலவுகள் மிகமிகக் குறைவு. மக்கள் தங்கள் உற்பத்தித் திறனை அதிகரித்தது தமது சொந்தக் காலில் நிற்கிறார்கள்.

நாட்டின் சட்டங்களும் வறுமை தோன்ற காரணமாக அமைகின்றன. ஒரு தளர்வான இறுக்கத் தன்மை குறைந்த ஜனநாயகப் பாங்கான சட்டங்கள் வறு மையை அதிகரிக்கும். சீனா, சிங்கப்பூரில் சட்டங்களும் சிறுவர்களுக்கான தண்டணைக ளும் கடுமையாக உள்ளன. இதன் காரண மாக வறுமை குறைவாக உள்ளது. அமெரிக் காவில் தளர்வான சட்டங்கள் காரணமாக வறுமை குறைவாக உள்ளது. அமெரிக்கா வின் தளர்வான சட்டங்கள் காரணமாக வறுமை, வேலையின்மையை அதிகரிப்பதாக இக்குவான் யூ தொலைக்காட்சிப் பேட்டியொன் றில் தெரிவித்திருக்கின்றார். அபிவிருத்திய டைந்த நாடுகள் அபிவிருத்தியை தக்கவைப்ப தற்காக ஜனநாயக மரபுகளில் இருந்து மீள முற்படுகின்றன. இன்று அமெரிக்காவில் கூட தாராள ஜனநாயகம் இல்லையெனக் கூறப் படுகின்றது. அத்துடன் உயர் மட்டங்களில் காணப்படும் லஞ்சம், ஊழல் என்பனவும் வறுமையைக் குறைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளை மழுங் கடிக்கச் செய்கின்றன.

03. சமூகக் காரணிகள்

சமூகத்தில் காணப்படும் சாதிப் பிரிவுகள், சமூகப் புறந்தள்ளல், ஏற்றத் தாழ்வு கள், பால் நிலை சமத்துவமின்மை போன் றன நகர மக்களினை விட கிராமப் புற மக்களிடையே அதிகமாக காணப்படுகின் றன. இதனால் நகர வறுமையைவிட கிராமிய வறுமை உயர்வாகவுள்ளது. பலவிதமான ஓரங்கட்டும் நிலை அல்லது பாரபட்சம் காட்டும் நிலையும் வறுமைக்குக் காரணமா கின்றது. வயது சார்ந்த பாரபட்சம், பால் சார்ந்த பாரபட்சம், இனப் பாரபட்சம், சாதி அடிப்படையிலான பாரபட்சம் போன்றன வறுமையைத் தோற்றுவிக்கின்றன. கிராமங் களில் இருந்து மூளைசாலிகள் நகரங்க ளுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ இடம்பெயர்வது கிராமிய வறுமைக்கு வித்திடுகின்றது.

பிறப்புக் கட்டுப்பாட்டு முறைகளை அடைவதில் உள்ள பற்றாக்குறை நிலை, மிகைக் குடித்தொகை என்பன கிராமங்களி லேயே அதிகம் காணப்படுகின்றன. சனத் தொகை அதிகரிப்பதன் விளைவாக வறுமை அதிகரிக்கின்றது.

சமூகங்களுக்கிடையிலான முரண் பாடுகள், உள்நாட்டு சிவில் யுத்தங்கள், இனப்படுகொலைகள், வறுமையினை மேலும் தீவிரப்படுத்துகின்றன. இலங்கை யில் கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக அபிவிருத்தி மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலி ருப்பதற்கு உள்நாட்டு யுத்தம் ஒரு வகையில் காரணமாக இருந்துள்ளது.

பொருளாதாரக் காரணிகள்

1. சிற்றுடைமை விவசாயம்

பொதுவாகக் கிராமப் புறங்களில் காணப்படும் விவசாய நிலம் தொடர்பான நில உடமையின் அளவானது மிகச் சிறியன வாக உள்ளன. இங்கு சிறியளவு நிலங்கள், குடும்ப உழைப்பு என்பனவே பிரதான வளங்களாக இருந்து வருகின்றன. நிலம் என்ற காரணி நிலையானதாக இருப்பதால் குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கை அதிக ரிக்கும்போது ஒவ்வொருவரும் வேலை செய்வதற்கு கிடைக்கக் கூடிய நிலத்தின் அளவு குறைவடைந்து செல்கின்றது. இந்த வகையில் ஒரு கிராமத்தில் வாழ்கின்ற மக்க ளுக்குரிய சராசரி நிலத்தின் அளவு குறை வாக இருத்தல் என்பது சனத்தொகை அதிக ரித்துச் செல்லும்போது குறைவாக இருக் கின்ற நிலங்கள் மேலும் துண்டாடப்படும் நிலைக்குத் தள்ளப்படுதல் போன்ற கார ணங்களால் கிராமிய வறுமை மேலும் மேலும் அதிகரிக்கின்றன. பொதுவாகவே கிராமிய மக்களின் நிலவுடமையை நோக்கும் போது ½ ஏக்கரிலும் குறைந்த உடைமை கொண்டவர்கள் 25 % ஆகவும், ஒரு ஏக்கரி லும் குறைந்த உடைமைகள் கொண்டவர்கள் 42% ஆகவும் காணப்படுகின்றனர்.

2. குறைந்த உற்பத்தித்திறன்

கிராமியத் துறையின் குறைந்த வருமானங்கள் குறைந்த முதலீடு, சிறிய நிலப்பரப்பு போன்ற பல காரணங்கள் குறைந்த உற்பத்தித் திறனுக்கு காரணமாக அமைகின்றன. ஒரு ஹெக்டேயருக்கான விளைச்சல் குறைவாக இருப்பதும் அதன் விளைவாக விவசாயிகளின் வருமானம் குறைவடைவதும் கிராமிய வறுமைக்கு பங்களிப்புச் செய்கின்றன. குறைந்த விளைச் சல் குறைவடைந்த மட்டத்திலான வினைத் திறன் கொண்ட வளங்கள் பயன்படுத் தப்பட்டு வருவதன் காரணமாகவே ஏற்படு கின்றது. இதற்கு நிலத்தின் தரம் குன்றிய நிலை, போதியளவு பரப்பு பாவனையின்மை, மூலதனப் பற்றாக்குறை, நல்லின விதைகள் போதியளவில் பயன்படுத்தாமை, போதிய ளவு நீர்ப்பாசன வசதிகள் கிடைக்காமை, கிருமி நாசினிகள், பூச்சி கொல்லிகள் பயன்

பாட்டில் உள்ள வினைத்திறனின்மை போன்றன எல்லாம் சேர்ந்து, நிலத்துக்கான சராசரி விளைச்சல் குறைவாக இருக்க வழி கோலுகின்றது. பொதுவாக கிராமங்களில் அதிலும் நெல் உற்பத்தியில் பாரம்பரிய இனங்களே கூடுதலாக பயன்படுத்தப்படு கின்றன. இதனால் கிராமப்புறங்களில் சராசரி விளைச்சல் மிகவும் குறைவாக காணப்படுகின்றது. இதன் காரணமாகவும் கிராமிய வறுமை தோற்றம் பெறுகின்றது.

3. கீழுழைப்பும் பருவ கால வேலை இன்மையும்

கிராமத்தில் அதிகரிக்கும் சனத் தொகைக்கு நகர்புறக் கைத்தொழில்களி னால் போதிய வேலை வாய்ப்பினை வழங்க முடியாதுள்ளது. இதேபோன்று போதியளவு விவசாய நிலப்பரப்பினைச் சனத்தொகை அதிகரிப்பிற்கேற்பச் சாகுபடிகள் கொண்டு வரமுடியாதுள்ளது. இதனால், அதிகரிக்கும் சனத்தொகையானது, ஏற்கனவேயுள்ள விவசாய நிலப்பரப்பிற்குள் அமுங்கியிருப் பதே கீழுழைப்பிற்குக் காரணமாகும். இலாப நோக்குடன் கூலி வழங்கப்படும் முதலாளித் துவ உற்பத்தி முறையானது கிராமியப் பொருளாதாரத்தில் பெருமளவு வளர்ச்சிய டையும் போது கீழுழைப்பானது வெளிப்படை யான வேலையின்மையாக மாற்றமடையும். இது கிராமிய வறுமைக்கு இட்டுச் செல்லும். மூன்றாம் உலக நாடுகளில் உள்ள கிராமிய விவசாயிகளின் சனத்தொகையில் கீழுழைப் பானது ஏறக்குறைய 25% மாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.


எந்தவொரு நாட்டிலுமே விவசாயத் துறையில் பருவகால வேலையின்மை என் பது ஒரு இயல்பான அம்சமாகும். எப்பொழு தும் விதைப்பு, அறுவடை ஆகிய இரு காலப் பகுதிகளில் மட்டுமே விவசாயிகளுக்கு கூடிய வேலையிருக்கும். ஏனைய பருவங் களில் விவசாயிக்கும் அவனது குடும்ப அங் கத்தினவர்களுக்கும் பெருமளவு வேலையிருப் பதில்லை. இத்தகைய பருவகால வேலை யின்மையானது கிராமிய வறுமைக்கு வித்திடுகின்றது. பருவகால வேலையின்மை யானது இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கு முக்கியமான பிரச்சினை யாகும்.

4. கிராமிய கடன் பிரச்சினைகள்

விவசாயிகள் விவசாய நோக்கங்களுக் காக பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பதற் குக் கூட கடன் தேவைப்படுகின்றது. விவ சாயத்தின் நிச்சயமற்ற தன்மைகள், குறைந்த வருமானம், வாழ்க்கையின் விறைப்புத் தன்மை, வருமானத்துக்கு மேலான செலவு, சமய நம்பிக்கைகள் மீதான தேவையற்ற செலவுகள் என்பனவெல்லாம் சேர்ந்து கிராமிய விவசாயிகளை கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலேயே இறந்து விடும் நிலைக்குள்ளாக்கி விடுகின்றது. இத் தன்மைகள் கிராமிய வறுமையை மேலும் விரிவுபடுத்துகின்றன.

5. சமமற்ற வருமானப் பங்கீடு


சமமான வருமானப் பங்கீடானது



வறுமையைக் குறைக்கும். மாறாக சமமற்ற வருமானப் பங்கீடானது வறுமையை அதிக ரிக்கும். இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் காட்ட முடியும்.

உயிரியல்சார் எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற பயிர் நிலங்களின் அதிகரிப்பும் உலக எண்ணெய் விலை அதிகரிப்பின் உச்ச நிலையும் கிராமிய விவசாயிகளை மட்டுமல்லாது, ஒட்டுமொத்த மக்களையும் பாதிக்கின்றது. இது வறு மையை மேலும் அதிகமாக்கும்.

மூன்றாம் உலக நாடுகளில் வறுமை தொடர்ந்து இருப்பதற்கு வறுமையின் நச்சு சுழல் வட்டத்தில் சிக்குண் டிருப்பதற்கும், இக்கருத்தின்படி குறை அபி விருத்திக்கும், வறுமைக்கும் மூல காரணம் மூலதனப் பற்றாக்குறையேயாகும். இதனை மேலுள்ள வரைபடம் மூலம் காட்ட முடியும்.




இவ்வாறாக இந்த வறுமையின் நச்சு சுழல் வட்டத்தின் கேள்வி, மற்றும் நிரம்பல் பக்கத்தில் உள்ள காரணிகள் வறுமையினைத் தோற்றுவிக்கின்றன.

பாரபட்சமான வர்த்தக உடன்பாடுகளும் வறுமையைத் தோற்றுவிக்கின்றன. உதாரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாயத்தின் பொருட்டு, வழங்கப்பட்டுள்ள வரிப் பாதுகாப்புக்கள் மற்றும் உயர்வான மானியங்கள், இது வரி செலுத்துபவர்களின் வரியினை இழக்கச் செய்வதுடன் நுகர்வோர்களின் பொருள்களுக்கான விலைகளையும், அதிகரிக்கச் செய்கின்றது. போட்டியினையும் வினைத்திறனையும் மக்களிடையே குறைக்கச் செய்கின்றது. அத்துடன், இறக்குமதி வரியினால் ஏற்படும் வர்த்தகத் தடைகள் காரணமாக அபிவிருத்தி யடைந்த நாடுகளில் போட்டிமிகு விவசாயத் துறையிலும் ஏனைய விவசாயத் துறையிலும் ஏனைய துறைகளிலும் ஏற்றுமதி தடுக்கப்படுகின்றது. இத்தகைய செயற்பாடுகள் கிராமிய வறுமையினை மேலும் துரிதப்படுத்துகின்றன.

06. சுகாதாரம் தொடர்பான காரணிகள்

நகரங்களை விட கிராமங்களிலேயே சுகாதார வசதிகள் குறைவாகவுள்ளன. இதனால் கிராமமக்கள் உற்பத்தி திறனைக் குறைத்து வறுமையினைத் துரிதப்படுகின்றன. சிறுபாரயத்தில் காணப்படுகின்ற மந்தமான போசனை தனது முழுமையான மனித இயலுமை வெளிப்பாட்டினை மழுங்கடிக்கச் செய்கின்றது. அதன் மூலம் இத்தகையவர்களை வறுமை நிலைக்கு அது உள்ளாக்குகின்றது. தேவையான கனியங்கள், மற்றும் இரும்புச் சத்தான உணவுப் பொருட்

களின் நுகர்வு அடைய பெறாத நிலையில் அது மூளை வளர்ச்சியினை தடை செய் கின்றது. 6 - 12 வயதிற்கிடையில் 285 மில்லியன் பிள்ளைகள் பற்றாக் குறையி னால் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட் டுள்ளது. இவை தவிர எயிட்ஸ், மலேரியா, காசநோய் போன்ற நோய்களும் வறுமைக்கு வித்திடுகின்றன.

07. கலாச்சார காரணிகள்

மக்களின் வாழ்க்கை முறைகளிலும் பழக்க வழக்கங்களும் வறுமைக்கு காரண மாக அமையும். இளவயதுத் திருமணம், விலகல் நடத்தைகள், வரவுக்கு மீறிய செலவு போன்றன வறுமையைத் தோற்றுவிக்கும்.

08. ஏனையவை

பால்நிலை சமத்துவமின்மையும் கிராமிய வறுமையை மெருகூட்டுகிறது. கிராமப் புறங்களிலேயே பால் நிலை சமத்துவழின்மையானது அதிகம் காணப் படுகின்றது. இதனால் பெண்கள் தொழிலில் ஈடுபடும் வாய்ப்பு நகரங்களை விட கிராமங் களில் மிக மிகக் குறைவாகவே உள்ளது. இதுவும் கிராமிய வறுமையை அதிகரிக் கின்றது. சீனாவை எடுத்துக் கொண்டால் சீனாவின் ஒற்றைக் குழந்தைத் திட்டம் பால் நிலை சமத்துவத்தை அதிகரித்துள்ளது. இதனால் பெண்கள் தொழிலில் ஈடுபடும் வாய்ப்பை அதிகரித்துள்ளது. இதன் காரண மாக அங்கு வறுமையும் குறைவாகவுள்ளது.

மதநம்பிக்கைகள் மற்றும் மூட நம்பிக்கைகளும் கிராமிய வறுமையை விரி வாக்குகின்றன. இதனால் கிராமிய வறுமை யும் அதிகமாகவுள்ளன. நம்பிக்கை மத தீவிரவாதம் நிலவும் நாடுகளில் வறுமை அதிகமாகவே உள்ளது. உதாரணமாக இந்தோனேசியா, இந்தியா, சோமாலியா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

குறைந்த கல்வி வசதியும் வறுமைக்கு வித்திடுகின்றது. கல்வியறிவு கூடுகின்றபோது குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையும் குறை வடையும். இதன் காரணமாக வறுமை குறை வடையும். அதேவேளை ஆடைத் தொழிலை விரும்பும் கல்வி முறையானது உடல் உழைப்பு வேலைகளில் ஈடுபட முடியாதவர் களாக படித்த வேலையற்றோர் வர்க்க மொன்றை உருவாக்குகின்றது. இதுவும் வறுமைக்கு வித்திடுகின்றது. இந்த நிலைமை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் காணலாம். போதைப் பொருள் மற்றும் மதுபாவனை போன்றவை வறுமைக்குக் காரணமாக அமைகின்றன.

இவ்வாறான வறுமையின் உருவாக்க மானது பொளாதாரப் பிரச்சினைகளை மட்டுமல்ல சிறுவர் துஷ்பிரயோகம் குழந் தைத் தொழிலாளர்கள், குழந்தைகளை விற்றல், மற்றும் கடத்தல், அநாதைக் குழந்தைகளின் பெருக்கம், பெண் சிசுக் கொலைகள், பாலியல் தொழிலாளர்கள், தெருவோரச் சமூகங்கள், முதிர் கன்னிகள் உருவாக்கம், கொலை, களவு பிச்சைக் காரர்கள் அதிகரிப்பு போன்ற சமூகப் பிரச்சி னைகளையும் உருவாக்கி விடுகின்றன.

முடிவுரை

இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம் வறுமையின் உருவாக்கம் அதிலும் குறிப்பாக கிராமிய வறுமையின் உருவாக் கம் பற்றியே விளக்கி நிற்கின்றது. உலகளா விய ரீதியில் முக்கியமாகப் பேசப்படும் வறுமைக்கு தனித்து ஒரு காரணி மட்டும் பொறுப்பாவதில்லை. அது பல காரணிகளி னால் தோற்றம் பெறுகின்றன. குறிப்பாக புவி மற்றும் சட்டம் சமூக கலாச்சார காரணிகள் முக்கியமானவையாகக் காணப்படு கின்றன. கிராமிய வறுமை பல பொருளாதாரப் பிரச்சினைகளையும் சமூக விளைவு களையும் ஏற்படுத்துகின்றன.

இதன் காரணமாக கிராமிய வறுமை உருவாக்கத்தைத் தணிப்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

உசாத்துணை


01. M.P.Todaro (1977) "Economic Development in third world - countries" Secound edition Page 225 - 248

02. "அபிவிருத்திப் பொருளியல்" - இதழ் 2, இளம் பொருளியலாளர் மன்றம் 2000 / 2001, பக்கம் 105 - 113

03. பொருளாதார அபிவிருத்திச் செவ்வழி" - இலங்கை அனுபவத்தைத் ஆதாரமாகக் கொண்ட ஓர் உசாவில் (2008) பேராசிரியர் பாலகிருஷ்ணன் சேவை நலன் பாராட்டுக்குழு, பக்கம் 405 - 440

04. கோபாலபிள்ளை - அமிர்தலிங்கம் (2008) "இலங்கைப் பொருளாதாரம்" பக்கம் : 150 - 159

05. செ.சந்திரசேகரம் (2009) " சீனா - இந்தியா பொருளாதார அபிவிருத்தி ஒப்பீட்டாய்வு

06. சமூக ஒளி - 4, 1992 / 93, பக்கம் : 62 - 64

07. "நான்" உளவியல் சஞ்சிகை (2009) தை - பங்குனி

08. "உன்னதம்' சஞ்சிகை ஜனவரி 2010. பக்கம் 67-69

09. வி.நித்தியானந்தன் "இலங்கையின் அரசியற் பொருளாதாரம்" 1948-1958 பக் 66-73

# கிராமியப் பொருளாதார முக்கியத்துவமும் கிராமியப் பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

*Miss K.Nishany*
*Economics special,*
*2008/ A/465*

கிராமியப் பொருளாதாரம் என்பது சுயதேவைப் பூர்த்தி குறிக்கோள்களையும் குறைந்த வருமானத்தையும் கொண்ட பொருளாதாரத்தினை குறித்து நிற்கின்றது. கிராமிய பொருளாதார உற்பத்தி ஏற்றுமதிக்காகவன்றி சொந்த நுகர்வுக்காகவே நடைபெறுகின்றது. இப்பொருளாதாரமானது சுய தேவையை பூர்த்தி செய்தலைக் குறிக்கோளாகக் கொண்ட போதிலும் இன்று இதனை தன்னிறைவு தன்மை கொண்ட பொருளாதாரமாகக் கருதமுடியாது. ஏனெனில் நவீன பணப் பொருளாதாரத்தின் தோற்றத்துடன் தன்னிறைவுத் தன்மையினைக் கிராமியப் பொருளாதாரம் கடந்து பணப் பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் நிலையினை அடைந்துள்ளது. இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தில் ஏறக்குறைய 50%க்கு மேற்பட்டோர் வேதனம் பெறும் ஊழிய வகுப்பினராகவே காணப்படுகின்றனர். இன்று கிராமிய பொருளாதார உற்பத்திகள் சந்தையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் படுவதுடன் உற்பத்திக்குத் தேவையான பல உள்ளீடுகளும் சந்தையில் இருந்து பெறப்படுவதாகக் காணப்படுகின்றது.

மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரக் கொள்கையில் கிராமியப் பொருளாதார வளர்ச்சி என்ற அம்சம் பொருளாதார ரீதியான காரணங்களால் மட்டுமன்றி சமூக அரசியல் ரீதியான காரணங்களாலும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் காணப்படுகின்றது. கிராமியத்துறை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த போதிலும் கூட அந்நியர் ஆட்சியில் நீண்ட காலமாக நிராகரிக்கப்பட்ட துறையாக இருந்துள்ளது. பல சமூக உடைமை நாடுகள் ஆரம்பகால பொருளாதார வளர்ச்சியில் கிராமப்புறம், நகர்ப்புறம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டினை நீக்குவதன் மூலமே சோசலிச பாதையில் துரித பொருளாதார வளர்ச்சியுடன் முன்னேற முடியுமென கருதிச் செயற்பட்டன. இன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கிராமியப் பொருளாதாரத்தினை விருத்தி செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை மட்டுமன்றிப் பிரதேச ரீதியாகவும், சமூக பொருளாதார ரீதியாகவும் நாடுகளுக்கிடையே அகன்று செல்கின்ற இடைவெளியினை ஓரளவு குறைக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் நவீனமயத்துடன் துரித பொருளாதார வளர்ச்

சியினை அடைவதற்குக் கிராமியப் பொருளாதாரத்தினை விருத்தி செய்தல் அவசியம் என்ற கருத்து இன்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மொத்த தேசிய உற்பத்தியினையும் சனத்தொகையினையும் பொறுத்தமட்டில் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக கிராமியப் பொருளாதாரம் காணப்படுகின்றது. இலங்கையின் தேசிய வருமானத்தில் ஏறக்குறைய 20 சதவீதம் கிராமியத்துறையைச் சார்ந்ததாக இருப்பதுடன் மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 70 சதவீதத்தினர் கிராமிய சனத்தொகையாகவும் காணப்படுகின்றது. இலங்கையில் மிகப் பெரும் உற்பத்தி துறையாக கிராமியத் துறை காணப்படுகின்றது. எனவே மொத்த தேசிய உற்பத்தியினை அதிகரித்தல், தலாவருமானத்தினைக் கூட்டுதல் போன்றவை கிராமியத்துறை உற்பத்தி பெருக்கத்துடனும் நவீன மயமாக்கத்துடனும் தொடர்புபட்டதாகும். மேலும் எமது நாட்டின் பெரும் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் வருமான ஏற்றத்தாழ்வை குறைத்தல் போன்றவை யாவும் கிராமிய சனத் தொகையின் உற்பத்திதிறனை அதிகரித்தல் மூலமே சாத்தியமானதாகும்.

மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்த வரையில் அதிகளவு விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதுடன், உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளாகவும் காணப்படுகின்றன. உலக சனத்தொகை அதிகரித்து செல்வதனாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் உணவுப் பொருட்களின் விலைகள் மேலும் எதிர்காலத்தில் தொடர்ந்து அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உண்டு. இதனால் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் செலவிடும் வெளிநாட்டு செலாவணியின் பங்கு அதிகரிக்கும் எனவே உள்நாட்டில் கிராமியத்துறையை விருத்தி செய்து உணவு உற்பத்தியினை பெருக்குவதன் மூலம் பெருமளவு வெளிநாட்டு செலாவணியை சேமிக்க முடிவதுடன் இச்செலவணியை கைத்தொழிலாக்கத்திற்குத் தேவையான முதலீட்டு மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பானது கிராமப் புறத்தில் வேலையின்மையை ஏற்படுத்தியிருப்பதுடன் கிராமிய சனத்தொகையானது நகர்ப்புறங்களை நோக்கி நகர்த்துவதற்கும் காரணமாகி விடுகின்றது. இதனால் நகர்புறத்தில் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஆனால் கிராமப் புறத்தில் பெருமளவு விருத்தி செய்யப்படாத மூலவளங்கள் காணப்படுகின்றன. கிராமப் புறத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கை , கால்நடை வளர்ப்பு, காட்டுத் தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் போன்றவற்றினை விருத்தி செய்வதன் மூலம் அதிகரிக்கும் சனத்தொகைக்கு வேலை வாய்ப்பினை மட்டுமன்றி உற்பத்திப் பெருக்கத்தினயையும் ஏற்படுத்த முடியும்.

கிராமியப் பொருளாதாரத்தினை விருத்தி செய்வதன் மூலம் பெருமளவு மக்களின் வருமானத்தினை உயர்த்த முடிவதுடன் கூடிய சேமிப்புக்களை முதலீடாகப் பெறமுடியும். பல நாடுகள் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப காலங்களில் கைத்தொழிலாக்கத்துக்குத் தேவையான முதலை விவசாயத்துறையிடமிருந்தே பெற்றுக் கொண்டன. சோவியத் யூனியன், ஜப்பான் போன்ற நாடுகள் விவசாயத் துறையினை விருத்தி செய்வதன் மூலம் கைத்தொழிலாக்கத்துக்கு தேவையான முதலைப் பெற்றுக் கொண்டன. கிராமப் புறத்தில் குறைந்த காட்சி விளைவு, குறைந்த வாழ்க்கைச் செலவு ஆகியவற்றின் காரணமாக வருமான அதகரிப்பானது கூடிய சேமிப்பினை ஏற்படுத்துவதற்கும் சாதகமாக

இருக்கும். எனவே மூலதன வர்க்கத்தினை அதிகரிப்பதற்கும் கிராமிய பொருளாதார விருத்தி இன்றியமையாதது.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மக்களின் வருமானம் குறைவாக இருப்பதனால் கைத்தொழிற் பொருட்களுக்கான கேள்வியானது மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. இக்குறைந்த கேள்வியானது புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு தடையாகவும், ஏற்கனவே உள்ள கைத்தொழில்களை முழு இயலளவில் மேற்கொள்ள முடியாமல் இருப்பதற்கு காரணமாகின்றது. கிராமிய பொருளாதார விருத்தியின் மூலம் கிராமிய மக்களின் வருமானம் அதிகரிப்பதனால் கைத்தொழில் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பதுடன் சந்தை வாய்ப்பினையும் பெற முடியும்.

உலகத்தின் மொத்த சனத்தொகையில் அரைப்பங்கிற்கு மேற்பட்டோர் அண்ணளவாக 4000 கோடி மக்கள் வாழ்கின்ற பகுதியாக கிராமம் காணப்படுகின்றது. அதேபோல உலகில் உள்ள மொத்த வறியவர்களில் 70 சதவீதத்துக்கு மேலானோர் கிராமங்களில் காணப்படுகின்றனர். இலங்கையில் 72% மான மக்கள் கிராமத்தில் வசிக்கின்றனர். எனவே பொருளாதார அபிவிருத்தி ஏற்படும்போது ஒட்டுமொத்த அபிவிருத்தியும் எய்தப்பட வேண்டும். நகரங்கள் மாநகரங்கள் அபிவிருத்தி அடைந்தால் ஒட்டுமொத்த அபிவிருத்தியாக இனம் காண முடியாது கிராமிய பொருளாதாரமும் அபிவிருத்தி அடைய வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தியில் முக்கியத்துவம் பெறும் கிராமிய பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்வதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. கிராமிய துறையில் வசிப்போரில் பெரும்பாலானவர்கள் விவசாய நடவடிக்கையுடன் தொடர்புபட்டவர்களாக இருப்பதனால் கிராமிய பொருளாதாரப் பிரச்சினைகளும் விவசாயத்துடன் தொடர்புபட்டனவாகக் காணப்படுகின்றன.

1. சிறிய உடமைகள் அதிகம் காணப்படல்

பொதுவாக கிராமப் புறங்களில் காணப்படும் விவசாய நிலம் தொடர்பான நில உடமையின் அளவானது மிகச் சிறியனவாக உள்ளமை விவசாயிகள் பலர் வறிய நிலையில் இருப்பதற்கான முக்கிய காரணமாக அமைகின்றது. இங்கு சிறியளவு நிலங்கள், குடும்ப உழைப்பு என்பவை பிரதான வளங்களாக இருந்து வருகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விவசாயத் துறை அதிலும் குறிப்பாக நெல் உற்பத்தியானது குடும்ப தேவைக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. சிறிய நில உடைமையாக இருப்பது மட்டுமன்றி சிக்கனமற்ற நில உடமையாகவும் காணப்படுகின்றன. எனவே இந்த நில உடமைகள் குடும்ப அங்கத்தவர்கள் யாவர்க்கும் தொழில் வழங்குவதற்கு போதுமானதாக இல்லை. அத்துடன் இந்த நிலங்களில் இருந்து பெறப்படும் குறைந்தளவு உற்பத்தியைக் கொண்டு மட்டும் கடன்படாமல் வாழ்வதற்கான சந்தர்ப்பங்கள் இந்த சிற்றுடமை நில உடமையாளர்களுக்கு கிடைப்பதில்லை. அதேநேரம் கடன்பெறுவதற்கான வாய்ப்பும் அவனிடம் காணப்படுவது அரிது. இதனால் அக்குடும்பங்களின் வாழ்க்கை திண்டாட்டமாகக் காணப்படுகிறது. விவசாயி ஆனவன் தொடர்ந்து விவசாய உற்பத்தியை மேற்கொள்ள தேவைப்படும் மூலதனத்தை சொந்த சேமிப்புக்களால் திரட்டுவதற்கு ஏற்ற வருமானத்தினை இந்த நிலவுடமைகளில் இருந்து பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதனால் உற்பத்தி தொடர்பான மூலதனத்தைப் பெற கடன்பெற வேண்டி உள்ளது.

சிறிய நில உடமைகளுக்கு சொந்தக்காரர்களாக இருப்பதை விட விவசாயத்

துறையை நம்பி வாழும் கணிசமான எண்ணிக்கை கொண்ட மக்களுக்கு எவ்வித நிலமும் சொந்தமாக இருப்பதில்லை என்பதும் கவனிக்கத்தக்க விடயமாகும். அதாவது கிராமத்தில் அத்தகையவர்கள் நிலமற்ற தொழிலாளர்களாக உள்ளனர். இவர்கள் கிராமியத் துறையில் கிடைக்கும் சேவைகளைச் செய்து அதற்கான சன்மானம் பெற்று சீவனம் நடத்துபவர்களாக உள்ளனர். வேலையற்ற நாட்களில் எவ்வித வருமானமும் கிடைப்பதில்லை.

நிலங்கள் சிறியனவாக இருப்பதனால் நவீன தொழில்நுட்பங்களை புகுத்துவதில் இடர்பாடுகளும் காணப்படுகின்றன.

2. குறைந்த உற்பத்தித் திறன்

கிராமியத் துறையினது குறைந்த வருமானத்திற்கு குறைந்த உற்பத்தி திறனே முக்கிய காரணமாகும். ஒரு ஹெக்டெயர் நிலப் பரப்பின் சராசரி விளைச்சல் குறைவாக இருந்து வருவதும் அதன் விளைவாக விவசாயிகளின் வருமானம் குறைவடைவதும் கிராமிய வறுமைக்கு பங்களிப்பு செய்யும் மற்றொரு காரணியாகும். குறைந்த விளைச்சல். குறைந்த மட்டத்திலான விளைதிறன் கொண்ட வளங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதன் காணரமாக ஏற்படுகின்றது. இதற்கு நிலத்தின் தரம் குன்றிய நிலை, போதிய அளவில் உரப் பாவனையின்மை, மூலதனப் பற்றாக் குறை, மற்றும் தொழில்நுட்ப பற்றாக்குறை போன்ற பல காரணிகள் பங்களிப்பு செய்கின்றன.

கிராமிய விவசாயத்தினது உற்பத்தித் திறனை அதிகரிக்க முனையும்போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிக் காணப்படுகின்றது.

♦ உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு இயந்திரமாக்கல் அல்லது முதற்செறிவான உற்பத்தி முறையினை பயன்படுத்தல் அவசியமானதாகும். ஆனால் கிராமியப் பொருளாதாரத்தில் பெருமளவு சனத்தொகை வேலையற்றிருப்பதனால் முதல் செறிவான உற்பத்தி முறையானது வேலையின்மையை மேலும் அதிகரிப்பதாக இருக்கும்.

♦ கிராமிய விவசாயிகளில் பெரும் பகுதியினர் சிற்றுடமையாளர்களாகவும், சிக்கனமற்ற நில உடமையாளர்களாகவும் இருப்பதனால் இவர்களிடம் பெருமளவு முதல் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இதனால் இயந்திரங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்ய சக்தியற்றவர்களாக இருக்கின்றனர்.

♦ நவீன விவசாய முறைகளைப் பின்பற்றுவதற்கு விவசாயி பெருமளவிற்கு கல்வியறிவு உடையவர்களாக இருக்க வேண்டும். பெருமளவு விவசாயிகள் கல்வியறிவு அற்றவர்களாகவும், மரபுகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றினால் பிணைக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

♦ பெருமளவு விவசாய நிலப்பரப்பானது சிறிய துண்டுகளாக இருப்பதனால் நவீன இயந்திரங்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்தல் சிக்கனமான உற்பத்தியாக இருக்கமாட்டாது.

♦ நிலக் குடியுரிமை முறை, தட்டுமாறி முறை போன்றனவும் நிலத்தினை நீண்டகாலம் நோக்குடன் விருத்தி செய்யத் தடையாகக் காணப்படுகின்றது.

3. கீழுழைப்பும் பருவகால வேலையின்மையும்

கிராமிய விவசாயத்துறை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக கீழுழைப்பு அமைந்துள்ளது. கீழுழைப்பில் வேலையின்மையானது வெளிப்படையாகத் தோன்றுவதில்லை. எல்லை உற்பத்தி திறனானது பூச்சியமாக இருக்கும் ஊழியத்தினையே பொது

வாக விவசாயத் துறையில் கீழுழைப்பு என வரையறை செய்வர். உதாரணமாக ஒரு விவசாய நிலத்தில் 5 பேர் வேலை செய்வதன் மூலம் 150 புசல் உற்பத்தி கிடைக்கும் நிலையில் குடும்ப அங்கத்தவர் 8 பேர் இதில் ஈடுபட்டு இதேயளவு மொத்த உற்பத்தி பெறப்படும் போது கடைசி 3 ஊழியத்தினதும் எல்லை உற்பத்தியானது பூச்சியமாக அமைந்திருக்கும். கடைசி மூன்று பேரும் பௌதீக ரீதியாக மட்டுமே உற்பத்தியில் ஈடுபட்டவர்களாவர். ஆனால் பொருளாதார ரீதியில் இவர்கள் உற்பத்தியில் ஈடுபட்டவர் களாக கருதப்படுவதில்லை.

மொத்த கிராமிய ஊழியப்படையில் 99 சதவீதத்திற்கு மேற்பட்டோர் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதே கீழுழைப்பு கிராமிய பொருளாதாரத்தில் அதிமாகக் காணப்படு வதற்கு காரணமாகின்றது. கிராமிய பொரு ளாதாரத்திலுள்ள ஊழியப்படையில் ஒரு பகுதி கால்நடைவளர்ப்பு, குடிசைக் கைத்தொழில் போன்றவற்றில் ஈடுபட்டிருக்கு மேயானால் கீழுழைப்பு ஓரளவு குறைவாக அமைந்திருக்கும். அதிகரிக்கும் சனத் தொகையானது ஏற்கனவேயேயுள்ள விவ சாய நிலப்பரப்பிற்குள் அமுங்கியிருப்பதே கீழுழைப்புக்கு காரணமாகின்றது.

எந்த நாட்டிலும் விவசாயத் துறையில் பருவகால வேலையின்மை என்பது ஒரு இயல்பான அம்சமாகும். பருவகால வேலை யின்மையானது வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள விவசாயிகளுக்கு ஒரு பிரச்சினை யாக இருப்பதில்லை. ஏனெனில் அவ்விவசா யிகளுக்கு விளைச்சலின் மூலம் கிடைக்கும் வருமானம் போதுமானதாக இருப்பதுடன் பருவகால வேலையின்மையின் போது பண்ணைத்தொழில், குடிசைக்கைத் தொழில் போன்றவற்றினை மேற்கொள்வ தன் மூலம் கூடிய வருமானம் பெறுகின்றன. ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடு களில் கிராமிய விவசாய உற்பத்தி மூலம் கிடைக்கும் வருமானம் போதியதாக இன்மையே பருவகால வேலையின்மைக் கான காரணமாகும். மேலும் பண்ணைத் தொழிலைச் சிறந்த அடிப்படையில் மேற் கொள்வதற்கு நிலப் பற்றாக்குறை நிலவுவ தோடு குடிசைக் கைத்தொழில்களை மேற்கொள்வதற்கு போதிய மூலதனமின்மை மூலப்பொருட்களின் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன.

4. கிராமிய கடன் பிரச்சினை

கிராமிய விவசாய துறையின் கடன் பிரச்சினையானது விவசாயிகளுக்கு தேவை ப்படும் பெருமளவு கடன் என்ற அடிப்படை யில் மட்டும் எழுவதில்லை. அக்கடன்களை நிரம்பல் செய்யும் நிறுவனங்கள் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை என்பவற்றுடன் தொடர்புபட்ட பிரச்சினையாக இது காணப்படுகின்றது. விவசாயிகளுக்கு தேவைப்படும் கடன்களை உற்பத்திக்கான கடன்கள், நிலையான முதலீட்டுக்கடன், நடுத்தர முதலீட்டுக் கடன் மாறும் முதலீடு நுகர்வுக்கான கடன் அன்றாட நுகர்வுக் கடன் நெடுவாழ்வுப் பொருட்கள், எதிர்பாராத கடன்கள் என இருவகைப்படுத்தலாம்.

இவ்விருவகைக் கடன்களுக்கு அப்பால் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப் பதற்குக் கூட விவசாயிகளுக்குக் கடன் தேவைப்படுகின்றது. கிராமிய விவசாயி களின் குறைந்த வருமானம் மட்டுமன்றி கிராமிய சமூக வாழ்க்கையின் விறைப்புத் தன்மை மிக்க விதிகள் கூட விவசாயிகள் தமது வருமானத்துக்கு மேலாக செலவு செய்யக் காரணமாகின்றது. கிராமிய மக்கள் கருவிலிருந்து கல்லறை ஈறாக சமய ஆசாரங்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் கூட வீணாகச் செலவு செய்யப்படுகின்றன. இந்த நிலையானது குறைந்த வருமானம்

கொண்ட விவசாயிகள் கடனிலே பிறந்து , கடனிலே வாழ்ந்து கடனிலே இறந்து விடும் நிலைக்குள்ளாகிவிடுகின்றது.

கிராமிய விவசாயிகள் பெறும் கடனில் சிறு பகுதியே ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்கள் மூலம் பெறுகின்றனர். பெரு மளவான கடன்களை ஒழுங்குபடுத்தப் படாத நிதி நிறுவனங்களில் இருந்தே பெறு கின்றனர். ஒழுங்குபடுத்தப்படாத துறையிடம் இருந்து பெறும் கடன்கள் குறைந்த முதிர்ச்சி காலத்தினைக் கொண்டிருப்பதுடன் 100 இலிருந்து 250 சதவீதம் வரை வட்டியினைச் செலுத்துமாறு நிர்ப்பந்திக்கின்றனர். தனது உற்பத்திகளை மிகக் குறைந்த விலையில் தரகர்களிடம் விற்கும் நிலைக்குள்ளாவது டன், கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத விடத்து தனது ஒரே சொத்தான நிலத்தினை கூட இழக்கின்றனர்.

இத்தகைய பல ஆபத்துக்கள் இருந்து கூட கிராமிய விவசாயிகள் ஒழுங்குபடுத்தப் படாத துறையிடம் இருந்து பெருமளவு கடன் பெற பல காரணங்கள் உள்ளன. எமது நாட்டு வணிக வங்கிகள் நீண்டகாலமாக நகர பெருந்தோட்டத் துறைக்குக் கடனைக் கொடுக்கக் கூடிய முறையில் அமைக்கப் பட்டுத் தொழிற்படுகின்றனவேயொழிய கிராமிய மக்களை கருத்தில் கொள்ள வில்லை. வணிக வங்கிகள், கடன் பத்திரங்ள், ஆவணங்கள் போன்ற அசையும் ஆதனங் களை அடிப்படையாகக் கொண்டு கடனை வழங்குகின்றனவே ஒழிய நிலம், விளைச்சல் என்பவற்றைக் கருத்தில் கொள்வதில்லை. ஒழுங்குபடுத்தப்படாத அமைப்பு நன்கு பழக்கப்பட்டனவாகவும், கிராமியச் சூழ் நிலைக்கு ஏற்ப நெகிழ்ச்சித் தன்மை மிக்க கடன் முறையை பின்பற்றுதலை ஒழுங்கு படுத்தப்படாத துறையிடம் இருந்து கடனைப் பெற்று கடன் சுமைக்குட்படுகின்றனர்.

5. இறக்குமதிகள் பெரும் சவால்

வெளிநாடுகளிலிருந்து விவசாய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி செய்யப் படுவதால் உள்நாட்டு விவசாயிகள் பெருமளவு பாதிப்புக்கு உள்ளாகின்றனர். உதாரணமாக தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட் டுள்ள தீர்வைச் சலுகையின் அடிப்படையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஏற்றுமதியாளர் கள் குறைந்த விலையில் உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் என்பவற்றை இலங் கைக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இதனால் இலங்கையின் விவசாயிகள் பாதிப்படை கின்றன.

6. உள்கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் குறைபாடுகள்

பெரும்பாலான கிராமப் பிரதேசங்கள் (சுமார் 70%) மின்சார வசதியைக் கொண்டி ருக்கவில்லை. இது கிராமியக் கைத்தொழில் களிலும் சேவைகளிலும் பயன்படுத்தக் கூடிய உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றின் வீச்சின் மீது கடுமை யான வரையறைகளை எடுத்து வந்துள்ளது. மின்சார வலு இல்லாத நிலையில் பழம் பாணியிலான தொழில் நுட்பத்தில் இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இதனால் உற்பத்தித்திறன், வெளியீடு மற்றும் வருமானம் குறைவடைகின்றது. கிராமப் பிரதேசங்களில் நவீன தொலைத் தொடர்பு வசதிகள் இருந்து வருவதில்லை. தொலைபேசி வசதி இருந்துவரும் பிரதேசங் களில் கூட தரம் குறைந்த கம்பிகள் உபகர ணங்கள் என்பவற்றின் காரணமகாக நம்பகத் தன்மை குறைந்த மட்டத்திலேயே காணப்ப டுகின்றது. தொலைபேசி மற்றும் அஞ்சல் வசதிகள் என்பவற்றின் குறைபாடு கிராமிய கைத்தொழில் அபிவிருத்திக்கு குந்தகம் விளைவித்து வருகின்றது. பொருளாதார சமூக வாய்ப்புத் தகவல்கள் உரியோரை சென்றடைவதைத் தடுக்கின்றது.

கிராமியப் பிரததேசங்களில் பெரும் பாலும் போதியளவில் போக்குவரத்து வசதி கள் கிடைப்பதில்லை. குறிப்பாக காட்டுப் பிரதேசங்கள் செங்குத்தான மலை உச்சிகள் போன்றவற்றில் அமைந்திருக்கும் சிறு அளவான கிராமங்கள் தனிமைப்படுத்தப் பட்டு காணப்படுகின்றன. இதனால் தமது உற்பத்திப் பொருட்களை வெளிச்சந்தைக்கு எடுத்துச் செல்வதிலும் வெளியிலிருந்து உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

7. போதியளவு சந்தை தகவல்கள் இல்லாத நிலை

கிராமங்களுக்கும் வெளியே உள்ள சமூகங்களுக்கும் இடையிலான தகவல் பாய்ச்சலை வரையறுக்கப்பட்ட அளவிலேயே இடம்பெற்று வருகின்றது. அதன் காரணமாக கிராமியத்துறை உற்பத்தியாளர்கள் தமது பிரதேசங்களுக்கு வெளியே நிலவி வரும் சந்தை வாய்ப்புக்கள் குறித்த அறிவைப் பெற்றிருக்கவில்லை. சிறிய தொழில் முயற்சிகள் சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றைக் கொண்டிருக்கவில்லை. பாதை வசதிகளின் குறைபாடுகள் காரணமாக கிராமப் பிரதே சங்களுக்கும் நகரப் பிரதேசங்களுக்கும் இடையிலான பயணங்கள் நேர விரயத்தை யும் சிரமங்களையும் உள்ளடக்கிய பயணங் களாக இருந்து வருகின்றன. இது கிராமியத் தொழில் முயற்சிகள் உயர் கொள்வனவு சக்தியைக் கொண்டிருக்கும் நகர்புற சந்தை களுக்குச் சென்று தமது பண்டங்களை விற்பனை செய்வதற்கும் உள்ளீடுகளைப் பெறவும் இடையூறுகள் காணப்படுகின்றன.

8. வறுமை

எந்தவொரு பின்தங்கிய கிராமங்க ளின் வளர்ச்சியற்ற தேக்க நிலைக்கு அடிக் கட்டுமானமாக இருப்பது வறுமையே. வறுமை என்பதனை மக்கள் கஷ்டம் எனும் சொல்லினூடாக வெளிப்படுத்துகின்றனர். Mill என்பவர் சமூகத்தின் மேம்பாட்டிற்கு தடையாக இருக்கும் பிரச்சினைகளை சமூகப் பிரச்சினை, மனிதப் பிரச்சினை என இரு பிரிவுகளாகக் காண்கின்றனர். வறுமை என்பது பல கிராமங்களில் தனியார் பிரச்சி னையாக இருந்தபோதிலும் அது பல சமூகப் பிரச்சினைக்குத் தூண்டுகோலாக அமைகின் றது. இது கிராமிய அபிவிருத்திக்கு தடையாக அமைகின்றது. குனர் மைர்டால் எனும் அறிஞர் தமது Asian Drama எனும் நூலில் தென்னாசிய நாடுகளின் அபிவிருத்திக்கு தடையான காரணிகளை முன்வைக்கும் போது வறுமை என்பதை முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளார். உலக வங்கியின் அறிக்கையின்படி வறியோரில் 80% மானோர் கிராமப் புறங்களில் வாழ்வதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வறுமையால் நிறையுண வின்மை, சுகாதார நலன் பெறும் வசதி யின்மை குறைந்த கல்விதரம், மூட நம்பிக் கைகளின் ஆதிக்கம் பொருத்தமான வீட்டு வசதியின்மை போன்ற விளைவுகளின் பாதிப்பு அதிகமாகக் காணப்படும்.

9. தொழில் நுட்பமின்மை

கிராமியப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் நவீன தொழில்நுட்ப உபயோகம் மிக அரிதாகவே காணப்படுகின் றது. நிலம் துண்டாடப்படுவதனால் சிறிய காணித் துண்டுகளை வைத்திருக்கும் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்த முடியாதுள்ளனர்.

10. மக்களின் பங்கேற்பு குறைவு

கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் மோசமான செயலாற்றுகைக்கு பங்களிப்புச் செய்யும் மிகப் பெரிய காரணி

களில் ஒன்று தீர்மானங்களை மேற்கொள்ளுதல் அமுலாக்கலில் மக்களின் பங்களிப்பு குறைவு.

11. விலைத் தளம்பல்கள்

சேமிப்பு வசதிகள் இன்மையினாலும் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதாலும் பெரும்பாலான விவசாயிகள் அறுவடையின் போது ஏக காலத்தில் தமது விளை பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு முயற்சித்தால் விவசாயப் பொருட்களின் விலைகள் பெரியளவில் வீழ்ச்சியடைகின்றன.

12. விவசாய ஆராய்ச்சிகள் போதுமானதாக இல்லை.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் விவசாயத்துறை தொடர்பான ஆராய்ச்சிதுறைகளில் பொது வாக தனியார் துறையினர் ஈடுபடுவது குறை வாகவே உள்ளது.

இவ்வாறான பல பிரச்சினைகளை கிராமியப் பொருளாதாரம் எதிர்கொண்டு வருகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு கிராமிய அபிவிருத்தி என்பது முக்கியமாகக் காணப்படுவதனால் கிராமிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகள் நீக்கப்பட வேண்டும். அதற்கான செயற்திட்டங்களை மேற்கொள்ளும் போது குறுங்கால சுய நல அரசியல் இலாபமின்றி நீண்டகால அபிவிருத்தி நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்றிட்டங்களை முன்வைக்க வேண்டும்.

## Reference


1. பொருளியல் நோக்கு ஜனவரி / மார்ச் 2003
2. பொருளியில் நோக்கு மார்ச் / ஏப்ரல் 2002
   கிராமிய வேலை வாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்பு
   என்பவற்றுக்கான நீண்ட கால வாய்ப்புக்கள் (பக் 22-27)
   ஆர்.எம்.கே.ரத்னாயக்க
   மேலதிக செயலாளர் நிதி அமைச்சு
3. சமூக ஒளி இதழ் 4 (பக். 62-77)
   'கிராம அபிவிருத்தி இலங்கையின் அனுபவங்கள்'
   அ.கேதீஸ்வரன் B.A.(Hons)
   உதவி விரிவுரையாளர் பொருளியல்துறை
4. விருட்சம், வணிகமன்றம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
   'கிராமியப் பொருளாதாரம்'
   S.விக்னபாலன்
5. இலங்கைப் பொருளாதாரம் (2008)
   கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் (பக். 46-49)
6. பொருளியல் நோக்கு பெப்ரவரி 1987
7. பொருளியல் நோக்கு ஏப்ரல் 1977
8. தயாபரன்.ஆ ((2000)
   அபிவிருத்தி பொருளியல் இதழ் - 1
   மூன்றாம் உலக நாடுகளின் விவாசாயமும் அதன் பண்புகளும்.

# அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகராக்கச் செயற்பாட்டில் தள்ளுவிசையின் வகிபாகம்

*Mr. J. Tharashan*
*Visiting Tutor,*
*Department of Economics,*
*University of Jaffna,*

உலக நாடுகளில் நகர வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நகராக்கம் நோக்கப்படுகின்றது. நகராக்கம் என்ற பதம் பல்வேறுபட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவ்வகையில் புவியியலாளர்கள் "நகராக்கம்" என்பது பிரதானமாக நிலை மாறும் செயற்பாடு என்பதோடு இடஞ்சார் நோக்கை அடிப்படையாகக் கொண்டது எனக் குறிப்பிட்டுள்ளார்கள். அடுத்து குறித்த சிறப்பு தேர்ச்சியும், உயர் தொழில் நுட்பமும் நகராக்கத்திற்கு அடிப்படையென "லம்பாட்" குறிப்பிட்டுள்ளார். எனவே வரலாற்று காலங்களினூடாக நகரங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி நோக்கின் நீரியல் நாகரீக காலத்திலேயே நகரங்களின் ஆரம்பம் எனலாம். இவை விவசாய நகரங்களாகவும் பின் மத்திய காலங்களில் வர்த்தக நகரங்கள், துறை முக நகரங்களின் வளர்ச்சியையும். இதன் அடுத்த படியாக நவீன அல்லது தொழில் நுட்ப நகரங்களின் வளர்ச்சியையும் அவதானிக்கலாம். இத்தகைய நகரங்கள் மில்லியன் நகரங்கள், மெற்றோ பொலிற்றன், மெகாபொலிஸ், நகரங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. இத்தகைய பாரிய நகரங்களின் வளர்ச்சியுடன் கூடிய புறநகர் வளர்ச்சி, மெகலோபொலிஸ் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

இத்தகைய பாரிய நகரங்களின் வளர்ச்சியை தீர்மானிக்கும் காரணிகளாக நகரை அண்டிய சனத்தொகை குவிவு, நகரை அண்டிய உட்கட்டமைப்பு வசதிகள், கட்டிட நிர்மாணங்கள், அதிகரித்த வேலைவாய்ப்பு, துரித வர்த்தக செயற்பாடுகள், வலைப்பின்னல் போக்குவரத்து, தனியார் பொது வாகனங்களின் அதிகரித்த பாவனை, கைத்தொழில் செயற்பாடுகள், கிராம, நகர இடம்பெயர்வுகள், துரித நகராக்க அபிவிருத்திகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கைத்தொழிற் புரட்சியின் பின்தான் நகராக்க செயன்முறை வளாச்சியடைந்தது எனக் கூறப்படுகின்றது. பொருளாதார அமைப்பில் உண்டான அடிப்படை மாற்றத்தினாலேயே இந்நகராக்கம் ஏற்பட்டது. அதாவது விவசாய பொருளாதார அமைப்பில் இருந்து கைத்தொழிற் பொருளாதார அமைப்பிற்கு பொருளாதாரம் மாற்றப்பட்டமையாலேயே இங்கு நகராக்கம் ஏற்பட்டது. கைத்தொழில் புரட்சியினால் கிராமப் புறங்களில் பெருமளவிற்கு இயந்திரம்

புகுத்தப்பட்டதனால் பெருந்தொகையான இளைஞர்கள் வேலைவாய்ப்பினை இழந்தனர். இதனால் கைத்தொழிற்சாலைகள் நிரம்பிய, வேலைவாய்ப்புள்ள நகரங்களுக்குப், பெருந்தொகையானோர் இடம் பெயர்ந்தனர். நகர்புற கைத்தொழிற்சாலைகளுக்கும் தொழிலாளர் தேவை இருந்தமையால் அவர்கள் கிராமப்புற வேலைவாய்பற்ற இளைஞர்களை கவர்ந்திழுத்தனர். இதனாலேயே கைத்தொழில் புரட்சியின் பின் மேற்கு ஐரோப்பாவில் உண்டான நகராக்கத்தினை **இழுவிசை நகராக்கம்** என்பர். கிராமப்புறங்கள் இளைஞர் மத்தியில் வேலைவாய்ப்பை பறித்தபோது நகரப்புறங்கள் வேலை வாய்ப்பைப் வழங்கின.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உண்டான நகராக்க செயன்முறைக்கு மாறுபட்ட முறையில் அபிவிருத்தியடைந்து வருகின்ற ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நகராக்கம் ஏற்பட்டு வருகின்றது. அதாவது பொருளாதார அமைப்பில் அடிப்படையான மாற்றமில்லாமல் வேறுபல காரணங்களால் நகராக்கம் ஏற்பட்டு வருகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரும்பாலானோர் விவசாயத்துறை சார்ந்தே உள்ளனர். கிராமப்புற பிரச்சனைகளாலேயே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் முக்கியமாக நகராக்கம் ஏற்படுகின்றது. கிராமப்புறங்களில் வேலையின்மை, கீழுழைப்பு, போக்குவரத்து கஷ்டம், பயங்கரமான நோய், கல்வி வசதி குறைவு, சமூகரீதியான அழுத்தம், சமூகப்புறந்தள்ளல் போன்ற காரணங்களால் அப்பகுதிகளில் இருக்க விரும்பாத மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி இடம்பெயர்கின்றனர். நகர்ப்புறங்களில் இவ் வசதிகள் சிறப்பாக அமைந்துள்ளதனால் கிராமப்புற மக்கள் நகரத்தை நோக்கி அழையா விருந்தாளியாகச் செல்கின்றனர். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இதன் காரணமாக கிராமப்புற மக்கள், நகரங்களுக்குத் தள்ளப்படுகின்றனர். இதனாலேயே இந்நாடுகளின் நகராக்கத்தினை **தள்ளுவிசை நகராக்கம்** என்பர்.

வர்த்தக போக்கில் காணப்பட்ட விரிவு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நகராக்கத்திற்கு காரணமாயிற்று. வர்த்தக வாய்ப்புக்கள் உள்ள பகுதிகளில் நகரங்கள் முக்கியமாக வளர்ந்தன. கிராமப்புறங்களில் வேலையின்மை, கீழ் உழைப்பு காரணமாக நகரங்களில் உள்ள வர்த்தக வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்காக, கிராமப்புறமக்கள் அந்நகரங்களை நோக்கி தள்ளப்படுகின்றனர். பம்பாய், சங்காய், கொழும்பு, ஆகியன வர்த்தக விருத்தியினால் வளர்ச்சியடைந்த நகரங்கள் ஆகும்.

பெருந்தோட்டப் பயிர்செய்கையின் விருத்தியினாலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெருமளவிற்கு நகராக்கம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட பயிர்செய்கை இந்நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின் பல நகரங்கள் பெருந்தோட்டங்களை அண்டி உருவாகின. இலங்கையில் கம்பளை, நாவலப்பிட்டி, கற்றன், நுவரெலியா ஆகியன பெருந்தோட்ட பயிர் செய்கை காரணமாக விருத்தியடைந்த நகரங்களாகும். இங்கும் தொழில் வாய்பை பெறும் நோக்கில் கிராமப்புறத்தில் தொழிலற்று இருந்த மக்கள் அப்பிரதேசம் நோக்கி தள்ளப்பட்டனர்.

இந்நாடுகளின் நகராக்க செயல் முறைகளில் கவர்ச்சியும் ஒன்றாகும். கிராமப்புறங்களில் கிடைக்கப்பெறாத கவர்ச்சி நகரப் புறங்களில் காணப்படுவதால், கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள், நகர்ப்புறங்களை நோக்கி தள்ளப்படுகின்றனர். கவர்ச்சி என்ற அம்சம் பல

கோணங்களில் கிராம மக்களைக் கவர்ந் துள்ளது. பொழுது போக்கு அம்சங்கள், நூலகவசதி, போக்குவரத்து வசதி, கல்வி வசதி போன்றன யாவும் கிராம மக்களை கவருகின்றன. இதனால் நகர்ப்புறங்களில் வாழ வேண்டுமென்ற உந்துதலினால் பெருந்தொகையானோர் நகர்புறங்களுக்கு தள்ளப்படுகின்றனர்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடு களில், சிறந்த வைத்திய வசதியினை, கிராமப்புறங்களைவிட நகர்ப்புறங்களில் பெறக்கூடியதாக இருப்பதனால், நகர இறப்புக்கள் குறைவாகக் காணப்படுகின் றன. இதனால் நகர்ப்புறங்களை நோக்கி மக்கள் தள்ளப்படுவதனால் அப்பகுதிக ளில் மக்கள் தொகை அதிகரித்து காணப்படுகின்றது.

தற்காலத்தில் திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகரங்கள் வளர்ச்சியடை கின்றன. பாகிஸ்தானில் இஸ்லாமபாத் என்ற நகரமும், இந்தியாவில் சந்திகார் என்ற நகரமும, பிறேசிலில் பிறேசிலீயா என்ற நகரமும், இலங்கையில் மினிப்பே, ஜயவர்த்தனபுர, அனுராதபுரம் போன்ற நகரங்களும் திட்டமிடப்பட்ட அடிப்படை யில் வளர்ந்துவருகின்றன. இந்நகரங்களில் மக்கள் வாழ்கைக்கேற்ற வசதிகள் திட்ட மிடப்பட்டு செய்து கொடுக்கப்பட்டதனால் பிறபகுதியிலுள்ளவர்களும் இந் நகரங்களை நோக்கி தள்ளப்படுகின்றனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின், காலனித்துவ நாடுகளாயிருந்த, அபி விருத்தியடைந்து வரும் நாடுகள், அவர்களுடைய ஆட்சிகாலத்தின் போது மேலைத்தேய கல்விமுறையையும் பெற் றுக்கொண்டன. மேற்கு ஐரோப்பியரின் ஆட்சியின் போது சிறந்த கல்விகூடங்கள் முக்கியமாக நகர்ப்புறங்களில் அமைக் கப்பட்டது. ஐரோப்பியரின் இக்கல்வி கூடங்களில் கல்வி பெற்றவர்களே பிற் காலத்தில் அவ்வவ் நாட்டின் தேசியத் தலைவராகவும், அரசியல், பொருளாதார, விஞ்ஞானத்துறைகளில் சிறந்து விளங்கிய வர்களாகவும் திகழ்ந்துள்ளனர். எனவே தாங்களும் அப்படிபட்ட கல்வி கூடங்க ளில் கல்விகற்க வேண்டும் என்ற அவாவி னாலும், மக்கள் நகர்ப்புறம் நோக்கி தள் ளப்படும் போது நகராக்கம் கூடுகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிலவுகின்ற சாதிப்பெறுமானத் தாலும் நகராக்கம் ஏற்பட்டு வருகின்றது. இந்நாடுகளில் அந்நிய ஆட்சியின் கீழ் நகர்ப்புறங்களில் பெருமளவிற்கு சாதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டன. ஆனால் கிராமப்புறங்களில் இன்றுகூட சாதிக் கட்டுப்பாடு வேரூன்றியுள்ளன. இதனால் கிராமப்புறங்களில் சாதிக்கட்டுப்பாட்டை விரும்பாத மக்கள் நகரங்களை நோக்கி தள்ளப்படுகின்றனர்.

மேற்கூறிய காரணங்களைவிட நகரம் நோக்கிய அகதிகளின் இடம் பெயர்வும் அபிவிருத்தியடைந்துவரும் நகராக்கத்திற்கு இன்னோர் முக்கிய காரணமாகும். குறிப்பாக இன்று இலங்கையை எடுத்து நோக்கின் வடக்கு கிழக்கு இனப்பிரச்சனை காரணமாக ஏராளமான மக்கள் கொழும்பு நகர் நோக்கியும் இடம்பெயர்ந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

கிராம மக்கள் விவசாய பின்புலத் தைக் கொண்டுள்ளனர். அவர்கள் நகரத்தை நோக்கி நகரும் போது அவர்களின் பௌதீக நிலையில் மட்டும் மாற்றங்கள் ஏற்படுவது மாத்திரமல்லாது, அவர்களின் நடத்தை கோலத்திலும், எண்ணத்திலும் மாற்றங்களை ஏற்படுத்து கின்றது. எனவே மக்கள் நகரங்களுக்கு தள்ளப்படுகின்றனர்.

இக்காரணங்களினால் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளில் நகர மக்கள் தொகையை அதிகரிக்கின்றது. பலர்

தொழில்களைத் தேடி நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்ந்துள்ளனர். அவர்களில் நகர்ப்புற சேரிகளிலும், கொட்டில் குடியிருப்புக்களிலும் வாழும் மக்களில் ஒரு சிறு பிரிவினர் மட்டுமே, நவீனம் மற்றும் முறைசார்ந்த துறையில் நிரந்தரமான பாதுகாப்பான வேலைாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர். நகர வறியவர்களில் பெரும்பாலானவர்கள் கட்டுமான வேலைத்தளங்களிலும், தொழிற்சாலைகளிலும், சில்லறை வர்த்தகத்திலும், போக்குவரத்து துறையிலும் தற்காலிக ஊழியர்களாக வேலைசெய்து வருகின்றனர்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நகராக்கம் மேற்கைரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகக்குறைவாகவுள்ளது. இதற்கு அடிப்படையான காரணம் பொருளாதார அமைப்பில் அடிப்படையான மாற்றம் ஏற்படாமையாகும். இங்கு பொருளாதார அமைப்பில் அடிப்படை மாற்றம் என்பது விவசாயத்துறையை எந்திரமயமாக்கி பெருந் தொகையானோரை கைத்தொழில் துறைக்கு கொண்டு வருவதனையே குறிக்கின்றது. ஆனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இன்றுங் கூட பெருந் தொகையானோர் விவசாயத்துறை சார்ந்தேயுள்ளனர். நகராக்க குறைவிற்கு இன்னொரு காரணம் இந்நாடுகளின் நகரப்புறங்களில் காணப்படுகின்ற பிரச்சனைகளாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகரங்களின் வாழ்கைச் செலவு உயர்வு, போக்குவரத்து கஷ்டம், நீர்பிரச்சனைகள் காணப்படுவதனால் கிராமப்புறங்களிலிருந்து நகரப்புறங்களை நோக்கி மக்கள் இடம்பெயரத் தயங்குகின்றனர். மேலும் குடும்பப்பிணைப்பும் மக்கள் இடம்பெயர்வதை இந்நாடுகளில் குறைக்கின்றது. குறைவான வாழ்கைத் தரமும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நகராக்கத்தை குறைக்கின்றதெனலாம்.

தற்பொழுது உலகின் நகர்புறச் சனத்தொகையில் அரைவாசிப்பகுதி திட்டமிடப்படாத ஆக்கிரமிக்கப்பட்ட குடியேற்றங்களிலும், குற்றச்செயல்களையும், நோய்களையும் விருத்தி செய்யக்கூடியதான சுற்றாடல்களிடையே தரக் குறைவான வீடமைப்புத் திட்டங்களிலும் வசித்து வருகின்றனர். நீர் மற்றும் மின்சக்தி வழங்கல்களின் தீவிரமான பற்றாக்குறை, கழிவுகளை அகற்றுவதற்கான போதிய வசதிகளின்மை, குவியலான இடநெருக்கடி, சத்தம், சுற்றாடல் மாசடைதல் போன்றன வாழ்கையில் தினசரி சம்பவிக்கும் நிகழ்சிகளாகும். உலகின் அரைப்பகுதிக்கு மேற்பட்ட மக்களின் வாழ்கைத்தரத்தை, நகரவாழ்கை நிலைமைகள் நிர்ணயிக்கின்றன. நகரங்கள் அழுக்கடைந்த சுற்றாடல்களைக் கொண்டிருந்தாலும், கிராமிய மக்களை பொறுத்த வரையில் இவை தமது கவர்ச்சியை இழக்கவில்லை. நகரங்கள் இன்னும் தொழில் மற்றும் கல்வி என்பவற்றிற்கான சிறந்த வாய்ப்புக்களை வழங்குவதுடன் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி, நவீன வாழ்கை மாதிரிகளையும், சுகாதார வசதிகளையும் வழங்குகின்றன. எனவே நாட்டுப்புற அபிவிருத்திபணிகளில் அவதானத்தை செலுத்துவதன் மூலம் நகரங்களின் வளர்ச்சியை தடுக்கலாம் என்பது மாயையாகும். நாட்டுப்புறம் பூராகவும் சிதறியுள்ள கிராமங்களை விட, செறிந்த குடியேற்றங்களில் மக்கள் வாழ்வதன் மூலம் மட்டுமே இன்றைய சுற்றாடல் பிரச்சனையை தீர்க்கமுடியும் என்பதும் ஓர் உண்மையாகும். நகரங்களில் சாத்தியமான சுற்றாடலுக்கு, சிநேகபூர்வமான பாரிய போக்குவரத்து முறையே நல்லதோர் எடுத்துக்காட்டாகும். மக்கள்

தமது வேலைத்தலங்களுக்குச் சமீபமாக வாழ்கின்ற போது, எரிபொருள் நுகர்வு காரணமாக ஏற்படுகின்ற சூழ்நிலை, மாசடைதலைக் குறைக்கக் கூடியதாக இருக்கும். தூரங்கள் குறைவாக இருக்கின்றபோது உணவு, நீர், மின்சார விநியோகம் மற்றும் சமூக வசதிகள் மலிவானதாக இருப்பதுடன், சிறிதளவு வளங்களின் உபயோகம் போதுமான தாகும். அதிக இடவசதிகளை விட உயர்ந்த மாடிகளில் கட்டடங்கள் அமைக் கின்ற போது வீடமைப்பு போக்குவரத்து மற்றும் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப் படுகின்ற கழிவுப்பொருட்களை அகற்று தல் மற்றும் கழிவு நீரை பாராமரித்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் சுலபமாகும்.

இச்சூழ்நிலை மத்திய நகரங்களின் நகர வடிவிலான பரவலாக்கலை அயற்பகுதிகளுக்கும் அதற்கு அப்பாலும் கொண்டு சென்று பாரிய நகரமயமாக்க லுக்கான தன்மைகளை உருவாக்கி யள்ளது. போக்குவரத்து அமைப்பு முறைகளின் ஊடுருவலினால் இது மேலும் பரவலடைந்து தொடர்ச்சியான வகையில் அடையாளம் காணக்கூடிய நகரப் பிரதேசங்களை உருவாக்குகின்றன. தொட ராக அதிகரித்து செல்லும் மானிடத் தேவைகளுக்கு தீர்வு காணும் பணியில் உலகம் ஒரு நகர உலகமாக வேகமாக மாறிவருகிறது. இதன்காரணமாக அபி விருத்தியடைந்து வரும் நாடுகளில் கிராமிய மக்கள் நகரம் நோக்கி தள்ளப்படுகின்றனர்.

உசாத்துணை நூல்கள்.

1. Todaro, M. P. (2008), Development Economics,
2. பொருளியல் நோக்கு (1996), மக்கள் வங்கி, கொழும்பு, இலங்கை, மார்ச் 1996,
3. பொருளியல் நோக்கு (1994), மக்கள் வங்கி, கொழும்பு, இலங்கை, பெப்ரவரி 1994

# வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் கைத்தொழில்களின் பங்கு

*Miss. P. Narmatha ,*
*Economics special*
*2007/A/ 133*

## அறிமுகம்

சூழலில் அமைந்து காணப்படும் பொருளாதாரங்களின் ஆரம்ப இயல்புகளை மாற்றி அமைப்பதன் மூலம் மனித தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் செயற்பாடே கைத்தொழில் ஆகும். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் கைத்தொழில் உற்பத்தித்துறை எந்தளவுக்கு பொருத்தமான துறையாக இருக்க முடியும் என நோக்கின், இலங்கை பொருளாதாரத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசமானது 18333 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் 2/3 பங்கு கடற்கரைப் பிரதேசத்தையும் கொண்டுள்ளது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியின் கைத்தொழில் உற்பத்தித் துறையானது பிரதேச அபிவிருத்திக்குப் பொருத்தமான துறையாகக் காணப்படுகிறது. அத்துடன் இங்குள்ள கைத்தொழில் வளங்களைப் பொறுத்தவரை நாட்டின் பல பகுதிகளோடு ஒப்பிடும் இடத்து இப்பிரதேத்தில் மிக குறைவாகக் காணப்படுகிறது. இந்த அடிப்படையில் இங்குள்ள வளங்களை

1) கனிப்பொருள் வளம்
2) விவசாய வளம்
3) கடல் உயிர்சார் வளம்

எனப் பிரித்து நோக்க முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் அத்துடன் பாரிய அளவு கைத்தொழில்கள் என்பதை படிமுறையாக நோக்குவோம்.

### வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களின் வகிபாகம்

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் ஊழியச் செறிவு மிக்கவையாக காணப்படுவதால் குறுங்காலத்திலும் நடுத்தர காலத்திலும் வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பு, வருமான உருவாக்கம் என்பவற்றுக்கிடையான பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்தக் கூடிய ஒரு துறையாகக் காணப்படுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்களை மேற்கொள்வதற்கு குறைந்தளவு மூலதனமும், உட்கட்டமைப்பு வசதிகளுமே தேவைப்படுகிறது. எனவே, இக் கைத்தொழில்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குப் பெருமளவுக்கு பொருந்தக் கூடியதாக உள்ளது.

### வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சிறுகைத்தொழில்கள் சில பின்வருமாறு

- கைத்தொழில் உற்பத்தி நிலையங்கள்.
- புடவை உற்பத்தி
- களிமண் உற்பத்திப் பொருட்கள்
- கயிற்றுக் கைத்தொழில்
- பிரம்புப் பொருட்கள்
- தச்சுப் பொருட்கள்
- மீன் பதப்படுத்தல்
- விவசாயப் பொருட்களைப் பதப்படுத்தல்
- பனை உற்பத்திகள்

இச் சிறு கைத்தொழில்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு பெருமளவு சுய தொழில் வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.

### வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்காலத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

(1) வடக்கு கிழக்கு மாகாணங்களில் போதிய அளவு பயிற்சி வசதிகள் இல்லை.

யுத்தம், 2004 இல் இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் என்பவற்றால் கல்வி, தொழிற் பயிற்சி என்பன சீர்குலைந்தன. இவற்றால் தேர்ச்சி பெற்ற பயிலுனர்கள் இப்பிரதேசத்திலிருந்து குடிபெயர்ந்து சென்றுள்ளனர். அத்துடன் சுயதொழில்களை ஆரம்பிப்பதும் சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது.

தீர்வு : இங்கு வாழ்பவர்களுக்கு வேண்டிய தொழில்பயிற்சியும், திறன்களையும், தொழில் முனைவு அபிவிருத்தியையும் பெறும் பொருட்டு நிறுவனங்களை மீளக் கட்டி எழுப்ப வேண்டும்.

(2) வடக்கு கிழக்குப் பகுதிகளில் போதிய காட்சி அறைகளோ விற்பனைக் கூடங்களோ நிறுவப்படவில்லை.

எனவே, உற்பத்திப் பொருட்கள் இடைத்தரகர்களுக்கு ஊடாக விற்பனை செய்யப்படுவதுடன் அவர்கள் இந்நிலைமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி உற்பத்தியாளர்களிடம் இருந்து மிகக் குறைந்த விலைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர்.

தீர்வு : விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் நிறுவப்பட்டால் உற்பத்தியாளர் தமது உற்பத்திப் பொருட்களை தாமே விற்பனை செய்ய முடியும்.

(3) உணவு மற்றும் விவசாய கைத்தொழில் துறையைப் பொறுத்தவரை தொழில்நுட்பப் பற்றாக்குறை காணப்படுகிறது.

தீர்வு : உற்பத்திப் பொருட்களைப் பாதுகாத்து வைப்பதற்கான தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட வேண்டும்.

(4) கடன் வசதிகள் போதியளவு கிடைக்காமை.

தற்போது வடக்கிலும் கிழக்கிலும் இயங்கிவரும் வங்கிகள் மிக உயர்ந்த 42% வருட வட்டியில் கடன்களை வழங்கி வருகின்றன.

வட்டி வீதங்கள் உயர்வாக இருப்பதாலும், உயர் அளவிலான பிணைகள் தேவையாக இருப்பதாலும் மக்கள் வரையறுக்கப்பட்ட அளவு கடன்களை மட்டுமே பெறுகின்றனர்.

இவ்வாறாக வடக்கு கிழக்கு பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைப்பதினூடாக அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல முடியும்.

### வடக்கு, கிழக்கு அபிவிருத்தியில் பாரிய அளவு கைத்தொழில்கள்

வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில் ஒரு சில பாரிய கைத்தொழில்களும் இயங்கி

வந்துள்ளன. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைக் கடதாசி தொழிற்சாலை, கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பவற்றைக் கூறலாம்.

1980களின் ஆரம்பத்தில் அரசிற்குச் சொந்தமான இத்தொழிற்சாலைகளின் உற்பத்தி விபரம் வருமாறு:

- காகிதம் : 100, 000 தொன்
- சோடியம் ஹைட்ரொக்சைட் : 1700 தொன்
- குளோரைட் : 1200 தொன்
- சீமெந்து : 500, 000 தொன்

(மூலம் : பொருளியல் நோக்கு பெப்/மார்ச் 2010)

திருகோணமலை மாவட்டத்தில் இருக்கும் புல்மோட்டை கடற்கரைப் பிரதேசம் கனிப்பொருள் வளம் மிகுந்த ஒரு பிரதேசமாக இருந்து வந்துள்ளது. இங்கு இல்மனைற், மெனோசைட், சிலிக்கன் போன்ற கனிப்பொருட்கள் காணப்படுகின்றன.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறை (2003 - 2007)**

| வருடம் | வடக்கு | கிழக்கு |
|---|---|---|
| 2003 | 2, 987 | 34,948 |
| 2004 | 14,586 | 32, 020 |
| 2005 | 15,847 | 27, 627 |
| 2006 | 5,232 | 49, 753 |
| 2007 | 6, 161 | 59, 827 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி. ஆண்டறிக்கை 2008

(1) சீமெந்துக் கைத்தொழில்

1953ல் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய கைத்தொழிலாகும். இத்தொழிற்சாலை காங்கேசன்துறையில் காணப்பட்டது. இங்கு சீமெந்து உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

(2) சீனிக் கைத்தொழில்

சீனி தொடர்பான உள்நாட்டு தேவையில் ஒரு பகுதியை பூர்த்தி செய்யும் நோக்குடன் அம்பாறைக்கு அண்மையிலுள்ள கிங்குராணை என்ற இடத்தில் சீனித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

(3) காகிதக் கைத்தொழில்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இங்கு காகிதம் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

(4) பனிக்கட்டி உற்பத்தி நிலையம்

மன்னார் மாவட்டத்தில் பேசாலை பகுதியில் பனிக்கட்டி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

(5) பனம் வடிசாலைக் கைத்தொழில்

யாழ்ப்பாண மாவட்டத்தில் திக்கம் பகுதியில் சாராயம் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

(6) காரைநகர் படகு பணிக்களம்

காரைநகர் பகுதியில் படகு தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டது எனினும் தற்காலத்தில் இயங்கவில்லை. கடற்படை இக்காணியை பயன்படுத்துவதனால் அவர்களிட

மிருந்து அனுமதி பெறுவதற்கான முயற்சியில் சீநோர் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

(7) மீன் வலைத் தொழிற்சாலை:

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் மீன் வலை உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

(8) உப்பளம் :

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனையிறவு பகுதியில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

(9) பரந்தன் இரசாயன தொழிற்சாலை

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் பகுதியில் எரிசோடா உற்பத்தி செய்யப்படுகின்றது.

(10) ஓட்டு தொழிற்சாலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் பகுதியில் எரிசோடா உற்பத்தி செய்யப்படுகிறது.

(11) மீன் தகரத்தில் அடைக்கும் நிலையம்

மன்னார் மாவட்டத்தில் பேசாலைப் பகுதியில் மீன் தகரத்தில் அடைத்தல் நிலையம் காணப்படுகின்றது.

(12) கனிய மணல் தொழிற்சாலை :

புல்மோட்டை பகுதியில் இல்மேனைற்று உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

(13) பிற கைத்தொழில்கள் :

உப்பு, தீப்பெட்டி, சவர்க்காரம், பசளை உற்பத்தி செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- வவுனியாவில் பால் உற்பத்தி
- மட்டக்களப்பில் அரிசி ஆலைகள்
- கும்புறுமலையில் - முந்திரிகை, பால் பதனிடும் நிலையங்கள்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அரசினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளை விட முயற்சியாண்மையாளரால் ஆரம்பிக்கப்பட்டவை அதிகமாகும். பின்வரும் கைத்தொழிற்சாலைகள் இதற்கு சான்று பகிர்கின்றது.

(1) "மஸ்கன்ஸ்" என்ற பெயருடன் அஸ்பெக்டஸ் கூரைத் தகடுகள்.

(2) "எல்பிகெம்" வாளி உற்பத்தி தொழிற்சாலை.

(3) "பேபி மார்க்" என்ற பெயரில் சோடா குளிர்பான தொழிற்சாலை வல்வெட்டித்துறையில் ஆரம்பிக்கப்பட்டது.

(4) "டொலர்" அலுமினியத் தொழிற்சாலை மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

(5) 1914 பங்குனியில் "மச்சாச்டோ சோடா" குளிர்பான தொழிற்சாலை (நிறுவுனர் - யோசவ் மச்சாச்டோ)

(6) ஆணி உற்பத்தி, ரயர் உற்பத்தி, மை உற்பத்தி

(7) அண்ணா கைத்தொழில் நிறுவனம் என பல கைத்தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## முடிவுரை

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிகளின் அனுபவத்திலிருந்து நோக்கும்போது 19ஆம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளான ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது கைத்தொழில்களின் வளர்ச்சியால் ஏற்பட்டதாகும்.

கைத்தொழில்துறை வளர்ச்சியடை யும் போது அத்துறையுடன் இணைக்க வேண்டிய வேறு உற்பத்திகளும் அதாவது முன்கொழு, பின்கொழு உற்பத்திகளின் வளர்ச்சி ஏற்படுவது மட்டுமன்றி சேவைத் துறையின்

கேள்வியும் அதிகரித்துச் செல்லும். எனவே, அரசு நேர்மையான முறையில் பேரின பொருளாதார கொள்கையை வகுத்து நடைமுறைப்படுத்தினால் வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் வளர்ச்சியானது கைத்தொழில் துறை மூலம் துரிதமாக்கப்படுவது மட்டுமன்றி அதிகரித்து செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.

## References


1. பொருளியல்நோக்கு, மக்கள் வங்கி, கொழும்பு. பெப் / மார்ச் 2010
2. பொருளியல்தளம், கொழும்பு. மலர் - 1 June 2007
3. அபிவிருத்திப் பொருளியல் பொருளியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இதழ் 1 - 4 வரை
4. மார்க்கம் சஞ்சிகை, மார்க்கா நிறுவன வெளியீடு, கொழும்பு.

# வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கிராமியப் பொருளாதாரமும் அடிப்படைப் பிரச்சினைகளும்

*Miss. K. Garikarasuthan*
*Economics special,*
*2007/A/43*

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களில் ஏறக்குறைய 3/4 பங்கினர் கிராமங்களிலே வாழ்கின்றனர். 1981ம் ஆண்டு சனத்தொகை கணிப்பீட்டின்படி இம் மாகாணங்களின் மொத்த சனத்தொகையில் 74.8% ஆனோர் கிராமங்களிலும் 25.2% ஆனோர் நகரங்களிலும் வாழ்கின்றனர். ஆனால் மாவட்டத்திற்கு மாவட்டம் இவ் வித்தியாசங்களில் வேறுபாடு காணப்படுகின்றது. மன்னார் (86.5% ) முல்லைத்தீவு (90.8% ) அம்பாறை (86.2% ) ஆகிய மாவட்டங்களில் 85% இற்கு மேலான மக்கள் கிராமங்களில் உள்ளனர். யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 67% மக்களே கிராமங்களில் 1981இல் வாழ்ந்தனர் பின்வரும் அட்டவனை ஒவ்வொரு மாகாணங்களிலும் நகரங்களிலும், கிராமங்களிலும் மக்களின் தொகையினைக் காட்டி நிற்கின்றது.

| விடயம் | பணத்தொகை அளவு (1000) | | | | |
|---|---|---|---|---|---|
| | நகரம் | % | கிராமம் | % | மொத்தம் |
| வடகிழக்கு | 527.0 | 25.2 | 1560.7 | 74.8 | 2087.9 |
| அம்பாறை | 53.6 | 13.8 | 335.2 | 86.2 | 388.8 |
| மட்டக்களப்பு | 79.5 | 24.0 | 251.3 | 76.0 | 330.9 |
| திருகோணமலை | 83.2 | 32.3 | 173.5 | 67.7 | 256.8 |
| கிழக்கு மாகாணம் | 216.3 | 22.2 | 760.0 | 77.8 | 976.3 |
| முல்லைத்தீவு | 7.2 | 9.2 | 70.3 | 90.8 | 77.5 |
| வவுனியா | 18.5 | 19.3 | 77.4 | 80.7 | 95.9 |
| மன்னார் | 19.4 | 13.5 | 92.5 | 86.5 | 106.9 |
| யாழ்ப்பாணம் | 270.6 | 37.6 | 560.5 | 67.4 | 831.1 |
| வடமாகாணம் | 310.7 | 28.0 | 800.7 | 72.0 | 1111.1 |

ஆதாரம் அல்லது மூலம் : இலங்கை புள்ளிவிபர திணைக்களம்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நகர சனத் தொகை 1981இல் 527000 இதன்படி இப்பிரதேசத்தில் வாழ்வோரில் 25% ஆனோர் நகரவாசிகள் இலங்கையின் சனத்தொகை யின் வீதத்தினை 21.5 % உடன் ஒப்பிடும் போது நகராக்கல் பண்பு இவ் பிரதேசத்தில் சற்று அதிகமாக இருப்பதைக் காணலாம். எனினும் வடக்கு, கிழக்கு மாகாணத்தை தனித்தனியே நோக்கும்போது கிழக்கு மாகாணத்தின் நகர சனத்தொகை தேசிய சராசரியைத் தந்ததாக 22%ஆனதாக காணப்படுகிறது. வடக்கு மாகாணத்தின் நகராக்கச் சனத்தொகை 28% ஆக உள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தின் நகரங்களில் வாழ்வோரில் பாதிக்கு மேற்பட்டோர் 270000 மக்கள் யாழ் மாவட்டத்தில் வாழ்வதையும் அவதானிக்க வேண்டும். இப்பிரதேசத்தில் உள்ள 26 நகரங்களில் 13 நகரங்கள் யாழ்ப் பாண மாவட்டத்திலே அமைந்துள்ளது. மொத்த நகரங்களுள் யாழ்ப்பாணம், மட்டக்க ளப்பு என்பன மாநகர அந்தஸ்தினையும், சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித் துறை, வவுனியா, அம்பாறை, திருகோண மலை என நகரசபை அந்தஸ்தினையும் பெற்ற நகரங்களாக உள்ளன.

தனித்தனி மாவட்டங்களாக நோக்கும் போது நகர சனத்தொகையின் அளவு வீதா சார ரீதியான பாரியளவு மேம்பாடு காணப் படுகின்றது. திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலே மொத்த சனத் தொகையில் ஏறக்குறைய 1/3 பங்கினர் நகரப் பகுதியில் வாழ்கின்றனர். ஆனால் முல்லைத் தீவின் சனத்தொகையில் 9.2% இனரே நகரப் பகுதியில் வாழ்வதைக் காணலாம்.

பொதுவாக நோக்கும்போது 2 மாகா ணங்களிலும் கிராமப் பகுதியில் வாழும் மக்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் அம் மாகாணத்தின் மொத்த மக்கள் தொகையில் 78% இனர் கிராமப் பகுதியில் வாழ்கின்றனர். இது வட மாகாணத்தில் 72% ஆக உள்ளது. இம் மாகாணங்களின் பொருளாதாரத் துறையில் கிராமியத்துறைப் பொரு ளாதாரம் பின்வரும் வழிகளில் முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகிறது.

1. கிராமியத் துறை பொருளாதாரத்தில் விவசாயம் முக்கியம் பெறுகின்றது. இதன் காரணமாக இம் மாகாணங்களில் வாழும் மக்களின் பிரதான உணவான அரிசியை இம் மாகாணங்களில் உற்பத்தி செய்யும் நெல் பூர்த்தி செய்கிறது. அதேவேளை இம் மாகாணங்களில் தேவைக்கு மேலாக உற்பத்தி செய்யப்படும் அரிசி பிற மாகாணங் களுக்கு அனுப்பி வைக்கப்படுவதனாலும் இம் மாகாணங்களின் கிராமியத்துறை முக்கியத்துவம் பெறுகின்றது. இதனைவிட இதர தானியங்கள், உப உணவுப் பயிர்கள், பால் உற்பத்தி, கடலுணவு உற்பத்தி போன் றனவும் இம்மாகாண மக்களின் தேவைக்கு மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு பிற மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படு கின்றன. இவ்வாறு கிராமப் புறங்களில் இருந்து மலிவான விலைகளில் அனுப்பி வைக்கப்படும் உணவு வகை பணவீக்கத்தை கட்டுப்படுத்தி வைப்பதற்கும் நகரங்களின் கூலி வீதங்களை குறைந்த மாவட்டத்தில் வைத்திருப்பதற்கும் உதவுகின்றது. கீழ்வரும் அட்டவணை வடக்கு, கிழக்கு மாகாணங்க ளின் நெல் உற்பத்தியினைக் காட்டுகின்றது.

மகாபோகத்தில் நெல் உற்பத்தியை நோக்கின் :

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 15900 MT |
| கிளிநொச்சி | 48650 MT |
| மட்டக்களப்பு | 124151 MT |
| அம்பாறை | 197700 MT |

மூலம் : NEPC, Satistion hand work

சிறுபோகத்தில் நெல் உற்பத்தியின் அளவினை நோக்கின் :

| | |
|---|---|
| கிளிநொச்சி | 26200 MT |
| மன்னார் | 2440 MT |
| வவுனியா | 13980 MT |
| முல்லைத்தீவு | 10390 MT |
| அம்பாறை | 187610 MT |
| மட்டக்களப்பு | 44980 MT |
| திருகோணமலை | 56970 MT |

மூலம் :NEPC, Satistion hand work

2. கிராமியத்துறை நாட்டு விவசாயத்துறை சாராத துறைக்குத் தேவையான ஊழியத்தை வழங்குகின்றது.

குறிப்பாக நாட்டு வடபகுதியின் கிராமியத்துறையினர் பல வெளி மாவட்டங்களில் பல்வேறு துறைகளில் வேலை செய்வதன் மூலம் ஏனைய மாகாணங்களின் ஊழியத் தேவையினை பூர்த்தி செய்கின்றனர். இவ்விரு மாகாணங்களைச் சேர்ந்த படித்தவர்கள் வெளிமாவட்டங்களில் குறிப்பாக கொழும்பில் வேலை செய்கின்றனர்.

இதேவேளை ஏனைய மாகாணங்களில் இம் மாகாணங்களின் வேலையினை உறிஞ்சிக் கொள்வதன் மூலம் இம் மாகாணங்களின் அபிவிருத்திக்கு உதவி வருகின்றன என்பதனை நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

3. கிராமிய சேமிப்புக்கள் மூலம் இம் மாகாணங்கள் நாட்டின் ஏனைய மாகாணங்களின் அபிவிருத்திக்கும் உதவி வருகின்றது. இலங்கைத் தமிழர் குறிப்பாக யாழ்ப்பாண மக்களின் சேமிப்பு பழக்கம் பலராலும் அறியப்பட்ட விடயமாகும். கிடைக்கத் தக்க புள்ளி விபரங்களின்படி இம் மாகாணங்களில் காணப்படும் வங்கிகளிலுள்ள மொத்த வைப்பு தொகையை விட மிகக் குறைந்தளவு தொகைப் பணமே இம்மாகாணத்தில் உள்ள மக்களுக்கு கடனாக வழங்கப்படுகின்றது. இதிலிருந்து தெரியவருவது யாதெனில் இம் மாகாணங்களில் வைப்புக்களால் பெறப்படும் பணத்தின் பெரும்பகுதி பிற மாகாணத்தின் பயன்பாட்டிற்கே அனுப்பப்படுகிறது ஆகும். எனவே இம் மாகாணங்களிலுள்ள மக்கள் தமது சேமிப்பினை வங்கிகளில் வைப்புச் செய்வதன் மூலம் பிற மாவட்டங்களின் அபிவிருத்திக்கு உதவி செய்கின்றன.

4. இவ்விரு மாகாணங்களிலும் விவசாய இறக்குமதி பிரதியீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் நாடு குறிப்பிடத்தக்களவு அந்நிய செலவாணியை சேமிப்பதற்கு உதவுகின்றன. உப உணவுப் பயிர்கள் புகையிலை, நெல், மரக்கறிகள், கடல் உணவுப் பொருட்கள் போன்றவற்றை உற்பத்தி மூலம் ஏனைய நாடுகளில் இருந்து இப்பொருட்களை இறக்குமதி செய்வது குறைக்கப்படுகின்றது. மேலும் இம் மாகாணங்களில் உற்பத்தி செய்யப்படும் (மீன், கருவாடு, நண்டு, கணவாய், இறால், கடல் அட்டை, சிங்க இறால்) போன்ற கடலுணவு பொருட்கள், பனைப் பொருட்கள், ஒடியல் மா, பனாட்டு, பனங்கட்டி, பனங்கற்கண்டு, புழுக்கொடியல் நல்லெண்ணை, புகையிலை, வெற்றிலை, பாக்கு போன்றன இவ்விரு மாகாணங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கை அந்நிய செலாவணி வருவாயினை பெற்றுக் கொள்வதற்கும் இவ்விரு மாகாணங்களின் கிராமியத்துறை வழிவகுக்கின்றது.

5. இனப்போரின் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த மக்களில் ஏறக்குறைய 8 இலட்சம் பேர் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் உறவினர்கள் பலர் இக்கிராமங்

களில் வசிக்கின்றனர். இவர்கள் தாம் படித்த பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், பயன டைந்த சனசமூக நிலையங்கள் இக்கிரா மங்களில் இருக்கின்றன. எனவே வெளி நாட்டில் உள்ளவர்கள் தமது உறவினர்களுக் காக கணிசமான அந்நிய செலாவணியை அனுப்பிக் கொண்டு இருக்கின்றனர். மேலும் 2002க்கு பின்னர் 2006 ஆவணி வரை சமா தானம் நிலவியபோது வெளிநாட்டில் வசிப் பவர்கள் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிக ளாக வந்தனர். இதனால் அதிக அந்நிய செலாவணி கிடைத்தது. மேலும் வெளி நாட்டில் வசிப்பவர்கள் தாம் கிராமத்தில் முன்னர் பயன்படுத்திய பொருட்களை பயன் படுத்த விரும்புகின்றனர். (முன்னர் குறிப் பிட்ட சில கடலுணவுப் பொருட்கள், லக்ஸ் சோப், சில மருந்துப் பொருட்கள், தேயிலை, கோப்பி, அரிசி மா, வாசனைத் திரவியம்) இப்பொருட்கள் இலங்கையிலிருந்து ஏற்று மதி செய்வதனால் அந்நிய செலாவணி கிடைக்கின்றது. இது சென்மதி நிலுவைப் பற்றாக்குறையைத் தீர்க்கின்றது.

6. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் குறித்து இவ்விரு மாகாணங்களின் நெல், தானியங்கள், உப உணவுப் பொருட்கள், கடலுணவுப் பொருட்கள் போன்றன சுய நிறைவை அடையும் நிலைக்கு உள்ளன. எனினும், ஏனைய பொருட்கள் குறிப்பாக கைத்தொழில் பொருட்கள் குறித்து ஏனைய மாகாணங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையே நம்பி இருக்க வேண்டி யுள்ளது. ஏனைய மாகாணங்களில் உற்பத்தி செய்யப் படும் பொருட்களுக்கு இம் மாகா ணங்களின் கிராமிய பகுதியில் வாழ்வோர் நுகர்வோராக உள்ளனர். இதனால் ஏனைய பகுதிகளின் வளர்ச்சிக்கு உதவுவதாக உள்ளனர்.

## வடக்கு கிழக்கு மாகாணங்களின் கிராமிய பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள்

கிராமியத் துறையில் வசிப்போர் பெரும்பாலும் விவசாய நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களாக இருப்பதால் கிராமிய பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினை அதனது பொருளாதார நோக்க நிலையுடன் சம்பந்தப்பட்டவையாக உள் ளன. இப்பிரச்சினைகள் நிலம், உற்பத்தித் திறன், உழைப்பு, கொடுகடன் போன்றவற் றுடன் தொடர்புபட்டுள்ளன. மேலும் இப்பிரச்சினைகளுடன் தொடர்புபட்டனவாக இருப்பதுடன் அவற்றுக்கான தீர்வுகளும் இணைந்து மேற்கொள்ளவேண்டியனவாக உள்ளன. கிராமியத் துறையில் அபிவிருத் தியை ஏற்படுத்த வேண்டுமாயின் இப்பிரச் சினைகளை தெளிவாக அறிந்து கொள்வது அவசியமானதாகும்.

### 1. சிறிய நிலவுடமைகள் அதிகளவில் காணப்படுதல்

இம் மாகாணங்களில் காணப்படும் விவசாய நிலவுடைமைகளின் அளவு மிக சிறியனவாக உள்ளமை விவசாயிகள் பலர் வறிய நிலையில் இருப்பதற்கான முக்கிய மான காரணமாக அமைகின்றது. சிறியளவு நிலங்கள், குடும்ப உழைப்பு என்பனவே இங்கு பிரதான உள்ளீடுகளாக இருந்து வரு கின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விவசாயத் துறையில் குறிப்பாக நெல் உற்பத்தி குடும்ப தேவைகளுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. நிலம் என்ற காரணி நிலையான அளவாக இருப்பதால் குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கை அதி கரிக்கும்போது ஒவ்வொருவருக்கும் கிடைக் கக் கூடிய நிலத்தின் அளவு குறைவாக உள்ளது.

பின்வரும் அட்டவணை சிறிய விவசாய நிலவுடமை நிலங்களின் எண்ணிக் கைகளையும் பரப்பளவையும் காட்டுகிறது.

2002 ஆண்டுக்குரிய தகவல்

| மாவட்டம் | நிலவுடமையின் எண்ணிக்கை | மொத்த நிலம் ஹெக்ரெயர் | சராசரிநிலத்தின் ஹெக்ரெயர் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 91855 | 16876 | 0.18 |
| கிளிநொச்சி | 17663 | 15113 | 0.86 |
| மன்னார் | 14666 | 8792 | 0.59 |
| வவுனியா | 21552 | 13567 | 0.63 |
| முல்லைத்தீவு | 18154 | 16089 | 0.89 |
| மட்டக்களப்பு | 99373 | 32663 | 0.33 |
| அம்பாறை | 123600 | 71833 | 0.58 |
| திருகோணமலை | 52190 | 22220 | 0.43 |

ஆதாரம் : இலங்கை புள்ளிவிபர திணைக்களம்

அட்டவணையை நோக்கும்போது சராசரி நிலத்தின் அளவு யாழ்ப்பாண மாவட்டத்திலேயே குறைவாக இருப்பதைக் காணலாம். Jaffna Plane என்ற நூலில் உள்ளபடி நோக்கின் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மொத்த நிலவுடமைகளின் அளவு 84416 ஆகும். இதன் நிலப்பரப்பின் அளவு 24 924 ஹெக் ரயர் ஆகும். இதன்படி சராசரி நிலவுடமை யின் அளவு 0.3 ஆகும். மேலும் இந்நூலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிக சிறிய நிலவுடமைகளின் அளவு மொத்த நிலவுடமையில் 73483 எனவும் அவற்றின் பரப்பு 905 ஹெக்ரெயர் எனவும் கூறப்படுகின்றது. இதன்படி சராசரி நிலவுடமையின் அளவு 0.12 ஹெக்ரெயர்களாகும்.

சிறிய நில உடமையாக இருத்தல் , சனத்தொகை அதிகரிக்கும்போது மேலும் அந்த நிலங்கள் துண்டாடப்படும் நிலைக்கு உள்ளாதல் போன்றவற்றால் இவ்விரு மாகாணங்களின் கிராமிய துறையில் கீழ் உழைப்பு நிலை, மறைமுக வேலையின்மை போன்றனவும் காணப்படுகின்றன. சிறிய நில உடமையானவையாக இருப்பது மாத்திரமன்று சிக்கனமற்ற நில உடைமைகளாகிய நிலை காணப்படுகின்றன. அதாவது இந்நில உடமையில் குடும்ப அங்கத்தவர் யாவருக்கும் வேலை வழங்குவதற்கு போதுமானதாக இல்லை. மேலும் இந்நிலங்களில் இருந்து பெறும் உற்பத்தியினால் மட்டும் கடன்படாமல் வாழ்வதற்கான சந்தர்ப்பங்களும் இந் நில உடமையாளர்களுக்கு கிடைப்பதில்லை மேலும் விவசாயி ஆனவன் தொடர்ந்து விவசாய உற்பத்தியை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் மூலதனத்தை கடனால் அன்றி சொந்த சேமிப்புக்களால் திரட்டுவதற்கு ஏற்ற வருமானத்தினை இந்நிலவுடமைகளிலி ருந்து பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதால் இவை சிக்கனமற்ற நிலவுடமையாக உள்ளன.

சில நிலவுடமைக்கு சொந்தக்காரர்களாக இருப்பவர் விவசாயத் துறையிலிருந்தும் கணிசமான எண்ணிக்கை உடையவர்களுக்கு எவ்வித நிலமும் சொந்தமாக இல்லை. அதாவது அவர்கள் நிலமற்ற தொழிலாளர்களாக உள்ளனர். கிராமத் துறையில் கிடைக்கும் வேலைகளைச் செய்து சீவனம் நடத்துபவர்களாக உள்ளனர். வேலையற்ற நாட்களில் இவர்களுக்கு எவ்வித வருமானமும் கிடைப்பதில்லை. கிராமியத் துறையில் உள்ள வறியவர்களுள் வறியவர்களாக இவர்கள் உள்ளனர். இம் மாகாணங்களை சேர்ந்த 9 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் யுத்தம் காரணமாக வேறு தேசங்களுக்கு சென்றதால் பிரச்சினையின் அளவு ஓரளவுக்கு குறைவாக உள்ளதெனலாம்.

நிலங்கள் சிறியளவாக இருப்பதால்

நவீன தொழில்நுட்பங்களை புகுத்துவதிலும் தடைகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலத்திற்கு சொந்தமான வர்கள் பலர் வெளிநாடுகளுக்கு சென்று விட்டதால் அவர்களது நிலங்கள் பயன்படுத் தப்படாமல் உள்ளன. சிலவற்றை அந்நிலத் திற்குச் சொந்தக்காரர்கள் பயன்படுத்தினா லும் நீண்டகால நோக்கில் அந்நிலங்களில் அபிவிருத்தியினை செய்வதும் இல்லை. காரணம் அந்நிலங்களை செலவு செய்து அபிவிருத்தியினை ஏற்படுத்தின் எதிர்காலத் தில் நிலச் சொந்தக்காரர்கள் வந்து நிலங் களைத் திரும்பவும் தம்மிடம் பெற்று விடு வார்கள் என்ற பயமும் காரணமாக இருக்க லாம்.

2. குறைந்த உற்பத்தித் திறன்

கிராமிய துறையில் குறைந்த வருமா னத்திற்கு இம்மாகாணங்களில் உள்ள குறைந்த உற்பத்தித் திறன் முக்கிய காரண மாகும். ஒரு ஹெக்ரெயரருக்கான வருமானம் குறைவாக இருப்பதும் கிராமிய வறுமைக்கு பங்களிப்பு செய்யும் மற்றொரு காரணமாகும். விவசாயத்துறையின் உற்பத்தி திறனை

1. நிலத்தினது உற்பத்தித் திறன்
2. உழைப்பினது உற்பத்தி திறன்

என இருவகைப்படுத்தலாம். குறைந்த விளைச்சல், குறைந்த மட்டத்திலான வினைத்திறன் கொண்ட வளங்கள் பயன் படுத்தப்பட்டு வருவதன் காரணமாகவே ஏற்படுகின்றது. இதற்கு

- நிலத்தின் தரம் குறைந்த நிலை
- போதியளவு உரப்பாவனை இன்மை
- மூலதனப்பற்றாக்குறை
- நல்லின விதைகள் போதியளவு பயன்படுத்தாமை
- போதிய நீர்ப்பாசன வசதி கிடைக்காமை
- கிருமிநாசினி, பூச்சிகொல்லிகள் போதியளவில் பயன்படுத்தாமை
- கிருமி நாசினி, பூச்சிகொல்லிகள் போன்றவற்றை பெறுவதில் உள்ள கஷ்டங்கள்

போன்றவற்றால் ஹெக்ரெயருக்கான விளைச்சல் குறைவாக உள்ளது. யாழ்ப் பாண மாவட்டத்தில் நெல் உற்பத்தியில் பாரம்பரிய இனங்களே கூடுதலாக பயன் படுத்தப்படுகின்றன. இதனால் சராசரி விளைச்சல் குறைவாக உள்ளது. தமது சொந்த குடும்ப உழைப்பைப் பயன்படுத்து வதும் பாரம்பரிய நெல்லின வகைகளை தமது பிரதான உணவாக கொண்டிருப்பது யாழ் மாவட்டத்தில் நெற்செய்கை நட்டத்தில் இயங்கியபோதும் தொடர்ந்து நெற்பயிர்ச் செய்கை இடம்பெறுவதற்கான காரணங்க ளாகும். எனினும் பொருளியலாளனாக நோக்கின் குடும்ப உழைப்புக்கான சந்தர்ப்ப செலவை கணக்கில் எடுக்கும்போது யாழ் மாவட்ட நெற் செய்கை நட்டத்தினைத் தருவ தைக் காணலாம். காரணம் ஹெக்ரெய ருக்கான சராசரி விளைச்சல் குறைவாக இருப்பதாகும்.

மேலும் யுத்தநிலை காரணமாக கடந்த இரண்டரை தசாப்தங்களாக நீர்ப்பா சன வசதிகளில் ஏற்பட்ட அழிவுகள், பாதை கள் தடைப்படுதலும், அரசாங்க தடைகளா லும் போதியளவு நல்லின விதைகள், கிருமி நாசனி, களைகொல்லி, உரம் என்பன விவ சாயிகளுக்கு கிடைக்காமை, கடன் வசதி களை வங்கிகளில் பெற முடியாமை போன்றன வையும் இம் மாகாணங்களில் ஹெக்டெ யருக்கான விளைச்சல் குறைவாக இருந்த மைக்கு பொறுப்பாக உள்ளது.

கிராமிய விவசாயத்துறையின் உற்பத் தித்திறனை அதிகரிக்க முனையும் போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள் ளது. இன்றைய உலகம் அதி நவீன தொழில் நுட்ப முன்னேற்றங்களை சந்தித்து வந்த போதிலும் எமது கிராமிய பொருளாதாரத் தைப் பொறுத்தவரையில் நவீன தொழில் நுட்பத்தின் உபயோகம் மிகவும் அரிதாகவே

காணப்படுகிறது. நவீன தொழில்நுட்பங்களை புகுத்த முனைகின்றபோது பின்வரும் பிரச்சினைகள் எழுகின்றன.

i. கிராமியத்துறையின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு இயந்திரமய மாக்கல் அல்லது முதல் செறிவான முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். ஆனால் கிராமிய துறையில் வெளிப்படையான சேவையினை பெற கீழ்உழைப்பு நிலை மறைமுக வேலையின்மை போன்றன காணப்படுவதால் முதற் செறிவு மிக்க உற்பத்தி முறை மேலும் வேலையின்மையினை அதிகரிக்கும்.

ii. கிராமிய விவசாயிகளின் வருமானம் மிகக் குறைவதாலும் பலர் சிறிய நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பதால் இவர்களிடம் பெருமளவு முதல்கட்டுப்பாட்டு காணப்படுகின்றது. இதனால் அதிக செலவுடைய நவீன இயந்திரங்களைக் கொள்வனவு செய்யக் கூடியவாறு அல்லது சக்தி இவர்களிடம் இல்லை.

iii. பெருமளவு நிலவுடமைகள் சிறிய நிலத் துண்டுகளாக இருப்பதால் இயந்திரங்களை அவற்றில் பயன்படுத்துவதும் கடினமாகும். சிறிய நிலத்துண்டுகளை ஒருங்கிணைக்கப்பட்ட நவீன விவசாயத் தொழில் நுட்பங்களைப் பிரயோகித்து விளைச்சலை அதிகரிக்க முடியும். ஆனால் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

3. கிராமிய அபிவிருத்தியில் மக்களின் பங்கேற்பு

இலங்கையில் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கிராமிய மக்களின் வருமானத்தினை உயர்த்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

1. குடியேற்ற திட்டம்
2. கொடுகடன் வழங்கல் திட்டம்
3. பசளை மானியம்

போன்ற இன்னோரன்ன திட்டங்களை நடைமுறைப்படுத்தின எனினும் பணி திட்டங்களின் பயன்கள் வறிய மக்களை சென்றடையவில்லை. திட்டங்களின் அனுகூலங்களை பல கிராமத்தில் உள்ள செல்வந்தர்கள் பெற்றனர். மூலவளங்களின் பகிர்வு, மாற்று உபயோகம் என்பவற்றின் வெளிப்படையான தன்மை நிலவுவதில்லை. வறியவர்கள் மிக மோசமான எல்லைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அடித்தட்டு மக்கள் விபரம் அறியாதவர்களாக இருந்தபடியால் திட்டங்களின் பலன்களை அவர்களால் பெறமுடியவில்லை. இந் நிலைக்கு வடக்கு கிழக்கு மாகாண கிராமங்களில் அல்லாமல் குறைவிருத்தி நாடுகள் பலவற்றில் காணப்படும் பண்புகளாகவும் உள்ளது. கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் மோசமான செயலாற்றுகைக்கு பங்களிப்பு செய்து வந்திருக்கும்.

4. கிராமிய துறைகளில் காணப்படும் விவசாயம் சாரா நடவடிக்கைகள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கிராமிய துறையில் விவசாயம் என்பதே முதன்மையான வருமானம் தரும் மூலதனமாக இருந்து வரும் போதும் விவசாயம் சாரா நடவடிக்கையும் கிராமிய பொருளாதாரத்தில் மக்களுக்கு வருமானம் மூலம் வழங்கி வருகிறது. பெரும்பாலான வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இத்துறை கிராமிய துறையில் வேலைவாய்ப்பினையும் வருமானத்தையும் உருவாக்கி வருகின்றது. இன்று சனத்தொகை அதிகரித்து வருவதனால் கிராமிய விவசாயத்துறையினரால் அதற்கேற்ப நடவடிக்கைகளை விரிவாக்கிக் கொள்ளாத நிலை காணப்படுகிறது. இதனால் வேலையின்மை, கீழ் உழைப்பு நிலை என்பன காணப்படுகின்றன. இவ்வாறான தொழிலாளர்களுக்கு வேலை வழங்குவதில் விவசாயம் சாரா நடவடிக்கை முக்கிய இடம் பெறுகின்றன. கட்டுமான வேலை, மேசன் வேலை, தச்சுவேலை, வீட்டுக்குத்

தேவையான பொருட்களை விவசாயம் செய்தல், பனை சார்ந்த கைத்தொழில் போன்றவை விவசாயம் சாராத தொழில்களாகும். இதன் மூலம் வருமானம் பெறக்கூடியதாக உள்ளது. எனினும் தொழில்களில் ஈடுபடுவோரின் நிறுவன ரீதியான கட்டமைப்பு பலவீனமான ஒன்றாகவே உள்ளது.

5. கிராமிய கடன் பிரச்சினை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கிராமங்களில் பெரும்பாலானவர்களுக்கு வருமானம் குறைவாக உள்ளது. இதனால் இவர்கள் கடன்பெற வேண்டிய நிலையில் உள்ளனர். விவசாயிகள் நிலம், இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், இயந்திர உபகரணங்களை பழுது பார்த்தல் போன்ற பல விடயங்களுக்கு கடன் பெற வேண்டிய நிலையில் உள்ளனர். அத்துடன் விதைப்புக்கும் அறுவடைக்கும் இடையே கால இடைவெளி இருப்பதால் நுகர்வுக்காகவும் பல விவசாயிகள் கடன் பெறுகின்றனர். அத்துடன் வீடு கட்டுதல், ஆபரணம் வாங்குவது, நோய், மரணம், சடங்குகள், விழாக்கள் என்வற்றுக்கும் பலர் கடன் பெறுகின்றனர்.

கிராமிய மக்களுக்கு கடன் தேவை இருந்தும் அதனை நிரம்பல் செய்வதற்கான நிறுவனங்கள் போதியளவு இல்லை. வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், முறைசாரா நிறுவனங்களிடம் பெறும் கடனைவிட முறைசாரா மூலங்களிலிருந்து அதாவது தலைவர்கள், உறவினர்கள், நில பிரபுகள், வர்த்தகர்கள் என்பவரிடம் அதிக கடனை பெறுகின்றனர். இதனால் கூடியளவு வட்டியினை கடனுக்காக செலுத்தவேண்டியுள்ளது. சில நேரங்களில் தமது நிலம், சொத்துக்களை கடனுக்காக இழக்க வேண்டியுள்ளது. இலங்கை அரசாங்கம் பல்வேறு திட்டங்கள் மூலம் கிராமிய விவசாயிகளுக்கு கடன் வழங்கும் வசதியை ஏற்படுத்தி கொடுத்திருந்தும் யுத்த நிலமையினால் இந்த வாய்ப்புக்கள் வடக்கு, கிழக்கு மக்களுக்கு கிடைக்கவில்லை.

முடிவாக நோக்கும்போது வடக்கு, கிழக்கு மாகாணத்தின் கிராமியப் பொருளாதாரமானது வடக்கு கிழக்குக்கில் ஏனைய பகுதிகளுக்கும் அபிவிருத்திக்கு உதவியுள்ளது. எனினும் இந்த கிராமியத் துறையின் பிரச்சினைகள் தீர்ப்பதற்கும், கிராமிய துறையின் அபிவிருத்திக்கும் அரசின் பங்கு குறைவாக இருக்கின்றமையால் வடக்கு கிழக்கு கிராமியத் துறையின் வளர்ச்சி எதிர்பார்த்தளவு வெற்றியினை பெறவில்லை. இதன் வளர்ச்சியும், அபிவிருத்தியும் அரசினதும் அரசியல் தலைவர்களினதும் கைகளிலேயே உள்ளது.


உசாத்துணை நூல்கள்

பொருளியல் நோக்கு ஜனவரி மார்ச் 2003 பக்கம் 14 - 26

சந்திரசேகம் சசிதரன் (1998) இலங்கை பொருளாதார அபிவிருத்தியில்
கிராமிய சேமிப்பின் பங்களிப்பு - 1977 - 1997
கிழக்கு கல்கனலக்கழகம் ஆய்வுச் சுருக்கம்

Dr.நித்தியானந்தம் இலங்கை பொருளாதா ரம் வடக்கு கிழக்கு பரினாமம் குமரன் புத்தக வெளியீடு.

# அதிகாரப் பரவலாக்கத்தை வேண்டி நிற்கும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி

*Miss. K. Darsiny,*
*Economics special,*
*2007/A/ 33*

இலங்கையில் குடியேற்றவாதம் முடிவடைந்து சுதந்திரம் பெற்ற பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மாறி மாறி கடைப்பிடித்த கொள்கைகள் காரணமாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் முரண்பாடுகள் ஏற்பட்டமை நாம் அறிந்ததே. அந்த வகையில் இந்த முரண்பாடுகள் பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக பல்வேறு விதமான தீர்வு திட்ட யோசனைகளை காலத்திற்கு காலம் வந்த தலைமைகள் முன்வைத்தன. அந்தவகையில் 1968ம் ஆண்டு மாவட்டசபை என்பதன் ஊடாகவும் 1987ம் ஆண்டு மாகாண சபையின் ஊடாகவும் தீர்வினை காண முயன்றும் அது பயனளிக்காத நிலையில் 1994ம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக " அதிகார பரவலாக்கல்" தீர்வு திட்டத்தை முன்வைத்தார். அரசியல் ரீதியாக மட்டுமன்றிபொருளாதார ரீதியாக ஒரு தேசத்தில் பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அதிகார பரவலாக்கல் அவசியமானதாகும். இந்த வகையில் "மத்திய அரசாங்கத்தை சுற்றி வரையறுக்கப்பட்ட தன்னாட்சிப் பிரதேசங்களை பரவலாக்கிக் கொள்வதே அதிகார பரவாலாக்கம்" எனப்படுகின்றது. இந்த அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தினால் மேல் இருந்து கீழ் நோக்கி பரிமாற்றப்படுகின்றது.

இலங்கையின் அண்மைக்காலப் பின்னணியில் அதிகாரப் பகிர்வு என்பது இரு முக்கிய பரிணாமங்களைக் கொண்டுள்ளது. நிர்வாகத்தின் அதிகாரங்களை மாற்றுவதற்கு மேலாக அவற்றைப் பிரதேச அல்லது கீழ்மட்டங்களுக்கு கையளித்தல் மற்றது இலங்கையின் அதிகாரப் பகிர்வு என்பது இனத்துவ பிரச்சினைக்கு தீர்வாக அமைவதற்கு வழியாக முன்வைக்கப்பட்டது.

இலங்கையில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்திற்கு அதிகார பரவலாக்கத்தின் முக்கியத்துவத்தை நோக்கும் போது வடக்கு,கிழக்கு பிரதேசம் என்பது இரண்டு மாகாணங்களை உள்ளடக்கிய பெரியதொரு நிலப்பரப்பாகும். வடமாகாணம் கிளிநொச்சி, வவுனியா,யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களையும் கிழக்கு மாகாணம் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியது. இப் பிரதேசத்தில் வடக்கு மாகாணம் $8884km^2$ நிலப்பரப்பையும் 1311776 பேர் மக்கள் தொகையையும், கிழக்கு மாகாணம் $9996km^2$ நிலப்பரப்பையும் 1460939 பேர்

மக்கள் தொகையும் கொண்டுள்ளன. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடக்கு கிழக்கு மாகாணத்தின் இன்றைய (2007) பொருளாதார நிலையினை நோக்கின்

| | ஆண்டு | மேல் மாகாணம் | வட மேல் மாகாணம் | தென் மாகாணம் | சப்பிரகமுவ மாகாணம் | மத்திய மாகாணம் | ஊவா மாகாணம் | கிழக்கு மாகாணம் | வட மத்திய மாகாணம் | வட மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாகாணரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் | 2007<br>2006 | 2007<br>2006 | 28.3<br>24.0 | 27.9<br>23.0 | 26.07<br>15.0 | 22.8<br>23.0 | 28.2<br>21.0 | 23.9<br>16.0 | 19.1<br>13.0 | 27.1<br>15.0 | 27.1<br>18.0 |
| உள்நாட்டு உற்பத்தி பங்கு | 2007<br>2006 | 2007<br>2006 | 9.6<br>9.1 | 10.5<br>10.0 | 6.3<br>6.1 | 8.9<br>8.8 | 4.5<br>4.3 | 5.0<br>4.9 | 3.9<br>4.0 | 2.9<br>2.6 | 100.0<br>100.0 |
| தலாவருமான விகிதம் | 2007<br>2006 | 2007<br>2006 | 0.8<br>0.8 | 0.9<br>0.8 | 0.7<br>0.6 | 0.7<br>0.7 | 0.7<br>0.7 | 0.7<br>0.6 | 0.7<br>0.7 | 0.5<br>0.5 | 1.0<br>1.0 |

Source: Central Bank of Sri Lanka

வடக்கு கிழக்கு பிரதேசம் கடந்த 20 ஆண்டுகளில் 4.5-6வீதத்திற்கும் இடைப்பட்ட பங்கினையே GDPக்கு வழங்கியுள்ளது. இந்நிலையில் மேல் மேல்மாகாணம் 40 வீதத்திற்கும் மேற்பட்ட பங்கினையே வழங்கி வருகின்றது. இந்நிலையில் வடக்கு கிழக்கு பிரதேசத்தை பொருளாதார ரீதியாக முன்னேற்றி GDPயிலும் வேலை வாய்ப்பிலும் இப் பிரதேசங்களின் பங்களிப்பினை அதி கரிக்க செய்வதற்கு அதிகாரப் பரவலாக்கம் இன்றியமையாததாக உள்ளது.

இவ்வகையில் வடக்கு, கிழக்கு பிரதே சத்தின் பொருளாதார செயற்பாட்டிற்கு அதி கார பரவலாக்கத்தின் அவசியத்தை நோக்கும் போது,

* விவசாய உற்பத்தியினை அதிக ரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் அதிகார பரவலாக்கம் அவசியமாக காணப்படு கின்றது.

ஒரு நாட்டுக்கு மட்டும் அன்றி ஒவ் வொரு பிரதேசத்துக்கும் விவசாயம் முக்கியமானது. எனவே இந்த விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கும் அதிகாரப்பரவலாக்கம் அவசியமாக உள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேசம் விவசாயத்தையும் மீன் பிடியையும் அடிப்படையாகக் கொண்டிக் கின்றது. ஆனால் மக்கள் செறிவு மண்வளத் திற்கே மாறுபட்டு செல்கின்றது. செழிப்பான விவசாய நிலங்களை வதிவிடங்களாக மாற்றியும், செழிப்பற்ற நிலங்களை விவசா யத்திற்கும் பயன்படுத்தியமையும் உரிய நீர்ப்பாசன வசதிகள் இல்லாமையும் விவசா யத்திற்கே உரிய சாதகத் தன்மையை உடைய இப்பிரதேசங்களில் விவசாயத்துறை யின் மந்தமான போக்கிற்கு இட்டுச் செல்கின்றது.

இதனை துறைரீதியான பங்களிப்பில் பின்வருமாறு நோக்கலாம்.

2007

| துறை | வடக்கு | கிழக்கு | இலங்கை |
|---|---|---|---|
| விவசாயத்துறை | 16.4 | 17.3 | 11.9 |
| கைத்தொழில் துறை | 5.4 | 33.6 | 28.5 |
| சேவைத்துறை | 77.8 | 49.1 | 59.6 |

Source: Central Bank annual repoarts.

பெரும்பாலான விவசாய நிலங்களை கொண்டிருந்த போதும் விவசாயத்துறையில் உள்ள இப் பின்னடைவை நிவர்த்தி செய்து விவசாயத்துறை தொடர்பான உள்கட்டு மானங்களை அபிவிருத்தி செய்யவும், நவீன விவசாய வசதிகளை கொண்ட உற்பத்தி முறையினை மேற்கொள்வதற்கும் உரிய முறையில் நில ஒதுக்கீட்டை மேற்கொள்ள வும் மாகாணங்களுக்கு அதிகாரம் அவசிய மாகின்றது. இதன் மூலம் விவசாய உற் பத்தியை அதிகரிக்க முடியும்.

*** விவசாயத்திற்கு உரிய வகையில் நீர்ப்பாசன வசதிகளை மேற்கொள்வதற்கு**

நிலப் பாவனைக்கு பெரும்பாலான நீர்ப்பாசன திட்டங்கள் புறக்கணிக்கப்பட் டுள்ளன. பாரிய குளங்களை புனரமைத் தன்மையும், ஆறுகள் திசை திருப்புவத னையும் விடுத்து சிறிய நீர்ப்பாசன நடவடிக் கைகளை மேற்கொள்வதில் எதுவித பயனும் இல்லை. நீர்ப்பாசனம் பாரிய அளவில் பல நிலங்களிற்கு நீரினை பாய்ச்சக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

மாகாவலி அபிவிருத்தி திட்டத்தின் சனத்தொகையில் போக்கு (1871,1978) பின்வருமாறு

| ஆண்டு | நுவரெலியா | கண்டி | மாத்தளை | பொலநறுவை | மட்டக்களப்பு | திருகோணமலை |
|---|---|---|---|---|---|---|
| 1871 | 48 | 99 | 32 | 32 | 13 | 07 |
| 1978 | 386 | 548 | 180 | 180 | 123 | 86 |

Source: http://www.ideas.repect

இவை ஏற்கனவே செழிப்பான பிரதேசங்களுக்கே மேலும் நன்மை பயக்க கூடியதாய் உருவானது. ஆனால் மிகக் குறைந்தளவு, ஆறு குளங்களையுடைய வடக்கு பிரதேசத்திற்கு எதுவித நன்மையும் இல்லை. எனவே இப்பிரதேசத்தில் நீர்ப் பாசன வசதிகளை மேற்கொள்ள நீரின் கிடைப்பிற்கேற்ப தேக்கிவைக்க அதிகாரம் அவசியமாகின்றது.

*** பேரினப் பொருளாதாரக் குறிக் கோள்களை அடைவதற்கு அதிகார பரவ லாக்கம் அவசியமாய் உள்ளது.**

பேரினப் பொருளாதார குறிக்கோ ளான பொருளாதார வளர்ச்சியும், அபி விருத்தியும், உறுதிப்பாடு, சமூகநீதி, சமத்து வம் நிறைதொழில் மட்டநிலை போன்றன உள்ளன. இலங்கையில் இவற்றினை அடைந்து கொள்வதற்கான வடக்கு கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பினை உத்தமமா கப் பெற அதிகாரப்பரவலாக்கம் அவசிய மாக்கின்றது. இலங்கையின் உற்பத்தி நடவடிக்கை என்பது மேல்மாகாண உற்பத் தியை பிரதிபலிக்கின்றது. எனவே இந்நிலை மாறி ஏனைய மாகாணங்களும் தமது பங்க ளிப்பை அதிகரிக்க அதிகரிக்க பரவலாக்கம் அவசியம் உள்ளது.

*** தொழில் வாய்ப்பினை அதிகரிப் பதற்கு**

வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் வேலை வாய்பினை உருவாக்க முயற்சியாளர் வர்க்கம் தேவை. ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுமிடத்து இப்பிரதேசத்தில் உரிய கைத்தொழில் சாலைகளோ முயற்சியாளர் களோ இல்லாமையாலும் யுத்தம் போர்ச் சூழலால் இப் பகுதிளில் இயங்கிய சிற்றளவு கைத்தொழில் மூடப்பட்டமையும் இப்பிரதே சத்தின் வேலையின்மையை அதிகரித்து மனித மூலதன வெளியேற்றத்துக்கும் சமூக வன்முறைகளுக்கும் இடமளித்தது. எனவே இத்தகைய ஒரு நிலைமையை நீக்கி உரிய தொழில்களை இப்பிரதேசத்தில் அமைக்க அதிகாரம் அவசியம் துறைவாரி யான நிகழ்ச்சித்திட்டம் பொறுப்புக்கள் பொருத்த மான துறைவாரியான நிகழ்ச்சித் திட்டம்

பொறுப்புக்கள் பொருத்தமான துறைவாரி யான வேலைப்பணி அமைச் சுக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

| இனகுழுமங்கள் | சனத்தொகை வீதம் | அரசதுறையின் பங்கு வீதம் | மாகாண சேவைகளின் வீதமாக | பகுதிரிதியான அரசாங்க சேவை |
|---|---|---|---|---|
| இலங்கை | 12.7 | 5.9 | 7.1 | 8.2 |
| தமிழர்கள் | 5.5 | 0.1 | 0.2 | 0.5 |
| முஸ்லீம்கள் | 7.37 | 2.0 | 4.2 | 1.0 |
| மொத்தம் | 25.6 | 8.0 | 11.3 | 9.7 |

Source: http://www.southidianesociation.org

மொத்த வேலைவாய்ப்பில் 11.3வீத பங்கினையே 25.6 வீத மக்கள் பெறுகின்ற நிலமை காணப்படுகின்றது. எனவே இந்த நிலை மாறி வேலைவாய்பினை அதிகரிக்க அதிகாரபரவலாக்கம் அவசியமாகின்றது.

*** இறைக் கொள்கையின் செயற்திற னான செயற்பாட்டிற்கு அதிகாரபரவ லாக்கம் அவசியமாகின்றது.**

இறைக் கொள்கை என்பது அரசவரு மானம்,அரசசெலவு, நிதியீட்டம் போன்ற வற்றைப் பயன்படுத்தி பேரின பொருளா தார இலக்குகளை அடையும் செயற்பாட் டைக் குறிக்கின்றது.

இங்கு அரச வருமானத்தை எடுத்து நோக்கின் இதனுள் வரிவருமானம், வரி யல்லா வருமானம் என்பன உள்ளடங்கு கின்றன. வரிவருமானத்தினுள் நேர்வரியும் நேரில் வரியும் உள்ளடங்குகின்றன. இதன் படி வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களின் வருமானம் தொழில் வாய்ப்பு என்பவற்கேற்ப சிறந்த வரிமுறைகளை அறிமுகம் செய்யவும் பொருத்தமில்லாத வரி முறைகளை நீக்கவும் அதிகாரம் தேவையாக உள்ளது.

உதாரணமாக வடக்கு கிழக்கில் உள்ள மக்களின் சேமிப்பை பயன்படுத்தி இங்குள்ள மக்களுக்கு வேலைவழங்கும் நோக்கிலான முதலீட்டு நடவடிக்கைகளுக்கு வரிச்சலுகைகள் சுயதொழில் முயற்சிமூலம் பாரிய நிறுவனங்களை உருவாக்குவோ ருக்கும் வருமானவரி விதிப்பு போன்றவற்றை யும் வடக்கு கிழக்கு மக்களின் பாரம்பரிய கட்டுக்கோப்பான கலாசாரங்களை சீரளிக் கும் உற்பத்தி மற்றும் உள்நுழைவதற்கான தடையும் கடுமையாக வரிகளும் விதிக்க வேண்டும். இதனைவிட வரியல்லா வருமா னங்களும் முறையான காரணங்கள் மூலமே பெறப்படவேண்டும். இவற்றை நடை முறைப்படுத்தும் அதிகாரிகள் சரியான முறையில் தெரிவு செய்யப்படுவதோடு விதிகளை மீறுகின்ற நிலையில் பதவிநீக்கம் போன்ற வகையில் தண்டிக்கப்படவேண்டும்.

அரசாங்க செலவீனத்தை நோக்கின் இவை வெறுமனே வாக்குகளைப் பெறு வதற்காக அல்லாமல் நீண்டகால பொருளா தார வளர்ச்சியை நோக்காகக் கொண்ட முத லீட்டு செலவுகளாக அமைய வேண்டும். தேவையற்ற வகையில் மானியம் வழங்கு வதை நிறுத்தி தேவையில் உள்ளோரை சரியாக இனங்கண்டு அவர்களினை உற் பத்தி முயற்சிக்கு ஊக்குவிக்கும் வகையில் அமைய வேண்டும்.

இறைக் கொள்கை பற்றிய சகல விட யங்களையும் மக்களுக்கு தெரியப்படுத் துதல் மூலம் தலா கடன் சுமையை மக்களே உணர்ந்து செலுத்துதல் மூலம் குறைக் கலாம். இவ்வாறு இறைக் கொள்கையை

செயற்படுத்த அதிகார பரவலாக்கம் அவசிய மாகின்றது.

*** மீன்பிடி அபிவிருத்தியை சகல துறைகளிலும் மேம்படுத்துவதற்கு**

வடக்கு கிழக்கு பிரதேசங்கள் மீன் பிடி உற்பத்திக்கேற்ற வகையில் சகல வளங் களையும் கொண்டிருக்கின்றன. மிகை வருமானம் உழைத்துக் கொடுக்கக்கூடிய ஒரு பொருளாதார நடவடிக்கையாக இது விளங் கியது. விவசாயம் போலன்றி மீன்பிடி கிடை மட்டரீதியாக கப்பல் கட்டுவது, பட கோட்டம், வலைப்பின்னல் போன்ற தொழில் களுக்கும் இடமளிப்பதன் மூலம் பொருளா தார பரவலாக்கத்திற்கும் அதன் வழி மேலதிக வருமான உயர்வுக்கும் வழிவகுக் கின்றது.

யாழ் குடா நாட்டின் மீன் உற்பத்தி போக் கானது 1983 உடன் ஒப்பிடுகையில் மிகவும் வீழ்ச்சிப் போக்கையே காட்டுகின்றது.

| ஆண்டு | உற்பத்தி (MT) |
|---|---|
| 1983 | 48677 |
| 2007 | 2963 |

மீனவ குடித்தொகையும் 1983 உடன் ஒப்பிடுகையில் 2007ல் குறைவாக இருப்பதை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

எனவே இதுவீழ்ச்சிப் போக்கையே காட்டுகின்றது. இப்பிரதேச மீன் உற்பத்தியை

| ஆண்டு | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1983 | 22000 |
| 2007 | 17751 |

அதிகரிக்க நிலையான நீண்டகால அபிவிருத்தி திட்டமிடல் அவசியம் மற்றும் இதனுடன் இணைந்த ஏனைய உட்கட்ட மைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக் கவும் அதிகாரபரவலாக்கல் இன்றியமையாத தாக உள்ளது.

* உள்கட்டுமான அபிவிருத்தி செயற்பாட்டை மேற்கொள்வதற்கு

ஒரு நாட்டின் / பிரதேசத்தின் பொரு ளாதார வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பு வசதி களே இன்றியமையாததாக உள்ளது. வடக்கு கிழக்கு பிரதேசத்தை பொறுத்து துறைமுகம், போக்குவரத்து, குடிநீர்மனைகள், மின்சாரம், வருமானநிலையம் போன்றவை மிகவும் பின்தங்கிய/ இல்லாத ஒரு நிலையே காணப் படுகின்றது

போக்குவரத்து : எந்தவொரு செயற் பாட்டிற்கும் போக்குவரத்து இன்றியமையா தது. இங்கு விவசாயம், மீன்பிடி தொடர்பில் போக்குவரத்து பாரிய பிரச்சினையாக உள்ளது. சந்தைப்படுத்தலை மேற்கொள்வ தில் இவை பெரும் தடையாக உள்ளது. சரியான போக்குவரத்து வலைப்பின்னல் ஒன்று இப்பகுதிகளில் வளர்ச்சியடைந்திருக் கவில்லை. மக்கள் தாமகவே தமது வசதிகள் கருதிச் சில பாதைகள், ஒழுங்கைகள் என்ப வற்றை அமைத்து கொடுத்திருந்தபோதும் பருநிலை பொருளாதார நன்மைகளை குறிக்கோளாகக் கொண்ட போக்குவரத்து அமைப்பு ஒன்று உருவாக்க அதிகாரபரவ லாக்கம் அவசியமாகின்றது.

துறைமுகம்: வடக்கில் உற்பத்தி செய்யும் பொருட்களை இலகுவாக ஏனைய பிரதேசங்களுக்கு கொண்டு செல்ல துறை முகம் அவசியம். வடக்கு கிழக்கு பிரதேசத் தில் யுத்தத்திற்கு முன்பு காணப்பட்ட துறைமுகங் கள் கூட இன்று பயன்பாட்டுக்கு இல்லாத நிலையே காணப்படுகின்றது. எனவே இவ்வா றானவற்றை மீளப் புனரமைப்பதற்கும் புதிய துறைமுகங்களை நிர்மாணிப்பதற்கும் அரச முதலீடு அவசியமாகின்றது.

ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்:

ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளான விமானத்தளம், தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், மின்சாரம், வீட்டுவசதிகள்

என்பவற்றை பொறுத்தும் இப்பிரதேசம் பின்தங்கிய நிலையிலே காணபடுகின்றது.

தமிழ், சிங்கள மக்களின் குடிவரவு நிலை, சமூகபொருளாதார நிலை மற்றும் வீட்டின் தரம் என்பவற்றை பின்வரும் அட்டவணை காட்டிக்கொள்கின்றது.

| வகைப்பாடுகள் | சிங்களவர்கள் | தமிழர்கள் |
|---|---|---|
| குடிவரவு நிலை | சுதந்திரமானதும் குடும்ப ஆதரவும் உள்ள நிலை | அகதி |
| கல்வி | ஒப்பீட்டு ரீதியில் உயர்வு | குறைவு |
| வருமானம் | ஒப்பீட்டு ரீதியில் உயர்வு | குறைவு |
| வீட்டு வருமானம் | வீட்டு உடமையாளர்களுக்கான அதிபாரத்தை முன்கூட்டியே வழங்குதல் | முன்கூட்டியே அதிகாரம் வழங்கப்பட்ட வாடகை |

Sourcer-http://www. southidianna mociation.org

மேற்குறிப்பிட்ட அட்டவணை வருமானம், கல்வி, சொந்தவீடு தொடர்பில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையேயான வேறுபாட்டைக் காட்டுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் சுகாதார வசதிகள்

| வகைகள் | கிழக்கு மாகாணம் | இலங்கை |
|---|---|---|
| வைத்தியசாலை படுக்கைகள் | 3867 | 59262 |
| பிறப்பு வீதம் (1000 பேருக்கான) | 22.0 | 18.9 |
| இறப்பு வீதம் (1000 பேருக்கான) | 4.2 | 5.9 |
| கர்ப்பிணிமாரின் இறப்பு வீதம் (100000 LB) | 14.8 | 14.3 |
| குழந்தை இறப்பு வீதம் (1000 LB) | 9.4 | 11.2 |
| நிறை குறைவான பிறந்தோர் (<2.5kg) | 14.8 | 16.9 |

Sourcer- http://www. .island.lk

* சேமிப்பை அதிகரிப்பதற்கு அதிகார பரவலாக்கம் அவசியமாகும்.

வருமானத்தில் நுகர்வுக்கு செல விட்டது போக எஞ்சியது சேமிப்பாகும். இச் சேமிப்பானது தனிநபர்/ நிறுவனம்/அரச/ வெளிநாட்டு சேமிப்புக்களாக அமையலாம். எவ்வாறாயினும் வடக்கு, கிழக்கு மக்களின் இரத்தோடு ஊறிய செயலாகவே சேமிக்கும் பண்பு காணப்படுகின்றது. இத்தகைய சேமிப்புக்களை நிறுவனமயப்படுத்தப்பட்ட சேமிப்புக்காளக மாற்றவும் மேலும் புதிய வழிகளில் சேமிக்க தூண்டவும் அதிகாரம் அவசியமாகின்றது.

குறிப்பாக பல்வேறுபட்ட நிலையில் வடக்கு கிழக்கு சேமிப்பு ஆற்றல் அதிகமாக உள்ளது. இதனை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

கிராமிய வங்கியில் சேமிப்பு

| மாவட்டம் | சேமிப்பு (மில்லியன்) | | சேமிப்பு (மில்லியன்) | | சேமிப்பு (மில்லியன்) | | சேமிப்பு (மில்லியன்) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2004 | 2005 | 2004 | 2005 | 2004 | 2005 |
| யாழ்ப்பாணம் | 298 | 379 | 120.3 | 160.8 | 38 | 42 | 27.2 | 68 |
| அம்பாறை | 17.9 | 30.5 | 6.8 | 3.0 | 11 | 11 | 8.3 | 3 |
| மட்டக்களப்பு | 36.7 | 39.4 | — | — | 16 | 20 | — | — |
| கிளிநொச்சி | 33.7 | 79.7 | 8.4 | 6.3 | 6 | 6 | 4.8 | 4 |
| மன்னார் | 6.6 | 5.6 | 0.2 | 1.6 | 6 | 6 | 0.4 | 0.4 |

வடக்குகிழக்கு பிரதேசத்தில் குறிப் பாக யாழ்மாவட்டத்தில் சேமிப்பு உயர்ந்த மட்டத்தில் 1 வருடத்தில் 100மில்லியனால் அதிகரித்துள்ளது. ஆனால் இச் சேமிப்பை உரிய வகையில் முதலிட அதிகாரப்பர வலாக்கம் அவசியமாகின்றது.

* முதலீடுகளை அதிகரிக்க

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெருமளவில் விவசாயம், மற்றும் மீன்பிடிக் கான வளங்கள் உள்ளன. எனவே முதலீடு கள் இங்கு இத்துறைகள் நோக்கியே நகர தப்படவேண்டும். முதலீடு என்ற பெயரில் இடம்பெறும் சுரண்டல்களை தடுக்க வேண் டும். மேலும் முதலீட்டிகேற்ற சாதகமான சூழ்நிலையினை ஏற்படுத்துவ தன் மூலம் உள்நாட்டு முதலீடுகளை மட்டும் அன்றி வெளிநாட்டு முதலீடுகளையும் கவரக் கூடியதாகவும் காணப்படும். எனவே இதற்கு அதிகாரப்பரவலாக்கம் அவசியமாகின்றது.

* நிதியியல் சார்ந்த அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்கு

நிதி முகாமைத்துவம் என்பது பிரதான தேவையாகும். அதாவது இங்கு பல வங்கி கள் இருந்த போதும் இவை சேமிப்பை திரட்டுவதில் ஆர்வமாக இருக்கின்றனவே தவிர முதலீட்டு தேவையை பூர்த்தி செய்ய வில்லை. எனவே அபிவிருத்தி திட்டமிடலில் இவ்வாறான குறைபாடுகள்களை நீக்குதல் வேண்டும். இதற்கு அதிகாரபரவலாக்கம் அவசியமாக உள்ளது.

மாகாண ரீதியான நிதி - 2004

| மகாணம் | சனத்தொகையின் பங்கு 2004 | பொதுத் துறை ஊழியர்களின் பங்கு | பொது அரச மாகாண சபை 2004 (LKR mill) | மாகாண வருமானத் தின் பங்கு (LKR mill) |
|---|---|---|---|---|
| மத்திய | 12.9 | 12.9 | 14.4 | 7.9 |
| வடமத்திய | 5.9 | 7.8 | 9.1 | 2.6 |
| வடகிழக்கு | 13.9 | 15.8 | 16.6 | 1 |
| வடமேற்கு | 11.4 | 12 | 14.3 | 7.2 |
| சப்ரகமுவா | 9.4 | 8.8 | 10.7 | 4.6 |
| தென் | 12.1 | 13.5 | 13.7 | 7.6 |
| ஊவா | 6.3 | 7.3 | 9.3 | 2.3 |
| மேல் | 28.4 | 21.9 | 11.0 | 66.8 |
| இலங்கை | 100 | 100 | 100 | 100 |

Sourcer- http://www. ground vi.lws.org

இது மாகாணங்களுக்கிடையேயான வேறுபாட்டை காட்டுகின்றது. எனவே வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களின் பங்களிப்பை அதிகரிக்க அதிகாரபரவலாக்கம் அவசியமாகும்.

*** கல்விப் பாகுபாட்டை நீக்குவதற்கும், கல்விதுறையில் மாற்றங்களை கொண்டு வருவதற்கும்**

வடக்கு கிழக்கை பொறுத்தவரையில் கல்வியில் முன்னேற்றம் பெற்ற பிரதேசம் என்று புகழ்பெற்றது. எனினும் இது உயர்வான சமுக பொருளாதார முன்னேற்றத்துக்கு எவ்விதத்திலும் இடம்கொடுக்கவில்லை. எனவே கல்வி பற்றிய திட்டங்கள் சமூக பொருளாதார முன்னுரிமைக்குட்படுத்தப்பட்டு உரிய மாற்ங்களுக்கு இடமளிப்பதன் மூலம் மனித மூலதனம் தன்னை முதலீடு செய்வதற்கும் உள்நாட்டு பௌதீக வளங்களுடன் இணைத்துக் கொள்வதற்கும் ஏற்ற வகையிலும், கல்விக்கும் தொழில், வாய்ப்புக்கும் இடையிலான தொடர்பினை அதாவது தொழிற்சந்தை கேள்விக் கேற்ப கல்வியில் மாற்ங்களையும் தொழில்நுட்ப கல்வியையும் மாற்றியமைக்க உரிய அதிகாரம் அவசியமாக உள்ளது.

அத்துடன் இன்றைய அறிவுப் பொருளாதார இழப்பு அதாவது மூளைசாலிகளின் வெளியேற்றத்தை தடுக்கவும் அதிகாரப்பரவலாக்கம் அவசியமாக உள்ளது.

நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கும் அதிகாரப்பரலாக்கம் அவசியம்.

நல்லாட்சி என்பது பல்வேறுபட்ட அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. ஜனநாயகம், ஊழல், லஞ்சம் இல்லாத ஆட்சி, கல்வி, சுகாதாரம் என்பவற்றின் நன்நிலை என்பவற்றை கொண்டுள்ளது. இது இருபக்க தொடர்புடையதாக காணப்படுகின்றது. அதாவது நல்லாட்சிக்கும் அதிகாரப் பரவலாக்கம் தேவை. அபிவிருத்திக்கு நல்லாட்சி தேவை எனவே இந்த நல்லாட்சியினை ஏற்படுத்த அதிகாரப் பரவலாக்கம் தேவை.

மேற்கூறப்பட்ட விடயங்களை விட பல அம்சங்களிற்கு இந்த அதிகார பரவலாக்கம் அவசியமாக உள்ளது. ஆயினும் எமது கட்டுரையின் சுருக்கம் கருதி ஏனையவற்றின் தொகுப்புக்களை பின்வருமாறு நோக்கலாம்

*** மனிதவள வெளியேற்றத்தை தடுத்து பிரதேச வளர்ச்சிக்கு பயன்படுத்துவதற்கு**

*** சந்தை வாய்ப்புக்களை உருவாக்கி விரிவாக்கம் செய்வதற்கு**

*** சமூக பிரிவினைகளை நவீனமயப்படுத்துவதற்கு**

*** பூரண வளப்பயன்பாட்டை மேற் கொள்வதற்கு**

போன்ற பலவகையான அம்சங்களிற்கு இந்த அதிகாரப் பரவலாக்கம் அவசியமாக உள்ளது. இது வடக்கு, கிழக்கு அபிவிருத்தியில் மட்டும் அன்றி ஏனைய மாகாணங் களின் அபிவிருத்திக்கும் அவசிய மாக உள்ளது.

முடிவுரை:

மேற்குறிப்பிட்ட விடயங்களை தொகுத்து நோக்கும் போது அவற்றின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என்பதை உணரக் கூடியதாக உள்ளது. பல இனம், மொழி பேசும் மக்கள் வாழும் நாடுகளிடையே அதிகாரப் பரவலாக்கம் அவசியமாகும். எனவே இலங்கையும் அவ்வாறான நாடு ஆகையால் அதிகாரப் பரவலாக்கலே சிறப்பானதாகும். இது பொருளாதார, சமூக நலன்களை அடைந்து கொள்ள அவசியமாகும். இங்கு அதிகாரம் என்பது தனிநாடு என்பதை குறித்து நிற்கவில்லை. இது அபிவிருத்தி திட்டமிடலை மேற்கொள்ள அதிகாரம் நிறைந்த ஓர் சபையாகவே / மத்திய அரசின் பலமான பதவியை அந்தந்த பிரதேசத்தவர்கள் வகிப்பதையும் குறிக்கின்றது.

குறிப்பு:

மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவும் இலங்கை சுகந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இத்துறைகள் சார்ந்த அபிவிருத்தியை முன்னெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது.

எனவே பிராந்திய அலகுகளுக்கு அர்த்தமுள்ள விதத்தில் அதிகார பரவலாக்களை மேற்கொள்வதானது உறுதிப்பாட்டுக்கும் விரைவுபடுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் வளவாழ்வினை அனைவரும் பகிர்ந்து கொள்வதற்கும் உகந்ததாகும்.

Reference:

வி. நித்தியானந்தம் "இலங்கையின் பொருளாதார வரலாறு, வடக்கு கிழக்கு பரிணாமம், June 2008, உயர் கல்விச் சேவை நிலையம்.

வி. நித்தியானந்தம், இலங்கை அரசியற் பொருளாதாரம்" 1948-1956 வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள், 1989

சித்திரலேகா , மௌனகுரு,"இலங்கையில் இனத்துவமும் சமூகமாற்றமும்", புனித வளன் கத்தோலிக்க அச்சகம்

http.// www. southi dianorociation.org.

http.// www. groud vidws.org.

http.// www. Island.lk

http.// www. travellerspoint.com

http.// www. damendis.org

http.// www. sori -energy.org



# பொருளியல் பேராசான்
# நாகலிங்கம் பாலகிருஷ்ணன்

## சமர்ப்பணம்

கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக எமது சமூகத்தில் பலதரப்பட்ட சிறப்புடைய சாதனைகளைப் படைத்து கடந்த வருடம் 14-06-2013 அன்று எம்மைவிட்டுப் பிரிந்து சென்ற புலமையாளரான பொருளியல் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் முகமாக இச்சஞ்சிகை சமர்ப்பணம். பேராசிரியர் பாலகிருஷ்ணன் அவர்கள் பலதரப்பட்ட பணிகளுக்கு அப்பால் சிறந்த புலமையாளர், பல்கலைக்கழக நிர்வாகி, நல்லாசான், மாணவர்களின் வழிகாட்டி, பல்கலைக்கழக நிறுவன மேம்பாட்டிற்கு உழைத்தவர், பல்கலைக் கழகக் கல்வியினை வளப்படுத்தியவர் என்ற பல பரிமாணங்களை உள்ளடக்கியவர். எங்கள் பேராசான் பாலகிருஷ்ணன் அவர்கள் வகித்த பதவிகளில் கல்விசார் பதவிகளாக உதவி விரிவுரையாளர் என்ற நிலையில் இருந்து பேராசிரியர் வரைக்கும் உயர்ந்தவர் என்பது ஒருபுற மிருக்க, கல்வியுடன் சேர்ந்த நிர்வாகப் பதவிகளில் பலதுறைகளின் துறைத் தலைவராக, பீடாதிபதியாக, பதில் துணைவேந்தராக, வளாக முதல்வராக, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கத்தவராக..... இருந்த சந்தர்ப்பங்கள் எல்லாம் அவர் சார்ந்த கல்விப் புலமும்நிறுவனமும் மிக உயர்ந்த நிலைக்கு செல்ல வித்திட்டவர் எமது பேராசான் ஆவார். யாழ் பல்கலைக்கழக பொருளியல்துறையில் கல்வி கற்கின்ற மாணவர்களால் வெளியிடப்படுகின்ற அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 என்ற இந்த சிறப்பிதழை எமது பொருளியல் பேராசிரியர் பாலகிருஷ்ணன் அவர்களின் முதலாம் வருட நினைவாக சமர்ப்பணம் செய்வதில் பெருமகிழ்வடைகின்றோம்.

இளம் பொருளியலாளர் மன்றம்,
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
2014

ISSN 2362-0862
9 772362 086008
பதிப்பு: விஜேகானந்த அச்சகம் - யாழ்